|| ஸ்ரீ: ||

# பதினெட்டு புராணச் சுருக்கம்.

## (இரண்டாம் பாகம்.)

[ ஸ்ரீ தேவீ பாகவதம், ஸ்ரீமத் பாகவதம்
ஸ்ரீ பவிஷ்ய புராணம், ஸ்ரீ நாரத புராணம்
ஆகிய நான்கு புராணங்கள் அடங்கியது.]

ஆசிரியர் :
ஸ்ரீவத்ஸ, வெ. ஸோமதேவ சர்மா.

"மாம்பலம் குருகுல வெளியீடு"
2, ஸ்டேஷன் ரோடு, மேல மாம்பலம், தி. நகர்,
சென்னை 17.

துர்முகி௵ ஆடிமீ] —— [விலை ரூ. 4.

# பொருளடக்கம்.


ஸ்ரீ சங்கர பகவத் பாதாளின் ஸ்ரீமுகமும் படமும் iii

முகவுரை v—viii

தேவீபாகவத மூலக்ரந்த அநுக்ரமணிகா ... 1— 12

தேவீ பாகவதம் .... 15— 40

ஸ்ரீ பாகவத மூலக்ரந்த அநுக்ரமணிகா .... 41— 55

ஸ்ரீமத் பாகவதம் .... 57—110

ஸ்ரீ பவிஷ்ய புராண மூலக்ரந்த அநுக்ரமணிகா 111—117

ஸ்ரீ பவிஷ்ய புராணம் .... 119—204

ஸ்ரீ நாரத புராண மூலக்ரந்த அநுக்ரமணிகா ... 205—210

ஸ்ரீ நாரத புராணம் .... 213—268

18 புராண அநுபந்தம் .... 269—272



ஸ்ரீ மீனுக்ஷி பிரஸ், சீர்காழி.



ஸ்ரீ காஞ்சீ காமகோடி
பீடாதிப ஜகத்குரு
ஸ்ரீ சங்கர பகவத்பாதாள்

ஸ்ரீ காஞ்சீ காமாக்ஷி அம்பாள்

ஸ்ரீ சக்ரம்.

॥ श्रीः ॥

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य
श्रीमच्छंकर भगवत्पाद प्रतिष्ठित
श्रीकांची कामकोटिपीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्र सरस्वती श्रीपादैः

ஸ்ரீ ஸ்ரீவத்ஸ, ஸோமதேவ ஶர்மணே க்ரியதே
நாராயணஸ்ம்ருதி:

தங்களால் தமிழ் பாஷையில் எழுதப்பட்டு நம்முன் வைக்கப்பட்டுள்ள பதினெண் புராண ஸங்க்ரஹமென்னும் நூலின் இரண்டாம் பாகத்தைப் பார்வையிட்டோம்.

நமக்கு தர்மங்களைப் போதிக்கும் மூலப்ரமாணங்கள் வேதங்கள். அவைகளின் பொருள் எல்லோராலும் எளிதில் அறிய முடியாதது. ஸம்ஸ்கிருத பாஷையில் பாண்டித்யமுள்ளவர்களும் சீக்ஷை முதலிய அங்கங்களின் உதவியைக்கொண்டுதான் புரிந்துகொள்ளக்கூடும். ஆகவே அவ்வேதங்களின் பொருளை எல்லோரும் எளிதில் அறிந்துக் கொள்வதற்காக பதினெண் புராணங்கள் ஸ்ரீ வேதவ்யாஸ முனிவரால் இயற்றப்பட்டுள்ளன. இவைகளின் பொருளை ஸம்ஸ்கிருத ஞானமில்லாதவர்கள் ஓரளவாவது உணர்வதற்குத் தாங்கள் எழுதியுள்ள இந்நூல் மிகவும் உபகாரகரமாகும். இத்தகைய உயர்ந்த நூலை எழுதியுள்ள தாங்களும் இந்நூலைப் படிக்கும் ஆஸ்திகர்களும் ஸகலமான ச்ரேயஸ்களையும் அடையுமாறு ஸ்ரீ சந்த்ரமௌளீச்வரரை ப்ரார்த்திக்கிறோம்.

விஜய யாத்ரா ஸ்தானம்
ஸ்ரீ காஞ்சீ க்ஷேத்ரம்
துர்முக ஆஷாட சுத்தாஷ்டமீ.

நாராயண ஸ்ம்ருதி:

# முகவுரை.

வேதவியாஸரின் அருளாலும் ஆசார்யரின் அநுக்ர ஹத்தாலும் தார்மிகரின் ஆதரவாலும் இரண்டாம் பாகம் வெளிவருகிறது. இதில் தேவீ பாகவதம் விஷ்ணு பாக வதம் பவிஷ்யம் நாரதியம் என்ற நான்கு புராணங்கள் அடங்கி இருக்கின்றன. இந்த பாகத்தில் ஒவ்வொரு மூல புராணத்திலுமுள்ள விஷய அநுக்ர மணிகை அப்படியே வெளிவருவது விசேஷம். இந்த புராணத்தில் இந்த விஷ யம் அல்லது கதை வருகிறதென இதன் மூலம் நன்கு அறியலாம். தேவை உள்ளவர் மூல கிரந்தத்தைப் பார்த்து வேண்டிய விஷயத்தை எளிதில் தெரிந்துகொள்ள இது பேருதவி புரியும்.

தேவீ பாகவதம் மாத்திரம் சிறிது சுருக்கமாக எழுதப் பட்டது. அதை நமது வைதிக தர்மவர்த்தனியில் எழுதி வந்து, முடிவில் தனிப் புத்தகமாகவும் வெளியிட்டேன். மற்றும் சிலரும் அதைத் தமிழில் மொழிபெயர்த் தனர். இதுவரை வெளிவராத அரிய நூல்களே சிறிது விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன. ஸ்ரீமத் பாகவதம் முன்னதைவிட விரிவானது. இதைவிட பவிஷ்யமும் நார தியமும் மிக விரிவாக உளது. கூடியவரை வடமொழி சொற்களையும் கடின தமிழ் சொற்களையும் விட்டு மிக மிக எளிய தமிழில் சிறுவரும் படித்துப் பயன் பெருமாறு எழுதியிருக்கின்றேன்.

## எனது நோக்கம்.

இப் பதினெண் புராணச் சுருக்கத்தை வெளியிட்டு பொருளையோ புகழையோ பெறவேண்டும் என யான் விரும்பவில்லை. ஸ்ரீ ஜகத் குருவின் ஆக்ஞையை நிறை வேற்றுவது முதல் நோக்கம். எவருங் கூருத இப் புரா ணத்தைக் கூறினேன். நேரில் கேட்டவர் வெகு சிலரே. தமிழறிந்த ஆஸ்திகர் இந்த அமிருதத்தைப் பருகட்டும். இதிலுள்ள அரிய தர்மங்களையும் ஆசாரத்தையும் ஆயிரத் தில் ஒருவரேனும் அநுஷ்டிக்கட்டும். அந்த தொண்டினுல்

அடியேனுக்கும் நற்கதி கிடைக்கட்டும் என்பதே எனது முக்ய இரண்டாம் நோக்கம். ஒரு மனிதனுடைய தர்மம் பூமியில் உள்ளவரை நல்லகதி உண்டெனப் புராணம் கூறுகிறது.

யாகம் தானம் முதலியவைகளைச் செய்ய போதிய பொருளில்லை. வித்யாதானம் செய்வோமெனில் படிக்க மாணவரில்லை. தர்ம பிரசாரம் செய்வோமெனில் தர்மத்தைக் கேட்பாரில்லை. இஃதொன்றே அடியேனது சக்திக்கேற்ற பணி. ஆதலின் இதைக் கடமை எனக்கருதி இதில் புகுந்தேன்.

## எளியவன் பணி எப்படி ?

எளியவனைப் பெரும் பணியில் தூண்டிய இறைவன் அருளையே அளித்தார். அவர் தன் அருளுக்குப் பாத்ரமான சிலரிடம் பொருளைத் தந்தார். அவர்களே அடியேனுக்கு நிதியாம். கொடுக்க அறிந்த ஆஸ்திக தனிகர் சிலர் வைதிக தர்மவர்த்தினியில் எனது விக்ஞாபனத்தைக் கண்டவுடன் நன்கொடை அளித்தனர். சந்தா தொகை முன்கூட்டி அளித்தவர் பலர். அந்த தைர்யத்தைக் கொண்டே துவக்கிவிட்டேன். எனது பெயரால் நடக்கும் பத்ரிகைக்கு இரண்டாயிரத்திற்கு மேல் சந்தாதாரர் இருப்பதாகத் தெரிகிறது. அவர்களில் ஐநூறுபேர் இதற்கு சந்தா சேரமாட்டார்களா ? சிலர் நன்கொடை தரமாட்டார்களா? மற்றவர் தனிக்காப்பிகளை வாங்கலாம் என்ற தைர்யத்தால் இதையும் வெளியிட்டேன். பேருதவி புரிந்தவர்கள் விரும்பாவிடினும் பெயர்களை நன்றியுடன் பிரசுரித்திருக்கிறேன். அது என் கடமை. மற்றவருக்கு வழிகாட்டி ஆகலாம்.

## பலர் மனம் இறங்கவில்லை.

இதுவரை நன்கொடை அளித்தவர் ஐம்பது பேர். நூற்றைம்பதுபேர் சந்தாதாரராகச் சேர்ந்திருக்கின்றனர். இது இரண்டுபாகங்களுக்கும் போதிய தனமாகும். மற்ற பாகங்கள் எப்படி வெளிவரும்? பரம ஆஸ்திகரும் ஆசார்ய பக்தரும் செல்வம் நிறைந்தவருமான சிலரிடம் உதவியை நாடி முதல் பாகத்தை அனுப்பி விக்ஞாபனமும்

செய்துகொண்டேன். புராணம் எழுதும் வேலை! ப்ரூப் பார்க்கும் வேலை! சந்தா நன்கொடை வரவு வைத்து புத்தகம் அனுப்பும் வேலை! பதில் எழுதும் வேலை! மாதப் பத்திரிகையை கவனிக்கும் வேலை! நித்ய உபன்யாஸ வேலை! இவைகளைக் கொடுத்து இறைவன் சோதிக்கிறார். இத்துடன் "முற்கூறிய ஆஸ்திகர் உதவியோ பதிலோ வராததால் சிறிது கஷ்டப்படு" என இறைவனே அவர்களைப் பேசாமலிருக்கும்படிச் செய்கிறார் என எண்ண வேண்டியிருக்கிறது. அவர்கள் பரமதார்மிகர்தான்.

## தெய்வ சோதனையா? கலியின் திறமையா?

ஒரு சிறு தேசத்தொண்டு அல்லது பாஷைத்தொண்டு செய்கிறவர்களுக்கு அபார ஆதரவு அளிக்கிறது தமிழ் நாடு! உத்ஸாஹமூட்டுகிறது! ஆயிரமாயிரமாக அள்ளி அளிக்கிறது! எனது பத்திரிகை ஸேவையையும் நான் வெளியிட்ட ஸந்த்யாவந்தந நூலை நேரிலும் கடித மூலமாகவும் பலர் கொண்டாடுகின்றனர். ஆனால் கார்யத்தில் சந்தா செலுத்தி ஆதரிப்பவர் வெகு சிலரே. கடித மூலமாக விக்ஞாபநம் செய்துகொண்ட தனிகரில் இரண்டொருவர் மநம் வைத்தாலே இப்பணி பூர்த்தியாகும். உயர்ந்த கொடையாளிகளான அவர்களை இன்னமும் நம்பி இருக்கிறேன். தாராள மனமுடையவர். ஆனால் கடிதம் கூட எழுதாதபடி அவர்களை மௌநமாக இருக்கச் செய்தது தெய்வ சோதனையா? கலியின் செயலா எனத் தெரியவில்லை. பொறுப்போம்! பொறுத்துப் பார்ப்போம்!!

## இனி என்ன செய்வது ?

ஆரம்பித்த காரியத்தைப் பூர்த்தி செய்வதாகவே உத்தேசம். ஆனால் போதிய வஸதி இல்லாவிடில் முதல் பாகத்தைப்போல் மிகச் சுருக்கமாகவாவது மற்றவைகளை எல்லாம் இரண்டு பாகமாகவாவது வெளியிட்டு முன் சந்தா அளித்தவருக்கு கடன்படாம லிருக்கவேண்டும். தபால் கூலி ஐந்து பாகத்திற்கு ஐந்து ரூபாய். அச்சுக் கூலி பத்து ரூபாய். நண்பரளித்தது 15 அல்லது 16. இந்நிலையில் வேறென்ன செய்வது? அதிக சந்தா சேர்ந்து நன்கொடையும் தாராளமாகத் தந்தால் எல்லாம் சேர்ந்து

5 பாகமாகவாவது வெளியிடலாம். பாதி பாதியாகவாவது சந்தா அளித்து ஆதரிக்கவும். தன் காரியத்திற்காகவாவது சந்தாதாரரும் பொறுப்பெடுத்து சந்தா சேர்க்கவும்.

## நன்றி.

இதுவரை அளித்ததில் அதிக நன்கொடை தந்த கல்கத்தா ஸ்ரீ ஜீ. வி. ராமன், சென்னை கணேசன் கம்பெனி ஸ்ரீ R. சுப்பய்யர், சென்னை வெள்ளிக்கடை ஸ்ரீ K. ராமசந்திரய்யர், கள்ளிக்கோட்டை ஆடிட்டர் ஸ்ரீ பரமசிவன் ஆகிய நால்வர்களே ஆவர். ஐம்பது ரூபா யளித்தவர் பத்து. இருபத்தைந்து அளித்தவர் பதினேழு. இருபது அளித்தவர் இருபது. நூற்றைம்பது சந்தாதாரர். இதனால் வந்த வருவாய் இருபாகங்களுக்கே போதியதாகும். இனி உங்கள் கருணை மழையை எதிர்பார்க்கிறது முளைத்து இரு இலை வெடித்த புராணப் பயிர்! நன்கொடை சந்தா மூலம் இதை வளர்த்தால் உங்கள் குடும்பமும் வளரும். வாடவிடாதீர்கள்! சேராதவர் இன்றே முன் வாருங்கள்.

உத்ஸாஹ மூட்டியவர் பின்னடைந்தாலும் டில்லி நண்பர் ஸ்ரீ N. ஸ்ரீநிவாஸய்யரும் ஸ்ரீ சுந்தரேசபந்தும் பல வேலைகளுக்கிடையே இந்த தர்மத்தில் ஈடுபடுவது மிக மிகப் போற்றத் தக்கது. பரிபூர்ண ஆசிர்வாதத்துடன் அவர்களுக்கு நன்றி செலுத்துவது முதற்கடமையாகும். நன்கொடை அளித்தவர்களுக்கும் சந்தா தொகை அளித்தவர்களுக்கும் இதைத் தொழில் முறையிலில்லாமல் தார்மிக சிந்தையுடன் அழகாக எல்லாவற்றையும் விரைவில் தானே அச்சிடவேண்டுமென முன்வந்த ஸ்ரீ மீனாக்ஷி அச்சகத் தலைவர் ஸ்ரீ A. வெங்கட்ராமன் அவர்களுக்கும் பூர்ண ஆசிர்வாதத்துடன் நன்றி பல.

2, ஸ்டேஷன் ரோடு,
குருகுலம், W மாம்பலம்.
சென்னை-17.

தார்மிகருக்குப் பிரியனான,
**ஸ்ரீவத்ஸ, ஸோமதேவ சர்மா.**
*வைதிக தர்மவர்த்தனீ ஆசிரியர்.*

# ஸ்ரீ தேவீபாகவத அட்டவணை.


| விஷயம். | | பக்கம். |
|---|---|---|
| தேவி பாகவத மூலக்ரந்த அநுக்ரமணிகா | ... | 1—12 |
| தேவி பாகவத முகவுரை | ... | 13—14 |
| வியாஸரின் தாய் யார் ? | ... | 16 |
| அஸ்திகர் யார் ? | .... | 17 |
| ஸர்ப்பம் தியில் ஏன் விழுந்தது ! | .... | 18 |
| சக்தியே முதல் தெய்வம் | ... | 19 |
| சத்திய விரதன் | ... | 20 |
| ஸாத்விக பூஜையே சிறந்தது | .... | 21 |
| சசிகலா ஸுயம்வரம் | .... | 21 |
| நவராத்ரி | ... | 22 |
| காமக்ரோதமும், கர்மாவும் | .... | 23 |
| மஹிஷாஸுர வதம் | .... | 24 |
| விருத்ர வதம் | ... | 25 |
| ஹத்தி சேஷம் அகன்றது | .... | 27 |
| விசுவாமித்ரரும், வசிஷ்டரும் | ... | 28 |
| வசிஷ்டரே மைத்ராவருணர் | .... | 28 |
| ஔர்வர் மஹிமை | ... | 29 |
| ஹேஹயன் பிறவி | ... | 30 |
| ஏகாவளியும், ஏகவீரனும் | .... | 30 |
| நாரதர் பெண்ணானர் | .... | 31 |
| சதாக்ஷீ முதலிய சக்திகள் | ... | 32 |
| தேவி கீதை, ஸ்ருஷ்டி, சக்தி அம்சம் | ... | 33 |
| குலதேவதையைக் கைவிடாதே | ... | 34 |
| துளசியும், சங்கசூடனும் | ... | 34 |
| காயத்ரியை விட்டு அருணன் அழிந்தது | ... | 36 |
| ஆந்ஹிக தர்மம் | ... | 36 |
| காயத்ரீ மஹிமை | ... | 36 |
| கௌதம சாபம் | .... | 38 |
| கேந உபநிஷத் ஸாரம் | ... | 39 |
| மணித்வீபம் | ... | 39 |


முற்றிற்று.

# ஸ்ரீ பாகவத அட்டவணை.


ஸ்ரீ பாகவத மூலக்ரத்த அநுக்ரமணிகா .... 41—55
ஸ்ரீ பாகவத அவதாரிகை .... 57—58
ஸ்ரீ பாகவதம் கேட்டல் .... 59
துருவ சரிதம் .... 61
அஜாமிள சரிதம் .... 63
தேவாபசாரம் .... 63
விருத்ரனது முற்பிறவி .... 64
பிரஹ்லாத சரிதம் .... 66
கஜேந்திர மோக்ஷம் .... 68
அமிருதம் கடைதல் .... 69
வாமனவதாரம் .... 70
நாபாகன் ... 72
அம்பரீஷன் .... 73
இக்ஷ்வாகு வம்சம் ... 74
மாந்தாதாவின் வம்சம் ... 75
ஹரிச்சந்திரன் .... 75
ராஜ பரம்பரை ... 76
சந்திர வம்சம் ... 77
பரசுராமன் துஷ்ட க்ஷத்ரியர்களைக் கொன்றது 79
விச்வாமித்திரர் ... 81
நகுஷன் யயாதி சரிதம் ... 81
தேவயானி, சர்மிஷ்டா ... 82
பரதன் சரிதம் ... 83
ரந்திதேவர் ... 84
பாண்டவரது வம்சம் ... 85
ஸ்ரீ கிருஷ்ணவதாரம் ... 86
பூதநாதி வதம் .... 89
கிருஷ்ண பால லீலை ... 90
காளீயமர்த்தநம் ... 93
பிரலம்ப வதம் ... 93
கோபிகா வஸ்திரஹரணம் ... 94
யக்ஞபத்னிகளுக்கருள் ... 95
கோவர்த்தனோத்தாரி .... 95
ராஸக் கிரீடை .... 96

| | |
|---|---|
| ஸுதர்சநன் சாபமோசநம் .... | 97 |
| சங்கசூட வதம் .... | 97 |
| ஸாந்தீபியினிடம் கல்வி .... | 99 |
| பிரமர தூத மல்லது கீதம் .... | 99 |
| துவாரகா நிர்மாணம் .... | 100 |
| முசுகுந்த பிரஸாதம் .... | 100 |
| ருக்மிணீ முதலியவர் கல்யாணம் .... | 101 |
| அநிருத்தன் ... | 102 |
| நிருகன் .... | 103 |
| ஜராஸந்த வதம் .... | 104 |
| குசேலாநுக்ரஹம் .... | 104 |
| ஏகாதச த்வாதச ஸ்கந்த விஷயம் .... | 107 |
| இருபத்துநான்கு ஆசார்யர்களின் உபதேசம் ... | 107 |

முற்றிற்று.

## ஸ்ரீ பவிஷ்ய புராண அட்டவணை.

| | |
|---|---|
| ஸ்ரீபவிஷ்ய புராண மூலக்ரந்த அநுக்ரமணிகா | 111–117 |
| பவிஷ்ய புராண வரலாறு .... | 118 |
| ,, ,, அவதாரிகை ... | 119 |
| ,, ,, மங்கள சுலோகம் .... | 120 |
| கற்கவேண்டியவை ... | 121 |
| அஷ்ட வியாகரணம் .... | 121 |
| பவிஷ்ய புராணம் வந்த விபரம் .... | 122 |
| கால பரிமாணம் .... | 122 |
| யுகங்களின் தர்ம நிலை .... | 122 |
| நான்கு வர்ணங்களும் தர்மமும் .... | 123 |
| பிராம்மணன் கடமை ... | 124 |
| 8 ஆத்ம குணங்கள் .... | 124 |
| அபிவாதயே பொருள் .... | 125 |
| ஆசார்யர் யார்? மஹாகுரு யார்? ... | 125 |
| ஏதை ஏற்கலாம்? ... | 126 |
| ஸாமுத்ரிகா லக்ஷணம் ... | 126 |
| பிரதமாதி விரதம் .... | 126 |
| ஸுகன்யா சியவனர் ... | 127 |
| வெள்ளெருக்கை கணபதி ... | 127 |

| | | |
|---|---|---|
| ஸர்ப்ப பிரஸவம் | ... | 127 |
| ஸூர்ய மண்டலம் | ... | 128 |
| திண்டி ஸூர்ய ஸம்வாதம், ஸப்தமி பெருமை | ... | 128 |
| ஸாம்பனுக்குக் கிருஷ்ண சாபம் | .... | 129 |
| புராண படந சிரவணம் | .... | 130 |
| ஸத்ராஜித் | .... | 130 |
| சாகத்வீப ஸூர்யாலயம் | ... | 131 |
| இருவகை விமாநங்கள் | .... | 131 |
| விக்ரஹம் | .... | 131 |
| கிரஹணம் | ... | 132 |
| மூன்றுவகை கதை கூறுபவரும் கேட்பவரும் | .... | 132 |
| மத்யம பர்வ பொதுவான தர்மம் | .... | 133 |
| பிராம்மண தர்மம் | .... | 133 |
| புராணம் கேட்கும் விதி | ... | 133 |
| குளம் உத்யாநம் அமைத்தல் | ... | 134 |
| வ்ருக்ஷ தோஹதம் (சிகித்ஸை) | ... | 135 |
| குண்டவிதி | ... | 135 |
| பிரதி ஸர்க்க பர்வா | .... | 136 |
| சந்திர வம்சம் | ... | 137 |
| துவாபரயுக மன்னர்கள் | .... | 137 |
| மிலேச்ச யாகம் | .... | 138 |
| சேசு கிருஸ்தவர் முதலியவர் ஸிருஷ்டி | .... | 139 |
| மிலேச்ச பாஷை | ... | 140 |
| ராஜ்ய புத்ரா (ரஜபுடாந) | .... | 141 |
| கௌதம புத்த சாக்யமுநி | ... | 142 |
| க்ஷத்ரிய உத்பத்தி | .... | 142 |
| விக்ரமாதித்யன் ஸிம்மாசநம் | .... | 143 |
| வேதாள கதை | .... | 143 |
| ஸத்ய நாராயண சரிதமும் விரதமும் | .... | 146 |
| சந்திரகுப்தனும் பாணிநி வரருசி முதலியவரும் | | 149 |
| போபதேவர் | ... | 150 |
| சண்டீ மாஹாத்ம்யம் | .... | 151 |
| மஹா நந்தி வர்மா | .... | 151 |
| கலியில் பாண்டவர் ஜனனம் | .... | 152 |
| பதினெட்டு ராஜ்யங்களும் சாலிவாகநனும் | .... | 153 |
| போஜனீ மிலேச்சனுக்க முயற்சி | .... | 153 |
| பிருத்விராஜ சரிதம் | .... | 154 |

| | | |
|---|---|---|
| ஜயசந்த்ர பிருத்வீராஜ கலஹம் | .... | 155 |
| ஸம்யுக்தா ஸ்வயம்வரம் | .... | 156 |
| உதயஸிம்மன் | .... | 157 |
| இந்துலனல்லது ஜயந்தன் | .... | 157 |
| கிருஷ்ணும்சன் பதினெட்டு புராணம் கேட்பது | | 158 |
| கிருஷ்ணும்சர் சியாம் முதலியஇடத்தை ஆக்ரமிப்பது | | 160 |
| டில்லியில் மிலேச்ச அரசர் | .... | 161 |
| விக்ரம வம்சாதி வர்ணநம் | .... | 161 |
| கச்யப வம்சத்தால் மிலேச்ச ஜயம் | .... | 162 |
| பதினெட்டு கல்பங்கள் | .... | 163 |
| மிலேச்சர் ஆலயத்தை அழித்தது | .... | 163 |
| இந்திரன் குருவை வேண்டுதல் | .... | 164 |
| நிம்பார்க்கர் | .... | 164 |
| மத்வாசார்யர் | .... | 165 |
| ஸ்ரீதரர் | .... | 165 |
| விஷ்ணுஸ்வாமி | .... | 165 |
| பட்டோஜி தீக்ஷிதரும் கௌமுதியும் | .... | 166 |
| வராஹமிஹிரர் | .... | 167 |
| தன்வந்தரி ஸுச்ருதர் | .... | 168 |
| ஜயதேவரும் கீத கோவிந்தமும் | .... | 168 |
| விஷ்ணு சைதன்யர் | .... | 169 |
| வால்மீகி சரிதம் | .... | 170 |
| சங்கராசார்ய அவதாரம் | .... | 170 |
| சங்கரரும் ராமாநுஜரும் | .... | 171 |
| ஹநுமான் | .... | 172 |
| ராம சப்தம் முதலாரம்ப காரணம் | .... | 172 |
| ஆயிரம் முகராவணன் | .... | 172 |
| ஏகாதசி உத்பத்தி | .... | 172 |
| நாமதேவர் | .... | 173 |
| கபீர் | .... | 173 |
| ராமதாஸர் | .... | 173 |
| ஸ்ரீ தராசார்யர் | .... | 174 |
| கோத்ர ரிஷிகள் | .... | 174 |
| பாபர் ஹுமாயூ அக்பர் | .... | 175 |
| சிவாஜி | .... | 176 |
| விக்டோரியா (விகடாவதீ பார்லிமெண்ட்) | .... | 176 |
| ஆர்யர்களது மண்டலம் | .... | 176 |

| | | |
|---|---|---|
| ஜப்பானுக்ஷியா ? | .... | 177 |
| புஷ்யமித்ரன் | .... | 177 |
| ரீ்குவின் ஆக்ஷி | .... | 178 |
| கலியின் நான்காவது பாதம் | .... | 178 |
| கல்கி அவதாரம் | .... | 180 |
| ராதாகிருஷ்ண ஸ்வரூபம் | .... | 180 |
| கல்கி கிருதயுகத்தை ஆரம்பிப்பது | .... | 181 |
| விசித்ரமான விபரீதமான வரம் | .... | 182 |
| கர்ப்ப ஜன்ம ஸம்ஸார துக்கம் | .... | 183 |
| பிறவிக்கடலைக் கடக்கவழி | .... | 183 |
| வண்டி உண்ணாத விரதம் | .... | 184 |
| விரதங்களின் பெயர்கள் | .... | 185 |
| விரதங்களில் கவனிக்கவேண்டிய நியமம் | ... | 188 |
| பத்ரவிரத மஹிமை | .... | 189 |
| ஸஞ்ஜயனும் ஸ்வர்ண ஷ்டீவியும் | .... | 189 |
| அக்ஷய்ய திருதியா விரதமும் கதையும் | .... | 190 |
| நாகபஞ்சமி | .... | 191 |
| விஷமந்திரம் | ... | 192 |
| குக்குட மர்க்கட விரதம் | .... | 192 |
| புதாஷ்டமீ விரதம் | .... | 193 |
| கோவின் மஹிமையும் அதனுடலில் தேவரும் | .... | 195 |
| கோ த்வாதசி விரதமும் மஹிமையும் | .... | 196 |
| சாதுர் மாஸ்ய விரதம் | .... | 197 |
| ஸஹோதரி முதலியவரும் தாநபாத்ரம் | .... | 198 |
| நவக்ரஹ ஹோமம் | .... | 200 |
| இந்த்ர த்வஜ பூஜை | .... | 200 |
| அபராத சத விரதம் | .... | 200 |
| மூன்று அதிதாநங்கள் | .... | 202 |
| அன்னதாந மஹிமை | ... | 202 |
| ரதோத்ஸவம் | .... | 204 |

முற்றிற்று.

## ஸ்ரீ நாரத புராண அட்டவணை.

| | | |
|---|---|---|
| ஸ்ரீ நாரதபுராண மூலக்ரந்த அநுக்ர மணிகா | ... | 205–210 |
| நாரத புராண அவதாரிகை | .... | 211–212 |

மிருகண்டுவும் மார்க்கண்டேயரும் .... 214
க்ஷேத்ரங்களும் தீர்த்தங்களும் .... 215
பாஹுக சரிதம் .... 215
தன்வினை தன்னைச் சுடும் ... 217
பழைய தர்மத்தை ரக்ஷிப்பதே சிறந்தது .... 217
தர்ம பிராம்மண உபதேசம் .... 218
பிரதக்ஷிணமும்—அதன் தத்துவமும் ... 219
பாபமும் பிராயச்சித்தமும் .... 219
தற்கொலை பாபம் ... 220
துவஜாரோபண விரத பலன். ஸுமதி சரிதம் ... 221
மாஸோபவாஸ விரதம் .... 222
ஏகாதசியும் பத்ரசிலரும் .... 223
கலியில் விலக்கத்தக்கவை .... 224
ஸதாசாரம் .... 225
பிரும்மசாரி தர்மம் .... 225
யாருக்கு நமஸ்காரம் செய்யலாம்? .... 226
வேதமாலி யக்ஞமாலி ஸுமாலி சரிதம் .... 226
ஜாநந்தி கூறிய உபதேசம் .... 228
ஆலயத்தை மெழுகிய பயன் .... 228
அபிஷேக தீர்த்த மஹிமை. குலிகன் .... 229
ஜயத்வஜ சரிதம் அல்லது ஆலயத்தைப் பெருக்குதல் 230
கேசித்வஜ காண்டிக்ய ஸம்வாதம் ... 231
ஆத்ம தத்வம் .... 232
யோக ஸ்வரூபம் .... 233
ஜடபரத சரிதம் .... 234
ஸங்கீத ஸ்வர லக்ஷணம். வேதஸ்வரம் .... 234
7 ஸ்வரத்தால் யார் யாருக்கு இன்பம் .... 235
10 கான குணங்கள். 14 தோஷங்கள் .... 235
ஹோம கர்மாவின் தத்துவ விளக்கம் .... 236
வியாகரணம். ஜோதிஷம் .... 238
ஐந்துவகை பூஜை ... 238
கார்த்த வீர்யன் .... 239
ஹநுமச் சரிதமும் மஹிமையும் .... 240
ராதாகிருஷ்ண பூஜை .... 241
ஸ்ரீ ராதா ஸஹஸ்ரநாமம் .... 241
தேவீ மந்த்ரம் .... 242
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் .... 242

| | | |
|---|---|---|
| 18 புராணக் கணக்கு | .... | 242 |
| விரதங்கள் | .... | 243 |
| கரக சதுர்த்தி விரதம் | .... | 244 |
| ஸங்கஷ்ட விரதம் | .... | 244 |
| சீதளாஷ்டமீ விரதம் | .... | 244 |
| ஏகாதசிகள் | .... | 244 |
| ஏகாதசி மஹிமை | .... | 245 |
| ருக்மாங்கத சரிதம் | .... | 245 |
| பிரும்ம சிந்தை | .... | 247 |
| மோஹினி ஸிருஷ்டி | .... | 247 |
| பதிக்கு மருந்திட்ட பாவிசரிதம் | .... | 249 |
| ராஜதர்மம் வினவுதல் | .... | 251 |
| கற்பரசியான சூத்ர ஸ்திரீ | .... | 252 |
| தர்மாங்கதனின் நல்ல ஆக்ஷி | .... | 253 |
| கார்த்திகை விரதம் | .... | 254 |
| ஏகாதசியில் மோஹினியின் செயல் | .... | 255 |
| புழுவான பெண்ணின் சரிதம் | .... | 257 |
| விவாஹத்தின் பெருமை | .... | 258 |
| கந்தளீ சரிதம் | .... | 259 |
| விரோச்சநன் சொல்லேக்காத்தது | .... | 260 |
| காசியும் கங்கையும் | .... | 262 |
| புருஷோத்தம க்ஷேத்திரம் | .... | 263 |
| கடல் உப்பானதேன்? | .... | 264 |
| கங்காதுவாரம் | ... | 264 |
| பதரிகாசிரமம் | .... | 265 |
| யாத்திரை மஹிமை | .... | 265 |
| ப்ண்டரீகபுரமெனும் சிதம்பரம் | .... | 265 |
| வேத பாத ஸ்தவம் | .... | 267 |
| 18 புராண அநுபந்தம் | .... | 269–272 |

முற்றிற்று.

# 5. ஸ்ரீ தேவீ பாகவதம்.



ஸ்ரீ ராஜராஜேச்வரீ.

மாம்பலம் குருகுல வெளியீடு.

# ஸ்ரீ தேவீ பாகவத
# மூலக்ரந்த அநுக்ர மணிகா.

[ ஸ்ரீ தேவீபாகவதம் 12-ஸ்கந்தம் 318 அத்தியாயம் ]

பூர்ணமாக ஸகல விஷயங்களேயும் தமிழில் எழுதி வெளியிட முடியாததால், அந்தந்த புராணங்களிலுள்ள விஷய அநுக்ரமணிகையை எழுதினுல் அதனுல் ஓரளவு விஷயங்களே அறியலாமென இனி ஸகல புராணங்களுக்கும் இத்தகைய அட்டவணையை விரிவாக எழுதுகிறோம். நமது சுருக்க நூலின் அட்டவணைத் தனியாக வரும். இது வேறு.

## முதலாவது ஸ்கந்தம்.

1 மங்களம். ரிஷிகள் புராணங் கூறச்சொன்னது.
2 இதில் உள்ள சுலோகக் கணக்கும் விஷயங்களும்.
3 18 புராணங்கள் பெயர், சுலோகங்கள் ஒவ்வொரு யுகத்திலும் உண்டான 28 வியாஸர்கள் யார் யார்?
4 தேவியே ஸ்வதந்திரமானவள். மற்றவர் பரதந்திரர்.
5 ஹயக்ரீவர் கதையால் தேவியின் பெருமை.
6 மதுகைடபர் பிறப்பு. வரதாநம். யுத்தம்.
7 பிரும்மா பயந்து அம்பிகையைத் துதித்தல்.
8 யாரை ஆராதிக்க வேண்டுமென்ற நிர்ணயம்.
9 தேவியினருளால் விஷ்ணு மதுகைடபரை வதித்தது.
10 வியாஸருக்கு சிவன் புத்ர வரமளித்தல்.
11 சந்த்ரன் தாரையினிடம் புதனே உண்டுபண்ணல்.
12 புதன் இலே இவர்களிடம் புரூரவஸ் உண்டானது. ஸுத்யும்நஸ்துதி இளேதேவி ஸாயுஜ்ய மடைந்தது.
13 உர்வசி புரூரவஸ் சரிதம்.

14 சுக உத்பத்தி. கிருஹஸ்த தர்மம்.
15 சுகரது வைராக்யம். விஷ்ணுவுக்கு தேவி உபதேசம்.
16 சுகருக்கு தேவிபாகவத உபதேசம் செய்தல்.
17 சுகர் ஜநகனைக் காண மிதிலை செல்லுதல்.
18 சுக ஜநகர் ஸம்வாதம். இல்லறமா? துறவறமா?
19 சுகரது விவாஹம். நாரதோபதேசம். முக்தி.
20 சுகர் சென்றபின் வியாஸரது சரிதம்.

## இரண்டாவது ஸ்கந்தம்.

1 மத்ஸ்யகந்தி மத்ஸ்யராஜ உத்பத்தி.
2 பராசரர் மத்ஸ்யகந்தியிடம் வியாஸரைப் பெற்றது.
3 மஹாபிஷக் கங்கா சாபம். சந்தநு கங்கா விவாஹம்.
4 வஸுக்களின் உத்பத்தி.
5 ஸத்யவதி சந்தநு விவாஹம்.
6 திருதராஷ்டிர பாண்டு விதுர பாண்டவ ஜநநம்.
7 பாண்டவ சரிதம். இறந்தவரைக் காணல்.
8 யதுகுலம் முடிதல். பரீக்ஷித் சரிதம்.
9 குரு சரிதம். பரீக்ஷித் ரஹஸ்ய இடவாஸம்.
10 தக்ஷக ப்ராம்மண ஸம்வாதம். தக்ஷகன் தீண்டி பரீக்ஷித் இறத்தல்.
11 ஜநமேஜய ஸர்ப்பயாகத்தை அஸ்திகர் நிறுத்தியது.
12 அஸ்திகர் பிறப்பும், பாகவத பெருமையும்.

## மூன்றுவது ஸ்கந்தம்.

1 புவநேச்வரியின் ஸ்வரூபம்.
2 விமாநமேறி பிரும்மாதிகள் சென்றது.
3 மும்மூர்த்திகளுக்கும் தேவீ தர்சநம்.
4 மூவரும் ஸ்த்ரீயாகி தேவியைத் துதித்தது.
5 மும்மூர்த்திகளும் தேவியை துதித்தது.
6 பிரும்மாவுக்கு தேவியின் உபதேசம்.
7 குண பேதத்தால் மூர்த்தி பேதம்.
8 தத்வஸ்வரூப நிரூபணம்.

9 குணங்களின் லக்ஷண வர்ணநம்.
10 வாக்பீஜ மஹிமா. ஸத்யவ்ரதன் சரிதம்.
11 வாக்பீஜத்தால் ஸத்யவ்ரதன் வித்வானுனன்.
12 அம்பிகா யக்ஞம் முக்தியைத் தரும்.
13 மஹாவிஷ்ணு அம்பிகா யாகம் செய்தல்.
14 புவனேச்வரீ மஹிமை. ஸுதர்சந சரிதம்.
15 யுதாஜித்தும் வீரஸேநனும் பேரனுக்காக யுத்தம்.
16 பரத்வாதஜரிடம் ஸுதர்சநன். ஜயத்ரதனது நீச வேலே.
17 விச்வாமித்ர வஸிஷ்டர் கலகம். காமபீஜ மஹிமை.
18 காசிராஜனது பெண் சசிகலா ஸ்வயம்வரம்.
19 ஸுதர்சநனும் மற்ற அரசரும் காசிக்கு வருதல்.
20 அரசரின் பரஸ்பர வாதம். கன்யையின் தீர்ப்பு.
21 அரசர்க்ளின் கோலாஹலம். சசி கலேயின் தந்த்ரம்.
22 சசிகலே ஸுதர்சநனே இரவில் மணந்தது.
23 ஏமார்ந்த அரசரது யுத்தம். தேவீ துஷ்டரைக் கொன்றது.
24 தேவீ மஹிமை. துர்க்கை காசியில் வஸித்தல்.
25 தேவியை அயோத்யையில் பிரதிஷ்டை செய்தல்.
26 நவராத்ரி செய்யவேண்டிய வகை.
27 கன்யா பூஜை. அதன் பலன். தக்கவர் தகாதவர்.
28 ஸீதா வியோகத்தால் ராமன் வருந்தியது.
29 ராகவனுக்கும் சோக துக்கம் வந்த காரணம்.
30 நாரதர் கூறியபடி ராமன் நவராத்ரி செய்தல்.


## நான்காவது ஸ்கந்தம்.


1 கிருஷ்ணவதாரம் பற்றிய கேள்வி.
2 கர்மாவினுல்தான் ஜன்மா உண்டாகிறது.
3 மருத்கண உத்பத்தி. அதிதிக்கு திதி சாபமளித்தல்.
4 அதர்மத்தால் உலகிற்குண்டாகும் தீமை.
5 நரநாராயணர்களின் சரிதம்.

6 நாராயணரின் தொடையிலிருந்து ஊர்வசி.
7 அஹங்காரத்தாலுண்டானது உலகம்.
8 சியவநர் பாதாளம் சென்று ப்ரஹ்லாதரை ஸந்தித்தது.
9 பிரஹ்லாதருடன் நரநாராயண யுத்தம்.
10 விஷ்ணுவுக்கு பிருகு முநிவர் சாபமளித்தது.
11 சுக்ரர் ஸஞ்ஜீவினிக்காக தவம். விஷ்ணு அவர் தாயைக் கொன்றது.
12 பிருகு பத்நியைப் பிழைப்பித்தது. ஜயந்தியை சுக்ரரிடமனுப்பியது.
13 பிருஹஸ்பதி சுக்ர ரூபமெடுத்து தைத்யருக்கு நாஸ்திக உபதேசம்.
14 தன்னை அவமதித்த தைத்யருக்கு சுக்ர சாபம்.
15 தேவாஸுர யுத்தம். ஸமாதாநம்.
16 தேவியன் விருப்பத்தால் விஷ்ணு தசாவதாரம்.
17 நரநாராயணரும் தேவஸ்த்ரீகளும்.
18 பூமி, பாரமகல பிரும்மாவிடமும் விஷ்ணுவினிடமும் சென்றது. பிரும்மா விஷ்ணு ஸம்வாதம்.
19 தேவி ஸ்தோத்ரம்.
20 தேவி மஹிமை. கிருஷ்ணவதாரம்.
21 தேவகிக்கு 7 புத்ரர் ஜநநம். மரணம்.
22 ஸுரரும் அஸுரரும் அம்சத்தாலவதரித்தல்.
23 கிருஷ்ணவதார சரிதம்.
24 கிருஷ்ணன் கதை.
25 தேவி ஸர்வக்ஞை. தேவர் கிஞ்சிக்ஞர்.

## ஐந்தாவது ஸ்கந்தம்.

1 விஷ்ணுவை விட சிவன் சிறந்தவர்.
2 மஹிஷோத்பத்தி.
3 மஹிஷன் சக்ரனுடன் போர் துவக்குதல்.
4 தேவர் ஸபைகூடி யோசித்தல்.
5 அஸுர ஸேனை தோல்வி அடைந்தது.

6 தேவா ஸுர யுத்தம்.
7 தோற்ற தேவர் கைலாஸம் செல்லுதல்.
8 தேவி அஸுரரைக் கொல்வதற்காக தோன்றியது.
9 தேவர் தேவியை அர்ச்சித்தல்.
10 மஹிஷ தூதன் தேவி ஸம்வாதம்.
11 மஹிஷாஸுர ஸபை. தாம்ரனது உபதேசம்.
12 மஹிஷன் பாஷ்கல துர்முகரை அனுப்பியது.
13 பாஷ்கல துர்முக யுத்தமும் வதமும்,
14 தாம்ர சிக்ஷுர யுத்தமும் வதமும்.
15 பிடாலாஸ்ய அஸிலோம யுத்தமும் வதமும்.
16 மஹிஷ தேவி ஸம்வாதம்.
17 மந்தோதரீ சரித்ர வர்ணநம்.
18 மஹிஷ யுத்தமும் வதமும்.
19 தேவர்கள் தேவியைத் துதித்தது.
20 தேவி அநுக்ரஹமும் உலக க்ஷேமமும்.
21 சும்பாஸுரன் தேவபதவியை அபஹரித்தல்.
22 குரு சொற்படி தேவர் தேவியை துதித்தது.
23 கௌசிகி தேவி தோன்றல். சண்டமுண்டர் தேவியின் அழகை சும்பனிடம் வர்ணிப்பது.
24 சும்பன் தூதனை அனுப்பல்.
25 தூம்ர லோசந யுத்தமும் வதமும்.
26 தேவியுடன் சண்ட முண்டர் போரும் வதமும்.
27 ரக்தபீஜனை அனுப்பியது.
28 ரக்தபீஜ தேவி யுத்தம்.
29 ரக்தபீஜ வதம். சும்ப நிசும்ப தேவி யுத்தம்.
30 நிசும்ப வதம்.
31 சும்பாஸுர வத சரிதம்.
32 ராஜ வைச்ய தேவி சரித ச்ரவணம்.
33 புவநஸுந்தரீ மாஹாத்ம்யம்.
34 தேவீ பூஜாவிதி வர்ணநம்.
35 ராஜ வைச்யர்களுக்கு தேவீ வரம்.

## ஆருவது ஸ்கந்தம்.

1 விருத்தாஸுர சரிதம்.
2 திரி சிரஸ்வதம் விருத்ர உத்பத்தி.
3 விருத்ரன் தவத்திற்குச் செல்லுதல்.
4 தேவர் சிவனைச் சரணமடைதல்.
5 தேவியின் ஸ்துதியால் வரம்பெறுதல்.
6 தேவிமஹிமை. விருத்ரவத சரிதம்.
7 சுக்கிரனுக்கு ஹத்திதோஷம். நகுஷனிந்தரனுதல்.
8 நகுஷன் சசியை விரும்பல். அவன் தேவியை வேண்டல்.
9 தேவியினருளால் முனிவர் சாபத்தால் நஹுஷன் விழுதல்.
10 மூன்று வகையான கர்மஸ்வரூபம்.
11 யுக தர்மம். ஸத் தர்மம். அஸத் தர்மம்.
12 கொக்கு நாரையாகி வஸிஷ்டவிச்வாமித்ர யுத்தம்.
13 சுநச்சேபன் கதை.
14 நிமிசாபத்தால் வஸிஷ்டர் மித்ராவருண புத்ரராதல்.
15 நிமிவேறு உடல். ஹேஹய கதை.
16 ஹைஹயர் பார்க்கவரைக் கொன்றது.
17 தேவியால் பிருகு வம்சம் வளருதல்.
18 ஹைஹயர் சரிதம்.
19 ஹரி அச்வத்தினிடம் புத்ரனைப் பிறத்தல்.
20 ஹரியின் அவதாரம்.
21 ஏக வீரனுக்கு அபிஷேகம்.
22 ஏகாவலீ சரிதம்.
23 ஹைஹய காலகேது யுத்தம்.
24 விக்ஷேப சக்தி ஸ்வரூபம்.
25 வியாஸர் தனது மோஹத்தைக் கூறல்.
26 நாரதர் தனது மோஹத்தை வர்ணித்தல்.
27 நாரதர் விவாஹம்.
28 அதன் விரிவு.

29 பெண்ணாகிய நாரதர் ஆணாக மாறுதல்.
30 விஷ்ணு மஹாமாயாஸ்வரூபங்கூறல்.
31 பகவதியின் த்யாநாதிகள்.

## ஏழாவது ஸ்கந்தம்.

1 ஸூர்ய சந்த்ரவம்ச அரசர்கள்.
2 அந்த வம்சத்தவரின் விரிவு.
3 ஸுகன்யையை சியவனருக்களித்தல்.
4 ஸுகன்யை அசுவிநீ தேவஸம்வாதம்.
5 அசுவநீ அருளால் சியவநர் இளமைபெறல்.
6 சர்யாதியின் வேள்வி.
7 அதில் அசுவிநீகள் ஸோமபாநம் செய்தது.
8 சர்யாதி வம்சவர்ணனை.
9 ககுத்ஸ்தன் முதலியவர் ஜநநம்.
10 ஸத்ய விரத கதை.
11 திருசங்குவின் சரிதம்.
12 திருசங்கு ஸ்வர்க்கம் செல்லல்.
13 ஹரிச்சந்திரன் அரசு. திரிசங்கு விசுவாமித்ரரை ஸந்தித்தல்.
14 ஹரிச்சந்திர கதை.
15 அவருக்குப் புத்திரன் பிறத்தல்.
16 சுநச்சேபனது சரிதம்.
17 விசுவாமித்திரர் சுநச்சேபனை ரக்ஷித்தல்.
18 ஹரிச்சந்திரனிடம் விசுவாமித்திரர் கோபம்.
19 ஹரிச்சந்திர ராஜ்யம் அளித்தல்.
20 அரசன் தக்ஷிணை அளிக்க முயற்சித்தல்.
21 ஹரிச்சந்திரனது சோகம்.
22 மன்னன் தன்னை விற்றுக்கொள்ளல்.
23 சண்டாளன் அவரை விலைக்கு வாங்கல்.
24 மன்னன் சண்டாள வீட்டில் வஸித்தல்.
25 அரசனது மனைவி மகன் சரிதம்.
26 பத்நி என அறிந்து மன்னனது சோகம்.

27 ஹரிச்சந்திரன் ஸுவர்க்கம் செல்லல்.
28 சதாக்ஷீ தேவியின் மஹிமை.
29 ராஜ தர்மம் குறித்து கேட்டல்.
30 கௌரியின் அவதாரம்.
31 ஹிமவானுக்குப் புத்திரியாதல்.
32 தேவீ கீதை ஆத்ம தத்துவ நிரூபணம்.
33 தேவீ விசுவரூப தர்சநம்.
34 தேவீ க்ஞானத்தால் மோக்ஷமென்பது.
35 தேவீ மந்திர ஸித்தி முக்தி ஸாதனம்.
36 தேவீ பிரும்ம தத்துவம்.
37 தேவீ பக்தியின் மஹிமை.
38 தேவீ உத்ஸவம், விரதங்கள், தேவீஸ்தானங்கள்
39 தேவீ மூர்த்தியின் பூஜாவிதி.
40 தேவீ பிரும்ம பூஜா பத்ததி.

## எட்டாவது ஸ்கந்தம்.

1 மநுவுக்கு தேவீ வரமளித்தல்.
2 வராஹாவதாரம். பூமி உத்தரணம்.
3 மநுவின் வம்ச வர்ணநம்.
4 பிரிய விரதனது சரிதம்.
5 பூமண்டலத்தின் வர்ணநம்.
6 தேவியின் ஸ்வரூபமும் உபாஸனையும்.
7 மூலத்திலிருந்து மேல்வரை வர்ணனம்.
8 இலா விருத வர்ணனம்.
9 ஒவ்வொரு வர்ஷத்திலும் ஸேவிக்கத் தக்கவர்.
10 ஸேவ்யர் ஸேவகர் யார் என்பது.
11 ,, ,, ,,
12 துவீ பாந்தர விருத்தாந்தம்.
13 ,, ,, ,,
14 லோகா லோக பர்வதம்.
15 ஸூர்யனின் கதி மந்தமாகவும் வேகமாகவும் காரணம்.
16 சந்திரனின் கதியினாலுண்டாகும் பலன்.
17 துருவ மண்டல ஸ்திதி.

18 ராஹு மண்டலம் சந்திர ஸூர்ய கிரஹணம்.
19 தலா திலோக வர்ணநம்.
20 தலா தல்ஸ்வரூபம்.
21 நரகஸ்வரூபம்.
22 பாதகங்களும் அதற்கேற்ற நரகங்களும்.
23 பலவகையான நரகங்கள்.
24 தேவியின் ஆராதநம்.

## ஒன்பதாவது ஸ்கந்தம்.

1 சுருக்கமாக சக்தி வர்ணநம்.
2 ஐந்து பிரக்ருதிகள் உண்டானது.
3 தேவாதிகளின் ஸிருஷ்டி.
4 ஸரஸ்வதி ஸ்தோத்ரம் பூஜாவிதி.
5 நாராயணர் நாரதருக்கு ஸரஸ்வதி மஹா ஸ்தோத்ரம் உபதேசித்தல்.
6 லக்ஷ்மீ கங்கை ஸரஸ்வதி இவர்கள் பூமியில் பிறத்தல்
7 அவர்களுக்கு சாபமும் சாபநிவர்த்தியும்.
8 கங்காதிகளின் உத்பத்தி.
9 சக்தியின் உத்பத்தி பூமியின் அம்சம்.
10 பூமிக்குச் செய்யும் அபசாரம் நரகமளிக்கும்.
11 கங்கோத்பத்தி.
12 ராதாகிருஷ்ணரிடம் கோலோகத்தில் கங்கோத்பத்தி.
13 கங்கை விஷ்ணு பத்னியானது.
14 கங்கைக்கும் விஷ்ணுவுக்குமுள்ள ஸம்மந்தம்.
15 துலஸியின் கதை.
16 குசதுவஜ ராஜனுக்கு லக்ஷ்மியின் அம்சாவதாரம். ராமாயணம் சாயா ஸீதையே திரௌபதியாகத் தோன்றல்.
17 துலஸிக்கு பிரும்மா வரந்தரல்.
18 சங்கசூடன் துலஸியை சந்தித்து பேசுதல்
19 சங்கசூட துலஸி விவாஹம். வைகுண்டஞ் செல்லல்.
20 துலஸிக்கு ஸமாதாநம் சொல்லி சங்கசூடன் யுத்தம் செய்யக்கிளம்புதல்.

21 சங்கசூட சிவ ஸம்வாதமும் யுத்தமும்.
22 தேவாஸுர யுத்தம்.
23 விஷ்ணு சங்கசூடனது கவசத்தை யாசித்து துலஸியின் கற்பை அழித்தல். சங்கசூட வதம்.
24 துலஸீ மாஹாத்மியம். ஸாளக்ராம மஹிமை.
25 மஹா மந்திரத்துடன் துலஸி பூஜை ஸ்தோத்ரம்.
26 அசுவபதி ஸாவித்ரியை உபாஸித்தல். ஸ்தோத்ரம்.
27 ஸாவித்ரீ ஸத்யவான் விவாஹம்.
28 பதியைக்கொண்டு செல்லும் யமனுடன் வாதம்.
29 ஸாவித்ரீ வரதாநம். தாந தர்ம பலம்.
30 கர்ம விபாக வர்ணநம். ஸ்வர்க்கந்தரும் தாநம்.
31 யமாஷ்டகம். மூல சக்தி மந்திர உபதேசம்.
32 86 நரக குண்டங்களும் பாபங்களும்.
33 எந்த பாபத்தால் எந்த குண்டம். எத்தினை காலம்?
34 பாபபலனை நரகத்திலும் பூமியிலும் அனுபவித்தல்.
35 நரகம் செல்பவர். அங்குள்ள யாதனை.
36 தேவீ பக்தருக்கு நரக பயமில்லை.
37 நரககுண்ட லக்ஷண வர்ணனை.
38 தேவியின் சிறந்த மஹிமை.
39 மஹாலக்ஷ்மி சரிதம்.
40 பக்த நாரதருக்கு தேவி ப்ரஸாதம். அதை சக்கிரன் அவமதித்து லக்ஷ்மீ விலகும்படி சாபம் பெற்றது.
41 இந்திரன் பிரும்மாவிடம் முறையிட்டது.
42 மஹாலக்ஷ்மீ பூஜை ஸ்தோத்ரம் மந்திரம்.
43 ஸ்வாஹா தேவியின் சரிதம்.
44 ஸ்வதா தேவியின் சரிதம்.
45 தக்ஷிணா தேவியின் சரிதம்.
46 ஷஷ்டீதேவீ. பிரியவிரதன் இறந்த குழந்தைபெறுதல்.
47 மங்களசண்டீ சரிதம்.
48 மாநஸாதேவீ சரிதம், பூஜாவிதி, ஸ்துதி.
49 ஸுரபீதேவீ சரிதம்.
50 ராதாபூஜை, துர்க்காபூஜை, நவாக்ஷரீ மந்திரம் ஸ்துதி.

## பத்தாவது ஸ்கந்தம்.

1 ஸ்வாயம்புவமநு சரிதம்.
2 தேவி விந்த்யைமலே சென்றது. மேருவைவிட விந்தியம் சிறந்ததென நாரதர் கூறல்.
3 விந்தியம் வளர்ந்து ஸூரியனைத்தடுத்தல்.
4 விருஷத்வஜ ஸ்துதி.
5 மஹாவிஷ்ணு ஸ்தோத்திரம்.
6 அகஸ்த்யரை தேவர் விந்த்ய மலையை அடக்க வேண்டுதல்.
7 தேவியினருளால் அகஸ்தியர் விந்தியத்தை அடக்கியது.
8 ஸ்வாரோசிஷமநு சரிதம்.
9 தேவி மஹிமையும் சாக்ஷுஷமநு சரிதமும்.
10 ஸாவர்ணிமநு சரிதம்.
11 மஹாகாலீ சரிதம்.
12 மஹாலக்ஷ்மீ மஹா ஸரஸ்வதீ சரிதங்கள்.

## பதினோராவது ஸ்கந்தம்.

1 காலை செய்யவேண்டிய வேலைகள்.
2 சௌசாதி விதிகள்,
3 ஸ்நாநாதிகளும் ருத்ராக்ஷதாரணமும்.
4 ருத்ராக்ஷம் பலவகை.
5 ஜபமாலையின் விதி
6 ருத்ராக்ஷ மஹிமை.
7 ஒரு முகம் முதல் 21 முகம் வரை ருத்ராக்ஷம்.
8 பூத சுத்தி.
9 சிரோ விரதம்.
10 கௌண பஸ்மாதிகளின் விவரம்.
11 மூன்றுவித பஸ்மா. அதன் மஹிமை.
12 பஸ்மதாரண விஸ்தார வர்ணநம்.
13 பஸ்ம மஹிமை.
14 விபூதி தாரண மஹிமை.

15 திருபுண்ட்ர ஊர்த்துவ புண்ட்ர மஹிமை.
16 ஸந்தியா உபாஸநம்.
17 ஸந்தியாதி கர்மா.
18 பூர்ணோபசாரம் முதலியன.
19 மாத்யான்ஹிக ஸந்தியா.
20 பிரும்மயக்ஞம் முதலியவை.
21 காயத்ரீ புரச்சரணம்.
22 வைச்வதேவம் முதலியன.
23 போஜநத்திற்குப்பின் செய்யவேண்டிய காரியமும் தப்த கிருச்சிரம் முதலிய்னவும்.
24 காம்ய கர்மாவும் பிராயச் சித்தகர்மாவும்.

## பனிரெண்டாவது ஸ்கந்தம்.

1 காயத்ரிக்கு ரிஷிசந்தஸ் முதலியன.
2 ஒவ்வொரு எழுத்திற்கும் தேவதை ரிஷி சந்தஸ்.
3 ஜகன் மாதாவின் கவசம்.
4 காயத்ரீ ஹிருதய மந்திரம்.
5 காயத்ரீ ஸ்தோத்ரம்.
6 காயத்ரீ ஸஹஸ்ரநாமா.
7 தீக்ஷாவிதி.
8 கேநோப நிஷத்கதா.
9 கௌதம சாபத்தால் ப்ராம்மணர் அன்னிய தேவதைகளை உபாஸித்தல்.
10 த்வீபவர்ணம்.
11 பத்மராகாதி பிராகாரவர்ணநம்.
12 சிந்தாமணி கிருஹவர்ணநம்.
13 ஜநமேஜயன் தேவீயாகம் செய்தல்.
14 புராண பூர்த்தி. புராண பலன்.

ஸ்ரீ தேவீபாகவத மூலக்ரந்த அநுக்ரமணிகா முற்றிற்று.

# ஸ்ரீ தேவீ பாகவத

## முகவுரை.

இப் பெயரே தேவியின் சரிதமென விளக்குகிறது. அன்னையின் மூலமாகவே அப்பனை அண்ட வேண்டும். உலக மாதாவான பராசக்தியின் உருவே உலகிலுள்ள பெண்மக்கள் அனைவரும். பெண் இன்றி வாழ்க்கை இல்லை. ஸ்ருஷ்டி இல்லை. இன்பமில்லை. கல்விக் கடவுளைக் கலைவாணி என்போம். செல்வக் கடவுளை லக்ஷ்மீ என்போம். அறிவுக் கடவுளைப் பார்வதி என்போம். பராசக்திஎன்பது மூலப்பொருள். அங்கிருந்தே எல்லோரும் எல்லாவற்றையும் பெறுகிறோம். புத்தியும் தநமும் பலமும் அவளே. ஆதலின் பலமில்லாதவன் சக்தி இல்லை என்றே கூறுவான். சிவனில்லை விஷ்ணு இல்லை என்பதில்லை.

அவளே முழுமுதற் தெய்வம் என்பது சாக்த மதம். அவளை மாயை காயத்ரீ ஸாவித்ரீ ஸ்வாஹா ஸ்வதா தக்ஷிணை என்ற பல அவஸரத்தில் காணலாம். சுருங்கக் கூறினுல் பரப்ரும்ம ஸ்வரூபிணீ பரப்ரும்ம மஹிஷீ எனலாம். மும்மூர்த்திகளும் ராமகிருஷ்ணர் முதலிய அவதாரங்களும் அரசர்களும் மஹரிஷிகளும் தேவியை உபாஸித்து அவளருளால்தான் பெருமை பெற்றனர். மாயையில் சிக்காதவரில்லை. கர்ம கதிக்கு ஆளாகாதவரில்லை. காயத்ரியின் உபாஸனை முக்யம். சராசர வடிவமான தேவி மணித்வீபத்திலே அமிருதக் கடல் இடையே ஸ்ரீநகர மத்தியிலே சிந்தாமணி கிருஹத்திலே ஸ்ரீசக்ரராஜ மத்தியிலே பிந்துவிலே ஸ்ரீஸிம்மாஸநத்தில் வீற்றிருக்கின்ருள் என இந்த புராணம் கூறுகிறது.

லலிதமான நடை, ரஸமான கதை, உயர்ந்த தத்வம், சிறந்த தர்மம், காயத்ரீ ஸஹஸ்ரநாமம், கவசம், ஹ்ருதயம் ப்ரத்யக்ஷரம், ரிஷி சந்தஸ் தேவதை, 9 அத்யாயமுள்ள தேவீ கீதை, சக்தி அவதாரங்கள், அவைகளின்

பூஜாவிதி, மூல மந்தரம், பீஜாக்ஷரங்கள், ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம், ராஜவம்சம், மன்வந்தரம், 14 லோகம், 14 மநுக்கள், பூகோள ககோளம், நரகம் முதலிய பற்பல விஷயங்களை இதில் காணலாம்.

காயத்ரீ மூன்று பாதமுள்ளது. அதேபோல் இதன் மங்கள சுலோகம் மூன்று பாதத்துடன் காயத்ரியின் பல சொற்கள் அமைந்தது. நித்ய ஆன்ஹிக கர்மாவைச் சிறப்பாகக் கூறுகிறார். சாக்த மதத்திற்குப் பிரமாண மான நூலிது! கர்மாவும் தேவியுமே எல்லாவற்றிலும் மிகச் சிறந்ததென இதன் கொள்கை!!

पापीयानपि वेदधर्मरहितः स्वाचार हीनाशयः ।
व्याजेनापिश्रुणोतियः परमिदं श्रीमत्पुराणोत्तमं ।
भुक्त्वाभोगकलापमत्र विपुलं देहावसानेऽचलम् ।
योगिप्राप्य मवाप्नुयात् भगवती नामांकितं सुंदरम् ॥

பாபியானாலும் வேததர்மத்தை விட்டவனானாலும் ஆசாரமில்லாதவனாயினும் ஒப்புக்காகவாவது இந்த உத்தம புராணமான தேவிபாகவதத்தைக் கேட்டால் உயர்ந்த போகங்களை அனுபவித்து முடிவில் யோகிகள் பெறத்தக்க அழகிய தேவீஸ்தாநத்தை அடைவான்.

# 5. ஸ்ரீ தேவீ பாகவதம்.

[12-ஸ்கந்தம் 18 ஆயிரம் சுலோகம். நாகரத்திலுள்ளது.
பாம்பேயில் கிடைக்கும். வசந நடையில்
தமிழிலும் கிடைக்கும்.]

सर्वं चैतन्य रूपां तामाद्यां विद्यां च धीमहि ।
बुद्धिं यानः प्रचोदयात् ॥
सर्वं खल्वित मेवाहं नान्यदस्ति सनातनम् ।

ஸர்வ சைதன்ய ரூபாம் தாம் ஆத்யாம் வித்யாஞ்ச 4திமஹி — புத்திம் யாந: ப்ரசோத யாத்॥ "ஸர்வம் 2கல்வி3த மேவாஹம் நான்யத் அஸ்தி ஸநாதநம்"॥ என்று இந்த சுலோக மூலமாக தேவியே தேவீ பாகவதத்தை விஷ்ணுவுக்கு உபதேசித்தாள். அதை மஹா புராணமாக இயற்றி வேதவ்யாஸர் தனது புத்ரரான சுகருக்கு உபதேசித்தார். ப்ரும்ம சாபத்தாலும் இறக்கிறோமே என்ற துன்பத்துடன் இறந்ததாலும் பரீக்ஷித்திற்குத் தோன்றிய துர்கதியை ஜநமேஜயன் தேவி பாகவத ச்ரவணத்தால் அகற்றி நற்கதி தந்தார். வ்யாஸர் தானே அவருக்குக் கூறினர்.

வேதாந்த சாஸ்த்ரம் ஸாத்விகமானது. தேவி வித்யா வடிவமானவள். வேத வேதாந்த வித்யா வடிவமான தேவியின் சரிதத்தை இந்த புராணம் வர்ணிக்கிறது. ஒரு ஸமயம் வ்யாஸர் தனது ஆச்ரமத்தில் இரு பக்ஷிகள் தனது குஞ்ஜுக்கு ஆஹாரம் அளித்து அத்துடன் லாலனை செய்வதைக் கண்டார். தனக்கும் ஒரு புத்ரன் உண்டாக வேண்டும் என ஆசை கொண்டார். மேரு மலைக்குச் சென்று புத்ரனுக்காக யாரை உபாஸிப்பது என சிந்தித்தார். நாரதர் தேவியின் பெருமையைக் கூறி தேவியை உபாஸிக்கும்படிக் கூறினர்.

வாக்பீஜம் எனும் மந்த்ரத்தால் தேவியை உபாஸிக்கும்பொழுது பரமசிவன் அவர் எதிரே தோன்றி தனது அம்சத்தால் ஸர்வக்ஞனை குழந்தை உண்டாகுமென்றார். க்ருதாசி எனும் அப்ஸரஸ் வ்யாஸர் முன்னே கிளிவேஷந் தாங்கி நின்றாள். அவளைக் கண்டு முனிவர் மநம் காமவசமாயிற்று. அரணி கடையும்போது சக்தி வெளிக்கிளம்பி அரணிமேல் விழுந்தது. அங்கிருந்து சுகர் என்ற புத்ரர் ஜநித்தார். உபநயநம் செய்து ப்ருஹஸ்பதியிடம் கல்வி கற்க அனுப்பினார். கல்வி முடிந்தவுடன் வழக்கப்படி புத்ரனை மணம்செய்து கொள்ளும்படி கூறினார்.

சுகரது மநம் துறவறத்தில் சென்றது. தந்தை சொற்படி மிதிலை சென்று ஜநகனுடன் இல்லறம் பெரியதா துறவறம் சிறந்ததா என வாதமிட்டார். பிறகு தந்தை விருப்பிற் கிணங்க பீவரீ எனும் பித்ருக்களின் கன்யகையை மணந்தார். க்ருஷ்ணன் கௌரன் ப்ரமன் பூரிதன் தேவச்ருதன் என 5 புத்ரர்களையும் கீர்த்தி எனும் புத்ரியையும் பெற்றார். கீர்த்தி அணு என்பவரை மணந்து ப்ரும்மதத்தன் என்ற க்ஞானியைப் பெற்றாள்.

சுகர் துறவியாக வெளியிற் செல்ல வ்யாஸர் சுக! சுக! என அவரைப் பின்தொடர்ந்தார். சுகர் உடலைவிட, தந்தை கதற, சிவன் வ்யாஸரை ஸமாதாநப்படுத்தி நிழல் வடிவமான சுக உருவைத் தந்தார். வ்யாஸரது சோகம் அகலவில்லை. தாயான ஸத்யவதி சந்தநுவை மணந்து இரு புத்ரரைப் பெற்றிருப்பதைக்கேட்டு அங்கு சென்றார். அங்கு மூற்றவனை ஒரு கந்தர்வன் கொல்ல இளயவனும் ஸந்ததி இல்லாமல் இறந்தான். சந்த்ரவம்சம் விருத்தியாக தனது ஸஹோதரன் மனைவி மூலமாக தாய் சொற்படி த்ருதராஷ்ட்ரன் பாண்டு விதுரன் என்ற மூன்று புத்ரர்களை உண்டுபண்ணினார்.

## வியாஸரின் தாய் யார் ?

உபரிசரன் என்ற அரசனது வீர்யத்தினல் ஒரு மத்ஸயத்தின் வயிற்றில் உண்டானவள். சம்படவன் அவளை வளர்த்தான். மத்ஸ்யகந்தி என காரணப் பெயர் பெற்றாள். ஒரு ஸமயம் பராசர முனிவர்

இவளை யோஜனைகந்தி என்ற பெயருக்கேற்க வாஸனை யுள்ளவளாகச் செய்து விதிப்படி மணந்து வியாஸரை உண்டுபண்ணினார். அவளைக் கன்யகையாகவே செய்ய சந்தனு ராஜன் மணந்தார். பாண்டுவிடம் பாண்டவர் பிறந்தார். அர்ஜுநன் ஸுபத்ரையிடம் அபிமன்யுவைப் பெற்றார். அபிமன்யுவின் புதல்வர் பரீக்ஷித். அவர் தான் மௌநமாக இருந்து தன்னை வரவேற்காத சமீக முநிவர் கழுத்தில், இறந்த பாம்பைப் போட்டார். சிருங்கி என்ற சமீக புத்ரர் ஏழு நாளில் தக்ஷகன் கடித் திறக்கும்படி சபித்தார்.

மன்னன் கடலில் ஒருகால் ஸ்தம்பம் நாட்டி அதில் அரண்மனை கட்டி அங்கு தங்கினான். மரணத்திற்கு அஞ்சி வைத்யரையும் மாந்த்ரிகரையும் அருகில் வைத்திருந் தான். விதி மதியைவிட பெரியதல்லவா? தக்ஷகன் வேதிய வடிவந்தாங்கி அரசனுக்கு ஒரு பழமளித்தான். சிருங்கி சாபமளித்த ஏழாவது நாள் பகலும் சென்றது. தக்ஷகன் கடிக்கவில்லை. அவர் சாபம் வீணாக வேண்டாம். இந்த பழத்திலுள்ள புழு என்னைக் கடிக்கட்டும் என அதைத் தன் கழுத்தில் எடுத்து விட்டுக்கொண்டான். அது தக்ஷகனாகிக் கடிக்க அரசன் இறந்தான். அவனது புதல்வன் ஜநமேஜயன் வபுஷ்டமா என்ற மனைவியுடன் ராஜ்யத்தை ஆண்டுவந்தார்.

உதங்கர் எனும் முநிவர் அரசனிடம் வந்து உனது தந்தையை வலுவிலே வந்து கொன்ற ஸர்ப்ப ஜாதியை அழிக்க வேண்டாமா? என்று ரோஷத்தை உண்டு பண்ணினார். தானே கூட இருந்து ஸர்ப்பயாகம் செய் தார். எண்ணிறந்த ஸர்ப்பங்கள் தீயில் வீழ்ந்து மாண்டன. தக்ஷகன் பயந்து இந்த்ரனைச் சரணம் அடைந்தான். இந்த்ரனுடன் தக்ஷகன் தீயில் விழட்டும் என மந்த்ரங் கூற ஆரம்பித்தார் முநிவர். இதை அறிந்த பிரும்மா அஸ்தீகர் என்ற முநிவரை அங்கு அனுப்பினார். அவர் நல்ல சொற்களால் அரசனைப் புகழ்ந்து ஸர்ப்ப யாகத்தை நிறுத்தினார்.

## அஸ்தீகர் யார்?

ஜரத்காரு எனும் முநிவர்க்கு ஜரத்காரு எனும் வாஸுகியின் ஸஹோதரியிடம் பிறந்தவர். ஜரத்காரு

மணம் வேண்டாமென பிடிவாதமாக இருந்தபோது அவரது பித்ருக்கள் பாழுங் கிணற்றில் விழுவதாகவும் ஒரே அருகம்புல் அவர்களை விழவிடாமல் காப்பதாகவும் ஒரு காக்ஷி அளித்தனர். ஜரத்காரு அவர்களை நோக்கி ஏன் வருந்துகிறீர்கள் என எங்கள் ஸந்ததியிலுண்டான ஜரத்காரு மணமில்லாதிருக்கிறான். ஸந்ததி இல்லாமல் அவன் இறந்தபோது நாங்கள் இக்கிணற்றில் வீழ்வோம் என்றனர். ஆனால் நான் என் பெயருள்ளவளும் என் சொற்படி நடப்பவளுமாக ஒருவள் கிடைத்தால் மணப்பேன் என்றார். வாஸுகி தனது ஸஹோதரிக்கு ஜரத்காரு எனப் பெயரிட்டு அவருக்கு அளித்தான். ஸந்ததியை உண்டுபண்ணிவிட்டு மனைவியைத் துறக்க எண்ணினாரவர். ஒருநாள் மாலையில் தனது காலைப் பிடிக்கும்படி கூறி உறங்கினார். சூர்யன் அஸ்தமனமாகின்றார். எழுப்பாவிடில் ஸந்த்யா காலத்தில் ஏன் எழுப்பவில்லை? என்பர். எழுப்பினால் ஏன் எழுப்பினாய்? என கோவங்கொள்வர். எழுப்பியதும் எழுப்பாததும் போலிருக்கட்டும்என அவர் மார்பில் கையை வைத்தாள். எழுந்தார் முனிவர். இங்கே நிற்காதே! செல்! உன் பிறந்த வீடு என்றார். எதிர்பார்த்ததே இது. ஸந்ததிக்காக அல்லவா மணந்தோம் என்றாள். அஸ்தி! அது இருக்கிறதென்றார். ஒரு குழந்தை பிறந்தது. அவரே அஸ்தீகராவர்.

## ஸர்ப்பம் தீயில் ஏன் விழுந்தது ?

தக்ஷப்ரஜாபதிக்கு அறுபது கன்யைகள். கச்யபருக்குப் பத்து பெண்களைத் தந்தார். அதில் கத்ரு என்பவள் ஸர்ப்பங்களுக்கு தாய். ஸுபர்ணை கருடன் தாய். தூரத்தில் நின்ற உச்சைச்ரவ என்ற குதிரையின் வால் வெண்மையா கறுப்பாஎன கத்ரூ.கேட்டாள். வெளுப்பானதே வால் என்றாளவள். நாளை அதைப்பார்ப்போம். வெளுப்பானல் நான் உனக்கு அடிமை. கறுப்பானல் நீ எனக்கு அடிமை என்றாள் கத்ரு. ஸுபர்ணை சரி என, கத்ரு தான் ஜயிப்பதற்காக தனது புத்ரரை அழைத்து அந்த வால் கறுப்பாக காணும்படி அதைமூடி நிற்க சொன்னாள். தவறான இக்கார்யம் செய்யமாட்டோம் என்ற ஸர்ப்பங்களைத் தீயிலிறக்கும்படி சபித்தாள். தாய் சொன்னபடி சில நாகங்கள் நடந்தன. கத்ரு தனது ஸோதரியை

அடிமையாக்கி துன்புறுத்தினாள். இதை அகற்ற யாது வழி என கருடன் கேட்க, ஸ்வர்க்கத்திலிருந்து அம்ருதத்தைக் கொண்டுவா. அடிமையிலிருந்து விடுபடலாம் என்றாள் கத்ரு அரும்பாடுபட்டு அங்ஙனமே அம்ருதங் கொண்டுவந்தார் கருடன். தர்ப்பத்தின்மீது அம்ருத கலசத்தை வைத்தார். அடிமை அகன்றது என்றாள். அமராதிபன் பக்ஷி உருகொண்டு அம்ருதத்தைத்தூக்கிச் சென்றான். தர்ப்பத்தில் அம்ருதம் சிந்தி இருக்குமோ என அதை நக்கிய நாகங்களின் நாக்கு இரண்டாயிற்று. ஸத்யமே ஜயிக்கும். அன்னையை ஆதரிப்பது புத்ரன் கடமை.

## சக்தியே முதல் தெய்வம்.

உலகைப் படைத்து பரிபாலித்து தனக்குள் ஒடுக்கிக் கொள்ளும் தெய்வமே பரமாத்ம ஸ்வரூபம். அது ஹரியா ஹரனா ப்ரும்மனா மற்ற தெய்வமா என ஸந்தேஹம் கேட்க வியாஸர் கூறினார். தேவி ஸத்வ ரஜஸ்தமஸ் என்ற குணங்களால் த்ரிமூர்த்திகளைப் படைத்தாள். அவர்கள் ஒன்றுமறியாமல் நம்மைப்படைத்தது யார் என விசாரித்து அந்த சக்தியைத் துதித்தனர். சக்தி அவர்கள் முன்னே தோன்றி துர்க்கா லக்ஷ்மி ஸரஸ்வதி என்ற மூன்று சக்திகளையும் மூன்று விமாநங்களையும் தந்தாள். அதன் மூலமாக சிந்தாமணி க்ருஹத்தில் ஸ்ரீ சக்ர ரதத்தில் அமர்ந்துள்ள அன்னையைப் பணிந்து துதித்தார்கள். தேவி அவர்களுக்கு ஸ்ருஷ்டி ஸ்திதி லயம் என்ற மூன்று தொழில் புரிய சக்தியைத் தந்தாள். வைகுண்டம் கைலாஸம் ஸத்ய லோகம் என்ற இடங்களையும் தந்தருளினாள். மூவரும் தேவியைத் துதித்து உலக காரியத்தில் ஈடுபட்டனர். ப்ரக்ருதி வடிவமானவள் தேவி. புருஷவடிவன் பரமாத்மா. தாமரை இலையிலுள்ள ஜலம்போல் பற்றற்றவன் பரமன். ஒரு வேலையும் செய்யாமல் அசைவற்ற கட்டைபோலிருப்பான். அவனது ஸன்னிதாந பலத்தால் ப்ரக்ருதி மாயை எனும் தேவி. ஸகல கார்யங்களைச் செய்கிறாள். அவள் கருணாமூர்த்தி. மகனது மழலைச்சொல்லைக் கேட்டு மாதா மகிழ்வதுபோல் அறைகுறையாக மந்த்ரம் ஜபித்தாலும் ஸந்தோஷமடைவாள்.

## ஸத்யவிரதன்.

கோஸல தேசத்திலே தேவதத்தன் எனும் வேதியன் ரோஹிணி எனும் மனைவியுடன் ஒரு புத்ரகாமேஷ்டி யாகம் செய்தார். அதில் கோபிலர் எனும் ஸாமவேதி நகாத இடத்தில் மூச்சுவிட்டு மந்த்ரமோதினர். மூர்க்கரே! இப்படிச் செய்யலாமா? என்றார் தேவதத்தன். கோபங் கொண்ட கோபிலர் உனக்குப்பிறக்கும் பிள்ளை மூர்க்கனை இருப்பான் என சபித்தார். தேவதத்தர் அவரை வணங்கி மன்னிக்கும்படி வேண்ட அன்னையின் அருளால் அறிவு பெறுவான் என்றார். வேள்வி முடிந்தது. புத்ரனும் பிறந்தான். ஆறுமாதம் அடித்து கற்பித்தாலும் ஒரு அக்ஷரமும் அவனுக்கு வரவில்லை, பொல்லாத்தனமோ பொருக்கமுடியவில்லை. உயிரே போவதாயினும் பொய் கூறுதே என்றாள் தாய். ஸத்தியத்தைக் கடைபிடித்தான். ஸத்ய வ்ரதன் என பெயர் பெற்றான்.

ஒரு பன்றியைத் துரத்திவந்த வேடன் ஸத்ய வ்ரதனைக்கண்டான். அவன் பன்றி செய்த சப்தத்தைக் கேட்டு ஐ ஐ என்று விளையாட்டாகக் கூறினன். ஐம் என்பது வாக்பவ பீஜம். தேவியின் மஹா மந்த்ரம். அறைகுறையாகக் கூறினலும் அன்னைக்கு அவனிடம் அருள் பெருகிற்று. அறிவுக்களஞ்சிய மாக்கினள். ஐயா! பன்றி இங்கு வந்ததா? உண்மை கூறு! அனைவரும் உணவின்றி வருந்துகிறோம் என்றான் வேடன்.

அன்னை அறிவுடன் ஆத்ம தத்வ அறிவையும் அளித்தாள். பன்றி போன இடத்தைக் கூறுவது ஸத்யம். ஆனல் அதை அவன் உடனே கொல்வான். அது பாப மானதால் ஸத்யம் ஸத்யமாகாது. தெரியாதெனக் கூறு வது அஸத்யமாகும். நன்கு யோசித்தான். "பார்த்தவர் சொல்வரா? சொல்பவர் பார்த்தவரா?" என்றான் ஸத்ய விரதன். ஆத்ம தத்துவத்தைக்கண்டவர் கூறார். கூறுப வர் உண்மையாகக் கண்டவரில்லை என்பது வேதாந்த பொருள். கண்டது கண், அது பேசாது. பேசுவதுவாய், அது காணுது என்பது ஸாமான்ய பொருள். இதைக் கேட்டவுடன் வேடனும் அறிவுபெற்று ஜீவ ஹிம்ஸையை விட்டான். அன்னையின் அன்பும் அருளும் அளவுகடந்தது!

## ஸாத்விக பூஜையே சிறந்தது.

பரப்ரும்ம ரூபிணியாக அன்னையை த்யானம் செய்ப வர் க்ஞாநி. மஹர்ஷிகள் ஸாத்விகப் பொருளைக்கொண்டு அர்ச்சிப்பர். மது மாம்ஸாதிகளால் மன்னர் பூஜிப்பது ராஜஸபூஜை. தன் உடலைச் சேதிப்பது, தன் ரத்தத்தை அளிப்பது முதலியன தாமஸ பூஜை. அரக்கரே அதை கை கொள்வர். நல்வழியில் தேடிய பொருளால் தான் தேவி பூஜை செய்யலாம். அஸத்துகளின் தனத்தைக் கொண்டு ராஜஸூய யாகம் செய்த பாண்டவர் உடனே ராஜ்யத்தை இழந்து வநவாஸ துக்கத்தை அனுபவித்தனர். விஷ்ணு ஸாத்விகமாக தேவி யக்ஞம் செய்து ஸர்வ. வ்யாபியானுர். ஸர்வ சக்தியையும் பெற்றுர்.

## சசிகலா ஸ்வயம்வரம்.

அண்டியவருக்கு அரசாக்ஷி தருபவள் அன்னை. கோஸல நாட்டரசனை த்ருவஸிந்து என்ற வேந்தன் மநோரமா லீலாவதி என்ற இரு மனைவிகளை மணந்தான். மநோரமைக்கு ஸுதர்சநன் என்பவன் மகன். லீலாவதி யின் மகன் சத்ருஜித். அரசன் இளையவளிடமும் அவள் புத்ரனிடமுமே அதிக ஆசைகாட்டினுன். வேட்டையாடும் போது வநத்தில் ஒரு ஸிம்மம் அரசனைக் கொன்றது. ஸுதர்சநன் மூத்தவன் ஆனதால் அவனே அரசன் என் ருர் அமாத்யர். குடிகளும் அதை ஆமோதித்தனர். இளைய வளிடமே அரசனுக்கு அன்பு ஆனதால் சத்ருஜித்தே அரசன் ஆக உரியவன் என்ருர் லீலாவதியின் தந்தை யுதாஜித். அதை ஆக்ஷேபித்தார் மநோரமையின் தந்தை. இருவரும் போர் புரிந்தனர். யுதாஜித் வீரஸேநனைக் கொன்று சத்ருஜித்திற்குப் பட்டம் சூட்டினுன். தனது புத்ரனை ஸுதர்சநனையும் கொல்வனே என்று அஞ்சினுள் மநோரமை. தன் தந்தைக்கு பரலோக கார்யம் செய்து வருவதாக கிளம்பினுள் மகனுடன். வநத்திலே திருடர் அவளது பொருளை அபஹரித்தனர். மெள்ள மெள்ள பரத்வாஜரது ஆச்ரமம் சென்று அவரைத் தஞ்சமடைந் தாள். பரத்வாஜர் அவர்களைப் பரிபாலித்து வந்தார்.

இதை அறிந்த யுதாஜித் பரத்வாஜாச்ரமம் சென்று தன் பகைவனை விடும்படி கேட்டான். முநிவர் இங்கு

எவரும் சத்ரு இல்லை என ராஜபுத்ரனை அளிக்கமறுத்தார். ஸுதர்சநன் அங்கு இருப்பதைக்கண்டு "க்லீப" என்று பரிஹஸித்து சென்றான். க்லீபன் என்றால் பேடி என பொருள். இதைக்கேட்ட ஸுதர்சநன் அதன் பொருளை அறியாமல் க்லீ என பலமுறை கூறினான். க்லீம் என்பது காமபீஜமெனும் தேவிமந்த்ரம். அதனால் ஸந்தோஷமடைந்த தேவி வில்லையும் அம்பையும் அவனுக்களித்தாள். நாளடைவில் வில்வித்யையிலும் தேர்ச்சிபெற்றான்.

ஸுபாஹு எனும் காசி ராஜனது கன்யகை சசிகலா என்பவள். முனிவர் மூலமாக ஸுதர்சநனது அழகையும் குணத்தையும் கேட்டு அவனை மணக்க அவா கொண்டாள். அவள் அன்னையிடம் இடைவிடாமல் அன்புள்ளவள். ஸுதர்சநனும் அன்னை அருளுக்கு ஆளானவன். ராஜ்யமற்றவன். அவனைவிட்டு அன்ய அரசரை மணந்துகொள் என தந்தை ஸ்வயம்வரத்திற்கு அரசர் அனைவரையும் அழைத்தான். சசிகலை ஸுதர்சநனுக்கும் அழைப்பு அனுப்பினாள். அவன் வந்தவுடன் இரவிலே அவனை விதிப்படி மணந்தாள். ஸதிபதிகளாக வரும் இவர்களைக் கண்டு ஸ்வயம்வரத்திற்கழைக்கப்பட்ட ராஜகுலம் கோபங்கொண்டது. சிலர் அவள் விருப்பமது என சென்றனர். இவனது ஸஹோதரனான சத்ருஜித்தும் அவன் பாட்டனும் ஸுதர்சநனைக்கொல்ல போர் புரிந்தனர். காசி ராஜன் கலங்கினான். காம பீஜத்தை ஜபித்து ஸுதர்சநன் தேவியைச் சரணமடைந்தான். அன்னை ஸிம்ம வாஹநத்திலேறி வந்து அவர்களைக் கொன்று மறைந்தாள். ஸுதர்சநன் கோஸலஞ்சென்று முடிசூட்டி அரசாண்டான்.

## நவராத்ரி.

தேவியை ஆராதிப்பதற்கு இது சிறந்த நாள். வாஸந்த நவராத்ரி சாரதா நவராத்ரி என இரண்டுண்டு. அச்சமயம் யமனது இரு கோரப்பற்கள் நோய்வடிவமாகி மக்களைக் கஷ்டப்படுத்தும். மாதாவை பூஜித்தால் நமக்கு நன்மை உண்டாகும். மஹிஷாஸுரன் என்பவன் அமரர் அனைவரையும் துன்புறுத்தினான். அவர்கள் அன்னையை த்யாநம் செய்து அசைவற்று அமர்ந்திருந்தனர். அதுவே

கொலுவாம். ஒவ்வொரு தேவர் உடலிலிருந்தும் ஒவ்வொரு நாளும் தேஜஸ் கிளம்பி நவமியன்று துர்க்கை ஸ்வரூபமாக அமைந்தது. விஜயதசமியன்று மஹிஷனைக் கொன்று தேவரைக் காத்தாள் தேவி. அச்சமயம் அன்னையை ஆராதித்தால் வேண்டிய பயனைப் பெறலாம். ஸுசிலன் எனும் வைச்யனும் ஸ்ரீராமனும் நவராத்ரி பூஜையால் நன்மைபெற்றனர். விஜயதசமியில் தேவிக்கு ஜயமுண்டானது. அன்று துவக்கும் ஸகல கர்மாவும் ஜயத்தை அளிக்கும்.

## காமக்ரோதமும் கர்மாவும்.

அவரவர் கர்மாவுக்கேற்றபடியே பிறப்புண்டாகும் கர்மாவைச் செய்யும்படி தூண்டுவது காமக்ரோதமே. மாயையிலீடுபட்டு தேவரும் மூவரும் காமக்ரோதங் கொண்டு கர்மாவைச் செய்கின்றனர். கர்மபலனையும் அனுபவிக்கின்றனர். தேவரைக் காக்க ஆசைகொண்டு அச்யுதன் ப்ருகு மனைவியைக் கொன்றூர். அதனுல் மத்ஸ்ய கூர்ம வராஹாதி பிறவி எடுத்தார். கச்யபர் இரவலாக வருணனிடம் வாங்கிய பசுவைத் திருப்பித் தராததால் வஸுதேவன் என்ற மநித பிறவி பெற்றூர். திதியின் கருவைக்கொல்லும்படி தன் மகனுன சக்ரனுக்கு உபதேசித்த அதிதி தேவகியாகி ஆறு குழந்தைகள் கண்ணெதிரே கம்ஸனுல் கொல்லப்பட்டதைக் கண்டாள். தர்மதேவரது புத்ரரான நரநாராயணர் கடுந்தவம்செய்ய சக்ரன் அப்ஸரஸ்ஸுகளை அனுப்பி தவத்தைக் கலைக்க முயற்சித்தான். காம வலையில் சிக்காத அவர் தனது துடை ரோமத்திலிருந்து அழகிய ஊர்வசியைப் படைத்தனுப்பினுர். அப்ஸரஸ்ஸுகள் தங்களை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினர். க்ருஷ்ணுவதாரத்தில் கோபிகைகளாக வரும்படி கூறினுர். ஆனுலும் அவரும் கோபத்திற்கு ஆளானுர்.

சியவநருடன் தீர்த்த யாத்ரை சென்ற பக்தன் ப்ரஹ்லாதன், அருகில் தநுஸ்ஸை வைத்துக்கொண்டு தவம் செய்யும் நரநாராயணருடன் காரணமின்றி பல்லாண்டு போர் புரிந்தான். மஹாவிஷ்ணு இருவரையும் ஸமாதாநப் படுத்தினுர். ப்ருஹஸ்பதி சிஷ்யரிடமுள்ள ஆசை

யால் சுக்ரவேடம் பூண்டு அஸுரருக்கு நாஸ்திக உபதேசம் செய்தார். ஸ்ரீமதியை அபஹரித்து நாரத சாபத்தால் ராமர் ஸீதையை விட்டுப்பிரிந்து துன்புற்ருர். சிவனும் தாருகாவந முநிவரால் சபிக்கப்பட்டார். அனைவரும் மாயைக்கு வசமானவர்களே. குருமுகமாக உபதேசம் பெற்று ஸச்சிதாநந்த ரூபிணியான தேவியை உபாஸிப்பவர் மாயையை ஜயிப்பார்.

## மஹிஷாஸுர வதம்.

தநுவின் புதல்வர் ரம்பன் கரம்பன் என்பவர். ஜலத்திலும் ஸ்தலத்திலும் கடுந்தவம் புரிந்தனர். ஜலத்திலுள்ளவனை இந்த்ரன் முதலை வடிவங்கொண்டு கொன்ருன். கரம்பன் ப்ராதா இறந்ததால் தன் தலையை வெட்டி தீயிலிட ஆரம்பித்தான். அக்நி அதைத்தடுத்து எந்த ஸ்திரீயை முதலில் காண்கிருயோ அவளிடம் உனக்கு உண்டாகும் புத்ரன் அமராதிபனை வென்று ஸ்வர்க்கமாளுவான் என்ருர். கரம்பனது கண்முன்னே கார் எருமை முதலிலே தோன்றிற்று. பகைவனை ஜயிப்பதிலேயே கருத்துகொண்டு எருமையிடம் கர்பாதாநம் செய்தான். மநிதன் மஹிஷத்தை மணந்தது தன் ஜாதிக்கே அவமானம் என எருமைகள் கரம்பனைக் கொன்றன. ஸதிபோல் எருமை பதியின் உடலைத் தீயிலிட்டு தானும் உடன் கட்டை ஏறிற்று. அச்சமயம் மஹிஷாஸுரன் தோன்றி கர்ஜித்தான். அஸுரர் அனைவரும் அவனை அண்டினர். சுக்ரர் அவனுக்கு அஸுர ராஜ்ய பட்டாபிஷேகம் செய்தார். அவர் உபதேசித்தபடி கடுந்தவம் புரிந்து புருஷனால் மரணமில்லை என வரம் பெற்ருன்.

வானவரை விரட்டி வானுலகை ஆண்டான். வேள்வியில் அளிக்கும் ஹவிஸ்ஸைப் பிடிங்கிக்கொண்டு அமரரை உணவின்றி வாட்டினன். தேவரைத் தன் பணியாளராகக் கொண்டான். வேதியரையும் கற்பரசிகளையும் இம்ஸித்தான். அதுகாலை அமரர் அனைவரும் ஒன்றுகூடி அன்னையை ஆராதித்தனர். நவமியன்று துர்க்கை தோன்றி அட்டஹாஸம் செய்தாள். பதிநான்கு உலகமும் கிடுகிடுத்தது. மஹிஷன் தூதனை அனுப்பி அறிந்துவரச்சொன்னன். துர்க்கையின் உருவைக்கண்டு ஆச்சர்ய

மடைந்த தூதன் மஹிஷனுக்கு ஏற்ற மனைவி அவள் என அவனிடம் வர்ணித்தான். அன்னையிடம் காமங்கொண்டு தன்னை மணக்கும்படி தூது அனுப்பினான். அவன் மூலமாகவே அஸுரனுக்கு அன்னை செய்தி அனுப்பினாள். நான் எல்லோருக்கும் தாய். இந்த்ரனிடம் ஸ்வர்க்கத்தை அளித்து நீ பாதாளம் செல். இல்லையேல் போரில் உன்னைக் கொல்வேன் என்றாள்.

மஹிஷன் மந்த்ரி ஸபை கூட்டி மந்த்ராலோசனை செய்தான். தாம்ரன் தத்துவத்தைக்கூறி ஸந்திசெய்து கொள்ளும்படி நியாய தர்மமாகப்பேசினான். மற்றவரோ மன்னன் போக்கைப் பின்பற்றினர். ஸேநாதிபதிகளையும் அவன் புத்ரர்களையும் கொன்று மஹிஷனுடன் போர் புரிந்தாள். உடல் மாத்ரமல்ல. உனது புத்தியும் எருமை போலிருக்கிறது என்று கூறி நற்புத்தி கூறினாள். அதைக் கேளாமல் பற்பல மாயைகளைக் காட்டி யுத்தம் செய்தான். மாயா ஸ்வரூபிணியான மாதா சூலத்தால் அவனைக் குத்தித்தள்ளி தலையை வெட்டி அதன் மீது தன் திருவடிகளை வைத்து நின்றாள்.

தமோகுணத்தால் உண்டான அக்ஞானமே மஹிஷன். அக்ஞானிக்குள்ள துர்க்குண மனைத்தும் எருமையிடம் உண்டு. அக்ஞாந த்வாந்த பாஸ்கரா என்றபடி அன்னை அக்ஞாநத்தை அழிக்கும் க்ஞாந ஒளியாம்.

அங்ஙனமே சும்ப நிசும்பன் சண்டமுண்டன் என்ற ராக்ஷஸர்களையும் கொன்று ஸகல தேவர்களையும் காப்பாற்றினாள் தேவி. தமோகுணம் வாய்ந்த அஸுரர்களைக் கொல்ல தமோ வடிவமான உடலெடுத்தாள். சண்டி சாமுண்டா காளீ என்ற பெயருடனும் பயங்ரமான ரூபத்துடனும் இருந்தாள். அவளது உண்மையை அறியாமல் பலர் மயங்குவர். ஸுரதன் ஸமாதி என்ற அரசனும் வைச்யனும் ஸுமேதஸ் என்ற முநிவரிடம் தேவியின் தத்துவத்தைக் கேட்டு உபாஸித்து வைச்யன் க்ஞாநத்தையும் அரசன் ராஜ்யத்தையும் பெற்றான்.

## விருத்ர வதம்.

யஜுர்வேதத்திலுள்ள கதை. மிக விஸ்தாரமாக வர்ணிக்கப்படுகிறது. த்வஷ்டாவினது புத்ரன் விச்வரூபன்.

ப்ருஹஸ்பதிக்கும் சக்ரனுக்கும் மநஸ்தாப மேற்பட்ட பொழுது விச்வரூபனே சக்ர புரோஹிதனுக இருந்தான். அவன் அஸுரர்களது ஸஹோதரியின் புத்ரன். அஸுரர் வேண்டியபடி ராக்ஷஸர்களும் விருத்தியாகும்படி சில கர்மாக்களை செய்தான். இதை அறிந்த இந்த்ரன் கோபங் கொண்டு அவனைக் கொன்றான். மகனை இழந்த த்வஷ்டா கடுங் கோபங்கொண்டு ஆபிசார ஹோமம் செய்தார். இந்த்ர சத்ரு உண்டாக வேண்டுமென்பது அவர் கருத்து. அவஸரத்தினுலும் கோபத்தினுலும் அபஸ்வரமாக மந்த்ரம் கூறினர். மிக பயங்கரமான உருவம் வாய்ந்த விருத்ரன் உண்டானுன். அபஸ்வரம் கூறியதால் இந்த்ரனைக் கொல்பவனுக இல்லாமல் இந்த்ரனுல் கொல் லத்தக்கவனுனன். ஆயினும் தந்தை கூறியபடி ஸ்வர்க் கத்தை ஆக்ரமித்துக்கொண்டு ஆயிரமாண்டு போர்புரிந்து சக்ரனைப் பிண்டம்போல் பிடித்து வாயில் போட்டுக் கொண்டான்.

பிருஹஸ்பதி உடனே ஜ்ரும்பகாஸ்த்ரத்தை விடச் சொன்னர். விருத்ரன் அதனுல் கொட்டாவி விட சக்ரன் விருத்ரன் வாயிலிருந்து குதித்து ஓடினுன். ப்ரும்மாதி தேவரும் சக்ரனும் அன்னையைச் சரணமடைந்தார்கள். தேவி ஸப்தரிஷிகளை அனுப்பி முதலில் விருத்ரனுடன் ஸந்தி செய்துகொள். யுக்தியினுல் விஷ்ணு சக்ரமே அவனைக் கொல்லும் என்றுள். தந்தை சொல்லைக் கேளா மல் விருத்ரன் தேவியின் மாயையால் மயங்கி சக்ரனுடன் உறவுகொண்டு ஸமபாகமாக அமைத்து விண்ணுலகை ஆண்டான். ஒரு நாள் மாலை கடற்கரையில் ஈரமான தாலும் உலர்ந்ததாலும் உனக்கு மரணமில்லை யல்லவா? இந்த கடல் நுரை உலர்ந்தது மில்லை. ஈரமுமில்லை. இது உன்னைக் கொல்லுமா? பார்ப்போம் என வ்ருத்ரனது கழுத்தில் நுரையை வைத்து அதில் விஷ்ணு சக்ரத்தை உள்ளே புகவிட்டு அவனைச் சக்ரன் கொன்றுன்.

நம்பினவரைக் கொன்றதால் ப்ரும்மஹத்தி இந்த் ரனை விரட்டியது. கோரமான அந்த உருவால் சக்ரன் தாபமடைந்து பயந்து ஓடி மாநஸ ஸரஸ்ஸில் தாமரைத் தண்டிற்குள் புகுந்திருந்தான். ஸ்வர்க்கத்திற்கு அரச னில்லை. நூறு அச்வமேதயாகம் செய்தவனே இந்த்ர

ளைகலாம். அத்தகைய நகுஷனை இந்த்ர பட்டாபிஷேகம் செய்தனர். அவன் இந்த்ராணி தனக்கு மனைவியாக வரவேண்டுமென வற்புறுத்தினன். யார் என்ன கூறியும் கேட்கவில்லை. இந்த்ராணி புவனேச்வரி மந்த்ரத்தை உபதேசம் பெற்று ஜபித்தாள். அன்னை சொன்ன யுக்தியின்படி ஓராண்டு சென்றபின் நகுஷனை மணப்பதாகக் கூறினள். குருவுடன் மாநஸஸரஸ் சென்று பதியைத் தர்சித்து பாபமகல அச்வமேதம் செய்யச் சொன்னள். அதனல் ஹத்திதோஷம் அகன்றது.

நகுஷனை விலக்க அன்னை சொற்படி ஸப்தரிஷிகள் சுமக்கும் பல்லக்கில் அவனைத் தன்னிடம் வரச்சொன்னள் இந்த்ராணி. நகுஷன் காம மோஹத்தால் தகாத அக்கார்யத்தைச் செய்ததுடன் அகஸ்த்யரை ஸர்ப்ப ஸர்ப்ப-போ போ—என காலால் சீண்டினன். அவர் ஸர்ப்பமாவாய் என சபித்தார்.

## ஹத்தி சேஷம் அகன்றது.

அச்வமேதத்தால் அம்பிகையைப் பூஜித்து விருத்ர ஹத்தியை அகற்றிக் கொண்டான் சக்ரன். வேண்டுமென்றே செய்த பாபமானதால் அது கொஞ்சம் பாக்கி இருந்தது. அதையும் குரு சொற்படி சிலரிட மளித்து சுத்தனனன். நதிகள் அந்த பாபத்தில் ஒரு பகுதியை ஏற்று தான் தனித் தனியாக இராமல் சேர்ந்திருக்க வேண்டுமென்ற வரனைப் பெற்றது. அதனல் எங்கு மழை ப்ரவாஹம் ஏற்பட்டாலும் கடலில் வந்து கலக்கின்றது. நதியின் புது ப்ரவாஹம் வரும் மூன்று நாள் ப்ரும்மஹத்தி தோஷமானதால் அதில் ஸ்நாநம் செய்யக் கூடாது. ப்ரஸவிக்கும் வரை புருஷபோகம் வேண்டும் என்ற வரம் பெற்று பெண்மக்கள் ப்ரும்மஹத்தியைப் பெற்று மாதவிடாயாக அனுபவிக்கின்றனர். அது ஸமயம் அவர்களுடன் பேசக்கூடக் கூடாது. மரங்கள் தன்னை வெட்டினலும் வளரவேண்டுமென வரம் பெற்று பிசின் ரூபமாக ஹத்தி தோஷத்தை அனுபவிக்கின்றன. பூமி தன்னைப் பள்ளமாகச் செய்தாலும் விரைவில் மேடாக வேண்டுமென வரம் வாங்கி களர் பூமிவடிவமாக ஹத்தியை அனுபவிக்கின்றது.

## விச்வாமித்ரரும் வஸிஷ்டரும்.

ஹரிச்சந்த்ரன் வஸிஷ்ட சிஷ்யன். தனக்குப் புத்ரன் பிறந்தால் வருணனுக்கு அந்த புத்ரனைக்கொண்டு யாகம் செய்வதாக வேண்டிக்கொண்டான். புத்ரன் பிறந்தான். வருணன் வந்து யாகம் செய்யும்படி வேண்டினர். தீட்டு கழியட்டும். அன்ன ப்ராசநம் ஆகட்டும். பல் முளைக்கட்டும். உபநயநம் ஆகட்டும் என ஒவ்வொரு முறையும் காலதாமதம் செய்தான். இதற்குள் அந்த குழந்தை தன்னைக்கொண்டு யாகம் செய்யப் போவதை அறிந்து ஒருவருக்கும் தெரியாமல் ஓடிவிட்டான். ஏமாந்த வருணன் அரசனுக்கு ஜலோதர நோயை உண்டுபண்ணினன். அரசன் கஷ்டத்தை நீக்கி வஸிஷ்டர் விலைக்கு வாங்கிய புத்ரனைக் கொண்டு வருணனை ஸந்தோஷப் படுத்த ஏராளமான பொருளைத் தந்து அஜீகர்த்தர் என்ற ஏழையின் நடு புதல்வனை அழைத்து வந்தார். சுநச்சேபன் எனும் அவன் விச்வாமித்ரரைச் சரணமடைந்து ஒரு வருண மந்த்ரத்தைப் பெற்றான். அதனால் ஸந்தோஷ மடைந்த வருணன் அவனை விடுவித்தான். விச்வாமித்ரர் ஹரிச்சந்த்ரனது ராஜ்யத்தை தக்ஷிணையாகப் பெற்று அவன் மனைவி சந்த்ரமதியை விற்கும்படிச் செய்து அரசனையும் பஞ்சமனுக்கு அடிமையாக்கினர். வஸிஷ்டர் அவரைப் பக்ஷியாகும்படி சபித்தார். விச்வாமித்ரரும் வஸிஷ்டரைப் பக்ஷியாக்கினர். பல்லாண்டு இருவரும் போர்புரிய ப்ரும்மா வந்து ஸமாதாநம் செய்தார். அம்பிகையினுடைய அருளால் தன் தன் உருவைப் பெற்றனர்.

## வஸிஷ்டரே மைத்ராவருணர்.

நிமி எனும் அரசனுக்கு ஒரு யாகம் செய்விக்க ஒத்துக்கொண்டார் வஸிஷ்டர். தேவேந்திரன் வஸிஷ்டரை அழைக்க, இதை விட்டுவிட்டுச் சென்றார். வேறொருவரைக்கொண்டு நிமி யாகத்தைச் செய்தார். வஸிஷ்டர் கோபங்கொண்டு நீ உடலற்றுப் போவாய் என சபித்தார். மன்னனும் முநிவரை உடலிழக்கும்படி சபித்தார். வேள்வியால் ஸந்தோஷமடைந்த தேவர் அரசனுக்கு உடல் தருவதாகக் கூறினர். வேண்டாம். எல்லோருடைய கண்களிலும் இமை கொட்டலாக இருக்கிறேன் என்றார்.

முனிவர் அரச வம்சம் விளங்க அவன் உடலை மதநம் செய்தார். அரணிபோல் கடைந்தார். அதிலிருந்து உண்டானவன் மிதிலன் எனப்படுவான். அவன் நாடு மிதிலை. அங்கு ஜநித்தவள் மைதிலி. வஸிஷ்டர் மித்ரா வருணரது உடலில் புகுந்தார். ஊர்வசியைக் கண்டு காமவிகாரங் கொண்டு மித்ராவருணர் தனது சக்தியைச் சிந்தினர். அது ஒரு கும்பத்தில் விழ அங்கிருந்து வஸிஷ்டரும் அகஸ்த்யரும் தோன்றினர். காமக்ரோதம் எவரையும் விடுவதில்லை.

## ஔர்வர் மஹிமை.

தத்தாத்ரேயரது சிஷ்யன் கார்த்தவீர்யார்ஜுநன். ப்ராம்மணர்களுக்கு அபரிமிதமாக தாநம் செய்தான். வேதியர் தனிகராயினர். அவனது வம்சத்தில் பிறந்த பார்த்திவர் ஏழையாயினர். ஏழ்மை பாபம் செய்யத் தூண்டும். ப்ராம்மணரை அண்டி எனது முன்னோர் கொடுத்த பொருளைக் கொடு என்றார்கள். தநம் மோஹத்தைத் தருமல்லவா? சிலர் பூமியில் புதைத்து வைத்து பொருளில்லை என்றனர். சிலர் பொருளுடன் வேறு தேசம்சென்றனர். கோபங்கொண்ட ராஜகுமாரர் ப்ராம்மணர்களைக் கொன்று பொருளைக் கொள்ளை கொண்டனர். ஆசை எதைத்தான் செய்யாது? த்வேஷம் பலத்தது. ப்ராம்மண குழந்தைகளையும் கொன்றனர். இதற்குப் பயந்து பெண்மக்கள் இமயமலை சென்று தேவியைப் பூஜித்தனர். தேவியின் அருளால் ப்ருகுவின் அம்சத்தால் ஒருவள் கர்பிணி ஆனாள். கர்ப்பிணிகளைத் தூக்கிவந்து குழந்தையைக் கொன்று வந்தனர். ஆதலால் அன்னை ஸ்த்ரீயின் தொடையில் கர்ப்பம் உண்டாகும்படிச் செய்தாள். அதைக் கேட்டு துஷ்ட அரசர்கள் அவளிடம் வந்து உனது தொடையைக் காட்டென்றனர். பரஸ்த்ரீகளுடைய தொடையைப் பார்ப்பது பாபம் என்றனர். பாபத்திற்கஞ்சாத பாபிகள் பலாத்காரமாகத் தொடையைப்பார்க்க முயற்சித்தனர். தொடையிலுள்ள ப்ருகுசிசு எல்லோர் கண்களையும் அவித்துவிட்டது. கதறினார்கள். தவறை மன்னிக்க வேண்டினார்கள். ஊருவிலிருந்து பிறந்த ஔர்வர் ப்ராம்மண பூஜைசெய்து கண்களைப் பெறும்படி கூறினார். பிறப்பதற்கு முந்தியே துஷ்டர் கண்களை

அவித்த ஔர்வரின் பெருமை வாக்குக்கெட்டாதது. ஸ்ரீவத்ஸ கோத்ர ப்ரவரத்தில் நான்காவது முநிவரிவர். இவர் சிறந்த தேவி உபாஸகர்.

## ஹேஹயன் பிறவி.

வைகுண்டநாதன் அருகில் வீற்றிருந்த லக்ஷ்மீதேவி தன்னுடன் பாற்கடலில் உதித்த குதிரை வருவதைக் கண்டு மற்றதை மறந்து அதையே ஊக்கத்துடன் பார்த்தாள். பகவான் தேவியைக் கூப்பிட அவள் காதில் அது விழவில்லை. அதனால் ஏனென்று கேளாமல் இருந்தாள். கோபத்தால் அவளை அச்வமாகும்படி சபித்தார். தேவி, காலில் விழுந்து மன்னிப்பு கேட்டும் பகவான் மன்னிக்கவில்லை. தனது ஸஹோதரரான பரமசிவனிடம் சென்று வேண்டினாள். சிவன் ஹரியை அழைத்துச் சாபவிமோசநம் செய்யும்படி கூறினார். ஒரு புத்ரனைப் பெற்றபின் தன் உருவைப் பெறட்டு மென்றார் திருமால். குதிரையான லக்ஷ்மி எப்படி புத்ரனைப் பெறுவாள்? விஷ்ணு அச்வமாகி அச்வ ரூபிணியான பத்நியிடம் ஒரு புத்ரனை உண்டு பண்ணினார் இருவரும் நிஜரூபம் பெற்று குழந்தையை ஹேஹய என்றனர். ஹரிவர்த்தனன் என்ற அரசன் புத்ரனுக்காகத் தவம் செய்ய அவனிடம் ஹேஹயனை அளித்தனர். அந்த வம்சம் மேலே பெருகிற்று.

## ஏகாவளியும் ஏகவீரனும்.

ஹேஹயனது புத்ரன் ஏகவீரன். அவன் அரசனாகி வேட்டையாட வநஞ் சென்றபோது யசோவதீ என்ற பெண் அழுதுகொண்டிருக்கக் கண்டான். யாது காரணமென வினவ, அவள் கூறினாள்: ரம்யன் என்பவருக்கு ருக்மரேகையிடம் பிறந்த ஏகாவளீ என்பவள் எனது தோழி. எவர் கூறியும் கேளாமல் காநகத்தே சென்று அவள் விளையாடுவாள். ஒரு நாள் காலகேது எனும் அஸுரன் அவள் அழகைக் கண்டு மோஹித்து தன்னை மணக்கும்படிக் கேட்டான். அவள் தான் ஹேஹய புத்ரனை முன்னமே வரித்துவிட்டதால் அன்யரைத் தொடேன் என்றாள். அஸுரன் பலாத்காரமாக அவளைத் தூக்கிச் சென்று பாதாளத்தில் சிறைப்படுத்தினான். நான் அன்னையை நாடிக் கதறிக்கொண்டே உறங்கினேன்.

அம்பிகை எனது கனவில் தோன்றி நாளை கங்கைக்கரையில் ஏகவீரனெனும் வீரன் வருவான். அவனுக்கு எனது மந்த்ரத்தை உபதேசித்து பாதாளம் அழைத்துச் செல். அவன் அஸுரனைக் கொன்று ஏகாவளியை மணப்பான் என்றாள். எங்கு உளனோ ஏகவீரன்? என அழுகிறேன் என்றாள். ஏகவீரன் நானே அவன் என்று தேவி மந்த்ரத்தைப் பெற்று தேவி அருளால் காலகேதுவைக் கொன்று ஏகாவளியை மணந்தான்.

## நாரதர் பெண்ணானார்.

நாரதரும் பர்வதரும் ஒரு மழை காலத்தில் சாதுர்மாஸ்ய வ்ரதம் செய்ய ஸஞ்ஜயனெனும் அரசன் அரண்மனையில் தங்கினர். மாநிலத்தில் மாநிட தோஷம் நமக்குள் புகக்கூடாது. உள்ளத்தில் உள்ளதை உள்ளபடி இருவரும் கூறவேண்டும் என உடன்படிக்கை செய்து கொண்டனர். தமயந்தீ என்ற ராஜ கன்யகை இருவருக்கும் பணிவிடை செய்தாள். நாரதருக்கும் தமயந்திக்கும் அன்யோன்யம் ஆசை உண்டானது. ஆதலால் அவள் நாரதரிடம் அதிக பரிவு காட்டினாள். இதைக் கண்ட பர்வதர் உள்ளதைச் சொல்லாததால் விவாஹ காலத்தில் குரங்கு முகமாவாய் என்று சபித்தார். நீ ஸ்வர்கலோகம் போகும் சக்தியை இழப்பாய் என நாரதர் பர்வதரைச் சபித்தார். சிறிதுகாலம் சென்றது. தமயந்தி நாரதரைத் தவிர மற்றவனை மணப்பதில்லை என்று பிடிவாதம் செய்தாள். பர்வதர் பெண்பாபம் பொல்லாதென தான் அளித்த சாபத்தைமாற்றினார். நாரதரும் தானளித்த சாபத்தை மாற்றினார். நாரதர் தமயந்தியை மணந்தார்.

நாரதர் ஒருஸமயம் வைகுண்டம் சென்றார். அவரைப் பார்த்தவுடன் லக்ஷ்மீதேவி உள்ளே சென்றாள். காமக்ரோதங்களையும் அதன் மூலகாரணமான மாயையையும் ஜயித்த என்னைக்கண்டு அன்னை ஏன் விலகினாள்? என்றார். மாயையே உன்னை ஜயித்தது! அதனால் அவள் சென்றாள் என்றார் விஷ்ணு. ஆனால் அந்த மாயையைக் காட்டும் என்றார். அது மிகக் கஷ்டத்தைத் தரும். வேண்டாம் என்றார் விஷ்ணு. நாரதர் நிர்பந்தம் செய்ததால் அவருடன் கான்யகுப்ஜ தேசம் சென்றார். ஆங்குள்ள

ஒரு குளத்திலிருந்து தீர்த்தம் கொண்டுவா என்று கூறி பகவான் ஒரு மரத்தடியில் அமர்ந்தார். நாரதர் அதில் முழுகிய உடன் ஸ்த்ரீ யானுர். தாலத்வஜன் எனும் அரசன் அங்குவந்து இவளை மணம் செய்துகொண்டான். பற்பல குழந்தைகள் பிறந்தன. பகைவன் வந்து படை எடுத்தபோது வீரரான பிள்ளைகள் அனைவரும் போரில் இறந்தனர். நாட்டைவிட்டு அரசனும் மனைவியும் காட்டிற்கு வந்து கதறினர். விஷ்ணு ஒரு முனிவராகி அமர்ந்திருக்க அவரை அண்டி குறையைக் கூறி அழுதனர். அருகிலுள்ள குளத்தில் முழுகும்படி கூறினுர். மூழ்கி எழுந்தவுடன் நாரதர் தனது நிஜரூபத்தைப் பெற்ருர். அருகிலுள்ள பதியைக் கண்டு தான் பெண்ணுனது, மக்களைப் பெற்று பரிகொடுத்தது எல்லாம் நினைவிற்கு வந்தது. ஆ! இதென்ன மாயை! என்று மாயா ஸ்வரூபத்தை உணர்ந்து தான் மாயைக்கு வசமானதை உணர்ந்தார். மாயா ரூபிணியான தேவியை உபாஸித்து மாயையை ஜயித்தார்.

ராஜவம்ச வர்ணனையில் சர்யாதி ஸுகன்யா சசாதன் ககுத்ஸன் யுவநாச்வன் மாந்தாதா ஸத்யவிரதன் அவன் ப்ராம்மண கன்யகைகளைத் தூக்கிவந்தது, குருவை நிந்தித்தது, குரு பசுவைக் கொன்றது என்ற மூன்று பாபங்களால் திரிசங்குவானது, தேவியின் அருளால் பாப மகன்று அவன் அரசனுனது, துர்பிக்ஷகாலத்தில் திரிசங்கு விச்வாமித்ரர் மனைவி மக்களைக் காத்தது, அந்த நன்றியால் விச்வாமித்ரர் திரிசங்குவை உடலுடன் ஸ்வர்க்கம் அனுப்பியது, ஹரிச்சந்த்ரோபாக்யானம் முதலியவைகளை விரிவாக வர்ணிக்கிருர்.

## சதாக்ஷீ முதலிய சக்திகள்.

துர்க்கன் என்ற அஸுரன் தவம்செய்து எல்லோரிடமுமுள்ள ஸகல வேதசாஸ்த்ரங்களும் தன்னிடம் வரும்படி வரம்பெற்ருன். அதனுல் உலகில் வேள்வி முதலிய தர்மம் அழிந்தது. மழையில்லாமல் துர்பிக்ஷம் தோன்றிற்று. அனைவரும் அன்னையை வேண்ட நூற்றுக்கணக்கான கண்களிலிருந்து ஜலப்ரவாஹத்தை உண்டு பண்ணினுள். பசியால் வாடியவருக்கு சாகங்களை அளித்து

சாகம்பரி எனப்பட்டாள். தனது உடலிலிருந்து உண்டான சக்திகணங்களுடன்கூடி துர்க்கன் முதலியவர்களைக் கொன்று துர்க்கா எனப்பட்டாள். ஹாலாஹலர் என்ற தைத்ய கணங்களுடன் ஹரியும் ஹரனும் அறுபதினுயிரம் ஆண்டு போர்புரிந்து வாடியபொழுது தேவி தாக்ஷாயணி லக்ஷ்மீ முதலிய சக்திகளைத் தந்தாள். காசியில் விசாலாக்ஷி நைமிசத்தில் லிங்கதாரிணி முதலிய பெயருடன் நூற்றெட்டு இடங்களில் நூற்றெட்டு பெயருடன் வஸிக்கிருள். அந்த பெயரை ஜபித்தாலே மஹா புண்யம். மஹாமாரி முதலியன அகலும்.

## தேவீ கீதை 9 அத்யாயம் 433 சுலோகம்.

கர்வங்கொண்ட தக்ஷனது ஸம்மந்தம் கூடாதென தாக்ஷாயணி தன் உடலைவிட்டு ஹிமவான் என்ற பர்வத ராஜனுக்குக் குமாரியாகப் பிறந்தாள். ஹிமவான் முதலியவர் கேட்க தேவி ஒன்பது அத்யாயங்களால் தனது மஹிமையையும் வேதாந்த தத்வங்களையும் விளக்கி விச்வரூப தர்சநமளித்தாள். உத்ஸவம் அநந்த த்ருதியா வ்ரதம் முதலியவைகளாலும் சமதமாதிகளாலும் தன்னை அடையலாம் என வழி காட்டினுள். தனது பூஜாவிதி தாந தர்மம் தனது அவதாரம் முதலியவைகளை உபதேசித்தாள்.

## லோக சிருஷ்டி.

பதினுன்கு லோகம், பூமி, ஏழுத்வீபங்கள், ஒன்பது வர்ஷங்கள், அதன் தேவர், ஸூர்யன், மேருவிற்கு நாலு புறத்திலும் திக்பாலர் ராஜதாநி, ஸூர்ய ரதம் ஒரு முகூர்த்தத்தில் முப்பத்துநாலு லக்ஷத்து எண்பதினுயிரம் யோஜனை தூரம் சுற்றுதல், நவக்ரஹ மண்டலம் இருபத்தெட்டு நரகம், அங்கு செல்பவரது பாபம், பதினைந்து திதி, பனிரண்டு மாதம், ஏழு வாரம் இவைகளில் தேவியைப் பூஜிப்பதாலுண்டாகும் பயன் முதலியன விஸ்தாரமாக வர்ணிக்கப்படுகின்றன.

## சக்தியின் அம்சங்கள்.

லக்ஷ்மீ கங்கா ஸரஸ்வதி என்ற மூன்று சக்திகளும் ஒரு ஸமயம் விஷ்ணு பத்நிகளாக இருந்தனர். பொருமையால் சண்டையிட்டுக்கொண்டு கங்கையும் ஸரஸ்வதியும்

நதியாக சபிக்கப்பட்டார்கள். லக்ஷ்மி சாந்தமாக இருந்தும் துலஸியாக சபிக்கப்பட்டாள். கங்கையைச் சிவனிடமும் ஸரஸ்வதியை ப்ரும்மாவிடமும் அனுப்பி தான் லக்ஷ்மியை ஏற்றுக்கொண்டார் லக்ஷ்மீபதி. சக்தியின் அம்சமான பூமியைத் தாநம் செய்வதும் பூஜிப்பதும் மிக புண்யகரமானது. வேதவதி த்ரௌபதி ஸீதா ஸாவித்ரி ஸந்த்யா ஸுகன்யா அருந்ததி அநஸூயா லோபாமுத்ரா ராதா ருக்மிணி ஸத்யபாமா ஷஷ்டீதேவி மநஸாதேவி மங்களசண்டீ தேநு ஸ்வாஹா, ஸ்வதா, தக்ஷிணு முதலியவர்கள் தேவியின் அம்சாவதாரங்கள். சுருங்கக்கூறின் ஸ்த்ரீகளெல்லாம் தேவியின் அம்சமே. உலகெலாம் தேவீமயமே யாகும்.

## குலதேவதையைக் கைவிடாதே.

பதினன்கு மநுக்களிலே தக்ஷஸாவர்ணி ஒருவர். அந்த வம்சத்தில் பரம்பரையாக விஷ்ணுவை குலதேவதையாக உபாஸித்தனர். அதில் வ்ருஷத்வஜன் விஷ்ணுவை அடியோடு மறந்து சிவனைமாத்ரம் ஆராதித்துவந்தான். அதனுல் ஸூர்யன் கோபங்கொண்டு அவனைத் தரித்ரனுக்கினர். அவன் மிக வருந்தி சிவனைத் துதித்தான். சிவன் கோபங்கொண்டு சூலமேந்தி ஸூர்யனைச் சிக்ஷிக்க வந்தார். பாநு வைகுண்டஞ் சென்று திருமாலைச் சரணமடைந்தான். ரவியைத் துரத்திவந்த சிவனை வரவேற்று ஸமாதாநப்படுத்தினர். வ்ருஷத்வஜன் இறந்துவிட்டான். அவனது வம்சத்தில் லக்ஷ்மியே பிறக்கப் போகிருள். அவள் வேதவதி எனப் பெயர் பெறுவாள். பிறந்தவுடன் வேதமோதியதால் வேதிவதி. அவளே ஸீதையாக வருவாள். த்வாபரயுகத்தில் த்ரௌபதியாகி பாண்டவரை மணப்பாள்.

## துலஸியும் சங்கசூடனும்.

கோலோகத்தில் க்ருஷ்ணனது மந்த்ரியாக இருந்தவர் ஸுதாமா. தேவி ராதையும் க்ருஷ்ணனும் ப்ரணய கலஹத்தால் ஒருஸமயம் சிறிது பிரிந்திருந்தனர். க்ருஷ்ணன் ஸமாதாநம் செய்யும்போது கடுங் கோபத்தால் திரும்பிப் பாராமல் சென்ருள். இதைக் கண்ட ஸுதாமா கோபங்

கொண்டான். கிருஷ்ணனது பிரிவு தாளாமல் ராதை பகவானிடம் வரும்போது உள்ளே செல்லாமல் தடுத்தானவன். தேவி அவனை அரக்கனுகும்படி சபித்தாள். அவனே சங்கசூடன் என்பவனுகத் தோன்றினுன். அவனிடம் அன்புகொண்ட கோபிகை பகவானது உத்தரவுபடி தர்மத்வஜன் மாதவி இவர்களுக்குத் துளஸி எனும் பெண்ணுகப் பிறந்தாள். முதல் பெயர் ப்ருந்தை. ராதையின் சாபத்தால் ராக்ஷஸனுன சங்கசூடன் அஸுரப் பிறவிக்கேற்றபடி தேவரையும் வேதியரையும் வருத்தினுன்.

துஷ்டனைச் சிக்ஷிக்க ஹரியும் ஹரனும் மாறி மாறி சங்கசூடனுடன் போர்புரிந்து களைத்தனர். பராசக்தியைச் சரண மடைந்தனர். அவனது கழுத்திலுள்ள க்ருஷ்ண கவசமிருக்கும் வரை ப்ருந்தை கற்புடனிருக்கும் வரை அவனை ஜயிக்க முடியாதென்ருள் தேவி. விஷ்ணு வேதிய வேடம் பூண்டு கவசத்தை யாசித்துச் சென்ருர். சங்கசூடன் வேஷம் பூண்டு ப்ருந்தையின் கற்பையும் அழித்தார். தன் படுக்கையிலுள்ளவர் தன் பதியல்ல. தாமோதரன் என அறிந்தாள். மாநிடனுய் பிறந்து மனைவியை இழப்பாய் என்று சபித்து தீயிலிறங்கினுள். அவளிடமிருந்த அன்பால் விஷ்ணு அந்த சாம்பலைப் பூசிக்கொண்டு பித்தனைபோல் கூத்தாடினுர். சங்கசூடனைச் சூலத்தால் குத்தி விழ்த்தினுர் சிவன். இதை அறிந்த பார்வதி அங்கு தனது நெற்றி வியர்வையைச் சிந்த அது துளசியானது. அதைக் கண்டவுடன் சித்தம் தெளிந்து வைகுண்டம் சென்ருர் விஷ்ணு.

துளஸி பூஜையும் தாநகாலத்தில் துளஸிதள மளிப்பதும், துளஸி ஸ்தோத்ரமும் சிறந்த புண்யத்தைத் தரும். துலா-ஸமம்-அஸ்யதே-இல்லை. [ துலஸீ ஷ பூஜாவிதி விவாஹம் முதலியன தனி புத்தகமாக நம்மிடம் கிடைக்கும். தபால் செலவுடன் விலை அணு 5.]

ஸாவித்ரீ சரிதம் மஹாலக்ஷ்மியின் அவதாரம் பூஜை விந்த்ய மலையின் கர்வத்தை அகஸ்தியர் அடக்கியது பதிநான்கு மநுக்களும் புவநேச்வரியைப் பூஜித்தது முதலியவைகள் வர்ணிக்கப்படுகின்றன.

## காயத்ரியை விட்டு அருணன் அழிந்தது.

காயத்ரீ பலத்தால் அருணஸுரன் மூவுலகையும் ஆண்டான். ஸாதுக்களை ஹிம்ஸிக்கும் அவனைக் கொல்ல அமரர் அன்னையை வேண்டினர். அம்பிகை கூறியபடி ப்ருஹஸ்பதி அருணனிடம் சென்றார். பகைவனின் குருவான நீர் எனிங்கு வந்தீர்? என்றானவன். ஸுரகுரு அருண! அமராதிபன் உனக்கு சத்ருவல்ல. உனது நண்பனே அவன். நீ உபாஸிக்கின்ற காயத்ரியைத்தான் அவன் நித்யம் உபாஸிக்கிறான் என்றான். மாயையால் ஏமார்ந்த அருணன் ஆனால் நான் இனிமுதல் காயத்ரியை விட்டுவிட்டேன் என்றான். அதனால் ஸுலபமாக சக்ரன் அவனைக் கொன்றான்.

## ஆந்ஹிக தர்மம்.

அதிகாலையில் எழுந்திருந்து ப்ராத ஸ்மரணம் செய்தல் சௌசம் ப்ராதஸ்நாநம் புண்ட்ரதாரணம் விபூதியின் மஹிமை அதைச் செய்யும் வகை ருத்ராக்ஷ உத்பத்தி ஒரு முகம்முதல் இருபத்தோரு முகங்களின் தத்வம் அதை தரிப்பதன் பயன் ஸந்த்யா வந்தநம் காயத்ரீ ஜபம் ஔபாஸநம் ப்ரும்மயக்ஞம் மாத்யாந்ஹிகம் தேவபூஜை வைச்வதேவம் அதிதி பூஜை ஆஹாரம் புராண ச்ரவணம் பொருள் தேட வெளியில் செல்லுதல் மாலை ஸந்த்யா வந்தநம் ஔபாஸநம் வைச்வதேவம் இரவு போஜநம் தேவதாஸ்மரணத்துடன் படுத்தல் முதலிய ஒவ்வொன்றையும் விஸ்தாரமாக வர்ணிக்கிறார்.

## காயத்ரீ மஹிமை.

தன்னை ஸ்வரத்துடன் கூறுபவர்களைக் காப்பதால் காயத்ரீ என்று பெயர். காயத்ரீ என்ற சந்தஸ்ஸில் அமைந்ததாலும் இந்த பெயர். இதற்கு ஸமமான மந்த்ரமில்லை. இருபத்துநான்கு அக்ஷரங்களும் மூன்று பாதங்களும் உள்ளது. மூன்று வேதங்களின் ஸாரமிது. இது தான் உபநயந காலத்தில் ப்ரும்மோபதேசம் என்ற பெயரால் உபதேசிக்கப் படுகிறது. மரத்திற்கு வேறு போல், ப்ராம்மணனுக்கு ஸந்த்யாவந்தநமும் காயத்ரியும்

முக்யமானது. வேறில்லாவிடில் கிளை இல்லை. பூ இல்லை. காயில்லை. காயத்ரி இல்லாவிடில் தேவ பூஜையோ ச்ராத்தமோ பயனைத் தராது. ஆபத்காலத்தில் தீட்டுகாலத்தில் கூட காயத்ரீ ஜபம் செய்யவேண்டும். காயத்ரீ தேவிதான் பராசக்தி. அவளே பரப்ரும்மம். இருபத்துநான்கு லக்ஷம் ஜபம் செய்து பத்தில் ஒரு பங்கு ஹோமம் செய்தால் அது புரச்சரணம் எனப்படும்.

ப்ரணவம் வ்யாஹ்ருதி காயத்ரீ இம் மூன்றும் சேர்ந்துதான் காயத்ரீ எனப்படும். ஐந்து இடத்தில் நிறுத்தி ஜபம் செய்யவேண்டும. ஒரே மூச்சில் ஐந்தையும் சேர்த்து ஜபம் செய்தால் பஞ்சமஹாபாதகம் செய்த தோஷம் உண்டாகும். காயத்ரீயை ரேகையினுல் எண்ண வேண்டும். நித்யம் காலையில் ஆயிரம் அல்லது நூருவது செய்யவேண்டும். விச்வாமித்ரர் இருபத்துநான்கு லக்ஷம் ஜபம் செய்து விதிப்படி ஹோமம் செய்து ப்ராம்மணன் ஆனுர். காயத்ரியை விட்டவன் நாயாகப் பிறப்பான்.

காயத்ரியின் ஒவ்வொரு எழுத்தும் மஹாமஹிமை வாய்ந்தது. தனித் தனியாக ரிஷி சந்தஸ் தேவதை வர்ணம் அதை ஜபிப்பதால் உண்டாகும் இஹலோக பலன் பரலோக பலன் காயத்ரீ கவசம் காயத்ரீ ஹ்ருதயம் காயத்ரீ ஸ்தோத்ரம் காயத்ரீ ஸஹஸ்ரநாமம் காயத்ரீ சாபவிமோசநம் முதலியவைகள் மிக விஸ்தாரமாக வர்ணிக்கப்படுகின்றன. இத்துணை லக்ஷம் ஜபித்தால் இன்ன பலன். இன்ன இன்ன பொருளைக்கொண்டு ஹோமம் செய்தால் இன்ன இன்ன பலன் என வர்ணிக்கிருர்.

சமிஸமித்தினுல் காயத்ரீ ஹோமம் செய்தால் பூதப்ரேத பிசாசங்கள் நோய்முதலியன அகலும். தேள் பூச்சி பாம்பு முதலிய விஷம் உள்ளவருக்கு நூறுமுறை காயத்ரியை ஜலத்தில் ஜபித்து ப்ரோக்ஷித்து சாப்பிடக் கொடுத்தால் விஷம் அகலும். காயத்ரீ ஹோமத்தினுல் ஆபிசாரம் அகலும். ஹோம சேஷமான அன்னத்தைப் புஜித்தால் கர்ப்பம் உண்டாகும். காயத்ரீ மந்த்ரத்தால் ஸாதிக்கமுடியாத கார்யமே இல்லை. காயத்ரீ புரச்சரணை

செய்பவர் ப்ராஜாபத்யம் ஸாந்தபநம் பராகம் தப்த க்ருச்ரம் சாந்த்ராயணம் முதலியவைகளைச் செய்து பிறகே புரச்சரணம் செய்யவேண்டும்.

## கௌதம சாபம்.

ஒரு ஸமயம் உலகில் பதினைந்தாண்டு மழையில்லாமல் பூமிவரண்டுவிட்டது. எங்கும் துர்பிக்ஷம். கௌதமமுனிவர் காயத்ரீ தேவியை ப்ரதிஷ்டைசெய்து பூஜித்து ஜபம் செய்து வந்ததால் அவர் ஆச்ரமத்தில் மழைபொழிந்து பயிர்கள் செழிப்பாக இருந்தன. காயத்ரீ தேவி ஒரு அக்ஷய்ய பாத்ரமளித்தாள். மற்றவிடங்களிலிருந்து மஹர்ஷிகள் அனைவரும் அங்கு வந்தனர். கௌதமர் அவர்களை வரவேற்று விருந்தளித்தார். சில காலம் சென்றபின் நாடெல்லாம் மழைபொழிந்து உலகம் ஸுபிக்ஷமானது. முனிவர்கள் தங்கள் தங்கள் ஆச்ரமம் செல்ல விடைகேட்டனர். அவர்களை அனுப்ப மநமில்லாமல் கௌதமர் இன்னும் சிறிதுகாலமிருந்து செல்லலாம் என மும்முறை தடுத்தார். ப்ரும்மலோகம் வரை கௌதமர் கீர்த்தி பரவிற்று.

அஸூயை கொண்ட சில முனிவர் மாயையால் ஒரு பசுவைப்படைத்து கௌதமரது அக்நி ஹோத்ர சாலைக்கு அனுப்பினர். அது ஆங்குள்ள அக்நியைச்சுற்றி பரிஸ்தரணமாக இருந்த தர்ப்பத்தைத் தின்ன ஆரம்பித்தது. கௌதமர் அதை ஓட்ட ஹும் என்றார். உடனே பசு கீழே விழுந்து உயிரை விட்டது. நீர் கோஹத்தி செய்தீர். ஆதலால் ஒரு நிமிஷங்கூட இங்கிருக்க முடியாதென கிளம்பிவிட்டார்கள். கோஹத்தி பாபம் அகல கௌதமர் காயத்ரீ ஜபம் செய்தார். காயத்ரீ தேவி ப்ரத்யக்ஷமாகி ப்ராம்மணர்கள் செய்த வஞ்சனையைக் கூறினாள். கோபங்கொண்ட மஹர்ஷி அவர்களைக் காயத்ரியைவிட்டு த்வாபரயுகம் வரை நரகத்திலிருந்து கலியில் ப்ராம்மணராகப்பிறந்து காயத்ரியைவிட்டு பாஷண்டிகளாகி கர்மப்ரஷ்டர்களாகும்படி சபித்தார். அவர்களே கலியில் ராக்ஷஸர்களைப் போலிருந்து ப்ராம்மணர்களையே கஷ்டப்படுத்துகின்றனர்.

## கேந உபநிஷத்தில் காணலாம்.

காணுததைக் கேநத்தில் தேடு என்ற பழமொழிக் கிணங்க ஒரு கதை. தேவாஸுர யுத்தம் அடிக்கடி நடக்கும். ஒரு ஸமயம் ஸுரர் ஜயித்தனர். அன்னையின் அருளால் ஜயம் உண்டானதென்பதை மறந்தனர். வெற்றி வெறியில் நானே ஜயித்தேன் நானே ஜயித்தேன் என கர்வங் கொண்டனர். அச்சமயம் இறைவன் அவர்களது எதிரிலே ஆகாயமளாவ ஒரு யக்ஷமாக நின்ருர். சக்ரன் அக்நியையும் வாயுவையும் ஒவ்வொருவராக அனுப்பி அது யார்? விசாரித்துவா என்ருர். நீயார்? என்று யக்ஷம் இவர்களைக் கேட்கும்போது நான் அக்நி எல்லாவற்றையும் கொளுத்துவேன். நான் வாயு மஹா பலமுள்ளவன் என்று பெருமை பேசினர். யக்ஷம் ஒரு புல்லை எதிரில் வைத்து இதைக் கொளுத்து என்ருர். அக்நி முழுமுயற்சி செய்தும் கொளுத்தமுடியவில்லை. வாயு வேண்டிய பாடு பட்டும் அதை அசைக்கமுடியவில்லை. இருவரும் வெட்கி இந்த்ரனிடம் சென்றனர்.

சக்ரன் கம்பீர நடையுடன் வர யக்ஷம் மறைந்தது. நான் என்ன பாபம் செய்தேன்? என கர்வத்தை விட்டு கதறினுன். ஆகாயத்தில் ஸர்வ ஆபரணத்துடன் மின்னல் கொடிபோல் தேவி தோன்றினுள். அவளைப் பணிந்து அவனன்றி அணுவும் அசையாது. அந்த பகவானுல் தான் எங்களுக்கு ஜயம் உண்டாயிற்று என கர்வத்தை விட்டு தேவியைத் துதித்தான் சக்ரன்.

## மணித்வீபம்.

ஸகல உலகங்களுக்கும் மேலே மணித்வீபம் இருக்கிறது. அதைச்சுற்றி அமிர்தக் கடல் இருக்கிறது. அதனிடையில் வெண்கலம் தாம்ரம் ஈயம் பித்தளை பஞ்சலோஹம் வெள்ளி ஸ்வர்ணம் புஷ்பராகம் முதலியவைகளாலாகிய எட்டு ப்ராகாரங்கள் உள. பத்மராக ப்ராகாரத்தால் சூழப்பட்டு அறுபத்தி நான்கு கலைகளுடன் ஆயிரக்கால் மண்டபத்திலே சிருங்கார, முக்தி, க்ஞாந, ஏகாந்த மண்டபங்கள் உள. சிருங்கார மண்ட

பத்தில் காநம். முக்தி அளிப்பது முக்தி மண்டபம். உப தேசம் க்ஞாநமண்டபம். பக்தாநுக்ர சிந்தை ஏகாந்த மண்டபம். சிந்தாமணி க்ருஹத்தில் பத்து படிக்கட்டுகளுள்ள பஞ்சப்ரும்மாஸநத்தில் ஸ்ரீ சக்ர தாடங்க மணிந்து தேவி த்ரிபுரஸுந்தரி ப்ரகாசிக்கின்ருள்.

நாரதர் ஜநமேஜய ராஜனிடம் வந்து பாகவதம் கேட்டதால் அன்னை ஸ்ரீதேவிஸந்தோஷமடைந்து பரீக்ஷித்துக்கு ஸ்வர்க்கம் தந்ததாகக்கூறி புத்ரனது கடமையை செய்ததற்காக அவனைக் கொண்டாடினர்.

**வேதஸாரமான தேவீபாகவதம் முற்றிற்று.**

ஸ்ரீ மஹா பட்டாரிகாயை நம;



# 6. ஸ்ரீமத் பாகவதம்.



ஸ்ரீ மஹாவிஷ்ணு.

மாம்பலம் குருகுல வெளியீடு.

# ஸ்ரீ பாகவத அநுக்ர மணிகா.

**वासुदेवे भगवति भक्तियोगः प्रयोजितः ।**
**जनयत्याशु वैराग्यं ज्ञानंच यदहैतुकम् ॥**

பகவானிடத்தில் பக்திவைத்தால் அது உயர்ந்த வைராக்யத்தையும் க்ஞானத்தையும் உண்டுபண்ணும்.

**[ஸ்ரீ பாகவதம் 12-ஸ்கந்தம் 338 அத்தியாயம்]**

## முதலாவது ஸ்கந்தம்.

1 நைமிஷாரண்யத்தில் சௌனகாதிகள் ஸ்ரீ பாகவதம் கூறும்படி ஸூதரை வேண்டியது.
2 பாகவத சிரவண கீர்த்தந பக்தி மகிமை.
3 பகவான் 24 அவதாரமெடுத்தார்.
4 வியாஸர் கவலை. நாரதர் வருதல்.
5 பகவத்குண வர்ணந மஹிமை. நாரதர் முன்ஜன்மா.
6 பகவானை ஆராதித்து பிரும்ம புத்ரனாக ஜனித்தல்.
7 பாகவதத்தைச் செய்தது. அச்வத்தாம இளம்பாண்டவரை இரவில் கொன்றது.
8 உத்திரை கருவிடம் அச்வத்தாமாஸ்த்ரம் செல்லுதல். பகவானதை ரக்ஷித்தல். குந்தி கிருஷ்ணனை துதித்தல்.
9 தர்மர் பீஷ்மரிடம் தர்மம் கேட்டது. பீஷ்ம முக்தி.
10 கிருஷ்ணன் துவாரகை சென்றது.
11 ஜநங்கள் கொண்டாட நகரத்தில் நுழைந்தார்.
12 பரீக்ஷித்தின் ஜநநம்.
13 விதுரர் சொற்படி திருதராஷ்ட்ரன் வநஞ்செல்லுதல்.
14 அபசகுநத்தைக்கண்டு தர்மர் சிந்தை. துவாரகையிலிருந்து அர்ஜுநன் வருதல்.
15 கிருஷ்ணன் மறைந்ததால் பாண்டவர் மஹாப்ரஸ்தாநம்.
16 பரீக்ஷித் ராஜ்யபாரம். பூமிதர்ம ஸம்வாதம்.

17 பரீக்ஷித் தர்மஸம்வாதம். கலியை ஜயித்தல்.
18 பரீக்ஷித்திற்கு முனிகுமார சாபம்.
19 கங்கை கரையில் பரீக்ஷித் பிராயோபவேசம். முனிவர் சுகருடன் வருதல். ராஜனது கேள்வி.

## இரண்டாவது ஸ்கந்தம்.

1 சுகர் பாகவதங்கூறல். விராட்ரூப வர்ணநம்.
2 உடனே முக்தி. கிரம முக்தி நிரூபணம்.
3 காமனைக்கேற்ற தேவதாராதநம். விஷ்ணு பக்தியின் மேன்மை.
4 சுகர் மங்களங்கூறி ஸ்ருஷ்டி முதலியவர்ணநம்.
5 தத்வோத்பத்தி. பிரும்மாண்ட வர்ணநம்.
6 புருஷ ஸூக்தப்படி விராட் ஸ்வரூப வர்ணநம்.
7 வராஹாவதாரம் முதல் கிருஷ்ணவதாரம் வரை.
8 பரீக்ஷித்தின் கேள்வி.
9 பிரும்மா வைகுண்டஞ்சென்று விஷ்ணுவினிடம் பாகவதோபதேசம் பெறல்.
10 புராண லக்ஷணம். விராட்புருஷ சரீர இந்திரிய அபிமானி தேவதைகள்.

## மூன்ருவது ஸ்கந்தம்.

1 விதுரர் உத்தவருடன் கூடுதல்.
2 உத்தவர் கிருஷ்ண லீலையை வர்ணித்தது.
3 மதுரையிலும் துவாரகையிலும் பகவானது லீலை. யாதவர் பிரபாஸ க்ஷேத்ரம் சென்றது.
4 யதுவம்ச ஸம்ஹாரம். விதுரர் க்ஞானம் பெற மைத்ரேயரிடம் செல்லுதல்.
5 மைத்ரேயர் ஸ்ருஷ்டி தத்வம்கூறுதல். தத்வவடிவமான தேவர் பகவானை துதித்தல்.
6 ஈசனது சக்தி ஸ்தூல பூதங்களில் பிரவேசித்தல் விராட்டின் விக்ரஹ உத்பத்தி.
7 நிர்குணனை பரமனுக்குக் குணம் உண்டானது.
8 விஷ்ணு நாபிகமலத்திலிருந்து பிரும்மா உண்டானது.
9 பிரும்மா பகவானை துதித்துவரம் பெறல்.

10 பத்துவகை ஸிருஷ்டி வர்ணநம்.
11 மன்வந்தரம் முதலிய கால அளவு. மநுஷ்யாதிகளின் ஆயுஸ்ஸின் அளவு.
12 ஸநக ருத்ரமரீசி ஸரஸ்வதி வேதம் முதலியவைகளின் ஸ்ருஷ்டி.
13 பிரும்மாவின் நாஸியிலிருந்து யக்ஞவராஹ அவதாரம். ரிஷிகள் பகவானைத் துதித்தல்.
14 திதி கச்யப ஸம்வாதம். திதி கர்ப்பம்.
15 ஸநகாதிகள் ஜயவிஜயருக்குச் சாபமளித்தல்.
16 பகவான் ஸமாதாநம் செய்தல். ஜயவிஜயர் விழுதல்.
17 ஹிரண்யாக்ஷ ஹிரண்ய கசிபு பிறப்பு விஜயம்.
18 பூமியைக் கொண்டுவர ஹிரண்யாக்ஷனுடன் போர் புரிதல்.
19 பிரும்மாவேண்ட ஹிரண்யாக்ஷனை கொன்றது.
20 பிரும்மா பலவகை ஸிருஷ்டி செய்தல்.
21 கர்தம தபஸ். பகவான் வரமளித்தல். கர்தமாசிரமத்திற்கு ஸ்வாயம்புவமநு வருதல்.
22 கர்தமதேவ ஹூதி விவாஹம். மநு பிரும்மாவர்த்தம் செல்லுதல்.
23 கர்தமருக்குப் பணிவிடை. திவ்ய விமாநத்தில் இருவரும் கிரீடை. 9 பெண்கள் பிறத்தல்.
24 கபிலாவதாரம். 9 கன்யா விவாஹம். கர்தம கபில ஸம்வாதம். கர்தமர் பகவானை அடைதல்.
25 கபில தேவஹூதி ஸம்வாதம். பக்தியோகம்.
26 மஹதாதி உத்பத்தி. ஸத்தர்ம வர்ணநம்.
27 பிரக்ருதி புருஷ விசாரத்தால் முக்தி. பக்தியால் பிரக்ருதி மறைதல்.
28 யோக லக்ஷணம். பகவானது அவயவங்களைத் தனித் தனியாக த்யாநம் செய்தல்.
29 பக்தி யோக ரஹஸ்யம். கால ப்ரபாவம்.
30 உடலாசை உள்ளோர் அதோகதி அடைதல்.
31 கர்ப்பத்தில் குழந்தைநிலை. பகவானை அது துதிப்பது. இளமையிலுள்ள கஷ்டம்.

32 தூமமார்க்கம். கர்மமார்க்கம். கர்மாவினுல் ஏற்படும் தோஷம். பக்திமேன்மை.
33 தேவஹூதி பகவானைத் துதித்தது. தேவஹூதி பிரும்ம ஸ்வரூபத்தை அடைந்தது.

## நான்காவது ஸ்கந்தம்.

1 மநு கன்யை வம்சம். யக்ஞ, தத்த அவதாரங்கள்.
2 தக்ஷனுக்கு சிவனிடம் துவேஷமும் சாபமும்.
3 ஸதி தக்ஷயாகஞ்செல்ல விரும்பல். சிவன் தடுத்தது.
4 தாக்ஷாயணி தக்ஷயக்ஞத்தில் யோகத்தால் உடலை விடுதல்.
5 வீரபத்ரர் தக்ஷயக்ஞத்தை அழித்து தக்ஷனை சிக்ஷித்தது.
6 பிரும்மாதி தேவர் கைலாஸத்தில் சிவனை துதித்தது.
7 ருத்ரன் வரம். தக்ஷனை எழுப்பல். சிவனைத் தேவர் துதித்தது.
8 துருவ சரிதம். நாரதர் உபதேசித்தது.
9 துருவன் வரம்பெற்று ராஜ்யமடைந்தது.
10 துருவன் உத்தமனைக் கொன்ற யக்ஷருடன் யுத்தம்.
11 ஸ்வாயம்புவமநு ஸமாதாநம் செய்தல்.
12 துருவனுக்கு குபேரன் வரம். தபஸ், முக்தி.
13 அங்கன் தன் மகனை வேநன் செயலால் வருந்தி வநம் செல்லல்.
14 வேநன் அதர்மம். ரிஷிகளால் வதம். நிஷாதர் பிறப்பு.
15 வேநனைக் கடைந்து விபிருது அர்சிஸ்ஸைப் படைத்தல். பிருது ராஜ்யாபிஷேகம்.
16 மாகத வந்திகள் ஸ்துதிசெய்தல்.
17 பூமி, விதைகளை விழுங்க அரசன் பூமியை சிக்ஷித்தல்.
18 நரர் ஸுரர் முதலியவர் தனி பாத்ரம் கன்று கறப்பவர்களைக்கொண்டு தங்களிஷ்டமான பொருளைக் கறத்தல்.
19 அச்வமேத விக்நம் செய்த சக்ரனைக்கொல்ல முயற்சி. பிரும்மா ஸமாதாநம் செய்து யாகத்தை நிறுத்தல்.
20 பகவான் பிரத்யக்ஷமாகி பிருதுவுடன் பேசுதல்.

21 பிருது தன் ஸபையில் பகவதுபதேசத்தைக்கூறல்.
22 ஸநத் குமாரர் க்ஞானோபதேசம் செய்தல்.
23 பிருது வநம்சென்று உடலைவிடல். அர்ச்சிஸ்ஸும் பிருதுவும் வைகுண்டம் செல்லல்.
24 பிருதுவம்சம். ருத்ரப்ராசேதஸ்ஸங்கம். ருத்ரகீதம்.
25 பிராசீந பர்ஹிஸ். நாரத ஸம்வாதம். புரஞ்ஜநசரிதம்.
26 புரஞ்ஜநன் வேட்டை. மனைவி வருத்தம்.
27 சண்டவேகன் ஆக்ரமித்தல். காலகன்யா சரிதம்.
28 புரஞ்ஜந சோகம். ஜன்மாந்தரத்தில் ஸ்திரீயாதல். அவிக்ஞாதனெனும் மித்ரனது உபதேசம். முக்தி.
29 புரஞ்ஜனோ பாக்யாந தத்துவம். பிராசீந பர்ஹிஷர் முக்தி பெறல்.
30 10 பிராசேதஸர் பகவானிடம் வரம். அவர்கள் மாரிஷா என்பவளிடம் தக்ஷனைப்பெறுதல்.
31 துறவுபூண்ட ப்ரசேதஸ்ஸுக்கு நாரத உபதேசம்.

## ஐந்தாவது ஸ்கந்தம்.

1 பிரிய விருத சரிதம்.
2 ஆக்நீத்ரர் பூர்வசித்தியிடம் 9 புத்ரர் உண்டாகுதல்.
3 நாபிமேரு தேவிமூலம் ரிஷபாவதாரம்.
4 ரிஷபதேவரது சரிதம்.
5 புத்ரனுக்கு க்ஞானோபதேசம். அவதூதராதல்.
6 ரிஷபதேவர் உடலை விடுதல்.
7 பரதன் புலஹாச்ரம் செல்லல். தபஸ்.
8 பரதர் மானுகி உடலை விடுதல்.
9 பரதன் பிராம்மணனுக பிறத்தல். ஜடபரதரை பலியிடல். பத்ரகாலி அவரைக் காத்தல்.
10 ரஹூகணன் பல்லக்கு சுமத்தல். அவனுக்குபதேசம்.
11 ஸம்ஸாரம் பொய்யென உபதேசம்.
12 ஸத்ஸங்கத்தின் சிறப்பு. பரதன் தன் பூர்வஜன்மாவை கூறல்.
13 ஸம்ஸாரம் என்பது ஒரு காடு.
14 „ „

15 பரதவம்ச வர்ணநம்.
16 பூகோள வர்ணநம்.
17 கங்கை இலாவர்ஷத்தில் சங்கரர் ஸங்கர்ஷிணனைத் துதித்தல்.
18 மற்ற வர்ஷங்களும் அங்கு உபாஸனையும்.
19 கிம்புருஷ பாரத வர்ஷம்.
20 பிலக்ஷம் முதலிய 6 த்வீபங்கள். லோகாலோக மலை.
21 ககோள வர்ணனை. ஸூர்ய ரத வர்ணநம்.
22 சந்திரன் முதலிய கிருஹங்களின் கதி.
23 விஷ்ணுபத, சிம்சுமார சக்ரவர்ணநம்.
24 ராகு கேது, அதலம் முதலிய 7 லோகம்.
25 ஸங்கர்ஷணன். அவரது ஸ்துதி.
26 பலவகை நரக வர்ணநம்.

## ஆருவது ஸ்கந்தம்.

1 அஜாமிளன் சரிதம். விஷ்ணு யமதூத வாதம்.
2 பாகவத தர்ம நாம மஹிமை. அஜாமிளன் வைகுண்டம்.
3 யமன் வைஷ்ணவ மேன்மையைக் கூறல்.
4 தக்ஷ ஜன்ம. தபஸ். ஹம்ஸ குஹ்ய ஸ்தோத்ரம்.
5 ஹர்யச்வ பலாச்வருக்கு நாரத உபதேசம். தக்ஷன் நாரதருக்கு சாபமளித்தல்.
6 தக்ஷனது 60 கன்யகை மூலம் வம்ச வளர்ச்சி.
7 குரு அபசாரத்தால் சக்ரன் செல்வமிழந்தது. விசுவரூபனைப் புரோஹிதனுக்கல்.
8 விசுவரூபர் நாராயணகவச முபதேசித்தல்.
9 விசுவரூப வதம். விருத்த னுண்டாவது. தேவர் பகவானை துதித்து வரம் பெறல்.
10 ததீசியின் எலும்பால் வஜ்ரம் செய்து யுத்தாரம்பம்.
11 விருத்திரன் பக்தி க்ஞாந வைராக்யம்.
12 சக்ர விருத்ர யுத்தம். விருத்ர வதம்.
13 சக்ரன் பிரும்மஹத்தி அசுவமேதத்தாலகலுதல்.

14 விருத்ரன் முற்பிறவி. அங்கிரஸர் அருளால் சித்ர கேது புத்ரன் பெற்றது. அது இறந்ததால் சோகம்.
15 சித்ரகேதுவுக்கு நாரத ஆங்கிரஸர் உபதேசம்.
16 இறந்தவரின் ஜீவன் தேர்தல் கூறல். நாரதர் ஸங்கர்ஷண மந்திரம் உபதேசித்தல். அரசன் வித்யாதரனாதல்.
17 பார்வதீ பரமேச்வரரைப் பரிஹாஸம் செய்து சாபத்தால் சித்ரகேது விருத்ரனானது.
18 திதி வம்சம். மருத்துக்களின் உத்பத்தி.
19 பும்ஸவந விரத விதி.

## ஏழாவது ஸ்கந்தம்.

1 ஜய விஜயர் ஸநகாதி சாபத்தால் அஸுரனானது.
2 ஹிரண்யகசிபு பிராம்மணர் கோ முதலியவற்றை ஹிம்ஸிக்கும்படி கூறல். புத்ர சோகமுள்ள தாயிக்கு ஸமாதாநங் கூறல்.
3 ஹிரண்யகசிபு தபஸ். பிரும்மா வரதாநம்.
4 பிரஹ்லாதன் பிறப்பு. அவனது குணம்.
5 ஹிரண்ய பிரஹ்லாத வாதம். பிரஹ்லாதனைக் கொல்ல முயற்சி. குருகுலத்திற்கு அனுப்புதல்.
6 பிரஹ்லாதன் மாணவருக்கு உபதேசம்.
7 தாய் வயிற்றிலிருந்து நாரதரிடம் கேட்டது.
8 பிரஹ்லாதனைக் கொல்ல முயற்சி. தூணிலிருந்து நரஸிம்மன் ஹிரண்யனைக் கொல்லுதல். தேவர் ஸ்துதி.
9 பிரஹ்லாதன் பகவானைத் துதித்தது.
10 பிரஹ்லாதன் ராஜ்யாபிஷேகம். திருபுரதஹநம்.
11 ஸநாதநதர்மம். வர்ணதர்மம். ஸ்த்ரீ தர்மம்.
12 பிரும்மசாரி வாநபிரஸ்த தர்மம்.
13 ஸன்யாஸ தர்மம். அவதூத பிரஹ்லாத வாதம்.
14 தேசகால விசேஷத்திற் கேற்க கிருஹஸ்த தர்மம்.
15 கிருஹஸ்தருக்கு மோக்ஷ வழி. நாரத முற்பிறவி.

## எட்டாவது ஸ்கந்தம்.

1 4 மன்வந்தர சரிதம். யக்ஞாவதாரம்.
2 கஜேந்திர முதலை யுத்தம்.
3 கஜேந்திர ஸ்துதி. முதலை விடுதலை.
4 அவைகளின் முற்பிறவி, நற்கதி.
5 ரைவத சாக்ஷுஷ மங்வந்தரம். அஜிதாவதாரம். தேவர் பிரும்மாவுடன் வைகுண்டம் சென்று ஸ்துதி.
6 பகவான் கூறியபடி தேவாஸுரர் பாற்கடலைக் கடைதல்.
7 ஸமுத்ரத்திலுண்டான ஹாலாஹலத்தைச் சிவன் விழுங்குதல்.
8 ரத்ந உத்பத்தி. லக்ஷ்மி விஷ்ணுவை வரித்தல். அஸுரர் அமிருதத்தை அபஹரித்தல். மோஹிநீ அவதாரம்.
9 தேவர்க்கு அமிருதம். அஸுரர் ஏமார்ந்தது. ராகுவின் தலை வெட்டப்பட்டது.
10 தேவாஸுர யுத்தம். அஸுர மாயையை விஷ்ணு அகற்றுதல்.
11 பலியின் தோல்வி. அஸுர நாசம். சுக்ரர் பலியை எழுப்புதல்.
12 மோஹிநீ ரூபத்தைக் கண்டு சிவ மோஹம்.
13 வரப்போகும் மநுக்களின் சரிதம்.
14 மநுக்களின் தனித் தனியான வேலைகள்.
15 பலி ஸுவர்க்கத்தை ஆளுதல். தேவர் ஓட்டம்.
16 கச்யபர் அதிதிக்கு பயோவிருதம் தரல்.
17 பகவான் அதிதி கர்பத்தில் வர பிரும்ம ஸ்துதி.
18 வாமநாவதாரம். பலி யக்ஞத்தில் வாமந பூஜை.
19 மூன்றடி மண் யாசித்தல். சுக்ரர் தடுத்தல்.
20 பலியின் தாநம் விசுவரூபமெடுத்தல்.
21 பலியைக் கட்டி பகவான் கூறல்.
22 பிரும்மா கூறுதல். விஷ்ணு பலியைக் கொண்டாடி வரமளித்தல்.

23 பலி ஸுதலம் செல்லுதல். வாமநருக்கு உபேந்த்ர ராக அபிஷேகம்.

24 மத்ஸ்யாவதார சரிதம்.

## ஒன்பதாவது ஸ்கந்தம்.

1 ஸூர்ய வம்சம். மநு புத்ரர் பெண்ணானது.
2 பிரஷத்ரதர் முதலியவர் வம்ச விருத்தி.
3 ஸுகன்யா, ரேவதகன்யா சரிதங்கள்.
4 நாபாக அம்பரீஷ தூர்வாஸ சரிதங்கள்.
5 அம்பரீஷனால் தூர்வாஸர் விடுதலை. அம்பரீஷ முக்தி.
6 மாந்தாதா ஸௌபரி சரிதங்கள்.
7 திருசங்கு ஹரிச்சந்திரன்.
8 ஸகர சக்கரவர்த்தி.
9 கங்கா, பகீரதன், ஸௌதாஸன் சரிதங்கள்.
10 ஸ்ரீராம சரிதம்.
11 ஸாகேத ஜநங்களுடன் ராமர் வைகுண்டம் செல்லுதல். ராமவம்ச வர்ணநம்.
12 குசன் முதல் ஸுமித்ரன்வரை இக்ஷ்வாகு வம்சம்.
13 நிமிவம்சம். நிமி உடலை இழந்தது. விதேஹ வம்சம்.
14 சந்த்ரவம்சம் புதனைமூலம் புரூரவஸ் உண்டானது.
15 ரிசிகர், ஜமதக்நி, பரசுராமர், கார்த்தவீர்ய வதம்.
16 ஜமதக்நி வதம். பரசுராமர் செய்த க்ஷத்ரிய வதம். விச்வாமித்ர வம்சம்.
17 க்ஷத்ர, விருத்த, ரஜி, ரம்பா, நேநஸ் வம்சம்.
18 யயாதி சரிதம்.
19 யயாதி வீட்டை விட்டது.
20 பூருவம்சம். துஷ்யந்த பரதர் சரிதங்கள்.
21 பரதவம்ச ரந்தி தேவ சரிதம்.
22 திவோதாஸ வம்ச ரிக்ஷவம்ச பாண்டவர்.
23 அநுத்ருஹ்யு துர்வஸு யதுவம்சம்.
24 யதுவம்சத்தில் கிருஷ்ணவதாரம்.

## பத்தாவது ஸ்கந்தம். பூர்வார்த்தம்.

1 பிரும்மா பூமியை ஸமாதானம் செய்தல். கம்ஸன் தேவகியைக் கொல்ல முயற்சி. 6 புத்ரர் வதம்.

2 தேவகி கருவில் பகவதம்சம். பிரும்ம ஸ்துதி.

3 கிருஷ்ணவதாரம். பெற்ளோர் ஸ்துதி. கோகுலத்தில் கிருஷ்ணனை விட்டு யசோதை மகளைக் கொண்டு வந்தது.

4 தன்னைக் கொல்லும் கம்ஸனிடமிருந்து மேலே கிளம்பி தேவி உன்னைக் கொல்பவன் வளருகிறுன் என்றது.

5 கிருஷ்ணனுக்கு கோகுலத்தில் ஜாதகர்மாதிகள். நந்தன் மதுரை செல்லுதல். நந்த வஸுதேவ ஸந்திப்பு.

6 பூதனவதம்.

7 சகட திருணவர்த்தர்கள் வதம். கிருஷ்ணன் வாயில் யசோதை ஆகாசாதிகளைக் கண்டது.

8 கர்க்காசாரியர் ஜாதகர்ம நாமகர்ணங்களைச் செய்து வைத்தல். தாயிக்கு விச்வரூப தர்சனம்.

9 கிருஷ்ணனை உறலில் கட்டியது.

10 யமள அர்ஜுநங்களுக்கு சாபவிமோசநம்.

11 பிருந்தாவநம் செல்லுதல். வத்ஸாஸுர விருகாஸுர வதம்.

12 அகாஸுர வதம்.

13 பிரும்மா கன்றுகளையும் கோபசிறுவர்களையும் தூக்கிச்சென்று வேறு கன்றுகளையும் கோபரையும் கண்டு ஏமாரல்.

14 பிரும்ம ஸ்துதி. எல்லா கன்றுகளும் சிறுவர்களும் ஒன்ருனது.

15 தேநுகாஸுர வதம். காளியமடுவில் இறந்தவர்களைக் காப்பாற்றியது.

16 காளீய சிக்ஷை. காளீய மனைவிகள் ஸ்துதி. காளீயன் வெளிக்கிளம்பல்.

17 காளியன் யமுனையில் வஸிக்கக் காரணம். காட்டுத் தியிலிருந்து கோபர்களைக் காத்தல்.
18 பிரலம்பாஸுர வதம்.
19 முஞ்ஜக்காட்டிலிருந்து கோக்களையும் கோபர்களையும் காப்பாற்றுதல்.
20 வர்ஷாகால சரத்கால வர்ணநம்.
21 வேணுகாநம். ஸ்திரீகள் க்ருஷ்ண குணகாநம்.
22 கோபிகா வஸ்திராபஹரணம்.
23 யக்ஞ பத்நிகளுக்கு அருள்.
24 இந்திரயாகத்தை நிறுத்தல்.
25 குளிர் மழைக்காக கோவர்த்தனத்தைத் தூக்கல்.
26 கோபர்களுக்கு நந்தன் கிருஷ்ணன் பெருமை கூறியது.
27 கோவிந்த பட்டாபிஷேகம்.
28 வருணனிடமிருந்து நந்தனை மீட்டல்.
29 ராஸக்ரீடை. பகவான் மறைவது.
30 கோபிகைகள் கிருஷ்ண சரிதத்தை நடித்தல்.
31 கோபிகா கீதம்.
32 கிருஷ்ணன் வந்து ஸமாதாநம்.
33 ராஸ க்ரீடைக்கு சுகர் ஸமாதாநம்.
34 மலைப்பாம்பிடமிருந்து நந்தனைக் காத்தல். பாம்பின் முற்பிறவி.
35 கோபிகைகள் பகவானைப்பற்றி யுக்ம கீதம்.
36 அரிஷ்டாஸுர வதம். கம்ஸன் அக்ரூரரை கோகுல மனுப்பி கிருஷ்ணனை அழைத்தது.
37 கேசி வதம். நாரத ஸ்துதி. வியோமாஸுர வதம்.
38 நந்த கோகுலத்தில் அக்ரூரர்.
39 ராமகிருஷ்ணர் மதுரை புறப்பாடு. யமுனை ஜலத்தில் வைகுண்டம்.
40 அக்ரூர ஸ்துதி.
41 மதுரையில் வண்ணான் வதம். சேணியனுக்கும் புஷ்பகாரனுக்கும் அருள்.

42 கூனிக்கு அருள். வில்-முறித்தல்.
43 குவலயாபீட வதம். சாணூர வாதம்.
44 சாணூரமுஷ்டிக கம்ஸ வதம்.
45 உக்ரஸேந அபிஷேகம். ராமகிருஷ்ண உபநயநம், வித்யாப்யாஸம், இறந்த புத்ரனை எழுப்பி குரு தக்ஷிணை.
46 கோபிகளை ஸமாதாநம் செய்ய உத்தவரை அனுப்பல்.
47 ப்ரம்மர கீதம். உத்தவர் மதுரை திரும்பல்.
48 கூனியின் இஷ்டத்தைப் பூர்த்திசெய்தது. அக்ரூரருடைய வீடு செல்லல்.
49 அக்ரூரர் அஸ்தினபுரம் சென்றது. குந்தி புலம்பல்

**பத்தாவது ஸ்கந்தம். உத்தரார்த்தம்.**

50 ஜராஸந்த யுத்தம். துவாரகா நிர்மாணம்.
51 காலயவநவதம். முசுகுந்த அருள்.
52 ரேவதீ பலராம விவாஹம். ருக்மிணியின் விக்ஞாபநம்.
53 குண்டிநபுரம் சென்று கிருஷ்ணன் ருக்மிணியை அபஹரித்தல்.
54 ருக்மியின் தோல்வி. ருக்மிணீ விவாஹம்.
55 பிரத்யும்நன் சம்பராஸுரவதம்.
56 ஸ்யமந்தகமணி. ஜாம்பவதி ஸத்யபாமா விவாஹம்.
57 ஸத்ராஜித்தை கொன்று சததன்வா மணியை அபஹரித்தல்.
58 காலிந்தி மித்ரவிந்தா ஸத்யர் பத்ரா லக்ஷ்மணை விவாஹம்.
59 முராஸுர நரகாஸுர வதம். 16 ஆயிரம் ராஜகன்யா விவாஹம். பாரிஜாதஹரணம்.
60 ருக்மிணீ கிருஷ்ணர் விளையாட்டுச் சண்டை.
61 கிருஷ்ணஸ்துதி. அநிருத்தமணம் ருக்மி வதம்.
62 உஷா அநிருத்த ஸங்கம்.
63 கிருஷ்ண பாணஸுர யுத்தம். சிவஜ்வர விஷ்ணுஜ்வரம்.

64 நிருகனைக் காத்தது.
65 பலராமன் யமுனையை இழுத்தது.
66 பௌண்ட்ரககாசிராஜவதம். ஸுதக்ஷிணன் எரிந்தது.
67 ரைவதகத்தில் த்விவிதவதம்.
68 ஸாம்ப விவாஹம். ஹஸ்திநாதபுரத்தை இழுத்தது.
69 நாரதர் கிருஷ்ண கிருஹஸ்த தர்சநம்.
70 கிருஷ்ண ஆந்ஹிகம். தர்மர் ராஜஸூயத்திற்காக நாரதவருகை.
71 இந்திரப்ரஸ்தம் செல்லுதல்.
72 ராஜஸூயத்திற்காக பீமன் ஜராஸந்தனை கொன்றது.
73 ஜராஸந்தனது சிறையிலிருந்த அரசர் விடுபட்டது.
74 ராஜஸூயத்தில் சிசு பாலவதம்.
75 யாகபூர்த்தி. மயமாயாஸபையில் துர்யோதந அவமாநம்.
76 சால்வ யாதவ யுத்தம்.
77 சால்வனைக் கொன்றது.
78 தந்தவக்திர விதூரத வதம். பலராமர் ஸூதரைக் கொன்றது.
79 பீம துர்யோதன யுத்தம். பலராமர் தீர்த்தயாத்ரை.
80 குசேலர் பகவானைத் தர்சித்தது.
81 குசேலன் செல்வத்தைக்கண்டு பகவானை துதித்தது.
82 பிரபாஸத்தில் யாதவ கௌரவர் ஸந்திப்பு.
83 திரௌபதிக்கு கிருஷ்ண பத்னிகள் தன் தன் விவாஹம் பற்றி கூறல்.
84 வஸுதேவருடைய யாகம்.
85 தேவகி கோரியபடி இறந்த குழந்தைகளை எழுப்பல்.
86 ஸுபத்ராஹரணம். பகுலாச்வ ச்ருத தேவர்கள் விட்டில் ஏக காலத்தில் பகவான் நுழைதல்.
87 வேத ஸ்துதி.
88 பஸ்மாஸுரனிடமிருந்து சிவனை விஷ்ணு காத்தது.

89 பிருகு மும்மூர்த்திகளில் விஷ்ணுவே சிறந்தவர் என கண்டது. அர்ஜுனனுடன் மகாகாலபுரம் சென்று இறந்த பிராம்மண குழந்தைகளைக்கொண்டு வந்தது.

90 கிருஷ்ண லீலா சுருக்கம். யாதவர் ஸந்ததி கணக் கற்றது.

## பதினோராவது ஸ்கந்தம்.

1. யதுகுலம் அழியும்படி ரிஷி சபித்தல்.
2. வஸுதேவருக்கு நாரதர் பாகவத தர்மம் கூறல்.
3. மாயையைத் தாண்டவழி. பிரும்ம கர்மஸ்வரூபம்.
4. பகவத் அவதார வர்ணநம்.
5. பக்தியில்லாதவர்நிலை. பிரதியுகங்களில் பூஜாவிதி.
6. கிருஷ்ண உத்தவ ஸம்வாதம்.
7. அவதூதர். 24 குரு என்றது.
8. மலைப்பாம்பு முதலிய 9 குரு வர்ணநம்.
9. குருவி முதலிய 7 குரு. அவதூத சரித பூர்த்தி.
10. ஸம்ஸாரபந்தம் கல்பிதம். உலகம் மித்யை.
11. பந்தம் முக்தி ஸாது இவர்களது லக்ஷணம்.
12. ஸத்ஸங்க மஹிமா. கர்மாவும் அதன் தியாகமும்.
13. பகவான் ஹம்ஸரூபியாகி பிரும்மாவுக்கு உபதேசம்.
14. பக்தி தியாநயோக வர்ணநம்.
15. பதினெட்டு ஸித்தியின் லக்ஷணம்.
16. பகவானது விபூதி.
17. வர்ண தர்ம. ஆச்ரம பிரும்மசாரி கிருஹஸ்த தர்மம்.
18. வாந பிரஸ்த தர்மம்.
19. பக்தி ஸாதநம் யம நியமாதிகள்.
20. க்ஞாநம் கர்மா பக்தியோகம்.
21. திரவ்ய தேசாதிகளின் குண தோஷம்.
22. தத்துவங்களின் கணக்கு. பிரகிருதி புருஷர்.
23. பொருமையுள்ளவர் சரிதம். பிக்ஷுகிதம்.
24. ஸாங்க்ய யோகம்.

25 ஸத்வரஜ ஸ்தமஸ் என்ற குணங்களும் விருத்திகளும்.
26 ஜலகீதம்.
27 அங்கங்களுடன் கூடிய கர்மா.
28 பரமார்த்த ஸ்வரூபம்.
29 பாகவத தர்மம். உத்தவர் பதரிகாசிரமம் செல்லல்.
30 யதுகுல நாசம்.
31 பகவான் வைகுண்டஞ்செல்லுதல்.

## பனிரண்டாவது ஸ்கந்தம்.

1 கலியுக ராஜவம்சம்.
2 கலிதர்மம். கல்கி அவதாரம். கிருதயுக தர்மம்.
3 பூமிகீதம். கலிதோஷம் நீங்க உபாயம். நாமமகிமை.
4 நான்குவகை பிரலயம்.
5 பரமார்த்த உபதேசத்தால் பரீக்ஷித்தின் பயம் நீங்குதல்.
6 பரீக்ஷித் உடலைவிடுதல். ஸர்பயாகம். வேதசாகை.
7 அதர்வ வேதம். புராண லக்ஷணம்.
8 மார்க்கண்டேய தபஸ். நரநாராயணரைத் துதித்தல்.
9 மார்க்கண்டேயர் மஹா பிரளயத்தை தர்சித்தல்.
10 மார்க்கண்டேயருக்கு சிவன் வரமளித்தல்.
11 பகவத் ஸ்வரூபத்தைப் பூர்ணமாக கூறல் ஸௌரிய வியூஹம்.
12 பாகவத விஷயச் சுருக்கம்.
13 பல புராணங்களில் கணக்கும் பாகவத மஹிமையும்.

---

**सर्ववेदान्तसारं हि श्री भागवतमिष्यते ।**
**तद्रसामृत तृप्तस्य नान्यत्र स्यात् रतिः क्वचित् ॥**

ஸர்வவேதாந்த ஸாரமானது பாகவதம். அந்த ரஸாமிருதத்தில் ஈடுபட்டவருக்கு வேறொன்றிலும் ருசி ஏற்படாது.

**ஸ்ரீ பாகவத அநுக்ரமணிகா முற்றிற்று.**

# ஸ்ரீமத் பாகவதம்.

**[12-ஸ்கந்தம் 18 ஆயிரம் சுலோகம். ஸ்ரீதரீயம் முதலிய வ்யாக்யாநத்துடனும் மூலமும் பலவிடங்களில் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆங்கில மொழிபெயர்ப்பும் தமிழ் மொழிபெயர்ப்பும் உண்டு.]**

## அவதாரிகை.

பகவானுடைய சரிதம் பாகவதம். பகவான் என்ருல் சிறந்த ஆறுகுண முடையவன் எனப் பொருள். ஆதலின் எல்லா தேவர்களுக்கும் இதை விசேஷணமாகக் கூறுவர். முனிவர்க்கும் அடமொழியாக உபயோகிக்கப் படுகிறது. என்ருலும் நாராயணனுக்கே இது உரியது என பழக்கத்தில் வந்துவிட்டது. அந்த நாராயணனுடைய சரிதம் பாகவதம். பக்தி விரக்திகளைத் தரும் க்ஞான நூலிது.

தேவி பாகவதம் என மற்ருெரு பாகவதம் உண்டு. அது தேவியைப்பற்றிய சரிதம். அதுதான் மஹாபுராணம். மற்றது உபபுராணம் என்றும், விஷ்ணு பாகவதமே மஹாபுராணம், தேவீபாகவதமே உபபுராணமென்றும் வாதம் உண்டு. இருசாராரும் தனக்கு ப்ரமாணமாக பலவிஷயங்களைக் கூறுவர். இரண்டையும் வேதவ்யாஸரே இயற்றியதால் இரண்டின் ஸாரத்தையும் விவரிப்போம். எதாயினுமென்ன?

வியாஸாவதாரம் வேத புராணுதி வித்யா ப்ரசாரத்திற்காக ஏற்பட்டது. வேதங்களை நான்காக வகுத்தும் பல புராணங்களை இயற்றியும்கூட வியாஸருக்கு மநதில் சாந்தி தோன்றவில்லை. ஏதோ குறையிருப்பதாக மநச்சாக்ஷி கூற, என்ன செய்வதென கவலைகொண்டிருந்தார்.

லோகோபகாரியான நாரதர் அவர் முன் தோன்றி க்ருஷ்ணவதார பிரதானமான புராணம் எழுது என்றார். பிறகே பாகவதம் இயற்றி புத்ரரான சுகருக்கு உபதேசித்தார்.

இது பகவத் சரித நூல் என்றாலும் ஒவ்வொரு ஸ்கந்தத்திலும் ஸ்தோத்திரம் என்ற வியாஜத்தைக்கொண்டு சுத்த வேதாந்த தத்துவத்தை வாரி வீசுகிறது. பக்தியையும் விரக்தியையும் அளிக்கும் நூல் இது. நமது பாபம் அகல வேதபாராயணம் பிராயச்சித்தமாகக் கூறப்பட்டது போல் பாகவதத்தை 7 நாள் ஸப்தாஹ க்ரமத்தில் பாராயணம் செய்தால் ஸகல பாபங்களும் அகலும். பாராயணத்திற்கே ஸப்தாஹம் சிறந்தது. பரீக்ஷித் 7 நாள் பாகவதம் கேட்டார் என்பதனால் எல்லோரும் 7 நாளில் கேட்கலாகாது. அவன் அல்பாயுஸ். 7 நாள் தான் வாழ்ந்தான். ஆதலால் ஸப்தாஹம் இரவும் பகலும் உண்ணாமல் உறங்காமல் கேட்டு உடலை விட்டான்.

எல்லோர் உள்ளத்தையும் கவருவதான கிருஷ்ண லீலையையும் சரித்தையும் தசம ஸ்கந்தத்தில் விரிவாக வர்ணித்தார். அதில் நவ ரசமும் ததும்பும். பிரேம பக்தியால் கோபிகைகள் பகவானைப் பரவசப்படுத்தினர். வைராக்யத்தால் வேதாந்த அறிவால் மைத்ரேயர் உத்தவர் அக்ரூரர் விதுரர் பீஷ்மர் முதலியவர் எந்த கதியை அடைந்தனரோ அதேகதி கோபிகளுக்கு சிருங்காரமெனும் பிரேமபக்தியால் உண்டானது. 10வது ஸ்கந்தம் 31வது அத்யாயம் கோபிகா கீதம் என்ற 19 சுலோகமும் பிரேம பக்தியின் ஸ்வரூபத்தை விளக்க வந்த கீதை எனலாம்.

10—87ல் உள்ள ச்ருதி கீதா என்ற 37 சுலோகங்களும் சுத்த வேதாந்தத்தைக் கூறும் உபநிஷத் எனலாம். 11—23ல் பிக்ஷுகீதா 11—26ல் இலா கீதா என்பவை மிக உயர்ந்த வேதாந்தங்களாம். 11ல் பகவான் உத்தவருக்குக் கூறும் உபதேசத்தில் ஸகல தத்துவங்களையும் காணலாம். ஆதலின் இதைப் புராணம் என்பதற்குப் பதிலாக பக்தி க்ரந்தம், வேதாந்த நூல் என அழைப்பது பொருத்தமாக இருக்கும். மற்ற புராணங்களைப்போல்

எளிய நடையிலில்லாமல் கம்பீரமான கடுமையான நடையிலிருப்பதால் இதை வியாஸர் எழுதவில்லை என்று சிலர் கூறுவர். அது ஸாஹஸமே யாகும்.

பாத்ம புராணம் உத்தர கண்டத்தில் ஆறு அத்யாயம் பாகவதம் மாஹாத்மியம் வர்ணிக்கப்படுகிறது. அதில் ஸப்தாஹக்ரமமும் இருக்கிறது. பக்தி என்ற பெண் யுவதியாக இருக்க அவளது பிள்ளைகளான வைராக்யமும் க்ஞானமும் தொண்டு கிழவர்களாயினர். மூர்ச்சையாகி களைத்து விழுந்திருந்தனர். அவர்களை எழுப்ப கீதையும் உபநிஷத்தும் முயற்சித்தன. சிறிது கண்ணைத்திறந்து பார்த்து மறுபடியும் விழுந்துவிட்டன. ஸ்ரீபாகவதம் ஒன்றே அவர்களை எழுப்பியதுடன் யுவர்களாகவும் செய்தது. கோகர்ணன் என்பவர், மிக மிக பாபியான தனது ஸஹோதரனைப் பாகவத ஸப்தாஹத்தால் நற்கதி அடையும்படி செய்தார் என்ற கதைகளால் பாகவதமே மிகச் சிறந்ததென காட்டுகிறார் புராணமுநி.

த்வாதச அக்ஷரீ மந்தரத்தில் உள்ள பனிரண்டு எழுத்துகளில் ஒவ்வொரு எழுத்தின் வ்யாக்யானமாக ஒரு ஸ்கந்தம் என்ற முறையில் பனிரண்டு ஸ்கந்தங்கள் எழுதப்பட்டன என்பர்.

## ஸ்ரீ பாகவதம் கேட்டல்.

நைமிசாரண்யத்தில் ஆயிரமாண்டு செய்யத்தக்க ஒரு யாகம் நடந்தது. சௌநகாதி முநிவர் ஓய்வுகாலத்தில் ஸ்ரீபாகவதம் சொல்லும்படி ஸூதரை வேண்ட அவர் கூறினர்: பக்தியே முக்தி ஸாதநம். இருபத்தோரு அவதாரம் செய்த பகவானது சரிதத்தைப் படிப்பதும் கேட்பதும் ஒருவித பக்தியாகும். ஸநத்குமார, வராஹ, நாரத, நரநாராயண, கபில, தத்தாத்ரேய, யக்ஞ, ரிஷப, ப்ருது, மத்ஸ்ய, கூர்ம, தந்வந்தரி, மோஹிநீ, நரஸிம்ஹ, வாமந, பரசுராம, வியாஸ, தசரதராம, பலராம, கிருஷ்ண புத்த என்பவை பகவதவதாரங்களாம்.

வியாஸர் தனது புத்ரனான சுகாசார்யனைத் தேடிச் செல்லும்போது ஒரு ஸரஸ்ஸில் ஜலக்ரீடை செய்த அப்ஸரஸ்ஸுகள் சுகரைக்கண்டு அஞ்ஜலி செய்தனர்.

அவர் பின்னால் வந்த வியாஸரைப் பார்த்து வெட்கப்பட்டு வஸ்திரமணிந்தனர்.

சுகர் க்ஞானி. உலகெல்லாம் ப்ரும்மமயமாகக் காண்பவர். வியாஸரோ நான் எனது புத்ரன் என்ற அபிமானம் கொண்டவர். ஒரு காரியத்தைச் செய்யவந்த அதிகாரி புருஷன் வியாஸர் என்பவர். வேதத்தை வகுத்து பதினெண்புராணங்களையும் பிரும்மஸூத்ரத்தையும் மஹாபாரதத்தையும் இயற்றினர்; என்றாலும் அவர் மநதிற்கு சாந்தி ஏற்படவில்லை. நாரதர் வந்து கிருஷ்ணனுடைய பெருமையால்தான் தான் நற்கதி பெற்றதாகவும் அவரது பெருமையைக் கூறினல் மநச்சாந்தி ஏற்படும் என்றார். அங்ஙனமே பாகவதத்தை இயற்றி புத்ரனை சுகனுக்கு அதை உபதேசித்தார்.

சுகர் பரீக்ஷித்துக்கு ஏழு நாளில் பாகவதத்தைக் கூறினர். பரீக்ஷித் எப்படி உண்டானன் என்பதை விளக்கும் வகையில், இளம் பாண்டவரை இரவில் தூங்கும்பொழுது அச்வத்தாமா கொன்றான். அச்வத்தாமாவின் தலையைக் கொண்டு தருவதாக அர்ஜுநன் பிரதிக்ஞை செய்து அவனுடன் போர் புரிந்தான். சத்ருவைக் கொல்லாமல் திரும்பாததான பிரும்மாஸ்த்ரத்தை இருவரும் பிரயோகித்தனர். அதன் விளைவாக உலகிற்குப் பல துன்பம் தோன்றுமென பகவான் கூறி இருவரையும் அதைத் திருப்பி அழைக்கும்படி வர்புறுத்தினர். துரோணர், அஸ்திரம் விடவும் விட்டதைத் திரும்பிப் பெறவும் அர்ஜுநனுக்குத்தான் உபதேசித்தார். அச்வத்தாமாவுக்கு அது தெரியாது. பாண்டவர் பூண்டே இல்லாமல் அழிய அவன் அனுப்பிய பிரும்மாஸ்த்ரத்திலிருந்து பாண்டவரைக் காத்தார் பகவான். ஆனலது உத்திரையின் கருவிலிருக்கும் குழந்தை மீது செல்ல அங்கிருந்து அவனையும் காத்தார். வம்சம் க்ஷீணமானபின் உண்டானதால் பரீக்ஷித் என அவன் பெயர் பெற்றான். பாண்டவர் ஸ்வர்க்கம் சென்றது, துவாரகை கடலில் முழுகியது, பகவான் வைகுண்டம் சென்றது முதலிய கதைகள் பாரதம்போல் இங்கும் கூறப்படுகின்றன.

பரீக்ஷித் அரசன் கோரூபம் உள்ள தர்மதேவதையைக் காலால் உதைப்பதுகண்டு கலியைச் சிக்ஷித்து

அவன் வேண்டியதால் சூதாட்டம் மதுபாநம் ஸ்திரீபோகம் இவைகளை கலிக்கு இடமாக அளித்தார். தனக்கு தக்ஷகனால் மரணம் என்ற ரிஷி சாபத்தைக் கேட்டு கங்காதீரத்தில் பிராயோபவேசம் செய்து ஸ்ரீ சுகாசார்யரிடமிருந்து பாகவதத்தைக் கேட்டார். முக்திக்கு முக்ய ஸாதநம் பகவத்தியாநம், வைராக்யம், இவைகளைப்பெற பாகவதம் கேட்பது. மற்ற தேவர் அளிக்கும் பயன் ஸ்வல்பமானது. விஷ்ணு அளிப்பது அநந்தமானது. அழிவற்றது. பகவான் தானே உலகைப்படைத்து உலகவடிவமாக இருக்கிறார். உலகைக்காக்க தசாவதாரம் செய்கிறார். அவர் ஸ்வரூபத்தை அறிந்து அவரை ஆராதிப்பவரே பாகவதர். வராஹாவதாரம் செய்து விஷ்ணு ஹிரண்யனைக்கொன்று பூமியைப் பிரதிஷ்டை செய்தார். கச்யபர் மூலமாக ஸுரஅஸுர நாகாதி ஸ்ருஷ்டி பெறுகிற்று.

கர்தமர் தவம்செய்து கபிலர் என்ற பகவானது அம்சமான புத்ரரைப் பெற்றார். அவர் தனது தாயான தேஹூதிக்கு ஸாங்கியம் என்ற வேதாந்தத்தை உபதேசித்தார். கபில தேவஹூதி ஸம்வாதமென்ற இடம் மிகச்சிறந்தது. ஒன்பது அத்யாயங்களில் பிரக்ருதி புருஷன் கர்ம பக்தி க்ஞாநம் வைராக்யம் ஸம்ஸாரம் கர்ப்பவாஸ கஷ்டம் முதலியன நன்கு வர்ணிக்கப்படுகின்றன. அத்ரிமஹர்ஷி பகவானை நாடி தவம் செய்யும்போது மும்மூர்த்திகளும் பிரத்யக்ஷமாயினர். உங்களில் யார் உயர்ந்தவரென, மூவரும் ஒருவரே என்றார்கள். விஷ்ணுவே பரமன் என்று கூற வந்த பாகவதம் மும்மூர்த்திகளும் ஒன்றே என்று கூறும் அழகை எல்லா புராணங்களையும் ஆழ்ந்து படித்தாலன்றோ தெரியும்? நீங்கள் எனக்குப் புத்ரனாகவேண்டும் என்று அத்ரி வேண்ட தத்தாத்ரேயராக அவதரித்தார்கள்.

தக்ஷயக்ஞம் எல்லா புராணங்களிலும் காணப்பட்டாலும் தேவி தக்ஷனுக்கு சிவ மஹிமையைக் கூறுவது இங்கு விசேஷம்.

## துருவசரிதம்.

உத்தாநபாத ராஜனுக்கு ஸுநீதி ஸுருசி என்ற இரு மனைவிகள். ஸுநீதியின் ஸுதன் துருவன். ஸுருசியின்

மகன் உத்தமன். அரசன் இளையவளிடமும் அவள் புத்ரனிடமுமே ஆசைக் கொண்டிருந்தார். ஒரு நாள் ஸுருசி எதிரில் உத்தமனை மடிமீதுவைத்து லாலனை செய்தார். துருவனும் தந்தை மடிமீதேர ஓடினன். கரகர வென துருவனது கரத்தைப் பிடித்திழுத்த ஸுருசி "மன்னன் மடிமீதேர வேண்டினல், மஹிஷியான என் கருவில் பிறந்திருக்கவேண்டு" மென்றுள். அழுதவண்ணம் அன்னையிடம் ஓடினன். அச்யுதனை ஆராதித்தால் அதைவிட சிறந்த பாக்யம் பெறலாமென்றுளவள். மதுவனம் சென்றான். மாதவனைநாடி தவம்புரிந்தான். நாரதர் வந்து தவத்தை நிறுத்து, அது கஷ்டம் என்றூர். சிறுவன் ஒரே பிடிவாதமாக இருந்தான். துவாதசாக்ஷரியை உபதேசித்தார். ஆறுமாதத்தில் அறியா பாலகனிடம் அன்புகொண்டு அவனுக்கு தர்சநம் தந்தார் அநந்தன். துதிக்க ஆசைக்கொண்டான். படிப்பில்லை. சொல் தோன்றவில்லை. சங்கத்திஞல் அவன் கன்னத்தைத் தடவினர். கடல்மடை திறந்தாபோல் துதித்தான். அழியாத துருவ மண்டல பதவியையும் தந்தார்.

துருவ வம்சத்தில் அங்கன் வேனன் பிருது பிராசிந பர்ஹிஸ் புரஞ்ஜநன் முதலியவர் சரிதத்தைக்கூறி வேதாந்த பரமாக புரஞ்ஜந கதையின் கருத்தை வர்ணித்தார். பிரிய விரதன் ஏழுத்வீபங்களில் ஏழு புத்ரர்களை ப்ரதிஷ்டை செய்தான் த்வீபங்களும் ஆங்குள்ள வர்ஷங்களும் வர்ணிக்கப்படுகின்றன. ஜம்பூத்வீபத்தைச் சுற்றி உப்புக்கடல், பிலக்ஷத்வீபத்தைச்சுற்றி கரும்புசார் கடல், சாகத்வீபத்தில் ஸுரைக்கடல், சால்மலித்வீபத்தில் நெய் கடல், குசத்வீபத்தில் தயிர் கடல், கிரௌஞ்சத்வீபத்தில் பாற்கடல், புஷ்கரத்வீபத்தில் சுத்த ஜலக்கடல் சூழ்ந்திருக்கின்றன.

ஸூர்யன் பனிரண்டு ராசிகளிலும் ஸஞ்சரிப்பது, ராஹுமண்டலம், சிம்சுமார மண்டலம், க்ரூரமான பாபிகளுக்கு ஏற்ற நரகம் இவைகளை வர்ணித்து எந்த ப்ராயச்சித்தத்தால் பாபமகலும் நரகயாதனை இராதெென கேள்விக்கு பகவன் நாம மஹிமையை விளக்கும் அஜாமிள உபாக்யாநம் கூறப்படுகிறது.

## அஜாமிள சரிதம்.

கான்யகுப்ஜத்தில் அஜாமிளன் என்ற பிராம்மணன் ஸதாசாரங்களைவிட்டு தாஸியை மணந்து மது மாம்ஸாதிகளைப் புஜித்து வந்தான். கடைசி புத்ரனுக்கு நாராயணன் என்று பெயர் வைத்திருந்தான் இவன் இறக்கும் தருவாயில் ஆசையுடன் நாராயணா என்றுகூவி அழைத்து உயிரை விட்டான். பாபியான இவனை யமதூதர் யமலோகத்திற்கெடுத்துச் செல்ல, விஷ்ணு கிங்கரர் வழி மறித்து அஜாமிளனை வைகுண்டத்திற்கு அழைத்துச் சென்றார்கள். தர்மராஜன் தனது தூதர்களுக்கு விஷ்ணு நாம மஹிமையை விரிவாகக்கூறினார்.

தக்ஷன், ஹர்யச்வ சபலாச்வ என்ற இரண்டாயிரம் புத்ரர்களை மநதால்படைத்து, தவத்தால் ஸ்ருஷ்டி சக்தி பெற்று தனக்குதவி புரியும்படி கூறினார். நாரதர் அவர்களை வைராக்யமுள்ளவர்களாக்கி விட்டார். தக்ஷன் அவரை நிலையின்றி நாடெல்லாம் சுத்தும்படி சபித்து மிதுந தர்மத்தால் அறுபதுகன்யகைளைப்பெற்று கச்யபர் சந்திரன் ஆங்கிரஸ் சிவன் முதலியவர்களுக்கு அளித்தான். அந்த மூலமாக சிருஷ்டி வளர்ந்தது.

சக்ரன் குரு வரும்பொழுது எழுந்து வரவேற்காமலிருந்தான். அதனால் குரு இந்திரன் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தார். இதே தக்க சமயமென அஸுரர் போருக்குவர இந்திரன் பிரும்மா கூறியபடி விச்வரூபனைப் புரோஹிதனுக் கொண்டார். அவர் நாராயண கவசமெனும் மந்திரத்தை உபதேசித்து பயத்தை அகற்றினார்.

## தேவாபசாரம்.

தேவாபசாரங்கள் இவை எனக்கூறி அவைகளை விட்டு தர்மம் செய்யும்படி உபதேசித்தார். கோவிலுக்கு வாஹநத்திலேரியோ பாதுகையுடனோ, அசுத்தனுகவோ, தீட்டு காலத்திலோ, செல்வது, உத்ஸவத்தை தர்சிக்காமை, நமஸ்காரம் செய்யாமை, ஒரு கையால் வணங்குவது பிரதக்ஷிணம் செய்யாமை கால்மேல் காலைவைத்து உட்காருவது, உயர உட்காருவது, புஜிப்பது, உரக்க பேசுவது சண்டை, அழுவது, சிறிப்பது, ஆசிர்வதிப்பது

சபிப்பது, மேலே போர்த்துக்கொள்வது, பிறரை நிந்திப்பது அமங்களமாக பேசுவது, தும்புவது, அபானவாயு விடுவது, வெறுங்கையுடன் செல்வது, ஆத்ம ஸ்துதி ஆசார்யரைத் துதிக்காமலிருப்பது முதலியன தேவாபசாரங்கள்.

அஸுரர் கோரியபடி அவர்களது ஸஹோதரீ புத்ரனை விச்வரூபன் கபடமாக, அஸுரர்க்கும் ஹிதமாக ஹோமம் செய்தார். இதையறிந்த இந்த்ரன் அவரைக் கோபத்தினால் கொன்றான். பிரும்மஹத்தி அவனைச் சூழ்ந்தது. அச்வமேதத்தால் சுத்தனாகி அதன் மிகுதியைப் பூமி ஸ்திரீ ஜலம் மரம் முதலியவைகளிடமளித்ததும் விருத்தாஸுரயுத்தமும் அச்வமேதத்தால் அந்த ஹத்தியை அகற்றியதும், தேவீபாகவதத்தில் உள்ளபடியே இங்கும் உளது.

## விருத்ரனது முற்பிறவி.

சூரஸேந தேசத்தில் சித்ரகேது எனும் ஒரு அரசனிருந்தான். பல மனைவிகளிருந்தும் அவனுக்குப் புத்ர பாக்யமில்லை. ஆங்கிரஸருடைய அருளால் கிருதத்யுதி என்றமனைவியுடன் த்வஷ்டா எனும் தேவரைப் பூஜித்து ஒரு புத்ரனைப் பெற்றார். ஆனால் பொறாமை கொண்ட மற்ற மனைவிகள் விஷமளித்து அந்த குழந்தையைக்கொன்றார்கள். அரசனும் மனைவியும், புத்ர சோகத்தால் கதறினார்கள். தற்செயலாக வந்த ஆங்கீரஸர், அவர்களுக்கு வைராக்யத்தை உபதேசித்தார். மநம் சாந்தி அடையவில்லை. இறந்த குழந்தையை எழுப்பி அதைக்கொண்டும் பக்தி வைராக்ய க்ஞாநமிவைகளை உபதேசித்து ஸ்வதர்மத்தை அநுஷ்டிக்கும்படி செய்தார். சித்ரகேது விஷ்ணு அளித்த விமாநத்திலேறி ஸகல உலகையும் சுற்றி வந்தான். ஒரு ஸமயம் கைலாஸத்தில் சிவன் உமையைத் தன்மடியில் வைத்து ஆலிங்கநம் செய்திருப்பதைக் கண்டு பரிஹாஸம் செய்தான். தேவீ அவனை அஸுரனாகும்படி சபித்தாள்.

அஸுரருக்கு தாயான திதி இந்திரனை ஜயிக்கும்படியான புத்ரனைப்பெற நியமத்துடன் ஓராண்டு பும்ஸ்வந விரதத்தைச் செய்தாள். இதை அறிந்த அதிதி தன்

புத்ரனை அழைத்து, திதி ஆசாரத்தைக் கைவிட்டபோது அவளது கருவை அழி என்றான். மாலையில் மேற்கு முகமாக வாசற்படியில் தலைவைத்துக்கொண்டு எச்சக் கையுடன் தலைமயிர் காலில்பட திதி உறங்கினள். அதே ஸமயமென இந்திரன் கர்ப்பத்தை நாற்பத்து ஒன்பது துண்டாக வெட்டினர். திதி கோரியபடி அவர்களை மருத்துகள் என்ற தேவகோஷ்டியாக சேர்த்துக்கொண்டான்.

எல்லோருக்கும் ஸமமாய் உள்ள பகவான் அஸுரர்களை ஏன் கொல்கிறார்? சிசுபாலனைக் கொன்று அவனுக்கு ஏன் முக்தி தந்தார்? என்ற கேள்விக்கு பதில் கூறினர் சுகர். தர்மத்தையும் பக்தர்களையும் ரக்ஷிப்பது பகவானது கடமை, வைகுண்டத்தில் துவார பாலகர்களாக இருந்த ஜயவிஜயர் என்பவர் சிறந்த க்ஞானிகளான ஸநகாதிகளை உள்ளே விடாமல் தடுத்தார்கள். அவர்களது சாபத்தினுல் ஹிரண்யாக்ஷ ஹிரண்ய கசிபு, ராவண கும்பகர்ணர், சிசுபால தந்தவக்திரர் என்ற மூன்று ராக்ஷஸ பிறவிபெற்றனர். முடிவில் அவர்களைக்கொன்று தனது திருவடியில் சேர்த்துக் கொண்டார்.

விஷ்ணுவுக்கு அநுகூலமானவர் என்ற காரணத்தால் தேவர் ப்ராம்மணர் கற்ப்ரசிகள் கோக்கள் இவர்களை ஹிம்ஸிக்கும்படி உத்தரவிட்டான் ஹிரண்யன். ஆதலால் அத்தகைய அஸுரரைக் கொல்வது அவசியமாயிற்று. ஹிரண்யாக்ஷனை வராஹாவதாரம் செய்து கொன்று பூமியை ரக்ஷித்தார். அவனது தாயும் மனைவி மக்களும் கதறும்போது ஹிரண்ய கசிபு அவர்களை ஸமாதானப் படுத்த வேதாந்த உபதேசம் செய்தான். ஜீவனுக்கு பிறப் பிறப்பென்பது ஸஹஜ தர்மம். கர்மவசத்தால் பந்துவாகத் தோன்றுகிறோம். கார்யத்திற்காக சந்தையில் கூடி பிரிவதுபோல் குடும்பத்தில் சேர்ந்து பிரிகிறோம்.

உசிநரவம்சத்தில் ஸுயக்ஞன் எனும் அரசன் சத்ருக்களால் கொல்லப்பட்டான். அவனைச் சூழ்ந்து மனைவிகளும் உறவினரும் கதறி யமனை நிந்திக்க, யமன் குழந்தை உருவுடன்வந்து தத்வோபதேசம் செய்தான். என்று

ஸமாதாநம் செய்து தனது சத்ருவைச் சிக்ஷிக்க மந்திர மலையில் கடுந்தவம் புரிந்தான். பிரும்மா எதிரில்வர, பகலிலும் இரவிலும் நரராலும் ஸுரராலும் ஆயுதத்தாலும் கரத்தாலும் மரணம் கூடாதென வரம் பெற்ருன்.

## பிரஹ்லாத சரிதம்.

சக்ரனை ஜயித்து சுவர்க்கத்தை ஆக்ரமித்தான். தேவர்களையும் பிராம்மணர்களையும் ஹிம்ஸித்தான். தேவர்கள் பகவானைச் சரணமடைந்தனர். எனது பக்தனுக்குத் தீங்கிழைக்கும்போது அவனைக் கொல்வேனென்ருர். ஹிரண்யனது நான்கு புதல்வர்களில் பிரஹ்லாதனே மூத்தவன். அவன் பிறவியிலேயே உயர்ந்த தேவகுணமும் பக்தியும் வாய்ந்தவன். விஷ்ணு பக்தியிலீடுபட்டு பித்தனைப்போல் சிறிப்பான், அழுவான், ஆடுவான் பாடுவான், துதிப்பான்.

ஹிரண்யன் சண்டாமர்கர் எனும் சுக்ர புத்ரரிடம் வித்யை கற்க பிரஹ்லாதனை அனுப்பினன். ஒருநாள் புத்ரனை மடிமீதுவைத்து நீ கற்றதில் ஒரு சிறந்த விஷயத்தைக் கூறென்ருன் ஹிரண்யன். துக்கக்கடலில் நம்மை அமிழ்த்தும் ஸம்ஸாரத்தைவிட்டு காடுசென்று விஷ்ணுவை ஆராதிப்பதே சிறந்ததென்ருன் பிரஹ்லாதன். அஸுரகுல சத்ருவான விஷ்ணுவினிடம் அன்புகொள்ளும்படி பகைவர் யாரோ இவனை கெடுத்தனர் என கோபங்கொண்டு தர்ம அர்த்த காமங்களைக் கற்பிக்கும்படி மறுபடியும் குருவினிடம் அனுப்பினன். சிலநாள் சென்றபின் முன்போல் பிரஹ்லாதனை மடிமீது அமர்த்தி நீ கற்றதில் உத்தமமான ஒன்றைக் கூறென்ருன். ஹிரண்யன்.

விஷ்ணுவின் சரிதம் கேட்பது பாடுவது ஸ்மரிப்பது அவன் திருவடியை ஸேவிப்பது அர்சிப்பது வணங்குவது தொண்டு செய்வது நண்பனைப்போல் கருதுவது நம்மையே அவனிடம் அர்ப்பணம் செய்வது, இங்ஙனம் ஒன்பது வகையாக பக்தி செலுத்துவதே உத்தமம் என்ருனவன். கடிந்து, யார் இப்படி புத்ரனைக் கெடுத்ததென்ருன் தந்தை. அவனுக்கு தானே தோன்றியவை இவை என்ருர் சண்டாமர்கர். ஐந்து வயதிற்குள்ளேயே உடன் பிறந்த நோய்போல் இவனுக்கு என் சத்ருவிடம் அன்பு

உண்டானது. அதனால் அவனைக்கொல்ல வேண்டும் என நிச்சயித்து சூலத்திலேற்றினன். அவன் இறக்கவில்லை. யானை ஸர்ப்பம் ஆபிசாரம் மாயை விஷம் இவைகளாலும் அவன் இறக்கவில்லை.

சுக்ரர் வரும் வரை இவனை வருணபாசத்தால் கட்டி தர்மார்த்த காமங்களை போதிக்கும்படி செய்தான் பிரஹ்லாதன் அஸுர குழந்தைகள் அனைவர்க்கும் விஷ்ணு பக்தியையும் க்ஞாநத்தையும் புகட்டினன். இந்த க்ஞாநம் எப்படி உண்டானதென மாணவர் கேட்க தனது தந்தை தவம் செய்யும்போது தான் தாயின் வயிற்றிலிருக்க இந்திரன் என் தாயைச் சிறைப்படுத்தினன். நாரதர் தர்மத்தைக்கூறி தாயை விடுவித்து அவளுக்கு தர்மத்தைப் புகட்டினர். நானதைக் கருவிலேயே இருந்து கேட்டேன் என்றார் பிரஹ்லாதன். இதை அறிந்த ஹிரண்யன் கன கோபத்துடன் நீ கூறும் நாராயணன் எங்கே இருக்கிறான்? என்று கேட்க உன்னுள்ளும் என்னுள்ளும் மண்ணிலும் விண்ணிலும் தூணிலும் துரும்பிலும் மிருக்கிறான் என்றானவன். கோபங்கொண்டு என்னைவிட வேறு ஈசன் கிடையாது. இருந்தால் இந்த தூணில் ஏன் தெரியவில்லை என தூணை உதைத்தான்.

தூண் இரண்டாக பிளந்தது. நரனும் மிருகமுகமும் கலந்த நரஸிம்மன் தோன்றினன். பகலுமிரவுமில்லா மாலையில், உள்ளும் வெளியிலுமில்லா வாயற்படியில் கீழும் மேலுமில்லா தன் மடியில் வைத்து கையுமில்லாத ஆயுதமுமில்லாத நகத்தால் ஹிரண்யனது உடலைக் கிழித்து ரத்தத்தைப் பருகினர் பகவான். அவரது உக்ர ரூபத்தையும் அட்டகாஸத்தையும் கண்டு தேவரும் லக்ஷ்மியும் அருகில்வர அஞ்சினர். பிரஹ்லாதன் அருகே சென்று துதிக்க பகவான் சாந்தனாகி யாது வரம்வேண்டுமென, என் தந்தைக்கு நற்கதி வேண்டுமென்றான். உத்தம புத்ரனை உன்னால் தானே நற்கதி உண்டாகும். நீ விரும்பியபடி ஆழ்ந்த பக்தியைத் தந்தேனென கூறி மறைந்தார்.

வர்ண தர்மம், பதிக்குப் பணிவிடை செய்யும் பதிவ்ரதா தர்மம், ஆச்ரம தர்மமிவைகளைக்கூறி மலைப்பாம்பு

போல் படுத்து வாயைத்திறந்து தற்செயலாக வாயில் விழும் உணவைப் புஜிக்கும் ஆஜகர முனிவரைப் பிரஹ்லாதன் தர்சித்ததைக்கூறி ஏழாவது ஸ்கந்தத்தை முடிக்கிறார் முனிபுங்கவர்.

## கஜேந்த்ரமோக்ஷம்.

மநுக்கள் பதினால்வர். ஸ்வாயம்புவ ஸ்வாரோசிஷ உத்தம தாமஸ என்பவர்களில் தாமஸமநு காலத்தில் பகவான் கஜேந்திரனுக்கு முக்தி தந்தார். பாற்கடலால் சூழப்பட்ட திரிகூடமலையிலே ருதுமத் என்ற உத்யானம் வருணனுக்குச் சொந்தமானது. ஆங்கு ஓர் மத்தகஜம் பெண்யானைகளுடன் கூடி விளையாடி ஒரு த்டாகத்தில் இறங்கி ஜலக்ரீடை செய்தது. அந்த ஆண் யானையின் காலை ஒரு முதலைப் பிடித்திழுக்க யானை அதைக் கரையில் இழுக்க இருவருக்கும் ஆயிரமாண்டு போர் நடந்தது. அருகிலுள்ள பெண் யானைகளின் பலமும் முயற்சியும் வீணாயிற்று. வேதவேதாந்த பொருளாய் உலகத்திற்குக் காரணமாயுள்ள தெய்வம் என்னைக் காக்கட்டும் என்று யானை துதித்தது. அதில் சிவன் விஷ்ணு பிரும்மா என்ற எந்த பெயரையும் கூறாததால் ஒருவரும் அதைக் காக்க முன் வரவில்லை. யானை பலம் குறைந்து உடல்மெலிந்து முதலை நீரிலதை இழுக்க ஒரு புஷ்பத்தைக் கரத்தில் எடுத்து ஆதிமூலமே என கதறிற்று.

வைகுண்டநாதன் கருடன்மீதேறி அதிவேகமாக வந்து சக்ரத்தினால் முதலையை இருதுண்டுகளாக்கினார். அது ஹூஹூ என்ற கந்தர்வன். ஜலத்தில் நின்று அநுஷ்டானம் செய்யும்போது விளையாட்டாக தேவரின் காலைப்பிடித்திழுக்க அவர் முதலையாகும்படி சபித்தார். அவன் தன் ஸ்வரூபத்தைப் பெற்று பகவானை வணங்கி தன்னிடஞ் சென்றான். யானையோ முற்பிறவியில் இந்திரத்யும்நன் என்ற பாண்டிய அரசன். அநுஷ்டானம் செய்யும்போது அவனிடம் வந்த அகஸ்தியரை வரவேற்காமல் அதிதி பூஜை செய்யாமல் இருந்தான். அகஸ்தியர் அவனை யானையாகும்படி சபித்தார். கஜேந்த்ரனை தனது ஸபையில் ஒருவனாகச் சேர்த்துக்கொண்டார் பகவான். இக்கதையைக் கேட்டாலும் படித்தாலும் நினைத்தாலும் துஸ்வப்நம் தோன்றாது.

ஐந்தாவது ரைவதமநு. ஆருவது சாக்ஷுஷமநு எனப்படுவார்.

## அமிருதங்கடைதல்.

அஸுரரால் கொல்லப்பட்ட தேவர் மரணமடைந்து வந்தனர். அவர்களுக்கு அமிருதமூட்டி அமரராக்க எண்ணிஞர் பகவான். ஒருநாள் தூர்வாஸ முநிவர் அளித்த தேவ ப்ரஸாதத்தைச் சக்ரன் அலக்ஷ்யமாக வாங்கி யாணை மீது வைத்ததால் ஸ்வர்க்க லக்ஷ்மியை இழப்பாய் என சபித்தார். துன்பமடைந்த தேவர் பிரும்மாவுடன் வைகுண்டம் சென்று பரமனைத்துதித்தார்கள். பகவான் பிரத்யக்ஷனுகி, அஸுரருடன் ஸ்மாதாநம் செய்து பாற்கடலை மந்திர மலையை மத்தாகக்கொண்டு வாஸுகியைக் கயிருக வைத்துக் கடையுங்கள் என்று கூறிஞர். அங்ஙனமே மந்திரத்தைக் கடலில் போட அது உள்ளே அமிழ்ந்தது. பகவான் கூர்ம ரூபமெடுத்து முதுகாலதைத்தாங்கிஞர். தலைபுரமும் அது ஆடாமல் பிடித்தார். தேவருடன் சேர்ந்து தானும் கடைந்தார். தேவருக்குள் புகுந்து பலத்தையும் தந்தார். கடலைக்கடைந்தனர் தேவரும் அஸுரரும்.

வாஸுகி கக்கிய விஷத்தால் ஹாலாஹலம் என்ற கொடிய விஷம் தோன்ற, அதற்கஞ்சிய தேவர் வேண்டுகோளுக்கிணங்கி பரமசிவனதை உண்டு கழுத்திலேயே வைத்து காளகண்டன் என காரண பெயர் பெற்ருர். கடலிலுதித்த காமதேனு, உச்சை சிரவஸ் எனும் குதிரை ஐராவதம், அப்ஸரஸ் ஆகிய இவைகளை இந்திரனுக்களித்தனர். கௌஸ்துபம் தோன்ற அதை திருமாலுக்களித்தனர். அதன் பின் ஸர்வ லக்ஷணமும் பொருந்திய ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மீ தோன்றினுள். தேவி ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு தோஷமிருப்பதால் எல்லோரையும் விட்டு குற்றமற்ற நாராயணனுக்கு மாலையிட்டாள். லக்ஷ்மீகடாக்ஷம் தேவரிடம் விழ அவர்கள் க்ஷேமமடைந்தனர். பிறகு வாருணீ என்ற ஒருவகை ரஸம் தோன்ற அதை அஸுரர் அபஹரித்தனர்.

பிறகு பகவானுடைய அம்சாம்சமான தன்வந்திரி அமிருத கலசம் கொண்டுவர அஸுரர் அதையும் அபஹரித்தனர். பகவான் மோஹிநீ ரூபமெடுக்க அதைப்

பார்த்து அஸுரர் மோஹித்து அவளிடம் அமிருதத்தை அளித்து எல்லோர்க்கும் ஸமமாயளிக்கும்படி கூறினர். தேவர் ஒரு பக்கம் அஸுரர் ஒரு பக்கமாக அமர, மோஹினி அமரர்க்கே அமிருதத்தை அளித்து வந்தாள்.

ஏமாந்த தைத்யர் தேவருடன் கடும்போர் செய்த னர். பலன்பாகன் ஜம்பன் முதலிய அரக்கரைக் கொன் ருன் சக்ரன். நாரதர் ஸமாதானம் செய்து போரை நிறுத்தினர். ஸிம்ஹிகா புத்ரன் ஸுரவேடந்தாங்கி அமிருதமுண்டான். அதைச் சந்திர ஸூர்யர் பகவானுக் குறைக்க அகப்பையாலேயே அவனை வெட்டினர். அமிருதமுண்டதால் அவன் இறக்காமல் ராஹு கேது என இரண்டு வடிவமெடுத்தான். மோஹினியின் உரு வைக்கண்டு பரமசிவன் பரவசமாகி சாஸ்தா எனும் தேவரை உண்டுபண்ணினர்.

## வாமநாவதாரம்.

வைவஸ்வத ஸாவர்ணி தக்ஷஸாவர்ணி பிரும்மஸா வர்ணி தர்மஸாவர்ணி ருத்ரஸாவர்ணி தேவஸாவர்ணி முதலிய மநுக்கள் அவர்கள் ஸந்ததியும் கூறப்பட்டது. மஹாபலி விச்வஜித் எனும் யாகத்தைச் செய்து ஸ்வர்க் கத்தைப் பிடுங்கிக்கொண்டான். தேவமாதா துக்க மடைந்து பயோவிரதம் செய்து பகவானைப் புத்ரனைப் பெற்ருள். வாமநராக வந்த பகவான் பலியின் யாகத் திற்கு வந்து மூன்றடி மண்கேட்க சுக்ரர் "அவர் மாயா மாதவன். ஏமாருதே" என்று கூறியும் பலி பூதாநம் செய்தான். விச்வரூபமெடுத்து பூலோகத்தை ஒரடியால் அளந்து ஸ்வர்க்கத்தை இரண்டாவதடியால் ஆக்ரமித்து மூன்ருவதடிக்கு இடமில்லாததால் கருடன் வருண பாசத் தால் பலியைக் கட்டினர். பிரஹ்லாதனுமங்கு வந்து பலியுடன் துதித்தார். இருவரையும் ஸுதல லோக மனுப்பி பகவான் பலிக்கு துவார பாலகனுக இருந்தார். இந்திரன் பகவானது அருளால் ஸ்வர்க்கத்தைப்பெற்ருன்.

ஸத்ய விரதன் எனும் திராவிட தேச ராஜன் ஸந்த்யாநுஷ்டாநம் செய்யும்போது கையிலுள்ள அர்க்ய ஜலத்தில் ஒரு சிறிய மீனைக்கண்டான். அது தன்னை

விஸ்தாரமான இடத்தில் விடும்படிக் கூற, பெரிய பாத்ரம் கிணறு குளம் ஸமுத்ரம் முதலிய இடங்களில்விட அது மிக மிகப் பெரியதாகி கடலில் சென்று அரசனுக்கும் முனிவர்க்கும் பல தத்வங்களைக்கூறிற்று. இவ்வரசனை ஒரு மநுவாக ஆகும்படி அருள் புரிந்தது. ஸோமகனைக் கொன்று வேதத்தை மீட்டார் மத்ஸ்யமூர்த்தி.

ஒன்பதாவது ஸ்கந்தத்தில் ஸூர்ய சந்த்ர வம்சாதிகளை வர்ணித்தார். ஸூர்ய புத்ரரான சிராத்த தேவர் புத்ரனைப்பெற ஒரு இஷ்டி செய்தார். அவர் மனைவி ரஹஸ்யமாக ஹோதாவிடம் சென்று பெண் பிறக்கும்படி மந்திரங்களைக் கூறச்சொன்னாள். இளை என்ற பெண் பிறந்தது. அரசன் விரும்பியபடி வஸிஷ்டர் பகவானுடைய அருளால் அதை ஸுத்யும்நன் என்ற புத்ரனாகச் செய்தார். அவன் வளர்ந்து அரசனாகி வேட்டையாட வனம் சென்றான். அங்கே தானும் தனது பரிவாரங்களும் பெண்மயமானதைக் கண்டு ஆச்சர்யமடைந்தான். அது பரமசிவனும் பார்வதியும் ஏகாந்தமாக இருந்த வனம். இருவரும் விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது ஸநகாதி முனிவர் சிவதரிசநத்திற்காக வந்தனர். அதைக்கண்ட தேவி வெட்கமடைந்து ஓடி ஒளிந்தாள். இனி இங்கு வரும் புருஷர் பெண்ணாவார் என சிவன் சபித்தார். அதை அறியாத ஸுத்யும்நன் அங்கு சென்று பெண்ணானான். குருவான வஸிஷ்டர் பகவானைவேண்டி ஒருமாதம் பெண்ணாகவும் மறுமாதம் ஆணாகவும் இருக்கும்படி செய்தார். பெண்ணாக இருக்கும்போது புதன் அவளிடம் புரூரவஸ் என்பவனைப் பெற்றான். ஆணாக இருக்கையில் உத்கசர் முதலியவர் பிறந்தார்கள்.

வைவஸ்வதமநுவுக்கு இக்ஷ்வாகு முதலிய பத்து புத்ரர்கள் பிறந்தனர். அவர்களில் பிருஷத்ரன் என்பவன் ஒருநாள் பசுவின் கொட்டகையில் புலி வந்து புகுந்ததைக் கண்டு புலி என்று எண்ணி பசுவைக்கொன்று விட்டான். அவனைத் தந்தை காட்டிற்கு விறட்டி விட்டார். வைராக்யத்துடன் பகவானை ஆராதித்து அவன் முக்தி பெற்றான். நிருகன் ஸுமதி வஸு ப்ரதீக ஓகவான் முதல் ஜநமேஜயர் என்பவர் வரை அந்த வம்சம் வளர்ந்து வந்தது. அதில்

தோன்றிய சர்யாதி தன் பெண் ஸுகன்யையுடன் வநம் செல்ல அவள் புத்துக்குள்ளிருந்த சியவநருடைய கண்களைக்குத்தினள். அரசனைச்சார்ந்த அனைவரும் ஜல மலம் வெளியில் வராமல் வயிறுவீங்கி துன்புற்றனர். சியவநர் விரும்பியபடி அவளை முனிவர்க்கு அளித்து நோயிலிருந்து விடுபட்டனர். கன்னிகையின் கற்பை பரீக்ஷித்து அச்விநீதேவர் முநிவரை தங்களைப்போல் அழகுள்ளவராகச் செய்தனர். சியவநர் சர்யாதிக்கு ஒரு யாகம் செய்வித்து அதில் அச்விநீ தேவர்க்கு ஸோமரஸம் அளித்தார். அந்த சர்யாதியின் பேரனான ககுத்மி (ரேவதன்) என்பவன் அழகுள்ள தன் பெண் ரேவதியை யாருக்களிப்பதென்று கேட்க பிரும்மலோகஞ்சென்றான். வருவதற்குள் யுகம்மாறி பகவான் அவனியில் ராமகிருஷ்ணராக அவதரித்தார். பிரும்மாகூறியபடி பலராமருக்கு அவளை யளித்து வநஞ்சென்றாரவர்.

## நாபாகன்.

இக்ஷ்வாகுவின் பேரன் நாபாகன். அவன் கல்விகற்க குருகுலம் சென்றபோது மூத்தவனிடம் ராஜ்யத்தை அளித்து தந்தை தபோவநம் சென்றார். மூத்தவன் தனது ஸஹோதரர்களுக்கு ராஜ்யத்தைப் பாகம் செய்தார். குருகுலத்திலிருந்து வந்து என் பங்கு எங்கே? என்றான் நாபாகன். உனக்கு பிதாவே பங்கு என்றான் அண்ணன். இவன் தந்தையிடம் சென்று முறையிட்டான். தந்தை, ஓரிடத்தில் ஆங்கிரஸ்கள் யாகம் செய்கின்றனர். ஆறுவது நாளில் சில மந்திரங்கள் மறந்துவிடுகின்றன. அங்கு சென்று அதைக்கூறு. அவர் கொடுக்கும் பொருளைப் பெறு'' என்றார். அங்ஙனமே பொருளைப் பெற்றதுடன் யாகசாலையில் மிகுந்த ஸாமான்களையும் அவனுக்குத் தந்தனர். அவைகளை நாபாகன் எடுக்கும்போது ஒருகறுத்த புருஷன் "இவை என்னுடையவை. வேண்டுமானல் உன் தந்தையையே கேள்'' என்றார். புத்ரன் அவ்வாறு கேட்க அது பரமசிவனைச் சார்ந்தது என்றார் பிதா. அவன் ஓடி வந்து இதைக் கூற ஸந்தோஷமடைந்த சிவன் எல்லாவற்றையும் அவனுக்களித்தார். பாகமில்லாததால் அவனுக்கு நாபாகன் என பெயர்.

## அம்பரீஷன்.

நாபாகனது புத்ரன். அவன் சிறந்த விஷ்ணு பக்தன். ஒவ்வொரு அவயவமும் பகவத் கைங்கர்யமே செய்து வந்தது. ஏகாதசியில் சுத்த உபவாஸமிருந்து துவாதசியில் பகவதாராதநம் செய்து பாரணை செய்வான். ஒரு துவாதசி பாரணை செய்யும் ஸமயத்தில் தூர்வாஸர் வந்தார். அவரை அதிதியாக வேண்டினன். அவருமதை ஏற்று அநுஷ்டாநம் செய்யச் சென்றார். வெகு நேரமாகியும் அவர் வரவில்லை. துவாதசி சிறிது நேரமே இருந்தது. அதற்குள் பாரணை செய்வது முக்யம். அதிதிக்கு அளிக்காமல் தான் புஜிக்கலாகாது. மன்னன் வெகு நேரம் யோசித்து ஜலம் அருந்தினுல் அது சாப்பிட்டது போலும் சாப்பிடாதது போலும் ஆகும் என ஜலமருந்தினன். இதை அறிந்து தூர்வாசமுநிவர் மிக கோபங்கொண்டார். அரசே! அதிதியை அதிலும் என்னை அலக்ஷ்யம் செய்தாய்! அதன் பலனை அநுபவி என்று கூறி தனது ஜடையிலிருந்து ஒரு பூதத்தைப் படைத்து அரசனைச் சிக்ஷிக்க ஏவினர். அதற்கு முந்தியே பகவான் அம்பரீஷனைக் காக்க தனது சக்கரத்தை அனுப்பினர். அது அந்த பூதத்தை எரித்து தூர்வாஸரைத் துரத்திற்று.

தூர்வாஸர் பயந்து பிரும்மாவையும் பரமசிவனையும் சரணமடைந்தார். அவ்விருவரும் கைவிட்டார்கள். நேரே வைகுண்டம் சென்று பகவானை வேண்டினர். எல்லாவற்றையும் விட்டு ஒன்றையும் விரும்பாமல் என்னையே பக்தர் உபாஸிக்கின்றனர். என்னைத் தவிர வேறு ஒன்றையும் அறியார். நானும் பக்தரை விட்டு வேறு எதையும் அறியேன். ஆதலால் சக்கரத்தை நானே அனுப்பினுலும் அதை நிறுத்த என்னுல் முடியாது. ஒரு உபாயம் சொல்கிறேன் கேள். பக்தனுன அம்பரீஷனையே சரணம் அடை என்றார் பகவான். ஸர்வ சக்தி உள்ளவனுக இருந்தாலும் பக்தரின் பெருமையை உலகிற்குக் காட்ட தன்னுல் முடியாதென்றார். சக்கரம் துரத்த தூர்வாஸர் அம்பரீஷனிடம் வந்து சரணம் சரணம் எனக் கதறினர். அரசன் பத்து சுலோகங்களால் ஸுதர்சநமெனும் சக்ரத்தைத் துதித்து முநிவரை ஹிம்ஸிக்காமல்

விடும்படி வேண்டினன். விடுபட்ட தூர்வாஸர் மன்னனைப் போற்றி தான் வரும்வரை உண்ணுதிருந்த அரசனைப் புஜிக்கும்படிச் செய்தார். தானும் புஜித்து பக்தன் பெருமையைப் பாராட்டிச் சென்ருர்.

## இக்ஷ்வாகு வம்சம்.

இக்ஷ்வாகு. அஷ்டகா சிராத்தத்திற்காக சுத்தமான மாம்ஸம் புதிதாகக் கொண்டு வரும்படி விகுக்ஷி என்ற புத்ரனுக்கு உத்தரவிட்டார். அவன் வேட்டையாடி பல முயல்களைக் கொண்டுவந்தான். நடுவழியில் பசித்ததால் ஒரு முயலைப் பாகம்செய்து உண்டான். அதைப்ரோக்ஷிக்கும்பொழுது அது சாப்பிட்ட மிகுதி என உணர்ந்து குரு கூறினர்: சசாதன் என காரணப் பெயர் பெற்ற புத்ரனைக் காட்டிற்கு விரட்டினர். அவனது புத்ரன் புரஞ்ஜயன். அரக்கரைக் கொல்ல இந்திரன் இவரை அழைத்தான். இந்திரனைக் காளையாக்கி அவனது ககுத் எனும் கொண்டையில் நின்று வெற்றி பெற்ருன். அதனல் ககுத்ஸன் என்ற காரணப் பெயரைப் பெற்ருன். அவன் வம்சத்தில் பிறந்த குவலயாச்வன் என்பவன் பூமிக்குள் பதுங்கி இருந்து எல்லோரையும் எரித்துவந்த துந்து எனும் அரக்கனைக் கொன்ருன். அதனல் துந்துமாரன் எனப்பட்டான்.

யுவனாச்வன் என்ற அரசன் தனக்குப் புத்ரன் பிறப்பதற்காக வைத்திருந்த மந்திர தீர்த்தத்தை அருந்தி கர்ப்பவான் ஆனன். புருஷ கர்ப்பத்திலிருந்து வயிற்றைக் கிறி வஸிஷ்டர் குழந்தையை வெளியிலெடுத்தார். குழந்தை யாரிடம் பால்குடிக்கும்? என்ற வாதம் தோன்ற இந்திரன் தனது விரலைக்காட்டி மாந்தாஸ்யதி என்ருர். அதனல் மாந்தாதா எனப் பெயர்பெற்ருன். அவன் ஏக சக்ராதிபதியாக இருந்தான். திருடர் அவரைக் கண்டு நடுங்குவதால் த்ரஸத் தஸ்யு என்றும் காரணப் பெயர் பெற்ருன். கடல் ஜலத்திலமர்ந்து தவம்புரியும் ஸௌபரி முனிவர் குடும்பத்துடன் ஆடி ஓடி விளையாடும் மீனைக் கண்டு தானும் அந்த ஸுகத்தை விரும்பி மாந்தாதாவினிடம் ஒரு பெண் தரும்படி வேண்டினர். அரசருக்கேற்றது ஸ்வயம்வர முறை. தங்களை விரும்பினல் எனது

ஐம்பது பெண்களையும் தருவேன் என்ருர் மாந்தாதா. முனிவர் அழகிய உருவந்தாங்கி செல்ல, அனைவருமவரை விரும்பினர். எல்லோரையும் மணந்து, பல சிசுக்களைப் பெற்று முடிவில் ஸம்ஸாரத்தில் வெறுப்படைந்து தவம் செய்தார். இதை விஷ்ணுபுராணத்திலும் காணலாம்.

## மாந்தாதாவின் வம்சம்.

இவரது பரம்பரையைக் கூறி புருகுத்ஸன் சரிதத்தைக் கூறுகிருர். நாகலோகத்திலுள்ள ஸர்ப்பங்கள் தங்களது ஸஹோதரியான நர்மதா என்பவளைப் புருகுத்ஸனுக்குத் தந்தனர். அவள் தன் கணவனுடன் பாதாளம் சென்ருள். ஆங்குள்ள துஷ்டர்களான சிலகந்தர்வர்களைக் கொன்று பூமிக்கு வந்தான். இந்த சரிதத்தை நினைப்பவருக்கு ஸர்ப்ப பயமில்லை. த்ரதஸ்யு என்பவர் இவர்களது புத்ரர். அவரது புத்ரன் அநரண்யன். அவருடைய புத்ரர் ஹர்யச்வன். அவனுடைய புத்ரன் அருணன். அருண புத்ரன் த்ரிபந்தனன். இவருடைய பிள்ளையே நிரிசங்கு எனும் ஸத்யவிரதர். குரு மொழி கேளாதவர் கதி இதுதான் என எடுத்துக்காட்ட இன்றும் ஆகாயத்தில் நக்ஷத்திரவடிவமாக தொங்குகிருர். இந்த கதை ஸ்ரீ ராமாயணத்தில் விரிவாக இருக்கின்றது.

## ஹரிச்சந்திரன்.

இந்த சரிதம் தேவி பாகவத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ரோஹிதன் ஹரிதன் சம்பன் ஸுதேவன் விஜயன் ப்ருகன் வாஹுகன் என புத்ரபரம்பரை உண்டானது. வாஹுகனது ராஜ்யத்தைப் பகைவர் ஆக்ரமித்தனர். அவன் மனைவிகளுடன் காட்டிற்கு ஓடிவிட்டான். வயதான அரசன் இறக்கும் பொழுது ஒரு மனைவி கர்ப்பிணியாக இருந்தாள். அவள் புருஷனுடன் உடன் கட்டை ஏறும்போது ஔர்வர் எனும் முனிவர் கர்ப்பிணி உடன்கட்டை ஏறக்கூடாதென தடுத்து அரசன் மனைவிகளைக் காத்துவந்தார். இவளது சக்களத்திகள் கருவை அழிக்கக் கருதி அன்னத்துடன் இவளுக்கு விஷத்தை அளித்தனர். முனிவரது அருளால் அக்குழந்தை விஷத்துடன் பிறந்தது. அதனுல் ஸகர என்ற காரணப் பெயர் தோன்றிற்று. ஸகரன் வளர்ந்து சக்ரவர்த்தியானுர்.

தாலஜங்க, யவந, சக, ஹைஹய, பர்ப்பர முதலியவர் களை ஜயித்தான். குரு கூறியபடி அவர்களைக் கொல்லா மல் தலைமயிர் இல்லாதவர்களாகவும் தாடி மீசை வளர்ப் பவர்களாகவும் பாதிகேசம் உள்ளவர்களாகவும் கச்சம் இல்லாதவர்களாகவும் கேசத்தைக் கட்டாமல் தொங்க விடுபவர்களாகவும் செய்தார். இவர் அசுவமேதயாகம் பல செய்தார். அஸமஞ்ஜஸன் மூற்றவன். அறுபது ஆயிரம் இளையாளின் புத்ரர்கள் கபிலரால் எரிக்கப் பட்டது, அவர்களுக்கு நற்கதி அளிக்க கங்கையைக் கொண்டுவர அம்சுமான் திலீபன் இவர்கள் தவம்செய்து பயன்பெருமல் இறந்தது, பகீரதன் பல விக்நங்களுக் கிடையே கங்கையைக் கொண்டுவந்து ஸகர புத்ரர் களுக்கு நற்கதி அளித்தது முதலிய சரிதம் ஸ்ரீ ராமாயணத் திலும் விரிவாக உளது.

## ராஜ பரம்பரை.

பகீரதனது பரம்பரையில் ஸௌதாஸன் என்ற அரசன் மதயந்தி என்பவளை மணந்து இல்லறம் நன்கு நடத்தினன். வநஞ்சென்று வேட்டையாடும்போது ஒரு அரக்கனைக் கொன்ருன். அவனது ஸஹோதரன் அரச னுக்கு ஏதேனும் ஒரு தீங்கிழைக்கக் கருதி அரசனுக்குப் பரிசாரகனுக அமர்ந்தான். வஸிஷ்டர் விருந்தினராக வந்தபோது நரமாம்ஸத்தைப் பாகம் செய்து விளம்பினர். வஸிஷ்டர் கோபங்கொண்டு அரசனைப் பனிரண்டாண்டு நரமாம்ஸம் உண்ணும் அரக்கனுகும்படிச் சபித்தார். காரணமின்றி சபித்ததால் தானும் அவரைச் சபிக்க கரத் தில் நீரை எடுத்தான். மதயந்தி ஓடிவந்து, நாத! குருவைச் சபித்தால் நம் குலமே அழியுமே என்ருள். சாபத்திற்காக எடுத்த ஜலத்தை எங்கே விட்டாலும் அவ்விடம் அழியும். ஆதலால் தனது கால்களிலேயே விட்டான். அவ்விடம் கறுத்து கல்மஷம் உள்ளதாயிற்று. ஆதலால் அவன் கல்மாஷ பாதன் என காரணப் பெயர் பெற்ருன்.

அவன் அரக்கனுகி காநகத்தே திரிந்தபோது சிற்றின் பத்திலீடுபட்ட ஒரு வேதிய தம்பதிகளைக் கண்டான். ராக்ஷஸஜாதிக் கேற்றபடி புருஷனைக் கொன்று தின்ருன்.

ஸந்தி அவனை நீ அரக்கனல்ல, அரசன். எனது ஸந்ததி வளரவேண்டும். அவரைக் கொல்லாதே என பலமுறை வேண்டியும் கொன்றான். ஆதலால் நீ உனது மனைவியைத் தொடும்பொழுது இறப்பாய் என சாபமளித்துப் பதியுடன் தீக்குளித்தாள். சாபம் நீங்கி அரசன் அந்தப்புரம் வந்து மனைவியைக் காமவெறிகொண்டு கை பிடித்தான். மஹா பதிவிருதையான மதயந்தி காநகத்தில் நேர்ந்த சாபத்தைக் கூறி இணங்க மறுத்தாள். குருவின் அருளால் அவள் கர்ப்பிணியானாள். ஆண்டுகள் ஏழாகியும் புத்ரன் பிறக்கவில்லை. கல்லினால் வயிற்றில் அடித்துக் கொண்டாள். குழந்தை உடனே பிறக்கக் கல்லால் அடித்துப் பிறந்ததால் அச்மகன் என்றே பெயர் வைத்தனர்.

அச்மகனது புத்ரன் மூலகன். பகைவரிடமிருந்து பெண்களே அவனைக் காத்ததால் நாரீகவசன் என பெயர் பெற்றான். அந்த வம்சத்தில் தோன்றிய **கட்வாங்கன்** இந்திரன் கோரியபடி ஸுவர்க்கஞ் சென்று அங்கே வந்த அரக்கர்களைக் கொன்றான். அமராதிபன் தந்த வேறு வரங்களைவேண்டாமல் தனது ஆயுள் முடிவுகாலம் எப்போதெனக்கேட்டான். அது கூறக்கூடாத ரஹஸ்ய மாயினும் அவன் செய்த பேருதவியைக் கருதி இன்னும் ஒரு முகூர்த்தமே ஜீவித்திருப்பாய் என்றான். கட்வாங்கன் உடனே தன் கடமைகளைச் செய்து முடித்து பகவானை உபாஸித்து நற்கதி அடைந்தான். திர்க்கபாகு, ரகு, ப்ருது ச்ரவஸ் அஜன் தசரதன் என்ற வம்சபரம்பரையை வர்ணித்து ஐம்பது சுலோகங்கொண்ட ஒரு அத்தியாயத்தால் ஸ்ரீ ராம சரிதம் கூறப்பட்டது. குசன் முதல் மரு வரை வளர்ந்து கலியில் அந்த வம்சம் அழிந்துவிடும் என்றார். நிமியினது வம்சம் விருத்தியாகி பஹுலாச்வன் வரை மைதிலர் அல்லது ஜநகர் என்ற பெயருடன் விளங்கும்.

## சந்திர வம்சம்.

சதுர்முகனது புத்ரர் அத்ரி. அத்ரியின் புத்ரர் சந்திரன். ஓஷதிகளுக்கும் பிராம்மணருக்கும் ராஜாவான ஸோமன் ராஜஸூய யாகம் செய்தான். ஸுர குருவின் மனைவியான தாரை மூலமாக புதனை உண்டுபண்ணினான்.

புதன் இளையனிடம் புரூரவஸ்ஸைப் பெற்றான். புரூரவஸ்ஸின் குணகணங்கள் விண்ணிலும் பரவிற்று. இவரிடம் ஆசைகொண்ட ஊர்வசி இரு ஆட்டுக்குட்டிகளுடன் அரசனிடம் வந்தாள். நெய்யே எனக்கு உணவு. சிற்றின்ப காலந்தவிர மற்ற ஸமயம் ஆடையின்றி என் முன் தோன்றினும் இந்த ஆட்டுக்குட்டிகளைக் காக்காவிடினும் உன்னைவிட்டு அகலுவேன் என்றாள். அதை ஏற்று அரசன் அவளுடன் ரமித்தான். சிலகாலம் சென்றபின் இந்திரனது ஆணையின்படி ஒருவன் அந்த ஆடுகளை அபஹரித்தான். அதைக் காக்க விரைந்து ஓடிய வேந்தன் தான் ஆடையின்றி இருந்ததை மறந்தான். முன் கூறியபடி ஊர்வசி அவனைவிட்டு மறைந்தாள். அரசன் அவளை நினைத்து அழ, வேந்தே! "நாரிகளையும் நரிகளையும் நம்பாதே. ஓராண்டின் முடிவில் ஒருநாள் உம்மிடம் வருகிறேன்" என்று கூறி சென்றாள். சொன்னபடி வந்து சென்ற ஊர்வசியை விட்டுப்பிரிய மநமின்றி வருந்தினான். ஒரு அக்நிஸ்தாலியை — தீப்பாத்திரம் — தந்து கந்தர்வர் ஸமாதானப் படுத்தினர். அதை ஊர்வசிபோல் கருதி களித்து ஓர் அரசமரத்தடியில் வைத்து விடுசென்றான். மறுநாள் பாத்திரத்திலுள்ள தீ அரசமரத்தில் புகுந்தது. அரணி எனும் அரசங்கட்டையைக் கடைந்து அந்த தீயில் யக்ஞேசனை நாடி ஒரு யக்ஞம் செய்தான். அன்று திரேதாயுகம் தோன்றிற்று. அதுவரை ஓங்காரத்துடன் ஒரே வேதம் ஒரே தேவனான நாராயணன் ஒரே அக்நியாக இருந்தது. திரேதாயுகத்தில் அக்நி மூன்றாகி ஸ்வர்கஞ் செல்ல விரும்புவோர் அவ்வக்நிகளில் வேள்வி செய்ய ஆரம்பித்தனர். அதன் பலனாக அப்ஸரஸ்ஸுகள் நிறைந்த ஸ்வர்க்கம் சென்றனர். புரூரவஸ்ஸும் அங்ஙனமே செய்து விண்ணுலகம் சென்று ஊர்வசியுடன் ரமித்தான். இந்த சரிதம் தேவி பாகவத்திலும் இருக்கின்றது. இதையே காளிதாஸன் விக்ரம ஊர்வசியம் என்ற நாடகமாக அமைத்து ரஸம் ததும்ப சில கற்பனைகளையும் செய்தான்.

## பரசுராமர்.

புரூரவஸ் விஜயன் பீமன் காஞ்சநன் ஹோதிருகர் ஜந்நு—இவரே கங்கையை அருந்தியவர்—பூரு, பாலகர்,

அஜகர், குசர், குசாம்பர், காதி என்ற புத்திரவரிசையில் காதிக்கு ஸத்யவதி என்றோர் அழகிய கன்னிகை பிறந்தாள். ரிசிகரெனும் பிராம்மணர் அவளைத் தனக்குத் தரும்படிக் கேட்டார். காதி ஒரு காது மாத்திரம் கறுப்பான ஆயிரம் வெள்ளைக் குதிரைகளைத் தனக்களித்து அவளை மணக்கலாமென்றார். வருணனை உபாஸித்து அவைகளைத் தந்து ராஜ கன்னிகையை மணந்தாரவர். பலநாட்கள் ஆகியும் குழந்தை பிறவாததால் தனக்கும் தன் தாய்க்கும் புத்ரன் பிறக்கும்படி அருள்புரிய புருஷனை வேண்டினாள் ஸத்யவதி. அங்ஙனமே அவர் இரு பாத்திரங்களில் அன்னத்தை மந்திரித்து இது உனக்கு, இது உன் தாய்க்கென அளித்தார். முனிவர் தனக்குச் சிறந்த புதல்வன் உண்டாக ஜபித்திருக்கலாம் என, புத்திரிக்கு அளித்ததைத் தான் புஜித்து தனக்களித்ததை மகளுக்களித்தாள் ஸத்யவதியின் தாய்.

இதை அறிந்த முனிவர் மனைவியைக் கடிந்து உனக்குத் துஷ்ட க்ஷத்ரியனும் உன் தாய்க்குச் சாந்தமான பிராம்மணனும் பிறப்பான் என்றார். நாத! புத்திரனது புத்திரன் வேண்டுமானால் குரூர க்ஷத்திரியனாக இருக்கட்டும். எனக்கு சாந்தனான பிராம்மண குமாரனே பிறக்க வேண்டும் என வேண்டினாள். முனிவரது அருளால் ரிசிகருக்கு ஜமதக்நியும் காதிக்கு விசுவாமித்திரரும் உண்டானார்கள். ஜமதக்நிக்கு ரேணுகையினிடம் வஸுமநன் முதலிய புத்திரர் பிறந்தனர். அவர்களில் கடைவன் விஷ்ணுவின் அம்சமான பரசுராமன்.

## பரசுராமன் துஷ்ட க்ஷத்ரியர்களைக் கொன்றது.

கிருதவிர்யனது குமாரன் கார்த்தவீரியன். ஹைஹய தேசமன்னன். தத்தாத்ரேயருக்குக் கால்பிடித்துப் பணிவிடை செய்தான். இவனைப் பரீக்ஷிக்க அவனது கரங்கள் எரியும்படி செய்தார். அப்பொழுதும் விடாமல் பணிவிடை செய்தான். ஆயிரங்கரங்களையும் ஒப்பற்ற பலத்தையும், தவறு செய்ய நினைப்போரது எதிரில் ஆயிரங்கைகளுடன் தோன்றும் சக்தியையும் அளித்தார். ஒரு நாளவன் வேட்டையாடி ஜமதக்நி முனிவரது ஆச்ரமத்திற்கு வந்தான். அவர் காமதேனுவின் உதவியால்

ஸேனைகளுக்கும் அரசனுக்கும் தேவர் போற்றும்படி விருந்தளித்தார். இதைக்கண்டு வியந்த மன்னன் பலாத்காரமாக அப்பசுவை ஓட்டிச் சென்றான். ராவணனையே அலக்ஷ்யமாக அடித்துச்சிறையிலிட்ட வனவன். பரசுராமர் கோபங்கொண்டு கார்த்தவீர்யனுடன் போருக்குச் சென்றார். ஒருவனாக இருந்து பதினேழு அக்ஷௌகிணி ஸேனையைக்கொன்று, கார்த்தவீர்யனது கரங்களையும் சிரத்தையும் அறுத்துத் தள்ளினார். பயந்து அரசகுமாரர் கன்றுடன் பசுவைப் பரசுராமரிடம் அளித்துப் பணிந்தனர். புத்திரனது வெற்றியைக் கண்டு மகிழாமல் ஜமதக்நி, சக்ரவர்த்தியைக் கொன்ற பாபத்தைத் தீர்க்க தீர்த்தயாத்திரை செய்துவா என்றார்.

ரேணுகை ஒருநாள் ஜலமெடுத்துவரச்சென்றபோது ஆங்கு ஜலக்கிரீடை செய்த சித்திர ரதன் அழகைக்கண்டு வியந்து நின்றாள். அக்கினி ஹோத்திர வேளை கடந்தது. மனைவி காலத்தில் வராததுடன் அன்னிய புருஷன் அழகில் ஆழ்ந்திருந்தாள் என அறிந்து அவளைக் கொல்லும்படி புத்திரர்களுக்கு உத்தரவிட்டார் ரிஷி. ஒருவரும் அதற்கு ஸம்மதிக்கவில்லை. பரசுராம! கூறிய சொல்லைக் கேளாத ஸோதரர்களையும் தாயையும் கொல் என்றார். தந்தையின் தவவலிமையை அறிந்த பரசுராமன் அறை நாழியில் அவர்களைக் கொன்று திரும்பினான். தந்தை மனம் களித்தது. உனக்கு யாது வரம் வேண்டுமென்றார். இறந்தவர் அனைவரும் எழுந்துவர அருள்புரியுமென்றார் ராமன். தந்தையும் ஸந்தோஷமடைந்து எழுப்பினார். பரசுராமன் ஆச்ரமத்தில் இல்லாதபோது கார்த்தவீர்யனது புத்திரர்கள் தியானம் செய்துகொண்டிருக்கும் ஜமதக்நியின் தலையை வெட்டி எடுத்துச்சென்றனர். இதைக் கண்ட பரசுராமன் சீறி எழுந்து இருபத்தோருமுறை க்ஷத்திரியர்களைக் கொன்று ஐந்து ரக்த மடுக்களை உண்டு பண்ணினார். தந்தையின் தலையை உடலுடன் சேர்த்து ஒரு யாகம் செய்து பூமியை எல்லாம் தானம் செய்தார். ஜமதக்நி ஸப்தர்ஷிகளில் ஒருவராகி ரிஷி மண்டலத்தை அடைந்தார். பூமிக்குச் சுமையாக இருந்த மற்றும் பல க்ஷத்ரியர்களைப் பலமுறை வதம் செய்தார் பரசுராமன்.

## விச்வாமித்திரர்.

இவர் அரசனாக இருந்து, ஸேனையுடன் தனக்குக் காம தேனுவின் உதவியால் விருந்தளித்த வஸிஷ்டர் பசுவிற் காகப் போர் துவக்கித் தோல்வி அடைந்து, பிரும்ம தேஜோபலமே சிறந்த பலமென உணர்ந்து கடுந்தவம் செய்து பிராமணன் ஆனார். சுநச்சேபன் என்பவனுக்கு வருண மந்திரத்தை உபதேசித்து நர பசுவான அவன் உயிரைக் காப்பாற்றினார். அதனால் அவன் இவருக்குப் புத்திரனானான். இவனை மூத்தவனாக ஏற்கும்படி தனது நூறுபுத்ரர்களையும் கூறினார். முதல் ஐம்பதுபேர் அதை ஏற்காததால் அவர்களை மிலேச்சராகும்படி சபித்தார். மதுச்சந்தஸ் முதலிய பின் ஐம்பது புத்திரர்கள் அதை ஏற்றனர். ஆதலால் அன்புடன் அவர்களை ஆசிர்வதித்தார். அஷ்டகன் ஹாரீதன் ஜயந்தன் ஸுமதன் முதலிய சிலரும் இவருக்குப் புத்திரர் ஆனார்கள். விசுவாமித்திரரது கோத்ரம் பலவாகப் பெருகிற்று.

## நகுஷன் யயாதி சரிதம்.

நகுஷன் நூறு அசுவமேதம் செய்தவர். ஸுவர்க்கத்தில் இந்திரனாக இருக்கும்படி அவரை அழைத்துச் சென்றனர். ஸுவர்க்கத்தை ஆளுகையில் இந்திராணியை மனைவியாக்க விரும்பினார். குரு சொற்படி இந்திராணி நகுஷனை ஸப்தரிஷிகள் சுமக்கும் பல்லக்கில் வரும்படிக் கூறினாள். நகுஷன் பல்லக்குத் தூக்கும் அகஸ்தியரை "ஸர்ப்ப ஸர்ப்ப" போ போ என காலால் தொட்டுத் தூண்டினான். குரு செய்த யுக்தி பலித்தது. அகஸ்தியர் "ஸர்போ பவ" பாம்பாவாய் என்று சபித்தார். மலைப் பாம்பாகி பீமனை விழுங்கி தருமருடன் பல தர்மங்களைப் பேசி பிறகு நற்கதி அடைந்தான். அவனது புதல்வன் யயாதி. அவன் வேட்டையாடிக் களைத்து தாஹசாந்தி செய்ய ஒரு கிணற்றைக் குனிந்து பார்த்தான். அங்கு வஸ்த்ர மில்லாதிருந்த ஒரு பெண் அவரைப் பார்த்து, ஐயா! ஒரு வஸ்த்ரமளித்துக் கரை ஏற்றி என்னை ரக்ஷியுங்கள் என்றாள். கரை ஏற்றியபின் நீ யார்? என்றார் யயாதி. ஐயா! நான் சுக்ராசாரியரின் பெண் தேவயானி. விருஷபர்வாவின் பெண் சர்மிஷ்டையுடன் ஜலக்கிரீடை

செய்தேன். கரை ஏறி எனது வஸ்திரத்தை அவள் எடுத்துக்கொண்டாள். கோபங்கொண்டு நான் அவளைக் கடிந்து பேசினேன். என் தந்தையிடம் பிச்சை வாங்கு பவர் உனது பிதா. உனக்கு இவ்வளவு கர்வமா? என என் வஸ்த்ரத்தையும் பிடிங்கிக்கொண்டு என்னைக் கிணற்றில் தள்ளிவிட்டாள். அவளை அடிமையாக்கி உமக்கே மாலையிடுவேன் என்று கூறி விடைபெற்றாள். தந்தையிடம் போய் முறையிட்டாள்.

## தேவயானீ சர்மிஷ்டா.

இந்த அரக்கனை விட்டு விலகும்படி வேண்டினாள். சுக்ரரும் பெண்ணிடமுள்ள அன்பினால், விலகுகிறேன் என்றார். விருஷபர்வா தனது பெண் சர்மிஷ்டை இஷ்டபடி தேவயானிக்கு அடிமை யாகும்படிச் செய்து சுக்ரரை விலகாதிருக்கும்படிச் செய்தார். க்ஷத்ரியனான யயாதியைத் தன் பெண்ணை மணக்க அழைத்தபோது பிரும்மரிஷி கன்னிகையை எப்படி நான் ஏற்பதென்றார். பிருஹஸ்பதியின் புதல்வனான கசன் எனது சிஷ்யன். அவனை மணக்க விரும்பினாள் தேவயானி. அவன் குருவின் பெண்ணை மணப்பது அதர்மம் என மறுத்தான். கோபங்கொண்ட இவள் அவனுக்கு என்னிடம் கற்ற மிருதஸஞ்ஜிவினீ என்ற வித்யை பயன்படாமல் போகட்டும் என்று சபித்தாள். கசனும் உன்னைப் பிராம்மணன் மணக்க மாட்டான் என சபித்தான். ஆதலால் நற்குலத்தில் உதித்த நீயே அவளுக்கேற்ற பதி என்றார். யயாதி தேவயானியை மணந்து அவள் சொற்படி சர்மிஷ்டையை ஓர் உத்யானத்தில் தனித்து வைத்தான். தேவயானிக்கு யது துர்வஸு என இரு புத்ரர்கள் உண்டானார்கள். இதைக் கண்ட சர்மிஷ்டை பல்வகை நீதிகளைச் சொல்லி அவரிடம் தானும் த்ருஹ்யன் அநு பூரு என்ற மூன்று புதல்வர்களைப் பெற்றாள். எத்தினைநாள் மறைந்திருக்க முடியும்? தேவயானி இதை அறிந்தாள். வந்தது கோபம்! விரைந்தாள் தந்தையிடம்! அலறினாள்! கதறினாள்! பெண்ணைச் சாந்தப்படுத்தி யயாதியைக் கிழவனாகும்படிச் சபித்தார்.

முனிவர் சாபம் வீணாமோ? யயாதி தொண்டு கிழமானான். ஓடி சுக்ரர் திருவடியில் விழுந்தான். ஸாதுக்கள் கோபம் எவ்வளவு நேரமிருக்கும்? உனது புத்ரரிடம்

கிழத்தனத்தை அளித்து அவரது இளமையைப் பெறுவாய் என்றார். இளமையைத் தந்து கிழவனாகும்படி முதல் நான்கு புத்ரர்களையும் வேண்டினான் யயாதி. இத்துணைநாள் அநுபவித்தும் உமக்குப் போதுமென தோன்றவில்லை. நன்கு விஷய ஸுகங்களை அனுபவிக்கவேண்டிய காலத்தில் எப்படி கிழவனாவோம்? என மறுத்தனர். உங்களுக்கும் உங்கள் ஸந்ததிக்கும் ராஜ்ய உரிமை இல்லை என சபித்தான். இளையவனான பூருவைக் கேட்டான். தாங்கள் அளித்த உடல். தங்களுக்குப் பயன்பட உயிரையும் அளிப்பேன் என இளமையைத் தந்து கிழவனானான். யயாதி நீண்டகாலம் விஷயசுகங்களை அனுபவித்தான். பிறகு வைராக்யம் கொண்டு பூருவை யுவாவாகவும் அரசனாகவும் செய்து பக்தியில் ஈடுபட்டு நற்கதி பெற்றான்.

## பரதன் சரிதம்.

பூரு வம்சம் ஜநமேஜயன் முதல் ரைப்யர் வரை வளர்ந்தது. ரைப்யரது புதல்வர் துஷ்யந்தன். வேட்டையாடச் சென்று கண்வரது ஆச்ரமத்தை அடைந்தார். மேனகையிடம் விசுவாமித்திரரால் உண்டுபண்ணப்பட்டு பக்ஷிகளால் நிழல்காத்து காக்கப்பட்ட சகுந்தலையைக் கண்வர் வளர்த்துவந்தார். அவள் துஷ்யந்தனை வரவேற்று விருந்தளித்தாள். இருவர்க்கும் ஒருவர்மீது ஒருவர்க்கு அன்புண்டானது. காந்தர்வமணம் செய்துகொண்டனர். சகுந்தலைக் கருதரித்து பரதனெனும் அரும் புதல்வனைப் பெற்றாள். கண்வர் க்ஷத்திரிய விதிப்படி ஜாதகர்மா முதலியவைகளைச் செய்து ஸகல கலைகளையும் கற்பித்தார். இளமையிலேயே க்ஷத்திரியருக் கேற்றபடி வேட்டையாட ஆரம்பித்தான் பரதன். அவனுடன்கூட சகுந்தலையையும் துஷ்யந்தனிடம் அனுப்பினார் கண்வர். துஷ்யந்தன் இவள் யாரோ என ஐயமுற்றான். ஆகாயத்திலிருந்து ஒருசொல் ''அரசே! இவள் உனது மனைவி! இவன் உனது வம்சத்தை விளக்கவந்த உத்தம புதல்வன்! இவர்களை ஏற்றுக்கொள்'' என்று கூறியது. தந்தைக்குப் பின் தரணியாண்டான் பரதன். பல நூறு அச்வமேத யாகம் செய்தான். பூமிக்கு மாத்திரமல்லாமல் பாதாளத்திற்கும் ஸ்வர்க்கத்திற்கும் பேருதவி புரிந்தான்.

இந்த கதையைக் கவிகுல திலகமான காளிதாஸன் உலகம்போற்றும் சாகுந்தள நாடகமாக எழுதினுன். நவ ரஸம் ததும்ப நாடகத்திற் கேற்றபடி சில ருசிகரமான அம்சங்களைச் சேர்த்தான்.

## ரந்தி தேவர்.

பரதன் ஒப்பற்ற சக்ரவர்த்தி. அவனுக்கு மூன்று புத்ரர்கள் உண்டானுர்கள். அவர்களின் லக்ஷணத்தைப் பார்த்து இவர்கள் எனக்கேற்றவர்களல்ல என்ருன். ஆத லால் ராஜஸ்த்ரீகள் அக் குழந்தைகளை வளர்க்கவில்லை. அரசனுக்கு வேறு புத்திரனில்லை. பிருஹஸ்பதிக்கும் மமதா என்பவளுக்கும் உண்டான பரத்வாஜ என்ற குழந் தையை மருத்துக்கள் துஷ்யந்தனிடம் தத்த புத்ரனுக அளித்தார்கள். அவர் பிராம்மணுயினும் அந்த க்ஷத் திரிய வம்சத்தை விருத்திசெய்தார். அவருடைய புதல்வர் கள் ஐவரில் ஒருவரான நரன், ஸங்கிருதி என்பவனைப் பெற்ருன். அவரது இரு குமாரரில் ஒருவர் ரந்திதேவர். அவர் இல்லறத்திலிருந்தும் துறவிகளைப்போல் வாழ்ந்தார். பொருள் தேட அவர் மனம் செல்லவில்லை. மிக ஏழை யாக இருந்தார். நாற்பத்தெட்டு நாள் ஒரு ஸமயம் அன்ன ஆஹாரமின்றி இருந்தார். தெய்வச்செயலாக நெய் பாயஸம் கடலை ஜலம் முதலியவை ஒன்றன்பின் ஒன்ருகக் கிடைத்தன. அவைகளைக் குடும்பத்தினருக்குப் பங்கிட்டு மீதியை உண்ணும்போது ஒவ்வொருவராக பசி தாஹம் என்று கேட்க அவர்களுக்குக் கொடுத்தார். ஜலத்தை அருந்தும்போது ஒரு சண்டாளன் ஐயா தாஹத் திற்குத் தண்ணீர் தாரும் என்ருன். சிறிதும் மனங் கோணுமல் முகம் வாடாமல் அன்புடன் அதை அளித்தார். இவரைப் பரீக்ஷிக்கவந்த பிரும்மாதி தேவர் ஸந்தோஷ மடைந்து அவருக்கு முக்தி அளித்தனர். அவரது கீர்த்தி உலகெலாம் பரவியது.

அந்த வம்சம் மேல்மேலும் வளர்ந்தது. சில ஸமயம் ஸந்ததி இல்லாதவர் பிராம்மணர்களைப் புத்திரனுக்கி வம் சம் வளரும்படிச் செய்தனர். அங்ஙனம் முத்கலர் மூல மாக மௌத்கல்ய கோத்ரம் விருத்தியாயிற்று. அவருக்கு திவோதாஸன் அஹல்யா என இருவர் தோன்ற அஹல்

யையைக் கௌதமருக் களித்தார். இவர்களுக்கு சதாநந் தரும் அவருக்கு ஸத்யதிருதியும் அவருக்கு சரத்வான் என்ற புத்திரரும் உண்டானார்கள். இவர் ஊர்வசியைக் கண்டு மோஹித்து தனது சக்தியை நாணலில் சிந்தினர். அதனால் சரத்வான் எனப்பட்டார். நாணலிலிருந்து ஒரு ஆணும் பெண்ணும் உண்டாயிற்று. சந்தநுராஜன் அவர் களைக் கிருபையுடன் வளர்த்தார். ஆதலால் கிருபர் சாரத் வதர் என்ற பெயர் உண்டானது. பெண் கிருபி என்ற பெயருடன் துரோணாசார்யரை மணந்தாள்.

## பாண்டவரது வம்சம்.

குருவம்சம் ஜந்து ஸுரதர் முதல் விருத்தியாகி ப்ரதிபர் தேவாபி சந்தநு பீஷ்மர்—பீஷ்மர் விவாஹ மில்லாததால் ஸத்யவதியிடம பிறந்த விசித்ரவீர்யன் மனைவிகளிடம் வ்யாஸரால் உண்டான—திருதராஷ்ட்ரன் பாண்டு, திருத ராஷ்ட்ரன் புத்ரர் துர்யோதனுதிகள். பாண்டுவின் புத்ரர் ஐவர். அர்ஜுநனது புத்ரன் அபிமன்யு. அவனது புத்ரன் பரீக்ஷித். அவன் புத்திரனை ஜநமேஜயன் என்ற வரிசை யைக் கூறி ஜநமேஜயனுடைய ஸர்ப்பயாகம் அவரது புத்திரர் சதாநீகர் ஸஹஸ்ராநீகர் அச்வமேதஜர் அஸீம கிருஷ்ணன் நிச்சக்ரு என்று புத்திர பரம்பரை தோன்றி க்ஷேமர் என்பவரோடு கலியில் சந்திரவம்சம் முடிவடை யும் என்பதையும் கூறினர். இப்படி பற்பல ராஜவம்சங் களைக் கூறி யாதவ வம்சத்தையும் வர்ணித்தார். இதில் தான் பகவான் அவதரித்தார்.

யது ஸஹஸ்ரஜித் சதஜித் ஹேஹயர் தர்மர் நேத்ரர் அல்லது குந்தி (இவரது புத்திரியே குந்தி) கார்த்தவீர் யன் ஜயத்வஜர் தாளஜங்கர் விருஷ்ணி இவர்வரை வர் ணித்து யாதவ வம்சம், யாதவ மாதவ விருஷ்ணி என்ற மூன்றுனதையும் மற்றெரு கிளையான யாதவரில் சூரர் வஸுதேவர்வரை வம்சத்தையும் வர்ணித்தார். வஸு தேவர் பகவானுக்குத் தந்தை. அவர் பிறக்கும்பொழுது ஆநகம் துந்துபி என்ற வாத்தியங்கள் வானிலே வழங் கின. ஆதலால் ஆநக துந்துபி என்ற மற்றோர் காரணப் பெயரும் பெற்றார் வஸுதேவர். இவருடன் பிறந்த ஐந்து ஸஹோதரிகளில் பிருதா அல்லது குந்தியைத் தனது நண்பரான குந்திபோஜருக்கு ஸ்வீகாரப் பெண்ணுகத்

தந்தார். பாண்டுவை மணந்து அவள் தெய்வாம்சமான தர்மர் பீமன் அர்ஜுனன் ஆகியவரைப் பெற்றாள். வஸு தேவர் பல பத்நிகளை மணந்து பல குழந்தைகளைப் பெற்றார்.

## ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்.

ஸ்ரீ கிருஷ்ணனது சரிதமே முக்யமானது. ஸாரமானது. ஆதலால் பாகவதம் என்பது இந்த பத்தாவது ஸ்கந்தம் தொண்ணூறு அத்தியாயமுள்ள கிருஷ்ணனது லீலைதான் என நினைப்பவருண்டு. துர்குணம் வாய்ந்த பல அரசர்கள் பூமியை ஆண்டனர். ஸர்வம் ஸஹா என்றபடி எல்லாவற்றையும் பொறுப்பவளானாலும் பூதேவிக்கு இந்த துஷ்ட ராஜர்களைச் சுமக்க முடியவில்லை. கோ ரூபம் எடுத்து ஸுரருடனும் பிரும்மாவுடனும் வைகுண்டம் சென்று முறையிட்டாள். பகவான் கூறியபடி பிரும்மா தேவர்களைப் பார்த்து வஸுதேவரிடம் பகவான் கிருஷ்ணனாக அவதரித்து பூபாரத்தை அகற்றுவார். அவரது பிரீதிக்காக நீங்கள் பூமியில் பெண்களாகத் தோன்றுங்கள் என்றார். அச்சமயம் மதுரா நகரத்தை உக்ரஸேநன் ஆண்டான். கம்ஸன் அவனது மகன். உக்ரனது ஸோதரனான தேவகருடைய பெண் தேவகியை சூரஸேநனது புத்திரரான வஸுதேவர் மணந்தார். சீருடன் அவரை ராஜாங்க ரதத்தில் ஏற்றி கம்ஸனே ஸாரத்யம் செய்து ஊர்வலம் வந்தான். "ஓ மூட! இவளது எட்டாவது மகன் உன்னைக் கொல்லப்போகிறான்" என்றோர் ஆகாசசொல் தோன்றிற்று. மூர்க்கனான கம்ஸன் உடனே தேவகியைக் கொல்ல முயன்றான். வஸுதேவர் பல நல்வார்த்தைகளைக் கூறியும் கேளாததால் பிறக்கப்போகும் சிசுக்களைத் தருவதாகக் கூறி தேவகியைக் காத்தார். ஓராண்டுக்குள் ஒரு ஆண் சிசு பிறந்தது. ஸத்தியமே பெரிதென வஸுதேவர் அதைக் கம்ஸனிடம் அளித்தார்.

ஸந்தோஷமடைந்த கம்ஸன் இதனால் எனக்கு மரணமில்லை எடுத்துச் செல் என்றான். நாரதர் கம்ஸனிடம் வந்து "நந்தன் கோபர்கள் தேவகி வஸுதேவன் முதலிய அனைவரும் தேவாம்சமானவர், அஸுராம்சமான உன்னைக் கொல்வதற்காக அவனியில் அவதரித்திருக்கின்றனர்" என்றார். கம்ஸன் வஸுதேவனுக்கும் தேவகிக்கும்

விலங்கிட்டு அந்த சிசுவையும் கொன்று உக்ரஸேநனை விலக்கித் தானே அரசுபுரிந்தான். தான் காலநேமி என்ற அரக்கனாக இருந்து விஷ்ணுவால் கொல்லப்பட்டு கம்ஸனாக ஆனதை அறிந்தான். பிரலம்பன் பகன் தேனுகன் திருணவர்த்தன் பாணன் ஜராஸந்தன் முதலியவர்களுடன் கூடி யாதவர்களுக்கு உபத்திரவம் செய்தான். வஸுதேவரது ஆறு சிசுக்களையும் கொன்ருன். பக்தர்கள் படுந் துன்பத்தைக் கண்டு பகவான் யோக மாயையை அழைத்து தேவகியினது கருவிலுள்ள சேஷனது அம்சமான குழந்தையை கோகுலத்தில் வசிக்கும் வஸுதேவருடைய மனைவியான ரோஹிணி வயிற்றில் கொண்டுவை. நீ யசோதையின் வயிற்றில் பெண்ணுகப் பிற. நான் தேவகியிடம் பூர்ணும்சமான புத்திரனுகப் பிறக்கப்போகிறேன். உன்னைத் துர்க்கா சண்டிகா கிருஷ்ண நாராயணீ என்ற பலபெயர்களுடன் பிரதிஷ்டை செய்து பூஜிப்பார்கள். தேவகியிடமிருந்து ரோகிணியிடம் இழுத்துசென்றதால் ஸங்கர்ஷணன். பலமுள்ளவராதலால் பபபத்ரன் என்பவர் எனக்கு மூத்தவனுவார் என்ருர். ரோகிணியிடம் பிறந்தார் பலராமன்.

பகவானது அம்சம் தேவகியின் மநதில் அமய அவள் கர்பிணியாளுள். இந்த கர்ப்பமே தன்னைக் கொல்லப் போகிறதென்று உணர்ந்த கம்ஸன் அவளைக்கொல்வது பாபம் ஒருவாறிருக்க கெட்ட பெயருண்டாகும். என்ன செய்வதென, நிற்கும் பொழுதும் உட்கார்ந்த போதும் உண்ணும்போதும் ஸதா பகவானையே நினைத்திருந்தான்.

பிரும்மா சிவன் முதலிய தேவர்கள் தேவகி இருப்பிடம் வந்து பகவானை ஸ்துதி செய்தார்கள். இது தத்வம் நிறைந்த முக்கியமான பிரும்ம ஸ்துதி, பகவான் அவதரிக்கும் ஸமயம் எங்கும் ஒரே மங்களமாக இருந்தது. ஆவணி மாதம். கிருஷ்ணபக்ஷம். அஷ்டமிதிநம். ரோகிணீ நக்ஷத்திரம். இருள்சூழ்ந்த இரவு. மேகம் இடிக்க, கந்தர்வர் காநம் செய்ய அப்ஸரஸ் ஆட எல்லோரது உள்ளத்திலும் உள்ள பகவான் தேவ ரூபிணியான தேவகியிடம் புத்திரனுகத் தோன்றினர். கிழக்கு திக்குச் சந்திரனைப் பெற்றது போலிருந்தது. நான்கு கைகள். சங்கம் சக்ரம் கதை பீதாம்பரம் கிரீடகுண்டலம் இவைகளுடன் பகவான் அத்புத

மான சிசு ரூபத்துடன் இருப்பதைப் பார்த்து தேவகி துதி செய்தாள். வஸுதேவனும் துதித்தார். ஆனால் கம்ஸன் என்ன செய்வனே என்று அச்சப்பட்டனர்.

ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில் ஸுதபஸ் பிரச்நி என்ற பெயருள்ள நீங்கள் என்னைத் துதிக்க யாது வரம் வேண்டுமென்றேன். என்னைப் போன்ற புத்திரனையே கேட்டீர்கள். ஆதலால் பிரச்நி கர்ப்பனுகவும் அடுத்த பிறவியில் அதிதி கச்சியபரான உங்களுக்கு வாமனனுகவும் இப்போது கிருஷ்ணனுகவும் அவதரித்தேன். என்னைச் சிசுவாகவே கருதி முக்தி அடைவீர்கள். ஸாதாரண குழந்தை வடிவனான என்னை யசோதையிடம் கொண்டுவிட்டு ஆங்குள்ள பெண்வடிவமான என் மாயையை இங்கு கொண்டு வாருங்கள் என்று கூறி பகவான் சிசுவாகி விட்டார். ஸம்ஸாரபந்தத்தையே அகற்றும் பகவானைக் கரத்தில் எடுத்தவுடன் வஸுதேவரது விலங்கு முறிந்தது. கதவு திறந்தது. காவலாளி நின்ற வண்ணம் உறங்கினன். ஆதிசேஷன் குடையானன். ஆழமான யமுனை வழி விட்டது. வஸுதேவன் கோகுலம் சென்றார். கிருஷ்ணனை யசோதையிடம் விட்டார். மாயையை தூக்கிவந்தார். கதவு தாளிட்டு கொண்டது. விலங்கு கைகால்களில் முன்போல்அமைந்தது. பெண்குழந்தை க்வா க்வா என அழுதது. காவலாளிகள் கண் திறந்தன. ஓடினர் கம்ஸனிடம். ஓடோடி வந்தான் கம்ஸன். கண்டான் கன்னிகையை. ஆஹா! தெய்வமும் பொய் கூறுகிறதே! பெண்ணுயினும் இதைக் கொல்வேன் என கொல்ல முயன்றான். இவன் கையிலிருந்து கிளம்பி ஆகாயம் சென்றது. குழந்தை எட்டு புஜங்களுடன் திவ்ய வடிவமாக நின்றது. உன்னைக் கொல்பவன் வேறிடத்திலே வளருகிறான் என்று கூறி மறைந்தது.

ஆச்சரியம் ஒருபக்கம். அச்சம் ஒருபக்கம். வஸுதேவனையும் தேவகியையும் விடுவித்து தனது குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டினன். வேதாந்தம் பல பேசினன். அமைச்சர்களை அழைத்து யோசித்தான். பிறந்து பத்து நாளைக்குள் இருக்கும் எல்லா குழந்தைகளையும் கொல்லும்படி ஆணையிட்டான். வேள்வியின் மூலமாக விஷ்ணுவுக்கு பலந்தரும் வேதியரையும் பசுக்களையும் கொல்வோமென்றார் மந்திரிகள். பிரஸவித்த களைப்பால் யசோதையும்,

பகவன் மாயையால் அருகிலுள்ளோரும் யசோதைக்குண்டானது ஆணு பெண்ணு என அறியவில்லை. கிருஷ்ணனையே பெற்றதாக நினைத்தனர். தான்யம் கோ வஸ்தரம் முதலியவைகளை தானம் செய்தார். கோகுலமெல்லாம் ஒரே உத்ஸவம். அனைவரும் தமக்கே இத்தகைய அத்புதமான சிசு பிறந்ததாகக் கருதினர். காணிக்கைகளுடன் கூட்டம் கூட்டமாக வந்து குழந்தையைப் பார்த்தனர். பகவான் பிறந்தது முதல் கோகுலத்தில் லக்ஷ்மீ விலாஸம் தாண்டவமாடிற்று.

## பூதநாதிவதம்.

நந்தன் கம்ஸனுக்கு வருஷவரி செலுத்த வந்தான். வஸுதேவர் அவரிடம் சென்று வயதானபின் உமக்கு ஆண் சிசு பிறந்தது. பூர்வபுண்ய பாக்யம். குழந்தையை ஜாக்ரதையாகக் காப்பாற்றும். பல துன்பங்கள் வரும் என்று கூறி அவரைக் கொண்டாடினுர். நந்தன் வஸுதேவரை நோக்கி எட்டு குழந்தைகளையும் இழந்தீரே என வருந்தினுர். இதனிடையில் கம்ஸனுல் தூண்டப்பட்ட பூதனை என்ற அரக்கி ஏனைய கோபிகளைப்போல் அழகிய உருவுடன் வந்து சிசுவை எடுத்தாள். விஷமுள்ள முலையைப் பரிவுடன் பருகக் கொடுத்தாள். எல்லாமறிந்த விஷ்ணு பாலுடன் அவள் உயிரையும் உறிந்தார். மிக பயங்கரமான பெரிய ராக்ஷஸ உருவுடன் வீழ்ந்திறந்தாள். ஒவ்வொரு அங்கமாக வெட்டிக் காட்டில் போட்டு வநத்துடன் தீ வைத்தனர்.

கிருஷ்ணனுக்கு நேர்ந்த இதைக்கண்டு கோகுலமெலாம் அலறிற்று. பல பரிஹாரம் செய்தனர். மற்ருேர் ஸமயம் ஒரு அரக்கன் தொட்டிலில் கட்டியிருந்த வண்டியில் புக அதைக் காலால் உதைத்து தூள் தூளாகும்படி செய்தார். திருணுவர்த்தன் சுழல் காற்றுவடிவமாக வந்து எல்லோர் கண்களிலும் மண்ணைத்தூவி குழந்தையை மேலே தூக்கிச்சென்ருன். பகவான் அவன் கழுத்தைக்கட்டி இறுக அழுத்தியதால் குழந்தையுடன் விழுந்து உயிர் துறந்தான். ஒரு ஸமயம் குழந்தை கொட்டாவிவிட அதன் வாயில் கடல் மலை நதி சந்திர ஸூர்யர் அனைத்தையும் கண்டு யசோதை ஆச்சரியமடைந்தாள்.

## கிருஷ்ண பால லீலே.

வாஸுதேவர் சொற்படி குலாசார்யரான கர்க்கர் கோகுலஞ்சென்று ரோஹிணியிடம் பிறந்து வளரும் பலராமனுக்கும் கிருஷ்ணனுக்கும் ஜாதகர்மா முதலிய வைகளைக் கம்ஸ பயத்தால் ரஹஸ்யமாகச் செய்தார். ஸங்கர்ஷணன் பலராமன் என்றும் வாஸுதேவன் கிருஷ்ணன் என்றும் பெயரிட்டார். இருவரும் சேர்ந்து தவிழ்ந்து செல்வர். கன்றின் வாலேப்பிடித்துப் பின்னே செல்வர். கோபிகைகளுக்குப் பேரானந்தம் உண்டாகும் வகையில் பல விளையாட்டுகள் விளையாடுவர். கன்றை அவிழ்த்து ஊட்டவிட்டு ஓடுவான். தயிர் பால் வெண்ணெகளைத் திருடி தானும் உண்டு குரங்கு பூனை முதலியவற்றிற்கும் அளிப்பான். அவை உண்ணுவிட்டால் தயிர் பானையை உடைப்பான். இருட்டிலிருந்தால் தனது ரத்ந ஆபரண ப்ரகாசத்தால் கண்டுபிடிப்பான். உயரே இருந்தால் முக்காலிமீது ஏறுவான். திருடா என்ருல் நீ தான் திருடன், நான் வீட்டுக்காரன் என்பான். தொட்டிலில் உறங்கும் சிசுவைக்கிள்ளி அழவிடுவான். பால் தயிர் இல்லா வீட்டில், பூஜைக்குக் கோலம்போட்ட விடத்தில் மூத்திரம் பேய்வான். வெண்ணெயுங்கையுமாக யசோதையிடம் இழுத்துச்சென்றபோது ஆங்கிருப்பான் கிருஷ்ணன். இவனைப் பிடித்து வந்தவளது மகனுகவே இருப்பான் அவள் கையில்.

மண்ணைத்தின்ருயா? வாயைத்திற என்று யசோதை கூற தன் வாயிலே பதினான்கு உலகங்களேயும் காட்டினர். ஆச்சரியமடைந்து பரமாத்மா என அவரைத் துதித்தாள். மாயையால் அவள் அறிவை மறைத்தார். பெற்ற பாக்யமே கிடைத்தது வஸுதேவர்க்கு. நந்தனும் யசோதையும் வஸுக்களில் சிறந்த துரோணர் தரை என்பவர். பகவானிடத்தில் பக்திவேண்டும் என்று வரம் வாங்கி வந்ததால் இந்த லீலேகளைக்கண்டு அன்பெனும்பக்தி அவர்களுக்குப் பெருகிற்று.

யசோதை மடிமீது படுத்து பால் பருகினர் கிருஷ்ணன். அவளது கரங்கள் தயிற் கடைந்தன. அடுப்பில் வைத்த பால் பொங்கியதைக் கண்டு கிருஷ்ணனைக்

கீழே விட்டு விட்டு பாலை இறக்கச் சென்றாள். கிருஷ்ணன் அதற்குள் தயிர் பானையை உடைத்துவிட்டு ஒரு உள்ளே பதுங்கினார். வீடெல்லாம் ஒரே தயிர்! கோபங்கொண்டு கிருஷ்ணனைப்பிடித்து உரலுடன் கட்ட ஆரம்பித்தாள். ஒரு ஜாண் குறைந்தது கயிறு. மற்றொன்றைக் கொண்டுவந்தாள். எத்தினை வந்தாலும் ஒரு ஜாண் குறைவதைக்கண்டு தாய் வருந்தினாள். கருணையால் உரலில் தானே கட்டுப்பட்டார் கண்ணன். இதனால் தாமோதரன் என்ற காரணப் பெயருண்டானது. தாய் யமுனைக்குச்சென்றாள் நீராட. உரலுடன் தவிழ்ந்து வந்து தோட்டத்திலுள்ள இரு அர்ஜுந மரங்களுக்குள்ளே நுழைந்து அவைகளை முறித்துத் தள்ளினார். அங்கிருந்து நளகூபரன் மணிக்ரீவன் என்ற இருவர் தோன்றினர். ப்ரபோ! குபேரனது புத்திரர்களான நாங்கள் கங்கையில் மங்கையருடன் ஜலகிரீடை செய்தோம். அங்கு வந்த நாரதரைக்கண்டு பெண்கள் ஆடை உடுத்தி அவரைப் பணிந்தனர். நாங்கள் வஸ்த்ரயின்றி விளையாடிக்கொண்டிருந்தோம். தாமதத்தால் கண் தெரியாதவனுக்கு எழ்மையே கண் மருந்து என எங்களை மரமாகச் சபித்தார். பணிந்துவேண்ட தங்களால் சாபமோசநம் என்றார். எங்களுக்கு நற்புத்தியும் ஸதாசாரமுமளிக்கவேண்டுமென வணங்கி சென்றனர். கிருஷ்ணனைத்தேடி உரலுடன் தோட்டத்தில் கண்டனர். நந்தனோடு அனைவரும் யசோதை செயலைக் கண்டித்தனர்.

ஒருநாள் பழம் விற்பவளிடம் கை நிறைய தான்யத்தை அளித்து பழம் வாங்கிக்கொண்டார். அவரளித்த தான்யமெலாம் நவரத்நமாயின. கோகுலத்தில் பற்பல துன்பங்கள் நேரிடுவதால் பாவநமான பிருந்தாவநம் செல்வோமென அனைவரும் அங்கு குடி எறினர். இடச் சிறுவர்களுடன் கூடி கன்று மேய்க்க ஆரம்பித்தார். வத்ஸன் எனும் அரக்கன் கன்றுருவமெடுத்துக் கண்ணனைக் கொல்லவந்தான். அவனது பின் கால்களைப்பிடித்துத் தூக்கி விளாமரத்தின் மீதெறிந்தார். அஸுர ரூபத்துடன் விழ்ந்து மாண்டான். தேவர் பூமாரிப்பொழிந்தனர். பகாஸுரன் பெருங் கொக்காகி பகவானை விழுங்க அவனது கழுத்தைக் கொளுத்தினார் தீ போல். அவரைக்கக்கி

மூக்கால் கொற்றிக் கொல்ல வந்தான். அலகுகளைப் பிடித்திழுத்து கொன்றூர் அவனையும். ஐந்து வயதிற்குள்ளாக இவ்வளவு லீலைகளையும் செய்தார். பலவகை வாத்ய கோஷங்களுடன் எண்ணிறந்த கன்றுகளை ஒட்டிக்கொண்டு இடைச்சிறுவர் அனைவரும் ராமகிருஷ்ணர்களுடன் வநஞ் சென்றனர்..

அகன் எனும் அரக்கன் மலைப்பாம்பு உருவெடுத்து தனது வாயை ஒரு குஹைபோல் திறந்து படுத்திருந்தான். கன்றுகளுடன் சிறுவர் உள்ளே நுழைய பகவான் வந்தவுடன் அனைவரையும் விழுங்க ஆரம்பித்தான். பகவான் பெரிய உருவம் எடுத்து மூச்சுவிடமுடியாமல் அவன் தொண்டையை அடைத்துக்கொன்றூர். விஷஜ்வாலையால் மாண்ட அனைவரையும் எழுப்பினூர். **பிரும்மதேவர்** ஒரு ஸமயம் கிருஷ்ணனது லீலா வைபவத்தை அனுபவிக்கக் கருதி வெகு தூரத்தில் மேய்ந்துக்கொண்டிருந்த கன்றுகளை எல்லாம் தூக்கிச்சென்றூர். யமுனையில் அவரவர் கொண்டுவந்த சித்திரான்னங்களை ஒருவர்க்கொருவர் அளித்து ஆநந்தமாக புஜித்துச் கொண்டிருந்தனர். ஒருவன் கன்றுகளைக்காணவில்லையே என்று கதற நான் பார்த்து ஒட்டி வருகிறேன் நீங்கள் உண்ணுங்கள் என்று பகவான் கிளம்பினூர். அதற்குள் சதுர்முகன் இடச்சிறுவர்களையும் தூக்கிச்சென்றூர். பகவான் அதை அறிந்து அவ்வளவு கன்றுகளாகவும் சிறுவர்களாகவும் ஆகி வழக்கப்படி மாலையில் வீடு சென்றூர். அன்றுமுதல் தாய்மார்களுக்கு தங்கள் புத்திரரிடமும் பசுக்களுக்குக் கன்றுகளிடமும் அளவுகடந்த அன்பு உண்டாயிற்று. ஆநந்த வஸ்துவன்றோ அங்ஙனம் அமைந்தது? சிலநாள் சென்றபின் பிரும்மன் வந்து தன்னிடமுள்ள கன்றைப்போல் சிறுவரைப்போல் கண்ணனிடம் ஒரு கோஷ்டியைக்கண்டு வியந்தார் உண்மை அறியாமல் விழித்தார். பகவான் தன் மாயையை அகற்ற உண்மையை உணந்து துதித்துச்சென்றூர். ஒராண்டு பிரிந்திருந்தும் சிறுவர் அறைக்ஷணமாகக் கருதி கிருஷ்ணு நீ எனது அன்னத்தைப் புஜி என்று கூறினர். அவன் லீலையை யாரே அறிவர்?

இன்னும் சிறிது வயதானது. கிருஷ்ணன் மாடு மேய்க்க ஆரம்பித்தார். கிருஷ்ணன் புல்லாங்குழல் ஊத

அதைக்கேட்டு தன்னை மறந்த பசுக்களும் சிசுக்களும் கூடவே சென்றனர். நீண்ட பனைமரத்தில் வாஸனை நிறைந்த கனிகளைக் கண்டு இடச் சிறுவர் ஆசைகொண்டனர். பலராமன் அதை அசைக்க கனிகள் விழ அன்புடன் சிறுவர் புஜித்தனர். ஆங்குள்ள தேனுகன் கழுதை உரு தாங்கி பின்கால்களால் பலராமனை உதைத்தான். அவர் கால்களைப் பிடித்துத் தூக்கி பனைமரத்தின்மீது எறிந்தார். தேனுகன் பிணமாக விழுந்தான். மரத்தின்மேல் மரம் சாய்து கனிகள் உதிர்ந்தன. சிறுவர் புஜித்தனர்.

## காளீய மர்த்தநம்.

பலராமனை அழைக்காமல் ஒரு நாள் வனஞ்சென்றார். ஆங்கொரு மடுவில் காளீயன் எனும் அஸுர ஸர்ப்பன் தங்கி அதன் நீரைப் பருகுபவரையும் மேலே பறக்கும் பக்ஷிகளையும் விஷ ஜ்வாலையால் கொன்றுவந்தான். இதை அறிந்த பகவான் அதில் குதித்தார். சீறிவந்த ஸர்ப்பம் கால் முதல் தலை வரை அவரைச் சுற்றிக்கொண்டது. கோபர் மூர்ச்சை ஆயினர். பசுக்களும் சிறுவர்களும் கதறினர்கள். பிருந்தாவனத்திலிருந்து நந்தன் முதலிய அனைவரும் ஓடிவந்து தாங்களும் அதில் வீழ்ந்து இறக்க முயன்றனர். பலராமன் கிருஷ்ணனது மஹிமையைக் கூறி அஞ்சாதீர் என்றார். பகவான் ஸர்ப்பத்தின் கட்டை அவிழ்த்து ஒவ்வொரு தலையையும்அது தூக்கும்போது வாலைப் பிடித்துக்கொண்டு ஐந்து தலைமீதும் நடநமாடினார். தேவர் வானிலிருந்து தக்கபடி தாளத்துடன் பாடினர். காளீயன் பலம் குறைந்தது. மதம் தளர்ந்தது. பத்நிகளும் பகவானைத் துதித்தனர். தனது திருவடி பட்டதால் இனி அவனுக்கு அச்சமில்லை என வெளியில் செல்லும்படி கூறினார். அந்த மடுவும் புண்ய தீர்த்தமாயிற்று. ரமணக த்விபத்திலிருந்த காளீயன் கருடனுக்குத் தன் இனத்தார் தந்து வந்த பலியைத் தானே புஜித்து கருடனுடன் போர்புரிந்து பயந்து இதில் ஒளிந்தான். ஸௌபரியின் சாபத்தால் கருடன் அங்கு வருவதில்லை

## பிரலம்ப வதம்.

ஒரு ஸமயம் கோபர் இருவர் சேர்ந்து விளையாட்டுச் சண்டை செய்தனர். அதில் தோற்றவர் ஜெயித்தவனைத்

தோளில் தூக்கிக்கொண்டு ஓரிடத்தில் விடுவது பழக்கம். பிரலம்பாஸுரன் கோபர் வேஷங்கொண்டு பலராமனுடன் விளையாடினான். அரக்கன் தோற்றதால் பலராமனைத் தூக்கிக்கொண்டு விடவேண்டிய இடத்தில் விடாமல் வெகு தூரஞ் சென்றான். பலராமன் முஷ்டியால் அவன் தலையில் குட்டி அவனை விழ்த்தினார்.

ஒரு ஸமயம் பசுக்களைத் தேடிக்கொண்டு சென்ற கோபர் காட்டுத் தீயில் அகப்பட்டுக்கொண்டு கிருஷ்ணா! எனக் கதறினர். அஞ்சேல்! அனைவரும் கண்ணை மூடிக் கொள்ளுங்கள் என்று கூறி அக்நியை நீர்போல் குடித்து அவர்களைக் காப்பாற்றினார். பகவான் பசுக்களுடன் வனஞ் சென்றபோது கோபிகைகள் அவரது பிரிவைப் பொறுக்காமல் புலம்பினர். அவர் சரிதத்தைப் பாடினர்.

## கோபிகா வஸ்திரஹரணம்.

கோபகன்னிகைகள் கிருஷ்ணனே பதியாக வேண்டுமென மார்கழிமாதம் முப்பது நாளும் குளிரில் நீராடி காத்யாயநீ விரதம் செய்தனர். காலையில் எழுந்து ஒவ்வொருவளாக எழுப்பி கை கோத்துக்கொண்டு கிருஷ்ணனது சரிதத்தைப் பாடிக்கொண்டு போவார்கள். [இது தான் ஆண்டாளால் திருப்பாவையாகப் பாடப்பட்டது]. விரதத்தின் பலனை அளிக்க யோசிஜனை பகவான் கோப குமாரர்களுடன் யமுனை வந்து தீரத்திலுள்ள கோபிகைகளின் வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு கதம்ப மரத்தின் மீதேறினார். பெண்களே! கரை ஏறிவந்து வஸ்திரத்தை வாங்கிக்கொள்ளுங்கள். நீங்கள் ஹவிஸ்ஸை மாத்திரம் சாப்பிட்டு விரதம் செய்கிறீர்கள். நான் பரிஹாஸம் பண்ணவில்லை என்றார். பெண்கள் எப்படி வஸ்திரமின்றி வருவர்? நயமாகவும் பயமாகவும் கேட்டனர். வஸ்திரமின்றி ஸ்நாநம் செய்தது பாபம். அது அகல இரு கரங்களையும் சிரத்தின்மீது வைத்து அஞ்ஜலி செய்யுங்கள் என்றார். ஒரு கரத்தால் உடலை மூடிக்கொண்டு ஒரு கரத்தால் நமஸ்கரித்தனர். இது ஒரு அபசாரம். ஆதலால் பாபம் அதிகமாயிற்று என்றார். அதனால் இரு கரங்களையும் குவித்து வஸ்திரத்தைப் பெற்றனர். பகவானும் வரும் இரவுகளில் ராஸக்கிரீடை மூலமாக உங்கள் விருப்பம் பூர்ணமாகும் என்றார்.

இது ஒரு கேவலமான காரியமல்ல. பகவானை நாடி விரதம் செய்பவர், ஆசாரங் குறையாமல் தன்னை மறந்து பகவான் ஒருவரையே ஏகாக்ரமாக சிந்திக்க வேண்டுமென்று கற்பித்தார். இப்படித் தன்னை மறந்து ஹா! கிருஷ்ணா! என்றபோதுதான் திரௌபதிக்கு வஸ்திரமளித்தார்.

## யக்ஞ பத்தினிகளுக் கருள்.

வநத்தில் ஒரு நாள் கோபர்கள் கிருஷ்ணா பசிக்கின்றதே! உணவளியும் என்றார்கள். உலகிற்கே உணவளிக்கும் உத்தமரல்லவா? அருகில் வேள்வி செய்யும் வேதியரிடம் சென்று என் பெயரைக் கூறி அன்னங் கேளுங்கள் என்றார். அவர்கள் கர்ம மார்க்கத்தையே கடைபிடித்தவர். இல்லை என்று கூறுமலும் அன்னமளிக்காமலும் காரியமே கண்ணாயிருந்தனர். கோபர்கள் இதைக் கூற அவர்களது பத்தினிகளிடம் சென்று கேளுங்கள் என்றார். இதைக் கேட்டவுடன் ஸ்திரீகள் ஆங்குள்ளதைப் பக்குவம் செய்து தாங்களே பகவானுக் களிக்க ஓடோடி வந்தனர். புருஷர் தடுத்ததையும் லக்ஷியம் செய்யவில்லை. கிருஷ்ணன் அவர்களை நோக்கி நீங்கள் நானே ஆத்மா வானதால் என்னிடம் அளவுகடந்த அன்புகொண்டு வந்தீர்கள். இனி யாகசாலை சென்று பதி செயலில் ஈடுபடுங்கள் என்றார். தியாகிகள்போல் வந்துளோம். இனி அவர்கள் எங்களைச் சேர்க்கவும் மாட்டார்கள் என்று அவர்கள் கூற அஞ்ச வேண்டாம் உங்களை வரவேற்பர் செல்லுங்கள் என்றார். அங்ஙனமே அவர்களது குற்றத்தை மறந்து கர்மாவில் ஈடுபடுத்தினர். ஒருவள் மாத்திரம் வரமுடியாமல் உள்ளே பூட்டப்பட்டாள். அவளுக்கு முக்தியைத் தந்தார். அவர்களளித்த உணவை அனைவருக்கு மளித்துத் தானும் புஜித்தார் பகவான்.

## கோவர்த்தனோத்தாரி.

நந்தன் முதலியவர் இந்திர பூஜை செய்ய முயற்சிக்கும்போது அதை நிறுத்தி மழைக்குக் காரணமான வேள்வியைச் செய்யும் வேதியரையும் பூஜிக்கும்படிச் சொன்னார். இந்திரன் சினங்கொண்டு ஓயாமல் கல் மழை பொழியும்படிச் செய்ய கோவர்த்தந மலையைக் குடைபோல் தூக்கிப் பிடித்து ஏழுநாள் அசையாமல் நின்றார்.

அதனடியில் பசுக்களும் இடையர்களும் குளிர் மழை யின்றி ஆநந்தமாக வஸித்தனர். சக்கிரன் செறுக்கு அழிந் தது. தன்னினத்தைக் காத்ததால் காமதேனு பகவானுக்கு கோவிந்த பட்டாபிஷேகம் செய்தாள். அவளுடன் வந்து தனது குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டினன் இந்த்ரன். ஏகாதசி உபவாஸமிருந்து காலே என நள்ளிருளில் ஸ்நாநம் செய்யச் சென்றார் நந்தன். வருணகிங்கரன் அவரைத் தூக்கிச் சென்றான். தந்தையை வருணலோகஞ் சென்று மீட்டுவந்தார் கிருஷ்ணன்.

## ராஸக் கிரீடை.

[இது பற்றிய தத்துவமறியாதவர் இதைக் குறை வாகக் கூறுவர். ரஸஸ்வரூபி கிருஷ்ணன் என உபநிஷத் கூறுகிறது. பார்த்தாலும் நினைத்தாலும் தொட்டாலும் இத்தனைக்கும் தித்திக்கும் இனிய சுவை பகவான். ஆத லால் இதை அனுபவிக்க சிவனும் ஆஸுரி எனும் நைஷ்டிக பிரும்மசாரியும் கோபிகைகளாயினர். பெண்ணுக இருந்து உலகிற்கு ஒரே நாயகன் கிருஷ்ணனது ஸ்பர்சத்தாலும் காநம் முதலியவைகளாலும் உண்டான ரஸத்தை அனுப வித்துக் காட்டினர். கோபிகைகளாக வந்தவரில் பலர் முனிவர். ஆதலால் இதில் சிற்றின்ப பேச்சுக்கே இட மில்லை. வயதும் எட்டேதான். அதைக் குற்றமாகக் கருதினுலும் அவருக்கு அது பாபமல்ல. நிந்திப்பவருக்கே பாபம். இதைப் பிரேம பக்தியென வர்ணிக்கிறது புரா ணம்: மூலத்திலே தக்க பதில் இருக்கின்றது.]

சரத்காலம்! பூர்ணிமை இரவு! யமுனை மணல் திட்டில் நிலா விழுந்து சுவர்ணவர்ணமான பாய் விரிந்ததுபோலிருந் தது. பக்தர்களுக்குப் பேராநந்த மூட்டக்கருதினர் கண் ணன். வேணுகாநம்செய்தார். அது கோபிகைகளின் காது வழியாக உள்ளே சென்று உணர்ச்சியை எழுப்பிற்று. ஆவேசம் வந்தவர்போல் ஓடிவந்தனர். எவராலும் தடுக்க முடியவில்லை. செய்கின்ற வேலையை மறந்தனர். மனை ளனை மக்களைப் பொருளைத் தன்னையும் மறந்தனர். தாயிடம் கன்று ஓடுவதுபோல் ஓடி வந்தனர். பகவான் அவர்களை வரவேற்றார். உலக ரீதியில் பேசினர். ஸதிக் குப் பதியன்றே தெய்வம்? பணிவிடையன்றே தவம்? என்றார். விடமுடியாத ஆசைகளை விட்டோம்! நீயே கதி

என தஞ்சம் புகுந்தோம்! சந்திரன் கனலைக் கக்குமா? நீயே கதி என்று காலில் விழுந்தனர். கிருஷ்ணன் அவர்களுக்குப் பலவகையிலும் ஆநந்தமளித்தார். கோபிகைகளுக்குள் "நான் அழகுள்ளவள். என்னிடமே அவர் அன்பு அதிகம்" என சிறிது கர்வம் உண்டானது. ஒருவளை மாத்திரம் அழைத்துக்கொண்டு மற்றவர் அறியாதபடி மறைந்தார். சிறிது தூரம் சென்றபின் அந்த ஒருவளும் இனி நடக்க முடியாது. தூக்கிச் செல்லுங்கள் என்றாள். அவளையும் விட்டு மறைந்தார். பகவானைத் தேடிவந்தவர்கள் தனியே விடப்பட்ட கோபியுடன் சேர்ந்து கண்ணனது தத்துவத்தை அறிந்து பாடிக் கதறினர். இதே கோபிகா கீதம். [இதைப் பஜகோவிந்தத்துடன் பொருளையும் விளக்கித் தமிழிலே வெளியிட்டிருக்கிறோம். விலை 4 அணு]. மறுபடியும் அவர்கள் முன்னே தோன்றி ஒவ்வொருவரிடமும் ஒரு கிருஷ்ணனாகி பேராநந்தமளித்தார். அன்றிரவு பல இரவுகளாக இருந்தது அவர்களுக்கு. காலையில் கணவருடன் இருந்தனர்.

### ஸுதர்சநன் சாபமோசநம்.

ஒருசமயம் கோபர் அனைவரும் அம்பிகாவநம் சென்று பார்வதி பரமேச்வரர் பூஜை செய்தனர். ஒரு மலைப் பாம்பு நந்தனை விழுங்க பகவான் அதைக்காலால் உதைத்தார். அது நந்தனையும் தன்னுடலையும் விட்டு ஸுதர்சநன் என்ற கந்தர்வனாகி, ப்ரபோ! அழகில்லாத ஆங்கிரஸ முநிவர்களைக் கண்டு நகைத்தேன். அதனால் பாம்பாகச் சபித்தனர். உமது திருவடி பட்டவுடன் சாபமகன்றது என அவரை வணக்கித் துதித்துச் சென்றான்.

### சங்கசூட வதம்.

ஓரிரவு பகவான் கோபிகைகளுடனும் கோபர்களுடனும் விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது சங்கசூடன் எனும் குபேரனது தாஸன் ஒரு கோபிகையைத் தூக்கிச் சென்றான். கிருஷ்ணன் அவனைக் கொன்று அவனது தலையிலுள்ள ரத்தினத்தை கிள்ளி பலராமனுக்கு அளித்தார். அரிஷ்டன் என்ற அஸுரன் காளை உருவெடுத்து வர அவனையும் அறைக்கணத்தில் கொன்றார். குதிரை வேடம் பூண்டு வந்த கேசியையும் விளையாட்டில் கோப

வேடம்பூண்டு கோபர்களைத் தூக்கிச்சென்ற வியோமா ஸுரனையும் கொன்றார்.

**மதுரை செல்லுதல் :** நாரதர் கம்ஸனது விதி முடிந்ததை அறிந்து. "கிருஷ்ணன் ராமன் இருவரும் கோகுலம் சென்றது; அவர்களே கம்ஸனைக் கொல்லப் போவது" முதலியவற்றை அவனிடம் கூறி பகவானிடமும் சென்று பணிந்து விரைவில் அவனைக் கொன்று பாரத யுத்த மூலமாக பாரின் பாரத்தைக் குறைக்க வேண்டுமென வேண்டிச் சென்றார். கம்ஸன் வஸுதேவ தேவகிகளைச் சிறைப் படுத்தி அக்ரூரரை அனுப்பி ஒரு யாகம் நடப்பதாக அதற்கு ராம கிருஷ்ணர்களை அழைத்துவரச் சொன்னான். அவர் கோகுலம் சென்று கோபர்களது பக்தியைக் கொண்டாடி கம்ஸன் கருத்தைக் கூறி அவர்களை அழைத்து வந்தார். பக்தியில் சிறந்த அக்ரூரர் எல்லாவற்றையும் கிருஷ்ணமயமாகவே எண்ணி பணிந்து துதித்தார். வழியில் அவர் ரதத்திலிவர்களை விட்டு நீரில் முழுகியபோது அங்கும் ராம கிருஷ்ணரைக்கண்டு ஆச்சர்யமடைந்தார். மதுராபுர வாஸிகளுக்குக் காக்ஷியளிக்கக் கால் நடையாக ராஜவீதியில் நடந்து வந்தார். ஒரே கூட்டமாக பலரும் கண்டு களித்தனர். வெளுத்த வஸ்திரங்களை வண்டியிலேற்றிச் செல்லும் கம்ஸனது வண்ணனை நோக்கிக் கண்ணன் எனக்கொரு வஸ்திரம் தா என்றார். அவன் கண்ணனை நிந்தித்து மிறட்டினான். ஒரே அடியால் அவனைக் கொன்று வஸ்திரத்தைத் தானும் உடுத்தி அனைவருக்கும் வழங்கினார். நெசவுக்காரன் ஒருவன் பக்தியுடன் நெய்த வஸ்திரத்தைப் பகவானுக் களித்து அலங்கரித்தான். அவனுக்கு செல்வம் பக்தி ஸத்கதி அனைத்தையும் தந்தார். ஸுதாமா எனும் புஷ்பந் தொடுப்பவன் அழகிய மாலையைத் தந்தான். அதை அணிந்து கம்ஸனுக்குச் சந்தநம் கலந்து செல்லும் திரிவக்கிரா என்பவளிடம் சந்தநம் கேட்க அவளே பகவானுக்குப் பூச அவளைக் கூனில்லாமல் அழகிய சுந்தரி யாக்கினார். அவள் தன் வீட்டிற் கழைக்க பின்னர் வருவதாகக் கூறிச் சென்றார்.

தநுர்யாகம் நடக்குமிடம் சென்று வில்லை இரண்டாக முறித்தார். தன்னை அடிக்கவந்த வீரர்களை எல்லாம் கொன்றார். இதைக்கேட்ட கம்ஸன் நடுங்கினான். மரணம்

அருகிலிருப்பதைப் பல அபசகுனங்களால் அறிந்தான். குவலயா பீடமெனும் யானையைக் கொண்டு ராம கிருஷ்ணர்களைக் கொல்லும்படி பாகனுக் குரைத்தான். ஸபை கூடி உள்ளே சாணூரன் முஷ்டிகன் முதலியவர்களை மல்ல யுத்தம் செய்து அவர்களைக்கொல்ல ஏற்பாடு செய்தான். ராம கிருஷ்ணர் பாகனையும் யானையையும் கொன்று உள்ளே சென்றனர். மல்ல யுத்தத்திற்கழைத்த வீரர்களையும் கொன்றனர். ஸிம்மாஸநத்தில் வீற்று "இவர்களை விரட்டுங்கள்! கட்டுங்கள்! கொல்லுங்கள்!" என்று கூறிய கம்ஸனை இழுத்துக் கீழேத் தள்ளி அவனையும் கொன்றார். அவனது ஜீவன் பகவானது திருவடியில் புகுந்து நற்கதி பெற்றது. ஸதா அவரை நினைத்ததாலும் அவர் கையால் அவரைப் பார்த்துக்கொண்டே இறந்ததாலும் அவனுக்கு நற்கதி உண்டானது.

## ஸாந்தீபினியிடம் கல்வி.

சிறுவயதில் வீரச்செயல்களைக்கண்டு இவர் பகவான் என நினைத்த பெற்றோரையும் மற்றோரையும் மாயையால் மயக்கினார். பெற்றோரை விடுவித்தார். கர்க்காசாரியர் விதிப்படி இவர்களுக்கு உபநயநம்செய்ய, அவந்தி நகரத்திலுள்ள ஸாந்திபினியிடம் அறுபத்துநான்கு நாட்களிலே அறுபத்துநான்கு கலைகளையும் கற்றார். ப்ரபாஸ க்ஷேத்திரத்தில் பல்லாண்டுகளுக்குமுன் கடலில் இறந்த தனது புத்ரனையே குருதக்ஷிணையாகக் கேட்டார் குரு. பகவான் அங்கு சென்றார். குரு புத்திரனைப் பஞ்சஜநன் என்ற அஸுரன் கொன்றான் என்றது கடல். சங்கவடிவனை அவனைக்கொன்று பாஞ்சஜன்யமென்ற அவனது உடலிலிருந்த சங்கத்துடன் யமலோகம் சென்று சங்கத்தை ஊதினார். தர்ம ராஜன் ஓடிவந்து அவரைப் பணிந்து குழந்தையைத் தந்தான். அதை குருவிடமளித்து நல்லாசி பெற்று நாடு திரும்பினார்.

## பிரமர தூதமல்லது கீதம்.

தன்னைவிட்டுப் பிரிந்து தவிக்கும் கோபிகைகளுக்கு ஸமாதாநம் செய்யும்படி பகவான் உத்தவரைக் கோகுலத்திற்கனுப்பினார். ஆங்கு அவர்கள் வண்டைப் பார்த்து பகவானிடம் பக்தியுடன் பாடினர். அதே ப்ரமரகீதமெனும்

ஸாரமுள்ள துதி. அத்தையின் மக்களான பாண்டவர்களது க்ஷேமத்தை விசாரித்துவர அக்ரூரரை அஸ்தினபுரம் அனுப்பினர்.

## துவாரகா நிர்மாணம்.

அஸ்தி பிராஸ்தி என்ற கம்ஸனது மனைவிகள் தந்தையான ஜராஸந்தனிடம் சென்று கிருஷ்ணன் தம் புருஷனைக் கொன்றதைக் கூறி முறையிட்டார்கள். அவன் சிசுபாலன் முதலியவர்களுடன் பல அக்ஷோஹிணி ஸேனைகளைக் கொண்டு மதுராபுரியைத் தாக்கினன். பூ பாரத்தை அகற்ற எண்ணி அவ்வளவு ஸேனைகளையும் அழித்து ஜராஸந்தனை மறுபடியும் ஸேனைகளைத் திரட்டி வரட்டுமென கொல்லாமல் விட்டார். தன்னை நம்பிய யாதவர்களுக்குத் திங்கு வராதபடி கடல் நடுவில் மிக விசாலமான துவாரகை எனும் நகரத்தைப்படைத்து எல்லோரையும் அங்கு கொண்டு சேர்த்தார் ஜராஸந்தன் பலமுறை படையெடுத்துவந்து தோல்வி அடைந்தான்.

## முசுகுந்த பிரஸாதம்.

முக்யமான கொடிய அரக்கர்களை எல்லாம் கொன்றார் பகவான். ஜராஸந்தனது நண்பனான யவநன் என்ற அரக்கனைக் கிளப்பிவிட்டார் நாரதர். அவனும் எண்ணிறந்த ஸேனையுடன் வந்து பகவானைப் போருக்கழைத்தான். அவனது ஸேனைகளை வதம் செய்துவிட்டு பயந்தவரைப் போல் ஓடினர். பின்தொடர்ந்து அவர் நுழைந்த குகையில் புகுந்தான். அங்கு உறங்கும் முசுகுந்த சக்ரவர்த்தியைக் கிருஷ்ணன் எனக்கருதி காலால் உதைத்தான். அவரிடமிருந்துண்டான தீ யவநனைச் சாம்பலாக்கிற்று. அவன் தேவர்க்குதவிபுரிய ஸ்வர்க்கத்தில் பலநாள் தைத்யருடன்போர்செய்து வெற்றிகண்டான். தேவராஜன் உமக்கென்ன வரம் வேண்டுமென்று கேட்க நன்றாக நீண்ட காலம் தூங்கவேண்டும். எழுப்புபவர் எரியவேண்டும் என்றான். அவன் எதிரிலுள்ள பகவானைத் துதித்து அருளுக்குப் பாத்திரமானன். மற்றொருமுறை ஜராஸந்தன் சேனைகளை அழித்து பயந்தவர்போல் ஓடி கோமந்த மலையில் பதுங்கினர். அவன் மலைக்குத் தீ வைத்தான். பகவான் துவாரகைசென்றார்.

## ருக்மிணீ முதலியவர் கல்யாணம்.

ஆநர்த்த தேசாதிபனுன ரேவதன் தன் கன்னிகைக் கேற்ற வரனைக் கேட்க பிரும்மாவிடம் சென்று அவர் கூறியபடி பலராமருக்கு ரேவதியைத்தந்து தவம் செய்யச் சென்ருர். விதர்ப்பராஜனுன பீஷ்மகராஜனுக்கு ருக்மி முதலிய ஐந்து பிள்ளைகளும் ருக்மிணீ எனும் பெண்ணும் பிறந்தனர். அழகிற் சிறந்த ருக்மிணீ பகவானையே மணக்க விரும்பினுள். ருக்மி எனும் மூத்தவன் சிசுபால னுக்கே கொடுப்பதாக முயற்சித்தான். ஒரு பிராமணன் மூலமாக தன்னை ஆட்கொள்ள வேண்டும் என ருக்மிணி வேண்டினுள். குலாசாரப்படி கௌரீ பூஜை செய்து திரும்பும்போது அனைவரும் சூழ்ந்திருக்கையில் பகவான் ருக்மிணியைத் தூக்கிச் சென்ருர். அந்த க்ஷணம்வரை தன் மனைவியே அவள் என்றெண்ணிய சிசுபாலனும் ருக்மி முதலியவர்களும் போர்செய்து தோற்று ஓடினர். ருக்மிணியின் தாக்ஷிண்யத்தினுல் ருக்மியைக் கொல்லாமல் தலையில் ஐந்துகுடுமியை வைத்தனுப்பினுர். துவாரகை வந்து விதிப்படி ருக்மிணியை மணந்தார்.

ஸத்திராஜித் என்பவர் திநமும் பத்துபாரம் தங்கத்தைத் தரும் ஸ்யமந்தக மணியைச் சூர்யனிடமிருந்து பெற்ருர். அவனது ஸோதரன் பிரஸேநன் அதை அணிந்து வநம் சென்ருன். ஒரு ஸிம்மம் அவனைக் கொன்று மணியை எடுத்துச் சென்றது. ஜாம்பவான் சிம்மத்தைக் கொன்று மணியை எடுத்துத் தனது குஹைக்குச் சென்ருர். ஸத்திராஜித் பகவானே மணியை எடுத்தார் என்று அபவாதங் கூறினுன். பகவான் பலருடன் பிரஸேநன் வழியைப் பின்பற்றி குஹைக்குள் சென்று ஜாம்பவானுடன் போர்புரிந்தார் அவர். ஜாம்பவதியுடன் ஸ்யமந்தக மணியையும் தந்தார். தன் குற்றத்தை மன்னிக்கும்படி ஸத்திராஜித் ஜாம்பவானைப்போல் தன் பெண்ணுன ஸத்யபாமையைப் பகவானுக் களிக்க முறைப்படி இவ் விருவரையும் மணந்தார். அங்ஙனமே காளிந்தி, மித்ரவிந்தா, நாக்கிஜிதா, பத்ரா, லக்ஷ்மணு, கைகயீ என்பவர்களை மணந்தார். அஷ்ட லக்ஷ்மிபோல் அஷ்ட மஹிஷிகள் அமைந்தனர்.

**ஷோடசஸ்திரீ ஸஹஸ்ரேச:** நமது தர்மம்போல் பகவானது செயலும் பல பயன்களைத் தரும். வராஹாவதாரத்திலே பூமியிடம் உண்டான நாகன் பிராக்ஜோதிஷ மெனும் நகரிலே பல்லாயிரம் ராஜ கன்னிகைகளைச் சிறைப்படுத்தியிருந்தான். சக்ரனது தாயான அதிதியின் குண்டலங்களைக் கொண்டு சென்றான். கருடன்மீது அமர்ந்து கிளம்பினர் பகவான். முரன் முதலிய பலரைக் கொன்றார். நாகனையுங் கொன்று தன்னையே மணக்க விரும்பும் ராஜ கன்னிகைகளை துவாரகைக்கு அனுப்பினர். பகதத்தனெனும் நாகன் புதல்வனை அரசனாக்கி அதிதியிடம் குண்டலங்களைக் கொடுத்தார். நந்தநவநத்திலிருந்து பாரிஜாத தருவை எடுத்து வந்து ஸத்தியபாமை வீட்டில் வைத்தார். பதினாறு ஆயிரம் உருவமெடுத்து ஒரே முகூர்த்தத்தில் அவ்வளவு ராஜ கன்னிகைகளையும் மணந்தார். ஒவ்வொரு ஸ்திரீயிடம் பத்து புத்திரர்களும் ஒரு புத்திரியும் உண்டானார்கள்.

## அநிருத்தன்.

ருக்மிணியின் புதல்வன் பிரத்யும்நன். அவனது புத்திரன் அநிருத்தன். ருக்மி என்ற பகவானது மைத்துநன் தனது புத்திரனது புத்திரியை அநிருத்தனுக்களித்து விவாஹம் செய்வித்தான். அச்சமயம் பலராமரைச் சூதாட்டத்தில் ஏமாற்றி நகைத்தான். அவர் ருக்மியையும் அவனைச் சார்ந்தவர்களையும் கொன்றார். ஒரு ஸமயம் பாணாஸுரன் சிவனை ஆராதித்து அவரைத் தன் நகர ரக்ஷகனாக்கி ஆயிரம் கரம் பெற்று சோணிதபுரத்தில் ராஜ்யபாரம் நடத்தினன். அவனது புத்திரி உஷா உமை கூறியபடி ஸ்வப்நத்தில் ஒரு புருஷனைக் கண்டு சித்திரலேகை என்ற தோழிமூலமாக ஒருவருமறியாமல் அநிருத்தனைத் தூக்கிவந்து கன்னியாந்தப் புரத்தில் அவருடன் ரமித்திருந்தாள். இதை அறிந்த பாணாஸுரன் அவனைச் சிறைப்படுத்தினன். நாரதர் மூலமாய் இதை அறிந்த கிருஷ்ணன் பாணனோடு போர் செய்தார். கரங்களை அறுத்து, சிவன் வேண்டியபடி இருகரங்களுடன் அவனைக் கொல்லாமல் விட்டு உஷையுடன் அநிருத்தனை அழைத்துச் சென்றார். அந்த போரில் சிவ ஜ்வரமும் விஷ்ணு ஜ்வரமும் போரிட்டு சிவஜ்வரம் விஷ்ணுஜ்வரத்தைத் துதித்தது. இதை நினைப்பவருக்கு ஜ்வர துன்பம் இராது.

## நிருகன்.

கிருஷ்ணனது புத்திரர் பந்து விளையாடும்போது ஒரு கிணற்றில் விழ்ந்த பந்தை எடுக்கச் சென்றனர். அங்கே பயங்கரமான ஒரு ஓணானைக்கண்டு பயந்து பகவானிடம் கூற அவரதை இடது கையால் எடுக்க அது ஒரு அழகிய தேவனாயிற்று. நீ யார்? ஏனிந்த உடல்? என, நான் நிருகசக்கரவர்த்தி. அன்றன்றும் அளவின்றி கோதானம் செய்தேன். ஒரு பிராம்மணருக்கு அளித்த பசு எனது பசுமந்தையில் கலக்க அதை அறியாமல் மற்றொரு வேதியருக் களித்தேன். இருவரும் இது என்னுடையது. இதேதான் எனக்கு வேண்டும் என வாதமிட்டனர். அதற்குப் பதிலாக லக்ஷம் பசுக்களைத் தருகிறேன். அதை விடும் என்று யான் மன்றாடியும் அவர் ஏற்கவில்லை. யான் இறந்தபின் யமதர்மன் புண்யபலனை முன்னே அனுபவிக்கிறாயா? பாபபலனை அனுபவிக்கிறாயா? என்றார். பாபபலனை முதலில் அனுபவிப்பதாகக் கூறினேன். ஆனால் நரகம் செல் என்றார். இந்த ஜன்மா எடுத்தேன். பிராம்மணனது பொருளை அபஹரித்த பாபத்தால் இந்த துன்பம் உண்டானது என்று பகவானை வணங்கி ஸ்வர்க்கஞ் சென்றான்.

கிருஷ்ணன் கோரியபடி பலராமன் கோபிகைகளை ஸமாதானம் செய்ய கோகுலம் சென்றார். கோபிகைகளுடன் யமுநாதிரத்தில் விளையாடக் கருதி அந்நதியை அருகே அழைத்தார். இவர் வாருணி எனும் மது அருந்தி மதமுள்ளவராக இருக்கிறார் என்று அவரை அது மதிக்கவில்லை. அருகிலும் வரவில்லை. தனது கலப்பையால் இழுக்க ஆரம்பித்தார். உடனே நதி அருகில் வர கோபிகைகளுடன் விளையாடிக்கொண்டிருந்தார்.

பௌண்ட்ரக வாஸுதேவன் என்ற அரசன் "நானே கிருஷ்ண அவதாரம். நீ வீணே சங்க சக்கரங்களைத் தரிப்பதால் அவைகளை விட்டுவிட்டு என்னைச் சரணாகதி அடை" என தூதனுப்பினான். உடனே அவனோடு யுத்தம் செய்து கொன்றார் பகவான். அவனது புத்திரன் சிவனை ஆராதித்து துவாரகையைக் கொளுத்தும்படித் தீயை அனுப்பினான். அதைக்கொண்டே கிருஷ்ணன் அவனது நகரை எரித்தார்.

துர்யோதநனது பெண் லக்ஷ்மணை. அவளுக்கு ஸ்வயம் வரம் நடந்தது. ஸாம்பன் எனும் கிருஷ்ணனது புத்திரன் அவளைத் தூக்கிச் செல்ல கௌரவர் அவனைச் சிறைப் படுத்தினர். பலராமன் தனது சீடனை துர்யோதநனுக்கு தூதனுப்பி ஸாம்பவனை விடச்சொன்னார். அவனதை மதிக்காததால் அஸ்தினபுரத்தையே கங்கையில் இழுத்துத் தள்ளினார். உடனே ஸாம்பனை விடுவித்து அவரை வணங்கி கௌரவர் நகரைக் காத்தனர்.

## ஜராஸந்த வதம்.

இவ்வஸுரன் பல அரசர்களைச் சிறைப்படுத்தியிருந் தான். தங்களை விடுவிக்கும்படி அவர்கள் பகவானை வேண்டினர். அதே ஸமயத்தில் பாண்டவர் ராஜஸூய யாகம் செய்துவைக்க பகவானை அழைத்தனர். எல்லா அரசர்களையும் ஜயித்து பிறகே ராஜஸூயம் செய்ய வேண்டும். ஜராஸந்தன் மிகக் கொடியவன். அவனை முதலில் ஜயிக்கக்கருதி பீமனையும் அர்ஜுநனையும் அழைத் துக்கொண்டு பிராம்மண வேஷம் பூண்டு அவனிடம் சென்று யாசித்தார். அவன் தருவதாகக் கூறியபின் மூவரில் ஒருவருடன் யுத்தம் செய்யவேண்டுமென்றார். அவன் பீமனுடன் யுத்தம் செய்தான். அவன் இருபாதிக ளாக இரு தாய்களிடம் பிறந்து குப்பையில் எறியப்பட்டு ஜரை என்பவளால் ஒன்றுசேர்க்கப்பட்டவன். ஆதலால் ஜராஸந்தன் எனப் பெயர் பெற்றவன். இரண்டாகக் கிழித்தெறிந்தால்தான் இறப்பான் என்று கிருஷ்ணன் ஒரு கிளையைக் கிழித்து ஜாடையாகக் காண்பித்தார். பலநாள் யுத்தம் செய்துமவனை ஜயிக்கமுடியவில்லை. பகவான் காட்டிய வழியால்தான் பீமன் ஜயித்தான். ஆங்குள்ள அரசர்களை விடுவித்து பாண்டவ ராஜஸூய யாகத்தில் சிசுபாலனைக் கொன்றார். அச்சமயம் த்வாரகையைத் தகைத்து எல்லோரையும் ஜயித்த சால்வனையும் கொன் றார். தந்தவக்திரன் விதூரதன் முதலியவர்களையும் கொன்றார். பாண்டவ கௌரவப் போர் மூலம் எண்ணி றந்த வீரர்களைக் கொன்று பூ பாரத்தை அகற்றினர்.

## குசேலாநுக்ரஹம்.

பகவானுடன் சேர்ந்து ஸாந்தீபினியிடம் கல்விகற்ற குசேலர் பெரிய குடும்பி. பரம தரித்திரன். வைராக்ய

முள்ளவர். பத்தினியின் தூண்டுதலால் பகவானைத் தர்சிக்கச்சென்றார். காணிக்கையின்றி பெரியோரைக் காணக் கூடாதென பிச்சை எடுத்து சிறிது அவிலைக் கொடுத்தாள் மனைவி. பகவான் இவரை அன்புடன் அழைத்து ராஜ உபசாரம் செய்தார். தன்னிடமுள்ள அவிலை அளிக்க அவர் வெட்கப்பட பகவான் வலுவிலே அதை வாங்கி ஒரு பிடி புஜித்தார். ருக்மிணீ மிகுதியைத் தனக்கென எடுத்துக்கொண்டாள். குசேலருக்கு ஒன்றையும் தராமல் அனுப்பினார். தனக்குச் செல்வத்தால் கர்வமும் பாபமும் உண்டாகுமென்றே கருதி பகவான் தனக்குத் தநம் தர வில்லை என ஸந்தோஷமடைந்து திரும்பினார். தன் வீட்டில் வந்து குபேரன் போன்ற செல்வத்தைக் கண்டார்.

வஸுதேவன் விரும்பியபடி அவருக்கோர் வேள்வி செய்வித்தார். தாய் கோரியபடி தனக்குமுன் பிறந்து கம்ஸனால் கொல்லப்பட்ட ஆறு குழந்தைகளையும் கொண்டுவர ராமனும் கிருஷ்ணனும் பாதாளம் சென்றனர். ஆங்குள்ள மஹாபலி பகவானைப் பூஜித்துத் துதித்தான். மரீசி என்பவரின் ஷட்புத்திரர்களான இவர்கள் பிரும்மா தான் படைத்த பெண்ணிடம் காமனைக் கொண்டதைக் கண்டு நகைத்தார்கள். அவரது சாபத்தின்படி தேவகியிடம் பிறந்து உடனே கொல்லப்பட்டு இங்கே துக்கமடைந்து கொண்டிருக்கும் இவர்களைத் தாயிடம் சேர்க்கிறேன் எனக் குழந்தைகளாகவே தாயிடமளித்தார். அவள் கட்டி அணைத்துப் பாலளிக்க தேவர்களாகி பகவானைத் துதித்து ஸ்வர்க்கஞ் சென்றனர்.

பகவானது ஸோதரியான ஸுபத்ரையை அர்ஜுநன் மணக்க விரும்பினான். பலராமன் அவளைத் துர்யோதநனுக்குத் தருவதாக இருந்தார். கிருஷ்ணன் பார்த்தனைத் துறவி வேட மணியச்செய்து மிக சாதுர்யமாக அவ்விருவர்க்கும் மணம் செய்வித்தார். வேதங்கள் பகவத் ஸ்வரூபத்தை வர்ணிப்பது **சுருத கீதா** எனும் வேதாந்த தத்துவம் நிறைந்த ஸ்துதி. பரமசிவன் சீக்ரமாக ஸந்தோஷமடைந்து கேட்ட வரத்தை அளிப்பார். விருகன் எனும் அஸுரன் சிவனை ஆராதித்து தான் எவர் தலைமீது கரம் வைத்தாலும் அவன் சாம்பலாகவேண்டுமென வரம் பெற்றான். அதைச் சிவனிடமே பரீக்ஷிக்கக் கருதினான். சிவன்

வைகுண்டம் செல்ல அஸுரனும் அவரைத் தொடர்ந்தான். மஹாவிஷ்ணு அஸுரனை நோக்கி "தக்ஷனிடம் சாபம் பெற்று பேய்போல் திரியும் சிவனுக் கேது சக்தி ? உன் தலையிலே கை வைத்துப் பார்" என்றார். அவன் அப்படிச் செய்து சாம்பலானான். ஆழ்ந்த பக்தி உள்ளவர்க்கே விஷ்ணு முக்தி தருவார்.

முனிவர் அனைவரும் ஒன்றுகூடி மும்மூர்த்திகளில் சிறந்தவர் யார் ? என்று பரீக்ஷித்து வரும்படி பிருகுமுனிவரை ஏவினர். தனது காலால் விஷ்ணுவை உதைத்தும் அவர் கோபமின்றி உபசாரம் செய்ததால் இவரே சிறந்தவர். மற்றவர் கோபமுள்ளவராதலால் சிறந்தவரல்ல என்று முடிவு கூறினர். பிருகுவின் பாதம்பட்ட இடமே ஸ்ரீவத்ஸம் என்ற அடையாளமாகும். கிருஷ்ணன் ஒரு யாகம் செய்தார். அர்ஜுனன் அங்கு வந்து, கோபத்தினால் ராஜாவை நிந்திக்கும் ஒரு பிராம்மணரைக் கண்டு காரணம் விசாரித்தார். "எனக்கு ஒன்பது குழந்தைகள் பிறந்து உடனே இறந்தன. அரசனது அதர்மத்தால்தான் இப்படி நேருகிறது. இப்போது பத்தாவது குழந்தை பிறக்கும் ஸமயம். இதையேனும் காப்பாற்ற வேண்டுமென" கோரினர். அர்ஜுனன் அபயமளித்து தானதைக் காப்பதாகவும் இல்லையேல் தீயில் விழுவதாகவும் கூறி, பிராம்மணனது வீட்டைச் சரங்களால் மூடினான். காற்று கூட நுழையாவிடத்தில் யமன் எப்படி வருவான் ? என எண்ணினான். பிறந்த குழந்தையின் உடல்கூட காணாமல் போயிற்று. உடனே தேரிலேறி எட்டுத் திக்குகளிலும் சென்று தேடினான். சிசுவைக் காணவில்லை. தீக்குளிக்க முயன்றான் சபதம் செய்தபடி. கிருஷ்ணன் அர்ஜுனனைத் தேரோட்டச் சொல்லி ஏழு கடலையும் ஏழு த்வீபத்தையும் கடந்து சென்றார். கடலிலே ஒரு அழகிய த்வீபம். அரண் மனை முதலியன காணப்பட்டன. ஆங்குள்ள திவ்ய மங்கள வடிவனான பரமபுருஷனைக்கண்டு பணிந்து துதித்தனர். "உங்களை வரவழைப்பதற்காக நான் விப்ர சிசுக்களைக் கொண்டுவந்தேன். இதோ இங்குள்ள அவர்களைக் கொண்டு சேருங்கள். அவதரித்த காரியம் முடிந்துவிட்டதால் நீங்கள் இருப்பிடம் செல்லுங்கள் என்றார் அவர். அங்ஙனமே குழந்தைகளுடன் திரும்பினர். கிருஷ்ண

னுடைய ஸகல லீலைகளையும் இங்கு சுருக்கிக் கூறித் தொண்ணூறு அத்யாயத்துடன் தசம ஸ்கந்தத்தை முடிக்கிறார் வியாஸர்.

### ஏகாதச த்வாதச ஸ்கந்த விஷயம்.

பாரதப் போரிலும் கிருஷ்ணனுடைய ஸந்ததி அதிகம் அழியவில்லை. அதையும் ஒடுக்க நினைத்தார் கிருஷ்ணன். அவரது குமாரனான ஸாம்பனுக்குக் கர்ப்பிணி வேஷமளித்து மற்றவர் ஸப்தரிஷிகளிடம் சென்று இவளுக்கு என்ன குழந்தை பிறக்கும்? எனக் கேட்டனர். அறிவுக் கண்ணால் அகிலமும் அறிந்த முனிவர், பிராம்மண பக்தனை பகவானது புத்திரர் இப்படிச் செய்வதைக் கண்டு கோபங்கொண்டனர். உங்கள் குடும்பத்தை அழிக்கும் கோடாலி பிறக்குமென்றனர். அங்ஙனமே பெண்ணாகி அவன் கோடாலியைப் பெற்றான். பகவானிடத்தி லிதை முறையிட்டனர். சக்தி இருந்தாலும் அந்த சாபத்தை அவர் தடுக்காமல் அதைத் தூள் தூளாக்கி பிரபாஸ தீர்த்தத்தில் போடும்படிக் கூறினார். அவைகள் கோரைகளாயின. எல்லோரையும் பிரபாஸத்திற்கு அழைத்துச் சென்றார். ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டு அந்தக் கோரைகளா லடித்துக்கொண்டு அனைவரும் மாண்டனர்.

நாரதர் வஸுதேவனுக்கு பாகவத தர்மம் கூறியது. கலியுகம். பகவானும் நிமிக்குத் தர்மம் கூறியது. நிமிக்கு ஜாயந்தேயர் கூறும் உபதேசம், பகவத் பூஜாவிதி, ஜாயந்தேயன்; பகவதவதாரம், பக்தி இல்லாதவர் நிலை முதலியவைகளைக் கூறுதல் ஆகியவைகளை வர்ணித்தார். பிரும்மாதி தேவர் கோரியபடி பகவான் வைகுண்டஞ் செல்ல ஆரம்பித்தார். உத்தவர் தன்னையும் அழைத்துச் செல்ல வேண்டுமென வேண்ட பகவான் உத்தவருக்கு அவதூதர் கூறிய இருபத்துநான்கு குருவிருத்தாந்தத்தையும் கூறித் தடுத்தார்.

### இருபத்துநான்கு ஆசார்யர்களின் உபதேசம்.

யதுவுக்கு அவதூதர் கூறினார்: 1. பூமி—பொறுமையாயிரு. 2. வாயு—எதிலும் ஸம்மந்தமின்றி ஸஞ்சரி, 3. ஆகாசம்—எதிலும் பற்றில்லாதிரு. 4. ஜலம்—பிறரையும் சுத்தமாக்கி நீயும் சுத்தமாயிரு, 5. அக்நி—எல்லாவற்றையும் ஏற்றுக்கொள், மலத்தை ஏற்காதே. 6. புரு—ஸம்ஸார

வலையில் சிக்காதே, 7. சந்த்ரன்—எல்லோருக்கும் ஸந்தோஷத்தை அளி, 8. சூர்யன்—பேதமின்றி ஸமமாக இரு, 9. மலைப்பாம்பு—வரவேண்டியது நீ இருக்குமிடத்தில் வரும், 10. கடல்—எப்போதும் ஒரே நிலையாயிரு, 11. வெட்டுக்கிளி—விஷயங்களில் விழாதே, 12. தேனீ—யாரையும் இம்ஸிக்காதே, 13. யானை—ஸ்பர்ச ஸுகத்தால் அழியாதே, 14. தேன்வண்டு—பொருளைத்தேடி அனுபவிக்காமல் சேர்த்து வைக்காதே, 15. மான்—கானத்தில் மோஹிக்காதே, 16. மீன்—ருசியால் ஏமாறாதே, 17. பிங்களா எனும் தாஸி—சோரபுருஷனுக்குக் காத்திருந்து ஏமார்ந்து பகவானால் இன்புற்றாள். உலகைவிட்டு பகவானை அடை. 18. குருவி—பிறர் விரும்பும் பொருளை விட்டுவிடு, 19. குழந்தை-சிந்தையில்லா திரு, 20. குமாரீ-சத்தம் செய்யும் வளைகளை நீக்கி ஒன்றையே தரித்தாள். சத்தம் செய்யும் கூட்டத்தைவிடு. தனித்திரு. 21. வேடன்-குறியிலே கண்ணுயிரு, 22. ஸர்ப்பம்—தனக்கென இடந்தேடாதே, 23. சிலந்தி—தானே நூலை உண்டுபண்ணி அதைத் தன்னிடத்திலேயே லயம் செய்துகொள்கிறது. ஈசனே உலகைப் படைத்து தனக்குள் லயிக்கும்படிச் செய்கிறார். 24. பட்டுப்பூச்சி—தன்னைக்காக்க தன்மேல் நூலைப்போத்துக்கொள்கிறது. உன்னை ஈச்வர ஸ்வரூபத்தால் மூடிக்கொள் என இந்த ஆசார்யர்கள் எனக்கு இந்த தத்துவங்களை உபதேசித்தனர் என்றார் அவதூதர்.

பகவான் உத்தவருக்கு ஜீவன் ஏன் ஸம்ஸாரியாகிறான்? பந்தம், மோக்ஷம், ஸாதுக்கள், பக்தி, ஸத்ஸங்கம், கர்ம, கர்மாவை விட்டவர் கதி, எப்போது? எப்படிக் கர்மாவை விடுவது? ஸத்துவத்தால் வித்யை விருத்தியாவது, ஸநகாதிகளுக்கு ஹம்ஸ ரூபியாயிருந்து பகவான் உபதேசித்தல், பக்தியே முக்திக்குப் பரம ஸாதநம். தியாந யோகம், அணிமாதி ஸித்தி, பகவத் விபூதி, நான்கு ஆச்ரம தர்மங்கள், க்ஞாநம், சமதமாதிகள், கர்மயோகம், காமிகளின் தோஷம், தத்துவபேதம், பிரகிருதி புருஷன் ஜநந மரணம், **பிக்ஷு கீதா** ஸாங்கிய தத்துவம், ஸத்வகுண விருத்தி, ஸத்ஸங்க பலன், துஷ்ட ஸங்க பலன், **ஐள கீதா** மூர்த்திபேதம், அதன் பூஜாவிதி முதலியவைகளை உபதேசித்துதான் பாகவதத்தில் இருப்ப

தால் பதரிகாசிரமம் சென்று பாகவத தர்மங்களை பிரசாரம் செய் எனக் கூறினர். உத்தவர் பதரிகாசிரமம் சென்றார்.

யாதவர் அனைவரும் இறந்தபின் பலராமன் யோகத்தால் உடலை விட, பகவான் அரசமரத்தடியில் சாய்ந்து உட்கார, இரும்புக் கோடாலியின் ஒரு துண்டால் செய்த பாணத்தைக்கொண்டு வேடன் மானென எண்ணி பகவானது காலில் அடித்தான். அருகில் வந்து விஷயமறிந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டினன். பகவான் அவனுக்கு நற்கதி அளித்து அழுதுகொண்டிருக்கும் தாருகனை நீ வஸுதேவரிடம் சென்று ஏழுநாளில் கடல் துவாரகையை விழுங்கப்போகிற தென்றும், இந்திரப்பிரஸ்தம் சென்று ஸ்திரீகளைப் காப்பாற்றும்படி அர்ஜுனனிடம் கூறென்றும் அனுப்பினர். ஸகல தேவர்களும் விமானங்களுடன் வந்து துந்துபி முழங்கி பகவானை அழைத்துச் சென்றனர். இதைக் கேட்ட வஸுதேவர் முதலியவரும் அவர் பத்நிகளும் கிருஷ்ண பத்நிகளில் சிலரும் உடலை விட்டார்கள். பகவானிருந்த இடத்தை மாத்திரம் விட்டுவிட்டு கடல் துவாரகையை விழுங்கிற்று. பகவானது சரிதத்தைப் படித்தாலும் கேட்டாலும் பாபமகலும். நற்கதி உண்டாகும்.

கலியில் பிறக்கப்போகும் ராஜ வம்சத்தைக் கூறி நந்தன் என்பவருடன் ராஜகுலம் முடிந்துவிடும். மஹாநந்தி என்ற அரசனுக்கு சூத்திர ஸ்திரீயிடம் பிறந்தவர் நந்தன். அது முதல் சூத்திர ராஜர்களே பூமியை ஆள்வர். நவநந்தர்களை ஒரு பிராம்மணன் (சாணக்யன்) வென்று சந்திரகுப்தனுக்கு முடிசூட்டுவார். சுங்கர், காண்வாயகர், ஆந்திர ஜாதியர் இவர்கள் ஆண்டபின்பு மிலேச்சரைப்போல் வேதசாஸ்திரங்களை நிந்தித்து பிறர் பொருளை அபஹரிப்பவர் அரசாள்வர். அதி விருஷ்டி அநாவிருஷ்டி நோய் பஞ்சம் அரசாங்க வரி இவைகள் அதிகமாகும். வர்ணாசிரம தர்மம் அழியும். பாஷண்டிகளே அதிகமாவர். **சம்பள கிராமத்தில் விஷ்ணுயசஸ் என்ற பிராம்மணனிடம் பகவான் கல்கியாக** அவதரிப்பார். துஷ்டர்களைச் சிக்ஷித்து தர்மத்தை நிலைநாட்டுவார். கிருஷ்ண பக்தியே கலி நோயை யகற்றும் அருமருந்து.

நித்ய பிரளயம் நைமித்திக பிரளயம் பிராகிருத பிரளயம் ஆத்தியந்திக பிரளயம் இவைகளைக் கூறி பிரும்ம ஸ்வ ரூபத்தை தியானம் செய். தக்ஷகன் கடித்தால் உனது உடலே மரணமடையும் என்று கூறி பரீக்ஷித்திடம் விடை பெற்று சுகாசார்யர் கிளம்பினர். அரசன் அவரைப் பணிந்து துதித்து அனுப்பினன். ஸர்ப்ப விஷத்திலிருந்து தன்னைக் காப்பவருக்கு உயர்ந்த ஸன்மானம் செய்வதாக அரசன் பறை சாற்றியதைக் கேட்டு கச்யபரிஷி அரச னிடம் வந்தார். அவருக்கு ஒரு நாகரத்நத்தைத் தந் தனுப்பி தக்ஷகன் வந்து அரசனைத் தீண்டி கொன்றான். அவனது புத்திரனை ஜநமேஜயன் ஸர்ப்பங்களை அழிக்க ஒரு ஸர்ப்பயாகம் செய்தான். அஸ்திகர் வந்து அதை நிறுத்தி ஸர்ப்பங்களைக் காப்பாற்றினர். வியாஸர் ஒன்றாயிருந்த வேதத்தை நான்காகப் பிரித்து சிஷ்யர் களிடமளித்தார். யாக்ஞ்ய வல்கியர் சூர்யனை உபாஸித்து வாஜஸநேய வேதத்தைப் பெற்றார். பதினெட்டு புரா ணங்களை இயற்றி வியாஸர் ஸூதர் மூலமாக அதைப் பிர சாரம் செய்தார். மார்க்கண்டேயர் மஹாவிஷ்ணுவைத் துதித்து பிரளயத்தைப் பார்த்தார். அவருக்குச் சிவனும் வரமளித்தார். மஹா புருஷ ஸ்வரூபம், பனிரண்டு ஆதித் தியர்களது ஸ்வரூபம், பாகவத சிரவண பலம் இவை களுடன் இதைப் பூர்த்திசெய்கிறார் வியாஸர். இதில் 18 புராண சுலோகங்களின் கணக்கு கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | பிராம்மம் | 10000 | 10 | பிரும்ம வைவர்த்த | 18000 |
| 2 | பாத்மம் | 55000 | 11 | லிங்க | 11000 |
| 3 | விஷ்ணு | 23000 | 12 | வாராஹம் | 24000 |
| 4 | சைவம் | 24000 | 13 | ஸ்காந்தம் | 81100 |
| 5 | பாகவதம் | 18000 | 14 | வாமநம் | 10000 |
| 6 | நாரதம் | 25000 | 15 | கூர்மம் | 17000 |
| 7 | மார்க்கண்ட | 9000 | 16 | மாத்ஸ்யம் | 14000 |
| 8 | ஆக்நேயம் | 15400 | 17 | காருடம் | 19000 |
| 9 | பவிஷ்யம் | 14500 | 18 | பிரும்மாண்டம் | 12000 |

நாம ஸங்கீர்த்தநம் யஸ்ய ஸர்வ பாப ப்ரணாசநம்,
ப்ரணாமோ துக்க சமந: தம் நமாமி பரம் ஹரிம் ||

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய.

**ஸ்ரீ பாகவதம் ஸம்பூர்ணம்.**

# 7. பவிஷ்ய புராணம்.



ஸ்ரீ வேதவியாஸர்.

மாம்பலம் குருகுல வெளியீடு.

# ஸ்ரீ பவிஷ்ய புராண மூலக்ரந்த அநுக்ர மணிகா.

## பிரும்ம பர்வா.


1 சதாநீகருக்கு ஸுமந்து கூறல்.
2 ஐந்தாவது முகத்தால் புராண ஸ்ருஷ்டி.
3 கர்ப்பதாநம் முதல் 40 ஸம்ஸ்காரம்.
4 ப்ரணவம் காயத்ரீ உபநயநம்.
5- 6 பெண்களின் சுபாசுபலக்ஷணம்.
7 விவாஹம் அதன் லக்ஷணம்.
8 ஸ்த்ரீகளிடம் எப்படி நடப்பது?
9- 15 ஸ்த்ரீ தர்மம்.
16 பிரதமாதி 15 திதி விரதங்கள்.
17 பலிராஜ்ய பிரதமா விரதம்.
18 துவிதியா விரதம் சியவனர் இந்திரன் கையை அசையாமல் செய்தது.
19- 20 துவிதியா விரதம்.
21 திருதியா விரதம்.
22- 31 சதுர்த்தி விரதங்கள்.
32 நாகபஞ்சமீ.
33- 38 நாகவிஷயம், பலவகை நாகம், விஷம்.
39- 47 ஷஷ்டீ விரதங்கள்.
48-215 அத்யாயம் வரை ஸூர்யனைப் பற்றிய ஸகல விஷயங்களையும் ரதத்தையும் வர்ணிக்கிறார்.


## மத்யம பர்வா.


1 தர்ம ஸ்வரூபம் லக்ஷணம்.
2- 4 ஸ்ருஷ்டி விஸ்தாரம்.
5 3 வர்ணமும் கடமையும்.

6 குருகுண வர்ணநம்.
7 புராண சிரவணம்.
8 புராணம் வேதாங்கம்.
9 யாகமும் பூர்த்த கர்மாவும்.
10 தோட்டம் வைத்து வளர்த்தல்.
11 கிணறு குளம் ப்ரதிஷ்டை செய்தல்.
12 தேவ விக்ரஹ லக்ஷணம் அமைப்பு.
13 கர்மத்திற்கேற்ற அக்நி குண்டம்.
14 எவ்வளவு ஹோமம் செய்வது ?
15 18 வகை அக்நிகுண்ட ஸம்ஸ்காரம்.
16 ஹோமத்திற்குபின் 16 உபசாரம்.
17 ஒவ்வொரு கர்மாவிற்கேற்ற அக்நியின் பெயர்.
18 ஹோமத்ரவ்ய பிரமாணம்.
19 ஹோம பாத்ர லக்ஷணம்.
20 பூர்ணுகுதி. பிராம்மணர் எத்தினை என்ற கணக்கு.
21 கர்ம மண்டல நிர்மாணம்.

## மத்யம பர்வா இரண்டாம் பாகம்.

1 கர்மாவிற்கேற்ற மண்டலவிதி.
2 கிரௌஞ்சம் முதலிய மண்டலம்.
3 தக்ஷிணை தராத கர்மா விணுகும்.
4 முக்ய தக்ஷிணை. அதன் விலை எது ?
5 கலச ஸ்தாபந விதி.
6 கர்மாவிற்கேற்ற 4 மாதங்கள்.
7 தேவபித்ரு கர்மாவின் காலம்.
8 மாஸ திதி கர்ம பலன்.
9 கோத்ர ப்ரவர வர்ணநம்.
10-12 வாஸ்து யாகவிதி.
13 அர்க்ய தாநவிதி.
14 கிருஹ்ய கர்மா, விதி.
15 அக்நி கர்ம ஸ்தாலீ பாகம்.

16 அக்நியின் நாக்குத் தியாநம்.
17 பிரதிஷ்டைக்கு முன் திநம்.
18 யாகத்தில் உபயுக்த பிராம்மணர்.
19 பிரதிஷ்டாவிதி.
20-21 க்ருஹ வாஸ்து பிரதிஷ்டா.

## மூன்றும் பாகம்.

1 உத்யாந ப்ரதிஷ்டை.
2 பசுமேய இடமளித்தல்.
3 சின்ன தோட்டம் வைத்தல்.
4 அச்வத்த தடாக ப்ரதிஷ்டை.
5 தாமரைக்குள ப்ரதிஷ்டை.
6-11 பில்வாதி விருக்ஷ ப்ரதிஷ்டை.
12-13 மண்டப பிரதிஷ்டா விதி.
14 பூந்தோட்டம் வைத்தல்.
15 துலஸீ பிரதிஷ்டை.
16 விருக்ஷத்தில் உத்தம மத்யமாதி.
17 கோ ப்ரசார ப்ரதிஷ்டா.
18 ஒரே நாளில் பிரதிஷ்டா.
19 காளி முதலிய பிரதிஷ்டா.
20 அரிஷ்ட சாந்தி விதி.

## ப்ரதி ஸர்க்க பர்வா 4-கண்டங்கள்.

## முதல் கண்டம்.

1 மநுமுதல் ஸுதர்சநன்வரை ராஜ்யகால நிர்ணயம்.
2 திரேதாயுகத்தில் ஸுதர்சநன் முதல் ஸம்வரணன் வரை.
3 துவாபரயுக ப்ரத்யோதன்வரை.
4 கலியுக—பவிஷ்ய கதை ஆதம், சுவேத, அநுஹ, கீநாச, மஹல்லல்ல, விரத, ஹநூக, மதாச்சில, ஹோமக, ந்யூஹ, ஸம, ஸிம, சம, பாவ, ந்யூகன் கப்பலில் முழுகுவது, ரிஷிகள் தேவியைத் துதித்து அவனைக் காத்தல்.

5 ஸிம, ஹாம, யாகூத் ஜுப்ரமாஜுஜ், மாதியூநாந, இலீச, தரனீச, கித்தும் ஹூ முதலிய மிலேச்சர் சரிதம், ஸம்ஸ்கிருதத்திலிருந்து ஆங்கிலம் ஹிந்தி முதலிய பாஷை உண்டானது.

6 ஆர்யா வர்த்தத்தில் மிலேச்சர் வருகை. காச்யப பிராம்மணர் மிலேச்சரை சிஷ்யனுக்கியது. கௌதமர் பௌத்தமதம் பிரமர, சபஹாநி, முதலிய ராஜாக்கள்.

7 கலிஞ்சரபுர அஜமேரபுர துவாரகா பிரமர வம்சத்தில் விக்ரமாதித்யன் வேதாள கதை.

## இரண்டாவது கண்டம்.

1 முதல் 22 வரை வேதாளங்கூறிய கதைகள்.

23 விக்ரமன் ஸ்வர்க்கம் செல்லுதல் பர்த்ருஹரி.

24-29 ஸத்யநாராயண விரதகதை மஹிமா.

30 பித்ரு கர்மா, சதுர்வேதி.

31 பாணிநி.

32 தோதாத்ரீ போபதேவர்.

33 கெட்ட பிராமணன் தேவியால் நற்கதிபெற்றது.

34 மஹாநந்தி ஸப்தசதி.

35 மஹாபாஷ்யம் பதஞ்ஜலி.

## மூன்ருவது கண்டம்.

1 பாரத யுத்தத்தில் மாண்டவர் கலியில் பிறப்பது.

2 பரதகண்டத்தில் 18 ராஜ்யம். சகர் ஆர்யராஜ்யத்தை அழிப்பது. விக்ரமனது பேரன் சாலிவாஹநன் சகரை ஜயித்தல். ஈசபுத்ரன் ஸாமஸிம்மனை மிலேச்ச ராஜனுக்கியது.

3 சாலி வாஹநனின் பத்தாவது அரசனை போஜன் திக்விஜயம். வாஹீக தேசத்தில் இவனுடன் பேசியது. போஜனை மிலேச்சனுக்க முயற்சி. காளிதாஸன் சண்டி யாகம் செய்து மிலேச்ச குருவைச் சிக்ஷித்தது. மகமதிய மத அடையாளம்.

4 கலிக்காக பகவானது அம்சாவதாரம். தேசராஜ வத்ஸராஜ ஜயசந்திரர் சரிதம்.

5 ஜயசந்திரனும் பிருதிவி ராஜனும்.
6 ஸம்யோகிநீ, பிருதுவிராஜ விவாஹம், யுத்தம்.
7 பீஷ்ம, பரிமள, லக்ஷ்மண, ஜகன்னாத, ஐராவதி, தாவந, மஹாவதி சரிதம்.
8 ஸஹதேவாம்ச ஜம்புகன்.
9 தேசராஜ வத்ஸராஜன் ராமகிருஷ்ணாம்சாவதாரம்.
10 கிருஷ்ணாம்சாவதார சரிதம்.
11 கிருஷ்ணாம்சனும் மஹீராஜனும்.
12 கிருஷ்ணாம்ச ஜம்புக யுத்தம்.
13 பிருதுவி ராஜன் பலகானிடமிருந்து கூர்ஜரத்தைப் பெறுதல்.
14 ஜயந்தன் இந்துலனைது.
15 சண்டிகாதேவி வாக்யம்.
16 கிருஷ்ணாம்சன் பலகாநி ஸங்கடத்தை அகற்றல்.
17 பிருதுவி ராஜனுக்கு 7 கௌரவாம்ச புத்ரர். பிரும் மாநந்த விவாஹம்.
18 இந்துலன் பத்மினிக்காக பலகாநியை ஜயித்தல்.
19 இந்துல பத்மிநீ விவாஹம்.
20 பலவர்த்தந மயூரத்வஜன் லஹர ஸ்ᵞககாளி.
21 புஷ்பவதீ கிருஷ்ணாம்ச விவாஹம்.
22 கிருஷ்ணாம்சன் சந்திராவளி தூர்த்த அரசனுடன் போர்.
23 சித்ரரேகா இந்துல விவாஹம்.
24 சந்த்ரபட்டன் பாஷாக்ரந்தமியற்றல். மஹாவதியில் ராஜயுத்தம்.
25 பிந்துகடம் என்ற இடத்திலுள்ள சாரதாநந்தன் பெண் ஸ்வயம்வரம்.
26 மஹாவதி யுத்தம்.
27 கச்சதேசயுத்தம்.
28 கிருஷ்ணாம்சனும் சோபாநா என்ற வேசியும்.
29 பௌத்தராஜ்ய சிநராஜ்ய சியாம் ராஜயுத்தம்.
30 லக்ஷண பத்மிநீ விஷய யுத்தம்.

31 கிருஷ்ணும்ச சியால ஸ்திரீ விவாஹம். காச்மீர ராஜ குமாரி மதனுவதி விவாஹம், மத்ரகேசகன்யா காந்தி மதி விவாஹம். டில்லியில் மிலேச்சர்.

32 சந்த்ரவம்ச அரசர் மாறுதல் டில்லியில் ஸஹோட்டீநன் குதுகோட்டீநனை ஸ்தாபித்தல்.

## நான்காவது கண்டம்.

1 அக்னிவம்ச வர்ணநம். பிரமாவம்சம்.

2 அஜமேரபுர—தோமரவம்ச, மிலேச்சர் க்ஷத்ரியஸ்திரீ மூலம் ஜட்ட. ஜாட்யமேஹந முதலிய நீச ஜாதி உத்பத்தி.

3 சுக்லன் பௌத்தரை ஜயித்து துவாரகையை ஆளு தல். உதயபுர, கான்யகுப்ஜ.

4 பரிஹர ராஜவம்சம்.

5 பிரும்மாவின் மாத்யான்ஹிக காலத்தில் பகவதவதா ரம்.

6 டில்லியில் ஸஹோஜ்ஜீநன் இந்துகோவில் குளங்களை இடித்தல். மோங்கலதை முரலங்க ராஜ்யம்.

7 ஸூர்யமஹிமா, தாத்ரு சர்மாமித்ர சர்மா, ராமா நந்தர், நிம்பார்க்கர்.

8 மத்வர் ஸ்ரீதரர் விஷ்ணு ஸ்வாமி, வாணீபூஷணர் பட் டோஜீ, வராஹமிஹிரர், இவர்களது சரிதம்.

9 தன்வந்தரி ஸுச்ருதர் ஜயதேவர் சரிதம்.

10 கிருஷ்ண சைதன்யர் சங்கராசார்யர்.

11 ஆநந்தகிரீ, வநசர்மா, புரீசர்மா.

12 பாரதீச கோரக்நாதர், க்ஷேத்ர சர்மா, டுண்டீரர்.

13 அகோரபந்தி, பைரவர், ஹநுமான், பாலசர்மா.

14 ராமாநுஜர் ருத்ரமஹிமா.

15 குபேராம்ச திரிலோசந வைச்யன்.

16 நாமதேவர் ரங்கணர்.

17 கபீர்நரஸ்ரீ, பீபா, நானக், நித்யாநந்தர்.

18 அச்வநீகுமார், ரைதாஸர்.

19 கிருஷ்ண சைதன்யர். விஷ்ணு ஸ்வாமீ.

20 ஜகன்னாத மஹிமை.
21 கண்வர், சுக்லமிச்ரர், அக்நிஹோத்ரி, த்விவேதி, பாண்ட, சதுர்வேதி.
22 ஸ்ருஷன் டில்லியையாளல். அக்பர், ஸலோமா, குர்தா, அவரங்க, சிவாஜி, முகலாயவம்ச, நாதர் ராமனுஜேணப்படி குரங்குகள் போக பூமியில் அரச ராதல். வியாபாரத்திற்காக பாரதநாட்டிற்கு வருதல். பார்லிமெண்ட் மூலம் பாரத ஆக்ஷி. ஆங்கில ஆக்ஷி முடிவு. மௌந ராஜ்யம்.
23 விக்ரமாப்த இருபத்தேழாம் நூற்றாண்டில் புஷ்ப மித்ரன், வைதிக தர்மோத்தாரணம். முப்பத்தோரா வது சதாப்தத்தில் இந்து தர்மம் சீர்குலைவது. கூர்ஜரத்தில் ஸோமநாதராஜன் ராஹு ராஜ்யத்தில் மிலேச்ச ஆக்ஷி. பாரத தேசமெலாம் மிலேச்ச மயம்.
24 தைத்யர் ஹரிகண்டம் செல்லுதல். கலியில் நான்கு பாதங்களிலும் தர்ம நிலை. ஆசாரம் சீர்குலைதல்
25 பிரும்மா தர்மத்தை ரக்ஷிக்கும்படி விஷ்ணுவை வேண்டுதல். கல்கி அவதாரம். 18 கல்பம் கிருதயுகா ரம்பம்.
26 கல்கிவிஜயம் வர்ணாச்ரம தர்மஸ்தாபநம்.

உத்தரபர்வ 208 அத்யாயம்.

நமது சுருக்கத்தில் அங்குள்ள விஷய ஸூசிகையே விரதங்களாக விவரிக்கப்பட்டன.

**பவிஷ்ய புராண மூலக்ரந்த அநுக்ரமணிகா முற்றிற்று.**

ஸ்ரீ வேத வியாஸாய நம:

ஸ்ரீரஸ்து.

## பவிஷ்ய புராண வரலாறு.

18 புராண கிரமத்தில் இது ஆருவது. பவிஷ்யோத்தர புராணம் என்று மற்றொன்றுமுளது. தற்சமயம் பவிஷ் மஹாபுராணம் என்ற பெயரால் நான்கு நூல்கள் இருக்கின்றன.

இனி வரப்போவதைப்பற்றி அறிய உலகம் ஆசை கொள்வது ஸஹஜம். கலிபிறந்து ஐய்யாயிரத்து ஐம்பத்தாறு ஆண்டுகள் முடிந்தன. இதுவரை வாழ்ந்த மன்னர் பக்தர் கவிகள் விக்ஞானிகள் முதலியவர்களைப் பற்றி விரிவாக இருக்கின்றன. கலி முடியும்வரை எந்த எந்த வகையான ஆக்ஷி நடக்கும் என்பதை ஸூக்ஷ்மமாகவே வர்ணிக்கின்றது. தர்மம் சீர்கெட்டபின் சம்பள கிராமத்தில் விஷ்ணு யசஸ் என்பவருக்குப் புத்ரனுகித் தோன்றி பகவான் துஷ்டர்களைச்சிக்ஷித்து கிருதயுக தர்மத்தை நிலைநாட்டுவார் என்பது மற்ற புராணங்களைப் போலவேதானிங்கு வர்ணிக்கப்படுகிறது.

இது வேறொரு கல்பத்தின் பவிஷ்யம். அதாவது வரப்போகும் விஷயம் இந்தக்கலியல்ல என்று வாதமுண்டு. புராணம் எழுதிய பிறகு உண்டானவர்களாகக் கருதப்படும் பெயர்கள் எல்லாம் இக்கலியில் நம்முன்னே பிறந்து இறந்தவர்களேயாவர். ஆனல் சிலது கொஞ்சம் மாறுபட்டிருக்கிறது. ஆதலால் தற்காலத்தவர் சிலர், தனக்குசிதமான விஷயத்தை எழுதி இதில் புகவிட்டனர் என்று கூறுபவரது வாதம் தவறுதலென கூறமுடியாமலிருக்கிறது.

இந்த புராணத்தை சூர்ய புராணம் அல்லது விரத புராணம் என்றும் கூறும்படி கலியில் தோன்றிய அரசரும் கவிகளும் பக்தரும் தர்மத்தை நிலை நிறுத்திய அனைவரும் ஸூரியனது அம்சம் என்றே வர்ணிக்கிறது. இருநூறு விரதங்களைக்கூறி அவைகளில் பெரும்பாலானது ஸூர்யனைச் சார்ந்ததாக வர்ணிக்கிறது. பொதுவாக பற்பல அரிய விஷயங்களும்நிறைந்த புராணமிது.

ஸ்ரீ வேத வியாஸாய நம:

# 7. ஸ்ரீ பவிஷ்ய புராணம்.

[பவிஷ்யோத்ர புராணம் என்றும் கூறுவர். பம்பாயிலுள்ள ஸ்ரீ வேங்கடேச்வர அச்சகத்தில் அச்சான புத்தகத்தைத் தழுவி இதை எழுதுகிறோம்.

585 அத்யாயங்கள்,

14500 சுலோகங்கள், பிராம்ம பர்வா, மத்யம பர்வா, பிரதி ஸர்க்க பர்வா, உத்தர பர்வா என்ற 4 பர்வாக்கள் உள்ளது.]

## அவதாரிகை.

பவிஷ்ய என்றால் வரப்போகிறது என்று பொருள். அகோர கல்ப கதையைப் பிரும்மா, மநுவுக்குக் கூறும் போது சுவேதவராஹகல்பத்தில் கலியுகத்தில் உண்டாகப் போகின்ற அரசர்கள் ஆசாரியர் பக்தர் வித்வான்கள் ஆகியவர்களின் சரிதத்தையும் விளக்குகிறார். பிரும்மா எல்லாமறிந்தவர். விஷ்ணுவின் அவதாரமான வியாஸரும் எல்லா மறிந்தவர். வேதங் கூறியதுபோல் இவர்களும் பின்னால் உண்டாவதைப்பற்றி கூறுவதில் ஆச்சரியமில்லை. பல இடங்களிலிருந்து ஒன்பதை ஓலைச்சுவடிகளைக்கொண்டு ஷை அச்சகம் இதை அச்சிட்டது. முராதாபாத் நகரவாசியான பண்டித ஜ்வாலா பிரஸாத மிச்ர என்றவர் "அஷ்டாதச புராண தர்ப்பண" என்ற பெயருடன் புராண விஷயங்களின் அட்டவணையுடன் சிறிது ஆராய்ச்சியும் (ஹிந்தியில்) செய்து ஒரு நூலை வெளியிட்டார். அதில் பவிஷ்ய புராணம் நான்கு இருப்பதாகவும் 5 பர்வாக்கள் வெவ்வேறு பெயருடன் இருப்பதாகவும் ஒவ்வொரு புராணத்தையும்பற்றி கூறும் நாரதபுராணத்தில் கண்டபடி இதில் இல்லை என்றும் இதிலும் சிற்சில

சுலோகங்கள் பின்னர் சேர்க்கப் பட்டிருக்கும் என்றும் கூறுகிறுர். அதில் சிறிது உண்மை இல்லாமலில்லே.

ஒவ்வொரு புராணத்திலும் கலியில் உண்டாகப் போகின்ற அரச வம்சமும் வரும் கால நிலேயும் கல்கி அவதாரமும் வர்ணிக்கப்படுகின்றன. எனினும் இதில் கலியுகம் முடிவுவரை விவரமாக பாரததேசத்தில் மட்டு மல்லாமல் மேனுட்டு அரசர் அவர்களது மதம் முதலியன வும் விவரமாகக் கூறப்படுகின்றன. இந்திய சரித்தத்தில் கூறப்படும் இந்து மஹம்மதிய அரசர்களது பெயரைக் காணும்பொழுது இது நிச்சயமாக தற்கால சரித மறிந்தவ ரால் எழுதப்பட்டதென்றே நினேப்பர். 18 புராண உபன் யாஸங்கள் செய்துவரும்போது சிலர் நம்மிடமே இதை நேரில் நாகரிகமாக "இதை நம்ப முடியவில்லேயே" என் றனர். சிலர் வாய்விட்டு "இவை தற்காலத்தவரால் எழுதி சேர்க்கப்பட்டன" என்றே துணிந்து கூறினர். முக்கால முணர்ந்த முனிவர் அறிவுக் கண்ணுக்கு எல்லாம் புலப்படும் என்பதே நமது சாஸ்திர ஸித்தாந்தம். நமது நம்பிக்கையுமாம்.

இதில் பெரும்பாகம் பிரதமை முதல் ஒவ்வொரு திதி யிலும் தோன்றும் விரதங்களேயும் அதைப் பற்றிய கதை களேயும் வர்ணிப்பதாகவே இருக்கின்றது. 18 புராணங் களில் 10 புராணம் சிவனேப் பற்றியவை. அவைகளில் பவிஷ்யமும் ஒன்று என்ருலும் ஸூர்யனேப் பற்றியே விரிவாக இதில் காணப்படுகின்றது. அஷ்டமூர்த்தியான சிவனுக்கு ஸூர்யன் ஒரு உடல் ஆனதால் ஸூர்யனேப் பற்றியதெல்லாம் சிவனேப் பற்றியதாகும். இதை இந்திய சரித நூல் எனலாம். சூரிய புராணம் விரதபுராணம் எனலாம்.

### பவிஷ்ய புராண மங்கள சுலோகம்.

ஜயதி புவந தீபோ பாஸ்கரோ லோக கர்தா:
ஜயதி ச சிதி தேஹ: சார்ங்க தன்வா முராரி:
ஜயதிச சசி மெளனி ருத்ரநாமா பிதேய:
ஜயதிச ஸது தேவோ பாநுமான் சித்ரபாநு:

உலகிற்கு ஒரு பெருந் தீபமான சூர்யன் கறுந் திரு மேனியுள்ள திருமால், சந்திரமெளளியான சிவன், அக்நி ஆகிய இவர்களே மங்கள சுலோகத்தால்போற்றுகிருர்.

தனது முக்கால அறிவைப் பரீக்ஷிப்பவர் போல கலியில் இந்த இந்த வம்சத்தில் இந்த இந்த பெயருடன் பிறந்த அரசர் இவ்வளவு நாள் அரசாளுவர் என எழுதி அது சரியாக இருப்பதைச் சிரஜீவியான வியாஸர் கண்டு களிக்கிருர். எனது சந்தோஷத்திற்காக இதை எழுதுகிறேன் என்று துவக்குகிருர். பாண்டவர் வம்சத்தவரான சதாநீகன் என்ற அரசன் தர்மசாஸ்திரம் நிறைந்த புராணத்தைக் கூறும்படி வேண்ட ஸுமந்து கூறினரிதை. முதலில் ஸுமந்து தனது குருவான வியாஸரை வணங்கி அவர் உலகிற்குக் கல்விமயமான கதிரவனைத் தந்தாரென வர்ணிக்கிருர்.

## கற்கவேண்டியவை.

ரிக் யஜுஸ் ஸாம அதர்வ எனும் நான்கு வேதங்கள். பிராம்மம் பாத்மம் வைஷ்ணவம் சைவம் பாகவதம் பவிஷ்யம் நாரதியம் மார்க்கண்டேயம் ஆக்நேயம் பிரும்மவைவர்த்தம் லிங்கம் வாராஹம் ஸ்காந்தம் வாமநம் கூர்மம் மாத்ஸ்யம் காருடம் பிரும்மாண்டம் என்ற பதினெட்டு புராணங்கள். பதினெட்டு ஸ்மிருதிகள் — 1. மநுஸ்மிருதி, 2. விஷ்ணு ஸ்மிருதி, 3. யமஸ்மிருதி, 4. ஆங்கிரஸ் ஸ்மிருதி, 5. வஸிஷ்ட ஸ்மிருதி, 6. தக்ஷஸ்மிருதி, 7. ஸம்வர்த்த ஸ்மிருதி, 8. சாதாதப ஸ்மிருதி, 9. பராசர ஸ்மிருதி, 10. ஆபஸ்தம்ப ஸ்மிருதி, 11. உசநஸ் ஸ்மிருதி, 12. காத்யாயந ஸ்மிருதி, 13. பிருஹஸ்பதி ஸ்மிருதி, 14. கௌதம ஸ்மிருதி, 15. சங்கலிகித ஸ்மிருதி, 16. ஹாரீத ஸ்மிருதி, 17. வியாஸ ஸ்மிருதி, 18. அத்ரி ஸ்மிருதி என்பனவாம்.

## அஷ்ட வியாகரணம்.

பிராம்மம் ஐந்திரம் யாம்யம் ரௌத்ரம் வாயவ்யம் வாருணம் ஸாவித்ரம் வைஷ்ணவம் என்பனவும், ராமாயணம் பாரதம் **உபவேதமான** காந்தர்வ வேதம் தநுர் வேதம் ஆயுர்வேதம் அர்த்த சாஸ்த்ரம், **ஆறங்கமான** சிக்ஷா வியாகரணம் சந்தஸ் நிருக்தம் ஜோதிஷம் கல்பம், **பதிநான்கு வித்யைகளான** நாலு வேதங்கள், ஆறு அங்கங்கள் நான்கு உபாங்கங்கள்—அதாவது புராணம் நியாயம் மீமாம்ஸா தர்மசாஸ்த்ரம் என்பன கற்கத்தக்கனவாம்.

## பவிஷ்யபுராணம் வந்த விபரம்.

ஸகல வித்யைகளுக்கும் இருப்பிடமான சிவன் விஷ்ணுவுக்கு பவிஷ்ய புராணத்தைக் கூறினர். அவர் நாரதருக்கும் நாரதர் சக்ரனுக்கும் அவர் பராசரருக்கும் அவர் என் குருவான வியாசருக்கும் உபதேசித்தார். என் குரு; தன் குரு சொன்ன விஷயங்களுடன் வரப்போகும் விருத்தாந்தத்தையும் விஸ்தாரமாக இயற்றினர். உலக ஸிருஷ்டி என்பது பகவான் விழித்திருக்கும் காலம். அவர் உறங்கும் ஸமயமே லயமாகும்.

## கால பரிமாணம்.

பதினெட்டு முறை கண் கொட்டுவது ஒரு காஷ்டை. 30 காஷ்டைகள் 1 கலை அல்லது க்ஷணம். 12 க்ஷணங்கள் 1 முகூர்த்தம். 60 முகூர்த்தங்கள் 1 நாள். 30 நாட்கள் 1 மாதம். 2 மாதங்கள் 1 ரிது. 2 ரிதுக்கள் 1 அயநம். 2 அயநங்கள் 1 வர்ஷம். 1 மாதம் பித்ருக்களுக்கு 1 நாள். சுக்ல பக்ஷம் பகல், கிருஷ்ணபக்ஷம் இரவு ஆகும். 1 வர்ஷம் தேவர்களுக்கு 1 நாள். தக்ஷிணுயநம் இரவு, உத்திராயணம் பகல். 4000 வர்ஷங்கள் கொண்டது கிருதயுகம். கிருதயுகத்தின் முடிவான ஸந்த்யை—அதாவது கிருதயுகம் முடிந்து திரேதாயுகம் ஆரம்பமாகும் காலம் 400 வருஷங்கள். ஸந்தியையின் அம்சம் 400 ஆண்டுகள். திரேதாயுகம் 3000 வர்ஷங்கள். அதன் ஸந்தியா ஸந்தியாம்சம் 600 வர்ஷங்கள். துவாபர யுகம் 2000 ஆண்டுகள். அதன் ஸந்தியையும் ஸந்தியாம்சமும் 400 ஆண்டுகள். 1000 ஆண்டுகள் கொண்டது கலியுகம். அதன் ஸந்தியையும் ஸந்தியாம்சமும் 200 ஆண்டுகள். இவை தேவவர்ஷங்களின்படி கூறிய கணக்காம். 12000 யுகம் கொண்டது தேவர்க்கு 1 யுகம். 1000 தேவயுகம் பிரும்மாவுக்கு ஒரு பகல். அதே கணக்குள்ளது இரவு. அவரது இரவே பூலோக பிரளயம். அவர் விழித்த போதே உலக ஸிருஷ்டி. 71 மநுஷ்ய யுகம் 1 மன்வந்தரமாகும். இன்றுவரை 6 மநுக்களது காலஞ் சென்றது. 7 வது மன்வந்தரமிது. 7 மநுக்கள் இனி உண்டாவார்கள்.

## யுகங்களின் தர்ம நிலை

கிருதயுகத்தில் தர்மம் நாலுபாதங்களுடன் இருக்கும். அதாவது தர்மம் பூர்ணமாக அனுஷ்டிக்கப்படும். திரேதா

யுகத்தில் மூன்று பாதங்களுடனும் துவாபரா யுகத்தில் இரு பாதங்களுடனும் கலியில் ஒரே பாதத்துடனு மிருக்கும். கிருதயுகத்தில் தவமே முக்கிய தர்மம். திரேதையில் ஞானமே முக்யம். துவாபரத்தில் யக்ஞமேமுக்யம். கலியில் தானமொன்றே முக்ய தர்மமாகும்.

## நான்கு வர்ணங்களும் தர்மமும்.

படைத்த உலகைக் காக்கவும் விரைவில் மானிடர் இன்பம்பெறவும் பிரும்மா நான்குவர்ணங்களைப் படைத்து அவர்களுக் கேற்ற தர்மங்களையும் வகுத்தார். விராட் புருஷனுடைய முகத்திலிருந்து பிராம்மணனும் அக்நியும் உண்டாயினர். வேதமோதல் ஓதிவைத்தல் வேள்வி செய்தல் பிறர்க்கு செய்வித்தல் தானம் செய்வது வாங்குவது என்ற ஆறு தர்மங்களை அவர்களுக்கு வகுத்தார். இவைகளில் மூன்று வாழ்க்கைக்கு உதவுவன. மூன்று மறு உலகிற்காகஏற்பட்டன. க்ஷத்திரியன் விராட் புருஷனது தோளிலிருந்து உண்டானவன். அவனுடன் தேஜஸ் உண்டானது. உலகைக் காப்பது பகைவருடன் போர்புரிவது வேதமோதுதல் வேள்வி செய்தல் தானமளித்தல் இவை அவனது ஸ்வதர்மமாம். பிராம்மணரது பிரும்ம பலத்துடன் சேர்ந்துதோள்வலியால் உலகை ரக்ஷிப்பது இம்மை மறுமை இரண்டிற்கும் ஸாதகமாம். விராட்புருஷனது துடையிலிருந்து உண்டான வைசியர் வேதம் வேள்வி தானம் இவைகளுடன் வியாபாரம் கோரக்ஷணை பூமியை உழுது பயிரிடுதல் என்பவைகளை ஸ்வதர்மமாகக் கொள்ளவேண்டும். பாதத்திலிருந்து உண்டானவர் சூத்திரராவர். பாதமானது தொடை புஜம் முகம் இம்மூன்றையும் சுமந்து உதவி புரிவதுபோல் மூன்று வர்ணத்தாருடனும் கலந்துஅவரவருக் கேற்ற பணிபுரிந்து உலகைக் காக்கவேண்டும். நான்கு வர்ணத்தாருக்கும் பொதுவான, மெய் கூறல் திருடாமை, அன்பு, பெற்றோருக்கும் கற்றோருக்கும் மரியாதை செய்தல் ஐம்புலன்களை அடக்குவது புராண ஆகமம் கூறியவகையில் அநுஷ்டானம் செய்வது முதலிய தர்மங்களால் இம்மை மறுமை இன்பங்களைப் பெறவேண்டும்.

உடலில் நான்கு பிரிவுகளும் சேர்ந்து உடலிலுள்ள ஜீவனையும் ஜீவனுக்கு பெட்டிபோன்ற உடலையும் ஜீவ

னுக்கு நடமாடும் கோயிலான பிற உயிர்களுக்கும் உதவி புரியவேண்டும். ஜீவனே உயர்ந்தவனாதலால் அங்கங்களுள் உயர்வு தாழ்வில்லை. ஒவ்வொன்றும் தனது வேலையைச் செய்வதால் அதற்கேற்ற மதிப்புண்டு. முதல் மூன்று வர்ணங்களுக்குப் பொருப்பும் கடமையும் அதிகம். எல்லா வர்ண ஸ்திரீகளுக்கும் வேத மோதல் தனியே நின்று வேள்வி செய்தல் முதலியன கிடையாது. அவரவர் புருஷனுக்குச்செய்யும் தொண்டே தர்மமாம்.

## பிராம்மணன் கடமை.

இவ்வுலக இன்பம் பெறுவதைப் பெரிதாக எண்ணக் கூடாது. எப்பொழுதும் கடவுளால் படைக்கப்பட்டு கடவுளின் அம்சமாக இருக்கின்ற அனைவரும் சுகமாக வாழ வேண்டுமென பிரார்த்திக்க வேண்டும். **40 ஸம்ஸ்காரங்களைச்** செய்யவேண்டும். கர்ப்பாதானம், பும்ஸவநம், ஸீமந்தோந்நயநம். ஜாத கர்ம நாமகரணம் அன்னப்ராசநம் சௌளம். உபநயநம் 4 வேத விரதங்கள் ஸ்நாதக விரதம் ஸமாவர்த்தநம், விவாஹம் பஞ்ச மஹா யக்ஞமெனும் வைச்வதேவம், அஷ்டகா ஸ்தாலீபாகம் பார்வணம் ஆக்ரஹாயணீ சிராவணீ சைத்ரீ ஆச்வயுஜீ (இவை 7 பாக யக்ஞங்கள்) அக்நி ஆதாநம் அக்நிஹோத்ரம் தர்ச பூர்ண மாஸம் ஆக்ரயணம் சாதுர்மாஸ்யம் நிரூட பசுபந்தம் ஸௌத்ராமணி 7 ஹவிர் யக்ஞம்) அக்நிஷ்டோமம் அத்யக்நிஷ்டோமம் உக்த்யம் ஷோடசி, வாஜபேயம் அதிராத்ரம் அப்தோர்யாமம் (7 ஸோமஸம்ஸ்தை) இவைகளை அனுஷ்டிக்க வேண்டும். இவைகளால் பிரும்மலோகஞ் செல்வதுடன் உலகிற்கும் மழை சுபிக்ஷம் முதலியவைகளால் உதவி புரிவதாகும்.

## 8 ஆத்மகுணங்கள்.

தயை பொறுமை. அநஸூயை சுசியாக இருத்தல், ஆயாஸமில்லாமை மங்களமாக இருத்தல் கிருபணனாக இல்லாமை பற்றில்லாமை என்ற எட்டும் ஆத்ம குணங்களாம். இவைகளிருந்தால் ப்ரும்மலோகஞ் செல்லலாம். [40 ஸம்ஸ்காரம் என்ற நமது நூலில் இவை விரிவாக மந்திர அர்த்தத்துடன் விளக்கப்பட்டிருக்கின்றன.] எல்லா யக்ஞங்களிலும் ஜபயக்ஞம் மிகச்சிறந்தது. துஷ்ட சிஷ்யனுக்கு வித்யை கற்பிப்பது பாபம். குருவிர்க்குப் பணி

விடை மூலமாகக் கற்பதே சிறந்தவழி. பெரியோரைக் கண்டு எழுந்திருக்காவிடில் சிறியவனது பிராண சக்தி குறையும். வணங்கும்போது அபிவாதயே என்று கூறி தனது பிரவரம் கோத்ரம் ஸூத்ரம் பெயர் இவைகளைக் கூறவேண்டும்.

## அபிவாதயே.

தங்களை எனக்கு ஆசிர்வாதம் செய்யும்படி செய்கிறேன் என்பது அதன் பொருளாயினும் அபி என்றபோது விஷ்ணுவும், வாதயே என்றபோது சிவனும் பூஜிக்கப்பட்டது போலாகும். 10 வயது பெரியவராக உள்ளவர்க்கே நமஸ்காரம் செய்யவேண்டும். வேதாந்த அறிவு உள்ளவன் ஐந்துவயது சிறியவனாக இருந்தாலும் அவனை வணங்கலாம். செல்வம் உறவு வயஸ் நற்செயல் கல்வி இவ்வைந்துமே வணங்குவதற்கேற்ற லக்ஷணம்.

## ஆசாரியர் யார்? மஹா குரு யார்?

கல்பத்துடன் வேதங்கற்பித்தவர் ஆசாரியன். வேதமல்லது வேதாங்கத்தில் ஒரு சிறியபாகத்தை மாத்திரம் கற்பித்தவர் உபாத்யாயர். தன்னைபெற்று வளர்த்து பிறர் மூலமாகவேதங்கற்பித்தவர்குரு. பதினெண்புராணங்களையும் அறிந்து சொல்பவர் மஹாகுரு. [சிதம்பர க்ஷேத்திரத்தில் 18 புராண ப்ரவசநம் நடந்தபோது மஹாஜனங்களும் ஸ்ரீ தீக்ஷித ஸமூஹமும் சேர்ந்து அடியேனுக்கு மஹாகுரு என்ற பிருதை ஸுவர்ணப் பதக்கத்தில் பதித்தளித்ததைக் கூறாமலிருக்க முடியவில்லை.] வேதங்கற்காதவனை அன்னமளித்துப் போஷிக்கும் கிராமத்தில் உள்ள அனைவரையும் அரசன் சிக்ஷிக்கவேண்டும். வேதங்கற்பதைக் காட்டிலும் வேதம் வகுத்த கர்மாவைச்செய்வது சிறந்தது. வேதமறிந்து அநுஷ்டாநம் செய்பவனுக்கே தாநமளிக்கவேண்டும். தோணிதான் கல்லைத்தாண்டிவைக்கும், கல் கல்லைக்கவிழ்த்துவிடும். ஒரு பங்க்தியில் ஸமமாகப் பரிமாராவிடில் விஷமமாகப் பரிமாறினால் பிரும்மஹத்தி செய்த பாபம். இனிமையாகப்பேசு. பயப்படும்படி கடினமாகப் பேசாதே. வேதமறிந்தவன் மயிர் முதல் நகம் வரை தவம் நிறைந்துளது.

## எதை ஏற்கலாம் ?

பஞ்சமனிடமிருந்தும் தர்மத்தை ஏற்கலாம். நல்ல நாரியானல் துஷ் குலத்திலிருந்தும் ஏற்றுக்கொள். விஷத்திலிருந்தும் அமிருதத்தையும் அசுத்த வஸ்துவிலிருந்தும் ஸுவர்ணத்தையும் ஏற்கலாம். ஸ்திரீ ரத்நம் நிதி கல்வி தர்மம் ஆசாரம் நல்வாக்கு சில்பம் இவைகளை எவரிடமிருந்தாலும் ஏற்கலாம்.

## ஸாமுத்ரிகா லக்ஷணம்.

விசேஷமாக பெண்களின் மார்பு முதலிய முக்ய அவயவங்கள் இன்னின்னபடி இருந்தால் அவளது குணம் செயல் பாக்யம் கற்பு முதலியவை எப்படியிருக்கும் என விரிவாக வர்ணிக்கிறார். தனத்தின் சிறப்பு கற்புள்ளவள். இல்லறம், மணத்தின் பெருமை, தர்மம், பாரத தேசத்தில் மாத்திரம் ஏன் இத்தகைய தர்மம் இருக்கின்றது? ஸ்திரீ தோஷம், புருஷ தோஷம். பதிவிரதையின் தர்மம். காலத்தில் தான்யங்களைச் சேகரிப்பது, பாகம், துர்மார்க்கத்தில் செல்லும் பதியை எப்படி ஸ்வாதிநப்படுத்துவது? பிரதமை முதல் ஒவ்வொரு திதியிலும் உப்பு முதலிய பொருள்களை விலக்கி புஜித்தால் நித்ய உபவாஸ பலன் உண்டாகும் என்பது முதலியவைகளைக்கூறி விரதங்களைக் கூற ஆரம்பித்து பற்பல தர்மங்களையும் ரஹஸ்யங்களையும் விவரிக்கிறார் வேத வியாஸர்.

## பிரதமா விரதம்.

பிரும்மாவுக்கு மிக பிரியமான திதி பிரதமை. அதில் பிரும்மாவைப் பூஜிக்கவேண்டும். அவரது மநதிலிருந்து ருத்ரனும் மார்பிலிருந்து விஷ்ணுவும் உண்டானார்கள். [இது அகோர கல்ப விஷயம். ஒவ்வொரு கல்பத்திலும் ஸ்ருஷ்டி முதலியதில் சில மாறுதல் இருக்கும்.] ஆலய நிர்மாணம். வாத்தியமளித்தல் கங்காஜலம் பால் முதலிய அபிஷேகங்களால் உண்டாகும் பலன். பூஜை செய்பவர் காயத்ரியால் நியாஸம் செய்து கொண்டு பூஜித்தல். கார்த்திகை மாதத்தில் பிரும்மாவிற்கு ரதோத்ஸவம். வேதமறிந்தவர்களே தேரை இழுக்க வேண்டும். பொதுவாக ரதோத்ஸவத்தில் சண்டாளன் தீண்டினலும் தீட்டில்லை என்பன கூறப்பட்டன.

## ஸுகன்யா சியவநர்.

இச்சரிதம் பல புராணங்களிலும் இருக்கின்றன. விசேஷமானதை மாத்திரம் கூறுவாம். சர்யாதி பெண்ணுன ஸுகன்யையுடன் வநஞ்சென்றபோது புத்தினுல் மூடப்பட்ட சியவனரது கண்ணைக் குச்சியினுல் குத்தினுள். அனைவர்க்கும் மல ஜலம் அடைபட்டு துன்புற்று ஸுகன்யயை அவருக்கு அளித்து விடுபட்டனர். அவள் கற்பைப் பரீக்ஷிக்க அசுவிநீ தேவர்கள், முநிவரைத் தங்களைப்போல் செய்து உனது பதியை அழைத்துச்செல் என்றனர்.

தேவர் உடலில் புழுதி ஒட்டாது. கண்கொட்டமாட்டார் தேவர். அவர்களது கால் பூமியைத் தீண்டாது. இந்த லக்ஷணங்களை அறிந்து ஸுகன்யை பதியைக் கண்டெடுத்தாள். வாநவர் பூமாரிப் பொழிந்தனர். சியவநர் திவ்ய ரூபம் பெற்றது துவிதியா திதி. அன்று அசுவநீ தேவரைப் பூஜிப்பவர் அழகுள்ளவராவர். ஸுப்ரமண்யன் தான் இயற்றிய ஆண் பெண் லக்ஷண நூலைச் சிவன் கடலில் எறிந்ததால் பிரும்மாவை வேறு நூல் இயற்றச் சொன்னுர். நகம் சிகை முதல் ஒவ்வொன்றும் இப்படி இருந்தால் இத்தகைய குணமுள்ளவராக இருப்பர் என விரிவாகக்கூறுகிருர்.

## வெள்ளெருக்கை கணபதி.

வெள்ளெருக்க வேரால்கட்டை விரலின் ஒரு பர்வாவின் அளவு பத்மாஸனத்தில் வீற்றிருப்பதுபோல் கணபதிசெய்து "ஓம் லம்பராக்னேநம:" என்ற மூல மந்திரத்தால் பூஜித்தால் ஸகல பலனையும் பெறலாம்.

## ஸர்ப்ப பிரஸவம்.

ஆனிமாஸத்தில் பாம்புகள் கர்ப்பந்தரித்து கார்த்திகை மாதம் 220 முட்டைகளை இட்டு ஒன்றை மாத்திரம் விட்டு மற்றவைகளைத்தானே உண்ணும். மயில், மநிதன், கீரி முதலிய 8 பகைவர்கள் அதைக் கொல்லாமலிருந்தால் 120 வருஷம் ஸர்ப்பம் ஜீவித்திருக்கும். அதன் விஷப் பற்கள், விஷயோகம், அதை அகற்றும் மந்திரம், ஔஷதம் முதலிய மிக அபூர்வமான விஷயங்களை இங்கு காணலாம்.

அரவந்திண்டி இறந்தவன் விஷமில்லாத பாம்பாகப் பிறப்பான்.

**சிகை யக்ஞோபவீதம் இரண்டும் க்ஞான லக்ஷணமாம்.**

## ஸூர்ய மண்டலம்.

இதைப்பற்றிய அதிவிசித்ரமான விஷயங்கள் ஆராய்ச்சிக்குரியன. ஒரு நிமிஷத்தில் 22022 யோஜனை தூரம் வேகமாகச் செல்கிறது ஸூர்ய கிரணம். ஆறு ரிதுக்களில் ஆறு வர்ணமுள்ளவராக இருக்கிறுன் பானு. ஆண்டிற்கொருமுறை குடிகள் சாந்தமாக வாழ ரதோத்ஸவம் நடத்த வேண்டும். ரதத்தின்கொடியோ அல்லது ஏதேனும் ஒரு பாகமோ ஸ்வாமியின் விக்ரஹமோ முறிந்து விழுந்தால் உலகிற்குத் துன்பமுண்டாகும்.

**திருஷ்டி தோஷம்.** மிகக்கொடிய துன்பத்தைத்தரும். அதை அகற்ற மஞ்சளும் சுண்ணும்பும் கலந்த ஜலத்தை (ஹார்த்தியை) அக்ஷதை பருத்திக்கொட்டை உப்பு உமி இவைகளுடன் சேர்த்து நடுவில் தீபத்தை வைத்து தோஷமுள்ளவர் எதிரில் சுற்றி தூரே கொட்டவேண்டும்.

## திண்டி ஸூர்ய ஸம்வாதம். ஸப்தமி பெருமை.

ருத்ரன் பிரும்மாவின் சிரத்தைக்கிள்ளி அந்த தோஷம் அகல பிக்ஷாடன மூர்த்தியாகி பிரும்மஹத்தியால் பீடிக்கப்பட்டு பானுவை நாடி தவம் செய்து துதித்தார். அவர் எதிரில் தோன்றி ஸூர்யன் அவருக்குத் தனது தத்துவ மனைத்தையும் கூறி திண்டி என பெயரிட்டார். ஸப்தமியிலே, நான் அவதரித்தேன். எனது மண்டலத்தை, த்வஷ்டா அன்றே சாணைபிடித்தார். ஆதலின் எனக்கு பிரியமான ஸப்தமியில் எண்ணெய் தேய்த்துக்கொள்பவர் மனைவியை இழந்து குஷ்டரோகியாவார். கறுப்பு வஸ்த்ர மணிந்து செய்யும் நற்காரியமனைத்தும் வீணுகும். பனிரண்டு மாஸங்களிலும் தாதா அர்யமா, மித்ர, வருண, இந்த்ர, விவஸ்வான், பர்ஜன்ய, பூஷா, இஷு, பக, த்வஷ்டா, விஷ்ணு என்ற பெயர்களால் என்னைப் பூஜிக்க வேண்டும். ஸாம்பன் எனும் கிருஷ்ணனது புத்ரன் விதிப்படி என்னைப் பூஜித்து எனது சரிதத்தைக் கேட்டான்.

அவனது குஷ்டரோகம் அகன்றது. என்னை உபாஸிப்ப வர் ஆரோக்யம் செல்வம் புத்ரன் முதலிய பாக்யம் பெறுவர். நாரதர் வந்தபோது எழுந்து உபசரிக்காமல் தனது அழகு குலம் இளமை செல்வம் இவைகளைப் பாராட்டி மிக கர்வத்துடன் இருந்தான். ஆதலால் அவர் குஷ்டரோகம் உண்டாகுமென சபித்தார் ஸாம்பனை.

எனது மண்டலத்தில் வால்கில்யர் தேவர் கந்தர்வர் அப்ஸரஸ் நாகர் ஆகியவர் வஸிக்கின்றனர். எப்பொழுதும் பிரகாசிக்கும் எனக்கு உதயம் அஸ்தமநம் என்பதுஇல்லை. ஓரிடத்திலுள்ளவர் காணும்போது உதயம். காணுத போது அஸ்தமநம் என்கின்றனர். நித்யம் ஸூர்ய நமஸ் காரம் செய்பவரிடம் எந்த நோயும் வராது. எனது வலது புறத்தில் விஷ்ணு இடது புறத்தில் பிரும்மா நெற்றியில் சிவன். மண்டலத்தில் நான்கு வேதங்கள் இருக்கின்றன. வேதமயமாய் ஸர்வ தேவமயமாய் ப்ரத்யக்ஷமாக உள்ள எனது ரூபத்தை எல்லோரு மறியார். புண்யசாலிகளே அறிவர்.

## ஸாம்பனுக்குக் கிருஷ்ண சாபம்.

நாரதர் ஜாம்பவதி புத்திரனுக்குச் சாபமளித்ததுடன் கிருஷ்ணன் மூலமாகவும் அதை ஸ்திரப்படுத்தக் கருதினர். கிருஷ்ண! உம்மைப் பதியாகப்பெற்ற பதிஞயிரம் பெண் களில் பலர் ஸாம்பனிடம் ஆசை உள்ளவர், என்றுகூறி அவர்கள் ஸாம்பனிடம் ஏகாந்தமாகப் பேசிக்கொண்டிருந்த இடத்திற்குக் கிருஷ்ணனை அழைத்துச்சென்றார். அருகில் வரும் தங்களைக் கவனியாமல் ஸாம்பனது அழகையே பார்த்துக் கொண்டிருந்த ஸ்த்ரீகளை "நான் வைகுண்டம் சென்றபின் அர்ஜுனன் பார்த்திருக்கும் பொழுதே நீங்கள் திருடரிடம் சிக்கி கற்பை இழப்பீர்கள்" என சபித்து "ரூபமதத்தால் நீயும் ஒழுங்காக நடக்காததால் குஷ்டரோகி யாவாய்" என ஸாம்பனையும் சபித்தார். கர்ப்பிணி வேஷம்பூண்டு என்ன குழந்தை பிறக்கும் என தூர்வாஸ ரைக்கேட்டு, உனது குடும்பத்தை அழிக்கும் கோடாலி பிறக்கும் என்ற சாபத்தையும் பெற்றான். ஸாம்பன் நாரதரையே சரணமடைந்து ஸூர்யனது மஹிமையைக் கேட்டு நோயை அகற்றிக்கொண்டான். கோடிக்கணக்கான கிரணங்களுள்ளவன் ஸூர்யன். அவைகளில் 400 ரச்மிகள்

அமிருத என்ற பெயருடன் மழை பொழிகின்றன. சந்த்ரா எனும் 300 ரச்மிகள் பனியை உண்டுபண்ணு கின்றன. 400 ரச்மிகள் ஜீவர்களுக்கு சைதன்யத்தைத் தருகின்றன. புவர் லோகம் முதலிய இடங்களில் நூற் றுக்கணக்கான கிரணங்கள் பலவகை நன்மைகளைச் செய் கின்றன. நிக்ஷுபா தியௌ: ஸுவர்சலா, ஸுரேணுப்ரபா, த்வஷ்ட்ரீ, ஸம்க்ஞா என்ற பல பெயருள்ள பத்நியை மணந்தார். அவள் தனது நிழலைச் சாயா என்ற பெண்ணுக் கினள். இருவர் மூலமாகவும் ஸூர்ய ஸந்ததி பெருகிற்று. பாநுவாரத்தில் தோன்றும் ஸப்தமீ மிகச் சிறந்தது. எருக்க இலையில் எருக்கைப் பூக்களை ஸூர்யன் எதிரில் வைப்பது புண்யகரமானது.

## புராணபடந சிரவணம்.

ஆலயம் மடம் நதீ தீரம் வீட்டுத்திண்ணை முதலிய இடங்களில் புராணம் படிக்கக் கேட்கவேண்டும். ரஹஸ்ய மான வேதத்தின் கருத்தை விரிவுபடுத்தி விளக்கமாக கூறு வது புராணம். அதைக்கூறுபவனைத் தெய்வம்போல்கருதி உபசாரம் செய்யவேண்டும். பௌராணிகனுக்கு அன்னம் வஸ்த்திரம் முதலியவைகளைத் தந்து ஸந்தோஷப்படுத்தி னல் பகவான் ஸந்தோஷமடைகிறர். தர்மத்தைக் கூறு பவர் எல்லோரையும் விடச் சிறந்தவர். ஸத்பாத்திரம்.

எந்தெந்த தேவர்க்கு எந்த எந்த திதி நக்ஷத்திரம் பிரியமானதென விவரிக்கப்பட்டது. காமனையின்றி கடவுளைப் பூஜித்தால் முக்தி பெறலாம். ஹேலீ என்னும் பகவான் நாமாவை ஜபிக்கவேண்டும். அதனல் ஹோலி பண்டிகை தோன்றிற்று.

## ஸத்ராஜித்.

யயாதியின் குலத்திலே ஸத்ராஜித் என்ஞேர் சக்கிர வர்த்தி இருந்தான். ஏழு த்வீபங்களையும் ஒருவனே ஆண் டான். அவனுக்கு உத்தம பதிவிரதையான மனைவி, சிறந்த புத்ரன், உயர்ந்த மந்திரிகள், அன்புள்ள குடிகள், செழிப்பானபூமி, அபரிமிதமாக கப்பமளிக்கும் சிற்றரசர், நோயற்ற அழகான உடல், எல்லாம் ஒன்று கூடுவது துர்லபமல்லவா? அரசனே வியந்தான். முற்பிறவியில்

செய்த புண்ணியமே இதற்குக் காரணம். அந்த புண்ணியம் யாதென முனிவர்களைக் கேட்டான். முக்காலத்தையும் உணர்ந்த பராவஸு எனும் முனிவர் கூறினர். முற்பிறவியில் நீ ஒரு குஷ்டரோகியான சூத்ரன். ஏழை, பந்துக்கள் உன்னைக் கைவிட்டனர். மனைவி நன்கு உன்னை உபசரித்தாள். ஸூர்யனது சரிதம் கேட்டாள். பௌராணிகருக்குத் தனது கை மோதிரத்தை அளித்தாள். நோயகன்று தன் பதி ஸூர்யனைப்போல் பிரகாசிக்கவேண்டும் என கோரினள். ஆலயத்தைச் சுத்தப்படுத்தி அலங்கரித்து நித்யம் தீபம் ஏற்றினள். குவலயாசுவன் என்ற மன்னனைப் பார்த்து நீயும் அப்படி விளங்க விரும்பினய். இந்த புண்யத்தால் இத்தகைய பாக்யம் கிடைத்தது. இப்பிறவியிலும் இவைகளை விடாமல் செய் என்ருர்.

## சாகத்வீப ஸூர்யாலயம்.

சாகத்விபத்தில் பிரியவிரதன் என்ற வேந்தன் ஸூர்யனுக்கு அழகிய ஓர் ஆலயமமைத்தார். அதில் வேதவிதிப்படி பிரதிஷ்டைசெய்ய அங்கு பிராம்மணரில்லை. மற்ற மூன்று வர்ணத்தாரே இருந்தனர். அரசன் சிந்தை கொண்டு தவிக்கும்போது ஸூர்யன் பிரத்யக்ஷமாகி எட்டு வகையான போஜக என்ற பிராம்மணர்களைப் படைத்தளித்தார். அரசன் அவர்களைக்கொண்டு பிரதிஷ்டை செய்து தனது பொருள்களை எல்லாம் ஆலயத்திற்கும் அவர்களுக்கும் தந்தார். அவர்கள் மிக நியமத்துடன் ஐந்து கால பூஜை செய்தனர். அரசன் ஸூர்யலோகஞ் சென்று பிரும்மாநந்தமடைந்தார்.

## இருவகை விமாநங்கள்.

ஸமுத்ர, பத்ம, கருட, நந்தி, வர்த்தந, குஞ்ஜர, கிருஹராஜ, விருஷ, ஹம்ஸ, ஸர்வதோபத்ரக, கட, ஸிம்ஹ, விருஷ, சதுஷ்கோண, ஷோடச, அஷ்டாச்ரய, முதலிய விமாநங்களை அமைக்கும் வழி, அவைகளின் லக்ஷணம் பலன் இவைகள் கூறப்பட்டன.

## விக்ரஹம்.

84 அங்குல உயரத்தில் மூர்த்திகளைச்செய்து 12 அங்குலம் முகம், 14 அங்குலம்கால், இங்ஙனம் கணக்குகளைக் கூறி பிரதிமைகளின் லக்ஷணம் பிரதிஷ்டாவிதி கும்பாபி

ஷேகம் பூஜாவிதி துவஜங்கள், ஆத்ம பூஜை இல்லாமல் பிறருக்காக மாத்திரம் பூஜிப்பவரது அன்னம் அசுத்தம். சாகத்விபத்தில் மகா, மகசா, காநகா, மந்தகா என்ற பெயருடன் நான்கு வர்ணங்களிருக்கின்றன. பூஜைக்குப் புஷ்பமில்லாவிடில் பத்ரம், அதுவுங்கிடைக்காவிடில் தூப தீபம், அவைகளுமில்லாவிடில் நீரினலாவது நித்யம் பூஜை செய்யவேண்டும். நமஸ்காரமென்பது உத்தமமான யாக மாகும். மஹா சுவேதா என்ற ரவி சக்தியின் பூஜை. விவாஹம், கன்யா லக்ஷணம், சிராத்தம், ஆசாரம், ஆறு வித ஸ்நாநம், பாபிகளை அரசன் சிக்ஷிக்கவேண்டியமுறை 86 யோஜனை தூரம் யமலோகம். 8 அங்குலமும் அதற்கு மேலுமுள்ள விக்ரஹத்தை வீட்டில் பூஜிக்கலாகாது என இங்கு விரிவாக உள.

## கிரஹணம்.

கிரஹணம் என்பது ராஹு கேதுக்கள் ஸூர்யமண்டலத்தின்கீழ் விமாநத்துடன் நின்று ஸூர்யகிரணத்திலிருந்து வரும் அமிருதத்தைப் பருகுவதாம். அச்சமயம் சந்திர ஸூர்யர் நம் கண்ணுக்குத் தோன்றாததால் அவர்களை விழுங்குவதாகக் கூறப்படுகிறது. ஸப்தமீ கல்பம், பூஜாவிதி மிகமிக விரிவாக இருக்கின்றது. 12லக்ஷம் ஸூர்ய காயத்ரியையும் ஸூர்ய அஷ்டாக்ஷரியையும் ஜபித்தால் குஷ்டம் முதலிய ஸகல ரோகங்களும் அகலும். இறந்தபின் ஸூர்ய லோகம் கிடைக்கும்.

## மூன்றுவகை கூறுபவரும் கேட்பவரும்.

வேகமாகவும் ஸ்பஷ்டமில்லாமலும், கோபத்துடனும் பொருளறியாமலும் பொருளாசை கொண்டும் புராணங் கூறுபவர் அதமர். புராண அர்த்தத்தை அறிந்திருந்தும் அதைக்கூருமல் தனது யோக்யதையைக் காட்டி கீர்த்தியையும் பொருளையும் தேடுவதையே குறியாகக்கொண்டு கதை.கூறுபவர் மத்யமர். வேதசாஸ்த்ரங்களை உணர்ந்து உள்ளதை உள்ளபடியேகூறி பெருமையையோ பொருளையோ விரும்பாமல் தர்மத்தை எல்லோருக்கும் புரியும்படி நன்கு உரைப்பவர் உத்தமர் ஆவர்.

அது ஏன் இப்படி? அதற்கென்ன காரணம்? என கடுமையாகக்கேட்டு தக்ஷிணையும் தராமல் நிந்தித்துக்

கொண்டே கதை கேட்பவர் அதமர். சிரத்தை பக்தி இல்லாமல் மற்றவர் தாக்ஷிண்யத்திற்காகக் கதை கேட்பவர் மத்யமர். பௌராணிகரை வ்யாஸராகக் கருதி பக்தி சிரத்தையுடன் தக்ஷிணை தந்து கேட்பவர் ஸாத்விகர். பௌராணிகர் பெருமையுடன் பிராம்ம பர்வா பூர்த்தியாகிறது.

## மத்யம பர்வ பொதுவான தர்மம்.

மனிதராகப்பிறந்த அனைவரும் அநுஷ்டிக்கவேண்டிய தர்மங்கள். ஹிம்ஸை செய்யாமை, பொய் கூறுமை, கோள் சொல்லாமை, எல்லோருக்கும் தீங்கிழைக்காமை, அன்பு, ஆசாரம், கபடமில்லாமை, பொருமையில்லாமை, தயை, தீர்த்த யாத்திரை, பகவந்நாம ஜபம், ஆலயம் செல்லுதல், வேத சாஸ்திர நம்பிக்கை, புறங்கூறுமை முதலியவைகளை வர்ணித்து ஜகத்ஸிருஷ்டி மேலே ஏழு உலகம் கீழ் ஏழு உலகம் ஏழுத்வீபங்கள் ஆங்காங் குள்ள வர்ஷம் கண்டம் முதலியன கூறப்பட்டன.

## பிராம்மண தர்மம்.

பிராம்மணன் கர்ப்பாதாநம் முதலிய ஸம்ஸ்காரங்கள் வேதம் சாஸ்திரம் தீர்த்தம் க்ஷேத்திரம் இவைகளால் சுத்தனுகவேண்டும். இத்தகையவரைப் பூஜித்தால் ஸகல தேவதைகளையும் பூஜித்ததாகும். இவர்கள் கூறுவதையே தேவர்கள் ஆமோதிக்கின்றனர். தேவர் பித்ருக்கள் பிரேதங்கள் பூதங்கள் ஆகிய எல்லாம் பிராம்மணர் மூலமாகவே தங்களது உணவை ஏற்கின்றனர். அவர்களை வணங்கி "நீண்டஆயுளைப்பெறு" என்ற ஆசீர்வாதம் பெற வேண்டும். பிராம்மணர் பாதஜலம் பட்டு சேருகாததும், வேதசாஸ்திர சப்தமில்லாததும், ஸ்வாஹா ஸ்வதா என்ற ஹோமமில்லாததுமான வீடு வீடல்ல! சுடுகாடு! குரு எதிரில் பாதுகையும் குடையும் அணியலாகாது.

## புராணம் கேட்கும் விதி.

ஆகமங்களுக்கு சிவன் தேவன். தந்த்ரங்களுக்கு ஸரஸ்வதீ. பாரத ராமாயணங்களுக்கு நாராயணன். ஒவ்வொரு புராணங்களுக்கும் அவைகளால் வர்ணிக்கப்படுபவர் தேவன். ஆதலால் புராண ஆரம்பத்திலும் முடிவிலும்

நமஸ்காரம் செய்யவேண்டும். பதினென் புராணம் பாரதம் இவைகளைக்கூறுபவர் வடக்கு முகமாகவும் கேட்பவர் தெற்குமுகமாகவும் அமரவேண்டும். தர்ம சாஸ்திரம் ராமாயணம் ஹரிவம்சம் இவைகளைக் கூறுபவர் தெற்கு முகமாகவும் கேட்பவர் வடக்கு முகமாகவும் இருக்கவேண்டும். சிவன்முன்னே சிவபுராணம், விஷ்ணு புராணங்களைக்கேட்பதும் அதேபோல் விஷ்ணுவின் ஆலயத்தில் சிவ விஷ்ணு புராணங்கேட்பதும் புண்யத்தை விருத்தி செய்யும். துர்க்கையின் முன்னே, தேவி புராணந்தவிர மற்றவைகளைக் கூறினாலும் கேட்டாலும் கழுதையாகப் பிறப்பான். புராண புஸ்தகம் ஸர்வ தேவதா வடிவம். அதைப் பூஜிப்பதும் தாநம் செய்வதும் மிகச்சிறந்த தர்மம். புராணகதை நடக்காத நாட்டில் வஸிப்பதும் பாபம். புராணம் சொல்பவருக்கும் கேட்பவருக்கும் இடையே எவரேனும் சென்றால் அன்று கதையை நிறுத்திவிடவேண்டும்.

## குளம் உத்யாநம் அமைத்தல்.

குளம் கிணறு இவைகளை வெட்டுவதும் வெய்யில் காலத்தில் தண்ணீர் பந்தல் வைப்பதும் மிக புண்யகரமானது. பிராணன் ஜலமயமானது. ஜலத்தால் வளருவது. உண்ணாமல் சிலகாலம் வாழலாம். நீர் அருந்தாமல் ஒரு நாள்கூட பிழைக்கமுடியாது. நாம் வெட்டிய குளத்தில் ஸ்நாநம் செய்பவர் அவரது புண்ணியத்தில் ஒரு பகுதியை நமக்கு அளிக்கிறார். புதிதாக வெட்டுவதைவிட இடிந்த குளத்தைச் சீர்திருத்துவது இருமடங்கு பலனைத்தரும். பித்ருக்களும் தேவரும் இவரைக் கொண்டாடி வரவேற்பர். எப்படி எங்கே எந்த அளவில் வெட்டுவதென விரிவாக உளது இங்கு. இது பூர்த்த தர்மமாம்.

உத்யாநம் நிழலுக்காகவும் பூஜைக்குரிய புஷ்பங்களுக்காகவும் அமைக்கவேண்டும். ஒரு அரசமரத்தை விதிப்படி வைத்தால் கோடி புத்ரர்களால் நமக்கு பரலோகத்தில் உண்டாகும் ஸுகத்தைப்பெறலாம். ஒரு அரசு ஒரு வேம்பு ஒரு ஆலமரம் பத்து புஷ்பஜாதி இரு மாதுளை, இரு கொய்யாமரம், ஐந்து மாமரம், இவைகளையேனும் வைத்து வளர்ப்பவர் நரகத்தைக் கண்ணாலும்

காணமாட்டார். இவைகள் மழைக்கும் நிழலுக்கும் கனிக்கும் காரணமானவை. பசுமரத்தை வெட்டுவது மிகப் பாபகரமானது. விருக்ஷங்களுக்கும் ஜீவனும் உணர்ச்சியுமிருக்கின்றன. அதை வெட்டுபவன் ஊமையாவான். அவை வருந்தி சபிக்கின்றன.

## வ்ருக்ஷ தோஹதம். (சிகித்ஸை)

பூக்காமலும் காய்க்காமலும் பட்டுப்போகும் நிலையிலுமுள்ள ஸகலவிருக்ஷங்களுக்கும், வைத்யம்கூறப்பட்டது உத்தம ஸ்த்ரீகள் வாயில் நிறைய மதுவை வைத்து மரத்தின் மீது கொப்பளித்து உமிழ்வது, காலில் குழம்பான அறக்கைப் பூசிக்கொண்டு காலால் உதைப்பது, ஆலிங்கனம் செய்து கொள்வது, என்ற முறைகளால் சில மரங்கள் பூக்கும். இறந்த பசுவின் மாம்ஸத்தை வேரினருகில் புதைத்து ஏழு நாள் விடாமல் நீர்பாய்ச்சினல் எல்லா மரங்களும் செடிகளும் பலன்தரும். வேம்பு யோக சாதாவரீ புநர்நவா க்ஷீரிகா தாம்ரக (தமிழ் பெயர் தெரியவில்லை) இந்த இலைகளைப்பொடிசெய்து அதன் புகையை மரங்களின் அடியில் காண்பித்தால் புழுக்கள் அகலும். எத்தகைய நோயும் வராது. இப்படி பல சிகித்ஸைகள் கூறப்பட்டன. விளாமரமும் பில்வமரமும் வெல்ல ஜலம் பாய்ச்சினல் நன்கு காய்க்கும். ஜாதி, மல்லி, குந்தம் இவைகளுக்குச் சந்தந ஜலம் விட்டால் நன்கு வாஸனையுடன் பூக்கும். பாம்புத்தோல் புகை காட்டினல் புழு அரிக்காமல் விருத்தியாகும். இங்ஙனம், பிரத்யக்ஷமாகப் பலனைக்காணும்படியான பல அபூர்வ வகைகளைக் கூறுகிறார் ஸர்வக்ஞரான வியாஸர்.

## குண்டவிதி.

அக்நியில் பசும் நெய் ஹோமம் செய்து தேவர்களையும் பித்ருக்களையும் ஆராதிப்பது விரைவில் பயனளிக்கும். அந்த கர்மாவுக்கு எப்படி குண்டம் அமைக்க வேண்டும்? எந்தெந்த பொருள்கள் எந்தெந்த தேவர்க்கு பிரியமானவை? எவரைக்கொண்டு எப்படி ஹோமம் செய்யவேண்டும்? குண்ட, திரவ்ய அக்நி ஸம்ஸ்காரம், எவ்வளவு முறை ஹோமம், ஒவ்வொரு கர்மாவிலும் அக்நிக்கு என்னென்ன பெயர் பாத்திரலக்ஷணம் தக்ஷிணை

பசுக்கள் மேய்வதற்குப் பூமி விடுவது போன்ற விஷயங்கள் 20 அத்யாயங்களால் வர்ணிக்கப்படுகின்றன.

## பிரதி ஸர்க்க பர்வா.

இதில் தான் நூறு அத்யாயங்களைக் கூறி தற்காலத்தவர் நம்பாதபடி முற்கால தற்கால பிற்கால அரசர்களது சரிதத்தை வர்ணிக்கிறார். பல சதுர்யுகங்கள் சேர்ந்தது ஒரு கல்பம். இச்சமயம் சுவேத வராஹ கல்பத்தில் இருபத்தெட்டாவது சதுர்யுகத்தில் கலியுகம் நடக்கின்றது. பிரும்மாவினுடைய முதலாண்டின் மூன்ருவது நாளிலே ஏழாவது முகூர்த்தத்தில் வைவஸ்வத மநு தோன்றினர். அவரது புத்ரனை இக்ஷ்வாகு முப்பத்தாருயிரமாண்டுகள் அரசாண்டார். விகுக்ஷி ககுத்ஸ்தன் விஷ்வகச்வன் குவலயாச்வன் ப்ரஸேநஜித், ரவணச்வன் மாந்தாதா, ப்ருகுத்ஸன் ரிரிம்ஸதச்வன் இவன் முப்பது குதிரை பூட்டிய தேரில் செல்பவன். அநரண்யன், பிரஷதச்வன், ஹர்யச்வன், வஸுமான் த்ரிதன்வா, திருசங்கு ஹரிச்சந்திரன், ஜயன், ஸகரன், அஸமஞ்ஜஸன், நாபாகன், அம்பரீஷன், ஸிந்து கல்மாஷபாதன், ஹரிவர்மா, ஸுதர்சநன். இவன் தேவீ பக்தன் ஒரு ஸமயம் "கடல் உனது நகரை விழுங்கப்போகிறது. நீ ஹிமாலயம் செல்" என தேவீ கனவில் கூற அங்ஙனமே சென்று நீர் வடிந்தபின் வேறிடத்தில் புதிதாக ராஜ்யம் அமைத்து ஆக்ஷி புரிந்தான்.

இக்ஷ்வாகு முதல் ஸுதர்சநன் வரை ஸூர்ய வம்சத்து அரசர்கள். கிருதயுகத்தில் நான்கு பாதங்களிலும் யார் யார் எத்தினை ஆண்டு ராஜ்ய பரிபாலநம் செய்தனர்? என்பதைச் சரித்ரம் எழுதுபவர் போல் கூறுகிறார் வேத வியாஸர்.

ஸுதர்சநன் திலீபன் ரகு. இவன் நந்தினியின் பிரஸாதத்தால் பிறந்தவன். அஜன் தசரதன் ராமன் குமன் அதிதி நிபந்தன், நலன். இவன் தேவீ பக்தன். நாபன் புண்டரீகன் க்ஷேமதன்வா துவாரகன், அஹீநஜன், பாரியாத்ரன் சத்மகாரீ உக்தன் வஜ்ரநாபீ சங்கநாபீ விச்வபால, ஸ்வர்ணநாபீ புஷ்யஸேந, துருவஸந்தி, அபவர்மா தேவகர, கிருதஞ்ஜயன் ஸுரதன்வாவரை ரகுவம்ச மன்னர்

களைக்கூறி பின்னவர்களில் ஐம்பத்தாறு அரசர்கள் தேவீ பக்தர்களாக இருந்து வேள்விகளைச் செய்து ஸ்வர்க்கஞ் சென்றனர். அதன் பிறகு திரேதாயுகத்தின் மூன்ருவது பாகத்தில் சூர்யவம்சத்து அரசர்கள் புத்த மதத்தைத் தழுவி ஜாதிகளில் நம்பிக்கை இல்லாமலிருந்தனர். புத்த ஜைந ஆர்ஹத என்பவைகள் அஸுரர்களை மயக்குவதற் காக மஹா விஷ்ணுவால் கல்பிக்கப்பட்டன. இக்கால சரிதம் கூறும் கௌதம புத்தருக்கு முந்திய கதை இது.

## சந்திர வம்சம்.

சந்திரன் புதன் புரூரவஸ் ஆயு நகுஷன், யயாதி, யது, குரோஷ்டா, விரிஜநக்ந, ஸ்வாஹார்ச்சந, சித்ரரத அரவிந்த சிரவா: உசநஸ் கமலாம்சு, விதர்ப்பன், க்ராதன், குந்திபோஜன், புரு, ப்ரவிர, நமஸ்ய, ஸுத்யும்ந, பாஹுகர, ஸம்யாதி, தந்யாதி, ஐந்த்ராச்வன், ரிந்திநரன், ஸம்வரண என அந்தவம்சம் வளர்ந்தது. ஸூர்யன் தபதி என்ற தனது கன்னிகையை ஸம்வரணனுக்களித்து திரேதாயுகம் முடியும் ஸமயம் பிரளயம் வருவதை அறிந்து அவிதனைத் தன்னிடம் அழைத்துச் சென்ருர். ஐந்தாண்டுகள் சென்றபின் அகஸ்தியரது தேஜஸ்ஸால் கடல்நீர் உலர்ந்து பூமி முன்போல் ஸமமானது. வஸிஷ்ட ரைக் குருவாகக்கொண்டு ஸம்வரணன் ப்ரதிஷ்டாந நகரத் தில் அரசாண்டார். துவாபரயுகத்தின் முதலரசரிவர். புத்த வம்சத்தைச்சார்ந்த பிரஸேநன் என்ற ஸக்தா நகர அரசனுனன். யதுவம்சத்தைச் சார்ந்த ஸாத்வதன் மதுரா புரியை ஆண்டான். மிலேச்ச வம்சத்தில் வந்த சுமச்ரு பாலன் மருதேசத்தை ஆண்டான்.

## துவாபரயுக மன்னர்கள்.

ஸம்வரணன் அர்ச்சக்ஞன் ஸூரிஜாபீ ஸூர்ய யக்ஞன் ஆதித்ய வர்த்தநன் துவாதசாத்மா, திவாகரன், பிரபாகரன் வைகர்தநன் மார்தாண்ட வத்ஸலன் சித்ர பாநு, வைரோசநன் தநபாலன் மிலேச்சஹந்தா, பிரம் மேஷ்டிவர்தநன் சிராத்ததேவன் ஸௌமதத்தி அவதம்ஸ பிரதம்ஸ பாரதம்ஸ, ஸமாதம்ஸ, தம்ஸ, துஷ்யந்த, பர தன். [இவன் மஹாவீரன். இவனது பெயரால் பரதகண் டம் என நம் நாட்டிற்குப் பெயருண்டானது. பூமியைத்

தனித்தனி கண்டமாகப் பிரித்தவனிவன் ] பரத்வாஜன் பவநமன்யுமான் பிருஹத் க்ஷேத்ரன் விதிஹோத்ரன், சக்ரஹோத்ரன், தநுர்திப்தன். ஹஸ்தி—இவன் ஐராவதத்தின்மீதேறிவந்து ஹஸ்திநாபுரத்தை நிர்மாணம் செய்தான்.— அஜமீடன் ரக்ஷபாலன், குரு—இவன் பூமியை ஸதா உழுதவண்ண மிருக்க தேவேந்திரன் யாது வரம் வேண்டுமென்றார். இந்த இடம் மிக உயர்ந்த புண்ய க்ஷேத்ரமாகவேண்டும். இங்கு செய்யும் புண்யம் நெல் கதிர்போல நிறைய பலனைத் தரவேண்டும் என்றான். அதனால் அவன் பெயராலேயே குருக்ஷேத்ர மெனும் தர்ம க்ஷேத்ரமானது.-ஜந்ஹு அக்ரோதந, திலிப பிரதிப சந்தனு விசித்ரவீர்யன் பாண்டு பாண்டவர் என துவாபர யுகத்து அரச வம்சமாம்.

முன் தேவாஸுர யுத்தத்தில் மாண்ட அரக்கரெல்லாம் துவாபரயுகத்தில் துர்யோதநனது நண்பர்களாகத்தோன்றினார்கள். லக்ஷம் அக்ஷோஹிணீ ஸேனையின் பாரத்தை வஸுதேவ புத்ரனாகப் பிறந்து பகவான் பாரதப் போரின் மூலமாகக் குறைத்தார். அபிமன்யு பரீக்ஷித் ஜநமேஜயன் சதாநீகன் சித்ரரதன் ஸுஷேணன் மேதாவி அஹீநரன் நிர்மித்ரன் க்ஷேமகன்வரை பாண்டவ வம்சம் வளர்ந்தது. க்ஷேமகன் ராஜ்யத்தை விட்டுவிட்டு கலாப கிராமத்தில் வஸித்தான். அவனை மிலேச்சர்கள் கொன்றனர்.

### மிலேச்ச யாகம்.

க்ஷேமகனது புத்ரனான பிரத்யோதனிடம் நாரதர் வந்து உனது பிதாவை மிலேச்சர் கொன்றதால் அவர் நரகஞ்சென்றார். மிலேச்சர்களை ஒழித்து ஒரு வேள்விசெய்து ஸுவர்க்கத்திற்கு அவரை அனுப்பு. இதே புத்ரன் கடமை என்றார். க்ஷேமகனது நற்கதியை நாடி குரு க்ஷேத்ரத்தில் விசாலமான யாககுண்டம் அமைத்து வேத வித்துக்களைக் கொண்டு பிரத்யோதன் மிலேச்ச யாகம் செய்தான். ஹாரஹூணை, பர்பர, குருண்டசக, கஸா, யவந, பல்லவா, ரோமஜ, கரஸம்பவ, கடல் நடுவிலுள்ள துவீபங்களிலிருக்கும் காமரூ, சீனர் இவர்களை எல்லாம் மந்திர மஹிமையால் சாம்பலாக்கினான். நாரதர் மன்னனிடம் வந்து அவர் தந்தை ஸுவர்க்கம் சென்றதாகக்

கூறினர். மிலேச்ச வடிவனன கலி ஸ்ரீ நாராயணனை ஸ்துதித்து தனக்கிருப்பிடமான அனைவரும் இறந்ததால் தனக்குத் தங்கி நிற்க வேறு இடம் அளிக்கவேண்டும் என பிரார்த்தித்தான்.

## சேசு கிருஸ்தவர் முதலியவர் ஸிருஷ்டி.

இந்த யுகம் உன்னைச் சார்ந்தது. உனக்குப் பல இடங்களைத் தருகிறேன் என்று கூறி மிலேச்ச வம்சத்தை விருத்திசெய்ய ஆதம ஹவ்யவதி என்ற தம்பதிகளைப் படைத்தார் விஷ்ணு. பிரத்யோதனது புத்ரன் வேதவான். அவனது புதல்வன் ஸுநந்தன். அவனுக்குப் புத்திர னில்லை. ஆர்யதேசம் க்ஷீணமாயிற்று. மிலேச்சர் வந்து புகுந்தனர். 88 ஆயிரம் முனிவர் ஹிமாலயஞ்சென்றனர்.

ஸ்ரீ வேதவ்யாஸர் தனது மகதைப் புராணம் கேட்பவனுக அமைத்து அதற்கு மேல் கலியில் உண்டாகப் போகின்ற அரசர்களைக் கூறுகிருர். துவாபரயுகத்தின் முடிவில் பதினுயிரமாண்டுகள் மிகுதியிருக்கும் பொழுது மிலேச்சர்களது பூமி கீர்த்தியுள்ளதாக இருக்கும். பகவான் ஆதம ஹவ்யவதி (ஆதம ஈவ்) என்பவர்களைப் படைத்தாரல்லவா? மநதை அடக்கி ஆதமத்யாநம் செய்ததால் அவருக்கு ஆதம என்ற பெயருண்டானது. ப்ரதாந மெனும் நகரத்திலே அழகிய ஒரு உத்யாநத்தைப் படைத்தார் ஈச்வரன். அங்கிருந்த பாபமரத்தின் அருகே தன்மனைவியைப் பார்க்கச் சென்ருன் ஆதமன். கலி பாம்பாகி தனது மாயையால் அந்த பாபமரத்தின் பழத்தைச் சாப்பிடும்படி செய்தான். அது உலக இயல்பை தரக்கூடியது. அவர்களுக்கு மிலேச்ச புத்ரர்கள் உண்டானுர்கள். [மிலேச்ச என்பது மகம்மதியர் என சிலர் நினைக்கின்றனர். வேத சாஸ்த்ர வழியில் செல்லாத அனைவரையும் மிலேச்சர் பாஷண்டி என்ற சொற்களாலழைக்கிருர் வ்யாஸர்] அந்த உத்யாந பழங்களைக் கடவுளுக்கு அளித்து அவர் இறந்தார். அவரது புத்ரன் சுவேதன்– இதே சேசு என மாறிற்று போலும் - அநுஹ கீநாச மஹல்லலன் விரத இவன் தன் பெயரால் நகர நிர்மாணம் செய்தான். ஹநூக– இவன் மிலேச்சனுயினும் பழங்களைப் பகவானுக்கு அளித்து சரீரத்துடன் ஸ்வர்க்கம் சென்ருன். ஆசாரம்

அறிவு ஸம்ஸ்காரம் தேவபூஜை இவைகளை இவன் ஏற்படுத்தினன். அவன் சொற்படி விஷ்ணு பக்தி அக்நிபூஜை அஹிம்ஸை தவம் அடக்கம் இவைகளை மிலேச்ச தர்மமாக சில முநிவர் கல்பித்தனர்.

ஹநூகனது புத்ரன் மதோச்சிலன் லோமகன் ந்யூஹன்—இவனும் விஷ்ணு பக்தன். இவனுக்கு மூன்று புத்ரர்கள். ஏழாவது நாள் பிரளயம் உண்டாகப்போகின்றது. முக்ய வஸ்துக்களுடன் நீ ஒரு கப்பலில் ஏறி செல் என பகவான் இவனுக்கு ஸ்வப்நத்தில் கூறினர். அங்ஙனமே எண்பத்தெட்டாயிரம் முநிவர்களுடன் ந்யூஹன் மாத்திரம் ஜீவித்திருந்தான். ரிஷிகள் மாயா தேவியை ஸ்தோத்திரம் செய்து சிஷிணு என்றநகரத்தை நிர்மாணம் செய்து ந்யூஹனைக் கொண்டு அரசாக்ஷி நடத்தினர். அவனது பக்திக்கு ஈடுபட்டு பகவான் புத்திசன் என்ற பெயருடன் மிலேச்சரை விருத்தி செய்தார். அதற்கு ஏற்றது போல் வேத விரோதமான **பிராம்மீ என்ற பாஷையை** இயற்றினர். ந்யூஹனது புத்ரன் யாகூதன். அவனுக்கு ஜூம்ரோ மாஜஜே மாதி யூநாந தூவல மஸக. திராஸ என ஏழு புத்ரர்கள். அவர்களது பெயரால் நகரங்கள் ஏற்பட்டன. ரஊ என்பது போன்ற வம்சவிருத்தி வர்ணிக்கப்படுகிறது. [இங்கு மிலேச்ச யூரோப்பிய ரஷ்ய சீநா ஸிங்களம் முதலிய தேச ராஜாக்களின் வம்சமும் மிக விரிவாக கூறப்படுகிறது. அது அந்த தேச சரிதமறிந்தவர்களே ஆமோதிக்க முடியும்.]

## மிலேச்ச பாஷை.

கலிபிறந்து இரண்டாயிரமாண்டுகள் ஆன பொழுது பிரும்மா வர்த்தம் தவிர மற்ற விடமெல்லாம் மிலேச்ச மயமானது. மூசா என்ற மிலேச்சாசார்யன் சிஷ்யர் மூலமாக மிலேச்ச தர்ம பிரசாரம் செய்தார். வேதம் தேவ பாஷை இவைகள் குறைந்து மிலேச்சபாஷை விருத்தியாகும். வ்ரஜ பாஷா மஹாராஷ்ட்ரீ யாவநீ குரண்டிகா என்ற நான்கு முக்யமானவை. அவைகளிலிருந்து நாலு லக்ஷம் பாஷைகள் வளரும். பாநீய என்பதை பாநீ, புபுக்ஷா என்பது பூக்கா என்றும் கூறப்படும். மற்றொறு பாஷையில் பாநீயம் பாபட என்றும், போஜநம் கக்கநம்

என்றும், ஆஹுதி என்பது ஆஜூ என்றும், பித்ரு—பைதர ப்ராதா-ப்ரதர், அச்வ—அஸ்ப, ஜாநு—ஜைநு. ஸிந்து-ஹிந்து என்பதும் யாவநீ பாஷா.

ரவிவாரம்—ஸண்டே. பால்குந—பர்வரீ (பிப்ரவரீ)
ஷஷ்டி—ஸிக்ஸ்டீ, என்று குரண்டீ பாஷா. [பக்கம் 256]
ரவிவாரேச ஸண்டேச —பால்குநே சைவ பர்வரீ,
ஷஷ்டிச்ச ஸிக்ஸ்டீ விக்ஞேயா — ததுதாஹர மீத்ருசம்.

[யாவநீ என்பது உருது ஹிந்தி. குரண்டா என்பது ஆங்கிலம். பாநீயம் என்ருல் ஸம்ஸ்கிருதத்தில் தீர்த்த மென்று பொருள். அது பாநீ என்று ஹிந்தியில் கூறப் படுகிறது. பிதா என்ற சப்தம் ரிகாராந்த சப்தம் ஸம்ஸ் கிருதத்தில். அது ஆங்கிலத்தில் பாதர். ப்ராதா என்பது ஸஹோதரன் என்ற பொருளில் பிரதர் என்றும் ஷஷ்டி அறுபது என்பது ஸிக்ஸ்டீ பால்குந என்ற சாந்த்ரமான தை மாதம் பிப்ரவரீ ஏன்றும் ஆங்கிலத்தில் கூறப்படு வது எல்லோருக்கும் நன்கு தெரிந்ததாம். பாநுவாரம் என்பது சப்தத்தின் மாறுதலாகக் கூருமல் கருத்தைக் கொண்டு ஸண்டே என அமைந்தது. இதையும் பின்னற் கூறப்படும். இந்திய சரிதத்தில் உள்ள வத்ஸன் ப்ருத்விராஜன் தேசங்கு அக்பர் நாமதேவர் முதலியவர் களையும் ஸமீபகாலத்தில் உள்ளவர் சேர்த்திருப்பரோ என சிலர் ஸந்தேகப்படுவது போல் பவிஷ்ய புராணம் கூறும் போது சில இடங்களில் இவை புத்தகத்திலிருக்கா என்று நேரில் அடியேனைக் கேட்டனர். படிப்பவருக்கும் இந்த ஸந்தேஹம் வரக்கூடும் என்பதைக்கருதி மூலத்தி லுள்ள சுலோகத்தையும் பக்கத்தையும் குறித்துளேன். ஸந்தேஹம் நீங்காதவர் மூலக்ரந்தத்தைப் பார்த்து அடி யேனது கல்பனை சுலோகமல்ல என தெளிவடையலாம். மூலத்தில் எவரேனும் சேர்த்திருப்பர் என்ற ஸந்தேஹத் திற்கு அடியேன் பொருப்பாளியல்ல. முக்கால முணர்ந்த முநிவர் கூற்றே இது என்பதில் அடியேனுக்குச் சிறிதும் ஸந்தேஹமில்லை.]

## ராஜ்ய புத்ரா.

ராஜபுடாணு: கலிபிறந்து ஆயிரமாண்டுகள் சென்ற பின் எங்கும் ஒரே மிலேச்சமயமாக இருப்பதைக்கண்ட தேவர் ஸ்வர்க்கத்திலிருந்து ஆர்யாவதீ என்ற மனைவி

யுடன் கச்யபரை அவனிக்கு அனுப்பினர். காச்மீர தேசத்தில் அவர் அம்பிகையை உபாஸித்து அவளருளால் பத்தாயிரம் மிலேச்சர்களை வைதிகர்களாகச் செய்தார். அவர்கள் மூலமாக வர்ணாச்ரமவிதிக்குட்பட்ட நாலுகோடி மநிதர் விருத்தியாயினர். 120 ஆண்டுகள் கச்யபர் ராஜ்யபுத்ர தேசத்திலிருந்தார். 8 ஆயிரம் சூத்ரர் அங்கு வஸித்தனர். அவர்களுக்கு பிருது என்பவர் அரசன். அவனது புத்ரர் மாகதன். அவரை மாகத தேசத்தில் மகுடாபிஷேகம் செய்துவைத்து, கச்யபர் ஸ்வர்க்கம் சென்றூர். பாஞ்சாலம் ஆநர்த்தம் களிங்கம் ஸிந்து கைகய மத்ர கோணிந்த என்ற இடங்களில் மகதருடைய புத்ரர்கள் தன் தன் பெயரால் தனி நகரங்களை அமைத்துக்கொண்டு ராஜ்யமாண்டனர். இவர்கள் வம்சம் மஹாநந்தன் வரை வளர்ந்து வர்ணாச்ரம தர்மம் ஓங்கிற்று.

## கௌதம புத்த சாக்யமுநி.

இதைக்கண்டு துக்கம் கொண்ட கலி பகவானை வேண்டினன். காச்யப வம்சத்தில் பகவான் கௌதமன் என்ற பெயருடன் தோன்றி பௌத்த தர்மத்தைச் சீர்படுத்தி நகரங்களில் பிரசாரம் செய்தார். பத்தாண்டு ராஜ்யமாண்டார். சாக்யமுநி என்பவர் 20 ஆண்டுகள் அரசாண்டார். சுத்தோதநன் சாக்ய ஸிம்ஹன் புத்தஸிம்மன் சந்த்ரகுப்தன்—இவன் பௌரஸாதிபதியான ஸுலூவன் பெண்ணை மணந்து யவந பௌத்த மதத்திலீடுபட்டான். அவன் ஸந்ததி பிந்துஸார அசோக என்பவர்.

## க்ஷத்ரிய உத்பத்தி.

இந்த ஸமயத்தில் கான்யகுப்ஜ தேசத்தைச் சார்ந்த ஒரு வேதியர் அற்புதமெனும் சிகரத்தில் வேத மந்த்ரத்தினல் ஹோமம் செய்தார். ப்ரமா எனும் ஸாமவேதியும் சபஹாநி எனும் யஜுர் வேதியும் த்ரிவேதியான சுக்லன் அதர்வ வேதியான பரிஹாரக என்ற நான்கு க்ஷத்திரியர்கள் தோன்றினர். ஐராவத குலத்தில் தோன்றிய கஜத்தின் மீதேறி அசோகனை ஜயித்துத் தன்வசமாக்கினர். நாலுலக்ஷம் பௌத்தரை ஜயித்து அவந்த தேசத்தில் அம்பாவதி எனும் நகரை அமைத்து அதிலிருந்து அரசாண்டனர்.

இவர்களில் சபஹாநி என்பவன் ராஜ புத்ரத்தில் அஜமேரபுரம்–ஆஜ்மீர்–சுக்லன் ஆநர்த்தத்தில் துவாரகை என்ற ராஜதானிகளை அமைத்தனர். அக்நியிலிருந்துண்டான இவர்கள் சிறிதுகாலம் ஆக்ஷிபுரிந்து தர்மத்தை நிலைநாட்டி யோகத்திலீடுபட வநஞ்சென்றனர். ப்ரமரன், மஹாமதன் தேவாபி தேவ தூதன் கந்தர்வஸேநன் சங்கன்வரை வளர்ந்த அந்த ஸந்ததியில் கந்தர்வஸேநன், சங்கனுக்கு முடிசூட்டி வநஞ்சென்றூர். அச்சமயம் உலகை ஆக்ரமித்துவந்த சகர்களைவிரட்ட இவனது ஆணையால் வீரமதி என்ற தேவஸ்திரீ கந்தர்வசேநனை மணந்து சிவதிருஷ்டி என்ற புதல்வனைப் பெற்றூள்.

## விக்ரமாதித்யன் ஸிம்மாசநம்.

சிவதிருஷ்டி என்பவர் பிறக்கும் பொழுது வானிலிருந்து புஷ்பமாரிப் பொழிந்தது. இறைவனருளால் மிகக பராக்ரமசாலியாக இருந்து வைதிக தர்மத்தை இருபது நண்பர்களை ஸஹாயமாகக்கொண்டு நிலைநாட்டினூர். விக்ரமத்தில் ஆதித்யனைப்போல் பிரகாசிப்பதால் விக்ரமாதித்யன் என பெயர் பெற்றூன். சிவ்பக்தியில் ஈடுபட்டு மஹாகால க்ஷேத்திரம் வந்து பெரிய அழகிய ஸபையை நிர்மாணம் செய்தான். அவனது பக்திக்கும் தர்ம பிரசாரத்திற்கும் இரங்கி பகவான் 32 பதுமைகளுடன் கூடிய ஒரு திவ்ய விமாநமளித்தார். அதைக் காக்க பார்வதி ஒரு வேதாளத்தை அனுப்பினூள். வேதியரைக்கொண்டு நல்லநாளிலே அதைவிதிப்படிப்ரதிஷ்டை செய்து தர்மங்களைக் கேட்டான் விக்ரமாதித்யன்.

## வேதாள கதை.

உமயவள் அனுப்பிய வேதாளம் ஓர் அந்தண உருவந் தாங்கி விக்ரமார்க்கன் அருகே வந்து உலக இயல்பு, துஷ்டரின் குணம், ஸத்ஸங்கம், ராஜதர்மம், நீதி முதலியவைகளைப் புகட்டும்படியான கதைகளைக் கூறிற்று. ஒவ்வொரு கதையும் படிக்கவும் கேட்கவும் மிக ருசியானவை. தர்ம தத்துவம் நிறைந்தவை. முதல் கதையை மாத்திரம் உதாஹரணமாகக் கூறுவாம்.

காசியில் வஜ்ரமகுடன் என்றோர் ராஜ குமாரனிருந்தான். புத்திதக்ஷன் எனும் மந்திரி குமாரனுடன் வேட்டையாட வனஞ்சென்றான். தந்தவக்த்ரன் என்ற அரசனது பெண்ணான பத்மாவதி. தோழிகளுடன் ஒரு தடாகத்தில் ஜலக்கிரீடை செய்துக் கொண்டிருந்தாள். அரசகுமாரன் அவளைக்கண்டு மூர்ச்சையாகி கீழே விழுந்தான். எழுந்து தன்னை மணக்கும்படிவேண்ட அவள் தலையிலிருந்த புஷ்பத்தை எடுத்து காதுகளில் வைத்து மறுபடி அதைப் பல்லால்கடித்து காலில்வைத்து மறுபடியும் அதை மார்பில் வைத்துக்கொண்டு சென்றாள். அவளைக்காணமல் மிக்க சோகத்துடன் உண்ணமலும் உறங்காமலுமிருந்த அரசகுமாரனைக்கண்டு பெற்றோர் வருந்தினர். மந்திரி குமாரன் அவனுக்கு வைத்தியம் செய்ய கர்னடக தேசத்திற்கு அழைத்துச் சென்றான். அந்தப் புரத்தில் வேலை செய்யும் ஒரு கிழவிக்கு யதேஷ்டமான பொருளைத்தந்து ராஜ குமாரனுடன் ராஜ குமாரத்தியைச் சேர்த்துவைக்கும்படி வேண்டினன். பத்மாவதி சந்தநக்கையுடன் அவனது மார்பிலும் இரு கன்னங்களிலும் அடித்து விரட்டினள். இதைக்கேட்ட மந்திரி குமாரன் அவளதுகருத்தை உணர்ந்து அவனுக்குரைத்தான்.

வேந்தே நீ அஞ்சவேண்டாம்! அன்று புஷ்பத்தைக் கடித்து மார்பில்வைத்துக்கொண்டு உன்னிடம் அன்பிருப்பதாகவும், உன்னை மநதில் இருத்தியதாகவும் கூறினள். இன்றோ சந்தநத்தால் மூன்று இடங்களில் கிழவியை அடித்து தான் ரஜஸ்வலையாக இருப்பதாகவும் மூன்று நாள் கழித்து வரலாம் என்றும் தெரிவிக்கிறாள் என்றான். மூன்று நாட்கள் சென்றபின் மறுபடியும் கிழவியை யனுப்பி ராஜ குமாரனது இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும்படி வேண்டினன். இதைக் கேட்டு ஸந்தோஷமடைந்த பத்மாவதி தன் விரலிலிருந்த மோதிரத்தை ஜன்னல் வழியாக எறிந்து கிழவியைக் கன்னத்திலும் பிருஷ்டத்திலும் அடித்தாள். இதை யறிந்த மந்திரி குமாரன் நடு நிசியில் ஜன்னல் வழியாக வரச்சொன்னள் என்று கூறி அனுப்பினன். அங்ஙனமே சென்ற வஜ்ரமகுடனுடன் பத்மாவதி ஒருமாதகாலம் ஏகாந்தமாக இன்பத்தை அனுபவித்து வந்தாள்.

ஒரு மாஸமானபின் ராஜ குமாரனது காமதாஹம் கொஞ்சம் அடங்கியது. தோழனது ஞாபகம் வந்தது. அவனைக் கண்டுவர மனைவியிடம் உத்தரவு கேட்டான். அவள் பதியைவிட்டுப் பிரிந்திருக்க விரும்பவில்லை. அரசன் சொல்லை மீறவும் முடியவில்லை. மந்திரி குமாரன் இருக்கும்வரை அரசன் வெளியே செல்வான். அவனைக் கொன்றால் நலமெனக் கருதினள். விருப்பின்றி வேந்தனை அனுப்பி அவர் நண்பனுக்கு விஷங்கலந்த தின்பண்டம் தந்தாள். ஆவலுடன் நண்பனைக்கண்டு அவளளித்ததைக் கொடுத்தான். புத்திதக்ஷன் அதில் சிறிது நாயிக்கிட்டு அதை உண்ணாமலிருந்தான். ஏனதை ஏற்கவில்லை என ராஜகுமாரன் கேட்க அதைத் தின்ற நாய் இறந்து கிடப்பதைப் பார். அதில் நஞ்சு உளது என்றான். இதனால் பெண்களின் குணத்தை அறிந்த வஜ்ர மகுடன் அவளை விட்டு விலகினன். மித்ர! நீ அவளிடம் சென்று உடன் இருந்து அவள் உறங்கும் போது அவளது முழங்காலில் மூன்று சூல அடையாளமிட்டு அவளது ஆபரணத்தில் ஒன்றை எடுத்து வா என்றான்.

அங்ஙனமே செய்த அரசகுமாரனைச் சிஷ்யனாக்கி தான் யோகி வேடம் பூண்டு மந்திரி சுடு காட்டிடையே தங்கினன். பத்மாவதியின் ஆபரணத்தை விற்று வரும்படி கூறின யோகி சொன்னபடி ராஜ வீதிக்குச் சென்றான் சிஷ்யனான ராஜகுமாரன். இது திருடிய பொருள் என காவலாளிகள் பத்மாவதியின் தந்தையான தந்தவக்ரனிடம் இவனை அழைத்துச் சென்றனர். அரசன் இது எங்கிருந்து எப்படி வந்ததென விசாரிக்க தன் குரு அளித்தது என்றான். குருவை அழைத்துவந்து உனக்கேது? இது என வினவினன். அவர் தான் மந்திர ஸித்தி செய்யும் பொழுது சுடுகாட்டிலிருந்து வந்த ஒரு பேய் என்னைச் சரணமடைந்தது. அதற்கு இடது முழங்காலில் சூலத்தால் ஒரு அடையாளம்செய்து பெண்ணாக்கினேன். அந்தபேய்ப் பெண் இதை எனக்களித்தாள் என்றார். அரசன் தனது பெண்ணின் ஆபரணம் அது என்றுணர்ந்து அவளது இடது முழங்காலைப் பார்த்தான். அதில் த்ரிசூல அடையாளத்தைக் கண்டு அவள் பேய் என அவளைத் துரத்திவிட்டான். அவளை மந்திரி சொற்படி அரச குமாரன் தன் வீட்டிற்கழைத்து வந்தான்.

இந்த கதையைக்கூறி வேதாளம் விக்ரமனைப் பார்த்து இந்நால்வரில் அதிக பாபம் யாருக்குளன வினவிற்று. விக்ரமன், ப்ராம்மணோத்தம! ( வேதாளம்) மந்திரிகுமாரன் நண்பனுக்கு உதவி செய்ததால் பாபியல்ல. வஜ்ர மகுடன் ஸ்வகார்யத்திற்கு அந்த வேஷந்தரித்தான். அதனால் அவனும் பெரும் பாபியல்ல. காவலாளிகள் தனது கடமையைச் செய்தனர். அவர்களும் பாபியல்ல. ரிதுவாகியும் தனது பெண்ணை நல்ல புருஷனுக்குத் தராததாலும் காந்தர்வ விவாஹம் செய்துக்கொண்ட தம்பதிகளுக்கு விக்நம் செய்ததாலும் குற்றமற்ற கன்னிகையை கைவிட்டதாலும் தந்த வக்ரன் என்ற அரசனே மிக்கபாபியாகி லக்ஷவர்ஷங்கள் நரகத்திலிருப்பான், என்றானரசன்.

இப்படி மது மதி, விரவர, சந்திரவதி, ஹரிதாஸ, காமாங்கி, திருலோகஸுந்தரீ, குஸு மதா, காமாலஸா, குணசேகர, தர்ம வல்லப, ஸுக பாவிநீ, சந்திராவலீ, ஜீமூத வாஹந, சங்க சூட கருட ( இதிலிருந்தே நாகாநந்தம் என்ற நாடகம் ஸ்ரீஹர்ஷ கவியாலியற்றப்பட்டது.) காம வருதிநீ குணகர மோஹிநீ அநங்கமஞ்ஜரீ முதலிய கதைகளைக் கூறி தர்ம தத்துவத்தைச் சொல்லும்படி வேதாளம் கேட்கின்றது. படிக்க வேண்டிய கதைகளிவை. விக்ரமனது தர்ம தீர்ப்பும் மிக ரஸமானது.

## ஸத்ய நாராயணசரிதமும் விரதமும்.

கலியில் பிரத்யக்ஷமாக ஸர்வ பலன்களையும் தருபவர் ஸத்ய நாராயணமூர்த்தி. ஒவ்வொரு பௌர்ணமியிலும் மாலைவேளையில் பூஜைசெய்து ஒராண்டிற்குப்பின் உத்யாபநம் செய்யவேண்டும். [ஓம் நமோ பகவதே துப்யம் ஸத்ய தேவாய தீமஹி சது: பதார்த்த தாத்ரேச நமஸ்துப்யம் நமோ நம:] என்ற மூலமந்த்ரத்தை நூற்றெட்டுமுறை ஜபித்து அதில் பத்தில் ஒருபங்கு ஹோமம் செய்யவேண்டும். அவருக்கு நிவேதனம் செய்த பொருளை நான்கு பாகமாகச் செய்து கதை கேட்கும் பிராம்மணர், ஆசாரியர் தனது குடும்பம் தான் ஆகிய நால்வருக்கும் பங்கிடவேண்டும். விஷ்ணுவே நாரதருக்குரைத்த ஆறு அத்யாயமுள்ள கதையைக் கேட்க வேண்டும்.

காசியில் சதாநந்தர் என ஒரு வேதியனிருந்தான். விஷ்ணு பக்தனுன அவன் குடும்பத்தைக் காக்கப் பொருளில்லாமல் ஸதா தனிகரை அடுத்து யாசகம் செய்து ஜீவித்து வந்தான். ஒரு நாள் பகவான் கிழ வேதியர் வேஷந்தாங்கி ஏழ்மை அகல இந்த விரதத்தை உபதேசித்தார். ஸாளக்ராமத்தில் பகவானை த்யாநம் செய்து பசும் பால் தயிர் நெய் கங்காஜலம் தேன் இவைகளாலாகிய பஞ்சாமிருதத்தால் அபிஷேகம் செய்ய வேண்டும். கோதுமை மாவைச் சர்க்கரை பால் நெய் இவைகளுடன் கலந்து நிவேதநம் செய்யவேண்டும் என்று கூறி ஒரு கதையையும் சொன்னுர்.

கேதாரமணி பூரகமெனும் நகரிலே சந்த்ர சூடன் என்ருெர் வேந்தனிருந்தான். மிலேச்ச அரசர் அவனது ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டு சந்த்ரசூடனை விரட்டி விட்டனர். அவன் தெய்வமே கதி என தீர்த்த யாத்ரையாகச் சென்ருன். காசியிலே ஸதாநந்தரெனும் பிராம்மணன் ஸத்ய நாராயண பூஜை செய்வதைக்கண்டு களித்தான். தனக்கும் அதை உபதேசிக்கும்படி வேண்டினுன். ஏழுநாட்கள் அவர் கூறியபடி ஸத்ய நாராயண பூஜை செய்தான். ஏழாவது நாளிரவு பகவான் பிரத்யக்ஷமாகி ஒரு கத்தியைத் தந்தார். அதைக் கொண்டு பகைவனை வென்று தனது ராஜ்யத்தைப் பெற்ருன். அன்று முதல் ஒவ்வொரு பௌர்ணமியிலும் விதிப்படி அந்த பூஜை செய்து தனது குடிகளையும் செய்யும்படி தூண்டினுன். முடிவில் வைகுண்டம் சென்ருன். அதே போல் ரத்நபுரியிலுள்ள லக்ஷ்மீபதி என்ற வைச்யன் தற்செயலாக அவ்வரசன் செய்த பூஜையைக் கண்டு அதன் பயனை விஜாரித்தறிந்தான். குழந்தை பிறக்கவேண்டும் என்ற ஆசையால் ஸாதுவான வைச்யனும் லீலாவதி என்ற பத்நியுடன் கூட அந்த விரதத்தைச் செய்துவந்தான். நாராயணனது அருளால் அழகிய ஒரு பெண்குழந்தை பிறந்தாள். கலாவதி என்றுபெயரிட்டு ஒன்பதாவது வயதில் விதிப்படி காஞ்சநபுரத்தில் வஸிக்கும் சங்கபதி என்ற வைச்யனுக்கு அளித்தான். மாமனும் மருமகனும் சேர்ந்து வியாபாரம் செய்தனர். செல்வம் செழிக்க வியாபாரம் வலுத்தது. பலநாடு சென்று பொருளீட்டினர். ஸத்ய

நாராயண விரதத்தை மறந்தனர். நர்மதா தீரத்தில் தங்கினர். அந்நாட்டு அரசனது அரண்மனையில் திருடன் புகுந்து உயர்ந்த ஆபரணங்களைக் களவாடிச் சென்றான். காவல்காரரைப் பார்த்து திருடனை அல்லது பொருளைக் கொண்டு வராவிடில் கடுமையாகச் சிக்ஷிப்பேனென்றான் அரசன். ராஜசிக்ஷைக்குப்பயந்து நர்மதையில் வீழ்ந்திறக்க வந்த காவலாளிகள் எண்ணிறந்த ஆபரணங்களுடனும் செல்வத்துடனும் உள்ள வைச்யர்களைக் கண்டனர். இவர்களே கள்வரென பிடித்துச் சென்றனர். பொருள்களைப் பொக்கிஷத்தில் சேர்த்து இவர்களைச் சிறைப்படுத்தினன் அரசன்.

விஷ்ணுவின் பிரியமான மனைவி லக்ஷ்மீதேவி. தர்மம் யக்ஞம் அரசன் கள்வன் என அவளுக்கு நான்கு புத்ரர்கள் உண்டு. முதலிரு புத்ரர்களை அவமதித்ததால் மற்றிருவர் வைச்யனது பொருளைப் பிடுங்கிச் சென்றனர். வைச்யனது மனைவி வீட்டிலுள்ள ஆடை ஆபரணங்களை விற்று ஜீவித்தாள். கலாவதி உணவின்றி ஒரு பிராம்மணன் வீட்டிற்குச் சென்றாள். அங்கு அன்று ஸத்ய நாராயண பூஜை நடப்பதைக் கண்டு தாயிடம் வந்து, அந்த பூஜையை நாம் விட்டதுமுதல் துன்பம் நம்மைச் சூழ்ந்தது. அதைச் செய்வோம் என்றாள். பொருளில்லாததால் பந்துவினிடம் சென்று கடனைச் சிறிது பொருள். வாங்கி ஸத்ய நாராயண பூஜை செய்தாள் மநமுருகக் கதறினள். பிறகு பகவான் வேதிய வேடந் தாங்கி வேந்தே! "காரணமின்றி சிறைப்படுத்திய பக்தரை விடு. அவர் பொருளை அவரிடம் கொடு" என்றார். அரசனும் அங்ஙனமே செய்ய, வைச்யன் செல்வத்துடன் கப்பலேறி புறப்படும்போது பகவான் ஒரு ரிஷியாக வந்து, ஏன் நீ ஸத்ய வ்ரத பூஜை செய்யவில்லை? என்றார். தன்னிடமுள்ள தநத்தை மூடி வைத்துவிட்டு பொருளில்லை பூஜைசெய்ய என்றனவன். சிறிது நேரத்தில் கப்பல் கவிந்து அவன் மூடிவைத்த தநம் மாத்ரம் காணமல் போயிற்று. முன்னமே தான் தனது புரோஹிதரிடம் ரஹஸ்யமாகக் கொடுத்திருந்த தநத்தால் ஸத்ய நாராயண பூஜை செய்வதாக ஸத்யம்செய்து வேண்டினன் வைச்யன்.

இருவரும் ஆபத்தின்றி வரும் விஷயத்தை மனைவிக்குத் தெரிவித்தார்கள். பல நாட்களாகப் பிரிந்திருந்தவர் ஜீவனுடன் வருவதைக் கேட்டு ஆவலுடன் எதிர்கொண்டழைக்க வந்த மனைவி தான் செய்த பூஜையின் பிரஸாதத்தை இவர்களுக்கு அளிக்க மறந்தாள். அதனல் மருமகன் கப்பலிலிருந்து இறங்கும் பொழுது நீரில் விழ்ந்தான். அனைவரும் கதற ஆகாசத்திலிருந்து, அந்த பிரஸாதத்தைக் கலாவதி உண்ணமல் வந்ததால் இந்த தீங்கு நேர்ந்தது என்றசொல் கிளம்பிற்று. உடனே அவளதைப் புஜிக்க கணவன் எழுந்து வந்தான். நீ ஒழுங்காக அதைச் செய் என அவனுமதை அனுஷ்டித்து ஸகல பாக்யங்களையும் பெற்றுன்.

## சந்திரகுப்தனும் பாணிநி வரருசி முதலியவரும்.

முன்னம் பித்ருசர்மா என்ெருரு வேதியனிருந்தான் கலியுகத்தில் இல்லறமே மிகச்சிறந்ததென்று நிச்சயித்து விஷ்ணுயசஸ் என்பவரின் பெண்ணுன பிரும்மசாரிணியை மணந்தார். மதுரையில் தங்கி இல்லறத்தை நடத்தும் பொழுது, ரிக்வேதத்தைப் பாராயணம் செய்தார். அச்சமயம் ஒரு புத்ரன் பிறக்க வ்யாடி எனப் பெயரிட்டார். அவன் நியாயசாஸ்திரத்தில் பண்டிதனுஞன். யஜுர்வேத பாராயண காலத்தில் பிறந்தவனுக்கு மீமாம்ஸன் எனப் பெயரிட்டார். பெயருக்கேற்க மீமாம்ஸையில் அவன் நிபுணனுக இருந்தான். ஸாம பாராயணத்தினுல் உண்டான பாணிநி, சப்த சாஸ்திர வித்வான். அதர்வ வேதத்தால் உண்டான வரருசி, வியாகரண நிபுணனுக இருந்தான்.

மகத நாட்டை ஆண்டுவந்த சந்த்ரகுப்தனுடைய ஸபைக்கு தந்தையும் நான்கு புத்ரர்களும் சென்றனர். அரசன் எது சிறந்த ப்ரும்மசர்யம்? என்று அவர்களை வினவினுன்.

தேவதா ஸ்துதியே பிரும்மசர்யத்தில் உயர்ந்ததென்ருர் வியாடி. யக்ஞமே சிறந்ததென்ருர் மீமாம்ஸர். மூன்று ஸ்வரங்களுடன் கூட சப்தங்களைக் குற்றமற உணர்ந்து கூறுவதே சிறந்ததென்ருர் பாணிநி. குருகுலத்தில் தங்கி நியமத்துடன் வேதமோதுவதே சிறந்ததென்ருர் வரருசி.

ரிதுகாலத்தில் மாத்ரம் தர்மபத்நியினிடம் ஸங்கம் செய்வது சிறந்த பிரும்மசர்யமென்றூர் பிதாவான பித்ரு சர்மா. இதொன்றே கலியில் உயர்ந்ததென எண்ணி அதைக் கடைபிடித்து சந்த்ரகுப்தன் பித்ரு சர்மாவைக் குருவாகக்கொண்டான்.

பாணிநி என்பவர் கணுதருடைய சிஷ்யர்களோடு சாஸ்த்ரவாதம் செய்து தோல்வி அடைந்தார். கேதார க்ஷேத்ரம் சென்று பரமசிவனை ஆராதித்து ''அ இ உ ண்'' முதலிய பதினன்கு ஸூத்ரங்களையும் தாதுபாட கண பாடங்களையும் பெற்று வியாகரண சாஸ்த்ர கர்த்தாவாக கீர்த்தி பெற்றூர்.

## போபதேவர்.

தோதாத்ரி எனும் க்ஷேத்திரத்தில் போபதேவர் என்ற அரசன் சிறந்த க்ருஷ்ணபக்தனுக இருந்தான். பிருந்தாவனம் சென்று பகவானை நாடித் தவம்செய்து ஓராண்டு சென்றபின் திவ்ய க்ஞானம் பெற்று சுகர் பரீக்ஷித்திற்குக் கூறிய பாகவத கதையை இயற்றினர். அதைக்கண்டு சந்தோஷமடைந்த பகவான் உனக்கென்ன வரம் வேண்டுமென்றூர். அரசன் பாகவத மாஹாத்மியத்தைக் கூறுங்கள் என வேண்ட பகவான் கூறினர். உலகெலாம் பௌத்தர் நிறைந்திருக்க காசி மாத்திரம் ஏன் உத்தம தர்ம க்ஷேத்ரமாக இருக்கிறதென்று தேவி சிவனைக் கேட்க சிவன் உரைத்தார். இங்கு அடிக்கடி ஸப்தாஹ யக்ஞம் நடைபெறுவதால் பௌத்தர் முதலியவர் இங்கு வஸிக்க முடியாதென்றூர். தேவி தானும் ஸப்தாஹம் கேட்க விரும்பினுள். சிவகணங்களைக் காவல் வைத்துவிட்டு சிவன் படிக்க தேவி கேட்டாள். ஆனல் அந்த ரஸத்தில் அமிழ்ந்து தேவி மெய் மறந்து லயித்து விட்டாள். சிவனதை முடித்துவிட்டு எதுவரை உனது காதில் வீழ்ந்தது கதை? என்று கேட்க, பாற்கடல் கடையும்வரை கேட்டேன் என்ருள். தேவியால் அன்புடன் வளர்க்கப்பட்ட கிளி பூர்ணமாகத் தான் கேட்டதாகக் கூறிற்று. சிவன் அதை விக்ரமராஜனது பிதாவான கந்தர்வஸேநனுக்குக் கூறும்படிக் கட்டளையிட்டார் என்று விஷ்ணு போபதேவருக்குக் கூறி மறைந்தார்.

## சண்டீ மாஹாத்ம்யம்.

விக்ரமார்க்கனது ராஜ்யத்தில் உயர்குலத்தில் பிறந்த ஒரு ஸ்த்ரீ மிகச்சிருங்கார விருப்புள்ளவளாக இருந்தாள். அவளது கணவன் ஒரு மாஸகாலம் வெளியில்சென்றிருந்தான். காமவெறி கொண்ட அவள் விறகு கொண்டுவந்த வேடனுடன் ரமித்தாள். உடனே கர்பிணியாகி ஒரு பிள்ளையைப் பெற்றாள். அவன் நன்மார்க்கத்தை விட்டு பிராணி ஹிம்ஸை செய்துவந்தான். தந்தை இது தாயின் தோஷத்தினால்தானிப்படி என உணர்ந்து அவர்களை விட்டு விட்டு வனம் சென்றார். சண்டீ மாஹாத்ம்யம் எனும் ஸப்த சதியை—இது மார்க்கண்டேயர் புராணத்தில் உளது— ஜபித்து அதனால் முக்தி பெற்றான் தந்தை.

அந்த புதல்வன் வியாதகர்மா எனப் பெயர்பெற்று தாயுடன் தன்னை உண்டுபண்ணின வேடனுடன் சேர்ந்து வாழ்ந்தான். ஜாதிக்கேற்றபடி வேட்டை திருடு கொள்ளை முதலியவைகளால் பணம் தேடி சேர்த்தான். ஒருநாள் தேவி மாஹாத்ம்ய பாராயணம் செய்துவரும் பிராம்மணனிடஞ் சென்று அவனது பொருளைக் கவரக் கருதினான். அவர் படித்த சுலோகங்கள் காதில் விழ அவனது பாபங்கள் அகன்றன. அவன் சிறந்த தேவி பக்தனாகி பொருளை எல்லாம் அவரிடமளித்து அவரையே சரணமடைந்தான். அவர் தேவி மந்ரத்தில் ஒரு பீஜாக்ஷரத்தை உபதேசித்தார், அதனால் மூன்று ஆண்டுகளுக்குள் அவனது உடலிலிருந்து பாபங்களெல்லாம் புழுரூபமாக வெளிக்கிளம்பின. குரு உத்தரவுப்படி காசி சென்று தேவி மாஹாத்ம்யம் படித்தான். பரமசிவன் கனவில் தோன்றி ஸகல வேத சாஸ்த்ரங்களையும் உபதேசித்தார். முடிவில் அவன் விக்ரமாதித்யனுக்கு ஆசார்யனாக இருந்து முக்தி பெற்றான். அத்தகையது தேவீ மாஹாத்ம்யம்.

## மஹா நந்திவர்மா.

உஜ்ஜயினியில் பீமவர்மா என்றோர் அரசனிருந்தான். அவன் எல்லோரையும் ஹிம்ஸித்து ஸர்வஹிம்ஸகன் எனக் காரணப் பெயர் பெற்றான். தனக்குச் சத்ரு பயமில்லாததைக் கருதி அவன் செய்யாத பாபமில்லை. நர மாம்ஸம் தவிர எல்லா மாம்ஸத்தையும் உண்பான்.

மது அருந்துவான். மாதரனைவரையும் கெடுப்பான். ஒரு ஸமயம் தனக்கேதேனும் தீங்கு வருமோ என அஞ்சி சண்டிகா பாராயணம் செய்யச் சொன்னான். அந்த புண்யத்தால் அவன் இறந்தபின் நரகம் செல்லவில்லை. மாகத தேசமன்னனுக்கு மகனாகப் பிறந்து மஹாநந்தி வர்ம என பெயர் பெற்றான். தேவியின் அருளால் பூர்வஜன்ம நினைவு உண்டானது. ஆதலால் வேதசாஸ்ர தர்மங்களைக் கைக்கொண்டு காத்யாயந முனிவரின் சிஷ்யனானான். தேவி ஸப்த சதியின் இடைபாகத்தை உபதேசித்து அவனை வீர க்ஷத்ரியனாகச் செய்தாரவர். பனிரண்டாண்டு சென்ற பின் காத்யாயநர் அவனுக்கு லக்ஷசண்டீ ஹோமம் செய்வித்தார். அவன் அன்னையின் அருளால் புக்தி முக்திகளைப் பெற்றான்.

## கலியில் பாண்டவர் ஜனனம்.

பதினெட்டுநாள் பாரதப்போரில் பல அக்ஷௌஹிணி ஸேனைகள் மாண்டன. பாண்டவர் வெற்றி பெற்றனர். அச்வத்தாமா சிவனை வேண்டி அவரருளால் ஒருகத்தியைப் பெற்றான். அதனால் தூங்கிக்கொண்டிருந்த இளம் பாண்டவர் திருஷ்டத்யும்நன் முதலியவர்களைக் கொன்றான். அதனால் சோகமும் துக்கமும் கொண்ட பாண்டவர் பரம சிவனை நிந்தித்தனர். பகவான் அவர்களைப் பார்த்து கிருஷ்ண பக்தர்களானதால் உங்களைக் கொல்லாமல் விட்டேன். ஆனால் கலியில் பிறந்து நீங்கள் சிவாபராத பாபத்தை அனுபவிப்பீர்கள் என சபித்தார். ஆதலால் தர்மர் வத்ஸராஜ புத்ரனான பலகாநி என்றும் பீமன் வீரண என்ற மிலேச்சனாகவும் அர்ஜுநன் பரிமலன் என்பவருக்கு பிரும்மாநந்தன் என்ற புத்ரனாகவும் நகுலன் கான்யகுப்ஜ தேசத்தில் ரத்நபாநு புத்ரனான லக்ஷ்மணனாகவும் ஸஹதேவன் பீஷ்மஸிம்ஹ புத்ரனான தேவஸிம்ஹனாகவும் திருதராஷ்ட்ரன் அஜமேரகத்தில் ஆஜ்மீர் பிருத்விராஜனாகவும் திரௌபதி அவன் பெண்ணான வேலா என்பவளாகவும் கர்ணன் தாரகனாகவும் கௌரவர் மற்ற மற்றவர்களாகவும் மாநிலத்திலே தோன்றுவர். கிருஷ்ணனது அம்சம் உதயஸிம்ஹனாகத் தோன்றும்.

## பதினெட்டு ராஜ்யங்களும் சாலிவாகநனும்.

இந்த்ரப்ரஸ்தம் பாஞ்சாலம் குருக்ஷேத்ரம் காபிலம் அந்தர்வேதி விரஜத்யா அஜமேர மருதன்வா கூர்ஜரம் மகாராஷ்ட்ரம் திராவிடம் கலிங்கம் ஆவந்த்யம் உடுபம் அங்கம் வங்கம் கௌடம் மாகதம் கௌஸல்யம் என்ற பதினெட்டு ராஜ்யங்கள் கலியில் வகுக்கப்படும். நூருண்டிற்குப்பின் தர்மத்தைக் கைவிடுவர் இவ்வரசர்கள். இதை அறிந்த சகன் முதலியவர் ஸிந்துநதியைக் கடந்து ஆர்ய தேசத்தில் புகுவார்கள். மற்றும் பலர் வந்து பொருள்களையும் பெண்மக்களையும் தூக்கிச்செல்வர். பதினெண் ராஜ்யங்களும் சரியான அரசனின்றி கஷ்டப்படும்போது விக்ரமாதித்யனது புத்திரன் மகனை சாலிவாஹநன் திக்விஜயம் செய்து ஸிந்துநதிவரை ஆர்யதேசமென்றும் அதற்கப்புறமுள்ளது மிலேச்ச ராஜ்யமென்றும் பிரித்தான். ஈசாமஸீஹ என்பவரை மிலேச்ச குருவாக அமர்த்துவானவன்.

## போஜனை மிலேச்சனுக்க முயற்சி.

சாலிவாஹந வம்சத்தில் தோன்றிய பத்து அரசர்கள் ஆளும்வரை, ஒரு குழப்பமுமின்றி இருக்கும் நாடு. பிறகு எல்லை கடந்து மிலேச்சர் இன்னாட்டை ஆக்ரமிப்பர். போஜராஜன் காளிதாஸனுடன் சேர்ந்து பத்தாயிரம் ஸேனைகளுடன் படையெடுத்து ஸிந்து அருகே சென்று காந்தாரம் காச்மீரம் முதலிய ராஜ்யங்களிலிருந்து மிலேச்சர்களை விரட்டி வைதிக ராஜ்யத்தை நிலைநாட்டுவார். அச்சமயத்தில் மஹாமதர் என்ற மிலேச்சகுரு தோன்றுவார். போஜன் மருஸ்தலத்திலுள்ள மாதேவனை வணங்கி பகவன்! மிலேச்சரால் சூழப்பட்ட மருஸ்தலத்தில் தாங்கள் எப்படி வஸிக்கிறீர்கள் எனப் பிரார்த்திப்பான். போஜ! வாஹிகம் என்ற இந்த மிலேச்ச பூமிக்கு நீ வராதே. என்னால் எரிக்கப்பட்ட திருபுரன் மஹா பலியால் தூண்டப்பட்டு மஹாமதன் என்ற பெயருடன் பிசாச கார்யங்களைச் செய்துகொண்டிருப்பான். நீ உன் நாடு செல் என்பார் பரமசிவன்.

அரசன் தன் நாடு வந்தபோது மஹாமதன் போஜனது ஸபைக்கு வருவான். அவனது மாயா சக்தியால்

வைதிகர் வணங்கும் இந்திராதி தேவர்களை அழைத்து தான் உண்ட மிகுதியைப் புஜிக்கும்படிச் செய்வான். இதைக் கண்ட போஜன் அந்த மிலேச்ச மதத்தை மதித்து அதில் சேரவும் ஆசைகொள்வான். இதைக் கண்டு கோபங்கொண்டு காளிதாஸன் பத்தாயிரம் தேவீ நவாக்ஷர ஜபம் செய்து சண்டீஹோமம் செய்வான். உடனே மஹாமதன் சாம்பலாவான். அச் சாம்பலை எடுத்துக் கொண்டு அவனது சிஷ்யர்கள் ஓடிவிடுவர். மஹாமதர் மிலேச்ச தேவராகிவிடுவார். அந்த மதத்தை ஸ்தாபித்த இடம் மதஹீந என்பதாம். அதே மதீனு போலும். தேவியினது சக்தியால் பிசாசரூபமெடுத்த மதஹீநராகி போஜனிடம் வந்து அரசே!

आर्य धर्मोहि ते राजन् सर्वधर्मोत्तमः स्मृतः ।

ஆர்யதர்மோஹிதே ராஜன் ஸர்வதர்ம உத்தம: ஸ்மிருத:

நீ அனுஸரிக்கும் ஆர்ய தர்மமே ஸர்வ தர்மங்களிலும் உத்தமமானது. நான் ஈசாக்ஞையால் மிலேச்ச தர்மத்தை பிரசாரம் செய்கிறேன். ஆண் குறியில் கொஞ்சம் சேதிப்பது—ஸுநுத்—சிகை இல்லாமை. தாடிமாத்திரம் வளர்ப்பது. வைதிக தர்மத்தைத் தூஷிப்பது. உறக்க ஸ்துதி செய்வது. பசு மாம்ஸம் தவிர மற்றெல்லாவற்றையும் உண்பது. நீங்கள் தர்ப்பத்தால் கர்மாக்களைச் செய்வதுபோல் முஸலம் என்ற உலக்கையால் கார்யம் செய்வது.—அதனுல்தான் முஸல்மான் என்பது—என்பவைகளைக் கூறி ஸ்வதேசம் செல்லும். போஜன் ஸ்வர்க்கத்தை அளிக்கும். ஸம்ஸ்கிருத பாஷையை மூன்று வர்ணத்தாரிடமும் பிராகிருத பாஷையை சூத்ரரிடமும் அமைத்து 50 ஆண்டு அரசாண்டு ஸ்வர்க்கம் செல்வான்.

## பிருத்வீராஜ சரிதம்.

போஜவம்சத்தவர் முன்னூறு ஆண்டுகளுக்குள் ஏழரசர்கள் அல்பாயுஸாகத் தோன்றி மாள்வர். அக்நிவம்ச அரசர் விருத்தியாவார்கள். ஆர்யர்கள் வைதிக தர்மத்தைவிடுவர். மற்றவர் வைதிக தர்மத்தை நன்கு அனுஷ்டிப்பர். கலி மிக வருத்தமடைந்து மிலேச்சா எனும் பத்நியுடன் கூடி நீலாத்ரியில் சென்று பகவானை

வேண்டும். விஷ்ணோ! எனது புத்ரர்கூட வைதிக தர்மத்தைக் கைகொண்டனர். எனக்கு இருக்கவும் இடமில்லை. மது சூது ஸுவர்ணம் ஸ்திரீ விளையாட்டு என்பன அழிந்தன. என்னை ரக்ஷிக்கவேண்டும் என்பான். கருணாமூர்த்தியான பகவான் கலியே? அஞ்சாதே! மஹாவதியை உண்டுபண்ணுகிறேன். எனது அம்சம் அவள் மூலமாகத்தோன்றி மற்றவர்களை அழித்து மிலேச்ச வம்சத்தை விருத்திசெய்யும் என்பார். எல்லோருக்கு மீசர் அவர்.

இதனிடையில் வாக்ஸரமெனும் கிராமத்திலே விரதபா எனும் இடைச்சி ஒன்பதாண்டுகள் நவதுர்க்கா விரதம் செய்வாள். சண்டிகாதேவி பிரத்யக்ஷமான போது ராமகிருஷ்ணரைப்போன்ற புத்ரர் வேண்டுமென்பாள். வஸுமான் எனும் வேந்தன் அவளை மணந்து தேசராஜன் வத்ஸராஜன் என்ற இருவர்களை உண்டு பண்ணுவான். தாலநன் என்ற மிலேச்சராஜன் இவர்களுடன் போர்புரிந்து ஸமாதாநம் செய்துகொள்வான்.

இந்த்ர ப்ரஸ்தத்திலுள்ள அநங்கபாலன் என்ற அரசன், புத்ர பாக்யத்தை நாடி சிவனை ஆராதிப்பார். அதனால் சந்த்ரகாந்தி கீர்த்திமாலினீ என்ற இரு கன்யகைகள் பிறப்பார்கள் கான்யகுப்ஜ அரசனான தேவபாலனுக்கு சந்த்ரகாந்தியையும், அஜமீரபுர அரசனான ஸோமேச்வரனுக்கு மற்றவளையும் அளிப்பான். ஹிமயமலையில் ஸமாதியிலிருந்த ஒரு ரிஷி, தன் உடலை விட்டுவிட்டு சந்த்ரகாந்தியிடம் ஜயசந்திரன் என்ற புத்ரனுகத்தோன்றுவார். ரத்நபாநு எனும் தம்பியும் பிறப்பான். அண்ணனது உத்திரவுபடி ரத்நபாநு கௌட வங்க மருதேசம் முதலிய இடங்களை ஜயிப்பான். கீர்த்திமாலினி துந்துகார கிருஷ்ண குமாரக பிருதிவீராஜன் என்பவர்களைப் பெறுவாள்.

## ஜயசந்த்ர பிருத்வீராஜ கலஹம்.

பனிரண்டாண்டு பிருதிவிராஜன் மஹாபல பராக்ரம சாலியாக இருப்பதைக்கண்ட வஸுமான் இவனிடம் ராஜ்யத்தை அளித்து வநம் செல்வான். பரிமளன் பீஷ்ம

ஸிம்ஹன் என்ற மந்திரிகள் தன்னிடம் அன்பில்லாததைக் கண்டு நாட்டைவிட்டு ஓட்டிவிடுவான் பிருதிவிராஜன். இவர்கள் ஜயசந்த்ரனிடம் சென்று ஸேநாபதி வேலையில் அமர்வர். தங்களை நாட்டைவிட்டு விறட்டிய பிருதிவி ராஜனுக்குத் தீங்கிழைக்கக் கருதி அவர் உனது பாட்டன் ராஜ்யத்தைப் பிருதிவிராஜன் மாத்ரம் ஆளுவது என்ன நீதி? பாதி ராஜ்யம் அளிக்காவிடில் படையெடுப்போம் என தூது அனுப்ப செய்வர். இருவரும் பலிஷ்டர். இருவருக்கும் மநதில் அச்சம் இருக்கும். ஆதலால் பாட்டனது ராஜ்யத்தை பிரித்துக்கொள்வர்.

## ஸமயுக்தா ஸ்வயம்வரம்

ஜயசந்த்ரனுக்குப் பதினறு மனைவிகளிருந்தும் புத்ர னுண்டாகாது. கௌடதேசத்தரசன் பெண்ணான திவ்ய விபாவனை என்பவளை மணக்கும்போது அவளுடன் ஒரு தோழி வருவாள். ஸுரபாநவி எனும் அவள் மிக ரூப லாவண்யம் வாய்ந்தவள். அரசன் அவளிடம் ஸம்யுக்தா என்ற பெண்ணை உண்டுபண்ணுவான். அப்பெண்ணும் மிக அழகு வாய்ந்தவள். அவளுக்குத் தந்தை ஸ்வயம் வரம் நடத்த ஸகல அரசர்களையும் அழைப்பான். பிருதிவிராஜன் தனது ஸ்வர்ணமயமான பிரதிபிம்பத்தை சந்த்ரபட்டன் என்ற மந்திரியுடன் கான்யகுப்ஜத்திற்கு அனுப்புவான். ஸம்யுக்தை எல்லா அரசர்களையும் விட்டு பிருதிவிராஜனது உருவிற்கு மாலையிடுவாள். ஜயசந்த்ரன் இங்குள்ள அரசர்களை ஜயித்து பிருதிவிராஜன் ஸம் யுக்தையை மணந்து செல்லட்டுமென்பான். எண்ணிறந்த ஸேனைகளுடன் இரு நூறு அரசர்கள் பிருதிவிராஜனுடன் போரிடுவர். ஐந்து நாட்கள் கடும் யுத்தம் நிகழும். பிருதிவிராஜனது ஸேனைகள் எல்லாம் மாளும்.

ஆறுவதுநாள் பிருதிவிராஜன் சோர்வடைந்து சிவனை மநமார வேண்டுவான். ருத்ரன் பகைவரது படைகளை மூர்ச்சையாகி விழும்படி செய்வார். பிருதிவிராஜன் ஸம்யுக்தையை தேரிலேற்றி தனது நாட்டிற்குத் திரும்பு வான். சிறிது நேரம் சென்றபின் ஸேனைகள் விழுத் தெழுந்து பிருதிவிராஜனைத் துறத்திச்சென்று போரிடு வர். முடிவில் அவர்கள் தோல்வி அடைய வெற்றிவீரனுக பிருதிவிராஜன் விளங்குவான்.

## உதயஸிம்மன்.

கலியில் கிருஷ்ணனது அம்சமாகத் தோன்றிய உதய ஸிம்மன் கிருஷ்ணனைப் போலவே மல்லயுத்தம் செய்து வீரர்களை எல்லாம் ஜயிப்பான். பிருதிவிராஜன் முதலிய வர்களையும் ஜயித்து மஹா வீரனுக விளங்குவான். மிலேச்ச ராஜர் அனைவரையும் ஜயிப்பான். மஹீராஜ னுடன் போர் செய்து வெற்றிபெறுவான். மற்ற சிற்றரசர்கள் இவனை அடுத்து தனது குறைகளை அகற்றிக் கொள்வர். இவரது தந்தையைப் போரில் கொன்ற கூர்ஜர அரசன்மீது படையெடுத்துச்சென்று மிக கோரமான யுத்தம் செய்து சமாதானம் செய்துகொள்வார்.

தர்மாம்சமான பலகாநி இந்துலன் என்ற பெயர் வாய்ந்த ஜயந்தன் ஆஹ்லாதன் போன்ற பற்பல பாண்டவ கௌரவ அம்சமாக ஜநித்தவரது சரிதம் வர்ணிக்கப்படு கிறது. பிருதிவி ராஜனது புத்ரர்களாக கௌரவரில் எழுபேர் ஜநிப்பர். இவர்களது சரிதம் கிருஷ்ணும்சசரிதம் மயூரத்வஜனதுசரிதம் அவனது பெண்ணை கிருஷ்ணும்சன் மணந்துகொள்வது முதலியவைகளைக்கூறி கிருஷ்ணும்ச சரிதத்தை பல அத்யாயங்களால் வர்ணிக்கிறுர். தற்கால சரிதம்போல பல அரசர்களுடன் படையெடுத்து போர் செய்வது சில ராஜ கன்யகைகளைத் தூக்கி வருவது போன்றவைகளே அதில் காணப்படுகின்றன.

இதில் சிலது புராண ஸம்பந்தமுள்ளதாக இருக் கின்றது. ஆதலாலவைகளை எழுதினேம்.

## இந்துலனல்லது ஜயந்தன்.

ஜயந்தன் என்பவன் இந்திரனது புத்திரன், காக்கை வடிவங்கொண்டு காட்டிலுள்ள ஸீதாதேவியை ஹிம்ஸித் தான் என்பதை ஸ்ரீ ராமாயணத்தில் கேட்டிருக்கிறேம். இங்கு அவனைப்பற்றிய விஷயம் காணப்படுகிறது. ஸீதா தேவி ஜயந்தனைப் பூமியில் மநிதனுகப் பிறக்கும்படி சபித்தாள். அவன் ஆஹ்லாதன் என்பவருக்குப் புத்ரனுக ஜநிப்பான். தேவர்கள் புஷ்பமாரிப்பொழிந்து சந்திரனைப் போலிருப்பதால் இவனை இந்துலன் என்றழைப்பார் கள். யோகஸிம்ஹர் என்பவர் இக்குழந்தையைக் கண்டு

ஸந்தோஷமடைந்து அபரிமிதமான செல்வத்தை அளித்து ஏழுநாள் தங்கிசெல்வார். ஆருவது மாஸத்தில் இந்திரன் குழந்தையைத்தூக்கிச்செல்வான். பெற்ருேர் மூன்றிரவு அன்ன ஆகாரமின்றி வருந்துவர். சண்டீதேவி இவர் களைப்பார்த்து மூன்று ஆண்டுகளில் குழந்தை வருவான். கவலேவேண்டாம் என்பாள்.

பெற்ருேர் ஸப்த சதீபாராயணம் செய்து வருவார் கள். ஸகல வித்யைகளேயும் கற்று சூரனுக ராஜ்ய பரிபாலநம் செய்வான். குபேரனே ஜயித்து ஆபரணங் களேக்கொண்டு வந்து மனேவிக்குக் கொடுப்பான். மயூரத்வஜன் என்பான் குஹ பக்தனுகி ஐந்தாண்டு குஹனே நாடித் தவம் செய்து வரங்களே வாங்கி மயூர நகரம் என்ற புதிய நகரத்தைப் படைத்து தர்மமாக ராஜ்யம் ஆளுவான். பால்ஹீக பலகான்யுத்தம். ஜய சந்த்ர சித்ரலேகா விவாஹம் சாரதாநந்தன் காமபாலன் பத்மிநீ பத்மாகர லக்ஷண சாமுண்டன் என்ற அந்தணன் பலகாநியைக் கொல்வது முதலியன இங்குள.

## கிருஷ்ணும்சன் பதினெட்டு புராணம் கேட்பது.

கிருஷ்ணும்சன் புஷ்பவதி ஸ்வர்ணவதீ முதலிய மனேவிகளுடன் கங்காதீரம் செல்வான். ஆங்கு ஒரு மிலேச்சஜாதி ஸ்திரீ சோபா என்பவள் மிக்க அழகுள்ள வளாக இருப்பாள். அவள் கிருஷ்ணும்சனேக் கண்டு மோஹித்து அவரை மணப்பாள். அவளுடன் தன் நாடு சென்று வேதியர்களே அழைத்து வேதஸாரமான பதி னெட்டு புராணங்களேக் கூறும்படி வேண்டுவான். வேதி யர் முன்கல்பத்தில் நடந்தபடி புராணங்களேக்கூறுவர். பராசரர் கூறியது விஷ்ணு புராணம். சிவன்உரைத்தது ஸ்காந்தம். பிரும்மா கூறியது பிராம்மம், பாத்மம். சுகம் சொன்னது பாகவதம். விஷ்ணுவினுல் கருடனுக்கு உப தேசிக்கப்பட்டது காருடம். இவ்வாறும் ஸாத்விகங்கள். மாத்ஸ்யம் கூர்மம் நிருஸிம்மம், வாமநம் சைவம், வாயு வால்கூறப்பட்டு வியாஸரால் செய்யப்பட்ட இவ்வாறும் ராஜஸங்கள். இவை கர்மகாண்ட மயமானவை. மார்க் கண்டேயமும் வாராஹமும் மார்க்கண்டேயரால் கூறப் பட்டவை. ஆங்கிரஸ் கூறியது ஆக்நேயம். லிங்கம்

பிருமாண்டம் தாண்டயினுல் கூறப்பட்டவை. மஹா தேவன் கூறியது பவிஷ்யம். சக்தியின் பெருமையைக் கூறும் இவை ஆறும் தாமஸங்கள். இவைகளில் ஸ்ரீ பாக வதமே உத்தமமானது.

கோரமான கலியுகத்தில் இப்புராணங்களில் உத்தம மானது பாகவதம் என்பதே. மிக உயர்ந்தது என விக்ர மாதித்யன் முநிவர்களைக்கூட்டி ஸூத புராணிகரைக் கொண்டு புராணங்களைக்கூறச் செய்வான். என்பதைக் கேட்டு கிருஷ்ணும்சன் ஏழு நாட்களில் பாகவதம் படிக்கச் செய்து எண்ணிறந்த தாநங்களைச்செய்வான். அச்சமயம் சோபா என்ற யவநஸ்திரீ, மஹாமதனை த்யாநம்செய்து மாயையால் ஒரு தாஸியைப் படைத்து அரசனை மயக்கு வாள். ஸ்வர்ணவதி என்ற கிருஷ்ணும்ச மஹிஷி அந்த மாயையை தனது கற்பின்பலத்தால் அழித்தாள். ஆனுல் அந்த தாஸி ஆங்குள்ள ஸ்வர்ணங்களைத் தூக்கிச்சென் ருள். சோபை தேசாந்தரம் சென்ற அந்த தாஸியிடம் உள்ள ஸ்வர்ணங்களைத் திருப்பி கொண்டுவரும்படி வேண்டினுள். அவள் யாரோ எங்கு சென்றனளோ என்று கிருஷ்ணும்சன் விழிக்க ஒரு குடிகையை அளித்து அவளிருப்பிடத்தை அறியலாமென்ருள். அரசனங்கு செல்ல அவள் காமவெறிகொண்டு மன்னனைத்தழுவி இன்பம் தரவேண்டினுள். தாஸியின் ஸங்கம் பாபமென மறுத்தான். விச்வாமித்ரர் ரிஷ்ய சிருங்கர் முதலியவர் தாஸீ ஸங்கம் செய்ததைக்காட்டித் தன்னுடன் சேர வேண்டினுள். அரசன் என்ன செய்வதென்று அறியா மல் தவித்தான்.

ஸ்வர்ணவதி இதை அறிந்து அதிவேகமாக அங்கு வந்தாள். தாஸி உடனே கிளியாக ஸ்வர்ணவதி கழுகு உருவெடுத்து அவளை விறட்டிவிட்டு கணவனுடனும் ஸ்வர்ணபாத்ர நிதியுடனும் திரும்புவாள். மறுபடியும் மன்னன் கதைகேட்பான். புராணிகர் தர்மத்தைக்கூறி வரும்போது, யவனபாஷையைக் கூறக்கூடாதென்பார்.

நவதேத் யாவநீம் பாஷாம் ப்ராணை: கண்ட கதைரபி |
கஜைரா பீட்யமாநோபி நகச்சேத் ஜைநமந்திரம் ||

உயிரே போவதானுலும் மிலேச்ச பாஷையில் பேசாதே. யானை கொல்லவந்தாலும் ஜைநர் கோவிலில் புகாதே

என்பதைக்கேட்டு சோபநா வருந்தினுள். தன்னிடமுள்ள மாயமயமான் கிளியை உணவின்றி இறக்கும்படி செய்து அரசன்மீது அந்த பாபத்தைச் சுமத்த முயற்சித்தாள். ஸ்வர்ணவதி ஒரு வேலேக்காரியாகி வந்து கூட்டிலுள்ள கிளியை கூட்டிலிருந்து வெளியே விட்டாள். அது ஒரு கொசு ரூபமெடுத்தது ஸ்வர்ணவதி கழுகாகி அதைத் தன் முதுகில் அமரச்செய்து வேறு ஊரில் கொண்டுவிட்டாள். இதைக்கண்டு சோபநா தன்னுல் ஒன்றும் செய்ய முடியவில்லேயே எனவருந்தி மஹாமதன் உள்ள மதஹீந நகரம் சென்ருள். தனது உயிரைவிட அவள் முயற்சிக்கும் பொழுது மஹாமதர் நீ அஞ்சாதே மயூர நகரம் சென்று ஆங்குள்ள ஆர்யர்கலே மிலேச்சராக்கலாம் என்ருர். அங்கு ஆயிரக்கணக்கான தாஸிகளுடன் சென்று சோபநா அழகாக ஆடிப்பாடி எல்லோர் மநதையும் கொள்ளே கொண்டாள்.

ஸ்வர்ணவதி காமாக்ஷி அம்பாளே உபாஸித்து அவள் சொற்படி தானும் மயூர நகரம் சென்று சம்பர மாயையால் எல்லா மாயாவிகளேயும் மயக்கி அன்னியருக்கு இடமளித்த மயூர ராஜனேச் சிறைப்படுத்துவாள். கிருஷ்ணும்சன் மிலேச்சர்களேயும் பௌத்தர்களேயும் பாரத தேசத்திலிருந்து விறட்டுவான். பௌத்தர் சினதேசம் செல்வர்.

## கிருஷ்ணும்சர் சியாம் முதலிய இடத்தை ஆக்ரமிப்பது.

பௌத்தருக்குப் பரிந்து வந்த சினதேசத்தவர் சியாம் தேசத்தவர் ஜப்பானியர் முதலிய வீரரை ஜயித்து அங்கும் ஆர்ய தர்ம ஆக்ஷியை நிலேநாட்டுவார். நூற்று ஐம்பத்தைந்து நாட்கள் போர் புரிந்து பிறகே அத்தேசத்தவர் பணிவர்.

நகுலாம்சமான லக்ஷணன் பத்மிநீ என்ற ராஜகன்யயைத் தூக்கிவந்து மணம்செய்வது, கூர்ஜரதேசத்தில் ப்ரபாவதியையும் அவளது பதியையும் யக்ஷர் பீடிப்பது. யக்ஷனே கிருஷ்ணும்சன் சிக்ஷிப்பது, கேகய தேசராஜகுமாரியான மதநாவதியின் விவாஹம், புண்ட்ர தேசத்தரசனுன நாகவர்மனின் கன்யகை ஸுவேலாவதி சரிதம்,

மத்ரகேசனது பெண்ணான காந்திமதி விவாஹம் இவைகளை விரிவாகக்கூறி டில்லிக்கு மிலேச்சர் வருவதை வர்ணிக்கிறார்.

## டில்லியில் மிலேச்ச அரசர்.

அஸுர அம்சமான நீலன் மஹீ ராஜனுடன் போர் புரிந்து அவன் கண்ணை அவித்தான். கௌரவ தேசத்திலுள்ள ஸஹோட்டீநன் எனும் மிலேச்ச ராஜனைக்கூப்பிட்டு மஹீராஜனை உறங்கும்போது இரவில் கொன்று வித்யுன்மாலி என்ற அவனது மஹிஷியை அபஹரிக்கும்படி கூறினன். அவன் மூன்றுலக்ஷம் ஸேனையுடன் அங்கு சென்று அரசனைக்கொன்று அவன் பெண்ணான மஹாவதியையும் ஜயித்து அவனது பொருள்களைக் கொள்ளையடித்தான். இதைக்கேட்ட ஜயசந்த்ரன் துக்கத்தினால் லக்ஷ சண்டியாகம் செய்து உடலைவிட்டு தேவியின் பாதாரவிந்தத்தை அடைந்தான். ஸஹோட்டீநன் ஏழுநாள் இரவும் பகலும் போர்புரிந்து வெற்றிபெற்று தனது வேலைக்காரனை குதுகோட்டீனன் என்பவனை டில்லியில் அரசாக்ஷி புரியும்படி செய்வான்.

## விக்ரமவம்சாதி வர்ணநம்.

துவாபரகலியுக ஸந்தியின் விருத்தாந்தத்தை வர்ணித்து வியாஸ முனிவர் தனது மனதைச் சிஷ்யனுக அமைத்து எதிரில் அமர்த்தி மறுபடியும் கலியில் வரப்போகும் சரிதத்தை வர்ணிக்கிறார். அவர் அறிவுக்கண்ணால் வரப்போகும் விஷயங்களை நேரில் கண்டுவிட்டு கூறுகிறார். ஆதலால் அவைகளை இனிமேல் நடக்கப்போவதாகக் கூறாமல் நடந்து விட்டதாகவே கூறுகிறார். சிலதை நடக்கப்போவதாகவும் சிலதை நடந்து கொண்டிருப்பதாகவும் வர்ணிக்கிறார். [இதை வாசகர் நன்கு மனதில் கொள்ளவேண்டும்] அக்நி வம்சத்தில் பிரமரன் மஹாமரன் தேவதூதன் முதலியவர் தோன்றி வைதிக தர்மத்தை நன்கு ரக்ஷித்துக்கொண்டு தர்மநீதியுடன் அரசாண்டு வந்தனர். அச்சமயம் கலி ஆதித்யனை உபாஸித்து சகன் என்ற புருஷனையடைந்தான். தைத்திரம் என்ற ராஜ்யத்தை அவனுக்குத்தந்து இடையர் திருடர் முதலிய வகுப்புகளுக்கு அரசனுக்கி ஆரிய தர்மத்தைக் குலைத்து

வந்தான். தேவதூதனது புத்திரனை கந்தர்வஸேநன் அவனது புத்ரன் ஆகியவர் சகர்களால் கொல்லப்பட்டனர். அந்த வம்சத்து தேவபக்தனது புத்திரன் சாலிவாஹநன் சகர்களைக் கொன்று சகஹந்தா என பெயர் பெற்றான். அவன் வம்சத்தில் பிறந்த மால்யவானது ஆளுகையில் ஒரு ஸமயம் நான்கு ஆண்டுகள் மழைபொழியாதிருந்தது. அவன் மநம் நொந்து கேழ்வரகு தான்யத்தைக் குத்தி பாகம் செய்து பகவானுக்கு நிவேதநம் செய்தான். பகவான் மன்னனைப் பார்த்து உனது வம்சம் உள்ளவரை உன் நாட்டில் மழை தவராமல் பொழியுமென்றார். கல்பஸிம்ஹன் வரை அந்த வம்சம் வளர்ந்தது. கங்காதிரத்தில் கலாப நகரத்தைப் படைத்து அவன் புத்ரனில்லாமல் இறந்தான்.

**அஜமேர** நகரத்தின் பொருள். அஜ எனில்பிரும்மா. மா எனில் லக்ஷ்மீ. இருவரும் அங்கு ரமிப்பதால் அஜமேர என்று பெயர் தோன்றிற்று. அதே தற்சமயம் ஆஜ்மீர் எனப்படும்.

## கச்யப வம்சத்தால் மிலேச்ச ஜயம்.

கிருஷ்ணன் பூமியை விட்டபிறகு பிருந்தாவநமும் பூமியில் மறைந்தது. மற்ற திவுகளிலிருந்து பலரிங்கு வர ஆரம்பித்தனர். கலி சூர்யனை உபாஸித்து ந்யூஹ என்ற மிலேச்ச ராஜனைக் கொண்டு எங்கும் அதர்மத்தை விருத்திசெய்தது. இதை அறிந்த இந்திரன் கச்யபரை ஆர்யாவதி என்ற பத்நியுடன் கூட பூமிக்குச்சென்று ஆர்ய தர்மத்தை விருத்திசெய்யும்படி அனுப்பினார். அவர் ஸரஸ்வதி திருஷத்வதி இரண்டு நதிகளுக்கிடையே தனது புத்ரனை சுக்லனை ப்ரதிஷ்டை செய்தார். அவர் மநு தர்மத்தை ஆங்காங்கு பிரசாரம் செய்தார். வாஸுதேவனருளால் பௌத்தர்களை ஜயித்து வைதிக தர்மத்தை நிலை நாட்டினார். அவரது வம்சம் விஷ்வக்ஸேநன் ஜயஸேநன் விஸேநன் தர்மவர்மா என வளர்ந்தது. இவர் மிலேச்சர்களை ஜயித்து உதயபுரம் என்ற நகரைப் படைத்து கிருஷ்ண உத்ஸவாதிகளைச் செய்துவந்தனர். சுக்லனது வம்சம் லக்ஷண என்பவருடன் முடியும். அவருக்கு மற்ற ஜாதி ஸ்திரீகளிடம் பிறந்த அரசர்கள் மிலேச்சர்களால் ஹிம்ஸிக்கப்பட்டு அழிந்தார்கள்.

## பதினெட்டு கல்பங்கள்.

கூர்ம கல்பம் மத்ஸ்யகல்பம் ச்வேத வராஹ கல்பம் சிவகல்பம் பிரும்மகல்பம் விஷ்ணுகல்பம் பந்துகல்பம் வாயுகல்பம் வந்நிகல்பம் பிரும்மாண்டகல்பம் லிங்ககல்பம் பவிஷ்யகல்பம் காருடகல்பம் பாகவதகல்பம் மார்க்கண் டேயகல்பம் வாமநகல்பம் நிருஸிம்ஹகல்பம் வராஹ கல்பம் என பதினெட்டு கல்பங்கள். கல்பவடிவமாக இருப்பவன் பகவானே யாம். இப்போது சுவேதவராஹ கல்பம் நடந்துகொண்டிருக்கிறது.

## மிலேச்சர் ஆலயத்தை அழித்தது.

டில்லியைச் சார்ந்த குகோத்திநன் ஸஹோத்திநன் என்ற மிலேச்ச ராஜர்களும் திமிரலிங்க என்றவனும் வைதிகர்களைப் பலவகையிலும் ஹிம்ஸித்தார்கள். திமிர லிங்கன் ஒரு ஸமயம் எல்லா வைதிகர்களையும் அழைத்து நீங்கள் மூர்த்தி பூஜை செய்வது தப்பு. யார் அந்த மூர்த்தியைச் செய்கிறானோ அவன் அதற்குத் தந்தை. மூர்த்தி அவனது பெண் அல்லது புத்திரனாகும். தந்தை புத்திரனைப் பூஜிக்கலாமா ? இதைக் கூறுகின்ற உங்கள் வேதம் சாஸ்திரம் முதலியவைகள் பிரமாண மல்ல என்று கூறி அவைகளைத் தீயிலிட்டான். விக்ரஹங்களை உடைத்தான். ஆலயங்களை அழித்தான். ஸாளக்ராமங் களைக் கோணியில் கட்டி ஒட்டைமீதேற்றிச் சென்றான். அவைகளைத் தனது ஸிம்மாஸனத்திற்குப் பீடமாக அமர்த்தினான். அவன் வஸிக்குமிடம் தைத்திரம் என்ப தாம். வைதிகர் அனைவரும் இதைக்கண்டு வருந்தி இந்தி ரனைத் துதித்து வேண்டினார்கள். இதர தேவர்களும் ஹரி ஹரரது விக்ரஹங்களும் தேவர்களுக்கு இருப்பிடமான ஸாளக்ராமமும் நாசம் செய்யப்பட்டதை முறையிட்டனர். இந்திரன் கோபங்கொண்டு தனது வஜ்ராயுதத்தை அவன் மீதுவிட அது இடியாகித் திமிரலிங்கன் மீது விழுந்தது. அவனும் இறந்தான். அந்த ஸாளக்ராமங்களை வைதிகர் கண்டகீ நதியில் போட்டனர். இன்றும் கண்டகீ நதியி லிருந்து எடுத்த கற்களே ஸாளக்ராமம் என பூஜிக்கப் படுகின்றன.

## இந்திரன் குருவை வேண்டுதல்.

மிலேச்சர்களது பலாத்காரத்தினால் யக்ஞம் முதலிய நற்கருமங்கள் அழிந்தன. தேவர் அமிருதமின்றி வாடினர். தேவகுருவான பிருஹஸ்பதி சக்ரனை நோக்கி நீ பூமியில் பிராம்மணனாகப் பிறந்து நாஸ்திக மதங்களை அகற்றி வைதிக மார்க்கத்தை நிலைநாட்டுவாய். ஸூர்யனை ஆராதித்து அவனருளால் ஸர்வஜயமும் உண்டாகும். பர்ஹிஷ்மதி நகரில் தாத்ரு சர்மா என்றோர் ஏழை வேதிய னிருந்தான். அவன் பிரும்மாவை உபாஸித்து இரு புத்ரர்களையும் ஒரு புத்ரியையும் பெற்றான். விவாஹ ஸமயம் வந்தபோது பஞ்சஸ்வர்ணப்ரதா என்ற வித்யையால் செல்வத்தைப் பெற்று மணத்தை முடித்தான். ஆயினும் மநம் சாந்திபெற மறுபிறப்பில்லாதிருக்க ஸூர்யனை உபாஸித்தான். அவர் எதிரில் தோன்றியபோது நல்லுபதேசம் பெற்று தபஸால் ஸாலோக்யம் பக்தியால் ஸாமீப்யம் த்யாநத்தால் ஸாரூப்யம் க்ஞாநத்தால் ஸாயுஜ்யம் என்ற முக்தியைப் பெற்றார். ஆதலால் நீ ஸூர்யனை உபாஸி என்றார்.

அமரர் ஆதித்யனை உபாஸித்தனர். அவர் தனது அம்சத்தினால் கான்யகுப்ஜ தேசத்திலே தேவலர் என்ற பிராம்மணனுக்கு ராமாநந்தர் என்ற ஒரு குமாரன் தோன்றி ராம பக்தியினால் நாஸ்திகரை ஜயித்து ஆஸ்திகத்தைப் பரப்புவான். அதனால் யக்ஞயாகம் நடைபெறும். உங்களுக்கும் தட்டில்லாமல் அமிருதம் கிடைக்கும் என்றார்.

## நிம்பார்க்கர்.

பகவான் வாஸுதேவன் தனது ஸுதர்சநத்தை நிம்பார்க்கன் என்ற பெயருடன் பூமியில் தோன்றி அதர்மத்தை அகற்றி தர்மத்தை விருத்தி செய்யும்படி கட்டளை இட்டார். மேருவின் தக்ஷிணதிக்கில் நர்மதா தீரத்தில் தைலங்கதேசத்தில் தோன்றி நாரதரிடம் ஸத்தர்மங்களைக் கேட்டு மதுரை த்வாரவதி நைமிஷாரண்யம் என்ற விடங்களில் வஸித்து தர்ம ப்ரசாரம் செய்து ஆஸ்திகரை ஆதரிப்பார். அவர் அருண என்ற முனிவர்க்கு ஜயந்தி

என்பவளிடம் உண்டானர். ஒரு ஸமயம் பிரும்மா பிராம் மணவேஷந் தாங்கி மாலையில் வந்து ஸூர்யன் மறைவ தற்குள் அன்னமளிக்க வேண்டும் என்ருர். இவர் கேட் கும்போதே ஸூர்யன், நிம்பமெனும் வேப்ப மரத்தின் நுனியில் சிறிது தெரிந்தார். அடுத்த நிமிஷம் மறைய வேண்டிய காலமது. நிம்பார்க்கர் உமது இஷ்டப்படி அளிப்போம் என்று கூறி ஸூர்யன் மறையாமல் அந்த நிம்பவிருக்ஷத்தின் நுனியில் நிற்கும்படி செய்தார். இதைக் கண்டு வியந்த சதுர்முகன் தனது நிஜ உருவைக் காட்டி நிம்பார்க்கர் என்ற காரணப் பட்டப்பெயரளித்து மறைந் தார். அவரும் பல்லாண்டு தர்ம ப்ரசாரம் செய்து முடி வில் ஸூர்யனிடம் சென்ருர்.

## மத்வாசார்யர்.

தேவர்களது பிரார்த்தனைக் கிணங்க ஸூர்யன் பிருந் தாவநத்தில் மது என்ற பிராம்மணரிடம் எனதம்சம் உண் டாகுமென, ஆஷாட பௌர்ணமியில் கூறினர். மிக மதுர மான வாக்கினல் தர்ம விரோதிகளை ஜயித்து தர்மத்தை நிலைநாட்டியதால் மத்வாசார்யர் என பெயர் பெற்ருர்.

## ஸ்ரீதரர்.

வேதசர்மா என்பவரிடம் ஸூர்யன் ஓர் அம்சத்தினல் ஸ்ரீதரர் என்ற பெயருடன் தோன்றி ஸ்ரீ பாகவதத்தை உல கில் பிரகாசப்படுத்தினர்.

## விஷ்ணுஸ்வாமி.

பிராம்சு சர்மா என்றோர் வேதியன் நித்ய கர்மாவி லீடுபட்டு தர்ம சீலனக விளங்கினன். கலியிலும் கிருத யுகதர்மத்தை அனுஷ்டிக்கும் அவனைக் கண்டு கலி கோபங் கொண்டான். கலியினது கிங்கரனொருவன் இவரைத் தனது ஆச்ரமத்திற்கு வரும்படி வேண்டினன். அவர் அங்கு சென்றவுடன் கலிந்தம் என்ற பழத்தைப் புஜிக் கும்படித் தந்தான். அது கலியை—பாபத்தைத்—தரும் பழம். அதைப் புஜிக்க லாகாது என்ருர் சர்மா. வேதி யன் அதிதிக்கு ஆதரவுடன் அளிக்கும் பழத்தை மறுப்பது நீதியா? என்ருன் கிங்கரன். நீர் கூறுவது நியாயமே

என அதைவாங்கித் தன்னிடம் உள்ள ஸாளக்ராமத்திற்கு நிவேதனம் செய்து அதை கையில் எடுத்துக்கொண்டார். அதற்குள் கலி ஒரு அரசனாகி இவரை அழைத்தான். ஸபைக்குச் சென்றவுடன் உமது மூட்டையில் என்ன இருக்கிறது? காட்டும் என்ருன். அதை அவிழ்த்தபொழுது பழத்திற்குப் பதில் அறுக்கப்பட்ட ஒரு குழந்தையின் தலை இருந்தது. அரசன் அவரைச் சிறையில் தள்ளினன். அவர் சிறையில் வாடி வதங்கி பகவானை நாடி விஷ்ணோ! உம்மை ஸ்வாமியாகக் கருதி தாஸனைப்போல் உமது கட்டளைகளை நிறைவேற்றும் எனக்கு இந்த சிக்ஷை எப்படி? உண்டானதென வருந்தினன். சூர்யன் இவர் எதிரில் தோன்றி இது கலியினது ராஜ்யம். தர்மம் செய்வோரை சிக்ஷிப்பது கலிதர்மம். நீ இங்கிராதே! கலிஞ்ஜர தேசம் செல். உமக்கு விஷ்ணு சர்மா அல்லது விஷ்ணுஸ்வாமீ எனப் பெயர் வழங்கும் என்று கூறி மறைந்தார். விஷ்ணு ஸ்வாமி வைஷ்ணவத்தை நிலைநாட்டினர்.

## பட்டோஜி தீக்ஷிதரும் கௌமுதியும்.

மிலேச்சர் ஆர்ய பாஷையையும் தாது பாடங்களையும் பலவகையிலும் கெடுத்து அழித்தனர். இந்திரன் ஸகல சாஸ்திர நிதியான ஸூர்யனை உபாசித்தார். அவர் காசியில் வேதசர்மா என்ற தீக்ஷிதருக்குப் பட்டோஜி தீக்ஷிதராகத் தோன்றி சப்த சாஸ்திரத்தை விளக்கினர். பரபிரும்மம் அவ்யக்தமானது. அதனிடமிருந்து வ்யக்தமான சப்தம் உண்டானது. அதிலிருந்து தோன்றிய அஹங்காரம் உலகைப் படைத்தது. பதினெட்டு அங்கங்களுடன் கூடிய சப்தம் ஒரு விருஷபமாக நின்றது. "சத்வாரி சிருங்கா" என்ற மந்திரத்தினல் சப்தமயமான விருஷபம் வர்ணிக்கப்படுகிறது. அதே சிவனுக்கு நந்தி எனும் வாஹநமாம். அதற்கு நான்கு கொம்புகள். மூன்று கால்கள். இரு தலைகள். ஏழு கைகள். மூன்று வகையாகக் கட்டப்பட்ட இந்த காளை மிகக் கம்பீரமாகக் கர்ஜிக்கிறது.—இந்த மந்திரம் ஔபாஸந உபஸ்தாந காலத்தில் கூறப்படுகிறது. அங்கு யாகம் அல்லது அக்நிபரமாக இதற்கு கருத்து வர்ணிக்கப்படுகிறது. விச்வேசரைப் பனிரண்டாண்டுகள் உபாஸித்து அவர் அருளால்

சப்த சாஸ்திரங்களைப் பெற்று ஸித்தாந்த கௌமுதி எனும் நூலை இயற்றினர். தேவ பாஷை நிலைத்து நின்றது.

## வராஹமிஹிரர்.

காஞ்சியில் ஸத்யதத்தன் என்றோர் வேந்தனிருந்தான். அவனுக்கு ஒரு பிராம்மணர் கணக்கனாக இருந்தார். அவர் ஜோதிஷத்தில் நல்லறிவு வாய்ந்தவர். இந்த காலத்தில் இந்த கார்யம் செய்தால் செல்வம் விருத்தியாகும் என அரசனுக்கு கூறுவார். ஒரு நாள் புஷ்யநக்ஷத்திரத்தில் அபிஜித் முகூர்த்தத்தில் விற்பனை ஸ்தலம் ஒன்று ஆரம்பித்து அந்த கடைத்தெருவில் விற்காத பொருளை அரசர் வாங்குவார் என பறைசாற்றச் சொன்னர். அப்படியே கடைத்தெருவில் ஏராளமான வியாபாரம் நடந்தது. அரசாங்கத்திற்கும் அபரிமிதமாகச் செல்வம் வளர்ந்தது. கலி இதைக் கண்டு வருந்தி இரும்பினால் மூதேவி போன்ற ஒரு உருவைச் செய்து அதன் விலை நூறு ரூபா யென்ருன். எவரும் வாங்கவில்லை. அரசன் தான் சொன்னபடி அதை வாங்கி அரண்மனையில் வைத்தான். அதைக் கண்ட தர்மதேவதை ராஜ்யலக்ஷ்மி ஸத்யம் என்பவர் ஒருவர்பின் ஒருவராக அரசனிடமிருந்து கிளம்பினர். அரசன் ஸத்யத்தை மாத்திரம் கையைப் பிடித்துக்கொண்டு நீ செல்லக்கூடாதென வேண்டினன். ஸத்யமும் லக்ஷ்மியும் தர்மமும் திரும்பினர்கள். நீ சஞ்சலா என்ற பெயரை விட்டு அசஞ்சலையாக இருக்கவேண்டுமென லக்ஷ்மியை வேண்டினர். உனது கணிகர் வைத்த முகூர்த்த விசேஷத்தால் நானிங்கு ஸ்திரமாக இருப்பேன் என்ருள். அரசன் சந்தோஷமடைந்து கணிகருக்கு லக்ஷம் பவுனளித்தான்.

அவர் உஜ்ஜயினியில் ருத்ரபசு என்ற ஜோதிஷ சாஸ்திர நிபுணரிடம் சூர்யாம்சத்தால் உண்டானவர். அவர் ஜனித்தகாலம் அந்த குடும்பத்திற்கு அழிவை உண்டு பண்ணுமென தந்தை அக் குழந்தையைத் தோணியில் ஏற்றி நதியில் விட்டுவிட்டார். தற்செயலாக அங்குவந்த ராக்ஷஸிகள் இக்குழந்தையை வளர்த்து விபீஷணனிடம் அளித்தனர். விபீஷணன் தக்கவயது வரும்வரை அவரை

ரக்ஷித்து உஜ்ஜயினியில் கொண்டுவிட்டான். மிலேச்சர்களால் அழிக்கப்பட்ட ஜோதிஷத்தை அவர் மறுபடி உஜ்ஜீவிக்கும்படி செய்தார்.

## தன்வந்தரி ஸுச்ருதர்.

ஸிம்ஹள த்வீபத்திலுள்ள பரீக்ஷித் என்ற அரசனுக்கு பாநுமதி என்ற ஒரு அழகிய பெண்ணிருந்தாள். அவள் ஜலக்ரீடை செய்யும் பொழுது நாரதர் அவளது ரூபத்தைக்கண்டு மயங்கி அவளது வஸ்திரத்தை எடுத்துக் கொண்டு தன்னை மணக்கும்படி வேண்டினர். அவள் தான் மநிதரையே மணக்க விரும்புவதால் அவரை மணக்க மறுத்தாள். அவர் நிர்ப்பந்தம் செய்து அவமானப் படுத்தியதால் அவருக்குக் குஷ்டரோகம் வரும்படிச் சபித்தாள். அவர் ஸூர்யனை உபாஸிக்க அவரது நோயை அகற்றி கல்பத்தை படித்தவனை தன்வந்தரி என்ற பெயருடன் பூமியில் பிறந்து ஸுச்ருதன் என்ற அரசனைச் சிஷ்யனாகக் கொண்டு அவன் பெயரால் ஒரு வைத்ய நூலையும் கல்ப வேதம் என்ற ஒன்றையும் நீயும் இயற்றி உலகிற்கு உபகாரம் செய் என்றார். அவரே தன்வந்தரி.

## ஜயதேவரும் கீத கோவிந்தமும்.

வங்க நாட்டிலே ஹேலீ என்ற ஸூர்யபக்தன் அறுபத்து நான்கு கலைகளை உணர்ந்தவர். சித்ர வேலையால் பொருள் சேர்த்து ஸூர்ய யாகம் செய்து பம்பா தீரத்தில் ஒரு ஜயஸ்தம்பம் நாட்டி அதில் அமர்ந்து ப்ரதி தினம் தானளிக்கும் அன்னத்தை ஸூர்யன் நேரில்வந்து புஜிக்கும்படிச் செய்தான். அச்சமயம் பில்வாக்ர மெனும் ஊரிலே கந்துகி என்ற பிராம்மணனுக்கு ஜயதேவர் என்ற புத்திரன் பிறந்தான். பனிரண்டாண்டில் அவர் பெற்றோரை இழந்து கயை சென்று கயா சிராத்தம் செய்து வைராக்யத்துடன் வநவாஸம் செய்து வந்தார். ஸத்ய விரதர் என்ற பிராம்மணன் தான் பிரார்த்தித்தபடி தனக்குண்டான பத்மாவதி என்ற பெண்ணை பூரிஜகன்னாத ஸ்வாமியிடம் அளித்தார். எனது உடலான ஜயதேவரிடம் அவளைக் கொண்டுவிடு என்றார் மரவடிவமான பகவான். பத்மாவதி அவரை மணந்து பக்தியுடன் பணிவிடை செய்துவந்தாள். அவர் பக்தி மார்க்கத்தை ப்ரசாரம்

செய்துவந்தார். அரசன் அவருக்கு எண்ணிறந்த செல்வத்தைத் தந்தார். கலியின் தூண்டுதலால் திருடர்கள் அவர் பொருளையும் மனைவியையும் அபஹரித்து அவரையும் கை கால்களை வெட்டி நடுக்காட்டில் எறிந்தனர். வேட்டையாடச் சென்ற அரசன் இவரைக்கண்டு கதறி ஊருக்கழைத்து வந்து ஒரு தர்மசாலையி லமர்த்தினன். யார் உமக்கு திங்கிழைத்தது என்று அரசன் கேட்க எனது கர்மாவைத் தவிர வேறெவருமில்லை என்றார். கௌட தேச பண்டிதர் என்ற வேஷத்துடன் கலி கிங்கரர் பலர் தர்மசாலைக்கு வந்து மாயையால் ஸாளக்ராமங்களை விஷ்ணு ரூபமாக்கி உணவை உண்ணும்படிச் செய்தனர். இதை அறிந்த தர்மபாலன் எனும் அரசன் தர்மசாலைக்கு வந்து அவர்கள் ஜயதேவருடன் அளவளாவிப் பேசியதைக் கண்டு நீங்கள் யார்? இவர் யார்? என விசாரித்தான். இவன் கௌடதேச அரசனின் பரிசாரகன். அரசனுக்கு விஷத்துடன் கலந்த அன்னத்தை அளித்தான். அரசன் இவனைக் கழுவு ஏற்ற நாங்கள் எங்களது சிஷ்யன் அவனைக் கொல்லவேண்டாம் என்றோம். அரசன் அவனது கை கால்களை வெட்டி வநத்திற் கனுப்பினன் என்றார்கள். உடனே பூமி வெடித்து இவர்களைப் பாதாளத்தில் அமிழ்த்தியது. இதைக்கண்டு ஜயதேவர் வருந்தினர். கை கால்கள் வளர்ந்தன. மனைவியும் அருகே வந்தாள். நிருக்தம் கீத கோவிந்தம் என்ற நூல்களை இயற்றி முடிவில் வைகுண்டஞ் சென்றார்.

## விஷ்ணு சைதன்யர்.

விஷ்ணு சர்மா என்ற வேதியர் வேத சாஸ்த்ர கரை கண்டவர். ஏழை. மனைவியுடன் இல்லறத்தை நடத்தி வந்தார். ஸந்ததியும் கிடையாது. அவர் வீட்டிலில்லாத ஸமயம் ஒரு துறவி அங்கு வந்தார். இவரது பக்தியையும் ஏழ்மையையும் கண்டு ஆச்சர்யமடைந்தார். பனிரண்டாண்டு தான் சிவனை ஆராதித்துப் பெற்ற ஸ்பர்ச மணி என்பதை அவர் மனைவியிடம் அளித்தார். மூன்று நாள் இதை வைத்திரு. இதனால் எதைத் தொட்டாலும் ஸுவர்ணமாகும் என்றார். பதி வருவதற்குள் இவள் வீட்டிலுள்ள ஸகல வஸ்துக்களையும் ஸுவர்ணமயமாக்கினள். கணவனிதைக்கண்டு வருந்தி பொருள் வேண்டு

மானல் அத்துறவியுடன் செல். அருள் தேவையானல் இவைகளை வீசி எறிந்துவிடு என்றார். அங்ஙனமே அவள் மணியையும் மற்றவைகளையும் வநத்தில் எறிந்தாள்.

துறவி வந்து ஸ்பர்சமணியைக் கேட்க அவள் தன் பதி கூறியதைச் சொன்னாள். துறவி அங்குசெல்ல முட் செடிகள் மரங்கள் காடுகள் எல்லாம் ஒரே ஸுவர்ணமய மாக இருப்பதைக்கண்டு வியந்தார். ஸ்பர்சமணி எதைத் தொடுகிறதோ அது ஸுவர்ணமாகும். இங்கு விஷ்ணு சர்மாவின் மனைவியால் ஸுவர்ணமாக்கப்பட்ட எல்லா பொருள்களும் மற்றவைகளை ஸுவர்ணமாக்குவதைக் கண்டு விஷ்ணு சர்மாவின் பெருமையையும் வைராக்யத் தையும் கண்டு அவருக்கு சிஷ்யரானார். விஷ்ணு சர்மா விஷ்ணுவைச் சுத்த சைதன்யமாக—அறிவாக—உபாஸித்து விஷ்ணு சைதன்யரெனப் பெயர் பெற்றார். பௌத்தர் மிலேச்சர் முதலியவர்களை விறட்டி வேத தர்மத்தையும் பக்தியையும் பரவச் செய்தார்.

## வால்மீகி சரிதம்.

இடையே முன்யுக கதையும் கூறப்படுகிறது. வால்மீகி பிராம்மணனாக இருந்து தொழிலால் வேடனானான். ஸப்தரிஷிகள் மரா மரா மரா என்ற மந்திரத்தைக் கூறினார் கள். ஆயிரமாண்டு தவம்செய்து புத்தாகி அது கறைந்து அங்கிருந்து கிளம்பினார். அதனல் அவர் வால்மீகி யானார்.

## சங்கராசார்ய அவதாரம்.

வைதிக தர்மம் நாஸ்திகராலும் பௌத்தராலும் மிலேச்சராலும் அழிக்கப்படுவதைக்கண்டு பரமசிவன் விப்ர பைரவ தத்தர் என்பவருக்குப் புத்ரனாகத் தோன்றி சங்கராசார்யர் என்ற பெயருடன் துர்மதங்களை ஜயித்து. வைதிக மதத்தை ப்ரதிஷ்டை செய்தார். கிரிசர்மா என் பவர் எல்லா துர்வாதிகளையும் வாதத்தால் ஜயித்து காசி சென்று ஆங்குள்ள சங்கராசார்யருக்குச் சிஷ்யரானார். இவரே ஆநந்தகிரி எனப்படுவார். வநசர்மா என்ற வித்வான் பனிரண்டு வயதில் எல்லோரையும் சாஸ்த்ர வாதத்தினல் ஜயித்து சங்கராசார்யருக்குச் சிஷ்யரானார்.

மாஹிஷ்மதி நகரில் உள்ள யதிதத்தர் என்பவருடைய புத்திரரான புரீசர்மா பதினாறு ஆண்டுகளுக்குள் ஸகல வித்வான்களையும் வாதத்தால் ஜயித்து ஸ்ரீ சங்கராசார்ய ருக்குச் சிஷ்யரானார். க்ஷேத்ர சர்மா என்பவரும் **ஜாதகாபரணம்** என்ற ஜோதிஷசாஸ்திரமெழுதிய டுண்டி ராஜனும் வேதநிதி எனும் பைரவரும், கோரகநாதரும் அவருக்குச் சிஷ்யரானார்கள்.

### சங்கரரும் ராமாநுஜரும்.

கோதாவரீதீரத்தில் ஆசார்ய சர்மா என்பவருக்கு ராமசர்மா ராமாநுஜர் என இருவரும் புத்ரராவர். ராமசர்மா தீர்த்த யாத்ரைக்குச்சென்று நூறு சிஷ்யர் களுடன் காசிமாநகரம் வந்தார். ஆங்குள்ள சங்கராசார்ய ருடன் கிருஷ்ணனே பரமாத்மா என ஒரு மாதம் வாதம் செய்து தோல்வி அடைந்தார். இதைக்கேட்ட ராமாநுஜர் ஸஹோதரருடன் காசிக்குச் சென்று வாஸுதேவனே பரமாத்மா என ஒரு மாதம் வாதம் செய்தார். மீமாம்ஸா சாஸ்த்ரத்தில் பத்துநாள் வாதம் நடந்தது. நியாய சாஸ்த் ரத்தில் வாதம் நடந்தது. சங்கரர் தோல்வி அடைந்து வெள்ளை வஸ்த்ரமுடுத்திக் கொண்டார். ராமாநுஜர் சிவாம்சமாவர். [இந்த விருத்தாந்தம் இடையில் எவ ராலோ பொருத்தமின்றி எழுதி சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். சரித்ரக்காரரும் ஆராய்ச்சியாளரும் பௌ ராணிகரும், ஸ்ரீ சங்கரர் காலத்திற்குப்பின்னர் வெகு காலங்கழித்து ராமாநுஜர் ஸ்ரீ பெரம்பத்தூரில் அவதரித்த தாகக்கூறுகிறார்கள். இப்பெயர் கொண்ட வேறொரு ராமாநுஜர் அக்காலத்தில் இருந்து சங்கராசார்யருடன் வாதம் பண்ணினதாகக் கூறவும் முடியவில்லை, சங்கரர் சிவனே வேதாந்தக் கருத்தென்றதாகவும் விஷ்ணுவே வேதாந்ததத்துவமென ராமாநுஜர் வாதம் செய்ததாகக் காணப்படுகிறது. சங்கரர் ஸகுண ரூபியான சிவன் விஷ்ணு என்ற இருவர்களிடமும் பேதம் பாராட்டுபவ ரல்ல. வேதாந்த தத்துவம் ஒரே வஸ்து. அது நாம ரூப மற்றது. பிரும்மம் என வியவஹாரத்திற்காகக் கூறு கிறோம். நாமரூபமெல்லாம் அழிவுள்ளது என்ற ஒரு சுத்த அத்வைத மதத்தையே முதலாவதாக ஸ்தாபித்தார். பின்னர் அந்த உயர்நிலையைப்பெற சைவம் வைஷ்ணவம்

சாக்தம் காணபத்யம் ஸௌரம் கௌமாரமெனும் ஆறு மதங்களை ஸ்தாபித்து ஷண்மத ப்ரதிஷ்டாபகாசார்யர் என்ற பிருதைப் பெற்ருர். அந்த வகையிலும் விஷ்ணுவைக் கண்டிக்கவில்லை, "பஜகோவிந்தம், ஹரிமீடே லக்ஷ்மீ நரஸிம்ம ஸ்தோத்ரம் விஷ்ணுபாதாதி ஸ்துதி முதலியவைகளை இயற்றியவர் விஷ்ணுவை எப்படி கண்டித்திருக்கமுடியும். இது வேருெரு கல்பாந்தர விருத்தாந்தம் என கூறவும் முடியவில்லை. சங்கரர் என்ருல் உடனே அத்வைதம் என்பது தோன்றும். ஆதலால் எவரும் ஒப்பமுடியாத இந்த கதையை அச்சிடுவதற்கு முந்தியே எவரோ எழுதி சேர்ந்திருக்கவேண்டும்.]

## ஹநுமான்.

பாலசர்மா என்ற பெயருடன் அவதாரம் செய்து ராமபக்தியைப் பரப்புவார். காசியில் சங்கரருடன் ராமனே பரமாத்மா என ஒருமாதம் வாதம் செய்து தோல்வி பெற்று அவர் சிஷ்யராவார்.

## ராம சப்தம் முதலாரம்ப காரணம்.

ஸகல சப்தங்களுக்கும் ஆதிகாரணம் ராமன். சப்தங்களெல்லாம் ராமமயம். சிவாம்சமான லக்ஷ்மணன் அர்த்தஸ்வரூபீ. ப்ரத்யும்நனே பரதனுகவும் அநிருத்தன் சத்ருக்நனுகவும் அவதரித்தார்கள். ஆதலின் சப்தங்களின் முதலில் ராம சப்தமே ஆரம்பிக்கப்படுகிறது.

## ஆயிரம் முக ராவணன்.

ருத்ர கல்பத்தில் ராவணன் ஆயிரம் முகத்துடனிருந்தான். ஹம்ஸவாஹநத்திலேறி ராமன்; வேதங்கள் குதிரையாக இருக்க பிரும்மா ஸாரதியாக இருக்க ஹநுமான் கொடியிலிருக்க ஆயிரமாண்டு ராவணனுடன் போர் புரிந்தார். ராவணனது அஸ்திரத்தால் ராமலக்ஷ்மணர் மூர்ச்சித்து விழ ஸீதாதேவி அந்த ராவணனைக்கொன்ருள். ஒவ்வொரு கல்பமும் முன் கல்பம் போலவே இருக்கும் என்பது ஸித்தாந்தம். சில மாறுதலிருக்கும்.

## ஏகாதசீ உத்பத்தி.

முரன் எனும் அஸுரனுடன் மஹாவிஷ்ணு ஆயிரமாண்டு யுத்தம் செய்தார். பிரும்மா தேவியைத்துதிக்க

ஏழுவயது கன்யகையாகத் தோன்றிய தேவி முரனிடம் வந்து "நான் உந்மீலினீ, த்ரிஸ்பர்சா, பக்ஷவர்த்நிநீ, ஜயா, ஏகாதசீ என்ற பலபெயருள்ளவள். உன்னிடம் விஷ்ணு தோல்வியுற்றார். நீ என்னையும் ஜயித்து நற்கீர்த்தி பெறலாம் என்றாள். இதைக்கேட்டு முரன் தேவியுடன் போருக்குவர, ஒரே நிமிஷத்தில் அவனைக்கொன்றாள். பதினேரு வகையான ஆசாரமுள்ளவளாக இருந்ததால் ஏகாதசி என்று அவளுக்குப் பெயர் உண்டானது.

### நாமதேவர்.

தேஹளியில் தர்ம பக்தரது பதிவிரதையான பெண்ணிடம் வருணனுடைய அம்சத்தால் பிறந்தவர் நாமதேவர். நாமஜபத்தால் பகவானை ப்ரத்யக்ஷமாக தர்சித்தார். ஆதலால் நாமதேவர் என்று பெயர் வழங்கிற்று. ராமாநந்த குருவைச் சரணமடைந்தார். யோக சக்தியால் பிணங்களை உயிருடன் எழுப்பினர். தேஹளியை ஆண்டு வந்த ஸிகந்தர் என்ற மிலேச்ச ராஜன் இவரது சக்தியைக் கண்டு வியந்து ஐம்பதுலக்ஷம் பொன் அளித்தான். நாமதேவர் அதைக்கொண்டு கங்கைக்குப் படிகட்டினர்.

### கபீர்.

தான்ய பாலன் என்ற வைச்யனுக்கு வாயுவின் அம்சத்தால் ஒரு குழந்தை பிறந்தது. அது மூலநக்ஷத்திரத்தில் பிறந்ததால் பெற்றோர் அதைக் காட்டில் கொண்டு விட்டனர். அலிகன் என்ற மிலேச்சன் அக்குழந்தையைக் கண்டான். அவனுக்கு புத்ரனில்லாததால் அதை எடுத்து வளர்த்தான். அவனது தொழில் துணி நெய்வதாம். கபீர் என்று பெயரிட்டு அதை வளர்த்து வந்தான். அக்குழந்தை அலிகன் தொட்டவுடன் ஏழு வயதுள்ளவனாக வளர்ந்து தந்தை வீட்டில் பசும்பாலை மாத்ரம் சாப்பிட்டு வந்தான். ராமாநந்தரை அடைந்து ராம பக்தியிலீடுபட்டான்.

### ராமதாஸர்.

குபேரன் தனது அம்சத்தினல் வைச்ய ஜாதியில் பிறந்தான். அவனுக்கு திரிலோசநன் என பெயரிடப்பட்டது. ராம பக்தியிலீடுபட்டு ஸதா ராமகைங்கர்யம்

செய்து வந்தான். பகவான் அவனது அளவுகடந்த பக்திக்கு இறங்கி ஒரு தாசனைப்போல் இருந்து அவனுக்குத்தொண்டு செய்துவந்தார். பதிமூன்ருவது மாஸத்தில் பகவான் அவன் முன்னேதோன்றி உனது கடனை அகற்றி விட்டேன். இனி உனது உள்வீட்டில் வஸிப்பேன். பணி செய்வேன். ராமனைத் தாஸனுகக்கொண்டதால் நீ ராம தாஸன் என்று கூறிமறைந்தார்.

இங்ஙனம் பலபக்தர்கள் பக்திமார்க்கத்தைப் பரவச் செய்யத் தோன்றினர். அனைவரும் தேவாம்சமாவர். நரச்ரீ ரூபமாக ஐந்தாவது வஸு கூர்ஜரத்தில் பிறந்தார். சந்திரன் பாபா என்ற அரசனுனன். உஷ, காலதேவன் பாஞ்சாலத்தில் மார்க்கபால புத்திரனுன நானக் என்ற பெயருடன் தோன்றினர். நித்யாநந்தஸாது அசுவினீ குமாரர் ரைதாஸர் கிருஷ்ண சைதன்யர் முதலிய பலரது சரித சுருக்கம் கூறப்பட்டது.

## ஸ்ரீதராசார்யர்.

இவர் சிறந்த சிவபக்தர். ஆங்காங்கு ஸ்ரீ பாகவத ஸப்தாஹம் நடத்திவந்தார். ஓரரசன் அவரை அழைத்து ஸப்தாகம் நடத்தி விசேஷமாக ஸன்மாநம் செய்தார். அந்த தநத்துடன் அவர் தன் வீட்டிற்குத் திரும்பினர். காட்டில் சில திருடர்கள் இவருடன் கூடவே வந்து நடுவழியில் அவரைக்கொன்று பொருள்களையும் அவர் மனைவியையும் அபஹரித்தனர். பகவான் ஸ்ரீராம சந்திரமூர்த்தி ஆங்குதோன்றி திருடர்களைக்கொன்று ஸ்ரீ தரரை எழுப்பி தான் துணையாக வந்து அவரை வீட்டில் கொண்டுசேர்த்தார். எனக்கு இத்தகைய பேருதவி புரிந்த நீ யார்? என்று கேட்டவுடன் ஸ்ரீ ராமன் தனது உருவைக்காட்டி மறைந்தார். அன்று முதல் அவர் விஷ்ணு பக்தராகி ஸ்ரீ பாகவதத்திற்கு ஒரு வியாக்யாநமும் எழுதினர்.

## கோத்ர ரிஷிகள்.

கலிபிறந்து ஆயிரமாண்டுகள் சென்றபின் கண்வர் எனும் முனிவர் ஆர்யாவதீ என்ற தர்ம பத்னியுடன் கிருஹஸ்த தர்மத்தை நன்கு நடத்திவந்தார். இருவரும்

ஸரஸ்வதி நதியைத் துதித்து பத்து புத்ரர்களைப்பெற்றார்கள். அவர்களுக்குப் பதினாறு பதினாறு புத்ரர்கள் உண்டானார்கள். அவர்களில் கச்யபர் பரத்வாஜர் விச்வாமித்ரர் கௌதமர் ஜமதக்னி வஸிஷ்டர் வத்ஸர் ஆகியவர்கள் கோத்ர ரிஷிகளாவர். ஸரஸ்வதியின் ஆக்ஞையால் கண்வர் மிச்ர தேசத்திற்கு வந்தார். பத்தாயிரம் மிலேச்சர்களைச் சூத்திரராக்கினர். (இந்துவாக்கி அந்த ஜாதியில் சேர்த்தார்).

## பாபர் ஹுமாயூ அக்பர்.

கலியினது தூண்டுதலால் திருபுரனின் ஜீவனை மஹாமதன், ரோஷணன் எனும் அஸுரனை அழைத்து திமிரலிங்கனது புத்ரனை ஸருஷ என்ற பெயருடன் நிதைத்ய கார்பத்தைச் செய்ய வேண்டும் என்றான். அவன் ஐந்தாண்டுகள் ராஜ்யபாரம்செய்து டில்லியில் ஆர்ய தர்மத்தை அழித்து வந்தான். அவனது புத்ரன் பாபர் இருபதாண்டு ராஜ்யமாண்டான். அவனது புத்ரன் ஹுமாயூ மதங்கொண்டு தேவதா விக்ரஹங்களையும் நாசம் செய்தான்.

மிலேச்சர்களையும் அவர்களைச் சார்ந்த மற்றவர்களையும் அழிக்க முகுந்தர் என்ற பிரும்மசாரி ஆபிசாரபிரயோகம் செய்து சிஷ்யருடன் தானும் தீயிலிறங்கினர். அச்சமயம் மிலேச்சர்களே ஜநங்களே அரசபதவியிலிருந்து விலக்கினர். மஹாராஷ்ட்ரத்தைச் சார்ந்த சேஷசாகன் என்பவன் டில்லியை ஆண்டுவந்தான். முகுந்த பிரும்மசாரி கேசத்துடன் கலந்த பாலை ஹோமம் செய்ததாலும் அதைப் பருகியதாலும் அவர் ஹுமாயு என்பவருக்குப் புத்ரனாக ஜனித்தார். அவர் பெயரே அக்பர். அவர், தனது பூர்வஜன்ம சிஷ்யர்களும் நண்பர்களும் மிலேச்சர்களாக தோன்ற அவர்களுடன்கூட எல்லோருக்கும் நன்மை புரிந்தார். அவர்களில் ஒருவரே **துளஸி தாஸர்** என்ற பௌராணிகர். (ஹிந்தியில் துளஸிதாஸ ராமாயணம் எழுதியவர். வேதோக்த கர்மாக்களைச் செய்யமுடியாத பிறவி எடுத்ததால் பக்திமார்க்கத்தை பிரசாரம் செய்தார் என்று தெரிகிறது.)

மாதகாரர் என்பவர் மீரா என்ற ராஜகன்யகையாகப் பிறந்து பக்திமார்க்கத்திலீடுபட்டார். அக்பர் பாஷாமய மான பல பக்தி நூல்களை எழுதி ஐம்பதாண்டு ராஜ்ய மாண்டார். பிறகு வைகுண்டஞ் சென்றார். ஸலோமா குர்தக என்ற அக்பர் வம்சத்தில் நவரங்க என்றவன் ஆர்யர்களது மூர்த்திகளை உடைத்துத் திங்கிழைத்தான். கிருஷ்ணசைதன்யர், சாபத்தினால் அவனது வம்சத்தை அழித்தார்.

## சிவாஜி

அச்சமயம் மஹாராஷ்ட்ரத்தில் தோன்றிய ஸேவா ஜயர் என்ற பிராமணன் ராஜ்ய பாலனத்துடன் தர்மத்தை ரக்ஷித்தார். மிலேச்ச அரசர்களைக் கொன்று பல நன்மை களைச்செய்தார். நாதர் என்ற மிலேச்சராஜன் ஆர்யர் களைக்கொன்றான். ஸேவாஜயரே சிவாஜீ.

## விக்டோரியா.

ராம ராவண யுத்தத்தில் தேவாம்சத்தால் பிறந்த வானரர்களை ஸ்ரீ ராமன் அன்னிய தேசங்களில் அரசர் களாகப் பிறந்து ராஜஸுகத்தை அனுபவிக்கும்படி கூறி னார். குரண்டா என்ற வகுப்பாரை ஜயித்து இவர்கள் அரசர்கள் ஆனார்கள். விகடவம்சத்தில் பிறந்த கௌரண் டர் பௌத்த தர்மத்தைக் கைக்கொண்டு ஈசபுத்ர—ஏசு புத்ர—மதத்தை கடைபிடித்தார்கள். வியாபார நிமித்த மாக கல்கத்தா நகரம் வந்தனர். விகடாவதி என்பவள் எட்டு ராஜதந்திரிகளைக் கொண்டு பாரததேசத்தை ஆண் டாள் (விக்டோரியா மஹாராணி.)

விகடே பச்சிமே த்விபே தத் பத்நீ விகடாவதி
அஷ்ட கௌசல மார்கேண ராஜமந்த்ரம்சகாரஹ.

நூற்று ஐம்பது ஆண்டுகள் அவர்களது ராஜ்யம் நடை பெறும். சிறிதுசிறிதாக ஆரிய தர்மத்தை அழிக்க ஆரம் பித்தபோது கிருஷ்ணம்சருடைய சாபத்தால் அவர்கள் பாரதநாட்டை இழப்பார்கள்.

## ஆர்யர்களது மண்டலம்.

குடிகளுக்குப் பிரதிநிதிகளாக இருந்து ஆர்யர்களது மண்டலம் பாரத நாட்டை ஆளும். அச்சமயம் பிராம்மண

த்வேஷ முண்டாகி பிராம்மணர்களுக்கு நன்மை குறையும். வரிகள் அதிகமாகும். அரசாங்கம் பூமிகளை அபஹரிக்கும். வர்ணதர்மங்களை அழிப்பார்கள். ஜாதி தர்மங்களை அழித்து ஒரே ஜாதியாக்க முயற்சிப்பார்கள். முநிவர்களது சாபத்தினுல் இவர்களது ஆக்ஷியும் சில ஆண்டுகளுக்குப் பிறகு மாறும்.

## ஜப்பாநுக்ஷியா ?

பிறகு மஞ்சள் வர்ண மானவர்களும் சப்பைமூக்குள்ளவர்களும் குள்ளமானவர்களும் நீண்ட தலையுள்ளவர்களுமான பௌத்தர் லக்ஷக்கணக்கானவர் டில்லியை அடைவார்கள்.

பப்ருவர்ணு: ஸூக்ஷ்மநஸ: வர்துலா தீர்க்க மஸ்தகா: ।
ஏவம்லக்ஷ ச்ச, ஸம்ப்ராம்தா: தேஹல்யாம் பௌத்த மார்க்கின: ॥

ஆர்ஜீகன் தேவகணன் என்பவர் சில ஆண்டு ஆக்ஷிபுரிவர். பிறகு ஆர்ய மண்டலி ஆளும்.

## புஷ்யமித்ரன்.

விக்ரமார்க்க ஆண்டில் இரண்டாயிரத்து இருநூற்று எழுபத்தேழாமாண்டில் சிவாம்சமான விக்ரமன் மறைந்த பின் மிலேச்சர்கள் வைதிக் தர்மத்தைக் கெடுப்பார்கள். புஷ்யமித்ரன் இளமையிலேயே மிக பராக்ரமசாலியாகி விக்ரமனைப்போல் மிலேச்சர்களை யெல்லாம் ஜயித்து ஏழு மோக்ஷபுரிகளைச் சுத்தமாக்கி ரக்ஷிப்பான்,

அயோத்யா மதுரா மாயா காசீ காஞ்சீஹி அவந்திகா ।
புரீ த்வாரவதி சைவ ஸப்தைதா: மோக்ஷ தாயகா: ॥

கலி பிராம்மண உருவெடுத்து புஷ்யமித்திரனிடம் வந்து இறந்தவர்களை நாடி சிராத்தம் செய்வது வீண் என வாதிப்பான். இறந்தவர் ஓராண்டு பிண்ட ஜல ரூபமாக இருந்து பின்னர் யாதநா சரீரம்பெற்று புண்ய பாப பயனை அனுபவிக்கின்றனர். மந்திர பலத்தாலும் பகவானது ஆணையாலும் வஸு ருத்ர ஆதித்யர் என்ற பித்ரு தேவர்கள் நாம் அளிப்பதை அவர்களுக் கேற்ற உணவாக மாற்றி அளிக்கின்றனர். ஆதலால் இறந்தவரை நாடி சிராத்தம் அவசியம் செய்யவேண்டும் என்று கூறுவார்.

விக்ரம ஸிம்மாஸநத்தின் பெருமையைக் கூறிய வேதாளம் கலிமித்ரன் என்ற பெயருடன் புஷ்யமித்ரனிடம் வந்து அவனைத் தன் முதுகில் சுமர்ந்து ஏழு த்விபங்களையும் சுற்றிக் காட்டும். ஆந்திர தேசத்தில் அரசாக்ஷி இல்லாததால் துர்பிக்ஷம் தோன்ற புஷ்யமித்ரன் அங்கு நல்ல அரசாக்ஷியை ஏற்படுத்துவான். வர்ணாச்ரம தர்மம் ஓங்கி வளர்ந்து, மறுபடியும் கலியினது செயலால் தர்மங்கள் அழிய ஆரம்பிக்கும். அதைக் கண்ட இந்திரன் ஸௌராஷ்ட்ர தேசத்தில் ஸோமநாதன் என்ற அரசனாகி தர்மத்தை நிலைநாட்டுவான்.

## ராகுவின் ஆக்ஷி.

கலியின் தூண்டுதலால் கூர்ஜரதேசத்தில் ராகு ஆபிரி புத்ரன் என்ற அரசனாக வந்து வைதிக தர்மங்களை அழித்துவந்தான். ஸாதுக்கள் தேவியைச் சரணமடைந்தனர். எனது உருவைத் தர்சித்து என் மந்திரத்தை—காயத்ரியை—ஜபம் செய்து வாருங்கள். துக்கமகலும். உங்களுக்கு க்ஷேமம் உண்டாகுமென்றாள். பலர் பௌத்த மதத்தில் பிரவேசித்தனர். வேதம் சாஸ்த்திரம் ஆசாரம் எல்லாம் குறைந்தன. பேருக்குச் சிலர் ஆர்யராக இருந்தனரே தவிர அனுஷ்டானத்தில் ஒரே மிலேச்சர்களாகவே இருந்தனர். மலய தேசத்தில் உள்ள லக்ஷக்கணக்கான மிலேச்சர்களுடன் போர்செய்தனர். மிலேச்சர் பௌத்தர் ஆகிய இரு கோஷ்டிகளாலும் ஆர்யதர்மம் சீர்குலைந்தது. (நடந்தவைகளாகக் கூறுவது நம் பொருட்டு.)

## கலியின் நான்காவது பாதம்.

கலியின் இரண்டாம் பாதத்திலும் மூன்றும் பாதத்திலும் இங்ஙனமே சிலகாலம் வைதிகதர்மமும் மிலேச்ச தர்மமும் மாறி மாறி குறையும் ஓங்கும். ஓங்கும் குறையும். நான்காவது பாதத்தில் அதர்மம் பூர்ண ஸ்வரூபத்துடன் விளங்கும். ஓங்கும். காலத்தில் மழை பொழியாது. அகாலத்தில் அதிக மழை பொழியும். தெய்வபக்தி குறையும். மநுஷ்ய சக்தியில் அளவுகடந்த நம்பிக்கை ஏற்படும். வேத தர்ம சாஸ்திரங்களை நம்பமாட்டார்கள். அவரவர் இஷ்டமே தர்மமாகும். யாகம் சிராத்தம் ஆந்ஹிகம் முதலியவைகளை அனுஷ்டிப்பவர் அரிது. அனுஷ்

டிப்பவரைப் பார்த்து நகைப்பார்கள். சிகை யக்ஞ உப விதம் தரிப்பது வீணென்பர். பொருளும் போகமுமே முக்யமெனக் கருதுவர். விவாஹம் வைதிக கர்மா எனக் கருதார். போகத்திற்காகவே மணம் என மதிப்பர்.

யாரும் எந்த ஜாதிப்பெண்ணையும் மணப்பர். பெண்கள் ஸிருஷ்டி அதிகமாகும். ஆண்களுக்கு வீர்யம் குறையும். இருபாலரும் உடலை ஸதா அலங்கரித்துக்கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பர். தம்பதிகளுக்குள் ஒற்றுமை இராது: பெரியோருக்கு சிறியோர், பெற்றோருக்குப் புத்திரர், குருவுக்கு சிஷ்யன், பதிக்கு மனைவி அடங்கி நடக்கமாட்டார்கள். மரியாதை நற்குணம் இராது. மிருக குணமே அதிகமாகும். பலமுள்ளவனே அரசன். அரசாங்கம் நியாய வழியில் ஆக்ஷி புரியாது. அளவுகடந்து வரியால் வீடோ நிலமோ வேண்டாம், வரி செலுத்தமுடியாதென பலர் அவைகளை விட்டுவிட்டு வேறு இடம் செல்வர். அதர்மத்தைத் தர்மமென கூசாமல் கூறுவர். துணிந்து செய்வர். ஸத்தியம் ஆசாரம் நியாயம் இவைகளை விட்டுவிட்டு அவரவர் செய்வதே சரி என வாதிப்பர். சிறந்த வித்யை மங்கும். ஸங்கீதம் நாட்டியம் நாடகம் அளவின்றி கௌரவிக்கப்படும். வீடுவீடாக கானமும் நாட்டியமும் நடைபெறும். துஷ்டர் ஆட்டக்காரர் நீசர் பாபி இவர்களே ஸபையிலும் அரசாங்கத்திலும் முதலிடம் பெறுவர். கற்பென்பது கர்நாடக விஷயம் எனக் கருதப்படும். ஆண் பெண் என்ற பேதம் உடையில் கூட இராது. பெண்களுக்கே பெருமையும் ஆதிக்யமும் இருக்கும். தீட்டு எச்சில் விழுப்பு என்பது இராது. அதர்மத்திற்கும் பாபத்திற்கும் எவரும் அஞ்சார். சொல்லில் நியாயம். செயலில் அநியாயம். முன்னோரை துவேஷிப்பர். கல்யாணம் ஆகாமலே பெண்கள் பிரஸவிப்பார்கள். பெற்ற குழந்தையை அநாதையாக விட்டுவிடுவர். ஸதா நோய்வாய்ப்பட்டு வாழ்க்கையில் இன்பமிராது. மனிதனோடு மநிதன், ஊரோடு ஊர், நாட்டோடு நாடு சண்டை புரியும். சாந்தி என்பது இராது. ஒருவரை ஒருவர் ஏமாற்றுவதே ஸாமர்த்யம் எனப்படும். பத்து வயதில் பெண்கள் பிரசவிப்பார்கள். இருபது வயதிற்கு மேல் எவரும் ஜீவித்திருக்கமாட்டார். உருவிலும் மிகக்

குறைவர். ஒரு புருஷன் பல பெண்களை மணப்பது அநியாயம் என்பர். ஒரு ஸ்த்ரீ இஷ்டமான பலரை மணப்பாள். தம்பதிகள் இஷ்டமானபோது பிறிவர். கூடுவர். சிகையைக் கத்திரிப்பார்கள். தலைமயிரை ஸதா அவிழ்த்து விடுவர். தந்தை தாய்க்கு சிராத்தம் செய்யமாட்டார். தேவாலய ஸொத்துகளை அபஹரிப்பர். தர்ம ஸொத்து அதர்மத்திற்குப் பயன் படுத்தப்படும். பெண்பிள்ளைகளை விலைக்கு விற்பார்கள். பணம் பெற்றே வேதசாஸ்திர காவ்ய பாடம் சொல்வர். பிராம்மணர் வேதசாஸ்திர ஆசாரங்களை விடுவர். மற்றவர் கைப்பற்றுவர். பிராம்மணன் சூத்ரனுக்கு சமயல் செய்வான். அவர்களுடன் ஸமமாக உட்கார்ந்து புஜிப்பான். பிராம்மண ஸ்திரீ நீச ஜாதி புருஷனையும் பிராம்மணன் நீசஸ்திரீயையும் மணப்பர். ராக்ஷஸர்கள் மனிதராகத் தோன்றி இத்தகைய அதர்மங்களைப் பிரசாரம் செய்வர்.

## கல்கி அவதாரம்.

வைதிக தர்மம் மிகக் கேவலமாகிவிட்டதைக் கண்டு பிரும்மா பகவானைத் துதிப்பார். "தேவர்களே! சம்பள கிராமத்தில் கச்யபர் விஷ்ணுயசஸ் என்ற பெயருடன் தோன்றப்போகிறார். அவர் வைதிக ஆசாரத்தை நன்கு அனுஷ்டிப்பார். விஷ்ணுலீலையை அவர் நூலாக எழுதி கதை கூறப்போவதைக் கண்டு கோபங்கொண்டு விஷ்ணுயசஸ்ஸையும் அவரது மனைவியையும் துஷ்டர் சிறையிடுவார்கள். விஷ்ணுகீர்த்தி என்ற அவரது மனைவியிடம் நான் மார்கழி மாதம் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியன்று இரவில் அவதரிப்பேன். உலகெலாம் சாந்தி உண்டாகும். எனது அவயவங்களே பதினெட்டு கல்பங்களாகத் தோன்றும். திரேதாயுகத்தில் ராமனாகவும், துவாபர யுகத்தில் கிருஷ்ணனாகவும் கலியில் ஆயிரத்து முப்பத்திரண்டு ஆண்டுகள் பாக்கி இருக்கும்போது கல்கியாகவும் அவதாரம் செய்வேன். ஒவ்வொரு கல்பத்திலும் இப்படி அவதாரங்கள் உண்டு. ஒவ்வொரு கல்பத்திலும் ஸ்ருஷ்டி க்ரமத்தில் மாறுதல் உண்டு என்பார்.

## ராதாகிருஷ்ண ஸ்வரூபம்.

பரமாத்மாவினிடம் ப்ரளயகாலத்தில் எல்லாம் ஒன்றாகச்சேரும். கிருஷ்ணனே கிருஷ்ணனாகவும் ராதையாக

வும் இரு உருவமெடுக்கிறார். அவர் பூமியில் அவதாரம் செய்யும் பொழுது பிருந்தாவநம் கோவர்த்தநம் முதலியவைகள் உண்டாகும். பத்து இந்திரியங்களின் அம்சங்கள், கோகுலம் வார்ஷபம் நாந்தம் பாண்டீரம் மாதுரம் வ்ரஜம் யாமுநம் மான்யம் சிரேயஸ்கம் கோபிகம் என்ற பத்து கிராமங்களாகும். அவைகளே பகவானுக்கு பிரியமான இடங்களாம். கிருஷ்ணனுடைய குணங்களே மூன்று கோடி கோபர்களானார்கள். ஸ்ரீதாமா முதலியவர் ஸாத்விகர். அர்ஜுநன் முதலியவர் ராஜஸர். கம்ஸாதிகள் தாமஸர். கிருஷ்ணனுடைய ஒவ்வொரு ரோமாவிலிருந்தும் ஒவ்வொரு அண்டம் உண்டாகின்றது.

**கோப சப்தத்தின் பொருள்;** கர்ம பூமியே கோ எனப்படும். அதே வேதம். அதே உலகம். அதை ரக்ஷிப்பவர் கோபர் எனப்படுவர்.

## கல்கி கிருதயுகத்தை ஆரம்பிப்பது.

கரத்தில் கத்தியேந்தி குதிரைமீதமர்ந்து மிலேச்சர்களை எல்லாம் கொல்வார் கல்கி. தீயினாலும் நீராலும் உலகெலாம் விழுங்கப்படும். கல்கியின் முகத்திலிருந்து பிராம்மணரும் பாஹுவிலிருந்து க்ஷத்திரியர்களும் துடையிலிருந்து வைச்யர்களும் காலிலிருந்து சூத்ரரும் உண்டாவார்கள். இருபத்தோரு கிஷ்கு (முழம்) அளவுள்ளவர்களாக மனிதர் இருப்பார்கள். யக்ஞத்தினால் தேவர்களை ஸந்தோஷப் படுத்துவார்கள். வைவஸ்வதமநு கல்கியை வணங்கி அயோத்யையில் ராஜ்யபாரம் செய்ய ஆரம்பிப்பார். கல்கிபகவானே பிரும்ம ஸத்ரம் என்ற ஒரு யாகம் செய்வார். கார்த்திகை மாத சுக்லபக்ஷம் நவமியில் குருவாரத்தன்று யக்ஞகுண்டத்திலிருந்து ஸத்யயுகம் உண்டாகும். அது அக்ஷய நவமி யாகும்.

பகவான் தர்மத்தை நிலைநாட்டிவிட்டு மறைந்தவுடன் பாதாளத்திலுள்ள அஸுரர் அனைவரும் தேவருடன்போர் புரிந்து இந்திரன் முதலியவர்களை ஹிம்ஸிப்பார்கள். அவர்கள் பகவானைத் துதிக்க அவர் ஹம்ஸரூபம் எடுத்து தனது தேஜஸ்ஸினால் அரக்கர்களை விரட்டி விதலலோகத்திற்கனுப்புவார். பூமியில் தர்மம் நான்கு பாதங்களுடன் இருக்கும்.

**ப்ரதி ஸர்க்க பர்வா முற்றிற்று.**

## உத்தர பர்வா 208 அத்யாயம்.

**नमः शिवाय सोमाय स गणाय स सूनवे ।**
**स वृषाय स शूलाय स कपालाय सेन्दवे ॥**

தேவியுடனும் கணங்களுடனும் புத்ரர்களுடனும் விருஷபத்துடனும் சூல கபாலங்களுடனுமுள்ள பரமசிவனுக்கு நமஸ்காரம்.

துவாபரயுகத்தின் முடிவில் பாரதப்போர் முடிந்து பட்டாபிஷேகம் செய்துகொண்டார் தர்மராஜன். பந்துக்களைக் கொன்றதால் ராஜ்யம் தனக்குப் பிடிக்கவில்லை என்றும் மநதிற்கு சாந்தி உண்டாகும்படி நல்ல புராணங்களைக் கூறும்படியும் வியாஸரை வேண்டினர். வியாஸர் பகவானுன வாஸுதேவனே கூறட்டும் என்றார். பரமாத்மா மாயை பிரகுருதி உலக ஸ்ருஷ்டி அண்டம் முதலியவைகளைக் கூறி தான் நாரதருக்கு மாயா தர்சநம் செய்துவைத்ததையும் கூறினர் கிருஷ்ணன். இதை தேவி பாகவதத்தில் காணலாம்.

### விசித்திரமான விபரீதமான வரம்.

பகவான் கிழ பிராமணனுகி நாரதருடன் ஒரு வைசியன் வீடு சென்றார். வீரபத்ரன் என்ற அவன் உயர்ந்த தனிகன். பகவானை அமரச்செய்து பிராமணரே! தாங்கள் ஏழை வீட்டில் சாப்பிடமாட்டீர்கள் என்றான். பகவான் ரொம்ப ஸந்தோஷமடைந்து உனக்கு புத்திரர்களும் பசு எருமைகளும் மேன் மேலும் விருத்தியாகட்டும் என்று வரமளித்துச் சென்றார். கோஸ்வாமி என்ற பிராம்மணனது வீட்டிற்குச் சென்றார். அவன் இவர்களை நன்றாக உபசரித்து அறுசுவை அன்னமளித்தார். பகவான் போகும்பொழுது இனி உனக்கு பூமி தான்யம் வேள்வி ஸந்தானம் முதலியவை இல்லாமலிருக்கட்டும் என வரம் தந்தார். நாரதர்; பகவன்! அன்னமளிக்காதவருக்கு ஸந்ததி பசு முதலியவை விருத்தியாக வரமளித்தீர். அன்னம் அளித்தவனுக்கு எல்லாமகலும்படி வரந்தந்ததேன்? என்று கேட்டார். ஸம்ஸாரத்தில் உழைத்து என்னை மறந்து மேன் மேலும் அவன் நரகம் செல்லவும், எல்லாவற்றையும்

இழந்து ஓயாமல் என்னையே உபாசித்து முக்தி பெறுவதற்காகவும் இவர்களுக்கு இப்படி வரம் தந்தேன் என்றார் பகவான்.

### கர்ப்ப ஜன்ம ஸம்ஸார துக்கம்.

மலை குகையில் அல்லது கடலில் அகப்பட்டவனைப் போல கருவிலுள்ள குழந்தை துன்பத்தை அனுபவிக்கின்றது. கருப்பையிலுள்ள நீரால் நினைக்கப்பட்டு இரும்பு பாத்திரத்தில் வைத்து தியால் கொளுத்தப்பட்டதுபோல் ஜீவன் தவிக்கிறது. பழுக்கக் காச்சிய ஊசியால் குத்தினால் எவ்வளவு துன்பமோ அதைப்போல் எட்டு பங்கு துன்பம் உண்டாகுகிறது. கர்ப்பத்தில் பிறக்கும்பொழுது கர்ப்பவாச துக்கத்தைப்போல் கோடிமடங்கு துன்பம் உண்டாகிறது. பாணத்தால் அடிக்கப்பட்டது போலும் ஆலையில் வைத்து கரும்பைப் பிழிவது போலும் யோநிதுவாரத்தில் துன்பமுண்டாகும். பிரஸவ வாயு பலாத்காரமாகத் தள்ள தலைகீழாகப் புரண்டு சார் பிழிந்தபின் கரும்பு சக்கை விழுவதுபோல் விழுகிறது உடல். பேசவாயின்றி குழந்தைநிலையில் ரோகத்தால் பீடை யமபயம் காம கோபங்கள், பசி தாஹம், தநம் தேடுவது, அதை ரக்ஷிப்பது செலவு செய்வது ஆகியவைகளில் உள்ள துன்பம், குழந்தைகளைப் பெற்று அவைகளால் உண்டாகும் துன்பம், நோயால் கிழத்தனத்தால் மரண பயத்தால் உண்டாகும் துன்பம், ஆகிய வைகளால் உடல் ஒரே துக்கமயமானது. ஸம்ஸாரத்தில் ஓய்வில்லாமல் ஸதா துன்ப முண்டாகிறது. ஆதலால் உடலாலும் வாக்காலும் மநதாலும் பாபம் செய்யாமல் நற்கருமங்களையே செய்யவேண்டும்.

மஹாபாதக உபபாதக ஸமபாதக என்ற பாபங்களை செய்தவர் யமயாதனை அனுபவிப்பார்கள். அறியாமல் செய்தபாபங்களை பிராயச்சித்தத்தால் அகற்றிக்கொள்ளலாம். புண்யம் செய்தவர்களுக்கு யமன் சாந்தனாக இருந்து உபசாரம் செய்கிறான். [கருட புராணத்தில் இந்த விஷயம் மிக விஸ்தாரமாகக் கூறப்படுகிறது].

### பிறவிக்கடலைக் கடக்கவழி.

கிடைக்கத்தகாதது மாநிட உடல். அதிலும் கூன் குருடு செவிடு இல்லாத உடல், வேதமோதத்தக்க பிறவி

முதலியவைகள் கிடைப்பது மிக்க துர்லபம். இங்குள்ள சுலோக கருத்துகளும் சில சொற்களும் விவேகசூடாமணி எனும் ஆதிசங்கரர் இயற்றிய நூலில் காணப்படுகின்றன. அழிவுள்ள உடலைக்கொண்டு அழிவுள்ள பொருளைத் தேடுவது வீண். அழிவுள்ள உடலைக் கொண்டு அழிவில்லா முக்தியைப் பெறுவதே விவேகமாகும். விருதம் உபவாஸம் நியமம் ஆசாரம் இவைகளைக் கொண்டு அழியாத நிலையைப் பெறலாம். ஆழமான பிறவிக்கடலைக்கடக்க இவைகளே தோணிகளாம். விரத உபவாஸ நியம ஆசாரமில்லாதவர் எந்த சுகத்தையும் அடைய முடியாது. நியமத்துடன் கூடியது விரதம்.

## வண்டி உண்ணு விரதம்.

சில ஸித்த புருஷர் மாறுவேஷம் பூண்டு பூமியில் உலக நன்மையை நாடி ஸஞ்சாரம் செய்வார்கள். அங்ஙனம் ஒரு ஸித்தர் ஸஞ்சரிக்கும்பொழுது, தற்செயலாக ஒரு பிராம்மணனைக் கண்டார். அவர் ஸித்தரை நோக்கி தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? என விசாரித்தார். ஸ்வர்க்கத்திலிருந்து வருவதாக அவர் கூற, அங்கு ரம்பை க்ஷேமமாக இருக்கிருளா? நானவளை விசாரித்ததாகக் கூறும் என்ருர். அவள் ஸௌக்யந்தான். உமக்கு அவளை எப்படித்தெரியும்? என்று கேட்க, நானவளழகைப்பற்றி கேட்டிருக்கிறேன். அவளை மணந்து கொள்ளவிரும்புகிறேன் என்ருர் பிராம்மணன். வித்யை அரியகலை, வீர்யம், கீர்த்தி, விரதம் ஆகிய இவைகளில் ஏதேனும் ஒன்ருவது இருந்தாலல்லவா அவளை அடையமுடியும்? உமக்கு இதில் என்ன யோக்யதை இருக்கிறது? என்ருர் ஸித்தர். நான் ஒரு விரதம் செய்கிறேன். அதற்கு சகட விரதம் என்று பெயர். அதாவது சகடம் எனும் வண்டியை யான் உண்பதில்லை என்ருர்? இதைக்கேட்டு நகைத்த ஸித்தர் ஐயா! இதென்ன விரதம்சகடத்தை யார்தான் உண்கின்றனர். அதை உண்ணுதது ஒரு விரதமா? என்ருர்.

ஆம். ஏதேனும் ஒன்றை உண்ணுமல் விடுவது விரதந்தானே. உயிர் போனுலும் நான் சகடத்தை உண்ணமாட்டேன் என்ருர். இவரைப் பரீக்ஷிக்க எண்ணினுர் ஸித்தர். பல நாளிவர்க்கு உணவு கிடைக்காதபடி செய்தார். அவர்

பசியால் வாடி விழுந்தபொழுது அவரருகே வந்து மாவினாலும் சர்க்கரையாலும் வண்டிபோல் செய்து இதை சாப்பிடும் இல்லையேல் இறந்துவிடுவீர் என்றார் ஸித்தர். உயிர் போனாலும் சகடத்தைப் பக்ஷிக்கமாட்டேன் என்றானவன். உடனே இந்திரன் ரம்பையுடன் பிரத்யக்ஷமாகி அவரை ஸ்வர்க்கத்திற்கழைத்துச் சென்றார். சகட விரதத்தால் ரம்பையை மணந்தாரவர். ஒரு யக்ஞ யாகமின்றி கேவல விரதத்தைச் செய்தவனுக்கே ஸ்வர்க்கமென்றால் நியமத்துடன் விரதத்தைக் கைகொண்டவருக்கு எதுதான் துர்லபம்? என இக்கதை விளக்குகிறது.

## விரதங்களின் பெயர்கள்.

இதுமுதல் எண்ணிறந்த விரதங்கள் கூறப்படுகின்றன. அவைகளின் பெயரைக் குறிப்பிட்டு விசேஷமான நியமங்களையும் கதைகளையும் பின்னற் சிறிது குறிப்பிடுவோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | திலக | விரதம் | 22 | அநந்த திருதீயா | விரதம் |
| 2 | அசோக | ,, | 23 | அக்ஷய்ய | ,, |
| 3 | கரவீர | ,, | 24 | அங்காரக **சதுர்த்தீ** | ,, |
| 4 | கோகிலா | ,, | 25 | விநாயகஸ்நபந | ,, |
| 5 | பிருஹத்தபோ | ,, | 26 | விநாயக சதுர்த்தீ | ,, |
| 6 | பத்ரோபவாஸ | ,, | 27 | சாந்திவிரத **பஞ்சமீ** | ,, |
| 7 | யமத்விதீயா | ,, | 28 | ஸாரஸ்வத | ,, |
| 8 | அசூன்யசயந | ,, | 29 | நாகபஞ்சமீ | ,, |
| 9 | மதூக **திருதீயா** | ,, | 30 | ஸ்ரீ பஞ்சமீ | ,, |
| 10 | மேகபாலீ | ,, | 31 | விசோக **ஷஷ்டீ** | ,, |
| 11 | ரம்பா | ,, | 32 | கமல ,, | ,, |
| 12 | கோஷ்பத | ,, | 33 | மந்தார ,, | ,, |
| 13 | ஹரிதாலீ | ,, | 34 | லலிதா ,, | ,, |
| 14 | லலிதா திருதீயா | ,, | 35 | கார்த்திகேய ,, | ,, |
| 15 | அவியோக | ,, | 36 | விஜய **ஸப்தமீ** | ,, |
| 16 | உமாமஹேச்வர | ,, | 37 | ஆதித்ய மண்டலவிதி | ,, |
| 17 | ரம்பாவிரத | ,, | 38 | திரயோதச வர்ஜ்யஸப்தமீ | |
| 18 | ஸௌபாக்யாஷ்ட திருதீயா | | 39 | குக்குட மர்க்கடீ | ,, |
| 19 | ரஸகல்யாணினீ | ,, | 40 | உபய ஸப்தமீ | ,, |
| 20 | ஆர்த்ராநக்தகரீ | ,, | 41 | கல்யாண | ,, |
| 21 | சைத்ரபாத்ரபதமாகத்ரிதி | | 42 | சர்க்கரா | ,, |

| | | |
|---|---|---|
| 43 | கமலா | விரதம் |
| 44 | சுப ஸப்தமீ | ,, |
| 45 | ஸ்நபந | ,, |
| 46 | அசலா | ,, |
| 47 | புத **அஷ்டமீ** | ,, |
| 48 | ஜன்மாவ்ஷ்டமீ | ,, |
| 49 | தூர்வாவ்ஷ்டமீ | ,, |
| 50 | கிருஷ்ணாவ்ஷ்டமீ | ,, |
| 51 | அநகாவ்ஷ்டமீ | ,, |
| 52 | ஸோமாவ்ஷ்டமீ | ,, |
| 53 | பில்வ **நவமீ** | ,, |
| 54 | த்வஜ | ,, |
| 55 | உல்கா | ,, |
| 56 | தசாவதார தசமீ | ,, |
| 57 | ஆசாதசமீ | ,, |
| 58 | தாரக **த்வாதசீ** | ,, |
| 59 | அரண்ய | ,, |
| 60 | ரோஹிணீ சந்த்ர | ,, |
| 61 | ஹரிஹரஹிரண்யகர்ப்ப<br>பிரபாகர அவியோகவ்ரத | |
| 62 | கோவத்ஸ துவாதசீ | ,, |
| 63 | சயந உத்தாபந | ,, |
| 64 | நீராஜந | ,, |
| 65 | பீஷ்ம பஞ்சக | ,, |
| 66 | மல்லத்வாதசீ | ,, |
| 67 | பீமத்வாதசீ | ,, |
| 68 | சிரவணத்வாதசீ | ,, |
| 69 | விஜய சிரவண | ,, |
| 70 | ஸம்பிராப்தி | ,, |
| 71 | கோவிந்த | ,, |
| 72 | அகண்ட | ,, |
| 73 | மநோரத | ,, |
| 74 | உல்கா | ,, |
| 75 | ஸுகிருத | ,, |
| 76 | தரணீவ்ரத | ,, |
| 77 | விசோக த்வாதசீ | ,, |
| 78 | விபூதி துவாதசீ | ,, |
| 79 | மதந துவாதசி | விரதம் |
| 80 | அபாதக | ,, |
| 81 | மந்தாரநிம்பார்க்க, கரவீர | |
| 82 | யமதர்சந **திரயோதசீ** | ,, |
| 83 | அநங்க | ,, |
| 84 | பாலி விரத | ,, |
| 85 | ரம்பா | ,, |
| 86 | ஆக்நேயீ **சதுர்தசி** | ,, |
| 87 | அநந்த | ,, |
| 88 | சிரவணிகா | ,, |
| 89 | நக்தோபவாஸ விதாந | ,, |
| 90 | சிவசதுர்தசீ | ,, |
| 91 | பலதியாக | ,, |
| 92 | விஜய**பௌர்ணமாஸீ** | |
| 93 | வைசாகீ கார்திகீமாகீ | ,, |
| 94 | யுகாதி திதி | ,, |
| 95 | வடஸாவித்ரி | ,, |
| 96 | கிருத்திகாவிரத | ,, |
| 97 | பூர்ணமநோரதா | ,, |
| 98 | விசோக பூர்ணிமா | ,, |
| 99 | அனந்தவிரத | ,, |
| 100 | ஸாம்பராயணீ | ,, |
| 101 | நக்ஷத்திர புருஷ | ,, |
| 102 | சிவநக்ஷத்திர புருஷ | ,, |
| 103 | ஸம்பூர்ண | ,, |
| 104 | காமதமநவேச்யா | ,, |
| 105 | விருந்தாக | ,, |
| 106 | கிருஹநக்ஷத்ர | ,, |
| 107 | சனைச்சர விருத | ,, |
| 108 | நவகிருஹ | ,, |
| 109 | ஸங்க்ராந்தி உத்யாபந | ,, |
| 110 | விஷ்டிவிருத | ,, |
| 111 | அகஸ்த்யார்க்ய | ,, |
| 112 | அபிநவ சந்தரார்க்ய | ,, |
| 113 | சுக்ரகுரு அர்க்ய | ,, |
| 114 | **விருத** பஞ்சாசீதி | ,, |
| 115 | மாகஸ்நாந | ,, |

116 நித்யஸ்நாநவிதி விரதம்
117 ருத்ரஸ்நாந ,,
118 கரஹணஸ்நாந ,,
119 அபரஸாம்பராயணீய ,,
120 வாபீகூபதடாகவிதி ,,
121 விருக்ஷோத்யாபந ,,
122 தேவபூஜாபல ,,
123 தீபதாநவிதி ,,
124 விருஷோத்ஸர்க்க ,,
125 பால்குந பௌர்ணமீ ,,
126 ஆந்தோளிகவிதி ,,
127 தமநக ஆந்தோலக ரதயாத்ராவிதி ,,
128 மதநமஹோத்ஸவ ,,
129 பூதமாத்ரு ,,
130 சிராவண பூர்ணிமா ரக்ஷாபந்தநவிதி ,,
131 மஹாநவமீ ,,
132 மஹேந்த்ரத்வஜ ,,
133 தீபாளிகோத்ஸவ ,,
134 நவக்ரஹலக்ஷவிதி ,,
135 கோடிஹோமவிதி ,,
136 மஹாசாந்திவிதி ,,
137 கணநாதசாந்தி ,,
138 நக்ஷத்ரஹோம ,,
139 அபராதசதவ்ரதம் ,,
140 காஞ்சநபுரீ ,,
141 கந்யாப்ரதாநமஹிமை ,,
142 பிராம்மணசுச்ருஷா ,,
143 விருஷதாநவிதி ,,
144 பிரத்யக்ஷகோதாந ,,
145 திலதேநு ,,
146 ஜலதேநு ,,
147 கிருததேநு ,,
148 லவணதேநு ,,
149 ஸ்வர்ணதேநு ,,
150 ரத்நதேநு ,,
151 உபயமுகீகோதாந விரதம்
152 கோஸஹஸ்ரதாந ,,
153 கபிலாதாந ,,
154 மஹிஷீதாந ,,
155 அஜதாந ,,
156 பூதாந ,,
157 ஸுவர்ணபிருதிவீ ,,
158 ஹலபங்க்திதாந ,,
159 ஆபாகதாந ,,
160 கிருஹதாநவிதி ,,
161 அன்னதாநமஹிமை ,,
162 ஸ்தாலீதாந ,,
163 தாஸீதாந ,,
164 பிரபா (தண்ணீர்பந்தல்
165 வித்யாதாந ,,
166 துலாபுருஷதாந ,,
167 ஹிரண்யகர்ப்ப ,,
168 பிரும்மாண்ட ,,
169 கல்பவிருக்ஷ ,,
170 கல்பலதா ,,
171 கஜரதஅச்வரத ,,
172 காலபுருஷ ,,
173 ஸப்தஸாகர ,,
174 மஹாபூதகட ,,
175 சய்யாதாந ,,
176 ஆத்மபிரதிகிருதி ,,
177 ஹிரண்யாச்ரவத ,,
178 ஹிரண்யாச்வ ,,
179 கிருஷ்ணாஜிந ,,
180 ஹேமஹஸ்திரத ,,
181 விச்வசக்ர ,,
182 புவநபிரதிஷ்டாமஹிமா
183 நக்ஷத்ரதாந ,,
184 திதிதாந ,,
185 வராஹதாந ,,
186 தான்யபர்வததாந ,,
187 லவண பர்வத ,,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 188 | குட (வெல்லம்) | விரதம் | 193 | ரத்நாசல | விரதம் |
| 189 | ஹேமாசல | ,, | 194 | ரௌப்யாசல | ,, |
| 190 | திலாசல | ,, | 195 | சர்க்கராசல | ,, |
| 191 | கார்பாஸாசல (பஞ்சு) | ,, | 196 | ஸதாசாரதர்ம | ,, |
| 192 | ஆஜ்யாசல | ,, | 197 | ரோஹிணீசந்த்ரசயந | ,, |

இப்படி பல விரதங்களைக் கூறினார். இவைகளில் வெகு சிலவே அநுஷ்டாநத்தில் இருக்கின்றன. சிலவை வடதேசத்திலும் சிலவை தென் தேசத்திலும் அநுஷ்டிக்கப்படுகின்றன. விரதங்களுடன் கூட தாநம் ஸ்நாநம் முதலியவைகளையும் சேர்த்துக் கூறுகிறார். இந்த விரதங்களை எந்தெந்த காலத்தில் செய்வது? யார் யார் செய்வது? எப்படிச் செய்வது? என்ன பலன் உண்டாகும்! என்பதையும் சில விரதங்களைச் செய்து பயன் பெற்றவர் கதையையும் வர்ணிக்கிறார்.

## விரதங்களில் கவனிக்கவேண்டிய நியமம்.

ஆண் பெண் இருவர்களும் சேர்ந்தே விருதங்களை அநுஷ்டிக்க வேண்டும். பதியின் உத்தரவுபெற்று ஸுமங்கலிகளும் செய்யலாம். விதவைகள் செய்யலாம். சில விரதங்களை அவச்யம் செய்யவேண்டும். அவை நித்யமெனப்படும். ஏகாதசி பிரதோஷம் சிவராத்ரி ரிஷி பஞ்சமீ இவைகளைச் செய்தே ஆகவேண்டும். சில பலனை நாடி செய்யவேண்டிய விரதங்கள். ஒவ்வொரு விரதத்திற்கும் உத்யாபநம் செய்யவேண்டும். அதைச் செய்யாமல் இறந்தால் நரகமும் மறு பிறவியில் நோயும் உண்டாகும். அப்படி இறந்தவருடைய புத்ரன் அல்லது புத்ரி அதைச் செய்ய வேண்டும். தனக்காக வேறு விரதமும் செய்ய வேண்டும். அதிலிதைசேர்த்தும் செய்யலாம். தநமுள்ளவர் தநலோபத்தால் குறைத்துச் செய்யக்கூடாது. ஏழைகள் ஸ்வல்பமாகச் செலவு செய்தாவது விரதம் செய்ய வேண்டும். விரத திநத்தில் காலையில் ஸ்நாநம் செய்து விரதம் நிர்விக்நமாக முடியவேண்டுமென்று சுலோகம் சொல்லி பகவானை வேண்டிக்கொள்ளவேண்டும். விதிப்படி விக்ரஹங்களை ஸுவர்ணத்தால் செய்யமுடியாதவர் வெள்ளியால் செய்யலாம். விரத அநுஷ்டாந திநத்தில் உபவாஸமிருந்து இரவு கண்விழித்து அந்த விரத மாஹாத்மியத்தைக்கேட்க வேண்டும். மறுநாள் பிராம்மணர்களுக்கு

அன்னமளித்து தக்ஷிணை தாம்பூலம் தந்தபின்பே புஜிக்க வேண்டும். தன் குருவுக்கு முதல் தாநம் அளிக்கவேண்டும். வேதமறிந்தவரும் ஏழையும் குடும்பியுமாயிருக்கும் வேதியருக்கே தாநம் செய்யவேண்டும். விரத திநத்தன்று வெளியில் போகக்கூடாது. காம கோபம் ஒருவரை நிந்திப்பது பொய் கூறுவது தாம்பூலம் தரிப்பது சிருங்காரத்தை நினைப்பது எண்ணெய் தேய்த்துக்கொள்வது வபநம் பற்குச்சியால் பல் விளக்குவது, வம்பு பேசுவது பிறர்மீது அபவாதங்கூறுவது அழுவது சிறிப்பது முதலியவைகளை விலக்கவேண்டும்.

## பத்ர விரத மஹிமை.

மார்கிழி பங்குனி ஆடி புரட்டாசி ஆகிய நான்கு மாதங்களிலும் சுக்ல ப்ரதமைகளில் உபவாஸமிருந்து பக்தியுடன் நான்கு வர்ணத்தாரும் புருஷர்களும் பெண்களும் இதைச் செய்ய வேண்டும். முதல் மாதத்தில் விஷ்ணு என்ற பெயரைக்கூறி அவரது திருவடிகளை ஷோடச உபசார பூஜைகளால் அர்ச்சிக்க வேண்டும். இரண்டாவது மாதத்தில் அச்யுதன் என்ற நாமாவைக்கூறி அவரது நாபியைப் பூஜிக்கவேண்டும். மூன்ருவது மாதத்தில் அநந்தன் என்ற பெயருடன் அவரது மார்பைப் பூஜிக்கவேண்டும். நான்காவது மாதத்தில் ஹ்ருஷீகேச என்ற பெயருடன் அவரது சிரஸ்ஸைப் பூஜிக்கவேண்டும். ஒவ்வொரு மாதத்திலும் பிரதமைமுதல் சதுர்த்திவரை உபவாஸமிருந்து ஒவ்வொரு மாதத்திற்கும் பிரதாநமாகக் கூறிய நாம அவயவம் இவைகளைப் பூஜிக்க வேண்டும். ஓராண்டில் பதினறு நாள் உபவாஸமும் பூஜையும் செய்ய வேண்டும். இந்த விரதத்தால் பூர்வ ஜன்ம அறிவும் ஸுவர்ண லாபமும் கிடைக்கும்.

## ஸஞ்ஜயனும் ஸ்வர்ணஷ்டீவியும்.

குசாவதி நகரில் ஸஞ்ஜயன் என்று ஒரு வேந்தனிருந்தான். நாரதரும் பர்வதரும் ஒருநாள் ராஜ ஸபைக்கு வந்தனர். அழகிற்சிறந்த அரச கன்யகை அங்குவந்தாள். அவளைக்கண்டு மோஹமடைந்த இருவரும் இப்பெண்ணை எனக்குக்கொடு என்று வேண்டினர். யாருக்குக் கொடுப்பது? இருவரும் தேவரிஷிகள். அரசன் ஒரு யுக்தி செய்தான்.

சிறித்தாலும், அழுதாலும், ஜல மலங்களைக் கழித்தாலும் ஸுவர்ணத்தைக் கக்கக்கூடிய ஆண் குழந்தை எனக்கு உண்டாகும்படி அருள்புரிபவருக்கே எனது பெண்ணைத் தருவேன் என்ருன் மன்னன். நாரதர் அங்ஙனமே அநுக்ரஹம் செய்து பெண்ணை மணந்து சென்ருர். இதைக்கண்டு கோபங்கொண்ட பர்வதர் நாரதரை ஸ்வர்க்கம் செல்ல சக்தி இல்லாதவராகவும் பிறக்கும் புத்ரனைத் திருடர் கொல்வர் என்றும் சாபங் கொடுத்தார். பர்வதரே! விவாஹம் ஆகும்வரை கன்யகையை எவரும் கோரலாம். நான் அவளைக்கோரினேன், அவளும் விருப்புடன் என்னை மணந்தாள். ஆஸூயையால் நீர் சாபங் கொடுத்ததால் உமக்கும் ஸ்வர்க்கம் செல்லும் சக்தி இல்லாமல் போகட்டும். இறந்த குழந்தையை யான் பத்ரவிரத பலத்தால் எழுப்புகிறேன் என்ருர்.

நாரதர் ராஜ குமாரியை மணந்தார். ஸஞ்ஜயனுக்கும் ஒரு குழந்தை பிறந்தது. அவன் கோரியபடி ஒவ்வொரு ஸமயமும் ஸுவர்ணத்தைக் கக்கியது. பர்வதரின் சாபம் பலிக்காமலிருக்க மிக ஜாக்ரதையாக குழந்தையைக் காத்து வந்தான் அரசன். வேதியரது சாபபலத்தால் காவலாளிகளையும் கொன்று திருடர்கள் குழந்தையின் வயிற்றில் ஸுவர்ணமிருக்கும் என கருதி குழந்தையைக் கொன்றனர். அதைத்தேடி எடுத்து அரசன் கதறியபோது நாரதர் பத்ரவிரத புண்யத்தால் அக்குழந்தையை எழுப்பினுர். ஸ்வர்க்கம் செல்ல சக்தியையும் பெற்ருர். ஸகல பிராணிகளுடைய சொற்களையும் அறியும்படியான சக்தியும் உண்டாகும் அதனுல், ஸஞ்ஜயனும், ஸ்வர்ணஷ்டீவி என்ற அவனது புத்திரனும் இதைச் செய்து ஸகல பாக்யத்தையும் அடைந்தனர்.

## அக்ஷய்ய திருதீயா விரதமும் கதையும்.

வையாசி சுக்லபக்ஷ திருதியை அக்ஷய திருதியை எனப்படும். அழிவில்லா பலனைத் தருவதால் இப்பெயருண்டானது. அன்று செய்யும் ஜபம் பூஜை தானம் எல்லாம் அழியாப் பலனைத்தரும்.

சாகல நகரிலே தர்மன் என்ருேர் வைச்யனிருந்தான். அவன் ஸத்திய சிலன். தேவப்ராம்மண பூஜை செய்ப

வன். ஒரு ஸமயம் அக்ஷய்ய திருதியை பற்றி புராணம் சொல்வதைக் கேட்டான். கங்காஸ்நாநம்செய்து அன்று முதல் தீர்த்த கலசம் பாநக கலசம் தான்ய கலசம் இவைகளை தாநம்செய்து வந்தான். மனைவி வீட்டிலுள்ள எல்லாவற்றையும் தாநம் செய்து வந்தால் நாம் எப்படி வாழ்வது? என்றாள். அதற்கு செவிசாய்க்காமல் தாநம் செய்து வந்தான். இந்த புண்யத்தால் பகவானது திருவடியை நினைத்துக்கொண்டே இறந்தான். குசாவதி என்ற நகர மன்னனுக்குமகனாகப்பிறந்தான். வயதான பின் முறையுடன் அரசாண்டு அப்பொழுதும் அக்ஷய்ய திருதீயாவிரதம் செய்து வந்தார். முடிவில் வைகுண்டம் சென்றார்.

## நாக பஞ்சமீ.

நாகபஞ்சமியன்று புத்தில் பாலைவிட்டு ஸர்ப்பத்தை பூஜிக்க வேண்டும். வாஸுகி தக்ஷகன் காலிகன் மாணி பத்ரகன் திருதராஷ்ட்ரன், ரைவதகன் கார்கோடகன் தநஞ் ஜயன் இவர்களைப் பூஜிக்க வேண்டும். அன்று பூஜை செய்த பக்தர்களுக்கும் அவர்களது ஸந்ததிக்கும் பாம்பி னால் பயம் உண்டாகாதபடி அருள் புரிவார்கள். அந்த பஞ்சமி அன்றுதான் ஸர்ப்பங்களை நாசம் செய்யும் ஸர்ப்பயாகம் முடிந்தது. கத்ரு அளித்த சாபமும் முடிவு அடைந்தது. அதனால்தான் நாகபஞ்சமி விரதம் செய்பவ ருக்கு ஸர்ப்ப பயமில்லை.

தக்ஷனது பெண்களான கத்ரு விநதா என்பவர்கள் கச்யபருடைய மனைவிகள். உச்சைச்ரவஸ் என்ற வெண் குதிரையைத் தூரத்திலிருந்து பார்த்தார்கள். கத்ரு! ஒற்றைக்கண்ணுள்ள நான் அக்குதிரையின் வால் மாத்ரம் கருப்பாக இருக்கிறதென கூறுகிறேன். இரண்டு கண் ணுள்ள நீ எப்படிக் காண்கிறாய்? என்றாள். விநதை உள்ளபடியே அது பூர்ணமாய் வெண்ணிறமுள்ளதென் றாள். நாளையதிநம் இருவரும் சென்று பார்ப்போம். ஜயித்தவருக்குத் தோற்றவர் அடிமையாகவேண்டும் என பந்தயம் வைத்தனர். கத்ரு தனது புத்திரர்களான பாம்புகளை அழைத்து அதன் வாலில் தொங்கிக்கொண்டு கருப்பாகத் தோற்றும்படி செய்யுங்களென்றாள். அப்படி செய்ய மறுத்தவைகளை ஸர்ப்ப யாகத்தில் மாளும்படி

சபித்தாள். சிருங்கி எனும் முநிவரது சாபத்தினுல் பரீக்ஷித்தைத் தக்ஷகன் கடித்தான். ஜநமேஜயன் கோபங்கொண்டான். தந்தையைத் தீண்டிய ஸர்ப்ப ஜாதியையே ஒழிக்க எண்ணி ஸர்ப்ப யாகம் செய்தான். அதில் விழ்ந்து ஸர்ப்பங்கள் மாண்டன. ஜரத்காருவின் புத்திரரான அஸ்திகர் ஸர்ப்ப யாகத்தை நிறுத்தும்படி செய்தார். [இந்தக்கதையைப் பெரும்பாலும் எல்லா புராணங்களிலும் காணலாம்.]

யாகம் பஞ்சமியன்று நிறுத்தப்பட்டது. ஆதலால் நாகபஞ்சமி என பெயர் உண்டானது. இதைச்செய்பவரது குடும்பத்தில் பாம்பினுல் மரணம் ஏற்படாது. பாம்பு தீண்டி இறந்தவனது நற்கதியை நாடி அவனது புத்திரனே சகோதரனே நாகபஞ்சமி விருதம் அனுஷ்டிக்க வேண்டும். நாராயண பலியும் விருஷோத் ஸர்ச்கமும் செய்தால் தான் இறந்தவருக்கு நற்கதி உண்டாகும்.

"ஓம் குருகுல்லே ஹூம்பட் ஸ்வாஹா"

இந்த மந்திரத்தை குருமுகமாக உபதேசம் பெற்று அக்ஷர லக்ஷம் ஜபம் செய்தால் எத்தகைய ஸர்ப்ப விஷமும், உடனே அகலும்.

## குக்குட மர்க்கட விரதம்.

லோமசர் எனும் முநிவரை வரவேற்று தேவகி தனது ஆறுபுத்ரர்களையும் கம்ஸன் கொன்றதால், தனக்கு தீர்க்காயுஸ் உள்ள ஒரு புத்திரன் வேண்டும். அதற்கு என்ன புண்யம் செய்யவேண்டும்? என பிரார்த்தித்தாள். சந்தர முகியின் சரிதத்தைக்கூறி ஷ விரதத்தைச் செய்யும்படி கூறினுரவர். அங்ஙனமே செய்து அவள் தீர்க்காயுஸ் உள்ள ராமகிருஷ்ணர்களைப் பெற்ருள். அயோத்யா அதிபதியான நகுஷன் மனைவி சந்த்ர முகியும் புரோஹிதரின் மனைவி மாநமாநிகையும் மிக நேசத்துடன் வாழ்ந்தனர். ஒரு ஸமயம் ஸரயூ நதியில் பலஸ்திரீகள் ஒரு விரதத்தைச் செய்து நோம்புக் கயிற்றை அணியக்கண்டார்கள். அந்திக்கயிறு பார்வதி பரமசிவ ஸ்வரூபமானதால் அதை இறக்கும்வரை கரத்தில் தரித்திருக்கவேண்டும் என்ருர்கள். தாங்களும் அதை அப்படியே தரிப்பதாகக்கூறி கயிற்றை வாங்கிக்கொண்டார்கள் இவர்கள்.

அதை ஸ்நாநம் செய்தபின் தரிப்பதாக எண்ணி கரையில் வைத்துவிட்டு ஸ்நாநம் செய்தார்கள். பிறகு அதை மறந்து விடு சென்றனர். அந்த பாபத்தால் இறந்தபின் சந்திரமுகி குரங்காகவும், மாநமாநிகா கோழியாகவும் பிறந்தார்கள். அடுத்தஆண்டு அந்த விரத திநத்தில் கோழியும் குரங்கும் இறந்தன. குரங்கு மறுபடியும் ஈச்வரி என்ற ராஜகன்யகையாகப்பிறந்து பிருதிவிநாதனை மணந்தாள். அவளுக்கு ஒரு புத்ரன்பிறந்து ஒன்பதுவயதில் இறந்து விட்டான். கோழியாக இருந்தது புரோஹிதரது மனைவியானாள். அவளுக்கு எட்டு புத்ரர்கள் இருந்தனர். இப்பிறவியிலும் இருவரும் தோழிகளாக இருந்ததுடன் முற்பிறவியின் நியாபக முள்ளவளாக இருந்தாள். ஒரே புத்ரனைப் பெற்று அதுவும் இறந்தபோது புத்ர சோகத்தால் தபிக்கும் தோழியை ஸமாதானப் படுத்த அவள் தனது எட்டு புத்ரர்களுடனும் அவளிடம் வந்தாள். குழந்தைகளுடன் ஸந்தோஷமாக அவளிருப்பதைக் கண்டு, அம்மா! நீ என்ன புண்யம் செய்தாய்! பெற்ற குழந்தைகளுடன் நன்றாக இருக்கிறாய்! நான் என்ன பாபம் செய்தேனோ? பெற்ற ஒரே புத்ரனையும் இழந்தேன் என்று வருந்தினாள். பூர்வ ஜன்மாவில் செய்த விரதானுஷ்டாநத்தை நான் இப்போது செய்து நோன்பு கயிற்றை அணிந்திருக்கிறேன். நீ அதைச்செய்து கயிற்றை அணிந்துகொள் என்றாள். அவளும் விரதத்தைச் செய்து ஸத்புத்ரர்களைப் பெற்றாள். நோம்பு கயிற்றை அணிய மறந்து குக்குடமாகவும் மர்க்கடமாகவும் பிறந்ததால் அன்றுமுதல் அவர்களது பெயர் கூறப்படுகிறது.

## புதாஷ்டமீ விரதம்.

கிருத யுகத்தில் இளன் என்ற அரசன் வேட்டையாட வநஞ்சென்றான். சிவசாபத்தால் அங்கு செல்பவர் அனைவரும் பெண்ணாவர் என்பதை இளன் அறியாமல் அங்கு நுழைந்தான். உடனே பெண்ணாகிக் கதறிக்கொண்டிருந்தான். தற்செயலாக அங்கு வந்த புதன் இளையை மணந்து புரூரவஸ் என்பவனை உண்டு பண்ணினான். அதுமுதல் அந்த திநம் புதாஷ்டமீ என்ற புண்யகாலமாயிற்று. ஒரு ஸமயம் விதேஹராஜனைச் சத்ருக்கள் கொன்றார்கள். அவர் மனைவியான ஊர்மிலா கை குழந்தைகளுடன் ஊர்

ஊராகச்சென்று பிச்சைஎடுத்து ஜீவித்து வந்தாள். அவந்திபுரியில் ஒரு பிராமணன் வீட்டில் அரிசி கோதுமை முதலியவைகளை அறைத்துக் கொடுத்து ஜீவித்தாள். திடீரென்று அவளும் இறக்க வேதியர் வீட்டிலிருந்து வளர்ந்த ராஜகுமாரனுக்கு நற்காலம் வந்தது. பகைவன் மாண்டான். ஸிம்மாஸனத்திற்கு ஏற்றவனைத் தேட பட்டத்து யானை கிளம்பிற்று. இந்த ராஜகுமாரனை மாலையிட்டு அழைத்துச் சென்றது. *அவனுக்கு முடி சூட்டினார்கள். விதேஹ ராஜகுமாரன் தனது ஸோதரியை அன்புடன் காப்பாற்றி வளர்த்து வரந்தேடினான். மிகஅழகும் குணமும் வாய்ந்த சியாமாளா எனும் ஸோதரிக்கேற்ற வரன் யமதர்மராஜனே என நிச்சயித்து மணம் செய்வித்தான். அவளுடன் இல்லறம் நடத்திய யமதர்மன் குடும்ப பாரத்தை அவளிடமளித்து உன்னைச் சார்ந்தவருக்கும் மற்றவருக்கும் வேண்டியதைச் செய் என்றார். ஏழு கூடுகளைத் தந்து இதை எப்போதும் திறக்காதே என்றார். ஒரு ஸமயம் சியாமளா முதல் கூட்டைத் திறந்தாள். அதில் தப்ததைலம் எனும் நரகத்தில் தன் தாய் தவிப்பதைக் கண்டாள். இரண்டாவது கூட்டில் சிலாதல்ப நரகத்திலும் மூன்றாவதில் கிருகச நரகத்திலும் நான்காவதில் ச்வாபதாசீ நரகத்திலும் ஐந்தாவது கூட்டில் ஸந்தம்ச நரகத்திலும் ஆறாவது கூட்டில் இக்ஷுயந்திர நரகத்திலும் ஏழாவதுகூட்டில் பூதிகந்த என்ற நரகத்திலும் கஷ்டப்படுவதைக் கண்டாள்.

நாத! இஃதென்ன கஷ்டம்! என் தாய் என்ன பாபம் செய்தாள்? என வினவினாள். உன்னையும் உனது உடன்பிறந்தானையும் காக்க பிராம்மணர் வீட்டிலிருந்து கோதுமையைத் திருடினாள். அந்த பாபத்திற்காக இந்த சிக்ஷை தந்தோம் என்றார். எதனால் இந்த நரகம் அகலும் என்று கேட்க நீ ஏழாவது ஜன்மாவில் செய்தபுதாஷ்டமீ விருத பலனைத் தானம்செய் என்றார். அங்ஙனமே செய்து சியாமளா தனது தாயான ஊர்மிளையை ஸ்வர்க்கத்திற்கனுப்பினாள்.

**பில்வாஷ்டமீ:** கடலைக்கடைந்து அமிருதம் உண்டான போது தேவரும் அஸுரரும் எனக்கு எனக்கென போரிட்டனர். பகவான் மோஹினீ உருவமெடுத்து வந்தார்.

அதைக்கண்ட லக்ஷ்மீதேவி பில்வமரத்தினடியில் நின்று வேடிக்கைப் பார்த்தாள். ஸ்ரீ தேவீ அங்கு நின்ற தினம் அஷ்டமி ஆதலால் பில்வாஷ்டமீ என்று பெயர் உண்டானது. பில்வமரத்திற்கும் ஸ்ரீவிருக்ஷம் என்று பெயர் தோன்றிற்று. அன்று லக்ஷ்மியுடன் பில்வமரத்தைப் பூஜிப்பவர் எல்லா நன்மைகளையும் பெறுவர்.

### கோவின் மஹிமையும் அதனுடலில் தேவரும்.

பாற்கடலைக் கடைந்தபோது அங்கிருந்து நந்தா ஸுபத்ரா ஸுரபீ ஸுசிலா பகுலா என்ற ஐந்து காம தேனுக்கள் உண்டாயின. ஜமதக்நி பரத்வாஜர் வஸிஷ்டர் அஸிதர் கௌதமர் என்ற மஹர்ஷிகள் ஐவரும் அவைகளை ஏற்றுக்கொண்டனர். கோமயம் கோ மூத்ரம் கோரோசனை கோக்ஷீரம், கோவின் தயிர் கோவின் நெய் இவ்வாறும் மிக பரிசுத்தமானவை. கோமயத்திலிருந்து சிவனுக்குப் பிரியமான பில்வமரம் தோன்றிற்று. தாமரை விதைகளும் உண்டாயின. கோமூத்திரத்திலிருந்து குக்குலு என்பதுண்டாயிற்று. நெய்யிலிருந்து அமிருதம் உண்டானது. பாலிலிருந்து உலக பீஜம் உண்டானது. ஒரே இடத்திலிருந்து பிராம்மணனும் பசுவும் உண்டானார்கள். பிராம்மணனிடம் மந்திரமும் பசுவினிடம் ஹவிஸ்ஸும் அமைந்தது. மந்திரம் கூறி ஹவிஸ்ஸை அக்நியில் ஹோமம் செய்தால் அது தேவர்க்கு அமிருதமாகும். அவர்கள் மழையை உலகிற்களிக்கின்றனர்.

கோவினிடம் ஆறு அங்கங்களுடன் வேதம் அமர்ந்திருக்கிறது. ஸகல தேவர்களும் தங்கி இருக்கின்றனர். உமாதேவியும் பூதேவியும் கோரூபமெடுத்தனர்.

| | |
|---|---|
| 2 கொம்புகளின் அடியில் | பிரும்மா விஷ்ணு |
| 2 கொம்புகளின் நுனியில் | ஸர்வ தீர்த்தங்கள் |
| 2 கொம்புகளுக்கிடையே | ஸதாசிவன் |
| நெற்றியில் | கௌரீதேவி |
| மூக்குத்தண்டில் | ஷண்முகன் |
| 2 மூக்கு த்வாரங்களில் | கம்பள அச்வதரநாகர்கள் |
| 2 காதுகளில் | அச்விநீ தேவர்கள் |
| 2 கண்களில் | சந்திர ஸூர்யர்கள் |
| பற்களில் | வஸுக்கள் |

| | |
|---|---|
| நாக்கில் | வருணன் |
| தொண்டையில் | ஸரஸ்வதி |
| 2 கன்னங்களில் | யமனும் யக்ஷனும் |
| 2 உதடுகளில் | 2 ஸந்தியைகள் |
| கழுத்தில் | தேவேந்திரன் |
| கொண்டையில் | ராக்ஷஸர்கள் |
| பக்கங்களில் | த்யௌர்தேவதை |
| 4 கால்களில் | 4 பாதமுள்ள தர்மம் |
| குளம்பு நடுவில் | கந்தர்வர் |
| ,, நுனியில் | நாகர்கள் |
| ,, பின்புறத்தில் | ராக்ஷஸர்கள் |
| முதுகில் | ஏகாதசருத்ரர் |
| எல்லா ஸந்திகளிலும் | வருணன் |
| பின்புறத்தில் | பித்ருதேவர்கள் |
| கன்னங்களில் | மாநவர் |
| சாணிபோடுமிடத்தில் | லக்ஷ்மீதேவி |
| கோமூத்ரத்தில் | கங்காதேவி |
| சாணியில் | யமுநாதேவி |
| மயிர்க்கால்களில் | முப்பத்துமூன்றுகோடிதேவர் |
| வயிற்றில் | மலைகாடுநதிகளுடன் பூதேவி |
| நான்கு ஸ்தநங்களில் | நான்கு கடல்கள் |
| வயிற்றினுள் | கார்ஹபத்ய அக்நி |
| ஹிருதயத்தில் | தக்ஷிணக்நி |
| கழுத்தில் | ஆஹவநீயாக்நி |
| கன்னத்திலுள்ளே | ஸப்ய அக்நி |
| எலும்புகளில் | மலைகள் |
| மஜ்ஜையில் | யாகங்கள் |

சிவப்புமுதலியவர்ணங்களில் ரிக்முதலிய வேதங்கள்.

## கோ த்வாதசீ விரதமும் மஹிமையும்.

கார்த்திகைமாத சுக்லபக்ஷ த்வாதசியன்று இதைச் செய்யவேண்டும். பார்வதிதேவி பரமசிவன் விரும்பிய படி கபிலா என்ற கோ ரூபமெடுத்தாள். சங்கரன் பிராம் மண வேஷம் பூண்டு நான் வரும்வரை இதைக் காப்பாற் றிக் கொடுங்கள் என பிருகுமுநிவரிடம் அளித்து மறைந் தார். பிறகு சிவனே புலிவேடம் தாங்கி பசுவை விறட்டி னர். பசு பயந்து கன்றுடன் ஓடி மலைமீதேறிற்று.

தேவரளித்த மணியை அடித்து புலியை விரட்டினர் பிருகு. புலி ஓடிற்று. அந்த மலை டுண்டாகிரி எனப்படும். அதைத் தர்சித்தால் ஸகல பாபமுமகலும். அன்று கன்றுடன்கூட பசுவை விதிப்படி பூஜிக்கவேண்டும். அதனுல் ஸகல நன்மைகளையும் பெறலாம். கோவை பிருகு ரக்ஷித்ததால் லக்ஷ்மி அவருக்குப் பெண்ணுனள்.

உத்தானபாத ராஜனுக்கு ருசி சுக்நி என இரு மனைவிகளிருந்தனர். சுக்நிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதைக் காப்பாற்றும்படி ருசியிட மளித்துவிட்டு சுக்நி பதிக்குப் பணிவிடை செய்து வந்தாள். ருசிக்குப் புத்திரனில்லை. பொருமையால் அக் குழந்தையைக் கொன்று மற்ற மாம்ஸத்துடன் கலந்து பாகம் செய்து மன்னன் உணவில் சேர்த்துவிட்டாள். அரசன் உண்ணும் பொழுது குழந்தையை அழைத்து வரச்சொன்னுன். சுக்நி ருசியிடம் கேட்க அதை யாரோ தூக்கிச் சென்றனர் என்ருளவள். சுக்நி கற்பினுல் உண்மையை அறிந்து தான் செய்துவந்த கோ விரத புண்யத்தால் அவனை எழுப்பினுள். ருசியும் அரசனும் இலையிலுள்ள உணவிலிருந்து எழுந்துவந்த குழந்தையைக் கண்டு ஆச்சர்யமடைந்தனர். அக் குழந்தை இறவாமல் சாச்வதமாக இருந்ததால் துருவன் எனப் பெயரிட்டனர். அவனும் அந்த விரதத்தைச் செய்து துருவஸ்தாநத்தை அடைந்தான். (துருவ சரிதம் மற்றவிடங்களில் வேருக இருக்கிறது.)

## சாதுர்மாஸ்ய விரதம்.

ஆஷாட சுக்ல ஏகாதசியில் படுத்து துலாமாத சுக்ல ஏகாதசியில் பகவான் எழுந்திருக்கிருர். இந்த நான்கு மாதங்களிலும் அனைவரும் கைக்கொள்ளவேண்டிய நியமங்கள் சில. அதனுல் உண்டாகும் பலன் பல. நான்கு மாதங்களிலும் வெல்லத்தைவிட்டால் - கண்டஸ்வரம் மிக மதுரமாக இருக்கும். கடுகு எண்ணெய்களை விட்டால் சத்துருக்கள் அழிவார்கள். இலுப்பெண்ணையை விட்டால் உடலில் அழகுண்டாம். புஷ்பம் முதலிய போகத்தை விட்டால்-வித்யாதரனுவான். யோகாப்யாஸம் செய்தால் பிரும்மபதமடைவான். காரத்தையும் புளிப்பையும் விட்டால்-ஏழ்மை அகலும். தாம்பூலத்தை விட்டால்-யோக

ஸித்தி உண்டாகும். பாகம் செய்யாததை உண்டால் நிர்மலமாவான். நெய்யை விட்டால்-அழகும் ஸர்வஸித்தியு முண்டாகும். பழங்களைவிட்டால்-புத்தியும் ஸந்ததியும் வளரும். எண்ணெய் தேய்ப்பதை விட்டால்-காந்தியும் பொருளும் வளரும். பால் தயிர் மோர்களை விட்டால் கோலோகம் செல்லலாம். அன்னத்தை விட்டால்-இந்திர லோகம் செல்லலாம். ஆவியில் பக்குவமானதை உண்டால் ஸந்ததி வளரும். பூமியில் படுப்பவர் வைகுண்டம் செல்வர். சுத்த உபவாஸமிருந்தால்-பிரும்மலோகம் செல்வர். வபநம் செய்துகொள்ளாதவர்-ஒவ்வொரு நாளும் கங்கா ஸ்நாநபலனைப் பெறுவர். மௌந விருதமிருந்தால்-எல்லோருக்கும் மேலாக இருப்பான். அஷ்டாக்ஷரீ ஜபித்தால் உபவாஸ பலனைப் பெறுவர். பகவானை நமஸ்கரித்தால் கோ தாந பலனுண்டாகும். அபிஷேக தீர்த்தமுட்கொண்டால்-கிருதகிருத்யனாவான். கோயிலை மெழுகினல்-ராஜ பதவி கிடைக்கும். இப்படி சாதுர்மாஸ்யத்தில் செய்யும் ஒவ்வொன்றும் விசேஷ பயனைத் தரும்.

## ஸஹோதரி முதலியவரும் தாநபாத்ரம்.

தாநம் செய்யாதவர் தரித்ரராகவும் ரோகியாகவும் ஆவார்கள். வேதமறிந்து ஏழையாயும் குடும்பியாயும் ஆசார சீலனாகவும் உள்ள பிராம்மணனே முக்யமான தாந பாத்திரம். அத்தகையவர்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் தாநம் செய்யாமலிருக்கக் கூடாது. பெண் பிறவியாயினும் தன் ஸஹோதரிக்கும் அவளது புத்திரனுக்கும் மாமனுக்கும் தந்தையுடன் பிறந்த ஸ்திரீகளுக்கும்—அத்தை—தரித்ரருக்கும் தரித்ரரான பந்துக்களுக்கும் தாநம் செய்தால் கோடி பங்கு புண்யம் உண்டாகும்.

வையாசி சுக்ல திருதியை கார்த்திகை சுக்ல நவமீ புரட்டாசி திரயோதசி மாகபௌர்ணமி இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு யுகத்திற்கு ஆரம்பநாள் ஆனதால் தாநம் செய்வதற்கு மிக மிக உத்தமமான காலமாகும். பூதாநம், ஹிரண்ய தாநம், வஸ்திர தாநம், படுக்கை தாநம், ஆஸந தாநம், குடை தாநம், பாதுகை தாநம், கிருஹதாநம் இவ்வெட்டும் ஒவ்வொருவரும் ஒருமுறை யாவது மரிப்பதற்குள் செய்யவேண்டிய மிக முக்யமான

தாநங்கள். அதிதிக்கு அன்னமளித்து மௌநமாக புஜித்தால் உடலாலும் வாக்காலும் மநதாலும் செய்த பாபங்கள் அகலும்.

**விதவையாகக்கூடிய பாபங்களை அகற்ற:** நீண்ட ஸௌமங்கல்யத்தை தரச் கூடியதும் ஸாவித்திரியால் ஜபம் செய்யப்பட்டதுமான இதை ஜபிக்கவேண்டும்.

**ओंकार पूर्विके देवि वीणा पुस्तक धारिणि ।**
**वेदमातर्नमः तुभ्यं अवैधव्यं प्रयच्चमे ॥**

ஓங்கார பூர்விகே தேவி வீணு புஸ்தக தாரிணி
வேதமாதர் நமஸ்துப்யம் அவைதவ்யம் ப்ரயச்சமே.

பிரணவத்தை முன்னிட்டவளும் வீணை புஸ்தகங்களைத் தரித்தவளுமான வேத தாயே! எனக்கு ஸௌமங்கல்யத்தைக்கொடு.

**மரம் வைத்து வளர்ப்பது** பூர்த்தம் என்ற புண்ய கர்மாவாகும். புத்திரன் செய்வதைவிட மரம் இறந்த ஜீவனுக்கு அதிக நன்மையைச் செய்கிறது. ஆண்டிற்கு ஒரு முறைதான் புத்ரன் சிராத்தத்திலுல் புஷ்டியைத் தருகிருன். மரமோ பிரதிதினம் புஷ்டியைத் தருகிறது. ஆதலால், ஒரு அச்வத்தமரம் ஒரு வேப்பமரம் ஒரு ஆலமரம் பத்து புளியமரம் மூன்று விளாமரம் மூன்று பில்வமரம் மூன்று நெல்லிமரம் ஐந்து மாமரம் வைக்க வேண்டும். இதை வைப்பவர் நரகம் செல்லமாட்டார். பார்வதி தேவி ஒரு அசோக விருக்ஷம் வைத்து வளர்த்தாள். சோகத்தை நீக்கியதால் அது அசோக மெனப்படும். (ரகுவம்சம் இதைக் கூறுகிறது.)

**தீப விசேஷம்:** தீபதாநம் செய்பவர் ஆலயத்தில் தீபம் ஏற்றுபவர் கண்ணோய் இல்லாமல் இருப்பர். பசும் நெய் அல்லது எள்ளினுலாகிய எண்ணெய் எள் நெய் எண்ணெய் இவைகளால் தீபம் ஏற்றுவது மிகச்சிறந்தது. தீபத்தை அவிப்பவனும் திருடுபவனும் குருடனுகப் பிறப்பான். **தாமரைத்தண்டிலிருந்து உண்டாகும் நூலால் தீபம் ஏற்றுவது நோய் வராமல் தடுக்கும்.** பகவானுக்கு அதிக இன்பமூட்டும். **கற்பூரத்தால்** தீபம் ஏற்றி பகவானுக்குக்காட்டினுல் **அச்வமேத பலன்** உண்டாகும். தீப

எண்ணெயை அல்லது திரியைக் கையால் தொட்டால் உடனே ஸ்நாநம் செய்தால்தான் மற்ற கர்மாவைச் செய்ய அர்ஹராவார். திப எண்ணெயை உடலில் தடவிக்கொண்டால் குஷ்டநோய் உண்டாகும்.

## நவக்ரஹ ஹோமம்.

பத்தாயிரம் முறை நவக்ரஹஹோமம் செய்வது ஸாதாரணம். லக்ஷ ஹோமம்செய்வது மத்யமம். கோடி ஹோமம் செய்வதுதான் உத்தமம். பற்பல குண்டங்களை ஏற்படுத்தி பற்பல ரித்விக்குக்களின் மூலமாக அரசர் தேச க்ஷேமத்திற்காக ஆண்டிற்கோர் முறை நவக்ரஹ ஹோமம் செய்யவேண்டும். நாட்டின் நலம் க்ரஹங்களிடமே இருக்கின்றது. தனிப்பட்டவர் வீட்டில் செய்தால் நூற்றெட்டு முறை அல்லது நூற்று இருபத்தெட்டு முறை ஹோமம் செய்யவேண்டும். நவக்ரஹம் பசு அரசர் பிராம்மணர் இவர்களை நன்றாக பூஜித்தால் நல்ல பலனை அளிப்பார்கள். அவமதித்தால் அவமதிப்பவரைக் கொளுத்தி விடுவார்கள். குறைந்தது நான்கு ரித்விக்குகளைக் கொண்டாவது நவக்கிரஹ ஹோமம் செய்யவேண்டும்.

**வெள்ளெருக்கஞ் செடியின் வேறினல் கணபதி விக்ரஹம் செய்து பூஜித்தால் ஸர்வ ஸித்தியும் உண்டாகும்.**

## இந்த்ர த்வஜ பூஜை.

தேவாஸுர யுத்தத்தில் தேவருக்கு ஜயம் உண்டாவதற்காக இந்திரன் மிக உயரமாக ஒரு கொடிமரத்தை நாட்டி பூஜித்தான். உடனே தேவர்க்கு ஜயமுண்டானது. ஆதலால் ஒவ்வொரு தேச அரசரும் காலத்தில் ஜயமும் மழையும் உண்டாவதற்காக இந்திர த்வஜ பூஜை செய்ய வேண்டும். [ரகுவம்சத்தில் காளிதாஸனிதை வர்ணிக்கிறுர். தற்காலத்திலும் அதனல் கொடி ஏற்றுவிழா நடக்கின்றது].

## அபராத சத விரதம்.

நூறு அபராதங்களைப் போக்கக்கூடிய விரதமிது.

1 ஒரு ஆச்ரமமும் இல்லாமலிருப்பது
2 அக்நிபூஜை இல்லாமை
3 விரத மில்லாமை

4. தாநம் செய்யாமை
5 சௌசமில்லாமை
6 தயை இல்லாமை
7 பேராசை
8 பொறுமை இல்லாமை
9 ஜநங்களைப் பீடித்தல்
10 கபடமாக இருத்தல்
11 சுபமாக இல்லாமை
12 விரதபங்கம்
13 நாஸ்திகத் தன்மை
14 வேதநிந்தை
15 கடினமாக இருத்தல்
16 பொய்பேசல்
17 ஹிம்ஸைசெய்தல்
18 திருடுதல்
19 இந்திரியங்களுக்கு அடிமையாதல்
20 மநதை அடக்காமை
21 கோபம்
22 ஈர்ஷ்யை
23 பொரூமை
24 டம்பம்
25 பிடிவாதம்
26 போக்கிரித்தனம்
27 கடுமையான பேச்சு
28 தவறுதல்
29 மனைவியை விடுவது
30 தாயை விடுவது
31 புத்ரனை விடுவது
32 தகாதவனைப் பூஜிப்பது
33 சிராத்தத்தை விடுவது
34 ஜபம் செய்யாமை
35 பஞ்சயக்ஞமில்லாமை
36 ஸந்த்யையை விடுவது
37 தர்ப்பணம் செய்யாமை
38 ஹோமம் செய்யாமை
39 அக்நியை அவிப்பது
40 ருதுகாலமில்லாதபோது ஸ்த்ரீ ஸங்கம் செய்தல்
41 பர்வாவில் ஸங்கம்
42 கோள்சொல்லுதல்
43 பரஸ்த்ரீ கமநம்
44 தாஸி கமநம்
45 அபாத்திரத்தில் தாநம்
46 அல்பமாக தாநம்
47 தகாத கரிகாய் உண்பது
48 தகாத தான்ய முண்பது
49 மிலேச்சஸ்த்ரீ ஸங்கம்
50 சிறிய தாயை விடுவது
51 சிற்றப்பனை விடுவது
52 பித்ருபக்தி இல்லாமை
53 பிதாவுடன வாதம்
54 புராணம் கேளாமை
55 ஸ்மிருதிகளை அறியாமை
56 தகாததை உண்பது
57 பதிஸதி துரோஹம்
58 நல்ல விசாரணை இல்லாமை
59 உழுதுண்பது
60 ஹீநவேலை செய்வது
61 மனைவியை ஹிம்ஸிப்பது
62 புலனுக்கு அடிமை
63 மாயாவியாயிருத்தல்
64 கற்றதை மறப்பது
65 சாஸ்த்ரங்களைக் கற்காதது
66 கடன் வாங்குவது
67 சித்ரவேலை செய்வது
68 காமவெறி
69 மனைவியை விற்பது
70 புத்ரனை விற்பது
71 பெண்ணை விற்பது
72 மிருகத்தினிடம் ஸங்கம்
73 பச்சைமரத்தை வெட்டுவது
74 வளையில் ஜலம் விடுவது
75 அமிழ்ந்து முழுகாமை

76 கல்வியை விற்பது
77 விருத்தியில்லாமை
78 அரசனை யாசிப்பது
79 கெட்டவனுடன் சேருவது
80 ஸ்த்ரீகளை அடிப்பது
81 பசுவை அடிப்பது
82 புரோஹிதனுவது
83 நண்பனை அடிப்பது
84 குழந்தையை அடிப்பது
85 பரான்ன முண்பது
86 சூத்ரான்ன முண்பது [வது
87 சூத்ரனுக்குப் பாகம் செய்
88 ஸதாசாரத்தை விடுவது
89 கெட்டபுத்ரனைப் பெறுவது
90 வித்வான்களை யாசிப்பது
91 வாயாடியாயிருத்தல்
92 தானம் வாங்கல்
93 வேதகர்மா இல்லாமை
94 ஸ்மிருதிகர்மா இல்லாமை
95 துக்கப்பட்டவனைக் காப் பாற்ருமை
96 பிரும்மஹத்தி
97 ஸுராபானம்
98 ஸுவர்ணம் திருடல்
99 குருஸ்த்ரீ கமனம்
100 அவர்களுடன் சேர்ந் திருத்தல்

என்ற நூறு அபராதங்களை அகற்றிய புண்யத்தைத் தரும் இது.

அநாதையான பெண்களை வளர்த்து கன்யாதானம் செய்தால் பிரும்மலோகம் கிட்டும்.

## மூன்று அதிதானங்கள்.

கோதானம், பயிருடன் பூமிதானம், வித்யாதானம். தானம், மஹாதானம், அதிதானம் என்பவை ஒன்றைவிட ஒன்று சிறந்ததாகும். அதிதானம் மிகமிகச் சிறந்தது. அதைச் செய்வோர் ஸத்யலோகம் செல்வர். முக்தி பெறுவர்.

## அன்னதான மஹிமை.

அன்னம் உடலையும் உயிரையும் வளர்ப்பதால் அன்னதானம் செய்பவன் உடலையும் உயிரையும் தந்தவனுவான். உடல் வாழ மிக முக்யமானது. முதல் ஸாதநமானது அன்னம். காசியில் தநேச்வரன் என ஒரு வைச்யனிருந்தான். அவனது கடையில் ஒரு பாம்பு முட்டையிட்டுச்சென்றது. அதை ஜாக்ரதையாக வைத்து ரக்ஷித்தானவன். முட்டையிலிருந்து பாம்புக்குட்டி வெளிவர அதையும் பாலூட்டி அன்புடன் சிசுபோல் ரக்ஷித்தான். ஒருநாள் தந்தை புத்திரனைக் கடையில் வைத்துவிட்டு கங்கைக்குச் சென்ருன். அச்சமயம் அது வழக்கம்போல்

வெளியில் வந்து விளையாடி வைச்ய புத்ரனது காலின்மே லேறிற்று. தன்னைக்கடிக்காது என அறிந்திருந்தும் வைச்ய குமாரன் அதை அடித்தான். குற்றமற்ற தன்னை அடித்த தால் வைச்யன் எதிரிலேயே அவன் புதல்வனைக் கடித்தது அது. உடனே அவன் மூர்ச்சையாகி விழுந்திறந்தான். வைச்யன் கதறி அழுது ஆயிரக்கணக்கான அந்தணர்க ளுக்கு அன்னதாநம் செய்தான். அவர்கள் அக்ஷதை ஆசிர் வாதம் செய்து "நீ சிரஜீவியாக இரு. உனது சத்ரு அழியட்டும்" என்று அவன் சிரஸின்மீது போட்டனர். உடனே உயிர்பெற்றெழுந்தான் புத்ரன். பாம்பு உயி ரற்று விழுந்தது. அதைக்கண்டு மநந்தாளாமல் கதறி மறுபடியும் ஸஹஸ்ர பிராமண போஜநம்செய்வித்தான். அந்த பாம்பும் உயிருடன் எழுந்தது. என்னே கருணை! தர்மம்! அன்னதாந மஹிமை!!

**ஸ்த்ரீகளின் மேன்மை:** நான்கு ஆச்ரமங்களில் இல் லறம் சிறந்தது. அதனிலும் வீடு சிறந்தது. வீட்டிலும் பெண்களே சிறந்தவர். கற்பு மிகுந்துவிட்டால் அதைவிட வேறு பெறத்தக்க பாக்யமில்லை. ஸ்ரீயுக்கும் ஸ்திரீயுக்கும் யாதொரு பேதமுமில்லை. ஸ்திரீ என்பது அமிருதகுண்டம். ஸுகராசி. சிருங்கார நிதி. குற்றவாளியைச் சிக்ஷிக்காத அரசன். நெய்யில்லாத போஜநம். ஸ்திரீ இல்லாத வீடு இவை பயனற்றவைகள். காரணமின்றி பெண்களைக் கண்ணீர் விடச்செய்தால் நரகம் செல்வர். எந்த சுபகாரி யம் ஆரம்பித்தாலும் பெண்களை ஆடை ஆபரணங்களால் ஸந்தோஷப்படுத்த வேண்டும். உத்தமப் பெண்கள் வீட் டிற்கு லக்ஷ்மியாவாள்.

**வித்யாதானம்:** நல்ல நாளில் புஸ்தகத்தைப் பூஜித்து ஸுவர்ணத்தால் லேகிநீ-பேனு-செய்து வெள்ளியினுல் மஷீபாத்ரம்-இங்கிப்பெட்டி-செய்து நல்ல வித்வானுக்குத் தாநம் செய்து அன்றுமுதல் மாணவர்களைத் தன் வீட்டில் அழைத்து அன்னமளித்து வேதம் தர்மசாஸ்திரம் ராமா யணம் பாரதம் புராண மிவைகளைக் கற்பிக்கவேண்டும். இந்த தானத்தால் ஸரஸ்வதி ஸந்தோஷித்து பல ஜன்மங் களிலும் இவனை வித்வானுகச் செய்கிருள்.

**கைலாஸம் செல்ல ஸுலப வழி:** கோவையோ பிராம் மணனையோ காப்பதற்காக உயிரைத் தியாகம் செய்வது.

ப்ரயாக க்ஷேத்திரத்தில் உபவாஸமிருப்பது, காசியில் இறப்பது, ப்ரதி தினமும் பக்தியுடன் அபசாரமின்றி சிவார்ச்சனம் செய்வது இவைகள் சிறந்த ஸாதனங்கள். விரிவாக இங்கு ஸதாசாரங்களை வர்ணிக்கிருர் வியாஸ முனி. [மற்ற புராணங்களிலும் இதைக் காணலாம்.]

### ரதோத்ஸவம்.

பிரும்மா உலக நன்மைக்காக அவனியில் தோன்றி பலவிடங்களில் யாகம் செய்தார். ஆலயங்களில் உத்ஸவத்தை ஆரம்பித்து நடத்தினர். அதனால் சிவாலயத்திலும் விஷ்ணு கோவிலிலும் **பிரும்மோத்ஸவம்** என்ற பெயருடன் அனுஷ்டிக்கப்படுகிறது. ஸிருஷ்டி முதல் லயம் வரை உள்ள தத்துவத்தை வெளியிடுவது உத்ஸவம். ரதம் கோபுரம் என்ற இரண்டும் பூர்ணமான உலக ஸிருஷ்டியை எண்பிப்பது. அதே விச்வரூபமெனப்படும். அதில் உலகெலாம் அமைந்திருக்கும். அசையாத விச்வ ரூபம் கோபுரம். தேரின் உள்ளே பகவான் அமர்ந்து ஸகல உலகத்திற்குள்ளும் நானிருக்கிறேன் என்று காட்டுவது ரத உத்ஸவம். ஆண்டிற் கோர்முறை அதை நடத்த வேண்டும். ப்ரதிதினம் நாம் செய்துவந்த ஆலய பூஜைகளில் ஏதேனும் குறை இருந்தால் அதை அகற்றும். ரதம் வலம் வந்தால் குடிகளுடைய நோய்களும் குறைகளும் அகலும். பலவகையிலும் க்ஷேமமுண்டாகும். ஆதலால் ரத உத்ஸவம் நடத்துவது அரசன் கடமை. அதில் எல்லா வகுப்பாரும் கலக்கவேண்டும்.

மஹா புராணமான பவிஷ்யத்தைக் கேட்பவர் ஸகல நன்மைகளையும் பெறுவர்.

பவிஷ்ய புராணச்சுருக்கம் முற்றிற்று.

---

**जयति पराशरसूनुः सत्यवती हृदय नन्दनो व्यासः ।**
**यस्यास्य कमल गलितं वाङ्मयं अमृतं जगत्पिबति ॥**

பராசர புத்திரரும் ஸத்யவதியின் உள்ளத்தை ஆநந்தப்படும்படி செய்தவருமான வியாஸர் என்றும் பிரகாசமாக விளங்குகிருர். அவரது முகாரவிந்தத்திலிருந்து பெருகிய வாக்கு வடிவமான அமிருதத்தை உலகம் அருந்துகிறது.

உ

# ஸ்ரீ நாரதபுராண மூலக்ரந்த அநுக்ர மணிகா.

## பூர்வபாகம்.

1 நாரதருக்கு ஸநகாதிகளின் உபதேசம். புராண மஹிமை.

2 பிரும்ம ஸபை செல்லும் ஸநகாதிகளை வணங்கி நாரதர் கேட்பது.

3 ஸ்ருஷ்டி. பூகோளம். பரதகண்டம். அதன் பெருமை.

4 மிருகண்டு தபஸ். விஷ்ணு அவருக்குப் புத்ரனாதல்.

5 மார்கண்டேயர் பிரளயத்தை தர்சித்தல்.

6 பிரயாக மஹிமை. கங்கா மாஹாத்மியம்.

7 பாஹுராஜன் மனைவியை ஔர்வர் உடன்கட்டை ஏறுமல் தடுத்தது.

8 ஸகரவம்சம். பகீரதன் கங்கை கொண்டுவரல்.

9 ஸௌதாஸன் கங்கையால் ராக்ஷஸ தன்மை அகற்றல்.

10 அதிதியை அழிக்க தைத்யர் முயற்சி. அந்த அக்நியிலே அவர் நாசம்.

11 திரிவிக்ரமர் திருவடியிலிருந்து கங்கைதோன்றியது.

12 ஸத்பாத்ர லக்ஷணம். வீரபத்ர அரசன் தடாகம் அமைத்தல்.

13 கோவில் குளம் கிணறு அமைத்தல். பலவகை தானம்.

14 வர்ண தர்மம். பாப பிராயச்சித்தம். ஐந்துவகை சிராத்தம்.

15-16 பாபிகளுக் கேற்ற நரகம். பூமிக்கு கங்கை கொண்டுவரல்.

17 மார்கழிமுதல் கார்த்திகைவரை சுக்லத்வாதசி விரதம் உத்யாபநம்.

18 பிரதி மாஸமும் பௌர்ணமீ விரதம். லக்ஷ்மீ நாராயண விரதம்.

19 கார்த்திகை சுக்ல தசமியில் விஷ்ணு ஆலயத்தில் துவாஜாரோபணம்.
20 ஸுமதிராஜன் விபண்டகரிடம் தன் முற்பிறவி கூறல்.
21 ஹரி பஞ்சராத்ர விரதம்.
22 ஆனி ஆடி ஆவணி புரட்டாசிகளில் மாத உபவாஸ விரதம்.
23 ஏகாதசியும் பத்ரசீல ப்ராம்மண சரிதமும்.
24 எல்லோருக்கும் பொதுவான ஸதாசாரம்.
25-26 த்விஜருக்கு வேதாத்யயநாதி தர்மம்.
27 கிருஹஸ்த வாநப்ரஸ்த ஸன்யாஸி தர்மங்கள்.
28 சிராத்தவிதி. 29 திதி நிர்ணய விதி.
30 மஹாபாப உபபாதக பிராயச்சித்தம். பகவதாராதனம்.
31 புண்ய பாபங்களுக் கேற்ற யமமார்க்கம்.
32 ஸம்ஸாரத்திலுள்ள துக்கம். பகவதாராதநமே அதை நீக்கும்.
33 பக்தி, க்ஞாநம், யமநியமாதி அஷ்டாங்க யோகம்.
34 இஹபர இன்பத்திற்கு ஸாதநமான ஹரிபக்தி லக்ஷணம்.
35 கர்மபாசம் பக்தியாலகலும். வேதமாலி பிராம்மண கதை.
36 ஹரி ஸேவையால் யக்ஞமாலி ஸுமாலிகளின் நற்கதி.
37-38 குலிகன் எனும் வேடன் சரிதம். உத்தங்கர் சரிதம்.
39 கோவிலைச் சுத்தம் செய்த ஜயத்வஜராஜ சரிதம்.
40 பிரும்ம கல்பம். மநு. மங்வந்தரத்திலுள்ள தேவர்.
41 4 யுக தர்மம். பகவன்நாம ஸ்மரணமே முக்திஹேது.
42-43 பரத்வாஜ பிருகு ஸம்வாதம். ஸ்ருஷ்டி வர்ணதி தர்மம்.
44 தியாந யோகம். 45. ஜநக பஞ்சகவாதம். க்ஞாநம்.
46 தாபதிரயம் அகல வேதாந்த விசாரம்.
47 மநதை அடக்கி தியாநத்தால் ஆத்மாவை அடைவது.
48 பரதர் மான்குட்டி சேர்க்கையால் 3 பிறவி அடைந்தது

49 பரத ரஹூகண ஸம்வாதம். மோக்ஷ தர்மம்.
50 சுக சரிதம். 4 வேத வர்ண ஸ்வர வ்யவஸ்தை.
51 நக்ஷத்திர, வேத, ஸம்ஹிதா கல்பம்.
52 வியாகரணம். 53. நிருக்தம். 54. ஜோதிஷ கணிதம்.
55 ஜாதக பாகம். 56. கிருஹசாரம். உத்பாதங்கள்.
57 சந்தஸ், 58 முதல் 62 வரை சுகர் ஜநகர் சரிதம்.
63 ஸம்ஸார மகல பாசுபத தத்துவம்.
64 மந்த்ர தீக்ஷா விதி.
65 ஸ்ரீ பாதுகா மந்திரம். 66. காயத்ரீ ஸந்தியா விதி.
67 ஷோடச உபசார பூஜாவிதி. 68 கணேச மந்த்ரம்.
69 நவகிரஹ யந்திரங்கள், மந்திரங்கள், பூஜா, ஜபம்.
70 மஹாவிஷ்ணு மந்திர பூஜா விதி.
71 நரஸிம்ம மந்திர பூஜா காயத்ரீ முதலியன.
72 பீடதேவதா பூஜை. ஹயக்ரீவ மந்திர உபாஸனாதி.
73 ஸ்ரீ லக்ஷ்மண ராம மந்திர ஜப பூஜாவிதி.
74-75 ஹநுமான் மந்திரம். தீப தாநாதி.
76-77 கார்த்த வீர்ய மந்திரம். கவசாதி.
78-79 ஹநுமத் கவசம். சரித்திரம்.
80-81 கிருஷ்ண மந்திரங்களும் ஆராதநமும்.
82 சிவன் கூறிய ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸஹஸ்ரநாமம்.
83 ராதாம்சமான ஐந்து பிரகிருதிகளின் லக்ஷணம்.
84 தேவி மந்திர ஜபம், ஹோமாதிகள்.
85 வாக்தேவதாவதார காளீ, யக்ஷிணீ, மந்திரங்கள்.
86 லக்ஷிமியின் அவதார பகளா யக்ஷிணீ மந்திரம்.
87 துர்க்காதேவியின் நான்குவகை மந்திரங்கள்.
88 ராதாவதாரமான 16 தேவிகளின் மந்திரம்.
89 ஸகல ஸித்திகரமான லலிதா ஸஹஸ்ரநாம ஸ்துதி.
90 நித்யா படலம். அர்ச்சநாவிதி.
91 மஹேச மந்திரம் ஸ்துதிகள்.
92 முதல் 109 வரை பிராம்ம பாத்ம விஷ்ணு வாயு (சிவ)
பாகவத, நாரதீய, மார்கண்டேய, அக்நி, பவிஷ்ய,

பிரும்ம வைவர்த்த, லிங்க, வராஹ, ஸ்காந்த, வாமந, கூர்ம, மத்ஸ்ய, கருட, பிரும்மாண்ட என்ற 18 புராணங்களின் விஷயம், சுலோக ஸங்க்யை கூறப்பட்டது.

110 முதல் 124 வரை 12 மாஸங்களிலும் பிரதமை முதல் பௌர்ணமீ வரையிலுள்ள திதிகளின் விரதங்கள் வர்ணிக்கப்படுகின்றன.

125 நாரதர் கைலாஸஞ்சென்று பாசுபதவிரதம் பெறல்.

## உத்தரபாக விஷய ஸூசிகை.

1 மாந்தாதாவுக்கு வஸிஷ்டர் பாபமகல ஏகாதசி மஹிமை.

2 தேவ பித்ரு கார்யங்களில் திதி நிர்ணயம். ஏகாதசி பூர்வ வித்தை கூடாது.

3 ருக்மாங்கத ராஜ்யத்தில் ஏகாதசி விரதம். எல்லோரும் வைகுண்டம் செல்லுதல்.

4-5 யமன் வேலையின்றி பிரும்மாவிடம் முறையிடல்.

6 பாபிகளாயினும் ஏகாதசி வ்ரதிகளைக் கெடுக்க முடியாது.

7 பிரும்மா மோஹினியைப் படைத்தனுப்பல்.

8 மோஹிநி மந்திரமலை செல்லுதல்.

9 தர்மாங்கதன் ராஜ்யம். ருக்மாங்கதன் வேட்டை.

10 வாமதேவரை எதனால் ஸர்வஸம்பத்? என வினவல்.

11 வாமதேவர் அரசன்முற் பிறவிபற்றி கூறல்.

12-13 மோஹினியிடம் மோஹம். வாக்தானம். மணம்.

14 குதிரை காலில் நசுங்கிய உடும்பை பூர்மஜன்மா. அதற்கு விஜய ஏகாதசி புண்ய தானம்.

15 ருக்மாங்கதனை மோஹினியுடன் தர்மாங்கன் வரவேற்றல்.

16 ஸந்த்யாவளியை மோஹினிக்குப் பணிவிடைசெய்யச் சொல்லுதல். பாதிவிரத்ய சரிதம்.

17 மோஹிநீ ருக்மாங்கத ஸம்வாதம்.

18 மோஹினியுடன் ருக்மாங்கத லீலையை எல்லோரும் ஆதரித்தல்.

19-20 தர்மாங்கதன் திக்விஜயம். தந்தையிடம் கூறல்.
21 தர்மாங்கதன் நாககன்யகையை மணத்தல்.
22 விஷய சுகத்திலுள்ள அரசனுக்குக் கார்த்திகை ஏகாதசி என நினைவூட்டல்.
23 ஸந்த்யாவளிக்கு உபவாஸ உத்தரவு. மோஹிநீ அரசனை உண்ணும்படி கோரல்.
24 அரசன் உண்ண மறுத்தல். மோஹிநீ கௌதமாதிகளை உபவாஸம் நியாயமா என வினவுதல்.
25 அரசனது உபவாஸ பிடிவாதம். மோஹிநீ கோபங் கொண்டு வெளிக்கிளம்பல். தர்மத்வஜ ஸமாதாநம்
26 எதையு மளிப்பேன். ஏகாதசியில் உண்ணமாட்டேன் என அரசன் கூறல்.
27 புத்ரன் சொற்படி ஸந்த்யாவளி மோஹினியை ஸமாதாநப்படுத்த கௌண்டின்யன் ஸதி கதை கூறல்.
28 கௌண்டின்யன் ராக்ஷஸியுடன் சேர்ந்து ராக்ஷஸனைக் கொன்று ரத்நாவளியுடன் பொருள் சேர்த்தல்.
29 ராக்ஷஸி ரத்நாவளீ இருவரையும் மணந்தது. முதல் மனைவி இவர்களுக்கு வஞ்சனை செய்து காஷ்டீல தேஹம் பெறுதல்.
30 மாக மாஸ புண்யத்தால் அவள் நற்கதி பெறுதல். பதிக்காக உயிரையும் விடுவேன் என்றது.
31 தர்மாங்கதன் சிரஸை பெற்றோரிருவரும் அறுத்துத் தர வேண்டல். ஸந்த்யாவளி விரோசநன் கதை கூறி அதை ஏற்றுக்கொள்ளுதல்.
32 பதியை வேண்டல். அரசன் வேறு வரந்தரேன் என்றது. தர்மாங்கதன் தன் தலையை வெட்ட வற்புறுத்தல்.
33 பெற்றோர் புத்ரன் சிரஸை அறுத்தது. பகவான் ப்ரத்யக்ஷமாகி எல்லோருக்கும் வைகுண்டம் தந்தது.
34 மோஹிநீ தாபம். தேவர் வரந்தர வருதல். புரோஹிதர் அளித்த சாபம்.
35 மோஹிநீ மூவ்வுலகிலும் தங்க இடமின்றி பிரும்மாவுடன் புரோஹிதராசிரமத்திற்கு வருதல். வேண்டுதல்.

24 FEB 1959

36 மோஹிநீ பிரும்மாவுடன் பிரும்மலோகம் போதல்.
37 மோஹிநீ தீர்த்த யாத்திரை. கங்கையின் மஹிமை.
38-42 கங்கையின் மஹிமை வரலாறு.
43 மாக சுக்ல தசமியில் தசஹரா கங்கையின் பூஜை.
44-47 விசாலராஜன். கயா மாஹாத்ம்யம். விதி.
48-51 காசி மாஹாத்ம்யம்.
52-58 புருஷோத்தம க்ஷேத்ரத்தின் மஹிமை.
59 கோலோக ராதா கிருஷ்ணர் 5 உருவானது.
60-61 ஜ்யேஷ்ட சுக்ல நவமி முதல் ராதா கிருஷ்ண ஸுபத்ரா தர்சந யாத்ரா விதி.
62 ப்ரயாகையில் முண்டநம் முதலிய கார்யம்.
63 மகர ஸங்க்ரமண ப்ரயாக தீர்த்த ஸ்நாந விதி.
64-65 குருக்ஷேத்ர மஹிமை. லிங்க பூஜை.
66 தாக்ஷாயணீ உடலை விட்ட இடமே ஹரித்வாரம்.
67 பதரீ க்ஷேத்ரம் நரநாராயண மஹிமை.
68 கங்கா தீரத்தில் காமோதாக்ய க்ஷேத்ர மஹிமை.
69 ஸித்தநாத சரிதம். காமாக்ஷீ மஹிமை.
70 பிரபாஸ க்ஷேத்ர யாத்திரா விதி.
71 புஷ்கர க்ஷேத்திர மாஹாத்மியம்.
72 தபோ மஹிமை. கௌதமாச்ரம மஹிமை.
73 சிதம்பரத்தில் ஜைமிநி நடந தர்சநம். வேதபாத ஸ்தவம். திரியம்பக க்ஷேத்ர யாத்ரை.
74 கோகர்ண க்ஷேத்ர மஹிமை.
75 ஸேது மஹிமை. ராமலிங்க மஹிமை.
77 நர்மதா தீர்த்த மஹிமை.
78 அவந்திகா க்ஷேத்ரம். ஸ்ரீமஹாகாளேச்வரர்.
79 மதுரா மாஹாத்மிய வர்ணநம்.
80 நாரதர் கதை. பிருந்தாவந மாஹாத்மியம்.
81 வஸு எனும் புரோஹிதர் மோஹினிக்கு தீர்த்த யாத்ரா விதியைக் கூறி பிருந்தா வநத்தில் தபஸ் செய்தது. அவருக்கு நாரதர் கிருஷ்ணவதாரம் கூறியது.
82 மோஹிநீ தீர்த்தயாத்ரையால் நற்கதி. தசமீ வித்த ஏகாதசியில் மோஹிநீ வாஸம். நாரதபுராண படந சிரவண பலன்.

**நாரத புராண மூலக்ரந்த அநுக்ர மணிகா முற்றிற்று.**

# அவதாரிகை.

இதை நாரதிய புராணம் என்றும் கூறுவர். உப புராணம் பதினெட்டில் பிருஹந்நாரதியம் என்ருெரு புராணமுண்டு. இந்த புராணமே பதினெட்டு புராணங்களின் பெயரையும் அவைகளிலுள்ள சுலோகக் கணக்கையும் கூறுகிறது. அந்த ரீதியில் நாரதபுராணம் 25000 சுலோகமுள்ளதாக இருக்கவேண்டும். ஆனல் தற்சமயம் அச்சிட்ட நூலில் அவ்வளவில்லை.

207 அத்யாயங்களிருக்கின்றன இதில் பூர்வபாகம் 125 அத்யாயங்கள். உத்தரபாகம் 82 அத்யாயங்கள். நாரதர் ஸநத்குமாரர் ஸநந்தநன் என்பவர்களிடம் இந்த புராணத்தைக்கேட்டார். ஆதலால் நாரதபுராணம் நாரதிய புராணம் என பெயர்வழங்கிற்று.

ப்ருஹத் கல்பத்தில் நடந்த கதையைத் தழுவி நாரதர் கூறியதால் பிருஹந்நாரதியம் என உபபுராணம் பெயர் பெற்றது. பகவானைப்பற்றி கூறுவது பாகவதம். ராமனைப் பற்றி கூறுவது ராமாயணம். என்பது போலல்ல இப் புராணம். நாரதர் சொன்னது பிருஹந்நாரதியம் எனும் உபபுராணம். நாரதர் கேட்டது நாரத அல்லது நாரதிய என்ற மஹாபுராணம்.

## வில்ஸனது ஆராய்ச்சி.

மேனுட்டவர் நம்நாட்டு நூல்களைக்கற்று அதனுள் புகுந்து ஆராய்ச்சி செய்ததைக் கொண்டாடாமலிருக்க முடியாது. வேதத்திலும் புராணங்களிலும் நமது மஹர்ஷிகளுக்கோ நமக்கோ உள்ளதுபோல் பூர்ண சிரத்தை இல்லாமல் செய்யும் ஆராய்ச்சி சிலஸமயம் விபரீதமாக முடிகின்றது.

பிரதி ஸர்க்கஶ்ச வம்சோ மன்வந்தராணிக |
வம்சாநு சரிதஞ்சேதி—புராணம் பஞ்சலக்ஷணம் ||

இதில்—ஸர்க்கஶ்ச என்ற 5 புராண லக்ஷணங்களில்லை. "கிருஸ்தவிய பதினென்று அல்லது பதினருவது சதாப்தத்தில் எழுதப்பட்ட ஒரு பக்தி கிரந்தமிது" என்று கூறினர் ப்ரவஸர் வில்ஸன்.

அவர் சொற்படி பூர்ணமாக பக்தி மாத்திரம் இங்கு கூறப்படவில்லை. ஸர்க்கஶ்ச பிரதிஸர்க்க என்ற ஐந்துவகை

யான புராணலக்ஷணமும் இல்லாமலில்லை. ஆனால் சில புராணங்களில் கூறப்பட்டதைப்போல் விரிவாக கூற வில்லை என்பதுண்மையே. ஒருவரே பதினெண் புராணங் களையும் இயற்றும்போது, சிலவற்றை சிலவிடத்தில் சுருக்கமாகக் கூறுவது ஸஹஜமேயாகும். அன்றியும் இவர் குறிப்பிட்டகாலத்திற்கு முந்தி தோன்றிய நூல் களில் நாரத புராணத்தைப் பற்றிய விஷயம் கூறப் படுவதால் இது மிக பிராசீனமானது. வேதவியாஸர் இயற்றியது என்பதில் ஸந்தேஹமில்லை.

இதில் விசேஷமாக ஒவ்வொரு தேவதா மந்திரம் கவசம் யந்த்ரம் ஜோதிஷ சாஸ்திரம், வியாகரணம், பதினெட்டு புராணங்களின் சுருக்கம் விரதங்கள், விஸ்தார மாக ருக்மாங்கதன் சரிதம் ஆகியவைகள் காணப்படு கின்றன. விக்ஞாநாநந்தர் என்றவர் ஆங்கிலத்தில் இதைப் பற்றிய ஒரு சிறு நூல் எழுதி இருக்கிறார். விலை ரூ. 6-0-0 ஸ்ரீ வேங்கடேச்வரா ஸ்டீம்ப்ரஸ் பாம்பே என்ற விலாசத் தில் ஷை நூலும், இந்த ஸமஸ்கிருத நாரத புராணமும் அச்சிடப்பட்டன.

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் தேவிகட்கமாலா, ஸ்ரீ கிருஷ்ண ஸஹஸ்ரநாமம், ராதா ஸஹஸ்ரநாமம் சிதம்பரத் தில் ஜைமிநி முனிவர் செய்ததான வேதபாதஸ்தவம் எனும் 63 சுலோகம், நீதிசுலோகங்கள் ஆகியவை இப் புராணத்தைச் சிறப்பிக்கின்றன. நாரதர் மாயா தர்சந மும் ஸங்கீதம் கற்றகதையும் ருசியானவை.

இதிலுள்ள நீதிசுலோகங்களையும் வேதபாதஸ்தவத் தையும் தனியாக அச்சிட்டால் லோக உபகாரமாக இருக் கும். 18 புராணச் சுருக்க வெளியீடு எனும் தொண்டு இறைவனருளால் முடிந்தபின் அன்பர் ஆதரவிருந்தால் பின்னர் இவைகளையும் அச்சிடலாம். இப்புராண ப்ரவச நம் ஸ்ரீமத் ஆசார்ய மடத்தில் கூறி முடிக்க ஓராண்டிற்கு மேலாயிற்று.

ப்ரதிதினம் மாலை 1-மணி அவகாசம் கூறி பதினெண் புராணங்களும் 36 ஆண்டுகளில் பூர்த்தியாயின.

இன்றும் ஸ்ரீமடத்தில் புராணப்ரவசநத் தொண்டு நடந்து வருகிறது.

பக்தர் பாத பாம்ஸு,
**ஸ்ரீவத்ஸ, ஸோமதேவசர்மா.**

# 8. நாரத புராணம்.



ஸ்ரீ நாரதர்.

மாம்பலம் குருகுல வெளியீடு.

# 8. ஸ்ரீ நாரத புராணம்.

[2 பாகம். 207 அத்தியாயம். 25000 சுலோகமுள்ளது.]

## பூர்வபாகம்.

वन्दे बृन्दावनासीनं इन्दिरानन्द मन्दिरं ।
उपेन्द्रं सान्द्रकरुणं परानन्दं परात्परम् ॥

பிருந்தாவநத்தில் அமர்ந்திருப்பவரும் லக்ஷ்மிக்கு பேராநந்தமளிப்பவரும் கருணை நிறைந்தவருமான விஷ்ணுவை நமஸ்கரிக்கிறேன். வேதவியாஸர் ஸகல கலைகளிலும் கரைகண்டவர். இந்த மங்கள சுலோகத்தை இவ்வளவு ப்ராஸ அனுப்ராஸத்துடன் கருத்தையும் நிறைய அமைத்துக்கூறுகிறார். கவிகளிலும் சிறந்தவரென காட்டுகிறது.

நைமிசாரண்யத்தில் சௌநகர் முதலிய முனிவர் ஒன்றுகூடி, சிலர் தவம் செய்தனர். சிலர் யாகம் செய்தனர். இருபத்தாறுயிரம் முனிவர் எந்தக்ஷேத்ரம் உயர்ந்தது? மோக்ஷத்திற்கு ஸாதநம் எது? என்றவிசாரத்திலிறங்கினர். ஸித்தாசிரமத்திலுள்ள ஸூதரைக் கேட்போம் என்று அங்கு சென்று அவரை வினவினர். முக்தி ஸாதநத்தைக் கூறுவதும் மிக பவித்ரமானதுமான நாரத புராணத்தைக் கூறுகிறேன். சுத்தமான இடத்தில் இதைக்கேட்க வேண்டும். "புராணம் ஸத்யமானதல்ல. பயன்களை அதிகப்படுத்தி வீண் ஸ்தோத்திரமாக வர்ணிக்கிறது" என்று கூறுபவர் அதுவரை தேடிய புண்யத்தை இழப்பர். ஸநத்குமாரர் நாரதருக்குக்கூறியபடி சொல்கிறேன். பகவன் நாமஸங்கீர்த்தநம் வேதார்த்தம் புராணம் இவைகளைக்கேட்பது ஸத்ஸங்கம். இவைகள் உள்ளவரை தேவரும் வணங்குவர். கர்ம பூமியில் பிறந்து நற்கருமங்களைச் செய்யாதவர் பிறவி வீணாகும். வேதங் கூறுவது தர்மம். வேதமே நாராயணன். அதில் நம்பிக்கை இல்லாத

வனுக்கு விஷ்ணு வெகு தூரத்திலிருப்பார். பக்தியோடு செய்யும் கர்மா பகவானுக்கு ஸந்தோஷத்தை உண்டு பண்ணும்.

### மிருகண்டுவும் மார்க்கண்டேயரும்.

ஸாள கிராமமெனும் புண்ய தீர்த்தத்தில் மிருகண்டு முநி பல்லாண்டு கடுந்தவம் புரிந்தார். மஹாவிஷ்ணு பிரத்யக்ஷமாகி நான் எனது அம்சத்தினுல் உனக்குப் புத்திரனுகிறேன் என்ருர். அங்ஙனமே குழந்தை பிறக்க மார்க்கண்டேயன் என பெயரிட்டு கல்வி கற்பித்தார்.

பிராமணர்களைப் பார்த்தபோதெல்லாம் நமஸ்காரம் செய். காலந்தவருமல் ஸந்த்யை செய். குருவுக்குப் பணி விடை செய். ஸாதுக்களுடன் சேர். எவரிடமும் துவேஷங் கொள்ளாதே. எல்லோருக்கும் நன்மைசெய். யாகம் வேதாத்யயநம் தாநம் இவைகளை நித்யம் செய்துவா. இந்திரியங்களை அடக்கு. பகவானை நாடித் தவம்செய். என தந்தை மைந்தனுக்கு உபதேசித்தார்.

தந்தை சொற்படி நடந்த மார்க்கண்டேயருக்கு பகவான் பிரத்யக்ஷமாகி மார்க்கண்டேய ஸம்ஹிதை என்ற நூலை இயற்றும் சக்தியையும் பிரளய காலத்திலும் இறவாத வரத்தையும் தந்தார். உலகெலாம் ஒரே ஜல பிரளயமாக இருக்க மார்க்கண்டேயர் அதில் மிதந்து பன்னக சயநனை பரமாத்மாவைத் துதித்தார். பகவான் பாகவத லக்ஷணத்தைக் கூறினுர் மார்க்கண்டேயருக்கு.

மூன்று கரணங்களாலும் பாகவதர் (பக்தர்) பிறர்க்குத் தீங்கிழைக்கார். பக்தியுடன் ஸத்கதை கேட்பர். ஸதா பகவத் சிந்தனை செய்வர். விஷ்ணு பக்தருக்கும் பெற்ருேருக்கும் குருவுக்கும் பணிவிடை செய்வர். பிறர் செய்யும் தேவ பூஜையைக் கண்டு களிப்பர். எல்லோரையும் உயர்ந்தவர் எனவும் தான் தாழ்ந்தவன் எனவும் எண்ணுவர். பிறரிடமிருந்து குணத்தை மாத்திரம் ஏற்று கொண்டாடுவர். பிறர் கூறினுல் அமர்ந்து புராணம் கேட்பர். தன்னைக் கேட்டால் தான் புராணங் கூறுவர். தீர்த்த யாத்ரை செய்வர். நித்ய கர்மாநுஷ்டானத்தைத் தவருமல் சிரத்தையுடன் செய்வார். துலஸீ பில்வம் அசுவத்தம்

இவைகளை வைத்து வளர்த்துப் பூஜிப்பர். சிவ பக்தரிடமோ அன்ய தேவ பக்தரிடமோ துவேஷங்கொள்ளார். சிவனிடமும் விஷ்ணுவினிடமும் ஸமபுத்தியாக இருப்பர். பேதம் பாராட்டமாட்டார். ஸதா வாக்கில் பகவன் நாம. உடலில் தேவ சின்னம். மநதில் பகவானது திருவடி இருக்கும். கற்ற வித்யையைப் பிறர்க்கு உபதேசிப்பர். நீயும் இங்ஙனம் பாகவதனுக இரு என்று மார்க்கண்டேயனுக்குக் கூறி பகவான் மறைந்தார்.

பகவான் மார்க்கண்டேயருக்குக் கூறியதாகக் காட்டி நாமனைவரும் இத்தகைய நற்குணங்களைக் கைப்பற்ற வேண்டுமென வியாஸர் உலகிற்கு எடுத்துக் காட்டுகிறுர். சில புராணங்களில் அவர் சிவபக்தரென காணப்படும். அது வேறு கல்பத்தில் நடந்தது.

### க்ஷேத்ரங்களும், தீர்த்தங்களும்.

பிரும்மா யாகம் செய்த இடமும் கங்கையும் யமுனையும் ஒன்று சேறுவதுமான ப்ரயாக க்ஷேத்ரம், காசி, கோதாவரீ, பீமரதீ, கிருஷ்ணு, ரேவா, துங்கபத்ரா, காவேரீ, பாஹுதா, தாம்ப்ரபர்ணீ, ஸரயூ, தநுஷ்கோடி முதலிய தீர்த்தங்களிலே பகவானும் வஸிப்பதால் அவை க்ஷேத்திரமும் தீர்த்தமுமாகும். இறக்கும் ஸமயமறிந்து காசிக்குச் செல்லவேண்டும். புராண சிரவணம் செய்து வந்தால் நித்யம் கங்கா ஸ்நாநம் செய்த பலனைப் பெறலாம். லிங்கத்திற்கும் விஷ்ணுவிற்கும் பேதம் பாராட்டுபவன் நற்புத்தி உள்ளவனல்ல.

**हरिरूपधरं लिङ्गं लिङ्गरूपधरो हरिः ।**
**ईषदप्यन्तरं नास्ति भेदकृत् च अनयोः कुधीः**

### பாஹுக சரிதம்.

கங்கா ஜலத்தின் திவலை பட்டமாத்ரத்தால் பாபமும் சாபமும் அகலும் என உதாஹரணமாக ஒரு கதை கூறினர். ஸூர்ய வம்சத்தில் பிறந்த விருகன் என்பவனது குமாரன் பாஹுகன். அவன் மநுநீதி தவருமல் ராஜ்ய பரிபாலநம் செய்து வந்தான். ஒரு ஸமயம் அவன் தான் மிகச் சிறந்தவன் என்று எண்ணி அஹங்காரம் கொண்

டான். அதனால் பல துற்குணங்கள் அவனிடம் குடி கொண்டன. எவரையும் அவன் மதிப்பதில்லை. எல்லோரும் இவனை வெறுத்தார்கள்.

துர்க்குண முள்ளவிடத்திலே லக்ஷ்மி வஸிப்பாளா? பகைவர் சூழ்ந்தனர். பாஹுகனை முறி அடித்தனர். பாஹுகன் தன் மனைவிகளுடன் நாட்டைவிட்டு காட்டுக்கு ஓடினான். கஷ்டம் வந்தபோது கடவுள் சிந்தை வருமல்லவா? கதறினார்கள். செய்வினைகளை நினைத்து மனம் நொந்தார்கள். வயதாய்விட்டது. நோய் பல சூழ்ந்தன. உடலை விட்டு உயிரும் பிறிந்தது. ஸதி பதியை விட்டிருப்புளோ? கதறினார்கள். உடனே உடன்கட்டை ஏறத் தீர்மானித்தார்கள். ஆனால் மூத்தவள் கர்ப்பிணியாக இருந்தாள். கர்ப்பிணி கருவைக் காக்கவேண்டும். அதே தருமம். ஆனாலவள் கருவைவிட பதியே பெரிதென எண்ணினாள்.

இதை யறிந்த ஔர்வமுனி அவளைத் தடுத்து தர்மத்தைக் கூறினார். இரு ராஜபத்னிகளையும் தனது ஆசிரமத்திலே வைத்துக் காத்தார். பொருமை கொண்ட இளையவள் மூத்தவளது கர்ப்பத்தை அழிக்க நினைத்தாள். உணவுடன் விஷத்தைக் கலந்தளித்தாள். ஔர்வர் தனது தபோபலத்தால், விஷம் தாயையும் சேயையும் கொல்லாமல் காத்தார். ஆண் குழந்தை பிறந்தது. அவனுடன் விஷமும் விழுந்தது. கரமென்ற விஷத்துடன் கூடப் பிறந்தான். ஆதலால் ஸகரன் எனப்பட்டான். உசிதப்படி ஜாதகர்மா செய்து ஸகரனை வளர்த்தார். வயது வந்தவுடன் கல்வி கற்பித்தார்.

தெய்வாநுகூலம் இருந்தது. வஸிஷ்டரும் ஸகரனுக்கு அருள் புரிந்தார். பகைவனை வென்று ஸ்வராஜ்யத்தை ஆண்டான் அரசகுமாரன். விதர்ப்பனது பெண்களான கேசினீ ஸுமதி என்பவர்களை மணந்தான். பல்லாண்டுகளாகியும் இருவருக்கும் புத்திர பாக்யம் கிட்டவில்லை. ஔர்வரிடம் சென்றனர். வேண்டியபடி புத்ரனைக் கேள் என அவர் கூறியபடி கேசினீ வம்ச விருத்தி செய்யும் ஒரு புத்ரனையும் ஸுமதி அறுபது ஆயிரம் புத்ரர்களையும் பெற்றனர். அஸமஞ்ஜஸன் என்ற மூத்தவனது புத்ரன் பித்தனைப்போலிருந்தான். அம்சுமான் என அவனுக்கு ஒரு புதல்வன் உண்டானான்.

ஸுமதியின் புதல்வர் விரரும் சூரருமாக இருந்தனர். அரக்கரைப்போல் ஸாதுக்களை ஹிம்ஸித்தனர். தேவர்கள் கபிலரிடம் சென்று முறையிட்டனர். உலகிற்குத் திங் கிழைப்பவர் வெகு நாள் வாழமாட்டார் என்றாரவர்.

அச்சமயம் ஸகரன் ஒரு அசுவமேதம் செய்தான். இந்திரன் தனது பதவிக்கு அவன் வந்துவிடுவானோ என அஞ்சினன். ஒருவருமறியாமல் குதிரையைப் பாதாளத் தில் கபிலர் தவம் செய்யுமிடத்தே கட்டிச் சென்றான். குதிரையைத் தேடிச்சென்ற ஸகர புத்ரர்கள் பூமியைத் தோண்டி பாதாளஞ்சென்றனர். முனிவரே அசுவத்தை அப ஹரித்தார் என காலால் அவரை உதைத்தார்கள். அவரது கோபக் கனல் கிளம்பி எல்லோரையும் சாம்பலாக்கிற்று. அம்சுமான் குதிரையை மீட்டுவந்தான். அவன் வம்சத் தில் பிறந்த பகீரதன் கங்கையைக் கொண்டு வந்து ஸகர புத்ரர்களை பிரும்மலோகத்திற் கனுப்பினார். இக் கதை பல புராணங்களிலு மிருக்கின்றது. வஸிஷ்டரது சாபத் தால் ராக்ஷஸனான திவோதாஸனும் கங்கா ஜலத்தால் சாபம் நீங்கப்பெற்றான்.

## தன் வினை தன்னைச் சுடும்.

தேவரும் அஸுரரும் ஸதா போரிடுவர். ஜயாபஜயம் மாறிமாறி வரும். மஹாபலி ஒரு சமயம் மூவுலகை யும் ஆண்டான். தேவர் அஸுரர்க்கு அடிமையாகித் தொண்டு செய்தனர். இதைக் கண்டு தேவ மாதாவான அதிதி மனம் நொந்து மாலை நாடித் தவம் புரிந்தாள். மாயாவிகளான அஸுரர் தேவவேஷம் பூண்டு தாயே! எங்களை விட்டு ஏன் தவத்தால் உடலை வாட்டுகிறாய்? தவத்தை நிறுத்து என்றனர். அதிதி அதற்குச் செவி சாய்க்க வில்லை. அந்த ஆசிரமத்திற்கே தீ மூட்டினர் அஸுரர். அந்த தீ அதிதியை விட்டுவிட்டு அஸுரரையே எரித்தது.

அதிதியிடம் வாமனனாக (உபேந்திரனாக) தோன்றி பகவான் இந்திரனுக்கு ஸ்வர்க்கத்தை அளித்தார்.

## பழைய தர்மத்தை ரக்ஷிப்பதே சிறந்தது.

கௌட தேசத் தலைவனான வீரபத்திரன் வேட்டை யாட வனம் சென்றான். வெய்யிலில் வாடி தாஹம் எடுத்தது

அருகிலுள்ள தடாகத்தைக் கண்டான். ஆனலதில் ஜலம் இல்லை. தனது கத்தியால் ஒரு முழ ஆழம் தோண்டினன். நீர் உண்டாயிற்று. அரசன் தாஹமகன்றது. புத்திஸாகரன் என்ற ராஜமந்திரி, அரசே! இதை இன்னும் சிறிது ஆழமாகத் தோண்டி என்றும் நீரிருக்கும்படிச் செய்தால் பலருக்கும் பயன்படும் என்ருன். அரசனும் அதற்கு இசைந்தான். அந்த புண்யத்தால் மந்திரியும் அரசனும் மற்றெல்லா தார்மிகர்களையும் விட சிறந்த ஸுகத்தைப் பல்லாண்டுகள் அனுபவித்தார்கள். முடிவில் பிரும்மலோகம் சென்றனர். புதிதாகச் செய்வதைவிட பழையதை ரக்ஷிப்பது சிறந்த தர்மமாகும்.

## தர்ம பிராம்மண உபதேசம்.

தர்மதேவதை பிராம்மண வேடந்தரித்து பகிரதனிடம் சென்று பற்பல தர்மங்களைக் கூறி ஸகர புத்ரர்களை கங்கா ஜலத்தால் நற்கதி அடையும்படிச்செய் என வர்ணித்தது. தடாகம் கிணறு உத்யாநம் மடம் முதலியவைகளைப் புதிதாக நிர்மாணம் செய்வது புண்யம். ஆயினும் ஏற்கனவே ஒருவரால் நிர்மாணம் செய்யப்பட்டு பாழாகும் நிலையிலிருக்கும்போது அவைகளைப் புதிப்பிப்பது நூறு மடங்கு பலனைத்தரும். துலஸீ செடிகளைவைத்து வளர்ப்பது மிக புண்யகரமானது. ஸாளக்ராமத்திற்கு துவாதசி பௌர்ணமாஸீ திநங்களில் பாலாலும் நெய்யாலும் பஞ்சாமிருதத்தாலும் கரும்பு ரஸத்தாலும் சந்தன ஜலத்தாலும் அபிஷேகம் செய்தால் ஸகல பாபங்களும் அகன்று வைகுண்டம் செல்வர்.

கிருஷ்ணபக்ஷ சதுர்தசி அஷ்டமி ஸோமவாரம் இத்தகைய புண்ணிய காலங்களில் நல்லெண்ணையாலும் இளநீராலும் தேனலும் பழரஸம் பால் இவைகளாலும் சிவனுக்கு அபிஷேகம் செய்தால் கைலாஸம் செல்வதுடன் ஜீவித்திருக்கும்வரை செல்வம் நிறைந்தவனுகவும் இருப்பான். ஏழ்மை அவனிடம் தலைகாட்டாது.

பகவானது ஸன்னதியில் நெய்தீபம் ஏற்றினல் கங்கா ஸ்நாந பலன் உண்டாகும். ஸகல பாபங்களும் அகலும். குலம் விர்த்தியாகும்.

தனக்கு மிகப் பிரியமான பொருளைப் பகவானுக்கு நிவேதனம் செய்பவனும் பிராம்மணனுக்குத் தானம் செய்பவனும் இருபத்தோரு தலைமுறை ஸத்கதி அடைவதுடன் ப்ரூணஹத்தி முதலிய பாபங்கள் அகன்று ஸகல ஸம்பத்துகளையும் பெறுவான்.

அதிதிக்கு உள்ளங்காலிலும் தலையிலும் எண்ணெய் தேய்ப்பவன் கங்காதி ஸகல தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்த புண்யத்தை அடைவான். ஒருவரிடம் தானம் வாங்கியாவது கோதானம் செய்வது மிகப் புண்ணியகரமானது. தேன் வஸ்திரம் பால் தயிர் நெய் கோவுக்குப் புல் அளிப்பது பகவானது ஸன்னதியில் அகண்ட தீபம் ஏற்றுவது முதலியவை சிறந்த தர்மங்கள் ஆகும்.

## பிரதக்ஷிணம்.

ப்ரதிதினம் தேவிக்கு ஒன்று, ஸூர்யனுக்கு ஏழு, விநாயகருக்கு மூன்று, விஷ்ணுவுக்கு நான்கு, ப்ரதக்ஷிணங்களைத் தவராமல் செய்பவர் அந்தந்த தேவர்களுடைய லோகத்திற்குச் செல்வர். கோ, பிராம்மணன், ஸுமங்கலி, வழியிலுள்ள ஆலயம், அசுவத்தமரம் இவைகளை வலமாகச் செல்லவேண்டும். அது அச்வமேத பலனைத் தரும். மஹா பாபங்களையும் அகற்றும். பிரதக்ஷிணம் உடலால் ஓங்காரத்தை எழுதுவது போலாம். பலனை நாடுபவர் நித்தியம் 108 அல்லது 1008 பிரதக்ஷிணம் செய்ய வேண்டும். காமனையின்றி செய்யும் கர்மா இஷ்டத்தையும் க்ஞானத்தையும் தரும்.

## பாபமும் பிராயச்சித்தமும்.

அசுத்தமான அன்னத்தைப் புஜித்தாலும் பதிதன் அல்லது சண்டாளனைத் தீண்டினாலும் மூன்றுநாள் மூன்று வேளையும் ஸ்நானம் செய்து பஞ்சகவ்யத்தை உட்கொண்டு உபவாஸமிருத்தல் வேண்டும். பாபத்தைக் கண்ணால் காணமுடியாது. பலனைக்கொண்டு அறியலாம்.

உண்பது என்பது பசியை ஆற்றுவதற்காக மாத்திரமல்ல. மநதைச் சுத்தமாக வைத்திருக்கவும் நோய் வராமல் தடுப்பதற்காகவும் பயன்படுகிறது. ஆதலால்

உண்ணும்பொழுது ஸகலவிதமான சுத்திகளையும் கவனிக்கவேண்டும். இடம், பாகம், பொருள், அன்னமிடுபவர், அருகில் உட்காருபவர், உடல், வாக்கு, மநம், உடை, கை கால்கள், பாத்திரம், இலை, பாகத்தில் சேரும் பொருள் ஆகிய எல்லாம் சுத்தமாக இருந்தால்தான் உணவின் பயனைப் பெறலாம். ஆறு அறிவு படைத்தவன் உண்பதற்கும் ஏனைய பசு பக்ஷிகள் சாப்பிடுவதற்கும் இதுதான் பேதம். மற்றவை பசியாற்றவே உண்ணும். மநிதன் உடலுக்கும் உயிருக்கும் ஊட்டமளிக்க உண்கிருன்.

நாம் உண்ணும்போது சரீர தோஷத்தால் மலம் சிறிது துவாரத்தை விட்டு வெளியில் வந்தால் உடனே எழுந்து ஸ்நாநம் செய்யவேண்டும். பஞ்சகவ்யம் சாப்பிட்டு விட்டு ஒருநாள் உபவாஸமிருக்கவேண்டும். பஞ்சகவ்யமென்பது ஒரே பசுவின் பால் தயிர் நெய் சாணி மூத்ரம் தர்ப்பத்தின் ஜலம் இவைகளைத் தனித்தனியே வைத்து அது அதற்கேற்ற மந்திரங்களைக்கூறி கணக்குப்படி ஒன்ருகச் சேர்த்தது. இது இது இவ்வளவு இருக்க வேண்டும் என்ற கணக்குண்டு. அதை உட்கொள்வதற்கு உரிய மந்திரத்தைக்கூறி பஞ்சகவ்யத்தை உட்கொண்டால் உடலையும் மநதையும் சுத்தப்படுத்தி நோயையும் அகற்றுகிறது அது. தோலிலும் எலும்பிலும் உள்ள பாபத்தை அகற்றும்.

## தற்கொலை பாபம்.

ஏதேனும் ஒரு துக்கத்திஞல் பிராணனைவிட நினைப்பர் சிலர். நீரில் அல்லது தீயில் விழுந்தோ, விஷமுண்டோ தூக்குப்போட்டுக்கொண்டோ, கத்தியால் குத்திக்கொண்டோ உயிரை விடுவது மஹா பாபம். எந்த துக்கத்திற்காக உயிரை விடுகிருர்களோ அந்த துக்கம் அடுத்த பிறவியில் தொடர்ந்து வரும். இப்படி தற்கொலைசெய்துகொண்டதற்காக தனியான நரக சிக்ஷையும் உண்டு. அப்படி ஒருவன் இறந்தால் அவன் உடலைத் தீயிலிடலாம். சாஸ்திரங்கூறியபடி மற்ற பரலோக காரியங்களைச்செய்யலாகாது. ஓராண்டிற்குப்பிறகே தர்ப்பத்திஞல் இறந்தவன் உடலைப்போல் செய்து விதிப்படி அதைக்கொளுத்தி அன்றுமுதல் பரலோக கர்மாவைச் செய்ய வேண்டும்.

அவனுக்கு அக்கர்மாவைச் செய்யக் கூடியவனுடைய உயிரும் சாச்வதமில்லாததால் பிராயச்சித்தம் செய்து விட்டு உடனே பரலோக கர்மாவைச் செய்யலாம்.

இரண்டு சாந்திராயணம் இரண்டு தப்த கிருச்சிரம் இவைகளைச் செய்யவேண்டும் பிராயச்சித்தமாக. தாய் ஸஹோதரி குருபத்நி பெண் ஆகியவர்களில் எவரை யேனும் அறியாமல் புணர்ந்துவிட்டால் தீயில் உடலை விட வேண்டியது தவிர வேறு பிராயச்சித்தமில்லை. தெரியா மல் செய்ததற்கே இப்படி.

இங்கு பிராயச்சித்தம் செய்து கொள்ளாதவர்க்கு நரகத்தில் கடுமையான சிக்ஷை உண்டு. இங்ஙனம் தர்ம த்விஜன் பற்பல விஷயங்களைக் கூறி ஸகர புத்ரர் நற்கதி பெற கங்கையை பூமிக்குக் கொண்டுவரும்படி கூறினர். நாதேச்வர மெனும் க்ஷேத்திரத்தில் கடுந்தவம் புரிந்து கங்கையால் முன்னோரைக் கரை ஏற்றினன் பகீரதன்.

## துவஜாரோபண விரத பலன். ஸுமதி சரிதம்.

சந்திர வம்சத்தில் ஸுமதி என்றெருரு சக்கரவர்த்தி யிருந்தான். ஸுமதி என்ற மனைவியுடன் தர்ம நீதியாக அரசாண்டு வந்தான். ஸகல தர்மங்களையும் தானங்களையும் செய்வான். ஆனாலும் விசேஷமாக கார்த்தி சுக்ல த்வாதசி யன்று துவஜாரோபணம் என்ற விரதத்தைச் செய்து பகவானுடைய ஸன்னதியில் ஆநந்தத்தாண்டவமாடுவான். விபாண்டகர் என்ற முநிவர் ஏனிந்த விரதத்தில் அளவு கடந்த அன்பு காட்டுகிறுய்? என்று கேட்டார். மஹர்ஷே! முற்பிறவியில் மாலிநீ என்ற சூத்ரன் நான். நான் செய் யாத பாபமில்லை.

ஒருநாள் காட்டில் ஒரு பழைய விஷ்ணுகோவிலையும் அதனருகே ஒரு குளத்தையும் கண்டேன். நீரருந்தி அங்கு சற்று படுத்துறங்கினேன். ஏகாந்தமாக அங்கு வஸிக்க, சாணியால் மெழுகி புற்பூண்டுகளை அப்புறப் படுத்தி அந்த ஆலயத்தையே வீடாகக் கொண்டேன். அவகோகிலா எனும் ஒரு அநாதைப் பெண் அங்குவர இருவரும் தம்பதிகளாக அங்கு வஸித்தோம். எங்கள் வஸ்திரங்களை அக் கோவில் மீது உலர்த்தி மதுமாம்ஸம்

அருந்தி ஆநந்தத் தாண்டவமாடுவோம். இருவரும் நோய் வாய்பட்டு ஒரே ஸமயத்தில் இறந்தோம்.

யமகிங்கரர் எங்களைப் பாசக் கயிற்றால் கட்டி இழுத்தனர். வைகுண்டத்திலிருந்து விமானத்துடன் விஷ்ணு தாஸர் வந்து எங்களை விடுவித்து தனது விமானத்திலேற்றினர். அவர்கள் என்ன புண்யம் செய்தனர்? என்று யம தூதர் கேட்க விஷ்ணு ஆலயத்தைப் பெருக்கி மெழுகி கார்த்திகை த்வாதசியிலும் மற்ற நாட்களிலும் துவஜாரோபணம் செய்து தாண்டவமாடினர். பகவானுக்கு அது மிகப் பிரியமானது என்று கூறி பல்லாண்டு வைகுண்டத்தில் வஸிக்கும்படிச் செய்தனர். பிறகு இந்த ராஜ தம்பதி சரீரத்தையும் ராஜ்யத்தையும் முற்பிறவி அறிவையும் தந்தனர். விதியறியாமல் செய்ததற்கே ராஜ பதவி. நன்கு செய்தால் பிரும்ம பதவியும் கிட்டுமல்லவா? என்றான்.

## மாஸோபவாஸ விரதம்.

ஆஷாடம் சிராவணம் பாத்ரபதம் ஆச்விநம் இந் நான்கு மாதங்களில் ஏதாவது ஒரு மாதத்தில் சுக்லபக்ஷத்தில் ஆரம்பித்து ஒரு மாதகாலம் சுத்தோபவாஸ மிருந்தால் நரம்பு, எலும்பு முதலியவைகளிலுள்ள தோஷமும் பாபமுமகலும். முதலில் பஞ்சகவ்யம் சாப்பிட்டு பகவானுடைய ஸன்னதியில் அகண்ட தீபம் எரிய அங்கேயே வஸிக்கவேண்டும். பகவானுக்கு ஷோடச உபசார பூஜை நித்யம் செய்யவேண்டும். காலையில் நாயுருவிக்குச்சியால் பல் துலக்கவேண்டும். ஒரு மாதம் ஆனபின் பனிரண்டு பிராம்மணர்களுக்கு அன்னம் தாம்பூலம் தக்ஷிணை அளித்து பிறகு பாரணை செய்யவேண்டும். இங்ஙனம் ஆறுமுறை மாஸோபவாஸமிருப்பவர் அசுவமேதம் முதலிய ஸகல யாகங்களையும் செய்த பலனைப் பெறுவர்.

யாகம் செய்ய ஸௌகர்யமில்லாத முனிவர் இங்ஙனம் மாஸோபவாஸமிருந்ததாக ஸகல புராணங்களிலும் கூறப்படுகிறது. [ஒருநாள் கூட சுத்த உபவாஸமிருக்காத நாம் இது அஸாத்யம். அப்படி உபவாஸமிருந்ததாக நம்பவும் முடியாது என நினைக்கலாம். பழக்கமே முதற் காரணம எல்லாவற்றிற்கும். அன்றியும், நாயுருவி என்ற

ஒஷதி பசி தாஹம் களைப்பு முதலியவைகளை நீக்கவல்லது. ஆதலால் மாஸோபவாஸம் ஸாத்யமேயாகும். அன்றியும் மிகக்களைப்பு ஏற்பட்டால் பால் நீர் முதலியவைகளை உட்கொள்ளலாம். அது விரதபங்கம் செய்யாதென்கிருர்.]

## ஏகாதசியும் பத்ரசீலரும்.

நர்மதாதீரத்தில் காலவர் எனும் ஒரு முனிவர் வஸித்து வந்தார். அவருக்குக் காலவர் என்ருேர் குழந்தை பிறந்தான். அவன் சிறிய வயதிலேயே விளையாடும்போது விஷ்ணு பூஜை செய்வான். ஏகாதசியன்று சுத்த உபவாஸமிருப்பான். யார் என்ன கூறினலும் எந்த உயர்ந்த பொருளைத் தந்தாலும் அவனதை ஏகாதசியன்று புஜிப்பதில்லை. ஒருநாள் தந்தை அவனை மடிமீது வைத்து சிறிய குழந்தை நீ, ஏகாதசி உனக்கெதற்கு? என்ருர்.

இதைக் கேட்ட குழந்தை; அப்பா! நான் முற்பிறவியில் தர்மகீர்த்தி என்ற அரசனுக இருந்தேன். இளமை, அகண்ட ராஜ்யம், ப்ரபுத்வம் முதலியவைகளால் கர்வங்கொண்டு தார்மிகரை அடக்கி தர்மத்தைக் கெடுத்தேன். பல பாபங்களைச் செய்தேன். வேட்டையாட காநகஞ்சென்றேன். மான் என்னை வெகு தூரம் இழுத்துச் சென்றது. களைத்து பசி தாஹத்தால் வாடினேன். ஸேனை என்னை விட்டு வெகுதூரத்திலிருந்தது. அலைந்து திரிந்து ஒரு ஆசிரமத்தைக் கண்டேன். அன்று ஏகாதசி. அனைவரும் உபவாஸமிருந்து இரவு கண் விழித்து பகவத் சரிதம் கூறினர்கள். தூக்கமுமில்லை. நடக்க சக்தியின்றி அன்று இரவே இறந்தேன். ஏகாதசி மரணம். முனிவர் விதிப்படி துவாதசியில் தஹநம் செய்தனர்.

யமனது ஸபையில் என்னைப்பற்றி விசாரம் நடந்தது. ஏகாதசி உபவாஸம், கண் விழிப்பு ஆகிய புண்யத்தால் எனது ஸகல பாபங்களும் அகன்றதால் நான் ஒரு வேதியனுகி முக்தி பெறட்டும் என அனுப்பிவிட்டார்கள். ஆதலால் பூர்வ ஜன்மவாஸனையும் அறிவும் என்னை விடவில்லை. உமது புத்திரனுகப் பிறந்தேன். இனி பிறப்பிறப்பை அறுக்கும் க்ஞானத்தாலும் பக்தியாலும் நற்கதி பெறுவேன் என்ருர். அத்தகைய புண்யத்தைத் தருவது ஏகாதசி விருதம்.

## கலியில் விலக்கத்தக்கவை.

நமது கண்ணுக்கும் புத்திக்கும் எட்டாதது தர்மம். அந்த தர்மம் இதுதான் என்று காட்டுகிறது வேதம். அதன் கருத்தை விளக்கமாகக் கூறுவது தர்மநூல்கள். வேதப்பொருளை நினைத்துக் கூறுவதால் அது ஸ்மிருதி எனப்படும். முனிவர்களே ஸ்மிருதி கர்த்தா என்றாலும் ஒரு சிறிய தர்மத்தைக்கூட அவர்கள் தன்னிஷ்டப்படி கூறமுடியாது. தர்மம் சிலது எல்லா காலத்திற்கும் எல்லா தேசத்திற்கும் பொதுவானதேயாம். சில தர்மம் காலத்தினாலும் அனுஷ்டிப்பவராலும் மாறுபட்டிருக் கும். தர்மம் ஒன்றுதானே. காலத்திற்காக செய்ப வருக்காக மாறுமா? என்று கேட்கலாகாது. அந்த தர்மத்தை நாமும் நமது கால தேசத்திற் கேற்றபடி மாற்றிக்கொள்ளலாமே என்றும் கூறலாகாது. வேதங் கூறியபடி சிற்சில தர்மங்களைச் சிற்சில காலத்தில் அனுஷ்டிக்கலாம். சிலதைக் கைவிட வேண்டும். இந்த விஷயத்தில் சாஸ்திரங் கூறுவதே பிரமாணம்.

இதர யுகங்களில் அனுஷ்டித்துவந்த சில தர்மங்களைக் கலியில் செய்யக் கூடாதென புராணம் கூறுகிறது. இவைகளில் சிலவை நான்கு வர்ணத்தாருக்கும் பொருந் தும். சிலது பிராம்மணருக்கு மட்டுமே பொருந்தும். கலியில் பிராம்மணர் ஸமுத்ர யாத்ரை செய்து அன்ய தேசங்களில் வஸிக்கக் கூடாது. ஸன்யாஸம் செய்து கொள்ளக் கூடாது. தனது வர்ணத்தை விட்டு அன்ய வர்ணத்தில் விவாஹம் செய்துகொள்ளக் கூடாது. ஸந் தான மில்லாதவள் தனது குல விருத்திக்காகத் தனது புருஷனின் ஸஹோதரன் மூலமாக குழந்தை பெற்றுக் கொள்ளலாகாது. மதுபர்க்கத்தில் பசுவை ஹிம்ஸிக்கக் கூடாது. சிராத்தத்தில் மாம்ஸம் வழங்கக் கூடாது. பிராம்மணர் மாம்ஸம் உண்ணக் கூடாது. வாநப்ரஸ்த ஆச்ரமத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது. ருதுவாகாத கன்யகை விதவை யானாலும் அவளுக்கு மறு விவாஹம் செய்யக்கூடாது. நைஷ்டிக பிரும்மசர்யம் கூடாது. நரமேத யாகம் அச்வமேதயாகம் கோமேதயாகம் இவைகளைச் செய்யக் கூடாது. வடக்கு நோக்கி நடந்துகொண்டே உயிர் விடுவதான மஹாப்ரஸ்தாநம் செய்யக் கூடாது.

## ஸதாசாரம்.

ஆசரிக்கவேண்டியது – செய்யவேண்டியது – ஆதலால் அதற்கு ஆசாரம் என்று பெயர். ஸத்துக்கள் செய்து வந்ததால் அது ஸதாசாரம் எனப்படும். ஆசாரமுள்ளவனுக்கு ஆயுஸ் ஆரோக்யம் செல்வம் பலம் கீர்த்தி முதலியன உண்டாகும். ஆசாரமில்லாதவனுக்கு அகால மரணம் நோய் ஏழ்மை முதலியன தோன்றும். ஆசாரமில்லாதவர் செய்யும் புண்யம் பூர்ண பலனைத் தராது. ஆசாரம் உடலுக்கும் மநதிற்கும் ஜீவனுக்கும் நன்மை தரும். [இது பற்றி தனி நூல் ஸதாசாரம் என்ற பெயரால் வெளியிட்டிருக்கிறோம். விலை அணா 10. தபால் செலவு 2 அணா. அதில் மிக விஸ்தாரமாக யுக்தியுடன் எல்லாம் கூறப்பட்டிருக்கிறது.]

## பிரும்மசாரி தர்மம்.

ஆசாரத்திற்குத் தர்மம் என்று ஒரு பெயருண்டு. பிரும்ம-வேதம், சாரி-கற்பவன். வேதங் கற்கும் காலம் இதல்லாவிடினும் பிரும்மசாரிக்குக் கூறும் தர்மம் மாணவருக்குப் பொருத்தமானது. மாணவன் குருவைத்தெய்வமாகக் கருதவேண்டும். அவரிட்ட வேலையைப் பணிவுடனும் அன்புடனும் செய்ய வேண்டும். அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும். எப்போதும் சுறு சுறுப்பாக இருக்க வேண்டும். படிப்பிலேயே முழு கவனம் செலுத்த வேண்டும். ஆட்டம் பாட்டு நாடகம் ஸ்திரீகளின் கூட்டம் ஊர் வம்பு அலங்காரம் வாஸனை தாம்பூலம் ருசிபார்த்து உண்ணுதல் அநாவசியமாக ஊர் திரிதல் கூடாது.

குருவைக் கண்டவுடன் எழுந்து நிற்கவேண்டும். அவர் அமர்ந்தபின் அவர் உத்தரவு பெற்று உட்கார வேண்டும். ஒவ்வொரு நாளும் குருவை நமஸ்காரம் செய்யவேண்டும். குரு உட்காரும் ஆஸநத்தில் உட்காரக் கூடாது. பகலில் தூங்கக் கூடாது. பெரியோர் எவரையுமே நீ என்று கூறக்கூடாது. குருவின் பெயரைக் கூறக்கூடாது. பாஷண்டர்களுடன் பேசக்கூடாது. எந்த கூட்டத்திலும் கலக்கக் கூடாது. பெரியோரை நமஸ்கரித்து கல்விக்கு விரோதமில்லாமல் அவருக்குப் பணிவிடை செய்யவேண்டும்.

கல்வி முடியும்வரை பந்துக்கள் விட்டு விவாஹம் முதலிய கார்யங்களுக்கு அடிக்கடி போகலாகாது. ஏகாக்கிர சித்தமாக படித்ததைத் திருப்பிப் படிக்கவேண்டும்.

### யாருக்கு நமஸ்காரம் செய்யலாம் ?

பலர் இருந்தால் முதலில் குருவிற்கே நமஸ்காரம் செய்யவேண்டும். நாஸ்திகன் பதிதன் தர்மத்தை மீறினவன் நன்றி கெட்டவன் சாஸ்திரமறியா புரோஹிதன் திருடன் கபடமுள்ளவன் பைத்யம்பிடித்தவன் அசுத்தமானவன் நடந்துகொண்டிருப்பவன் எண்ணெய் தேய்த்துக்கொண்டிருப்பவன் ஜபம் செய்பவன் கோபத்தோடிருப்பவன் வாந்தி செய்பவன் ஜலத்திலிருப்பவன் உண்பவன் படுத்திருப்பவன் ரஜஸ்வலை பிரஸவ நீட்டு போகாதவள் பர்த்தாவை ஹிம்ஸிப்பவள் நன்றி கெட்டவள் கையில் குழந்தையை வைத்திருப்பவர் முதலியவர்களுக்கு நமஸ்காரம் செய்யக்கூடாது. கோயில் ஸபை யாகசாலை ஆகிய இடங்களில் எல்லோருக்கும் சேர்த்து நமஸ்காரம் செய்யவேண்டும். தனியாக ஒருவரை வணங்கக் கூடாது. யக்ஞம் செய்யும்போதும் தர்ப்பணம் செய்யும் போதும் நமஸ்காரம் செய்யக்கூடாது. பிரத்யபிவாதநம் அல்லது ஆசிர்வாதம் செய்யத் தெரியாதவருக்கு நமஸ்காரம் கூடாது. செய்தால் ஏற்கனவே செய்திருந்த புண்யம் அகலும்.

வேதாத்யயநம் பிக்ஷை எடுத்தல் ஸதாசாரம் சிராத்தம் திதிநிர்ணயம் மஹா பாதகங்களுக்கு ப்ராயச்சித்தம் புண்ய பாபம் செய்தவர் போகும் வழி, ஸம்ஸார யாதனை அதை அகற்ற பகவானை ஆராதித்தல் பக்தியால் பாபமகலுவது மோக்ஷஸாதநமானது க்ஞானத்திற்கு ஸாதநம் யம நியம ஆஸந பிராணாயாம பிரத்யாஹார தியாந தாரண ஸமாதி என்ற எட்டு அங்கத்துடன் கூடிய யோகம் இம்மைக்கும் மறுமை இன்பத்திற்கும் காரணமானது. ஹரி பக்தி முதலியவைகளைத் தனித்தனி அத்தியாயத்தால் வர்ணிக்கிறார்.

### வேதமாலி யக்ஞமாலி ஸுமாலி சரிதம்.

ரைவத மன்வந்தரத்தில் வேதமாலி எனும் வேதியர் ஒருவர் இருந்தார். அவர் மிகப் படித்தவரே ஆனாலும்

மனைவி மக்களைக் காக்க விற்கத்தகாததை விற்றார். தானம் வாங்கத் தகாததை வாங்கினார். சண்டாளனிடங் கூட தானம் வாங்கினார். விரதம் தீர்த்த யாத்ரை பலன் இவைகளையும் விற்பார். அவருக்கு யக்ஞமாலி ஸுமாலி என்ற இரு புத்திரர்கள் உண்டானார்கள். மிக்க அன்புடன் அவர்களைப் போஷித்து வந்தார். பிரதி நிதமும் வருவாய் வந்தவண்ணமிருந்தது.

ஒருநாள் தான் சேர்த்த பொருள் எவ்வள விருக்கும் என எண்ணிப் பார்த்தார். பல கோடிகள் இருந்தன. அதைக்கண்டு அகமகிழ்ந்தார். ஆனால் இவ்வளவு பொருள் போதும் என்ற எண்ணம் மாத்திரம் உண்டாக வில்லை. நன்றாக வேத சாஸ்திர புராணம் கற்றவர். ஆதலால் சிறிது சிறிதாக நற்புத்தி உண்டாயிற்று. தனக்குள்ளே யோசித்தார்.

நமது உடல் தளர்ந்தது. ஐம்புலன்களும் ஜீர்ணமாயின. பல் உதிர்ந்தது. கேசம் நரைத்து விழுந்தது. ஆசை ஒன்றுதான் தளரவில்லை. விருத்தி யாகின்றது. ஆசை மிகக்கொடியது. ஆசையால் தானம் வாங்கினேன். எனக்குத் தானம் செய்த சண்டாளன் என்னைவிட மேலாவான். இதுவரை யான் பொருளாசைகொண்டு பொருள் தேடி வைத்தேன். யாதொரு தான தர்மமும் செய்திலேன். வயதாகிவிட்டது. எந்த க்ஷணம் மரணம் வருமோ அறியேன். தேடிய பொருள் இங்கே நின்றுவிடும். தானம் செய்த பொருளே என்னுடன் வரும். ஆதலால் இனி பரலோகத்திற்கு வேண்டியதைக் கவனிப்பேன் என ஸங்கல்பம் செய்துகொண்டான்.

தேடிய பொருளில் இரு பாகங்களை இரு புத்ரர்களுக்கும் அளித்தான். இரு பாகங்களைத் தன் கையில் எடுத்துக்கொண்டான். அதைக்கொண்டு தனது பாபங்களை அகற்றக் கருதினான். தண்ணீர் பந்தல் தேவாலய நிர்மாணம் கங்கா தீரத்தில் அன்னதானம் முதலியவைகளைச் செய்து பதரிகாசிரமம் சென்றான். நரநாராயணர் உள்ள இடத்திலமர்ந்து கடுந்தவம் புரியக் கருதினான். ஜானந்தி என்ற முனிவரது திருவடியை ஸேவித்து நல்லுபதேசம் புரியும்படி வேண்டினான்.

## ஜாநந்தி கூறிய உபதேசம்.

ஸம்ஸார பாசத்தை அறுப்பது விஷ்ணு பக்தியே ஆகும். பராபவாதம் கோள் சொல்லுதல் இவைகளை விடு. ஸதா பரோபகாரம் செய். காமம் கோபம் லோபம் மதம் மோஹம் மாத்ஸர்யம் என்ற ஆறு பகை வரை ஜயி. உலகை எல்லாம் உன்னைப்போல் நினை. டம்பம் அஹங்காரம் கடினமாகப் பேசுதல் இவைகளை விலக்கு. பிராணிகளிடம் தயை காட்டு. கேட்பவருக்குத் தருமத்தைக் கூறு. உனது குடும்பத்துடன் அதிதிக்கு நித்யம் அன்னமளி.

கிடைத்த பொருளைக் கொண்டு பகவானை நித்யம் ஆராதநம் செய். தேவரிஷி பித்ரு தர்ப்பணங்களை மறவாதே. அக்நி பூஜை மிக முக்யமானது. தேவாலயங்களைச் சுத்தப்படுத்து. முடிந்தவரை இடிந்த இடங்களைப் புதிதாகச் செய். கோவிலிலும் வீதியிலும் விளக்கேற்றி வை. நித்யம் சிறிது நேரம் புராண சிரவணம் செய். வேதாந்த விசாரம் செய். இவ்வரிய உபதேசங்களைக் கேட்டு வேதமாலி நன்கு அனுஷ்டித்து வந்தான். அவனுக்கே சிறிது ஆத்மக்ஞானம் தோன்ற தானே வேதாந்த விசாரம் செய்தான். மறுபடியும் ஜாநந்தி முநிவரை அடைந்து உபதேசம் பெற்றான். வாரணஸீ க்ஷேத்திரம் வந்து பூத உடலை விட்டு மோக்ஷ ஸாம்ராஜ்யம் அடைந்தான்.

## ஆலயத்தை மெழுகிய பயன்.

வேதமாலியின் புதல்வர் ஸுமாலி யக்ஞமாலி என்பவர் தந்தையின் பொருளைக்கொண்டு இன்பமாக வாழ்ந்து வந்தனர். யக்ஞமாலி தனது பொருள்களை எல்லாம் துர்மார்க்கத்தில் செலவுசெய்து ஏழையானான். தனது ஸஹோதரன் எவ்வளவு ஹிதமாகச் சொல்லியும் கேளாமல் திருடுவது சூதாடுவது மது மாம்ஸ மருந்துவது வேசி வீடு செல்வது போன்ற காரியங்களில் ஈடுபட்டு வந்தான். நல்லுபதேசம் செய்த அண்ணனை அடித்துக் கொல்ல முயற்சித்தான். ஊரார் ஒன்றுகூடி யக்ஞமாலியைத் தடுத்து சிறைப்படுத்தினார்கள்.

ஸஹோதர வாஞ்சையால் அவனை விடுவித்து ஸுமாலி தனது பொருளில் பகுதியளித்து நியாய வழியில் வாழும் படி கூறினன். பலமான பாபவாஸனை விடுமா? மறுபடியும் தீயகாரியமே செய்துவந்தான். ஸுமாலியோ ஸதா தானம் தர்மம் ஜபம் பூஜை ஹோமம் முதலிய நற்காரியங்களைச் செய்துவந்தான். தற்செயலாக இருவரும் ஒரே நாளில் இறந்தனர். மாலியை விஷ்ணு கிங்கரர் விமானத்திலேற்றி வைகுண்டத்திற்கு அழைத்துச்சென்றனர். வழியில் பசி தாஹம் எனக் கூக்குறலிடும் ஸஹோதரனைப் பார்த்து பரிதாபம் அடைந்தார். அவனுக்கு எப்படி நற்கதி என வினவினர். விஷ்ணு தூதர் ஸுமாலியைப் பார்த்து நீ முற்பிறவியில் விச்வம்பரன் என்ற வைச்யனுக இருந்தாய். நீ செய்யாத பாபமில்லை. ஒரு நாள் நல்ல மழை பொழிந்து ஊரெல்லாம் ஒரே சேருக இருந்தது. ஒரு விஷ்ணு ஆலயம் சென்ருய். அங்கும் ஒரே சேருக இருக்க அதை எடுத்து சுத்தப்படுத்தி பசுஞ் சாணியால் மெழுகி அங்கு தங்கினுய். அந்த புண்யத்தால் நீ இந்த உயர் ஜன்மாவை அடைந்தாய். ஒரு முழம் ஆலயத்தை மெழுகிய புண்ணியத்தை அவனுக்குத் தானம் செய் என்ருர். அப்படியே ஸுமாலி தானம் செய்ய யக்ஞமாலியும் இவருடன் வைகுண்டம் சென்ருர்.

## அபிஷேக தீர்த்த மஹிமை. குலிகன்.

கிருதயுகத்தில் குலிகன் என்ருேர் வேடனிருந்தான். பிராணிகளைக் கொல்வதுடன் திருடுவதையும் தொழிலாகக் கொண்டான். ஒரு நாள் ஒரு விஷ்ணு ஆலயத்தில் நுழைந்து ஆங்குள்ள பொருள்களைத் திருடக் கருதினன். அங்கு உத்தங்கர் என்ற ஒரு பக்தர் படுத்திருந்தார். அவரைக் கொல்ல அவர் மார்புமீது உட்கார்ந்து கழுத்தை அழுத்த ஆரம்பித்தான். அவர் இனிய சொற்கள்ால் தர்ம தத்துவத்தை எடுத்துக் கூறினர். நான் உனக்கு யாதொரு திங்கையும் செய்யவில்லை. நீ என்னைக் கொல்ல விரும்புகிருய். மாயையே இதற்குக் காரணம்.

மான் மீன் ஸாது இவர்கள் காட்டில் உள்ள புற்களை மேய்ந்தும் ஜலத்திலுள்ள அசுத்தங்களை உண்டும் இயற்கையான ஸந்தோஷத்திலும் வளர்கின்றனர். யாருக்கும்

யாதொரு தீங்கும் செய்வதில்லை. ஆயினும் வேடன் மானுக்கும் சம்படவன் மீனுக்கும் ஸாதுக்களுக்கு துஷ்டர்களும் காரணமின்றி பகைவர்களாயிருக்கின்றனர்.

**मृगमीन सज्जनानां तृणजल सन्तोष विहित वृत्तीनां ।**
**लुब्धक धीवर पिशुनाः निष्कारण वैरिणो जगति ॥**

பர்த்ருஹரி முதலிய கவிகள் தமது நீதி நூலில் இதை அப்படியே அமைத்திருக்கின்றனர். இதைக் கேட்டவுடன் நல்லாரின் சேர்க்கையாலும் நல்லாரின் சொல்லாலும் வேடனுக்கும் நல்ல புத்தி தோன்றிற்று.

ஐயனே! யான் மஹாபாபி எண்ணிறந்த ஜீவராசிகளைக்கொன்றேன். பலறைக்கொள்ளையடித்தேன். உம்மையும் கொல்லவந்தேன். உமது அரிய சொல் என் மநதையும் கவர்ந்தது. எனது பாபமகலவும் நான் நற்கதி பெறவும் ஒரு உபாயம் கூறவேண்டும் என பணிந்து வேண்டினன். அவர் அருகிலுள்ள அபிஷேக தீர்த்தத்தால் அவனை ப்ரோக்ஷித்து உட்கொள்ளும்படி கூறினர். உள்ளம் உருக அவன் கதறியதாலும் அவனது ஆயுள் அந்த நிமிஷம் முடிவடைந்ததாலும் இறந்தான். வைகுண்டத்திலிருந்து விமானம் வந்தது. திவ்ய சரீரம் பெற்றான். பேருபகாரியான உத்தங்கரை வணங்கி துதித்தான். வைகுண்டம் சென்றான்.

இக்கதையை அதிசயோக்தி அல்லது பெருமையைக் கூற வந்த கதை என நினைக்கலாகாது. முற்பிறவிகளில் அவன் செய்த புண்யம் பழுத்த ஸமயமது. ஆதலால் உள்ளம் உருகினன். அதைப்புஜித்தபின் பாபம் செய்ய அவனுக்கு இடமில்லை, கருணாமூர்த்தியான பகவானது கருணைக்குப் பாத்ர மானன். உத்தங்கரும் பகவானைத் துதித்து வைகுண்டஞ் சென்றார்.

### ஜயத்வஜ சரிதம் அல்லது ஆலயத்தைப்பெருக்குதல்.

ரேவாதீரத்தில் ஜயத்வஜன் என்றோர் அரசனிருந்தான். அவன் ஸகலவிதமான தர்மங்களையும் செய்து வந்தான். முக்யமாக ஆலயத்தைத் தன் கையினால் பெருக்கி வந்தான். அவனது புரோஹிதரான வீதி

ஹோத்ரர் மன்னனைப்பார்த்து, பலவேலைக்காரர் இருக்க நீர் ஏன் இந்த வேலை செய்யவேண்டும் என வினவினர். அரசன் தனது புரோஹிதரை வணங்கி, ஸ்வாமின் எனது முற்பிறவியைக்கேளும். பிறகு நானிந்த வேலை ஏன் செய்கிறேன் என உமக்கே தெரியும் என்று கூறி தனது பழைய சரிதத்தை விளக்கினர்.

முன் கிருதயுகத்தில் ஸ்வாரோசிஷ மன்வந்தரத்தில் ரைவதர் என்று ஒரு வேதியரிருந்தார். அவர் இறந்த பின் அவரது மனைவி சண்டாளனை மணந்து என்னைப் பெற்றாள். நானும் பற்பல கொடிய பாபங்களைச் செய்தேன். ஒரு தாஸியுடன் ஆலயத்தில் என் வஸ்த்ரத்தால் பெரிக்கிவிட்டு மனைவியுடன் படுத்தேன். பக்தர்கள் தகாதகாரியம் செய்த எங்களை அடித்துக்கொன்றனர். எங்களைப் பிடித்துச்சென்ற யம கிங்கரர்களை விரட்டி விஷ்ணுகிங்கரர் வைகுண்டமழைத்துச் சென்றனர். பல்லாண்டுகளுக்குப்பிறகு இந்த ராஜ சரீரம் தந்தனர். பரம நீசனும் பாபியுமான என்னை அரசனுக்கியது கோவிலைப் பெருக்கிய புண்யமே.

பரத்வாஜரும் பிருகுவும் ஸம்வாதம் செய்துக் கொள்ளும் வகையில் உலக ஸிருஷ்டி வர்ணாச்ரம தர்மம் தியானயோகம் முதலியவைகளை வர்ணிக்கிறார்.

### கேசித்வஜ காண்டிக்ய ஸம்வாதம்.

அமித்ர த்வஜன் கிருசத்வஜன் என ஜநக வம்சத்திலே இரு ஸகோதர்களிருந்தனர். கிருசத்வஜனது புத்திரன் கேசித்வஜன். அமித்ரத்வஜனது புதல்வன் காண்டிக்யன். காண்டிக்யன் ஸதா கர்மமார்க்கத்திலீடு பட்டவன். கேசித்வஜன் படையெடுத்துவந்து காண்டிக்யனது ராஜ்யத்தைப்பிடுங்கிக்கொண்டு அவனைப் புரோஹிதனுடன் காட்டிற்கு விறட்டி விட்டார். அவர் வேதாந்த க்ஞானத்துடன் யக்ஞத்தையும் காட்டில்கூட விடாமல் செய்து வந்தார்.

ஒரு ஸமயம் கேசித்வஜன் ஒரு யாகத்தை ஆரம்பித்தான். யாக பசுவை புலிகொன்று சென்றது. அதற்கு என்ன பிராயச்சித்தம் என ரித்விக்குகளைக் கேட்டான். அவர்கள் நாங்களதை அறியோம். கசேரு

என்பவரைக்கேள் என்றார்கள். அவரிடம் சென்று கேட்டான் அரசன். அவர் நானறியேன். சுநகமுநிவரைக்கேள் என்றார். அவரிடம் சென்றான் அரசன். அவர் இதை ஒருவருமறியார். உனது சத்ருவான காண்டிக்யன் ஒருவனே அறிவான் என்றார். அரசன் தீக்ஷா நியமத்துடன் அங்கு சென்றார்.

காண்டிக்யனும் அவனது மந்திரிகளும் கேசித்வஜனைக் கண்டு அஞ்சி தன்னைக் கொல்லவருவதாகக் கருதினர். பிறகு அவன் வந்தகாரியத்தைத் தெரிந்துகொண்டு விதிப்படி பிராயச்சித்தம் கூறினார். அரசன் வேள்வியை முடித்துவிட்டு மறுபடியும் காண்டிக்யனைத் தேடிவந்தான். தாங்கள் வேள்வி பூர்ணமாக உதவி புரிந்ததால் உமக்கு குரு தக்ஷிணை தர வந்திருக்கிறேன். வேண்டியதைக்கேட்கலாம் என்றார்.

மந்திரிகளும் புரோஹிதரும் அவனது ராஜ்யத்தைக் கேட்கலாமென்றனர். காண்டிக்யன், வேதாந்தத்தைத் தனக்குக் கூறுவதே தக்ஷிணை என்றார் .ராஜ்யத்தைவிட்டு வேதாந்தம் கேட்பதேன் என்றார் கேசித்வஜன். ராஜ்யமிருந்தால் அதை நன்றாகப் பரிபாலநம் செய்வது க்ஷத்திரிய தர்மம். அதனால் வரக்கூடிய புண்ணியம் அழிவுள்ளது. வேதாந்த வித்யையால் வரும் இன்பம் அளவற்றது, அழிவற்றது. ஆதலால் அதையே யான் விரும்பினேன் என்றார்.

## ஆத்ம தத்வம்.

காண்டிக்யருக்கு கேசித்வஜன் கூறியது:— அவித்யை என்ற மரத்திலிருந்து உண்டான ஸம்ஸார விதை. ஆத்மா அல்லாததை ஆத்மா என்றும், தன்னுடையதல்லாத பொருளில் தன்னுடையது என்றும் இருவகையாகப் பிரிகிறது. பஞ்ச பூதங்களாகிய உடலை ஆத்மா நான் என்று எண்ணுவதே அவித்யை. வீடு மனைவி மக்கள் முதலியவற்றில் என்னுடையது இது என்ற எண்ணமும் அக்ஞாநத்தால் உண்டாவது. பஞ்ச பூதவடிவமான உடலில் ஐந்து இந்திரியங்களால் உண்டாகும் விஷய ஸுகத்தை அனுபவிக்கிறான் ஜீவன். இது மண் குடத்திற்கு மண்ணு பூசுவதுபோலாகும்.

அதனால் நான் போகத்தை அனுபவிக்கிறேன் என கர்வங்கொள்வது அறியாமை. அநேக ஜன்ம வாஸனை எனும் அழுக்கை க்ஞாநமெனும் நீரால் அலம்பினால் ஸம்ஸாரி எனும் வழிப்போக்கனுக்கு சோக மோஹம் எனும் சிரமம் நீங்கும். ஆத்மா க்ஞாநமயன் நிர்மலன். பிரகிருதியின் குணம் துக்கம் அக்ஞாநம். பிரகிருதியினது ஸங்கத்தால் அஹங்காரத்திற்கு ஆளாகிறது ஆத்மா.

## யோகஸ்வரூபம்.

பிரும்மத்தினிடம் நமது மநம் லயமாகும்படிசெய்வது யோகம். மநம் விஷயத்தால் கட்டப்பட்டபோது பந்தம் விஷயத்தை விலக்கியபோது முக்தி. விஷயங்களிலிருந்து மநதை இழுத்து ஆத்ம ஸ்வரூபத்தில் லயப்படும்படி செய்வது யோகம். அநேக ஜன்ம அப்யாஸத்தினால் தான் யோகஸித்தி ஏற்படும். ஆத்மாவுடன் ஜீவன் சேருவதால் அதற்கு யோகம் என்று பெயர்.

பிராணாயாமத்தால் வாயுவும் பிரத்யாஹாரத்தால் இந்திரியங்களும் வசமாகும். ஸநகாதிகள் பிரும்ம பாவனையால் ஸித்திபெற்றனர். தேவர்கள் கர்மபாவனையால் ஸித்தராயினர். ஹிரண்ய கர்ப்பர் பிரும்ம கர்ம பாவனையால் ஸித்திஅடைந்தனர். ஆஹார நியமத்துடன் காலை மாலைகளில் கொஞ்சம் கொஞ்சமாக யோகாப்யாஸம் செய்யவேண்டும். யமநியம ஆஸந ப்ராணாயாம பிரத்யாஹார தியாந தாரண ஸமாதி என்பவை யோகாங்கமாம். இவைகளாலேயே சில லௌகிக ஸித்திகள் தோன்றும். அதைக்கண்டு மகிழ்ந்து ஏமாறக்கூடாது. ஸர்வதுக்கங்களையும் அகற்றுவது யோகம். நியமங்களைக் கைவிட்டால் யோகம் சில தீங்குகளை உண்டு பண்ணும். ஸத்குரு இல்லாமல் யோகாப்யாஸத்தில் இறங்கக்கூடாது.

மநோபலம் அகன்றபின் பகவானை தியாநம் செய்ய வேண்டும். முதலில் சங்க சக்ர கதாபாணியாக தியாநம் செய்து பிறகு உலகெலாம் விஷ்ணு என்று தியாநம் செய்யவேண்டும். யாதொரு குற்றமும் இல்லாத சுத்தமான இடத்தில் அமர்ந்து கண்களை நன்கு மூடாமலும்

நன்ருகத்திறக்காமலும் மூக்கின் நுனியைப் பார்ப்பது போன்ற நிலையில் கண்களைவைத்து யோகாப்யாஸம் செய்யவேண்டும். ஸத்சித் ஆநந்தம் என்ற வடிவனுக பரமாத்மாவை த்யாநம் செய்து வந்தால் ஸம்ஸாரபாசம் அகன்று மோக்ஷம் உண்டாகும். கேசித்வஜன் கூறியபடி காண்டிக்யர் யோகாப்யாஸம் செய்து முக்திபெற்ருர்.

## ஜடபரத சரிதம்.

பாகவதம் முதலிய பல புராணங்களிலும் இச்சரிதத்தைக் காணலாம். இவர் உயர்ந்த ராஜரிஷி. அக்ஞாநத்தை அகற்றி க்ஞாநாப்யாஸத்திலீடு பட்டார். க்ஞாநம் உதித்தால் ஆகாமி ஸஞ்சிதம் என்ற இருவகை கர்மாக்களும் எரிந்துவிடும். பிராரப்தம் என்ற பாபம் அனுபவித்தால் தான் அகலும். அன்றியும் பிராரப்த கர்மாவின் பலன் அந்த பிறவியோடு மாத்ரம் போகாமல் மற்றும் பல ஜன்மாக்களையும் தரும் [இந்த தத்துவத்தை பரதர் எனும் ராஜரிஷி மானுகி ஜடபரதன் என்ற பிராம்மணனுகி காளிக்கு பலியாகி ரஹூகண அரசனது பல்லக்கைச்சுமந்து இப்படிப் பலவகையிலும் காட்டுகிருர் புராணமுநி.]

ரஹூகணன் ஜடபரதரைப் பார்த்து நீ இவ்வளவு பெருமனுயிருக்கிருய். பல்லக்கைச் சுமக்கமுடியவில்லையா? என்று கேட்டதைக் காரணமாகக்கொண்டு உடல் அல்ல ஆத்மா மநமல்ல ஆத்மா பஞ்சகோசத்திற்கு மேலானவன் என்று கூறும் அழகு மிக ரஸமானது. வேதாந்தம் கடினமானது. மநதில் ஏறுவது கஷ்டம். வியாஸர் அதை இப்படி கதைமூலம் ரஸம் ததும்ப உபதேசிக்கிருர்.

## ஸங்கீத ஸ்வரலக்ஷணம். வேதஸ்வரம்.

ஒரு மந்திரத்தைத் தப்பான ஸ்வரத்துடனும் எழுத்துடனும் கூறினல் அது அந்த மந்திர அர்த்தத்தைக்கூருது. வீணுகும். அன்றியும் அது வஜ்ரம்போலாகி அதைக் கூறியவனுக்குத் தீங்கை இழைக்கும். இந்திரனைக்கொல்லும் புத்திரன் வேண்டுமென கூறிய மந்திரத்தில் ஸ்வரப் பிழை ஏற்பட்டதால், இந்திரனைக்கொல்லாமல் இந்திரனுல் கொல்லப்படும் புத்திரன் பிறந்தான். ஆதலால்

சிக்ஷை வியாகரணம் சந்தஸ் நிருக்தம் ஜோதிஷம் கல்பம் என்ற ஆறு அங்கங்களைக்கொண்டு தவறின்றி வேதமோத வேண்டும்.

ரிக்வேதத்திலும் ஸாமவேதத்திலும் முதல் ஸ்வரம் கூறவேண்டும். ரிக்வேதம் இரண்டாவது மூன்ருவது ஸ்வரத்துடனும் சேரும். பொதுவாக மேல் ஸ்வரம், மத்யமஸ்வரம், நீசஸ்வரம் எனமூன்றுண்டு. ஸாமவேதத்தில் தான் விசேஷமாக ஸப்த ஸ்வரங்கள் உண்டு. ஏழு ஸ்வரங்கள், மூன்று கிராமங்கள் இருபத்தோரு மூர்ச்சனைகள் தாநங்கள் நாற்பத்தொன்பது, என்ற இவை ஸ்வரமண்டலமெனப்படும். ஷட்ஜம் ரிஷபம் காந்தாரம் மத்யமம் பஞ்சமம் தைவதம் நிஷாதம் என்பவை ஏழு ஸ்வரங்கள். ஷட்ஜமத்யமம் காந்தாரம் இவை மூன்றும் கிராமங்கள்.

## 7 ஸ்வரத்தால் யார் யாருக்கு இன்பம்.

ஷட்ஜ் ஸ்வரம் தேவர்களையும், ரிஷபம் ரிஷிகளையும் காந்தாரம் பித்ருக்களையும் மத்யமம் கந்தர்வர்களையும் பஞ்சமம் தேவர் பித்ருக்கள், ரிஷிகள் ஆகிய இவர்களையும் நிஷாதம் யக்ஷகர்களையும் தைவதம் பூதங்களையும் ஸந்தோஷப்படுத்துகிறது.

## 10 காந குணங்கள். 14 தோஷங்கள்.

ரக்தம் பூர்ணம் அலங்கிருதம் பிரஸன்னம் வியக்தம் விக்குஷ்டம் சிலக்ஷணம் ஸமம் ஸுகுமாரம் மதுரம் என்பன ஸங்கீதத்திற்கு முக்யமாக வேண்டிய குணங்களாம். 1 வேணுவீணஸ்வரம் இம்மூன்றும் ஒன்ருகச் சேர்ந்திருப்பது ரக்தம். இங்ஙனம் வசந நடையில் பத்து குணங்களுக்கு லக்ஷணம் கூறப்பட்டது.

சங்கிதம் பீஷணம் பீதம் உத்குஷ்டம் அநுநாஸிகம் காகஸ்வரம் மூர்த்த கதம் ஸ்தாந விவர்ஜிதம் விஸ்வரம் விரஸம் விச்சிஷ்டம் விஷமாஹதம் வியாகுலம் தாளஹீநம் என்ற தோஷங்கள் இல்லாமல் பாடவேண்டும்.

ஸ்வரங்கள் உண்டாகும் இடம். பிராம்மணாதி வர்ணங்களில் எந்த ஸ்வரம் எந்த வர்ணத்தைச்சார்ந்தது. எந்த எந்த பிராணிகளின் சப்தத்தை ஒத்தது. எந்தெந்த

தேவதா ஸ்வரூபமானது. வெண்மை நிலம் முதலிய வர்ணங்களில் எது எது எந்த வர்ணத்தைச் சார்ந்தது. அவைகளின் மாத்ராகாலம் அவைகளின் லக்ஷணம் இவைகளுக்கு அந்தந்த பெயர் வந்தகாரணம். இவைகளில் எது உக்ரமானது எது மிருதுவானது என்பது போன்ற பல அரிய விஷயங்கள் கூறப்படுகின்றன. கேவல காநத்தில் நிற்காமல் ஸங்கீத சாஸ்த்திரத்தைக் கற்றவர்களுக்கு மாத்ரம் ருசியாக இருக்கக்கூடிய விஷயங்கள் அவை. ஆமை தனது அவயவங்களைத் தன் ஓட்டிற்குள் ஒடுக்கிக் கொள்வதுபோல் காநம் செய்பவர் ஐம்புலன்களையும் மனதில் அடக்கிப் பாடவேண்டும்.

ஜலத்தில் ஸஞ்சரிக்கும் மீனினுடைய கால் போலும் ஆகாயத்தில் பறக்கும் பறவைகளின் கால்போலும். தயிரிலுள்ள நெய்போலும் கட்டையிலுள்ள தீ போலும் ஸ்வரத்தோடு கூடிய சுருதி பிரகாசமில்லாமல் இருக்கும்.

## ஹோமகர்மாவின் தத்துவ விளக்கம்.

மூன்று வர்ணத்தாருக்கும் அக்நிதான் தேவன். விவாஹாதி கர்மாவும் சிராத்தம் முதலியனவும் அக்நியிலேயே செய்யவேண்டும். அந்த அக்நி ப்ரதிஷ்டை பூமி சுத்தி தர்ப்பத்தால் பூமியைத் துடைப்பது அக்நிக்கு நாலு புறமும் தர்ப்பம் போடுவது பிரணீதை என்பதை வைத்துப் பூஜித்தல், ஸ்ருக் ஸுருவம் என்ற பாத்ரங்களின் அளவு பிரும்மாவின் அவச்யம் உட்காருமிடம், ஆஜ்ய பாகம் ஆ[4]காரம். ஸ்விஷ்டகிருத் முதலிய கர்மாவில் விநியோகமாகும், அங்கங்களின் தத்துவத்தை விளக்குகிறார். கர்மா செய்பவருக்கு இது தெரிந்திருக்க வேண்டியது அவசியம்.

மதுகைடபர் என்ற அரக்கர்களின் மேதஸ் என்ற தாதுவால் உண்டானது மேதிநீ என்ற பூமி. அது சுத்தமாவதற்குப் பசும் சாணியால் அதை முதலில் மெழுக வேண்டும். கோமயத்தில் லக்ஷ்மி இருக்கிறாள் என்பதுடன் அசுத்தங்களை சுத்தமாக்கும் சக்தி இருக்கின்றது. பிறகு தர்ப்பம் அல்லது ஸமித்தால் கிழக்கு முகமாக மூன்று முறை அதன்மேல் வடக்குமுகமாக மூன்று முறை கோடு கிழிக்கவேண்டும்.

ஓங்காரமும் அத என்ற சப்தமும் பிரும்மாவின் கண்டத்தைப் பிளந்துகொண்டு தோன்றின ஆதலால் ஸத்கர்மாக்களைச் செய்யும் பொழுது ஓம் அத என்று கூறி ஆரம்பிக்கவேண்டும்.

ओंकारश्चाथ शब्दश्च द्वावेतौ बृह्मणः पुरा ।
कण्ठं भित्वा विनिर्यातौ तस्मान्नांगळिकावुभौ ॥

வேதாந்த சாந்திபாடம் மங்கள பாடத்தில் இதைக்கூறுவர்.

நாலுபுறமும் துடைப்பது. இது பாபஸமூஹநம் எனப்படும். ஆங்குள்ள புழு சிறியப்ராணி இவைகளை புறப்படுத்துவதே இதன் கருத்து. ஸமித்தால் மூன்று முறை கிறுவதால் பூமிக்குள் ஆங்குள்ள அஸ்தி முள் முதலிய தோஷங்களை அகற்றும். ஜலம் தேவர்க்கும் பித்ருக்களுக்கும் இருப்பிடமானதால் அதனுல் புரோக்ஷிக்க வேண்டும் ஸுமங்கலிகளே அக்நி கொண்டு வரவேண்டும். அமிருதம் குறைவதைக்கண்டு பிரும்மா வேதியில் ஒரு ஸமித்தை வைத்தார். அதனுல் அமிர்தம் நிறைந்தது. ஆதலால் அக்நியில் ஒரு ஸமித்தை வைக்கவேண்டும். அக்நிக்குத் தெற்கு பக்கத்திலே ராக்ஷஸர்கள் இருக்கின்றனர். அவர்கள் அணுகாதபடி தெற்கே பிரும்மாவுக்கு இடம் தரவேண்டும்.

வடக்கு புறத்தில் பாத்ரங்களையும் பிரணீதையையும் வைக்கவேண்டும். பிரும்மாவும் ஆசார்யன் அல்லது அத்வர்யுவும் யஜமானனது வேதத்தைச் சார்ந்தவர்களாக இருக்கவேண்டும். வஜ்ஜிரம் ஸுதர்சந சக்கரம் சூலம் இவைகள் எல்லாம் மூன்று மூன்று நுனிகள் உள்ளவை. ஆதலால் ஆஸநம் கையில் இடிக்கிக்கொள்வது முதலியன மூன்று தர்ப்பங்களுக்குக் குறையாமலிருக்க வேண்டும். ஆ⁴காரமென்பது அக்நியின் மூக்கு. ஆஜ்யபாகம் என்பது அக்நியின் கண்கள். முகம் பிராஜாபத்யம். வியாஹிருதிகள் இடுப்பு. மற்றுமிது போல் பல உள.

ஆபிசார கர்மாவில் இதற்குமாருக சில விதிகள் கூறப்படுகின்றன. இவை வேதாங்கமான கல்பம் என்ற முறையில் கூறப்பட்டன.

## வியாகரணம். ஜோதிஷம்.

ஸுபந்தம் திங்ந்தம் என பிறித்து, ஸு, ஔ ஜஸ் என்ற விபக்திகள் காரகம் கிரியாபதம் ஸந்திஸமாஸம் வைதிக ப்ரக்ரியை பத்து லகாரங்கள் தாது ரூபம், முதலியன விரிவாகக் கூறப்பட்டுள. இங்குள்ளதைக் கற்றாலே பொதுவாக வியாகரணத்தை அறிந்ததாகும்.

நாலு லக்ஷம் சுலோகமுள்ள ஜோதிஷ சாஸ்திரம் கணிதம் ஜாதகம் ஸம்ஹிதா என்ற மூன்று ஸ்கந்தம் உள்ளது. சந்திர ஸூர்யர்களது மண்டலம் அதன் சலாத் தால் கால பேதம் நவக்ரஹங்களின் நிலை. அவர்களு டைய சரத்தால் உலகிற்கும் தனிப்பட்ட மனிதர்க்கும் உண்டாகும் இன்பதுன்பங்கள். கிரஹணம் உண்டாகும் வகை. தசாபலன். சைத்ர சுக்ல பிரதமை எந்த வாரமோ அந்த வார தேவதையே அந்த வருஷ நவநாயக ரில் ராஜாவாவர். யோகம் கரணம் நக்ஷத்திரம் அறுபது ஆண்டுகளின் பெயர் பஞ்சாங்கம் கணிக்கும் வகை எந் தெந்த திதி எந்தெந்த கர்மாவிற்கேற்றது. ஸ்திர லக்நம் சரலக்நம் ஜநநபலன் விவாஹ பொருத்தம் முதலிய ஜோதிஷ சாஸ்திரத்தின் ஸாரம் இங்குவர்ணிக்கப்பட்டது.

## ஐந்துவகை பூஜை.

ஆதுரீ ஸௌதிகீ திராஸீ, ஸாதநாபாவிநீ, தௌர் போதீ என ஐந்து பூஜைகள். ஸ்நாநம் செய்ய முடியாமல் நோயால் பீடிக்கப்பட்டவன் பகவானல்லது ஸூர்யனைப் பார்த்து புஷ்பாஞ்ஜலியளித்து மநதினால் பதினாறு உப சாரங்களை நினைத்து நோயகன்றபின் விதிப்படி பூஜிப்பது ஆதுரீ பூஜா எனப்படும். சாவுதீட்டு, பிரஸவதீட்டு ஆகிய காலங்களில் ஸ்நாநம் செய்து மநதினால் பூஜை செய்து உபசரிப்பது ஸௌதிகபூஜை எனப்படும். பயம் நேரிட்ட காலத்திலும் மநதால் பூஜை செய்வது திராஸீ பூஜா. போதிய அளவு பூஜா திரவ்யங்கள் கிடைக்கா விட்டாலும் கிடைத்தவைகளைக் கொண்டு மற்றவைகளை மநதினால் பூஜிப்பது ஸாதநாபாவிநீ எனப்படும். பெண் கள் கிழவர் பாலர் மூர்க்கர் ஆகியவர்கள் விதியறியாமல் மூடபக்தியால் பூஜிப்பது தௌர்போதீ எனப்படும். இவைகளில் ஏதேனும் ஒன்றால் பூஜித்தாலும் நற்கதி

அடைவான். தேவபூஜை இல்லாமல் தன் வயிற்றை நிறப்புகிறவன் நரகம் செல்வான்.

ஒவ்வொரு தேவதைகளின் மூலமந்த்ரத்துடன் பூஜா விதியும் ஸ்ரீ பாதுகா மந்திரமும் பாசுபத விரதமும் ஜப விதியும் தீக்ஷாவிதியும் ஸந்த்யா காயத்ரீஜபமும் நவகிரஹ தேவதைகளின் யந்திரமும் பூஜாவிதியும் விஷ்ணுவை பதினாறு உபசாரங்களால் பூஜை செய்யும் வகையும் நரஸிம்மன் பீடதேவதை ஹயக்ரீவர் ராமலக்ஷ்மண மந்த்ரங்கள் யந்திரங்கள் பூஜாவிதி முதலியவைகளும் ஹநுமான் மந்த்ரமும் பூஜாவிதியும் **நரஸிம்ஹ அஷ்டாக்ஷரியும்**, மிக விரிவாக வர்ணிக்கப்பட்டது.

ஏவல் ஆபிசாரம் சூன்யம் முதலிய தோஷங்களை அகற்ற அநுமானின் மந்திர ஜபம் ஹோமம் கவசம் ஸ்துதி பிரயோகம் முதலியன விரிவாக இருக்கின்றன. பதினெட்டு அக்ஷரமுள்ள ஆஞ்ஜநேய மந்திரம் சத்ருவை அகற்றப் பயன்படும். ஆஞ்ஜநேய ஷடக்ஷரீ மாலா மந்திரம் முதலியவைகளை ஜபித்தால் பேய் பிசாசு நோய் புத்திமந்தமாக இருத்தல் பயம் வாக்கில் சக்தி இல்லாமை முதலியவைகள் உடனே அகலும். ஆரம்பித்த காரியம் ஜயமாகும்.

## கார்த்த வீர்யன்.

தத்தாத்ரேயரை உபாஸித்துப் பல அரிய வரங்களைப் பெற்றவன் கார்த்தவீர்யன். ஹநுமானை ஆராதிப்பவர் முதலில் கார்த்தவீர்யனை உபாஸிக்க வேண்டும். ஸுதர்சநமென்ற விஷ்ணு சக்ரத்தின் அவதாரம் இவன். சத்ரு பயம் அகலவும் காணாத பொருள் கிடைக்கவும் பேய் பிசாசுகள் அகலவும் கார்த்தவீர்ய மந்திரம் கவசம் ஸ்தோத்ரம் முதலியவைகளை ஜபிக்கவேண்டும்.

**कार्तवीर्याय विद्महे महावीर्याय धीमहि ।**
**तन्नो अर्जुनः प्रचोदयात् ॥**

என்பது கார்த்தவீர்ய காயத்ரீ. கார்த்தவீர்ய மந்திரங்கள் பல உள. யந்திரத்தில் கார்த்தவீர்ய மந்திரத்தை எழுதி பரிவார தேவதைகளை ஆவாஹநம்செய்து விதிப்படி

அதன் எதிரில் தீபம் ஏற்றிவைத்துப் பூஜிக்க வேண்டும். இங்கு கார்த்தவீர்ய அஷ்டோத்தர சதநாமா கூறப்பட்டிருக்கிறது:—

கார்த்தவீர்ய: [2]கலத வேஷீ-கிருவீர்ய ஸுதோ பலீ ஸஹஸ்ரபாஹு: சக்ருக்ந: - ரக்தவாஸா: [4]தநுர் [4]தர: ரக்த கந்தோ ரக்த மால்ய:-ராஜாஸ்மர்து: அ[4]பீஷ்டத: ||

இந்த பனிரண்டு நாமாக்களை ஜபித்துவிட்டு எந்த வேலை ஆரம்பித்தாலும் அது லாபகரமாகும். ஊருக்குச் சென்றவர் சுகமாகத் திரும்புவர். காணாத பொருள் கிடைத்துவிடும்.

## ஹநுமச்சரிதமும் மஹிமையும்

ஹநுமத் கவசமும் அஷ்டோத்தர சதநாமாவும் வர்ணிக்கப்பட்டது. ஹநுமான் ஸர்வ சாஸ்திரங்களையும் அறிந்தவன். நித்ய பிரும்மசாரீ. ஜீவன் முக்தன். இந்த கல்பம் முடியும்வரை இருந்து அடுத்த கல்பத்தில் பிரும்மாவாகி பிறகு விதேஹ முக்தியைப் பெறுவார். ஒரு ஸமயம் கௌதமமுநிவருக்குச் சிஷ்யனுக அமர்ந்தார். ஜீவன் முக்தன் சில ஸமயம் சிறுவன்போலும் பித்தன்போலும் இருப்பான். மநித உருவும் சங்கராத்மா என்ற பெயரும் பெற்று கௌதமாச்ரமத்திலிருந்தார். ஒரு நாள் ஆகாசத்தில் நின்று வீணுகானம் செய்தார். பட்டமரங்களெல்லாம் உயிர்பெற்றெழுந்தன. விஷ்ணு மிருதங்கம் வாசித்தார். நாரதரும் தும்புருவும் பின்பாட்டு பாடினார்கள். கானவித்யையிலீடுபட்ட கந்தர்வரும் மெய்மறந்து ஆச்சர்யமடைந்தனர். பரமசிவன் பரம ஸந்தோஷ மடைந்து உன்னைவிட உயர்ந்த நண்பன், எனக்கு வேறு எவருமில்லை. நீ உனக்குள்ள உயர்ந்த பலத்தாலும் ஸாமர்த்யத்தாலும் ராமனுக்கு ஸஹாயம் செய். ராம பக்தனுக இரு என்று ஒரு சிவலிங்கத்தை நித்யம் பூஜை செய்யும்படி அவருக்களித்தார். சிவலிங்கத்தின் பீடம் விஷ்ணுமயமானது. அநுமானது பக்தியைப் பரீக்ஷிக்க சிவன் லிங்கத்தின் பீடமே அவர் கண்ணில் படாதபடி மறைத்தார். எங்கு தேடியும் சிவபீடம் அகப்படவில்லை. அநுமான் ஸ்ரீ ருத்ரபாராயணம் செய்து சிவனருளால் பீடம் கிடைக்கட்டு மென்ருர். அப்பொழுதும் பீடம் அகப்படவில்லை. கத்தியினுல் தனது கழுத்தை அறுத்துக்கொள்ள

முயற்சித்தார். சிவன் பிரத்யக்ஷமாகி பீடத்தை அளித்து சிவபக்தனை ராவணனது கர்வத்தையும் பலத்தையும் அகற்ற சிவபக்த சிகாமணியான உன்னால்தான் முடியும். அணிமா முதலிய அஷ்டஸித்திகளையும் பெறுவாய். மிகச் சிறிய உருவம் எடுக்கவும் மிகப் பெரிய உருவமெடுக்கவும் கடலைக் கடந்து செல்லவும் உனக்கு சக்தி உண்டாகும் என்று கூறி சிவலிங்க பீடத்தையும் அளித்தார்.

## ராதாகிருஷ்ண பூஜை.

ஸ்ரீ சக்கர நகரிலுள்ள ஸ்ரீ லலிதாதேவியைப்போல் கோலோகத்தில் ஸ்ரீ ராதா தேவி வஸிப்பதாகவும் ராதையின் வலது புரமே கிருஷ்ணன் என்றும் அவளது உடலிலிருந்து கோடிக்கணக்கான கோபிகைகள் உண்டானதாகவும் விரிவாக வர்ணித்து ஸ்ரீசக்ர பூஜைபோல் ஸ்ரீ ராதா கிருஷ்ண யந்திர பூஜை ஆவரண பூஜை முதலியவைகளை இங்கு விஸ்தாரமாக வர்ணிக்கிறார். மந்திரம் நியாஸம் முத்ரை முதலியவைகளையு மிங்கு விரிவாகக் காணலாம்.

கிருஷ்ண மந்திரத்தில் பலவும் அந்தந்த காமனைக்கேற்றபடி ஜபிக்கலாமென கூறப்படுகிறது. கைலாஸத்தில் சிவன் நாரதரைநோக்கி ஸகல காமங்களையும் பூர்த்தி செய்யக் கூடிய கிருஷ்ண ஸஹஸ்ர நாமத்தைக் கூறினார். ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதத்தை எளிய நாமாக்களால் வர்ணிக்கிறார். எண்பத்தோரு சுலோகங்களால் சிறிய சிறிய நாமாக்களால் கிருஷ்ண ஸஹஸ்ர நாமாவை இயற்றி இருக்கிறார்.

தேவகி நந்தந: சௌரி: வாஸு தேவோ பலாநுஜ: ।
கதாக்ரஜ: கம்ஸமோஹ: கம்ஸ ஸேவக மோஹந: ॥
என்று ஆரம்பித்து
வேதஸ் துதோ வேதவேத்தா-யதுவம்ச விவர்த்தந: ।
யதுவம்ச விநாசிச - உத்தவ உத்தார காரக: ॥
என்று முடிக்கிறார்.

## ஸ்ரீராதா ஸஹஸ்ரநாமம்.

ராதா ச ராதிகா சைவ - ஆநந்தா விருஷபா நுஜா ।
பிருந்தா வநேச்வரீ புண்யா - கிருஷ்ண மாநஸ ஹாரிணீ ॥
என்று துவக்கி

கோமதி சந்த்ரபாகேட்யா ஸரயூஸ் தாம்ர பர்ணிஸம: |
நிஷ்கலங்க சரித்ரா'ச நிர்குணைச நிரஞ்ஜநா ||

என்று எழுபத்திரண்டு சுலோகங்களால் வர்ணிக்கிருர். இதுவும் அழகாகவும் லலிதமாகவும் ராதா சரிதத்தைக் கூறுவதாகவுமிருக்கிறது.

## தேவீ மந்த்ரம்.

ஜபம் ஹோமம் பூஜை யந்திரம் நியாஸம் முதலியவைகளுடன் பஞ்ச பிரகிருதிகள் பஞ்ச துர்க்கை முதலியன விரிவாக வர்ணிக்கப்படுகின்றன. ஸ்ரீராதாதேவியின் அவதாரமான பதினாறு சக்தி மந்திரங்கள் யக்ஷிணீ மந்த்ரம் அதை ஸாதிக்கும் வழி அவைகளின் ஸ்வரூபம் அவைகளை ஆராதிப்பதால் உண்டாகும் இஹபர நன்மை ஸ்ரீ லலிதா தேவியின் கவசம் ஸ்ரீ சக்ரத்தின் ஆவரணத்தில் உள்ள தேவதைகளின் தனித்தனி மந்திரம் பூஜாவிதி முதலியன வெகு விஸ்தாரமாகக் கூறப்படுவதைப் பார்த்தால் தேவி தந்திரமனைத்தையும் ஒருங்கே சுருக்கமாகக் கூறி விளங்க வைக்கிருர் எனலாம்.

## ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்.

பிரும்மாண்ட புராணத்தில் இருப்பதாகக் கூறப்படும் பிரஸித்தமான ஸ்ரீமாதா ஸ்ரீமஹாராக்ஞீ ஸ்ரீமத் ஸிம்மாஸநேச்வரீ என்றதுவேறு. இது வேறு. எண்பத்திரண்டு சுலோகங்கள் உள்ளது இது. சின்னஞ் சிறு நாமாக்கள் உள்ளது.

லலிதா சாபிவாகாமாஈ சவரீ பகமாலிநீ நித்யக்லின்னு ச
பேருண்டா - கீர்த்திதா - வஹ்நி வாஸிநீ || என்பது முதல்
நிஷ்க தர்ய பதா சேஷ்டா - வாதிநீ ச ப்ரகீர்த்திதா
ராஜலக்ஷ்மீர் மஹாலக்ஷ்மீ: - ஸித்தலக்ஷ்மீர் கவாநநா ||

என்பதோடு பூர்த்தி செய்கிருர். பலவகையான தேவியின் ஸ்வரூபத்தையும் நாமாவையும் கூறுகிறது. இத்தினை முறை பாராயணம் செய்தால் இன்ன இன்ன பலன் கிடைக்கும் என பல சுருதி கூறுகிருர். நித்யா படலம் என்ற அர்ச்சனவிதி மிக விஸ்தாரமாக உளது.

## 18 புராணக் கணக்கு.

92-வது அத்யாயம் முதல் 109-அத்யாயம் வரை ஒவ்வொரு புராணத்தைப் பற்றி ஒவ்வொரு அத்யாயமாக

கூறுகிறார். எத்தினை சுலோகம், அதிலுள்ள விஷயங்கள் யாவை என சுருக்கமாக வர்ணிக்கிறார். அதில் எந்த கல்பத்துக் கதை யாரால் யாருக்குக் கூறப்பட்டது என்பதையும் காணலாம். இதில் சிவ புராணம் என்பதற்கு பதில் வாயுபுராணம் என்றே கூறப்பட்டுளது. வாயு கூறியதால் வாயு புராணம் என்றும் சிவசரிதம் பற்றி கூறுவதால் சிவபுராணம் என்றும் பெயர். வாயு புராணம் என்று தனியாக ஒரு புத்தகம் சிவபுராணத்தில் உள்ள ஸகல விஷயங்களையும் மற்றும் சில விஷயமுமுள்ளதாக இருக்கின்றது.

பாகவதம்பற்றி கூறும்பொழுது இது விஷ்ணு பாகவதத்தையே கூறுகிறது. ஸ்காந்தத்தைப் பற்றி கூறும் பொழுது வடநாட்டிலுள்ள ஏழு கண்ட வடிவமான ஸ்காந்தத்தையே கூறுகிறது. நம் நாட்டிலுள்ள ஆறு ஸம்ஹிதா வடிவமான ஸ்காந்தத்தைக் கூறவில்லை. இது புராண ஸூத்ர மெனப்படும்.

அஷ்டாதச புராண நிய: சிருணோதி நரோத்தம: கதயேத்வா விதாநேந நேஹ பூய: ஸஜாயதே.

பதினென் புராணங்களை கேட்பவனும் விதிப்படி படிப்பவனும் மறுபடி ஜன்மா எடுப்பதில்லை.

## விரதங்கள்.

110 வது அத்யாயம் முதல் 125 அத்யாயம் வரை ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு திதியிலும் உள்ள விரதங்கள் வர்ணிக்கப்பட்டன. இவைகளை பவிஷ்ய புராணத்தில் விரிவாக பெயர்களுடன் கூறினோம், உத்தரார்த்தம் எண்பத்திரண்டு அத்யாயங்களால் ஏகாதசி விருத மஹிமையை வர்ணிக்கும் சந்தர்ப்பத்தில் ருக்மாங்கதனுடைய சரிதம், அதில் இதுவரை நாம் கேட்டிராத பற்பல உப கதைகள் புத்திரர் கடமை மனைவியின் கடமை. புருஷன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமை, அரசனது கடமை முதலியவைகளை வெகு விரிவாகக் கூறி புராணத்தை முடிக்கிறார்.

## விரதங்களில் காணப்படும் சில விசேஷங்கள்.

### கரக சதுர்த்தீ விரதம்.

கார்த்திகை மாதம் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தியில் இதை செய்ய வேண்டும். இந்த விரதம் பெண்களுக்கு மாத்திரம் உரியது. பத்து சிறிய பாத்திரங்களில் அன்னத்தை வைத்து விநாயகருக்கு நிவேதநம் செய்து பகலெல்லாம் உபவாஸமிருந்து இரவில் தக்ஷிணை தாம்பூலம் அன்ன முள்ள பாத்திரம் இவைகளை பிராமணர்களுக்கு அளித்து இரவு பாரணை செய்ய வேண்டும். பனிரண்டாண்டுகள் இதைச் செய்து வந்தால் ஸகலவிதமான ஸௌபாக்யமும் உண்டாகும்.

### ஸங்கஷ்ட விரதம்.

மாக கிருஷ்ண சதுர்த்தியில் ஸங்கஷ்டஹர விநாயக விரதம் செய்தால் குடும்பத்தில் உண்டாகும் ஸகலகஷ்டங் களும் நிவர்த்தியாகும்.

### சீதளாஷ்டமீ விரதம்.

பால்குன கிருஷ்ணாஷ்டமியில் சீதளாம்பாளை நாடி விரதம் செய்தால் அந்த குடும்பத்தில் மாரி மகா மாரி முதலியவைகளால் மரணமோ அங்கபங்கமோ நேரிடாது. அம்மை கண்டவரை நாடி அவருக்காக கீழ்கண்ட இரு சுலோகங்களை இடுப்பளவு ஜலத்தில்நின்று நூற்றெட்டு முறை ஜபம் செய்தால் மூன்றே நாளில் அது இறங்கி சுகம் பெறுவர்.

शीतले त्वं जगन्माता शीतले त्वं जगत्पिता
शीतले त्वं जगद्धात्री शीतलायै नमो नमः ॥
वन्देहं शीतलां देवीं रासभस्थां दिगंबरां
मार्जनीकलशोपेतां विस्फोटक विनाशिनीं ॥

### ஏகாதசிகள்.

ஒவ்வொரு மாதத்திலும் இரு பக்ஷங்களிலும் வரும் ஏகாதசிகளுக்குப் பாத்மத்தில் கூறியதுபோல் தனித்தனி பெயர் கூறப்படுகிறது. துவாதசி அன்று அருணோதய

வேளையில் ஏகாதசி இல்லாவிடில் அந்த துவாதசி த்ருஸ்பிருசா என்று பெயர். அன்று உபவாஸமிருந்தால் அசுவமேத பலன் உண்டாகும்.

## உத்தரபாகம்.

### ஏகாதசீ மஹிமை.

ஸூர்ய வம்சத்திலே பிறந்த மாந்தாதா எனும் சக்ரவர்த்தி குருவான வஸிஷ்டரை வணங்கி ஸகல பாபங்களையும் எரிக்கக்கூடிய புண்ணியம் எதுவென வினவினன்.

வேந்தே ஏகாதசி யன்று காலை நெல்லிக்காயை அறைத்து உடலில் தடவிக்கொண்டு ஸ்நாநம்செய்து சுத்த உபவாஸத்துடன் பகவானை பூஜிக்கவேண்டும். புலன்களையும் காமகோபங்களையும் அடக்கவேண்டும். இரவு பகவன் நாமாவைக் கூறி கண்விழிக்க வேண்டும். ஐந்து அறிவு புலன்களாலும் ஐந்து தொழிற் புலன்களாலும் மநதினுலும் ஆக பதினேரு வகையாகச் செய்த பாபம் ஏகாதசி விரதத்தால் அகலும். பாபத்தை அகற்ற இதற்கு ஸமமாக வேறு எந்த புண்யமுமில்லை,

மோக்ஷம் ஸ்வர்க்கம் ராஜ்யம் செல்வம் புத்திரன் ஆரோக்யம் மநஸ்சாந்தி முதலிய ஸகல பலன்களையும் தருவது ஏகாதசி. இந்த விரதம் அனுஷ்டிப்பவர் யமனைக் கண்ணுல் காண்பதில்லை. ஏகாதசி அனுஷ்டிக்க வேண்டும் என்ற எண்ணமில்லாமல் ஏதேனும் ஒரு காரணம் பற்றி விரதமிருந்தால்கூட தாயின் வயிற்றில்பிறக்க வேண்டாம்.

### ருக்மாங்கத சரிதம்.

ருக்மாங்கதன் எனும் அரசன் தசமியன்று காலையிலேயே தன் நகரத்தில் உள்ளோர் எட்டுவயதிற்குமேல் எண்பத்தைந்து வயதிற்குள் இருப்பவர், தசமி அன்று ஒரே வேளை உண்ணவேண்டும். ஏகாதசியில் சுத்த உபவாஸமிருக்க வேண்டும், துவாதசி காலையில் பாரணை செய்யவேண்டும் என தண்டோரா மூலமாக அறிவிப்பான். குடிகளும் அப்படியே ஏகாதசியில் உண்ணுதிருந்தனர். இறந்தபின் அனைவரும் வைகுண்டம் சென்றனர். ஒருவர் கூட யமலோகம் செல்லவில்லை. யாகம் முதலிய நற்கருமங்கள்நடைபெறவில்லை. ஸுவர்க்கமும் நரகமும் சூன்யமாகவே இருந்தன.

நாரதர் யமதர்மரிடம் சென்று ஏனிதெல்லாம் சூன்யமாய் இருக்கிறதென்று வினவ, மஹர்ஷே! ருக்மாங்கதன் தன் நாட்டிலுள்ள அனைவரும் ஏகாதசியில் சாப்பிடக்கூடாதென்றும் சாப்பிட்டால் கடும் சிக்ஷை விதிக்கப்படும் என்றும் பறை சாற்றுகிறான். எல்லோரும் ஏகாதசி புண்யத்தால் வைகுண்டம் செல்கின்றனர். ஆதலால் யாதொரு வேலையுமில்லாமல் நானும் எனது பரிவாரங்களும் சும்மா இருக்கின்றோம். வேலையின்றி பதவியிலிருப்பது நன்றாக இல்லை. என்ன செய்வதென யோசித்துக்கொண்டிருக்கிறேன் என்றார் யமனை அழைத்துக் கொண்டு நாரதர் பிரும்ம லோகம் சென்றார்.

பிரும்மாவை வணங்கி தனது குறைகளைக் கூறினார். பதவிபெற்று அதற்கேற்ற வேலை செய்யாதவரும் வேலையைப் பெற்றுக்கொண்டு போதிய ஊதியம் தராதவரும் பாபிகளென்று நான் அவர்களை நரகத்தில் தள்ளுகிறேன். நானும் எனது கிங்கரர்களும் வேலையின்றி பதவியிலிருக்கிறோம். எங்களுக்கு எந்த நரகம் கிட்டுமோ அறியோம் விதிப்படி ஏகாதசி விரதம் அனுஷ்டிப்பவர் தான் வைகுண்டம் செல்வதுடன் தனது முன்னோர்களையும் வைகுண்டமனுப்புகிறார்கள். ருக்மாங்கதனும் அவனது பிரஜைகளும் தாங்களும் தங்கள் முன்னோரும் யமலோகம் வராத வழி தேடிவிட்டனர்.

யமலோகவழி நடப்பாறின்றி புல் முளைத்துப் போயிற்று என் செய்வது? தாங்களே இதற்கு ஒரு வழி கூறவேண்டும் என வேண்டினர்.

ஏகாதசியினது பெருமையையும் விஷ்ணுபக்தியின் சிறப்பையும் பிரும்மா எடுத்துக்கூறி விஷ்ணுபக்தருக்கு எப்படி அபசாரம் செய்வதென வருந்தினர்.

ஏகோஹி க்ருஷ்ணஸ்ய க்ருத: ப்ரணாம: தச அச்வமேத அவபிருதேந துல்ய: | தசாச்வமேதீ புநரேதி ஜன்மா க்ருஷ்ண ப்ராணாமி நபுநர் பவாய. ||

கிருஷ்ணனுக்கு ஒரு நமஸ்காரம் செய்தால் அது பத்து அச்வமேத அவபிருதத்திற்கு ஸமமாகும். ஆனால் பத்து அச்வமேதம் செய்து அவபிருதம் செய்பவர் மறுமுறை உடலெடுப்பர். கிருஷ்ணனை வணங்கியவன் பிறப்பதில்லை.

## பிரும்ம சிந்தை.

ஏகாதசியில் புஜித்தாலும் சிருங்கார நினைவுகொண்டாலும் ஏகாதசி பயனைப்பெறமாட்டார். ஏகாதசியில் உண்பவனும் உணவளிப்பவனும் உண்ணும்படி தூண்டுபவனும் நரகம் செல்வான். ஆதலின் ருக்மாங்கதனை உண்ணும்படி செய்வது உசிதமல்ல. பெண்ணாசையில் சிக்காதவர் இரார். அறுபது வயதான பின்பே தாய் தன் பிள்ளையைத்தொட்டு எண்ணெ தேய்க்கலாம். மாணவன் குரு மனைவியின் காலைத்தொட்டு நமஸ்காரம் செய்யக்கூடாதென தர்ம நூல் கூறுகிறது. மல ஜலம் மாம்ஸம் ரக்தம் எச்சில் கோழை முதலியவை நிறைந்தது உடல் என்றாலும் பெண்ணுருவைக் கண்டு மயங்காதவரில்லை. ஆதலால் ஒரு அரிய அழகிய பெண்ணைப் பெற்று அவள் மூலமாக ருக்மாங்கதனைப் பரீக்ஷித்துப் பார்ப்போம் எனத் தீர்மானித்தார்.

## மோஹினி ஸிருஷ்டி.

நினைத்தபடி அழகெலாம் உருண்டு திரண்டு ஒன்றாக வந்ததுபோல் ஒரு பெண்ணைப் படைத்தார். அவள் உருவைக்கண்டு அவரே மோஹிக்கும்படி இருந்தது. ஆதலால் மோஹினி என பெயரிட்டார். அவள் பிரும்மாவை வணங்கி நாத! நானென்ன செய்யவேண்டும்? மூவுலகிலும் என்னைக்கண்டு மயங்காதவர் இரார். பெண்களே அழகுள்ளவர். சந்திரனுக் கொப்பாகப் பெண்கள் முகத்தைக் கூறுவர் கவிகள். அவர்கள் உண்மை உணராதவர். புருவத்தின் விலாஸம் மந்தஹாஸம் கடைக்கண் அழகு தேனொழுகும் சொல் இவைகள் சந்திரனிடம் ஏது? ஆதலின் எங்குசென்று எவரை மயக்கவேண்டும் கூறுங்கள் என்றாள்.

விதேச நகரத்திலே ருக்மாங்கதன் என்றோர் விஷ்ணு பக்தனிருக்கிறான். ஸந்த்யாவளி என்ற அவனது மனைவி உன்னைப்போல் அழகு வாய்ந்தவள். உத்தம கற்பரசி. இருவர்க்கும் தர்மாங்கதன் என ஒரு புத்திரனிருக்கிறான். அனைவரும் உயர்குணம் வாய்ந்தவர். ஏகாதசி விரதம் தவறாதவர். மந்தர மலைக்கு வேட்டையாடச் செல்வான் அரசன். அங்கு சென்று உனது இனிய கானத்தாலும்

சிறந்த அழகாலும் அவனை மயங்கும்படிச் செய். அவனை மணந்து ஏகாதசியில் உண்ணும்படிச் செய். இதே நீ செய்யவேண்டிய தேவகாரியம். சென்றுவா என்று விடையளித்தார் பிரும்மா.

வீணையுடன் மந்தர மலை சென்றாள் மோஹினி. வீருஷாலிங்கம் என்ற சிவாலயத்தில் அமர்ந்தாள். மீட்டினாள் வீணையை. முனிவரும் மோஹிக்கும்படிப் பாடினாள். அரசன் தற்செயலாக வேட்டையாடிக்கொண்டே அங்கு வந்தான். வழியில் வாமதேவ முனிவரை வணங்கினான். அவர் அளித்த விருந்தை ஏற்றான். மஹர்ஷே! நீண்ட நாளாக ஒரு சங்கை. அதை அகற்றக்கூடியவர் தாங்களே. அடியேனது நாடு மிக உயர்ந்தது. குடிகள் உத்தமர். மந்திரிகள் யோக்யர். மஹிஷீ மஹா பதிவிரதை. மகன் மிக அடக்கமுள்ளவன். நோயற்ற உடல் இவைகள் ஒன்று சேர்ந்து ஒருவருக்குக் கிடைப்பது அரிதல்லவா? இவைகளைப் பெற யான் என்ன புண்ணியம் செய்தேன்? எதனால் வைகுண்டம் செல்லலாமோ அதைக் கூறுங்கள் என்று வினவினான்.

முகக்கண்ணை மூடி அகக்கண்ணைத் திறந்தார் வாமதேவர். உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கண்டார். நடந்தவற்றை கூறினார் வேந்தனுக்கு. அரசே! நீ முற்பிறவியில் தரித்ர சூத்ரனாக இருந்தாய். உனது மனைவி மிகக் கொடியவள். உன்னை வீட்டை விட்டு வெளியில் துறத்திவிட்டாள். நீ ஆங்காங்கு புண்ணிய தீர்த்தங்களில் புனலாடிச் சென்றாய். விச்ராந்தி எனும் நதிக்கரையில் வராஹமூர்த்தியின் ஆலயத்தில் புராணம் நடைபெற்றது. ஆங்கு அசூன்ய சயன விரதம் என்பதன் பெருமையைக் கேட்டாய். நாடு திரும்பி வீடுவந்து அந்த விரதத்தைச் செய்தாய். அதன் பயனாக ஸகலமான நன்மைகளும் உண்டாயின. இப்போது செய்துவரும் ஏகாதசி விரதமே வைகுண்டம் செல்ல சிறந்த ஸாதனம் என்றார் வாமதேவர்.

அவரை வணங்கி விடைபெற்று வேட்டையில் முனைந்தான் வேந்தன். பற்பல கானகஞ் சென்று மந்திரமலைச் சாரலை அடைந்தான். மோஹினி மன்னனைச் சிக்கவைக்க மாய வலை வீசினாள். இனிய குறல். விசித்ரமான வீணை.

வீணையும் குறலும் ஒரே மாதிரியாக இருந்தது. கான ரஸம் காது வழியாகப் பாய்ந்தது. மெய் மறந்தான் மன்னன். மானும் அரவமும் இசையால் அசைவற்று நிற்கும். சிறிது நேரம் சென்றபின்னே அறிவு பெற்றுன் அரசன். ஓசை தோன்றிய இடம் நாடிச் சென்றுன். மின்னல் கொடிபோன்ற ஒருருவம் தோன்றிற்று. அதனருகே சிவலிங்க மிருந்தது. மின்னல் கொடியாள் மடி மீதிருந்தது வீணை.

அதன் ஒலியே செவியில்புகுந்து தன்னை இங்கிழுத்து வந்தது என எண்ணினுன். உருவை உற்று நோக்கினுன். கண்ணின் வழியாக மநம் அவளிடம் சென்றது. அறிவை இழந்தான். கீழே விழுந்தான். மூர்ச்சை யானுன். வலையில் சிக்கிய அரசனை ஸ்வாதீனப் படுத்தினுள். அரசனைத் தழுவி தேற்றினுள். கண்ணைத் திறந்து மோஹினியைக் கண்குளிரக் கண்டான். தழை தழைத்த நாவுடன் பேசினுன்.

பிரியே ! நீ யாரோ அறியேன் ! உன்னழகு என்னை அடிமையாக்கி விட்டது. இக்ஷ்வாகு வம்சத்திலே ரிதம்பரன் என்ற சக்ரவர்த்தியின் குமாரன் யான். ஸந்தியாவளீ என்ற மனைவியுடனும் தர்மாங்கதன் என்ற புத்திரனுடனும் நான் உனது தாஸன். எனது நாடு நகரமெலாம் உனக்கே. என்னை நீ எற்று என் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யவேண்டும் என எஞ்சினுன் சக்கரவர்த்தி. அரசே! பிரும்மாவின் பெண் யான்! உமது கீர்த்தியைக் கேட்டு தேவரை விட்டு உம்மிடம் வந்தேன். கருவுள்ள கன்யகையிடம் பிறந்தவனும் ஸமாந கோத்ர ஸ்திரீயிடம் பிறந்தவனும் சண்டாளனுவான்.

நானோ சுத்தமான கன்னிகை. என்னை விதிப்படி மணந்துகொள்ளலாம் என்றுள் மோஹினி. காந்தர்வ விதிப்படி அரசன் அவளை எற்று ஆநந்தத்துடன் குதிரைமீ தேற்றி அவளுடன் தனது நாட்டிற்குக் கிளம்பினுன்.

## பதிக்கு மருந்திட்ட பாவி சரிதம்.

குதிரை வேகமாகச் சென்றது நடுவழியில் புதரிலிருந்து கிளம்பிய உடும்பை என்ற பிராணி குதிரைக் குளம்பில் அகப்பட்டுக்கொண்டு கற்றிற்று. இதைக்கண்ட

அரசன் கீழே இறங்கி அதன் மீது ஜலத்தைத் தளித்தான். அது மனிதரைப்போல் பேச ஆரம்பித்தது. ருக்மாங்கத அரசே! சாகலநகரத்திலே நான் ஒரு வேதியன் மனைவியாக இருந்தேன். இளமை, அழகு, இவைகளால் கர்வங்கொண்டு கணவனையும் அவனைச் சார்ந்தவர்களையும் யான் மதிப்பதில்லை. கணவன் அடிக்கடி என்னைக் கண்டித்தார். இதனால் கோபங்கொண்டு நான் அவரை வச்யப்படுத்த முயற்சித்தேன். ஒரு வைத்யரிடம் சென்று இதைக் கூறி ஒரு சூர்ணம் வாங்கி உணவுடன் கலந்து கொடுத்தேன்.

அது கணவனை எனக்கு வசமாக்கியதுடன் அவர் உடலில் தீராக் கொடிய நோயை உண்டுபண்ணி உயிரைக் கொண்டு சென்றது. என் இஷ்டப்படி திரிந்து நானும் ஒரு நாள் இறந்தேன். பதியைக் கொன்ற பாபிக்கேற்ற பல நரகங்களில் தள்ளி துன்பத்தைத் தந்தனர். பல யுகங்களுக்குப் பின் இவ்வுடலைத் தந்தனர். குதிரையின் குளம்பு என்னை நசுக்கி இனி யான் பிழைக்க முடியாமல் துடிக்கின்றேன். சிரவண துவாதசியின் புண்ணியத்தை எனக்களித்தால் நான் நற்கதி பெறுவேன் என்றது. உடும்பைக்கு அரசன் அங்ஙனமே தாநம் செய்யும்போது மோஹிநீ அதைத் தடுத்துப் பாபிக்கு புண்ய பயனைத்தரக் கூடாது என்றாள்.

பிரியே! எல்லாவற்றையும் தியாகம் செய்த அரிச்சந்திரன் பலவகைத் துன்பங்களை அனுபவித்தும் ஸத்தியம் தவறாமலிருந்தான். அதைக் கண்டு ஆநந்த மடைந்த அமரர் உனக்கு யாது வரம் வேண்டுமென்று கேட்டபோது இந் நகரிலே உள்ள பாபிகளும் மற்றெல்லோரும் ஸ்வர்க்கம் செல்லவேண்டும் என்றான். சிபிசக்கிரவர்த்தி புருவுக்காகத் தனது உடலையே அளித்தான். ததீசி முனிவர் தேவர்க்குத் தனது அஸ்தியைத் தந்தார். ஜீமூதவாஹநன் ஒரு பாம்பைக் காக்கத் தன் உயிரை விடத் துணிந்தான். ஆதலால் அவள் பாபம் செய்தவளாயினும் அவளைக் காக்கப் புண்ய பயனைத் தந்தேன் என்றான். உடனே உடும்பை தேவசரீரம் பெற்று ஸுவர்க்கம் சென்றது. அரசன் ஊருக்குத் திரும்பினான்.

## ராஜ தர்மம் வினவுதல்.

காட்டிலிருந்து வந்த தந்தையை எதிர்கொண்டழைத்து வரவேற்ருன் தர்மாங்கதன். ராஜ தர்மம் நன்கு அனுஷ்டிக்கப்படுகிறதா? என்று கேட்கும் வகையில் குடிகளை அரசன் எப்படி நடத்த வேண்டுமென எண்பிக்கிருர். நாட்டிலே ஜனங்கள் கஷ்டமின்றி வாழ்கிருர்களா? நியாயமான வகையில் பொக்கிஷத்தை விருத்தி செய்கிருயா? பிராம்மணர் நன்கு கர்மாநுஷ்டானம் செய்கிருர்களா? கடுமையாகப் பேசாதிருக்கிருயா? கோக்களை நன்கு ரக்ஷிக்கிருயா? சிறியோரைப் பெரியோருக்கு அடங்கி நடக்கும்படிச் செய்கிருயா? எல்லோரும் உணவுக்காக வருந்தாமலிருக்கிருர்களா? குடும்பிகளை அதிக வரி வசூலால் கஷ்டப்படுத்தாமலிருக்கிருயா? மது பானம் சூதாடுதல் இல்லாமலிருக்கிறதா?

உண்ணும் பொருளில் மற்ற பொருளைக் கலக்காமலிருக்கிருர்களா? நியாய விலைக்குப் பொருளை விற்கிருர்களா? பிச்சை எடுக்காமலிருக்கிருர்களா? அந்தந்த காலத்தில் தர்ப்பணம் செய்கிருர்களா? ஏகாதசி உபவாஸமிருக்கிருர்களா? கர்லையில் எழுந்திருக்கிருர்களா?

நித்ரா மூலம் அதர்மஸ்ய-நித்ரா பாப விவர்த்திநீ |
நித்ரா தாரித்ர்ய ஜநநீ-நித்ரா சிரேயோ விநாசிநீ. ||

தூக்கமே அதர்மத்திற்கு வேர். பாபத்தை வளர்க்கும். ஏழ்மையை உண்டுபண்ணும். நன்மையை நாசம் செய்து துஷ்ட ஸ்திரீபோல் நித்ரை இம்மை மறுமைகளை அழிக்கும்.

நாடு நன்ருக இருக்கிறதென்று கூறி தந்தையுடன் வரும் மோஹிநியைக் கண்டு ஆச்சரியமடைந்து இது யார்? தேவ மாயை போலிருக்கின்றதே! என்ருன். உனது தாயிவள் என்று கூறிய பின் அவளை வணங்கி ஆசிர்வாதம் பெற்ருன். தான் குனிந்துநின்று தன் முதுகு மீது கால்வைத்து குதிரைமீது ஏறும்படிச் செய்து தாய் தந்தைகளைத் தன் வீட்டிற் கழைத்துவந்து உபசரித்தான். தர்மாங்கதன் செய்த ஒப்பற்ற பணிவிடையைக் கண்டு மகிழ்ந்தாள் மோஹிநீ. அவனது அரண்மனையிலேயே தங்கிஞள். அவன் தாயான ஸந்த்யாவளியும் தன் ஸோதரியைப் போலெண்ணி உபசரித்தாள்.

பாதாளத்திலுள்ள தைத்யர்களை ஜயித்து ஆங்கிருந்து கொண்டுவந்த நெல்லிக்கனி அளவுள்ள ஆயிரம் முத்துக்களை மோஹிநிக் களித்தாள். தர்மாங்கதன் அமிருதங்கடைந்தபோதுண்டான இரு ரத்ந குண்டலங்களையும் ஹிரண்யகசிபுவின் மனைவி தரித்திருந்த ஸீமந்த மெனும் ஆபரணத்தையும் அன்னைக்கு அளித்தான். தனது சொந்த தாயைக்கொண்டும் பணிவிடை செய்வித்தான். பிரும்ம லோகத்திலும் கிட்டாத இன்பத்தைப் பெற்றுள் மோஹிநீ. அவளிடம் அதிக அன்புகொள்ளும் அரசனிடம் தன் தாய் கோபங்கொள்ளலாகாது என தர்மாங்கதன் தாய்க்கு ஒரு கதை கூறினன்.

## கற்பரசியான சூத்ர ஸ்திரீ.

ஒரு சூத்ரன் உத்தமியாயும் அழகுள்ளவளுமான தனது மனைவியை விட்டுவிட்டு வேசியிடம் அன்புகொண்டிருந்தான். பதியே தெய்வம். அவருக்கு இஷ்டமானதைச் செய்வதே தவம் என எண்ணினள் அவள். பதியுடன் அவ்வேசிக்கும் பணிவிடை செய்வாள். வேசி வேண்டாமென்று தடுத்தாலும் பதியின் மநம் களிக்கத் தொண்டு புரிவாள். சிருங்காரத்தில் முழுகிய அவர்களுக்கு ஸத்துள்ள உணவால் ஊட்டமளித்தாள். முள்ளங்கியுடன் எருமைத் தயிரையும் எண்ணெயுடன் அவரைக்காயையும் சேர்த்து உண்ணக் கூடாதென தர்ம நூல் கூறும். அது வைத்ய நூலுக்கும் பொருத்தமானது. உடலுக்கு அவை ஆரோக்கியமானவை, ருசியானவை என மனைவி தடுத்தும் அவைகளைப் பதி புஜித்தான்.

பகந்தரம் எனும் நோய் உண்டாயிற்று. பொருளைக் கவர்ந்து நோய்வாய்ப்பட்ட அவனை வேசி கைவிட்டாள். உடலெல்லாம் எரிச்சல். அல்லும் பகலும் ஐயோ என்று அலறுவான். வலி பொறுக்கமுடியாதபோது மனைவியை திட்டுவான். அடிப்பான். பதில் கூருமல் அவைகளைப் பொறுத்து பணிவிடை செய்வாள். தன் உடலைக் கவனியாள். இருவருக்கும் தூக்கமில்லை அவன் ஆரோக்யத்தை நாடி தேவர்களை வேண்டுவாள். பெரியோரைப் பணிவாள். நாளுக்கு நாள் நோய் வளர்ந்தது. உடல் மெலிந்தது. தான் அணிந்திருந்த ஆபரணங்களை விற்று சிகித்ஸை செய்தாள். பயனில்லை. மல ஜலம் வாருவாள்.

குழந்தைகளைப்போல் அன்ன மூட்டுவாள். அன்னமூட்டும் போது குளிர்காய்ச்சல் தோன்றிற்று. பல் கிட்டிற்று. அன்னமூட்டிய மனைவியின் விரல் துண்டித்து வாயினுள் சென்றது. தன் வலியை அவள் கவனிக்கவில்லை. கண வன் உயிரைக் காக்கவே பாடுபட்டாள்.

தெய்வத்தின்முன் மானிடர்முயற்சி எம்மட்டில் பயன் படும்? இறந்தான் கணவன். தன் வாழ்க்கையும் முடிந்ததெனக் கருதினாள். கணவன் உடலுக்குத் தீயிட்டுத் தானும் சிதையில் படுத்தாள். பதியுடன் ஸுவர்க்கம் சென்றாள்.

மோஹினிக்கு செய்யும் பணிவிடை பதிக்குப் புரி யும் தொண்டாகும். அதே பெருந்தவம் என்று தர்மாங் கதன் கூறியதின் கருத்தை உணர்ந்த ஸந்தியாவளி முன் னிலும் பன்மடங்கு அவளுக்குப் பணிவிடை செய்து வந்தாள். புத்ரன் கூறும் தர்மத்தைக்கேட்டு அகமகிழ்ந்து அவனைக் கொண்டாடினாள். மஹா பதிவிரதையான ஸந் யாவளி மநதால் நினைந்து கண்ணால் பார்த்தவுடன் அறு சுவை அன்னத்தால் ஸுவர்ண பாத்திரம் நிறைந்துவிடும். அவைகளால் மோஹினிக்கு இன்பமூட்டுவாள். ஒருநாள் மோஹினி அரசரை அழைத்து பலவகையிலும் சிறந்த புத்ரனை தர்மாங்கதனுக்கு அரசுரிமை தந்து தன்னுடன் எப்போதும் ஏகாந்தமாக இருந்து களிக்கும்படி கூறினாள். தர்மாங்கதன் அரசுரிமை ஏற்று எல்லா தாய்களையும் அழைத்து அதை ஆமோதிக்கும்படி வேண்டினான். அவ ளுக்கு விரோதமானவர் ராஜ விரோதி ஆவர் என்றான்.

எட்டு ஆண்டுகள் இரவு பகல் என பாராமல் ருக் மாங்கதன் மோஹினியுடன் ரமித்தான். தர்மாங்கதன் பெற்றோரிடம் விடைபெற்று திக்விஜயம் செய்யக் கிளம் பினான். மண்ணுலகையும் விண்ணுலகையும் ஜயித்தான். ஆங்காங்கு கிடைத்த அரிய ரத்நங்களை எல்லாம் அன்னை மோஹினிக்கே அளித்தான். வருணன் அளித்த கன்னி கையைப் பெற்றோர் உத்திரவு பெற்று விதிப்படி மணந் தான்.

### தர்மாங்கதனின் நல்ல ஆக்ஷி.

ராஜ்யத்தைக் காப்பது ஸ்வதர்மம் எனக் கருதினான். ஸுகானுபவத்திற்கல்ல ராஜ்ய மென்பான். அன்றன்று

துலாதாநம் செய்வான். ஒவ்வொரு காரியத்தையும் தானே கவனிப்பான். ஒரு ஜாதி மற்ருெரு ஜாதியுடன் கலக்காமல் ரக்ஷித்தான். பாலில்லே என எந்த குழந்தையும் அழுவதில்லே. மருமகள் தன்னை அவமதித்ததாக மாமியார் அழமாட்டாள். கஞ்சுகமில்லாத (ரவிக்கை) ஸுமங்கலி களைக் காணமுடியாது. வீட்டைவிட்டு குல ஸ்திரீகள் வெளிக் கிளம்பார். ஸுமங்கலிகள் ஸதா கேசமுள்ளவர் களாகவும் பதியிழந்தவர் கேசமில்லாதவர்களாகவு மிருந் தனர். பேராசையுள்ள தொழிலாளி சாஸ்திர மறியா புரோஹிதன், மது மாம்ஸ மருந்தும் அந்தணர், தேவ பிராம்மண பூஜை யில்லாதவன் வீண் செலவு செய் பவர், பெற்ருேரைக் கைவிட்டவர் ஸ்திரீகளைத் துன் புறுத்துபவன் திருடுபவன், பொய் கூறுபவன் விவாஹ மாகாமல் கர்ப்பிணியான பெண் முதலியவர்களை அங்கு காணமுடியாது. தசமி ஏகாதசி துவாதசி ஆகிய மூன்று நாட்களிலும் எவரும் சிற்றின்பத்தை விரும்பார்.

## கார்த்திகை விரதம்.

கார்த்திகை மாதம் பிறந்தவுடன் ருக்மாங்கதன் மோஹினியை நோக்கி உன்னிடமுள்ள அன்பினுல் ஏகா தசியைத் தவிர மற்ற விரதங்களைச் செய்யாதிருந்தேன். இப்பொழுது மிகச் சிறந்ததான கார்த்திகை மாதம் பிறந் துளது. இச்சமயம் மது மாம்ஸமருந்துவோர் நீசராகப் பிறப்பர். இச்சமயம் தீபதாநம் செய்வது மிகச் சிறந் தது. இம்மாதத்தில் வபநம் செய்து கொள்ளக் கூடாது என்று கூறினுர். இதைக்கேட்ட மோஹிநி கூறினுள்.

நாத! விரதம் உபவாஸம் முதலிவைகள் எல்லாம் பிராம்மணர்களுக்கே ஏற்றது. ஆள்வது தாநம் யுத்தம் இவைதான் அரசர் கடமை. உமக்கு அவசியம் அதைச் செய்யவேண்டுமென்ற விருப்பமிருந்தால் மூத்த மனைவி செய்யட்டும் என்ருள். மன்னன் மனைவியை அழைத்து இவ்வாண்டும் நீ கார்த்திகை உபவாஸமிரு என்ருர். உமக் காக யான் தீயிலும் விழுவேன். தேவலோக இன்பத்தை இழந்துவந்த மோஹினியின் இஷ்டத்தைப் பூர்த்தி செய் வது நம் கடமை. ஆதலால் தாங்கள் அவளிஷ்டப்படி நடவுங்கள். நான் விருதமிருக்கிறேன் என்ருள்.

## ஏகாதசியில் மோஹினியின் செயல்.

தசமியன்று தர்மாங்கதன் ஆணைப்படி, இன்று ஒரு வேளை உண்ணுங்கள்! நாளை ஹரிதினம்! சுத்த உபவாஸமிருங்கள்! பகவானைப் பூஜியுங்கள்! ஸ்திரீ ஸங்கம் தாம்பூலம் முதலியவைகளை விடுங்கள்! என்று பறை சாற்றினர் பணியாளர். மோஹினியுடன் ஏகாந்தமான கிரீடையிலிருந்த ருக்மாங்கதனிதைக் கேட்டவுடன் எழுந்தான். பிரியே! ஜநந மரண துக்கத்தை அகற்ற பகவானை நீயும் பூஜைசெய். ஏகாதசிவிரதம் செய் என்றான். நாத! நான் பகவானைப் பூஜிக்கிறேன். தாங்கள் எனக்கு வாக்களித்தபடி இன்று ஒரு வரமளிக்க வேண்டும் என்றாள். எனதன்புக்குப் பாத்திரமான உனக்கு எந்த வரம் வேண்டுமானாலும் தருகிறேன் என்றானரசன். இன்று நீர் உபவாஸ மிருக்கக் கூடாது. என்னுடன் புஜித்து சேர்ந்து இருக்கவேண்டும். இதை மீறினால் நரகம் செல்வீர் என்றாள் மோஹினி.

அரசனிதைக் கேட்டு திடுக்கிட்டான். பிரியே! இதுவரை யான் ஒரு திநம் கூட ஏகாதசி விரதத்தை விட்டவனல்ல. வயதான இச்சமயத்திலோ விடுவேன்? நீ வேறு எதை வேண்டினாலும் தருவேன். இது மாத்திரம் என்னால் முடியாதென்றான் மன்னன். ராஜேந்திர! பிரும்மகுமாரியான நானும் சிறிது தர்ம மறிவேன். ஒரு வேளை உண்டாலும் தற்செயலாகக் கிடைத்ததைப் புஜித்தாலும் ஏகாதசி விரத பங்கம் நேரிடாது. கர்ப்பிணி ரோகி சிறுவன் வயதானவன் யாகம் செய்பவன் ராஜ்யபாலநம் செய்பவன் பதிவிரதைகள் ஆகியவர் உபவாஸம் இருக்கக் கூடாதென கௌதமர் கூறி இருக்கிறார். ஏகாதசி யன்று நீர் என்னுடன் கூட உண்ணாவிடில் சொன்ன சொல் தவறிய பாபியான உம்மைத் தீண்டமாட்டேன். ஆயிரம் அச்வமேதங்களைவிட ஸத்யம் சிறந்தது. "புராண சாஸ்திரத்தை விட்டு துஷ்டர்களை ஏமாற்றுவதற்காகக் கூறியது அது. ஏகாதசியில் அபிஷேக தீர்த்தங்கூட உட்கொள்ளக் கூடாது. யாக பிரஸாதமான புரோடாசத்தையும் ஏற்கலாகாது என்று புராணங்கள் கூறுகின்றன." வேதம் நேராக ஏகாதசீ விரதத்தைக் கூறவில்லை. வேதங் கூறியதையே தர்ம நூலும் புராணமும் விளக்கிக் கூறுகின்றன.

வேதத்தில் ஸூக்ஷ்மமாக இருப்பதையே புராணம் விரிவாகக் கூறும். கௌதமர் முதலிய பிராம்மணர்களை அழைத்துத் தான் கூறியதே சரி. விதவை துறவி இவர்களுக்கே ஏகாதசி. இந்த தர்மத்தை அன்னியர் கைக்கொண்டால் நரகம்செல்வர் என்று கூறும்படிச்செய்தாள். ருக்மாங்கதனுக்கு அளவு கடந்த கோபம் வந்தது. விபரீதமாகக் கூறினும் பிராம்மண நிந்தை கூடாதென சினத்தை அடக்கினன்.

ஸாதுக்களும் இப்படிக்கூற ஏதேனும் காரணமிருக்க வேண்டும். மும்மூர்த்திகள் நேரேவந்து கூறினலும் உபவாஸத்தை விடமாட்டேன் என்ருன் அரசன். பிரதிக்ஞையை நிறைவேற்ருதவன் கொடிய பாபி. நரகம் செல்வான். அத்தகையவருடன் ஸம்மந்தம் கூடாது என முனிவருடன் கிளம்பிட்டாள் மோஹினீ. தற்செயலாக அங்குவந்த தர்மாங்கதன் அவள் திருவடியில் விழுந்து வணங்கி அவளைத்திரும்ப அழைத்துவந்தான். தந்தையை வணங்கி இருவரையும் ஸமாதாநப்படுத்தினன். அன்னைக்கு வேண்டியதை என் உயிரையும் அளிப்பேன் என்ருன். ருக்மாங்கதன் கீர்த்தியையும் ஸ்வர்க்கத்தையும் வைகுண்டத்தையும் இழப்பேன். ஏகாதசியில் புஜிக்க மாட்டேன் என்ருன். தர்மாங்கதன் தன் தாயை அழைத்து மோஹினியை ஸமாதாநப்படுத்தும்படி கூறினன். நான் வயதில் பெரியவளாயினும் உனக்கு நமஸ்காரம் செய்கிறேன். மரணத்தைவிட அதிக கஷ்டமான வரத்தைக்கேள். ஏகாதசி போஜந வரத்தை மாத்திரம் விடு என்று பல வகையாக வேண்டினள் ஸந்தியாவளி.

அம்மா! உனது கற்பின் பெருமையைக்கொண்டாடுகிறேன். யார் எதற்காக உண்டானர்களோ அதைச் செய்து தான் ஆகவேண்டும் அல்லவா? ஒருவரது இயற்கை ஒருவகையாக இருந்தாலும் அவருள்ளே ஒரு கிருஹம் புகுந்து ஆட்டி வைத்தால் அதன்படி நடப்பதே ஸஹஜம். நீங்களந்த வரத்தைத் தராவிடில் அதற்குப் பதிலாக அதிலும் கடுமையான வரத்தைக் கொடுப்பீர்களா? என்ருள் மோஹினீ. ஆஹா! பிழைத்தோம்! அம்மா! விரதங்கெடாமலிருக்கவும் அரசனை ஸத்யஸந்தனுகச் செய்யவும் என் உயிரையும் ராஜ்யத்தையும்

அருமைப் புதல்வனையும் தியாகம் செய்வேன் என்றாள் ராணி. அன்றியும் கற்பின் பெருமையை விளக்க விசித்திரமான ஒரு கதை கூறினாள்.

## புழுவான பெண்ணின் சரிதம்.

எனது இளமையில் ஒரு அதிசயம் கண்டேன். ஒரு கட்டையை விறகு வெட்டி பிளந்தான். அதிலிருந்து ஒரு புழு வெளியில் வர அதை ஒரு காக்கைக் கொத்திற்று. காக்கையை விறட்டி மூர்ச்சையாகியிருந்த அந்த புழுவின் மீது ஜலத்தைத் தெளித்தேன். அது களைநீங்கி மனிதரைப் போல் பேசிற்று. ஸந்தியாவளீ! நான் முற்பிறவியில் ஸுமந்து எனும் முனிவரது பெண். கான்யகுப்ஜ தேசத்திலே கௌண்டின்யர் என்பவரை மணந்தேன். ஒரு ஸமயம் அவர் ராஜ ஸபைக்குச் சென்றார். அங்கு நாட்டியமாடும் வேசிகளிடம் இவர் மனம் சென்றது. தந்தை தேடிய தனத்தை எல்லாம் தாஸிக்கே அளித்து ஏழையானார். எனது ஆபரணங்களைக் கேட்டார். நானளிக்கவில்லை. நகையுடன் பிறந்தவீடு சென்றேன். கப்பலேறி கடல் கடந்து வெளிநாடு சென்றார் கணவன்.

பெருங்காற்று கிளம்பி கப்பலைக் கவிழ்த்தது. நீரில் தத்தளிக்கும் கௌண்டியன்யரைக் காக்க ஒரு கட்டை மிதந்தது. அதைக்கொண்டு அருகில் தோன்றிய ஒரு மலைக்குச்சென்றார். உணவின்றி களைத்து ஒரு மரத்தடியே படுத்து உறங்கினார். இதனிடையில் காசி ராஜனது மகளான ரத்நாவளி என்பவளை ஒரு ராக்ஷஸன் தூக்கி வந்தான். அவளை அந்த மலையிலுள்ள தனது வீட்டில் தனியாக ஓரிடத்தில் வைத்து தன் மனைவிக்குத் தெரியாமல் அவளை மணக்க விரும்பினான். அந்த ரத்நாவளி ஓவென்று அலறினாள். அதைக்கேட்டு ராக்ஷஸனது மனைவி ஓடிவந்து இவள் யார்? எதற்காக இவளை இங்கு கொண்டு வந்தாய்? என்று கேட்டாள். அவளிடம் பயந்து ராக்ஷஸன் இவளைச் சாப்பிடுவதற்காகக்கொண்டு வந்தேன் என்றான். ரத்நாவளி அதை மறுத்து என்னை அவன் மணக்க விரும்புகிறான் என்றாள்.

நமக்குச் சக்களத்தியாக ஒருவனைத் தூக்கிவந்தான் என்று கோபங்கொண்டாள். மரத்தடியில் தூங்கும் மநிதனைத் தூக்கிவருகிறேன். இருவரும் சேர்ந்து புஜிக்கலாம் என அவனிடம் சொன்னாள். அவனழகைக்கண்டு மோஹித்தாள். இந்திரனிடமிருந்து கொண்டுவந்து பதுக்கி வைத்திருக்கும் சக்தி ஆயுதத்தை அவனிடம் கொடுத்தாள். அதனால் தன் கணவனைக் கொல். என்னை மணந்துகொள். இல்லையேல் உன்னைத் தின்றுவிடுவேன் என்றாள். இதனிடையே ரத்நாவளியிடம் சென்று தன்னை மணக்கும்படி வேண்டினான் ராக்ஷஸன். விதிப்படி மணக்கலாம். வேதியரொருவர் மரத்தடியிலிருக்கிறார். அவரை அழைத்துவா என்றாளவள். அரக்கன் அங்குசென்று தன் மனைவி அவருடன் உறவாடுவதைக்கண்டு அவ்விருவர்களையும் கொல்ல முயற்சித்தான். ராக்ஷஸி சொன்னபடி இந்திரனது சக்தியாலவனைக்கொன்றான் கௌண்டின்யன்.

அரக்கி ரத்நாவளியைக் காசி ராஜனிடம் கொண்டுவிட்டு விட்டு, நாமிருவரும் சுகமாக வாழலாம் என்றாள். பதியைக்கொன்ற உன்னை யான் எப்படி நம்புவது? என்று அவர் கேட்க ராக்ஷஸி கூறினாள்.

## விவாஹத்தின் பெருமை.

ஆர்ய! ஸத்யமல்லவோ உலகில் சிறந்த தர்மம். ஸத்தியத்தை விட்டவர் செய்யும் மற்ற தர்மமெல்லாம் பயனைத்தரா. அந்த ஸத்தியத்தை விட்டதால் தான் கணவனைக்கொல்லச் சொன்னேன். நம்பியவரை துரோஹம் செய்வது பாபத்திலெல்லாம் உயர்ந்த பாபம். மற்றவைகளுக்குப் பிராயச்சித்தமுண்டு. நம்பியவரை வஞ்சித்ததற்கு பிராயச்சித்தமே கிடையாது. என பற்பல தர்மங்களைக் கூறினாள்.

பதியைக்கொல்வது மஹா பாபமல்லவா என்று அவர் கேட்க பொய்யால் உண்டாகும் பாபத்தைவிட அது அதிகமில்லை. அக்நி பிராம்மணர் வேதம் தேவதை தர்ப்பம் ஜலம் பூமி காலம் திக்தேவதை இவர்கள் முன்னிலையில் விவாஹம் நடக்கிறது. இத்தகையவரும் குரு சிஷ்யரும் ஒருவருக்கொருவர் பொய்க்கூறுவது மிகக்கொடிய

பாபம்! அதற்குத் தக்க சிக்ஷை இங்கு அவரைக் கொல்வதே. இங்கு நான் அவரைக் கொல்லாவிடில் பல கோடி கல்பம் அவர் நரகமனுபவிப்பார். ஆதலால் நான் அவருக்குச் செய்தது உதவியேயாம். கன்னிகையைக் கெடுக்கும் பாபத்திலிருந்தும் அவரைக் காத்தேன்.

இவ்வளவு தர்மம் அறிந்த நீ ஏன் ராக்ஷஸப்பிறவி பெற்றாய்? என்று கௌண்டின்யர் கேட்க அவளும் தனது முற்பிறவி பற்றி கூறினாள்.

## கந்தளீ சரிதம்.

முற்பிறவியில் யான் ஔர்வர் என்ற முனிவரது பெண்ணான கந்தளீ. தந்தை எனக்குப் பல தர்மங்களைக் கற்பித்தார். தூர்வாஸர் எனும் முனிவருக்கு என்னைக் கன்னிகாதாநம் செய்தார். அடிக்கடி கணவனது செயலைக் கண்டித்து "இப்படிச்செய் அப்படிச்செய்யாதே" என கூறினேன். கோபங்கொண்ட அவர் என்னைச் சாம்பலாகும்படி சபித்தார். பதிகோபத்தால் இந்த ராக்ஷஸ ஜன்மா கிடைத்தது. கோபிலன் என்ற ராக்ஷஸன் என்னை மணந்தான். ஒரு ராஜ கன்னிகையைப் பலாத்காரமாக அவன் தூக்க முயற்சித்தபோது அவள் உனது ஸ்திரீமூலமாகவே நீ இறப்பாய் என்று சாபமளித்தாள். இத்தகைய காரணங்களால் நான் அவரைக் கொல்ல நேர்ந்தது.

இவ்வாறு கூறி அஸுரன் சேர்த்து வைத்திருந்த ஸகல பொருள்களையும் பிராம்மணனுக்கு அளித்தாள். பெண் யானை வேஷம்பூண்டு ரத்நாவளியையும் கௌண்டின்யரையும் தனது முதுகிலமர்த்தி காசிக்கு வந்தாள். காசி ராஜனிடம் ரத்நாவளியைக் கொண்டுவிட்டுக்கிளம்பினர். ரத்நாவளி தன்னைக்கோபிலன் தூக்கிச்சென்ற கதையைத் தந்தையிடம் கூறினாள். அன்றியும் ஸமமான ஆஸநத்தில் உட்காருபவர் ஸதிபதிகளே. யானை மீது நாங்கள் தற்செயலாக அமரநேர்ந்தது. ஆதலால் என்னை அவருக்களித்து மணம் செய்வியுங்கள் என்றாள். அங்ஙனமே காசி ராஜன் ராக்ஷஸியை உத்தரவுகேட்டு மணம் செய்வித்தான். யதேஷ்டமாக ஸ்ரீதநமளித்தான். கௌண்டின்யர் அபரிமிதமான பொருள்களுடனும் இரு மனைவிகளுடனும் தன்னிருப்பிடம் வந்து சேர்ந்தார். தன்வீட்டில் தங்கி

பிறந்த வீட்டிலுள்ள என்னை அழைத்துவரச் சொன்னார். இருவர் கொண்டுவந்த பொருள்களையும் என்னிடம் அளித்தார். இருவர்களையும் எனக்குப் பணிவிடைசெய்யச் சொன்னார். அவர்கள் எதிரில் என்னைக் கௌரவப்படுத்தி லாலனைசெய்தார். அவர் ஏழையாகி வேசியிடம் பற்று கொண்டதால் அவரை முன் நான் அவமதித்தேன். எனது ஆபரணங்களை அவர் கேட்டபொழுது அளிக்காமல் பிறந்தவீடு சென்றேன். ஆதலால் என் குற்றம் என் மநதை அறுத்தது. அதே வெட்கத்தினால் இறந்தேன். பல நரகங்களையும் அனுபவிக்கும்படி செய்து முடிவில் இப்புழு ஜன்மாவைத் தந்தார் யமதர்மராஜன். மாகமாஸ ஸ்நாந புண்யத்தைத் தந்து எனக்கு நற்கதி அளியும் என்றது புழு. அங்ஙனமே அதை யான் தாநம் செய்ய அது திவ்ய வடிவந்தாங்கி ஸ்வர்க்கஞ் சென்றது.

பதிக்கு எதிராக உள்ளவர் கதி இது. ஆதலால் நீயும் நானும் சேர்ந்து நமது பதியை ஸத்ய ஸந்தனுக்க வேண்டும். ஏகாதசி உணவைத்தவிர மற்றவரங்களைக் கேள் என்றாள் ஸந்தியாவளி.

## விரோசநன் சொல்லைக் காத்தது.

நீ பதிவிரதையானால், ஹரிதிநத்தில் அவர் உண்ண முடியாதென்றால் உனதுமடியில் படுத்திருக்கும் ருக்மாங்கதனது தலையை ராஜா தன் கையால் வெட்டித்தரட்டும் என்றாள். மோஹிநீ இதைக்கேட்டு சிறிதும் கலங்காமல் அப்படியே ஆகட்டும். ஏகாதசி புண்யம் எங்களுக்குப் பரலோகத்தில் உதவிபுரியும். என் சொல்லை நம்பு. விரோசநனும் சொல்லை ரக்ஷித்ததைக் கேள் என்று அக்கதையைக் கூறினாள் ராணி.

விரோசநனது மனைவி, திநந்தோறும் ஒரு பிராம்மணனைப் பூஜித்து அவன் கோரியதை அளிப்பது வழக்கம். இந்த புண்ணியத்தால் அவனது ராஜ்யமும் பலமும் ஆயுளும் நாளுக்குநாள் விருத்தியாயின. இதைக்கண்ட அமரர் பிரும்மாவுடன் வைகுண்டம் சென்று பகவானைப்போற்றினர். பகவான் கிழ வேதியனாகிவர, விரோசநன் மனைவி அவரைப் பூஜிக்க ஆரம்பித்தாள். நான் விரும்புவதை அளிப்பாயா? என்று அவர் கேட்க அவச்யம் தருகிறேன்

என்றுள். நீ கூறினுல் போதாது. உனது புருஷனும் கூறவேண்டுமென்றுர். அப்படியே அவனும் வாக்களிக்க பூஜை முடிந்தவுடன் உங்கள் ஆயுளைக்கொடுங்கள் என்று கேட்டார் கிழவர். பதில் கூறுமல் இருவரும் தந்தோம் என்றனர். உடனே பகவான் பிரத்யக்ஷமாகி வைகுண்டத்திற்கு அழைத்துச்சென்றுர். ஸத்யம் ஸகல நன்மைகளையுந்தரும். ஸத்யம் தவறுமலிருப்பதற்காகத்தான் புத்திரனது தலையைத் தருகிறேன் என்றேன். இந்த ஸத்தியத்தைத் தவறுவேனு? என் சொல்லை நம்பு என்றுள் ஸந்தியாவளி.

பதியிடம் வந்து இதைக்கூற புத்ரஹத்தி பிரும்மஹத்தி போலாகும். ஆதலால் அதைச்செய்ய முடியாதென்றுர் அவர். புத்ரனைக் கருவில் தரிப்பதாலும் வளர்ப்பதாலும் போஷிப்பதாலும் தாயின் அன்பு தந்தை அன்பைவிட நூறு பங்கு அதிகமாகும். நானே புத்ர வாஞ்சையைவிட ஸத்யம் பெரிதென துணிந்தேன். ஆதலால் நாம் தகாத காரியமாயினும் இதைச் செய்து தர்மத்தை ரக்ஷிப்போம் என்றுள். மன்னன் மநம் இதை ஏற்கவில்லை. நான் உண்ணவுமில்லை. புத்திரனை வெட்டவும் இல்லை. என்னையோ அல்லது மோஹிநியையோ கொன்று இதில் ஒரு முடிவு செய்கிறேன் என்றுன்.

இதை அறிந்த தர்மாங்கதன் தந்தையை வணங்கி, மனைவி மக்களைக்கொண்டு தன்னைக் காப்பதல்லவோ தர்மம். தங்களுக்காக உடலை அளித்தால் எனக்கும் நற்கதி ஏற்படும் என்றுன். அதுதான் நியாயம் உடனே அதைச் செய்யுங்கள் அல்லது புஜியுங்கள் என்றுள் மோஹிநீ. அரசன் ஒன்றும் தோன்றுமல் மனைவி முகத்தையும் மகன் முகத்தையும் பார்த்தான். தாய் உட்கார்ந்து தநயன் தலையை மடிமீது வைத்து புருஷனை அழைத்தாள். இந்த தர்மத்தையும் தைர்யத்தையும் காண மும்மூர்த்திகளும் ஆகாயத்தில் வந்து நின்றனர். அரசன் கையில் கத்தியை எடுத்தான். பூமி அசைந்தது. கடல் பொங்கிற்று. வான் கொள்ளிக் கட்டையைக் கக்கிற்று. இன்னும் எனது காரியம் முடியவில்லையே என்று மோஹிநி பூமியில் விழுந்தாள்.

அரசன் தன் பணியை முடிக்கக் கத்தியை ஓங்கினன். உடனே ஓடிவந்து விஷ்ணு அவன் கையைப் பிடித்துக் கொண்டார். ருக்மாங்கதா! உனது ஒப்பற்ற பக்தியைக் கண்டு மகிழ்ந்தோம்! சிலகாலமிருந்து தர்மபாலநம்செய். பிறகு என்னிடம் வா என்று கூறி மறைந்தார். ஆகாயத்தில் தேவதுந்துபி முழங்கிற்று. புஷ்பமாரிப் பொழிந்தது. யமதர்மன் பிரும்மனைப் பணிந்து என் கதி என்ன? உமது பெண் மோஹினி மூர்ச்சையாயிருப்பதைப் பாருங்கள் என்று வேண்டினன்.

தேவரும் தேவேந்திரனும் பிரும்மாவும் ஒன்றுகூடி மோஹினியை எழுப்பி உனக்கென்ன வரம் வேண்டும்? என்றனர். அவள் எழுந்திருந்து நான் ஒரு கார்யமும் செய்யவில்லை. வீணாக புத்ரனைக் கொல்லும்படிகூறி நிந்தைக்காளானேன் என வருந்தினள். இதனிடையில் பனிரண்டு ஆண்டுகளாக நீரில் மூழுகி தவம் செய்த ராஜ புரோஹிதர் தவத்தை முடித்து வெளியில் வந்தார். நடந்ததைக்கேட்டு கோபங்கொண்டார். மோஹினியைப்பிடி சாம்பலாக்கி உனக்குத் தங்க எங்கும் இடமில்லாமல் போகட்டுமென சாபமளித்தார். தேவர் அவரை வேண்டி அசுத்தமாகவும் சாஸ்திர விதியை மீறியும் ஏகாதசி விரதம் செய்பவரிடம் மோஹினி வஸிக்கட்டும். அந்த புண்யத்தால் அவள் நற்கதி பெறட்டுமென ராஜபுரோஹிதர் அருள் புரிந்தார். மறுபடியும் பிரும்மா வேண்ட வஸு எனும் ராஜ புரோஹிதர் உடலளித்து அவளை எழுப்பி தீர்த்த யாத்திரை செய்து நற்கதி அடைவாய் என்றார்.

## காசியும் கங்கையும்.

எப்போதும் பிரகாசிப்பதால் காசி என்றும் வாரணா அஸி என்ற நதிகள் கங்கையுடன் சேருவதால் வாரணாஸி என்றும் பரமசிவன் முதலிய தேவர் அதை ஒரு க்ஷணங் கூட விடாமலிருப்பதால் அவிமுக்தம் என்றும் சிவன் அங்கிருந்து உலக நன்மை புரிவதால் சிவராஜதானீ என்றும் அழைக்கப்படும். இதைப்பற்றி கூறாத புராணமே இல்லை. உத்தரவாஹிநியாக அதாவது வடக்குமுகமாகச் செல்கிறது கங்கை. கங்கையைவிட சிறந்த புண்ணிய

தீர்த்தமில்லை. உத்தர ஸ்காந்தத்தில் காசி கண்டம் என தனியாக அதன் பெருமை கூறப்படுகிறது.

காசி பற்றி இப் புராணத்தில் உள்ள விசேஷம் இது. திருமாலின் நகரமாக இருந்தது காசி. பொய்கூறிய பிரும்ம னது தலையைக்கிள்ளினர் பைரவர். அவரது கையில் ஒட்டிக்கொண்டது பிரும்மாவின் தலைஓடு. அதை அகற்ற பற்பல தீர்த்தங்களுக்குச் சென்ருர் பைரவர். எங்கும் அது விலகவில்லை. காசிக்குவந்து கங்கையில் ஸ்நாநம் செய்தவுடன் அது அகன்றது. ஆதலால் அங்கு தங்கி பைரவர் விஷ்ணுவைத்துதிக்க, விஷ்ணு ஸந்தோஷ மடைந்து காசியைச் சிவனுக்கு அளித்தார். அன்றுமுதல் அது சிவராஜதானியாயிற்று. பைரவர் அதைக்காப்பவ ரானர்.

பதிநான்கு அத்யாயங்களால் காசியையும் கங்கை யையும் பற்றி வர்ணிக்கிருர் வியாஸர் இங்கு.

## புருஷோத்தம க்ஷேத்திரம்.

தென் கடற்கரையில் உத்கலமெனும் தேசத்திலே அந்த க்ஷேத்திரமுளது. இதைப் பூரிஜகன்னதமென்பர். இங்கே பிரதாநமான மூர்த்திகள் கிருஷ்ணன் பலராமன் ஸுபத்திரை. பரிவார தேவதைகளாக மற்ற மூர்த்திகளும் உண்டு. துவாரகையைக் கடல் விழுங்கியபோது கிருஷ் ணன் பலராமன் ஆகியவர் வைகுண்டஞ்சென்றனர். தீயி லிடப்பட்டது அவர்களது உடல். அச்சமயம் சிறு கட்டை கள் கடலில் மிதந்து வந்து அங்கு தங்கின. ஆதலால் அன்றுமுதல் இவர்களது உருவம் மரத்தினல் செய்யப் பட்டு அங்கு பூஜிக்கப்படுகின்றன. இந்திரத்யும்ந ராஜன் அங்கே தவம் செய்ய பகவான் அவர் கனவிலே தோன்றி இந்த மரத்தைவெட்டி அதனல் உருவை அமைத்து ஆலயமமர்த்தி உத்ஸவம் நடத்து என்ருர். அங்ஙனமே இன்றைக்கும் பனிரண்டாமாண்டில் ஸ்வப்ப நத்தில் தோன்றிய மரத்தைக்கொண்டே தேவ உருவம் அமைக்கிருர்கள்.

அன்றன்றும் புதிய மண்பாத்திரத்திலே அன்னம் வடித்து பகவானுக்கு நிவேதநம் செய்வர். அந்த பாத்தி ரத்தை உடனே உடைத்து விடுவர். அந்த இடம் ஒரு

குன்றுபோலுள்ளது. அந்த நிவேதன அன்னத்தை அம்பட்டர்களே வெளியில் எடுத்துவருவர். அதை எல்லோரும் உண்ணவேண்டும். உண்ணுதவர் வயிற்று நோயுக்கு ஆளாவார். நம்நாட்டு சிஷ்டர்கள் அந்த அன்னத்தை ஆங்குள்ள ஏழைகளுக்களித்து கல்கண்டு திராக்ஷைகளை நிவேதனம் செய்வித்து அதையே புஜிப்பர். ஜியேஷ்டா நக்ஷத்திரத்துடன் கூடிய ஜியேஷ்ட மாஸ பௌர்ணமியில் தர்சனம் ஸமுத்ர ஸ்நானம் தானம் முதலியன விசேஷ பலனைத்தரும்.

## கடல் உப்பானதேன்?

கோலோகத்திலுள்ள ராதாகிருஷ்ணர்களிடமிருந்தே மும்மூர்த்திகளும் பதினான்கு லோகங்களும் எண்ணிறந்த ஜீவராசிகளும் உண்டாயின. ராதையின் குழந்தைகளான ஏழு ஸமுத்திரங்களும் ராஸமண்டபத்தில் பகவானுடன் ராதை ஏகாந்தமாக இருக்கும் காலத்தில் ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டுக்கொண்டு நுழைந்தனர். அச்சமயம் ரஸ ஆநந்தவடிவனை கிருஷ்ணனை ராதாதேவி மனதில் தியானம் செய்து இன்ப நிலையில் இருந்தாள். கடல்களில் கடைவன் உள்ளே நுழைந்து நிஷ்டையைக் கலைத்தான். அதனால் ரஸமறியாத அவர்களைப் பூமியில் உப்புக் கடலாகும்படி ராதாதேவி சபித்தாள். எல்லோரும் அன்னையை வணங்கி வேண்டியபோது கடைவன் மாத்திரம் உப்புக் கடலாக இருக்கட்டும். மற்றவர் பாற்கடல் தயிற்கடல் நெய்கடல் ஸுரைக்கடல் அமிருதக்கடல் சுத்தஜலக் கடல்களாக இருக்கும்படி அருள்புரிந்தாள்.

உப்புக்கடல் ஒன்றையே நாம் காண்கின்றோம். விசாலமான உலகில் மனித புத்திக்கும் கண்ணுக்கும் விக்ஞானத்திற்கும் எட்டாமல் எவ்வளவோ தத்துவங்களிருக்கின்றன. காலமும் அநாதி. பூமியும் அநந்தம். சிறிது காலத்திற்கு முன்பே சில நாட்டைக் கண்டது உலகம். காணுதது பல என்பதறிந்த விஷயம்.

## கங்கா துவாரம்.

பிரயாகம் குருக்ஷேத்திரம் இவைகளை வர்ணித்து ஹரிதுவாரமெனும் கங்கா துவாரத்தில் தக்ஷயாகம் நடந்ததாக வர்ணிக்கிறுர் புராண முனிவர்.

### பதரிகாசிரமம்.

இது ஹிமயமலையிலுள்ள இடம். பதரீநாத் பதரி நாராயண் என்றழைக்கின்றனர்கள். இந்த யாத்ரை மிகக் கடினமையானது. பனிக்கட்டி மீது கால் நடையாகப் பல மைல்கள் செல்லவேண்டும். பள்ளமும் மேடுமான அவ் வழி நகரவாஸிகளுக்குக் காணவே பயங்கரமாக இருக் கும். எனினும் ஆஸ்திகர் சிலர் உயிரையும் உடலையும் கவனியாமல் யாத்ரை செல்கின்றனர். சில தார்மிக சங் கங்கள் யாத்ரிகருக்குப் பல உதவி புரிகின்றன.

இங்குதான் தர்ம தேவதைக்குப் புத்திரனகைத் தோன் றிய நரநாரயணர் தவம் செய்கின்றனர். கிருதயுகத்தில் எல்லோர் கண்ணுக்கும் புலப்பட்டனரவர். திரேதாயுகத் தில் க்ஞானிகளும் பிரும்ம ரிஷிகளுமே தர்சித்தனர். துவா பரத்தில் க்ஞானயோகிகளுக்கு மாத்திரம் தரிசநம் செய்ய முடியும். கலியில் பாபம் நிறைந்திருப்பதால் ஒருவர் கண்ணிலும் படுவதில்லை. தேவரும் சில முநிவரும் அவர் களைக் கலியிலும் தர்சிக்கவேண்டுமென வேண்டினர். ஆனல் நாரத குண்டத்திலுள்ள எனது மூர்த்தியை ப்ர திஷ்டை செய்து தர்சியுங்கள் என்றார். வைசாக மாஸத் தில் தேவர்கள் பூஜை செய்து தேவலோகம் சென்றனர். மறுபடி கார்த்திகை மாதம் முதல் பூஜை ஆரம்பித்து ஆறு மாதம் தேவர் பூஜிக்கின்றனர். ஆறுமாதம் மநிதர் பூஜிக்கின்றனர். தேவபூஜாகாலத்தில் பனிமூடி இருக்கும்.

### யாத்திரை மஹிமை.

ஸ்ரீ புஷ்கரம் காமோதா ஸித்தநாதர் பிரபாஸம் கௌதமாச்ரமம் கோகர்ணம் லக்ஷ்மணசலம் ராமேச்வர லிங்கம் நர்மதை சிதம்பரம் மஹா காளேச்வரம் அவந்தி க்ஷேத்ரம் மதுரை பிருந்தாவநம் முதலியவைகளை வர் ணித்து மோஹிநீ தீர்த்த யாத்ரை செய்து நற்கதி அடைந் தாள் என்று கூறி நாரத புராணமஹிமையுடன் இதைப் பூர்த்தி செய்கிறார். ஒரு அத்யாயம் ராமாயண கதை கூறுகிறார்.

### புண்டரீகபுரமெனும் சிதம்பரம்.

வேத வியாஸருடைய சிஷ்யர் ஜைமிநி என்பவர். இவரே பூர்வமீமாம்ஸைக்கு பிரமாணமானவர். ஜைமிநி

நியாயமாலா என்ற நூல் அன்னிய நாட்டிலும் பிரஸித்த மானது. [அதிலுள்ள நியாயங்களைச் சட்டமாகக் கை கொண்டது ஜெர்மனி தேசம்]. அக்நி வேசர் முதலிய சிஷ்யர்களுடன் கூட தேவேந்திர பட்டிணம் போன்ற புண்டரீக க்ஷேத்திரத்திற்கு வந்தார் ஜைமிநி. பார்த்திவ லிங்கத்தைச் செய்து பூஜித்தார். ஸாஷ்டாங்க நமஸ்கா ரம்செய்து எழுந்தார். ஹரிஹரரிருவரையும் ஒரே மூர்த்தியாகக் கண்டார். ஸ்தோத்திரம் செய்தார். பக வான் உனக்கு யாது வரம் வேண்டுமெனக் கேட்க சிவ பஞ்சாயதநமாகக் காக்ஷி அளிக்கவேண்டும் என வரம் கேட்டார். அங்ஙனமே பகவான் தரிசநம் தந்தார். அவர் களை வணங்கி ஸ்தோத்ரம் செய்தார். மறுபடி ஜைமி நியை நோக்கி என்ன வரம் வேண்டுமென்றார் கருணை மூர்த்தி. தங்களது திவ்ய தாண்டவத்தைத் தர்சிக்க வேண்டுமென்றார் ரிஷி: பகவான் புன்னகை புரிந்து சிவ கணங்களை நினைத்தார். எல்லோரும் வந்து வணங்கி நிற்க பகவான் விசித்ர வேஷத்துடன் பலவாத்ய கோஷங் களுடன் தாண்டவமாடினர். இதைப் பஞ்சசாமர விருத் தத்தில் ஐந்து சுலோகங்களால் வியாஸர் வர்ணிக்கிறார். ஆநந்ததாண்டவத்தைக் கண்டு பரவசமான ஜைமிநி வேதபாத ஸ்தவம் என அறுபத்து மூன்று சுலோகங் களால் நடராஜனைத் துதிக்கிறார். இதன் பலத்தை வர் ணிக்கும் வியாஸர் நேரில் க்ஞாநக் கண்ணால் ஆநந்த தாண் டவத்தைத் தர்சித்துத் தானும் பேராநந்தத் தாண்டவமாடு பவர்போல் உத்தரபாகம் எழுபத்து மூன்றாமத்தியாயத் தில் பல அரிய விருத்தங்களால் ஸரஸ்வதியையும் தாண் டவம் ஆடச் செய்கிறார். இதில் சிற்சில அரிய ஸ்தோத் ரங்களைப் பானைக்கோர் அரிசி பதம் பார்ப்பதுபோல் கீழே உதாஹரணமாகத் தருகிறோம்.

தாண்டவத்தை வர்ணிக்கும் ஐந்து சுலோகங்களில் முதல் சுலோக மிது.

ततो हरो हराज्ञया विधाय रूप मद्भुतम् ।
प्रनर्तु मुद्यतोबभौ विचित्र वेष भूषणः ।
विलोल नाग वल्लरीद्ध कक्ष ईषदुत्स्मितानना ।
ललाट शोभितेन्दुलेख ऊर्ध्वदोर्ध्वजः ॥

தாண்டவத்திற் கேற்ற விருத்தத்தில் தாளம்போட்டு பாடும்படியான சுலோக ரஸத்தையும் கருத்தையும் அழகாக அமைத்திருக்கிறார் அன்பர் ரஸிக்க. பொருளையும் எழுதுகிறோம். பக்தரது பிரார்த்தனையை ஆணையாக மதித்து ஆடுகிறார் ப்ரபு. நடனத்திற் கேற்க அத்புதமான வேஷத்தைத் தரித்துக் கொண்டார். அழகிய ஆபரணங்களைப் பூண்டார். நடநத்தால் அசையும் ஸர்ப்பம் தலையை சிறிது தூக்கிக்கொண்டு நிற்கிறது. நெற்றிக்கு மேல் சந்திரகிரணம் ஜ்வலிக்கின்றது. கொடி போன்ற கைகளை மேலே தூக்கிக்கொண்டு நடநம் செய்கிறார் நடராஜன்.

## வேதபாத ஸ்தவம்.

ஒரு சுலோகத்தின் கடைசி பாகத்தை வேதத்தால் அமைத்து அதற்கேற்றபடி மூன்று பாதங்களை அதற்கேற்ற விருத்தத்தால் கூறுவது வேதபாத ஸ்தவமெனப் படும். அந்த வேதம் நமஸ்கார ரூபமாகவோ பிரார்த்தனை ரூபமாகவோ வேதத்தி லுள்ளதாம். வேதத்தில் முழுகிய ஜைமிநியே அதை அழகாக அமைக்கவல்லவர். ஸ்ரீ ருத்ரம் அருணம் முதலியவைகளிலிருந்து பொருக்கப்பட்டவை.

1. विनायकं वन्दनमस्तकाहत स्वनादुय संघृष्ट किरीटमस्तकं ।
नमामि नित्यं प्रणतार्ति नाशनं कविं कवीनां उपमश्रवस्तमम्

2. देवा युद्धे यागे विप्राः त्रय्याह्वयं ह्वयं विन्दन्ति स्कन्दं ।
वन्दे सुब्रह्मण्यों सुब्रह्मण्यों सुब्रह्मण्योम् ॥

3. नमश्शिवायै जगदंबिकायै शिवप्रियायै शिवविग्रहायै ।
समुद्रभूवाद्रिपतेः सुता या चतुष्कपर्दा युवतिः सुपेशाः ॥

4. यतस्त्वमेव देवेश कर्ता सर्वस्य कर्मणः ।
ततः क्षमस्व तत्सर्वं यन्मया दुष्कृतं कृतम् ॥

5. एवएव वरोऽस्माकं नृत्यंतं त्वां सभापतिम् ।
लोकयन्त मुमाकान्तं पश्येम शरदः शतम् ॥

நர்த்தநம் செய்பவரும் பக்தர்களைப் பார்ப்பவரும் உமாபதியும் ஸபாபதியுமான உம்மை நூறுண்டு பார்க்க வேண்டும். இதே நாம் கோரும் வரம் என்பது கடைசி சுலோகத்தின் கருத்து.

**ஸ்ரீ நாரத புராணச் சுருக்கம் முற்றிற்று.**

ஓம் தத் ஸத்.

ஸ்ரீ வேதவியாஸாய நம:



# பதினெட்டு புராண அனுபந்தம்.

## நமது வெளியீடுபற்றி சில அரிய அபிப்ராயங்கள்.

1. **ஸ்ரீ R. சுப்பய்யர் அவர்கள்**, கணேசன் கம்பெனி, சென்னை (22—5—56). தாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் பெரிய கைங்கர்யத்திற்கு அன்பளிப்பாக இத்துடன் ரூ. 116/- அனுப்பியிருக்கிறேன். இவ்வரிய பெரிய பணி விரைவில் பூர்த்தியாக மஹாகணபதியை வேண்டுகிறேன்.

2. **ஸ்ரீ K. ராமச்சந்திரய்யர் அவர்கள்**, ஜ்வல்லேர்ஸ் மாம்பலம் (20—5—56). மிக உயர்ந்த ஒப்பற்ற தர்ம கைங்கர்யத்தில் அடியேனுக்கும் சிறிது பங்கு கிடைக்க லௌகிக ஸஹாயமாக 101-ரூ. அனுப்பியிருக்கிறேன்.

3. **ஸ்ரீ பரமசிவன்**, ஆடிட்டர், கூள்ளிக்கோட்டை (20—4—56). இதுவரை எவரும் செய்யாத உயர்ந்த மதத் தொண்டு, ஸம்ஸ்கிருதம் அறியாதவர்க்கு திவ்யக் கண்ணைத் தந்து பேருதவி புரிந்தீர்கள். எனது காணிக்கை ரூ. 100/- பலரிடம் யாசித்து அதிக உதவி புரிகிறேன். தங்களுக்கும் ஆசார்யாளுக்கும் நமஸ்காரம்.

4. சென்னை சட்டசபை கார்யதரிசியாயிருந்தவரும் பிராம்மணசபை தலைவருமான **ஸ்ரீ R. V. கிருஷ்ணய்யர்** (30—5—56). மிகத் தெளிவான நடையில் வெகு ஸ்வாரஸ்யமாக இருக்கிறது. இந்துமதத்தின் அரிய நூல்களில் ஒன்றான புராணக் கருத்தைத் தாங்கள் வெளியிடுவது மிகப் பாராட்டத் தக்கது. தமிழுலகம் நன்றியுடன் என்றும் தங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறது. நானும் ஒரு சந்தாதாரராகச் சேருகிறேன்.

5. **ஸ்ரீ N. ஸாம்பசிவதீக்ஷிதர்**, இஞ்ஜினியர், டாடா நகர் (23—4—56). ஆசார்ய ஆக்ஞைப்படி தாங்கள் இதை வெளியிட முன்வந்தது மிகவிசேஷம். முதல் பாகத்திற்கு நன்கொடையாக ரூ. 25 அனுப்பியிருக்கிறேன். இரண்டாம் பாகம் தயாரானதும் எழுதவும். இன்னும் ரூ: 25 அனுப்புகிறேன். புராணத்தின் உயரிய ரத்நங்களை அளிக்கவும்.

6. ஸ்ரீ S. Y. முத்துஸ்வாமி, அரசாங்க காரியதரிசி, திருவாங்கூர் (22—5—56). இதைப் படிக்கும்போது தாங்கள் நேரில் உபன்யாஸம் செய்வதுபோலிருக்கிறது. இவ்வுதவி மிகக்கொண்டாடத்தக்கது. காணிக்கை ரூ. 25.

7. ஸ்ரீ V. ராகவன், வால்காட் பிரதர்ஸ், பெங்களூர் (20-4-56). தங்கள் உபன்யாஸமே ருசியானது. தர்மம் நிறைந்தது. அதைத்திரட்டி நூலாக வெளியிடுவது எங்கள் பாக்யம். இதற்காக எவ்வளவு நன்கொடை தந்தாலும் அது மிகச்சிறிதே. அடியேன் காணிக்கை ரூ. 50.

8. ஸ்ரீ S. V. ராமன், அலுமினியம் கம்பெனி, கல்கத்தா (10—5—56). முதல் பாகம் பார்ப்பதற்கே மிக அழகாக இருக்கிறது. படிக்க மிக ருசியாய் பல தர்ம கர்ம அநுஷ்டானங்களைப் போதிக்கும் இதை நண்பர் பலர் படிக்கின்றனர். ஆவலுடன் மற்ற பாகங்களை எதிர் பார்க்கிறேன். நன்கொடை ரூ. 50.

9. ஸ்ரீ ஜீ. வி. ராமன், கல்கத்தா (15—4—56). ஆஸ்திக உலகிற்குத் தாங்கள் திரட்டி அளித்த நிதி இது. நாங்கள் அளிக்கும் உதவி அதற்கு மிகச் சிறியதேயாம். நன்கொடை ரு. 100.

10. ஸ்ரீ T. S. ஆதிசேஷய்யர், ஆஜ்மீர் (25-5-56). நேரில் தாங்கள் உபன்யாஸம் செய்வதுபோலவே இருக்கின்றது. எளிய நடை. உயர்ந்த தர்மம். ரஹஸ்யமான தத்வம். நன்கொடை ரூ. 50.

11. ஸ்ரீ N. ஸ்ரீநிவாஸன், சுந்தரேச பந்த், டில்லி (15—4—56). சுருக்கமானாலும் மிக ரஸமாகவும் அழகாகவும் படிக்க ருசியாகவும் இருக்கிறது. எங்களால் முடிந்தவரை இங்கு பலரைச் சந்தாதாரராகச் சேர்க்கிறோம். மற்ற பாகங்களைச் சிறிது விரிவாக எழுதுங்கள். நன்கொடை ரூ. 50 + 50 = 100.

N. B.–(அளவு கடந்து அடியேனைத் துதிக்கும் பல அபிப்ராயங்களை வெளியிடவில்லை.) சந்தாவுடன் நன்கொடையும் அளித்து அபிப்ராய மெழுதியவர்களிவர்கள். பலர் நன்கொடை தந்தால் விரைவில் மற்ற பாகங்களும் பூர்த்தியாகும்.

## பொன்னெழுத்தால் உள்ளத்தில் எழுதத்தக்க தார்மிகர் பெயர்.

[ஆரம்பம் முதல் ஜூலை 10வ வரை வந்த நன்கொடை.] ரூ.

| | |
|---|---|
| ஸ்ரீ ஜீ. வி ராமன், கல்கத்தா | 100 |
| ,, R. சுப்பையர், கணேசன் கம்பெனி, சென்னை | 116 |
| ,, K. ராமச்சந்திரய்யர், ஜ்வல்லேர்ஸ், மாம்பலம். | 101 |
| ,, பரமசிவன், ஆடிட்டர், கள்ளிக்கோட்டை | 100 |
| ,, ராமரத்நம் அய்யர், டில்லி. .... | 50 |
| ,, N. ஸ்ரீநிவாஸன், டில்லி. .... | 50 |
| ,, N. S. சுந்தரேசபந்த், டில்லி. .... | 50 |
| ,, ஜி. ஸ்வாமிநாதன், டில்லி. (3 காபிகள்) | 50 |
| ,, T. S. ஆதிசேஷய்யர், ஆஜ்மீர். .... | 50 |
| ,, கிருஷ்ணன், டில்லி. .... | 50 |
| ,, S. V. ராமன், கல்கத்தா. .... | 50 |
| ,, K. S. ஸ்ரீநிவாஸாசார்யார், சென்னை. .... | 50 |
| ,, V. ராகவன், வால்காட் பிரதர்ஸ், பெங்களூர். | 50 |
| ,, ஹரிஹரய்யர், மாம்பலம். .... | 51 |
| ,, சாஸ்திரி & சாஸ்திரி, ஜ்வல்லேர்ஸ், மைலை. | 51 |
| ,, H. ஸஹஸ்ரநாமம், பாரூர். .... | 30 |
| ,, உமாமஹேஸ்வரய்யர், விழுப்புரம் (2 காப்பிகள்) | 32 |
| ஸ்ரீமதி செல்லம்மாள் துரை, உதயபூர். .... | 30 |
| ஸ்ரீ K. ஸ்ரீநிவாஸய்யர், டில்லி. .... | 26 |
| ,, S. R. நடராஜய்யர். கண்ட்ராக்டர், மாம்பலம். | 25 |
| ,, S. R. நாராயணசாமி அய்யர், ,, ,, | 25 |
| ,, வாஞ்சிநாதய்யர், ரைஸ்மில், நன்னிலம். | 25 |
| ,, T. R. குமாரசாமி அய்யர், சென்னை. | 25 |
| ,, ராமா, C. ராமச்சந்திரய்யர், தண்டையார்பேட்டை. | 25 |
| ,, V. P. ராமச்சந்திரய்யர், ,, | 25 |
| ,, N. ஹரிஹரய்யர், திருச்சி. | 25 |
| ,, A. S. நாராயணய்யர், மதுரை. .... | 25 |
| ,, சோமநாதராவ், பட்டுக்கோட்டை. .... | 25 |
| ,, T. P. S. அய்யர், டில்லி. .... | 25 |
| ,, வெங்கடேஸ்வரராவ், வெண்ணைக்கடை, புரசை. | 25 |
| ,, T. ராமஸ்வாமி அய்யங்கார், திருப்பூர். | 25 |
| ,, N. ஸாம்பசிவதீக்ஷிதர், டாடா நகர். (முதல் முறை) | 25 |
| ,, S. ராமய்யர், T. நகர். .... | 25 |
| ஸ்ரீமதி காந்தாமணி அம்மாள், டாக்டர், ஆள்வார்பேட்டை | 25 |

ஸ்ரீ S. Y. முத்துஸ்வாமி அய்யர், திருவநந்தபுரம். 25
,, N. S. ராமனுதன், ஜ்வல்லேர்ஸ், T. நகர், 25
,, R. M. சேஷாத்ரி, ஐ. ஸி. எஸ்., சென்னை, 25
,, சுந்தரேசய்யர், பொள்ளாச்சி. .... 25
,, N. நாராயணன், சென்னை. .... 25
,, T. S. சங்கரய்யர், பாம்பே. ... 25
,, S. பாலசுப்ரமண்ய அய்யர், கொழும்பு. 20
,, நடேச அய்யர், வில்லிவாக்கம். .... 20
,, R. S. நீலகண்டஅய்யர், லவண சமுத்திரம். 20
,, குருராஜ், தேனம்பேட்டை. 20
,, S. அனந்தநாராயண அய்யர், பம்பாய். 20
,, T. சினுவாசன், பம்பாய். .... 20.
,, சங்கர அய்யர், கோல்டன்ராக். .... 20
,, சேஷாசாஸ்திரிகள், தாராபுரம். .... 20
,, N. S. சுந்தரேசன், கிருஷ்ணகிரி. .... 20
,, சங்கர்நாராயணஅய்யர், திருச்சி. .... 20
,, G. சுந்தரேசஅய்யர், தில்லைநகர். .... 2(
,, S. வெங்கட்டராமன், பம்பாய். .... 2(
,, N. சாம்பசிவ அய்யர், குற்றுலம். .... 2(
,, S. ராமச்சந்திரன், பெங்களூர். .... 2(
,, திருப்புகழ் மணி (T. M. K.) அய்யர், மைலாப்பூர். 2(
,, S. சுப்ரமண்ய அய்யர், பழமாநேரி. 2(
,, M. R. பாலசுப்ரமண்யன், சிவகங்கை 2
ஸ்ரீமதி சாரதா நாராயணன், டில்லி. .... 2
சென்னை Messrs. பி. ஜி. பால், & Co. தலைவர்,
ஸ்ரீ நீலகண்டய்யர் அவர்கள் 3-வது பாகத்திற்கு வேண்டிய பேப்பர்களைத் தருவதாக வாக்களித்திருக்கிறுர்.

பல நண்பர்கள் தன் பெயரை பிரசுரிக்கக்கூடாது என்றே எழுதினர். அது தர்மமேயானுலும் புராண கைங்கர்யம் பூர்த்தியாக தார்மிகர் பெயர் உதவியாக இருக்குமென அவர் விருப்பத்திற்கு மாருக இதை பிரசுரிக்கிறேன். 15 அல்லது 16 ரூ. சந்தா கொடுத்தவர்கள் நூற்றுக்குமேல் இருப்பதால் தற்சமயம் அவைகளை பிரசுரிக்கவில்லை. புராணம் பூர்த்தியாகும்போது எல்லா சந்தாதாரர்கள் பெயரையும் பிரசுரிக்கலாமா என உத்தேசம். முன் பணமளித்து உதவிய சந்தாதாரர்களை மறக்கவில்லை. அனைவர்க்கும் மநமார்ந்த நன்றியுடன் ஆசீர்வாதம்.

தங்கள் தர்மதொண்டன், **ஸ்ரீவத்ஸ, வெ. ஸோமதேவசர்மா.**

சுபம்! சுபம்!! சுபம்!!!

## கைவசமுள்ள எமது பிரசுரங்கள்.

| | | ரூ. | அ |
|---|---|---|---|
| 1. | 40 ஸம்ஸ்காரம் .... .... | 1 | 4 |
| 2. | ஸ்துதி குஸுமாஞ்ஜலி 7வது பதிப்பு .... | 0 | 4 |
| 3. | ஸ்தோத்திர சிந்தாமணி 3 ,, ,, .... | 0 | 4 |
| 4. | வேதமும் வேதாங்கமும் 3 ,, ,, .... | 0 | 3 |
| 5. | ஸ்ரீ சங்கரசரிதம் பூஜாகல்பத்துடன் .... | 0 | |
| 6. | ஸ்ரீ வ்யாஸ சரிதம் .... .... | 0 | |
| 7. | அஷ்டபதி தத்வார்த்த ஸாரம் .... | 0 | |
| 8. | ஸ்ரீகோபிகாகீதமும் ஸ்ரீபஜகோவிந்தமும் (2-ம் பதிப்பு) .... | 0 | |
| 9. | ஆதித்ய ஹ்ருதயமும் கனகதாராஸ்தவமும் .... | 0 | |
| 10. | துளஸீ சரிதமும்-பூஜா கல்பமும் .... | 0 | |
| 11. | காவேரி பூஜை .... .... .... | 0 | |
| 12. | சங்கராந்தி பூஜையும், கோ பூஜையும் ... | 0 | |
| 13. | ஸரஸ்வதி பூஜை .... .... .... | 0 | |
| 14. | ஸ்ரீ சிவராத்ரி பூஜையும் கதையும் .... | 0 | |
| 15. | ஸ்ரீ சித்ரகுப்த, காமாக்ஷி, (காரடை நோன்பு) ஸ்ரீராமநவமி பூஜாகல்பங்கள் .... | 0 | |
| 16. | ஸதாசாரம் .... .... .... | 0 | 1 |
| 17. | ஸ்ரீ வரலக்ஷ்மீ வ்ருதமும் பூஜாகல்பமும் .... | 0 | |
| 18. | நவராத்ரிபூஜை .... .... .... | 0 | |
| 19. | ஸ்ரீ விநாயகசதுர்த்தியும் பூஜா கல்பமும் .... | 0 | 4 |
| 20. | வேங்கடேச வ்ரதமும், அஷ்டோத்ரமும் .... | 0 | 2 |
| 21. | ஸ்ரீ லலிதா ஸகஸ்ரநாம பாஷ்யம் .... | 2 | 8 |
| 22. | ப்ரதோஷ பூஜை .... .... | 0 | 2 |
| 23. | 18 புராணம் (முதல் பாகம்) .... | 2 | 0 |
| 24. | ஆபஸ்தம்ப தர்ப்பணம் ஸ்வரத்துடன் .... | 0 | 10 |

**வைதிக தர்மவர்த்தனீ** (மாதப்பத்திரிகை) வருடசந்தா ரூ. 4.

Printed at the "Sri Meenakshi Press, Sirkali."